உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு,

## மூலமும் உரையும்.

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பரிசோதித்து,

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

பொன்னம்பலபிள்ளையால்

முதலிரண்டுதொகுதிப் பெயர்ப்பொருளோடு

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

பதினோராம் பதிப்பு.

1915

இராக்ஷசஸு ஆவணிமீ.

2281
கோவிலூர் ஆதீனம்
2281
R65:31
கோவிலூர்-630 30
இராக்ஷசஸு — 2/00

# சூசிபத்திரம்.



| பக்கம். | தொகுதிப்பெயர். | விருத்தத் தொகை. |
|---|---|---|
| ௧ | சிறப்புப்பாயிரம். | ௮ |
| ௫ | முதலாவது தேவப்பெயர்த்தொகுதி. | ௯௩ |
| ௩0 | இரண்டாவது மக்கட்பெயர்த்தொகுதி. | ௧0௬ |
| ௫௮ | மூன்றாவது விலங்கின்பெயர்த்தொகுதி. | ௭௮ |
| ௭௮ | நான்காவது மரப்பெயர்த்தொகுதி. | ௬௮ |
| ௯௬ | ஐந்தாவது இடப்பெயர்த்தொகுதி. | ௬௮ |
| ௧௧௪ | ஆறாவது பல்பொருட்பெயர்த்தொகுதி. | ௩௫ |
| ௧௨௪ | ஏழாவது செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி. | ௭௬ |
| ௧௪௪ | எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி. | ௮௨ |
| ௧௬௬ | ஒன்பதாவது செயல்பற்றியபெயர்த்தொகுதி. | ௬௭ |
| ௧௮௨ | பத்தாவது ஒலிபற்றியபெயர்த்தொகுதி. | ௫௨ |
| | ஆக தொகுதி ௧0-க்கு விருத்தம் - ௭௩௩. | |

உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு.

## சிறப்புப்பாயிரம்.

பொன்னுநன்மணியுமுத்தும்புனைந்தமுக்குடைநிழற்ற
மின்னுபூம்பிண்டிநீழல்வீற்றிருந்தவனைவாழ்த்தி
மன்னியநிகண்டுசூடாமணியெனவொன்றுசொல்வன்
இந்நிலந்தன்னின்மிக்கோர்யாவருமினிதுகேண்மின்.

இதன்பொருள். பொன்னும் நன்மணியும் முத்தும் புனைந்த முக்குடை நிழற்ற - பொன்னினாலும் நல்ல இரத்தினத்தினாலும் முத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட மூன்று குடைகளும் நிழலைச் செய்ய—மின்னு பூம் பிண்டி நீழல் வீற்றிருந்தவனை வாழ்த்தி - விளங்குகின்ற மலர்களையுடைய அசோகமரத்தினது நிழலின்கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளைத் துதிசெய்து,—சூடாமணி என மன்னிய நிகண்டு ஒன்று சொல்வன் - சூடாமணியென்று சொல்லும்படி பொருந்திய ஒருநிகண்டை(யான்)கூறுவேன்.—இந்நிலந்தன்னின் மிக்கோர் யாவரும் இனிது கேண்மின் - இந்தத் தமிழ்நாட்டின்கண்ணே (கல்வியறிவில்) மிக்கவர் சகலரும் நன்றாக இதனைக் கேளுங்கள் என்றவாறு.

யான் என்னுமெழுவாய் வருவிக்கப்பட்டது. முக்குடைகளாவன சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகலபாசனம் என்பவைகளாம். மன்னியநிகண்டு சூடாமணியெனவொன்று என்பது சூடாமணியென மன்னிய நிகண்டொன்று என மாற்றியுரைக்கப்பட்டது. துதிசெய்து கூறுவேனெனக் கூட்டுக. நிலமெனப் பொதுப்படக் கூறினாரேனும், இந்நூல் தமிழ்நூலாதல்பற்றித் தமிழ்வழங்கு நிலமொன்றற்கே உரித்தாய்நிற்றலால், தமிழ்நாடென்

ரும். எல்லாம்வல்ல கடவுளைத்துதிசெய்து கூறுதலின் நன்கு முடியுமாதலான், இது கடவுளது கிருபாசாமர்த்தியத்தினாலன்றி இவனது வித்தியாசாமர்த்தியத்தினால் கூறப்பட்ட தன்றென்று துணிந்து பொறாமையையொழித்துக் கேளுங்களென்பார் இனிது கேண்மினென்றார். (க)

பூமலியசோகினீழற்பொலிந்தவெம்மடிகண்முன்னாள்
ஏமமாமுதனூல்சொல்லக்கணதரரியன்றபாவாற்
றாமொருவழிநூல்சொல்லச்சார்புநூல்பிறருஞ்சொல்லத்
தோமிலாமூன்றுநூலுந்துவமெனவுதித்தவன்றே.

இ - ள். பூமலி அசோகின் நீழல் பொலிந்த எம்மடிகள் - பூக்கள் மிகுந்த அசோகமரத்தினது நிழலின்கண்ணே வீற்றிருந்த நமது அருகக்கடவுள்—முன்னாள் ஏமம் ஆம் முதனூல் சொல்ல - ஆதிகாலத்தில் இன்பத்திற்குக் காரணமாகின்ற முதனூலைக் கூற,— கணதரர் இயன்ற பாவால் தாம் ஒரு வழிநூல் சொல்ல - கணதரரென்பவர் இயல்பு பொருந்திய செய்யுளினால் தாம் ஒரு வழிநூலைக் கூற,—பிறர் சார்புநூல் சொல்ல - பிறர் சார்புநூலைக் கூற,—தோம் இலா மூன்று நூலும் துவம் என உதித்த - குற்றமில்லாத இம்மூன்று நூல்களும் நிலைபெறும் நூல்களாக (இப்படியே) உண்டாயின. எ - று. உம், அன்று, ஏ அசைகள். (உ)

அங்கதுபோயபின்றையலகினூல்பிறந்தமற்றுஞ்
செங்கதிர்வரத்திற்றோன்றுந்திவாகரர்சிறப்பின்மிக்க
பிங்கலருரைநூற்பாவிற்பேணினர்செய்தார்சேர
இங்கிவையிரண்டுங்கற்கவெளிதலவென்றுசூழ்ந்து.

இ - ள். அங்கு அது போய பின்றை - அவ்விடத்து அது நிகழ்ந்தபின்பு,—அலகு இல் நூல் பிறந்த - எண்ணிறந்த நூல்கள் உண்டாயின.—மற்றும் - இன்னும்,—செங்கதிர் வரத்தில் தோன்றும் திவாகரர் - சூரியனது வரத்தினால் உதித்த திவாகரரும்,—சிறப்பின் மிக்க பிங்கலர் - (கல்விச்) சிறப்பின்மிகுந்த பிங்கலரும்,—உரை நூற் பாவில் பேணினர் செய்தார் - சொல்லப்படுகின்ற சூத்திரத்தினால் விரும்பி (த்திவாகரம் பிங்கலந்தையென்னும் நூல்களை) ச்செய்தனர்.—இங்கு இவை இரண்டும் சேரக்கற்க எளிது அல என்று சூழ்ந்து - இவ்விடத்து இவ்விரண்டு நூல்களும் அந்நூல்களோடு கூடக் கற்கப்படுதற்கு எளியவைகளல்லவென்று நினைந்து. எ - று. (௩)

சொல்லொடுபொருளுணர்ந்தோன்சோதிடநீதிவல்லோன்
நல்லறிவாளனெங்கணறுங்குன்றைஞானமூர்த்தி
பல்லுயிர்க்கொருதாயாகும்பரமன்மாமுனிவன்மெய்ந்நூல்
வல்லுநர்வல்லார்க்கெல்லாம்வரையறத்தரையில்வந்து.

இ-ள். சொல்லொடு பொருள் உணர்ந்தோன் - சொற்களோடு அவ்வவற்றின் பொருள்களை அறிந்தவரும்,—சோதிடம் நீதி வல்லோன் - சோதிடநூலிலும் நீதிநூலிலும் வல்லவரும்,—நல்லறிவாளன் - நல்ல அறிவினையுடையவரும்,—நறுங்குன்றை எங்கள் ஞானமூர்த்தி - நல்ல குன்றையூரிலிருக்கின்ற எங்களுடைய ஞானமே வடிவமாகக் கொண்டவரும்,—பல் உயிர்க்கு ஒரு தாய் ஆகும் பரமன் - பல ஆன்மாக்களுக்கு ஒப்பில்லாத மாதாவாயுள்ள சிரேஷ்டரும்,—மா முனிவன் - பெரிய முனிவருமாகி,—வரை அற மெய்ந்நூல் வல்லுநர் வல்லார்க்கு எல்லாம் தரையில் வந்து - வரைவின்றி மெய்மையாகிய நூல்களிலே வல்லவர் வல்லவரல்லாதவராகிய யாவர்நிமித்தமும் பூமியின்கண்ணே அவதரித்து. எ-று. (௪)

பரிதியொன்றுதயஞ்செய்துபங்கயமநேககோடி
முருகெழமலர்வித்தென்னமுகமுடனகமலர்த்தி
மருவுமுத்தமிழைமுன்னாள்வளர்த்தபாண்டியனேபோலக்
கருதியவெல்லாந்தந்துகவிமணிமாலைசூடி.

இ-ள். பரிதி ஒன்று உதயம் செய்து பங்கயம் அநேக கோடி முருகு எழ மலர்வித்து என்ன முகமுடன் அகம் மலர்த்தி - ஒருசூரியன் உதித்து அநேககோடி தாமரைமலர்களை மணமெழும்படியாக அலரச்செய்தாற்போல முகத்தோடு நெஞ்சத்தை அலரச்செய்து,—மருவும் முத்தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியன்போல - பொருந்திய (இயல் இசை நாடகமென்னும்) மூன்று தமிழ்களையும் முற்காலத்தில் வளர்த்த பாண்டியராசனைப்போல— கருதிய எல்லாம் தந்து - நினைத்தவைகள் யாவையும் தந்து,— மணிக் கவி மாலை சூடி - அழகினையுடைய பாமாலையைச் சூடி. -று. ஏ அசை. (௫)

செகமெனும்பளிங்குமாடத்திகிரிவேந்தரையேபோலப்
புகழெனும்பஞ்சிசேர்த்திப்பொலிவுறுபேரத்தாணி
மகிழ்குணபத்திரனெங்கள்வழித்தெய்வம்போல்வான்சொல்ல
இகபரமிரண்டும்வேண்டியியலிசைவல்லோர்கேட்ப.

இ - ள். செகம் எனும் பளிங்கு மாடம் திகிரி வேந்தரைப் போல - பூமண்டலமாகிய பளிங்குமண்டபத்தின்கண்ணே ஆஞ்ஞாசக்கரத்தையுடைய அரசரைப்போல,—புகழ் எனும் பஞ்சி சேர்த்திப் பொலிவு உறு பேர் அத்தாணி மகிழ் குணபத்திரன் - கீர்த்தியாகிய பஞ்சணையை வைக்கப்பெற்றுப் பொலியாநின்ற பெரிய அத்தாணியின்மீது மகிழ்ந்து வீற்றிருக்கின்ற குணபத்திரனென்னும் பெயரையுடைய—எங்கள் வழித்தெய்வம் போல்வான் சொல்ல - எங்கள் குலதெய்வம் போல்பவர் கூற,—இகம் பரம் இரண்டும் வேண்டி இயல் இசை வல்லோர் கேட்ப - இம்மைப்பயனும் மறுமைப்பயனுமாகிய இவ்விரண்டையும் விரும்பி இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர்கள் கேட்க. எ - று. (சு)

விரவியதேவர்மக்கள்விலங்கொடுமரமிடம்பல்
பொருள்செயும்வடிவுபண்புபோற்றியசெயலொலிப்பேர்
ஒருசொற்பல்பொருளினோடுமுரைத்தபல்பெயர்க்கூட்டந்தான்
வருமுறைதிவாகரம்போல்வைத்துப்பிங்கலந்தைதன்னில்.

இ - ள். விரவிய தேவர் - பொருந்திய தேவப்பெயர்த்தொகுதியும்,—மக்கள் - மக்கட்பெயர்த்தொகுதியும்,—விலங்கு - விலங்கின்பெயர்த்தொகுதியும்,—மரம் - மரப்பெயர்த்தொகுதியும்,—இடம் - இடப்பெயர்த்தொகுதியும்,—பல்பொருள் - பல்பொருட்பெயர்த்தொகுதியும்,—செயும்வடிவு - செயற்கைவடிவப்பெயர்த்தொகுதியும்,— பண்பு - பண்புபற்றிய பெயர்த்தொகுதியும்,—போற்றிய செயல் - பேணப்பட்ட செயல்பற்றிய பெயர்த்தொகுதியும்,—ஒலிப்பேர் - ஒலிபற்றிய பெயர்த்தொகுதியும்,—ஒருசொற்பல்பொருள் - ஒருசொற் பல்பொருட் பெயர்த்தொகுதியும்,—உரைத்த பல்பெயர்க்கூட்டம் - சொல்லப்பட்ட பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த்தொகுதியும்,—திவாகரம் வருமுறைபோல் வைத்து - திவாகரத்திலே வரும் முறைமைபோல வைத்து,—பிங்கலந்தைதன்னில் - பிங்கலந்தையிலே. எ - று. ஒடு, ஓடும் இசைநிறை. இன் சாரியை. தான் அசை. ஒலிப்பேரென்பதில் பேரென்பதைத் தேவரென்பது முதலிய மற்றவைகளோடும் கூட்டுக. ()

ஒருங்குளபொருளுமோர்ந்திட்டுரைத்தனன்விருத்தந்தன்னில்
இருந்தவைநல்லோர்குற்றமியம்பிடாரென்பதெண்ணித்
திருந்தியகமலவூர்திருப்புகழ்புராணஞ்செய்தோன்
பரந்தசீர்க்குணபத்திரன்ருள்பணிந்தமண்டலவன்ருனே.

இ - ள். ஒருங்கு உள பொருளும் ஓர்ந்திட்டு - உள்ள பொருள்களெல்லாவற்றையும் அறிந்து,—அவை இருந்த நல்லோர் குற்றம் இயம்பிடார் என்பது எண்ணி - சபையின்கண்ணே இருந்த நல்லோர்கள் குற்றஞ்சொல்லார்களென்பதை நினைந்து,—விருத்தந்தன்னில் உரைத்தனன் - விருத்தமென்னுஞ் செய்யுளாற் பாடினார்,—திருந்திய கமலவூர்தி திருப்புகழ் புராணம் செய்தோன் - திருந்தின அருகக்கடவுளினது சிறப்பாகிய கீர்த்தியைப் புராணமாகப் பாடினவர்—பரந்த சீர்க் குணபத்திரன் தாள் பணிந்த மண்டலவன் - பரம்பிய புகழையுடைய குணபத்திரரென்பவரது பாதங்களை வணங்கிய மண்டலவர். எ - று. தான், ஏ அசை. மேலைச்செய்யுளினிறுதியிற் பிங்கலந்தைதன்னில் என்பதை இச்செய்யுளின் முதலில் வைத்துப் பிங்கலந்தையிலே உள்ள பொருள்களெல்லாவற்றையுமெனக் கூட்டுக. (அ)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

## முதலாவது

# தேவப்பெயர்த்தொகுதி.

அநகனெண்குணனிச்சிந்தனறவாழிவேந்தன்வாமன்
சினன்வரனுறுவன்சாந்தன்சினேந்திரனீதிநூலின்
முனைவன்மாசேனன்றேவன்மூவுலகுணர்ந்தமூர்த்தி
புனிதன்வென்றோன்விராகன்பூமிசைநடந்தோன்போதன். (க)

பண்ணவன்கமலவூர்திபரமேட்டிகாதிவென்றோன்
புண்ணியன்புலவன்புத்தன்பூரணன்பொன்னெயிற்கோன்
விண்ணவன்விமலன்வீரன்விநாயகன்வீதசோகன்
அண்ணல்வின்மதனைவென்றோனருட்கொடிவேந்தனாசான். (உ)

முத்தன்மாமுனிகருத்தன்முக்குடைச்செல்வன்முன்னோன்
சித்தனெண்சிறப்புமுள்ளோன்றிகம்பரன்கொல்லாவேதன்
நித்தனின்மலனின்னாமனிராயுதனேமிநாதன்
அத்தனானந்தன்சோதியரியணைச்செல்வனாதி. (௩)

ஆத்தன்குற்றங்களில்லானசோகமர்கடவுளாதன்
சாத்தன்வேதாந்தனாதன்சமயநாமயன்சுயம்பு
நீத்தவன்பிதாவிதாதாநிரம்பரனநந்தஞானி
தீர்த்தன்மால்பகவன்சாமிசீபதிசீமான்செய்யோன். (௪)

நிருமலன்வரதன்சாதுநிரஞ்சனன்விறலோன்யோகி
தருமராசன்யுகாதிசதுர்முகன்சாதரூபி
திருமறுமார்பனீடுசிவகதிக்கிறைதொண்ணூறே
அருகன்பேராகுமற்றுமபிதான * மநந்தமாமே. (௫)

சங்கரனிறையோன்சம்புசதாசிவன்பேயொடாடி
பொங்கரவணிந்தமூர்த்திபுராந்தகன்பூதநாதன்
கங்கைவேணியன்கங்காளன்கடுக்கையங்கண்ணிசூடி
மங்கையோர்பாகன்முன்னோன்மகேச்சுரன்வாமதேவன். (௬)

நீலகண்டன்மாதேவனிருமலன்குன்றவில்லி
சூலபாணியனீசானன்பசுபதிசுடலையாடி
காலகாலன்கபாலியுருத்திரன்கைலையாளி
ஆலமர்கடவுணித்தனைம்முகன்பரசுபாணி. (௭)

---

* அபிதானம் - பெயர்.

# பெயர்ப்பிரிவு.

அருகன்பெயர்—அநகன், எண்குணன், நிச்சிந்தன், அறவாழிவேந்தன், வாமன், சினன், வரன், உறுவன், சாந்தன், சினேந்திரன், முனைவன், மாசேனன், தேவன், மூவுலகுணர்ந்தமூர்த்தி, புனிதன், வென்றோன், விராகன், பூமிசைநடந்தோன், போதன். கக.

பண்ணவன், கமலவூர்தி, பரமேட்டி, காதிவென்றோன், புண்ணியன், புலவன், புத்தன், பூரணன், பொன்னெயிற்கோன், விண்ணவன், விமலன், வீரன், விநாயகன், வீதசோகன், அண்ணல், மதனைவென்றோன், அருட்கொடிவேந்தன், ஆசான். கஅ.

முத்தன், மாமுனி, கருத்தன், முக்குடைச்செல்வன், முன்னோன், சித்தன், எண்சிறப்புமுள்ளோன், திகம்பரன், கொல்லாவேதன், நித்தன், நின்மலன், நின்ஞுமன், நிராயுதன், நேமிநாதன், அத்தன், ஆனந்தன், சோதி, அரியணைச்செல்வன், ஆதி. கக.

ஆத்தன், குற்றங்களில்லான், அசோகமர்கடவுள், ஆதன், சாத்தன், வேதாந்தன், நாதன், சமி, அநாமயன், சுயம்பு, நீத்தவன், பிதா, விதாதா, நிரம்பரன், அனந்தஞானி, தீர்த்தன், மால், பகவன், சாமி, ஸ்ரீபதி, ஸ்ரீமான், செய்யோன். உஉ.

நிருமலன், வரதன், சாது, நிரஞ்சனன், விறலோன், யோகி, தருமராசன், யுகாதி, சதுர்முகன், சாதரூபி, திருமறுமார்பன், சிவகதிக்கிறை.

கஉ. (ஆ கo)

சிவன்பெயர்—சங்கரன், இறையோன், சம்பு, சதாசிவன், பேயொடாடி, அரவணிந்தமூர்த்தி, புராந்தகன், பூதநாதன், கங்கைவேணியன், கங்காளன், கடுக்கையங்கண்ணிசூடி, மங்கையோர்பாகன், முன்னோன், மகேச்சுரன், வாமதேவன். கரு.

நீலகண்டன், மாதேவன், நிருமலன், குன்றவில்லி, சூலபாணியன், ஈசானன், பசுபதி, சுடலையாடி, காலகாலன், கபாலி, உருத்திரன், கைலையாளி, ஆலமர்கடவுள், நித்தன், ஐம்முகன், பரசுபாணி.

கசு.

அந்திவண்ணன்முக்கண்ணனழலாடிபாண்டரங்கன்
சந்திரசேகரனானந்தன்சடைமுடியனந்தனாதி
தந்தியீருரியோனம்பன்றற்பரனீறணிந்தோன்
நந்தியீச்சுரனேறூர்ந்தோனக்கன்மாஞானமூர்த்தி. (௮)

வரன்மறைமுதலியீசன்மானிடமேந்திசோதி
பிரமன்மாற்கரியோன்றாணுபிஞ்சகன்பினாகபாணி
பரமனெண்டோளன்பர்க்கன்பவன்யோகிபகவானேகன்
அரனுமாபதிசிவன்பேரறுபத்தாறநந்தமற்றும். (௯)

இலகுமோர்குண்டலன்மற்றிரேவதிகொண்கன்முற்றும்
நிலவியமுசலிவெள்ளைநிகழ்நீலாம்பரனநந்தன்
அலமுறுபடையாக்கொண்டோனச்சுதன்முன்னர்வந்தோன்
பலபத்திரன்காமபாலன்பனந்தாமன்பலதேவன்பேர். (௧௦)

மாதவன்மாயன்செய்யவாமனன்வாசுதேவன்
சீதரனந்தகோபன்றிருமகனுவணமேற்ற
கேதனன்பதுமநாபன்கேசவன்பஞ்சவர்க்குத்
தூதனேசார்ங்கபாணிசுரிமுகச்சங்கமேந்தி. (௧௧)

கொண்டல்வண்ணன்காகுத்தன்கோவிந்தனச்சுதன்மால்
விண்டுவேலையிற்றுயின்றோன்விரகினாலுந்திபூத்தோன்
வண்டுழாய்மவுலியாதிவராகன்வைகுண்டநாதன்
முண்டகாசனைகேள்வன்றாமோதரன்முராரிநேமி. (௧௨)

வலவன்றேவகிதன்மைந்தன்வனமாலிபடியிடந்தோன்
சலசலோசனனனந்தசயனன்பீதாம்பரன்பேர்
உலகளந்தருள்வோன்பஞ்சாயுதனுலகுண்டபெம்மான்
அலகைதன்முலையோடாவியருந்தினோனரசிங்கன். (௧௩)

அரவணைச்செல்வன்கண்ணனறிதுயிலமர்ந்தமூர்த்தி
பிரமனைப்பெற்றதாதைபின்னைகேள்வன்முகுந்தன்
கரியவனெடியோன்காவற்கடவுணாரணனேழே
அரியின்பேராகுமற்றுமபிதானமனந்தமாமே. (௧௪)

பிரமன்மேதினிபடைத்தோன்பிதாமகன்பிதாவிதாதா
வரனயன்மலரோணிந்தமண்பொதுத்தந்தைவேதா
இரணியகருப்பன்போதனினியமாலுந்திவந்தோன்
குரவனோதிமமுயர்த்தகொடியினனன்னவூர்தி. (௧௫)

அந்திவண்ணன், முக்கண்ணன், அழலாடி, பாண்டரங்கன், சந்திரசேகரன், ஆனந்தன், அனந்தன், ஆதி, தந்தியுரியோன், நம்பன், தற்பரன், நீறணிந்தோன், நந்தி, ஈச்சுரன், ஏறூர்ந்தோன், நக்கன், ஞானமூர்த்தி. எ.

வரன், மறைமுதலி, ஈசன், மானிடமேந்தி, சோதி, பிரமன் மாற்கரியோன், தாணு, பிஞ்சகன், பிணாகபாணி, பரமன், எண்டோளன், பர்க்கன், பவன், யோகி, பகவான், ஏகன், அரன், உமாபதி. அ. (ஆ கூகூ.)

பலதேவன்பெயர்—ஓர்குண்டலன், இரேவதிகொண்கன், முசலி, வெள்ளை, நீலாம்பரன், அநந்தன், அலப்படைகொண்டோன், அச்சுதன்முன்னர்வந்தோன், பலபத்திரன், காமபாலன், பனந்தாமன். கூ.

அரியின்பெயர்—மாதவன், மாயன், வாமனன், வாசுதேவன், சீதரன், நந்தகோபன்மகன், உவணகேதனன், பதுமநாபன், கேசவன், பஞ்சவர்க்குத்தூதன், சார்ங்கபாணி, சங்கமேந்தி. ௰.

கொண்டல்வண்ணன், காகுத்தன், கோவிந்தன், அச்சுதன், மால், விண்டு, வேலையிற்றுயின்றோன், உந்திபூத்தோன், துழாய்மௌலி, ஆதிவராகன், வைகுண்டநாதன், முண்டகாசனைகேள்வன், தாமோதரன், முராரி, நேமி. ௰க.

வலவன், தேவகிமைந்தன், வனமாலி, படியிடந்தோன், சலசலோசனன், அனந்தசயனன், பீதாம்பரன், உலகளந்தருள்வோன், பஞ்சாயுதன், உலகுண்டபெம்மான், அலைகழுலையோடாவியருந்தினோன், நாரசிங்கன். ௰உ.

அரவணைச்செல்வன், கண்ணன், அறிதுயிலமர்ந்தமூர்த்தி, பிரமனைப்பெற்றதாதை, பின்னைகேள்வன், முகுந்தன், கரியவன், நெடியோன், காவற்கடவுள், நாரணன். ௰௩. (ஆ சக.)

பிரமன்பெயர்—மேதினிபடைத்தோன், பிதாமகன், பிதா, விதாதா, வரன், அயன், மலரோன், மண்பொதுத்தந்தை, வேதா, இரணியகருப்பன், போதன், மாலுந்திவந்தோன், குரவன், ஓதிமமுயர்த்தகொடியினன், அன்னவூர்தி. ௰௪.

இறைசதானந்தனீண்டவெண்கணன்விதிசுயம்பு
மறையவனநந்தன்ஞானிமான்மகன்வாணிகேள்வன்
முறைதெரிபகவன்வானோர்முதல்வனான்முகன்விரிஞ்சன்
நறைமலிகமலயோனிநாமமாறைந்துமாமே. (௧௬)

தருமராசன்முனீந்திரன்சினன்பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந்தவுணர்க்கூட்டுந்ததாகதனாதிதேவன்
விரவுசாக்கியனேசைனன்விநாயகன்சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிலிருந்தோனறிவரன்பகவன்செல்வன். (௧௭)

அண்ணலேமாயாதேவிசுதனகளங்கமூர்த்தி
நண்ணியகலைகட்கெல்லாநாதன்முக்குற்றமில்லோன்
எண்ணில்கண்ணுடையோன்வாமனேற்றபுண்ணியத்தின்மூர்த்தி
புண்ணியமுதல்வன்சாந்தன்பூமிசைநடந்தோன்புத்தன். (௧௮)

மேகவாகனன்வேள்விக்குவேந்தன்விண்முழுதுமாளி
பாகசாதனனேவச்சிரபாணிகோபதிசிறப்பாம்
நாகநீணகர்க்குநாதனான்மருப்பியானையூர்தி
போகிவாசவனேவேந்தன்புரந்தரன்புலவன்சக்கிரன். (௧௯)

மருதநன்னிலத்துவேந்தன்மருத்துவன்வானோர்கோமான்
புருகூதன்சசிமணாளன்புரோகிதன்கௌசிகன்னே
கரியவன்சுனாசீரன்னாகண்டலனுடன்வலாரி
அரிசதக்கிரதுநீண்டவாயிரங்கண்ணனிந்திரன். (௨௦)

அங்குசபாசமேந்தியம்பிகைதனயன்முன்னோன்
ஐங்கரன்மூத்தோனொற்றையணிமருப்பினனேரம்பன்
கங்கைபெற்றோன்முக்கண்ணன்கணபதியீசன்மைந்தன்
வெங்கயமுகனேயாகுவாகனன்விநாயகன்பேர். (௨௧)

உக்கிரனழற்கண்வந்தோனுமைமகன்சிம்புளானோன்
முக்கணன்சடையோன்யானைமுகவனுக்கிளையோன்வில்லி
செக்கர்வானிறத்தன்குரோதன்சிறுவிதிமகஞ்சிதைத்தோன்
மிக்கபத்திரைக்குக்கேள்வன்வீரபத்திரன்பேராமே. (௨௨)

முருகன்வேள்சாமியாறுமுகன்குகன்குழகன்மாயோன்
மருகன்சேய்கார்த்திகேயன்வரைபகவெறிந்தோன்செட்டி
அரன்மகன்கங்கைமைந்தனண்டலைக்கொடியுயர்த்தோன்
சரவணபவன்கடம்பன்சூரகற்செற்றோனாசான். (௨௩)

இறை, சதானந்தன், எண்கணன், விதி, சுயம்பு, மறையவன், அநந்தன், ஞானி, மான்மகன், வாணிகேள்வன், பகவன், வானோர் முதல்வன், நான்முகன், விரிஞ்சன், கமலயோனி. கஉ. (ஆ நு௦.)

புத்தன்பெயர்—தருமராசன், முனீந்திரன், சினன், ததாகதன், ஆதிதேவன், சாக்கியன், சைனன், விநாயகன், சினந்தவிர்ந் தோன், அரசுநீழலிலிருந்தோன், வரன், பகவன், செல்வன். கங.

அண்ணல், மாயாதேவிசுதன், அகளங்கமூர்த்தி, கலைகட்கெல் லாநாதன், முக்குற்றமில்லோன், எண்ணில்கண்ணுடையோன், வாமன், புண்ணியத்தின்மூர்த்தி, புண்ணியமுதல்வன், சாந்தன், பூமிசைநடந்தோன். கக. (ஆ உச.)

இந்திரன்பெயர்—மேகவாகனன், வேள்விக்குவேந்தன், விண்முழு தாமாளி, பாகசாதனன், வச்சிரபாணி, கோபதி, நாகநகர்க்குநா தன், நான்மருப்பியானையூர்தி, போகி, வாசவன், வேந்தன், புரந்தரன், புலவன், சக்கிரன். கச.

மருதநிலத்துவேந்தன், மருத்துவன், வானோர்கோமான், புருகூதன், சசிமணாளன், புரோகிதன், கௌசிகன், கரியவன், சுனாசீரன், ஆகண்டலன், வலாரி, அரி, சதக்கிரது, ஆயிரங்கண்ணன். கச. (ஆ உஅ.)

விநாயகன்பெயர்—அங்குசபாசமேந்தி, அம்பிகைதனயன், முன்னோன், ஐங்கரன், மூத்தோன், ஒற்றைமருப்பினன், ஏரம்பன், கங்கைபெற்றோன், முக்கண்ணன், கணபதி, ஈசன்மைந்தன், கயமுகன், ஆகுவாகனன். கரு.

வீரபத்திரன்பெயர்—உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், சிம்புளானோன், முக்கணன், சடையோன், யானைமுகவனுக்கிளையோன், வில்லி, செக்கர்வானிறத்தன், குரோதன், சிறுவிதி மகஞ்சிதைத்தோன், பத்திரைக்குக்கேள்வன். கசு.

கந்தன்பெயர்—முருகன், வேள், சாமி, ஆறுமுகன், குகன், குழகன், மாயோன்மருகன், சேய், கார்த்திகேயன், வரைபகவெறிந்தோன், செட்டி, அரன்மகன், கங்கைமைந்தன், ஆண்டலைக் கொடியுயர்த்தோன், சரவணபவன், கடம்பன், தாரகற்செற்றோன், ஆசான். கஎ.

வேய்ந்தபூங்குறிஞ்சிவேந்தன்வேலினுக்கிறைவிசாகன்
சேந்தன்காங்கேயன்செவ்வேள்சிலம்பன்மாமஞ்ஞையூர்தி
வாய்ந்தசூர்ப்பகைவன்வள்ளிமணவாளன்றெய்வயானை
காந்தனேகுமரன்கந்தன்கலையுணர்புலவனும்பேர். (உச)

திருமகண்மைந்தன்மாரன்சித்தசன்சம்பராரி
உருவிலிமன்மதன்மீனுறுகொடியுயர்த்ததோன்றல்
இரதிகாதலன்வசந்தனெழில்பெறுவேனிலாளி
கருதியகருப்புவில்லிகந்தர்ப்பன்மதன்பூவாளி. (உரு)

திங்கள்வெண்குடையோன்றென்றற்றேரினன்வில்லிமோகன்
ஐங்கணைக்கிழவனெய்யுமலர்க்கணைவேளநங்கன்
செங்கண்மான்மைந்தன்மிக்கதிறன்மனோபவன்மனோசன்
அங்கசன்மனோபுவேள்ராழிவெம்முரசோன்காமன். (உசு)

முத்தனேகுமரன்பிள்ளைமுடிவல்வெம்படையோன்காரி
சித்தன்கேத்திரபாலன்னேசெந்தொடைக்குரியகோமான்
வித்தகன்ஞாளியூர்திவிறற்கருங்குதிரையாளி
வைத்தசீர்வடுகனின்னவைரவனுமமாமே. (உஎ)

காரியேபுறத்தவன்பூங்கடல்வண்ணனெடியசாத்தாப்
பூரணைகேள்வன்யோகிபுட்கலைதன்மணாளன்
ஒருமாசாத்தன்செண்டாயுதன்வெள்ளையானையூர்தி
ஆரியனறத்தைக்காப்போனரிகரகுமரனையன். (உஅ)

ஆரனதுதோழனேகின்னரர்பிரானளகையாளி
புருடவாகனனேசோமன்புட்பகவிமானமுள்ளோன்
இருநிதிக்கிழவனேகபிங்கலனியக்கர்கோமான்
மரகதன்றனதன்மந்திரிவைச்சிரவணன்குபேரன். (உகூ)

சமன்செங்கோற்கடவுள்கூற்றுத்தருமனந்தகனேசண்டன்
நமன்வைவச்சுதனேமற்றைநடுவனேதென்றிசைக்கோன்
யமனரிமறலியேமற்றெருமையூர்தியுமாமிப்பாற்
கமையில்கான்மறன்மடங்கல்காலன்பாசத்தனும்பேர். (௩௦)

மரகதவல்லிபூகமாநிழலுற்றவஞ்சி
பரமசுந்தரியியக்கிபகவதியம்மையெங்கள்
அருகனைமுடிதரித்தாளம்பிகையறத்தின்செல்வி
தருமதேவதைபேரம்பாலிகையென்றுஞ்சாற்றலாமே. (௩க)

குறிஞ்சிவேந்தன், வேலினுக்கிறை, விசாகன், சேந்தன், காங்கேயன், செவ்வேள், சிலம்பன், மஞ்ஞையூர்தி, சூர்ப் பகைவன், வள்ளிமணவாளன், தெய்வயானைகாந்தன், குமரன், புலவன். கங. (ஆ நக.)

காமன்பெயர்—திருமகண்மைந்தன், மாரன், சித்தசன், சம்பராரி, உருவிலி, மன்மதன், மீன்கொடியுயர்த்ததோன்றல், இரதிகாதலன், வசந்தன், வேனிலாளி, கருப்புவில்லி, கந்தர்ப்பன், மதன், பூவாளி. கச.

திங்கள்வெண்குடையோன், தென்றற்றேரினன், வில்லி, மோகன், ஐங்கணைக்கிழவன், வேள், அநங்கன், மான்மைந்தன், மனோபவன், மனோசன், அங்கசன், மனோபு, ஆழிமுரசோன். கரு. (ஆ உஎ.)

வைரவன்பெயர்—மூத்தன், குமரன், பிள்ளை, முடுவெற்படையோன், காரி, சித்தன், கேத்திரபாலன், செந்தொடைக்குரியகோமான், வித்தகன், ஞாளியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன். கசு.

ஐயன்பெயர்—காரி, புறத்தவன், கடல்வண்ணன், சாத்தா, பூரணைகேள்வன், யோகி, புட்கலைமணாளன், மாசாத்தன், செண்டாயுதன், வெள்ளையானையூர்தி, ஆரியன், அறத்தைக்காப்போன், அரிகரகுமரன். கஎ.

குபேரன்பெயர்—அரனதுதோழன், கின்னரர்பிரான், அளகையாளி, புருடவாகனன், சோமன், புட்பகவிமானமுள்ளோன், இருநிதிக்கிழவன், ஏகபிங்கலன், இயக்கர்கோமான், மரகதன், தனதன், மந்திரி, வைச்சிரவணன். கஅ.

யமன்பெயர்—சமன், செங்கோற்கடவுள், கூற்று, தருமன், அந்தகன், சண்டன், நமன், வைவச்சுதன், நடுவன், தென்றிசைக்கோன், அரி, மறலி, எருமையூர்தி. ககூ.

காலன்பெயர்—கால், மறல், மடங்கல், பாசத்தன். உ.

தருமதேவதையின்பெயர்—மரகதவல்லி, பூகநிழலுற்றவஞ்சி, பரமசுந்தரி, இயக்கி, பகவதி, அம்மை, அருகனைமுடிதரித்தாள், அம்பிகை, அறத்தின்செல்வி, அம்பாலிகை. உ௦.

அரனிடத்தவள்காமக்கோட்டத்தியம்பிகையேமாதாத்
தருமத்தின்செல்விதேவிசாம்பவிமலைமடந்தை
பரைசிவைகௌரிமுக்கட்பார்ப்பதியொடுபவானி
உரைகெழுசத்திநாரியுமைபெயர்மூவைந்தாமே. (௩௨)

வரநதிநீடுமந்தாகினிதிரிபதகைமற்றைச்
சுரநதிகங்கைபேர்சானவிபகீரதியுஞ்சொல்லும்
பெருகுமூதணங்குமோடிபேசியகொற்றிசூரி
மருவியவடுகிமாரிவடுகன்றாய்காடுகாள்பேர். (௩௩)

மாக்கடற்பிறந்தகோதைமாவரிப்பிரியைசெய்யாள்
ஆக்கம்பொன்பொறிஸ்ரீதேவியலர்மகள்பொருளின்செல்வி
தாக்கணங்கிளையாள்பூமினிலக்குமிசலசைசெல்வந்
தேக்குமிந்திரையீரெட்டுந்திருமகணாமமாமே. (௩௪)

கலைமகள்பனுவலாட்டிகாயத்திரிஞானமூர்த்தி
உலகமாதாப்பிராமியொள்ளியவெள்ளைமெய்யாள்
இலகுவெண்சலசமுற்றாள்பாரதியிசைமடந்தை
மலரயன்மனைவிவாக்காள்வாணிநாமகள்பேராமே. (௩௫)

சேட்டையிந்திரைக்குமூத்தாள்சீர்கேடிசிறப்பிலாதாள்
நீட்டியவேகவேணிநெடுங்காகத்துவசமுற்றாள்
கேட்டையேகேடலணங்குகழுதைவாகனிகேடெல்லா
மூட்டியகலதிதௌவைமுகடிமூதேவியாமே. (௩௬)

பொருவிலிந்திராணிசெய்யபுலோமசைசசிபேரின்பந்
தருமயிராணியிந்திரன்மனைவிபேர்சயந்தன்மைந்தன்
அரமகளரம்பையென்பவமரர்தம்மாதின்பேரே
விரவுசூரணங்குதெய்வமெல்லியர்பொதுப்பேர்சொல்லும். (௩௭)

சூரிமாலினியெண்டோளிசூலிசண்டிகையேதேவி
வீரிமாதரிகங்காளிவேதாளியொடுமாதங்கி
தாரகற்செற்றதையல்பைரவிசிவைசாமுண்டி
ஆரணிவல்லணங்கோடையையாமளைமுக்கண்ணி. (௩௮)

அலகைவெங்கொடியுயர்த்தாண்மதுபதியாளியூர்தி
உலவியமாயையுற்றயோகினிகாளிநாமம்
வலவைசூர்மகடனோடுமாயவளிடாகினிப்பேர்
இலகுசன்மினிவஞ்சப்பெண்காளிதன்னேவல்செய்வாள். (௩௯)

உமையின்பெயர்—அரனிடத்தவள், காமக்கோட்டத்தி, அம்பிகை, மாதா, தருமத்தின்செல்வி, தேவி, சாம்பவி, மலைமடந்தை, பரை, சிவை, கௌரி, பார்ப்பதி, பவானி, சத்தி, நாரி. ௧௫.

கங்கையின்பெயர்—வரநதி, மந்தாகினி, திரிபதகை, சுரநதி, சானவி, பகீரதி. ௬.

காடுகாள்பெயர்—மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரி, வடுகன்றாய். ௭.

திருமகள்பெயர்—கடற்பிறந்தகோதை, மா, அரிப்பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், பொறி, சீதேவி, அலர்மகள், பொருளின்செல்வி, தாக்கணங்கு, இளையாள், பூமின், இலக்குமி, சலசை, இந்திரை. ௧௬.

நாமகள்பெயர்—கலைமகள், பனுவலாட்டி, காயத்திரி, ஞானமூர்த்தி, உலகமாதா, பிரமி, வெள்ளைமெய்யாள், வெண்சலசமுற்றாள், பாரதி, இசைமடந்தை, அயன்மனைவி, வாக்காள், வாணி. ௧௩.

மூதேவியின்பெயர்—சேட்டை, இந்திரைக்குமூத்தாள், சீர்கேடி, சிறப்பிலாதாள், ஏகவேணி, காகத்துவசமுற்றாள், கேட்டை, கெடலணங்கு, கழுதைவாகனி, கலதி, தௌவை, முகடி. ௧௨.

இந்திரன்மனைவிபெயர்--இந்திராணி,புலோமசை,சசி,அயிராணி.௪.
இந்திரன்மைந்தன்பெயர்—சயந்தன். ௧.
அமரர்மாதின்பெயர்—அரமகள், அரம்பை. ௨.
தெய்வமெல்லியர்பொதுப்பெயர்—சூர், அணங்கு. ௨.

காளியின்பெயர்—சூரி, மாலினி, எண்டோளி, சூலி, சண்டிகை, தேவி, வீரி, மாதரி, கங்காளி, வேதாளி, மாதங்கி, தாரகற்செற்றதையல், பைரவி, சிவை, சாமுண்டி, ஆரணி, வல்லணங்கு, ஐயை, யாமளை, முக்கண்ணி. ௨௰

அலகைக்கொடியுயர்த்தாள், மதுபதி, ஆளியூர்தி, மாயை, யோகினி. ௫. (ஆ ௨௫.)
இடாகினியின்பெயர்—வலவை, சூர்மகள், மாயவள். ௩.
காளியேவல்செய்மகளின்பெயர்—சன்மினி, வஞ்சப்பெண். ௨.

அமரியெண்டோளிவெற்றிபந்தரியம்பணத்தி
சமரிபாலைக்கிழத்திசயமகள்வீரச்செல்வி
குமரிமாமகிடற்செற்றாள்கொற்றவைசக்கிரபாணி
விமலைவண்கலையானத்திவிசையைநாரணியேவிந்தை. (௪௰)

நீலியேநெடியகாத்தியாயனிமேதிச்சென்னி
மேலிடருறமிதித்தமெல்லியல்கௌரியையை
மாலினுக்கிளையநங்கைபகவதிவாள்கைக்கொண்டாள்
சூலிசண்டிகையேகன்னிசுந்தரிதுர்க்கைநாமம். (௪௧)

அமரர்பண்ணவர்புத்தேளிர்கடவுளரண்டரும்பர்
இமையவர்விபுதர்வானோரிலேகரேபுலவர்விண்ணோர்
அமுதராதித்தர்மேலோரையரேசுரரேதீர்த்தர்
உமிழ்சுடர்மௌலிசூட்டுமுயர்நிலத்தவருந்தேவர். (௪௨)

ஈனமிலணங்குபுத்தேளேற்றசூர்கடவுடேவே
ஆனதெய்வதமேதெய்வமாமெனவுரைப்பர்நூலோர்
தானவரவுணரோடுதைத்தியர்திதிபின்மைந்தர்
ஏனையவசுரராகுநிசாசரரென்றுமேற்கும். (௪௩)

நிருதரேபிசிதவூணர்நிசாசரரரக்கர்தீமை
தருமிராக்கதர்பேர்சாலகடங்கடர்தானுமாகும்
விரவுவிஞ்சையர்பேர்வித்தியாதரரேகேசரருமாங்கந்
தருவர்யாழ்வல்லோரேகாந்தருவர்கின்னரருமாமே. (௪௪)

குறள்கிருத்திமமேகூளிபாரிடஞ்சாதகஞ்செந்
நெறியில்பூதப்பேரைந்தாநீள்பிரேதம்வேதாளம்
வெறிமயல்பிசாசம்பாசம்வியந்தரமணணசோகோ
டறிவழிகழுதுகூளியலகைபேய்கடிசாவும்பேர். (௪௫)

அண்டம்வானுலகுமங்குலந்தரமம்பரங்கோக்
குண்டலங்ககனங்காயங்குடிலம்புட்கரமநந்தம்
கண்டிடாவெளியேமீமாகத்தொடாசினிநபங்கம்
விண்டலம்விசும்புவேணிவியோமமாகாயமாமே. (௪௬)

வாதங்கால்வளிமருத்துவாடையேபவனம்வாயுக்
கூதிர்மாருதமால்கோதைகொண்டலேயுலவைகோடை
ஊதைவங்கூழ்சிறந்தவொலிசதாகதியுயிர்ப்புக்
காதரிகந்தவாகன்பிரபஞ்சனன்சலனன்காற்றே. (௪௭)

துர்க்கையின்பெயர்—அமரி, எண்டோளி, வெற்றி, அந்தரி, அம்பணத்தி, சமரி, பாலைக்கிழத்தி, சயமகள், வீரச்செல்வி, குமரி, மகிடற்செற்றுள், கொற்றவை, சக்கிரபாணி, விமலை, கலையானத்தி, விசையை, நாரணி, விந்தை. கஅ.

நீலி, காத்தியாயனி, மேதிச்சென்னிமிதித்தமெல்லியல், கௌரி, ஐயை, மாலினுக்கிளையநங்கை, பகவதி, வாள்கைக்கொண்டாள், சூலி, சண்டிகை, கன்னி, சுந்தரி. ௩உ. (ஆ ௩0.)

தேவர்பெயர்—அமரர், பண்ணவர், புத்தேளிர், கடவுளர், அண்டர், உம்பர், இமையவர், விபுதர், வானோர், இலேகர், புலவர், விண்ணோர், அமுதர், ஆதித்தர், மேலோர், ஐயர், சுரர், தீர்த்தர், உயர்நிலத்தவர். கக.

தெய்வத்தின்பெயர்—அணங்கு, புத்தேள், சூர், கடவுள், தே, தெய்வம். சு.

அசுரர்பெயர்—தானவர், அவுணர், தைத்தியர், திதியின்மைந்தர், நிசாசரர். ரு.

இராக்கதர்பெயர்—நிருதர், பிசிதவூணர், நிசாசரர், அரக்கர், சாலகடங்கடர். ரு.

விஞ்சையர்பெயர்—வித்தியாதரர், கேசரர். உ.

கந்தருவர்பெயர்—யாழ்வல்லோர், காந்தருவர், கின்னரர். ௩.

பூதத்தின்பெயர்—குறள், கிருத்திமம், கூளி, பாரிடம், சாதகம். ரு.

பேயின்பெயர்—பிரேதம், வேதாளம், வெறி, மயல், பிசாசம், பாசம், வியந்தரம், மண்ணை, சோகு, கழுது, கூளி, அலகை, கடி, சாவு. கச.

ஆகாயத்தின்பெயர்—அண்டம், வான், உலகு, மங்குல், அந்தரம், அம்பரம், கோ, குண்டலம், ககனம், காயம், குடிலம், புட்கரம், அநந்தம், வெளி, மீ, மாகம், ஆசினி, நபம், கம், விண்டலம், விசும்பு, வேணி, வியோமம். உ௩.

காற்றின்பெயர்—வாதம், கால், வளி, மருத்து, வாடை, பவனம், வாயு, கூதிர், மாருதம், மால், கோதை, கொண்டல், உலவை, கோடை, ஊதை, வங்கூழ், ஒலி, சதாகதி, உயிர்ப்பு, அரி, கந்தவாகன், பிரபஞ்சனன், சலனன். உ௩.

கோடைமேல்காற்றினாமங்கொண்டல்கீழ்காற்றிற்கேற்கும்
வாடையினாமம்வீசும்வடகாற்றுவடந்தையென்ப
கூடியகூதிருதைகுளிர்பனிக்காற்றினாமம்
சாடியசுழல்காற்றின்பேர்சாரிகைசூறையாமே. (சஅ)

வருதென்கால்சிறுகாறென்றிமலயக்கால்வசந்தன்றென்றல்
அரிவசுத்தகனனங்கியனலயவாகனன்றீ
எரிசுசிசிகியேயாரலியங்குகாற்றின்சகாயன்
கருநெறிகனலியேயங்காரகன்சித்திரபானு. (சகூ)

தழலுதாசனன்சிறந்ததனஞ்சயன்சாதவேதாச்
செழுமையமுளரிதென்கீழ்த்திசையிறைசேர்ந்தார்க்கொல்லி
எழுவிதநாவேவன்னியேற்றபாவகனேதேயு
அழல்சுடர்ஞெகிழியின்னநெருப்பின்பேராறைந்தாமே. (ருo)

வடவைதீத்திரண்மடங்கல்வருவடவாமுகஞ்சூழ்
கடையனலூழித்தீயாங்கனலொழுங்கதுசுவாலை
அடைவில்விண்வீழுங்கொள்ளியுற்கையென்றறையலாமே
வெடிநறைகுய்யிம்மூன்றுமிகுநறும்புகையினாமம். (ருக)

தாவங்காட்டழலத்தீயைத்தருகோலேஞெலிகோலென்ப
தீவிகைதீபமற்றைத்திகழ்சுடரொளிவிளக்கே
ஆவிதூபந்தூமத்தோடரிபுகைபொறிபுலிங்கம்
பாவகனத்தீத்தெய்வம்பாரியேசுவாகாதேவி. (ருஉ)

வாரியாலங்கிலாலமழையலர்கமலங்காண்டம்
நீரம்புட்கரமேசிந்துநெடும்புனல்சலிலம்பாணி
காரறல்புவனநாரங்களவிரதங்கவந்தம்
மாரியம்புதமேயப்புவருணஞ்சீவனம்வனம்வார். (ருங)

பயமழையுதகந்தோயம்பயசுசம்பரம்பானீயம்
வயமொடுசீவனீயம்வருதீர்த்தங்கீரஞ்சீதம்
அயமளகத்தோடாமமமுதங்கஞ்சலநீராகும்
நயனுறுவருணனிந்தநற்புனல்வேந்தனாமம். (ருச)

பரிதிபாற்கரனாதித்தன்பனிப்பகைசுடர்பதங்கன்
இருள்வலிசவிதாச்சூரனெல்லுமார்த்தாண்டனென்றாழ்
அருணனாதவனேமித்திரனாயிரஞ்சோதியுள்ளோன்
தரணிசெங்கதிரோன்சண்டன்றபனனேயொளியேசான்றோன். ()

மேல்காற்றின்பெயர்-கோடை.க.கீழ்காற்றின்பெயர்-கொண்டல்.க
வாடையின்பெயர்—வடகாற்று, வடந்தை. உ.
பனிக்காற்றின்பெயர்—கூதிர், ஊதை. உ.
சுழல்காற்றின்பெயர்—சாரிகை, சூறை. உ.

தென்றலின்பெயர்—தென்கால், சிறுகால், தென்றி, மலயக்கால், வசந்தன். ரு.
நெருப்பின்பெயர்—அரி, வசு, தகனன், அங்கி, அனல், அயவாகனன், தீ, எரி, சுசி, சிகி, ஆரல், காற்றின்சகாயன், கருநெறி, கனலி, அங்காரகன், சித்திரபானு. கசு.

தழல், உதாசனன், தனஞ்சயன், சாதவேதா, மூளரி, தென்கீழ்த் திசையிறை, சேர்ந்தார்க்கொல்லி, எழுநா, வன்னி, பாவகன், தேயு, அழல், சுடர், ஞெகிழி. கச. (ஆ ௩0.)

ஊழித்தீயின்பெயர்—வடவை, தீத்திரள், மடங்கல், வடவாமுகம், கடையனல். ரு. கனலொழுங்கின்பெயர்—சுவாலை. க.
விண்வீழ்கொள்ளியின்பெயர்—உற்கை. க.
நறும்புகையின்பெயர்—வெடி, நறை, குய். ௩.

காட்டழலின்பெயர்—தாவம். க. தீக்கடைகோலின்பெயர்—ஞெலிகோல். க. விளக்கின்பெயர்—தீவிகை, தீபம், சுடர், ஒளி. ச.
புகையின்பெயர்—ஆவி, தூபம், தூமம், அரி. ச.
தீப்பொறியின்பெயர்-புலிங்கம். க. தீத்தெய்வத்தின்பெயர்—பாவகன். க. தீத்தெய்வத்தின்பாரியின்பெயர்—சுவாகாதேவி. க.

நீரின்பெயர்—வாரி, ஆலம், கிலாலம், மழையலர், கமலம், காண்டம், நீரம், புட்கரம், சிந்து, புனல், சலிலம், பாணி, கார், அறல், புவனம், நாரம், கனவிரதம், கவந்தம், மாரி, அம்பு, உதம், அப்பு, வருணம், சீவனம், வனம், வார். உகூ.

பயம், மழை, உதகம், தோயம், பயசு, சம்பரம், பானீயம், வயம், சீவனீயம், தீர்த்தம், கீரம், சீதம், அயிம், அளகம், ஆம், அம், அமுதம், கம், சலம். ககூ. (ஆ சரு.)
வருணன்பெயர்—புனல்வேந்தன். க.

சூரியன்பெயர்—பரிதி, பாற்கரன், ஆதித்தன், பனிப்பகை, சுடர், பதங்கன், இருள்வலி, சவிதா, சூரன், எல், மார்த்தாண்டன், என்றூழ், அருணன், ஆதவன், மித்திரன், ஆயிரஞ்சோதியுள்ளோன், தரணி, செங்கதிரோன், சண்டன், தபனன், ஒளி, சான்றோன். உஉ.

அனலியேயரியேபானுவலரியேயண்டயோனி
கனலியேவிகர்த்தனன்வெங்கதிரவன்பகலோன்வெய்யோன்
தினகரன்பகலேசோதிதிவாகரனரியமாவே
இனனுடனுதயன்ஞாயிறெல்லையேகிரணமாலி. (௫௬)

விரவுமேழ்பரியோன்வேந்தன்விரிச்சிகன்விரோசனன்பேர்
இரவிவிண்மணியருக்கனேழேழுஞ்சூரியன்பேர்
பரிதியின்வட்டந்தானேவிசயமாம்பரிதிவீசுங்
கிரணமேகரமுமற்றைக்கிளர்ந்ததீவிரமுமாகும். (௫௭)

நிலவுசோமன்களங்கனிசாபதிபிறைகுளிர்ந்த
கலையினனுடுவின்வேந்தன்கலாநிதியொடுகுபேரன்
அலவனேசசியேதிங்களம்புலிநிசாகரன்வான்
உலவிமகிரணன்சாந்தமுற்றதண்ணவன்குரங்கி. (௫௮)

மதியிராக்கதிரேயிந்துமருவுதானவனேயல்லோன்
விதுவொடுகுமுதநண்பன்சுதாகரன்வேந்தனுலோன்
சிதைவிலாமுயலின்கூடுபசுங்கதிர்த்தேவென்றெல்லாம்
புதியசந்திரன்மூவேழுமெட்டுமேபுகன்றநாமம். (௫௯)

கருதியசெந்தீவண்ணன்காட்டுமங்காரகன்சேய்
குருதிவக்கிரனேபௌமன்குசனிலமகனரத்தன்
மருவியவழலோன்மற்றைமங்கலனுடனேயாரல்
விரவியவுதிரனின்னமேவுசெவ்வாயினுமம். (௬௦)

சிந்தைகூரியன்கணக்கன்றேர்ப்பாகனருணன்சாமன்
வந்தனுதுவனேமாலேமதிமகனறிஞன்பாகன்
அந்தமாம்புலவன்மற்றையனுவழிமேதைபச்சை
புந்திபண்டிதனீரெட்டும்புதன்பெயராகுமன்றே. (௬௧)

தீதிலாத்தெய்வமந்திரிசிகண்டிசனமைச்சன்சீவன்
வேதனுண்டளப்பானுசான்வேந்தன்பொன்வியாழன்பேராம்
ஓதியவசுரமந்திரியுசனன்பார்க்கவனேசுங்கன்
கோதில்சுக்கிரன்பளிங்குபுகர்கவிமழைக்கோள்வெள்ளி. (௬௨)

கதிர்மகன்மந்தன்காரிகரியவன்சௌரிமேற்கோள்
முதுமகன்பங்குநீலன்முடவனேய்முகன்சனிப்பேர்
மதியுணுமிராகுநாமமற்றதுகமங்கருப்பாம்
அதிகமாங்கேதுச்செம்மைசிகிகதிர்ப்பகையுமாமே. (௬௩)

அனலி, அரி, பானு, அலரி, அண்டயோனி, கனலி, விகர்த்தனன், கதிரவன், பகலோன், வெய்யோன், தினகரன், பகல், சோதி, திவாகரன், அரியமா, இனன், உதயன், ஞாயிறு, எல்லை, கிரணமாலி. உ0.

ஏழ்பரியோன், வேந்தன், விரிச்சிகன், விரோசனன், இரவி, விண்மணி, அருக்கன். எ. (ஆ. சக.)
பரிதியின்வட்டத்தின்பெயர்—விசயம். க.
பரிதியின்கிரணத்தின்பெயர்—கரம், தீவிரம். உ.

சந்திரன்பெயர்—நிலவு, சோமன், களங்கன், நிசாபதி, பிறை, கலையினன், உடுவின்வேந்தன், கலாநிதி, குபேரன், அலவன், சசி, திங்கள், அம்புலி, நிசாகரன், இமகிரணன், தண்ணவன், குரங்கி. கஎ.

மதி, இராக்கதிர், இந்து, தானவன், அல்லோன், விது, குமுதநண்பன், சுதாகரன், வேந்தன், ஆலோன், முயலின்கூடு, பசுங்கதிர்த்தே. கஉ. (ஆ. உக.)

செவ்வாயின்பெயர்—செந்தீவண்ணன், அங்காரகன், சேய், குருதி, வக்கிரன், பௌமன், குசன், நிலமகன், அரத்தன், அழலோன், மங்கலன், ஆரல், உதிரன். கரு.

புதன்பெயர்—சிந்தைகூரியன், கணக்கன், தேர்ப்பாகன், அருணன், சாமன், தூதுவன், மால், மதியகன், அறிஞன், பாகன், புலவன், அனுவழி, மேதை, பச்சை, புந்தி, பண்டிதன். கசு.

வியாழன்பெயர்—தெய்வமந்திரி, சிகண்டிசன், அமைச்சன், சீவன், வேதன், ஆண்டளப்பான், ஆசான், வேந்தன், பொன். கூ.
வெள்ளியின்பெயர்—அசுரமந்திரி, உசனன், பார்க்கவன், சுங்கன், சுக்கிரன், பளிங்கு, புகர், கவி, மழைக்கோள். கூ.

சனியின்பெயர்—கதிர்மகன், மந்தன், காரி, கரியவன், சௌரி, மேற்கோள், முதுமகன், பங்கு, நீலன், முடவன், நோய்முகன். கக.
இராகுவின்பெயர்—தமம், கறுப்பு. உ.
கேதுவின்பெயர்—செம்மை, சிகி, கதிர்ப்பகை. ரு.

கொண்டமைவருடையாடுகொறிமறிமேடமென்ப
குண்டைசேமூரிபுல்லங்கோவிடையிடபமாகும்
தண்டியாழ்விழவிரட்டைசவைமகண்மிதுனந்தானே
நண்டுஞெண்டலவன்சேக்கைநள்ளிகர்க்கடகமாமே. (சுச)

கொலையரியாளிமாவேகொடும்புலிசிங்கமென்ப
மூலமடந்தையர்பேரெல்லாமொழிந்திடுங்கன்னிதானே
துலைநிறைநிறுப்பான்சீர்கோறாக்குவாணிகன்றுலாப்பேர்
உலைவுறுதெறுக்காறேளேயோதியவிருச்சிகப்பேர். (சுரு)

கொடுமரந்துரோணஞ்சாபங்கொடுஞ்சிலைதனுநாற்பேரே
வடிவின்மான்கலைசுறுவேமகரராசிக்குமுப்பேர்
குடமொடுகரீரஞ்சாடிகுடங்கரேகும்பமென்ப
நெடியமீன்மயிலைமற்சஞ்சலசரநேருமீனம். (சுசு)

பரிமருத்துவநாள்வாசிபரவுமைப்பசியாமேழேரு
டிரலையேமுதனுள்சென்னியென்பதச்சுவினியின்பேர்
பரணியேகிழவன்சோறுபகலவன்றராசுதாழி
தருமனுளடுப்புப்பூதந்தாசிமுக்கூட்டுத்தானே. (சுஎ)

எரிபிறந்திடுநாளாரலிருலறுவாயளக்கர்
கருதுநாவிதனேயங்கிகார்த்திகையளகுமேற்கும்
பிரமனுள்சகடுபண்டிபேசியசதிபேவையம்
உருள்விமானந்தேருற்றுலுரோணியேயுரோகிணிப்பேர். (சுஅ)

திங்களுண்மதிபேராளன்சேர்ந்தமான்றலையேமாழ்கு
பொங்குமார்கழியேமும்மீன்புகழ்நரிப்புறமேபாலை
இங்கிவையொன்பதென்பமிருகசீரிடத்தினாமம்
செங்கைமூதிரையாழீசன்றினமிவையாதிரைப்பேர். (சுகூ)

கருதியவதிதிநாளேகழையுனர்தங்கரும்பு
பொருவிலாப்புனிதம்பிண்டியாவணம்புனர்பூசப்பேர்
குருவினுள்கொடிறுவண்டுகுறித்தகாற்குளமேபூசம்
அரவினுள்கவ்வைபாம்பேயாயிலாயிலியநாற்பேர். (எ0)

கொடுறுகம்வேள்விவாய்க்கால்குறித்தவேட்டுவனேமாசி
வடுவறுமுதலிற்றோன்றிவருஞ்சனிமகநாளென்ப
இடையெழுஞ்சனியேதூர்க்கையெலிபகவதிநாளோடு
கடியநாவிதனேயெய்யுங்கணையிருமுப்பேர்பூரம். (எக)

மேடத்தின்பெயர்—மை, வருடை, ஆடு, கொறி, மறி. ரு.
இடபத்தின்பெயர்—குண்டை, சே, மூரி, புல்லம், கோ, விடை. சு.
மிதுனத்தின்பெயர்—தண்டு, யாழ், விழவு, இரட்டை, சவைமகள். ரு.
கர்க்கடகத்தின்பெயர்-நண்டு, ஞெண்டு, அலவன், சேக்கை, நள்ளி. ரு.

சிங்கத்தின்பெயர்—அரி, யாளி, மா, கொடும்புலி. ச.
கன்னியின்பெயராக—மடந்தையர்பேரெல்லாங்கொள்ளப்படும்.
துலாத்தின்பெயர்—துலை, நிறை, நிறுப்பான், சீர், கோல், தூக்கு, வாணிகன். எ. விருச்சிகத்தின்பெயர்—தெறுக்கால், தேள். உ.

தனுவின்பெயர்—கொடுமரம், துரோணம், சாபம், சிலை. ச.
மகரத்தின்பெயர்—மான், கலை, சுறு. ங.
கும்பத்தின்பெயர்—குடம், கரீரம், சாடி, குடங்கர். ச.
மீனத்தின்பெயர்—மீன், மயிலை, மற்சம், சலசரம். ச.

அச்சுவினியின்பெயர்—பரி, மருத்துவநாள், வாசி, ஐப்பசி, யாழ், ஏறு, இரலை, முதனாள், சென்னி. கூ.
பரணியின்பெயர்—கிழவன், சோறு, பகலவன், தராசு, தாழி, தருமனாள், அடுப்பு, பூதம், தாசி, முக்கூட்டு. ௰.

கார்த்திகையின்பெயர்—எரிநாள், ஆரல், இறால், அறுவாய், அளக்கர், நாவிதன், அங்கி, அளகு. அ.
உரோகிணியின்பெயர்—பிரமனாள், சகடு, பண்டி, சதி, வையம், உருள், விமானம், தேர், ஊற்றால், உரோணி. ௰.

மிருகசீரிடத்தின்பெயர்—திங்கணாள், மதி, பேராளன், மான்றலை, மாழ்கு, மார்கழி, மும்மீன், நரிப்புறம், பாலை. கூ.
திருவாதிரையின்பெயர்—செங்கை, மூதிரை, யாழ், ஈசன்றினம். ச.

புனர்பூசத்தின்பெயர்—அதிதிநாள், கழை, புனர்தம், கரும்பு, புனிதம், பிண்டி, ஆவணம். எ.
பூசத்தின்பெயர்—குருவினாள், கொடிறு, வண்டு, காற்குளம். ச.
ஆயிலியத்தின்பெயர்—அரவினாள், கௌவை, பாம்பு, ஆயில். ச.

மகத்தின்பெயர்—கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதலில்வருஞ்சனி. சு.
பூரத்தின்பெயர்—இடையெழுஞ்சனி, துர்க்கை, எலி, பகவதிநாள், நாவிதன், கணை. சு.

பங்குனிகடையில்வந்துபற்றியசனியினோடு
செங்கதிர்பிறந்தநாளுஞ்சிறந்தவுத்தரமென்றாகும்
தங்குகாமரமேயங்கிசார்ந்தநாள்கௌத்துவத்தோ
டங்கைமீன்களிறுநவ்வியைவிரலத்தமேழ்பேர். (எஉ)

அளக்குநெய்பயறுமீனேயறுவையேயாடைதூசு
துளக்கிலாநடுநாடச்சன்றுவட்டாநாள்சித்திரைப்பேர்
விளக்கொடுமரக்கால்வீழ்க்கைவெறுநுகங்காற்றினாளே
இளத்தியகாற்றுத்தீபங்கேடிலாச்சோதியேழ்பேர். (எங)

முற்றில்வைகாசிகாற்றுமுந்துநாண்முறத்தினோடு
வெற்றிசேர்சுளகுசேட்டைவிசாகநாளிருமுப்பேரே
புற்றாளிபெண்ணைதேளேபோர்த்தைமித்திரநாளாறும்
சொற்றனரனுடமென்றுசோர்விலாநூலோர்தாமே. (எச)

சேட்டையிந்திரனாள்வேதிசெந்தழலெரியிவ்வைந்தும்
கேட்டைவல்லாரையென்றுங்கிளத்துபவளத்தநூலோர்
தேட்கடைகுருகுகொக்குச்சிலையுடனன்றிலாணி
ஈட்டியவசுரநாளிவ்வேழ்பெயர்மூலமென்ப. (எரு)

உடைகுளமுற்குளந்நீருதித்தநாள்பூராடப்பேர்
கடையினிற்குளமேயாணிகருதுவிச்சுவநாளாடி
யிடையிலுத்தராடமென்பமேவியவோணமாயோன்
அடையுநாளுலக்கைமுக்கோல்சிரவணஞ்சோணையாமே. (எசா)

மருவியகாகப்புள்ளுவசுக்கணாள்பறவைபுள்ளு
விரவுமாவணியவிட்டம்விளம்பியநாமமைந்தாம்
பெருகியசெக்குச்சுண்டன்பேசியபோரேகுன்று
வருணனாள்சதயமைந்தும்வகுத்தபேர்தொகுத்ததாமே. (எஎ)

பொருவின்முற்கொழுங்கானாழிபுரட்டையேபூரட்டாதி
முரசுபிற்கொழுங்கான்மன்னனுத்தரட்டாதிமுப்பேர்
இரவிநாள்கலமேதோணியேற்றமாந்தொழுவேநாவாய்
பெருகியகடைநாள்ஞூலம்பெருநாளெட்டிரேவதிப்பேர். (எஅ)

வடமீனேசாலியென்பமற்றருந்ததியின்பேரே
உடுவேதாரகையேபம்மேயுற்கையேசுக்கைவிண்மீன்
கடிகைநாழிகையாங்கன்னலிரித்தையுமதுவேகாட்டுந்
துடிகலைவிகலைமுப்பேர்சொல்லியகாலநுட்பம். (எகூ)

உத்தரத்தின்பெயர்-பங்குனி, கடையெழுஞ்சனி, செங்கதிர்நாள். ௩.
அத்தத்தின்பெயர்—காமரம், அங்கிநாள், கௌத்துவம், கைம்மீன், களிறு, நவ்வி, ஐவிரல். எ.

சித்திரையின்பெயர்—நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், தச்சன், துவட்டாநாள். க.
சோதியின்பெயர்—விளக்கு, மரக்கால், வீழ்க்கை, வெறுநுகம், காற்றினுள், காற்று, தீபம். எ.

விசாகத்தின்பெயர்—முற்றில், வைகாசி, காற்றுநாள், முறம், சுளகு, சேட்டை. சு.
அனுடத்தின்பெயர்—புல், தாளி, பெண்ணை, தேள், போந்தை, மித்திரநாள். சு.

கேட்டையின்பெயர்—சேட்டை, இந்திரனுள், வேதி, தழல், எரி, வல்லாரை. சு.
மூலத்தின்பெயர்—தேட்கடை, குருகு, கொக்கு, சிலை, அன்றில், ஆனி, அசுரநாள். எ.

பூராடத்தின்பெயர்—உடைகுளம், முற்குளம், நீர்நாள். ௩.
உத்தராடத்தின்பெயர்—கடைக்குளம், ஆனி, விச்சுவநாள், ஆடி. ச.
திருவோணத்தின்பெயர்—மாயோனுள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை. ரு.

அவிட்டத்தின்பெயர்—காகப்புள், வசுக்களுள், பறவை, புள், ஆவணி. ரு.
சதயத்தின்பெயர்—செக்கு, சுண்டன், போர், குன்று, வருணனுள். ரு.

பூரட்டாதியின்பெயர்—முற்கொழுங்கால், நாழி, புரட்டை. ௩.
உத்தரட்டாதியின்பெயர்—முரசு, பிற்கொழுங்கால், மன்னன். ௩.
இரேவதியின்பெயர்—இரவிநாள், கலம், தோணி, தொழு, நாவாய், கடைநாள், சூலம், பெருநாள். அ

அருந்ததியின்பெயர்—வடமீன், சாலி. உ.
விண்மீனின்பெயர்—உடு, தாரகை, பம், உற்கை, சுக்கை. ரு.
நாழிகையின்பெயர்—கடிகை, கன்னல், இரித்தை. ௩.
காலநுட்பத்தின்பெயர்—துடி, கலை, விகலை. ௩.

வேலையேயமையஞ்செவ்வியேல்வையேபொழுதுபாணி
காலைகொன்பதமேபோழ்துகாலப்பேரீரைந்தாகும்
சாலநீட்டித்தலோடுசார்ந்தபாணித்தலும்
நீலவுண்கண்ணாய்மற்றுநெடித்தலுநெடும்போழ்தென்ப. (அ0)

ஒல்லையேயிறையேயுற்றசிறுவரையுடனிலேசம்
வல்லைமாத்திரைகள்காலவிரைவின்பேர்வகுக்கிலாறும்
நல்லநண்பகலேயுச்சிநடுப்பகன்மத்தியானம்
இல்லுடன்பவனமோரையிராசியின்பெயராமென்ப. (அக)

அல்லிபாவரியேகங்குலல்கல்யாமினியோநத்தம்
எல்லியோடியாமமாலையிரசனிநிசியிராவாம்
எல்லொடுதிவாப்பகற்பேரேல்வையேதிவசம்வைகல்
அல்கலேதினமேயெல்லையாணியம்பகலேநாளாம். (அஉ)

சருவரியந்தகாரங்கச்சளந்தமந்துவாந்தம்
இருளென்பதிமிரமோடுதுணங்கறலென்றுமேற்கும்
நெருநலுநென்னலுந்தானிகழ்ந்துபமுன்னைநாளைப்
பெருகியபின்றைபிற்றைபின்னையென்றியம்பலாமே. (அங)

புலரிவைகறையினுமம்விடியலும்போற்றுமப்பேர்
நிலவுசந்திரிகைவெய்யினிகழ்ந்தவாதபமேயென்றூழ்
இலகியமாலைசாயஞ்சந்தியாம்யாமஞ்சாமம்
அலைவறுபருவந்தானேயாணியமிருதுவாகும். (அச)

திதியொடுபக்கந்தானேயொருகலைதெரிக்குமென்ப
மதியொடுதிங்கள்சொல்லின்மாதமேபேதமில்லை
மதிதெரிகலையிராப்பேர்வருஞ்சினீவாலியாகும்
மதிமறைகலையிராவின்வரும்பெயர்குகுவென்றாமே. (அரு)

அந்தமாமுவாவேபவ்வம்பூரணையிருபேராகும்
இந்துவோடிரவிகூட்டமமாவாசையமையுமென்ப
நந்தைபத்திரையினோடுநாட்டியசயையிரித்தை
முந்துபூரணையாம்பக்கமுதற்றொட்டுமூன்றுவட்டம். (அசு)

பரவியகாரேகூதிர்முன்பினிற்பனிகளோடு
விரவியவிளையவேனில்விரைந்திடுமுதிர்ந்தவேனில்
மருவுமாவணியேயாதிமற்றிரண்டிரண்டுமாதம்
பருவமூவிரண்டுமாய்ந்துபார்த்திடின்வாய்த்தபேராம். (அஎ)

2281



காலத்தின்பெயர்—வேலை, அமையம், செவ்வி, எல்லை, பொழுது, பாணி, காலை, கொன், பதம், போழ்து. க0.

நெடும்போழ்தின்பெயர்—நீட்டித்தல், பாணித்தல், நெடித்தல். ௩.

காலவிரைவின்பெயர்—ஒல்லை, இறை, சிறுவரை, இலேசம், வல்லை, மாத்திரை. ௬.

மத்தியானத்தின்பெயர்—நண்பகல், உச்சி, நடுப்பகல். ௩.

இராசியின்பெயர்—இல், பவனம், ஓரை. ௩.

இராவின்பெயர்—அல், விபாவரி, கங்குல், அல்கல், யாமினி, நத்தம், எல்லி, யாமம், மாலை, இரசனி, நிசி. கக.

பகலின்பெயர்—எல், திவா. உ. நாளின்பெயர்—எல்வை, திவசம், வைகல், அல்கல், தினம், எல்லை, ஆனியம், பகல். அ.

இருளின்பெயர்—சருவரி, அந்தகாரம், கச்சளம், தமம், துவாந்தம், திமிரம், துணங்கறல். எ.

முன்னைநாளின்பெயர்—நெருநல், நென்னல். உ.

பின்னைநாளின்பெயர்—பின்றை, பிற்றை. உ.

வைகறையின்பெயர்—புலரி, விடியல். உ. நிலவின்பெயர்—சந்திரிகை. க. வெய்யிலின்பெயர்—ஆதபம், என்றூழ். உ.

மாலையின்பெயர்—சாயம், சந்தி. உ. சாமத்தின்பெயர்—யாமம். க.

பருவத்தின்பெயர்—ஆனியம், இருது. உ.

ஒருகலையின்பெயர்—திதி, பக்கம். உ.

மாதத்தின்பெயர்—மதி, திங்கள். உ.

மதிதெரிகலையிராவின்பெயர்—சினீவாலி. க.

மதிமறைகலையிராவின்பெயர்—குகு. க.

பூரணையின்பெயர்—உவா, பவ்வம். உ.

அமாவாசையின்பெயர்—இந்துவோடிரவிகூட்டம், அமை. உ.

முதற்பக்கந்தொடங்கி மூன்றுவட்டமாக வருகிற ஐந்துபக்கங்களின்பெயர்—நந்தை, பத்திரை, சயை, இரித்தை, பூரணை. * ௫.

ஆவணி முதலிரண்டிரண்டுமாதமாகியவறுவகைப்பருவத்தின் பெயர்—கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். ஆவணி புரட்டாதி கார், ஐப்பசி கார்த்திகை கூதிர், மார்கழி தை முன்பனி, மாசி பங்குனி பின்பனி, சித்திரை வைகாசி இளவேனில், ஆனி ஆடி முதுவேனில்.

---

*அவை. க, ௬, கக, நந்தை. உ, எ, கஉ, பத்திரை. | ௩, அ, க௩, சயை. ௪, ௯, க௪, இரித்தை | ௫, க0, க௫, பூரணை.

இகழ்வில்வற்சரமேயாண்டேசமைமுப்பேர்வருடமென்ப
பகரிலாயனமுமப்பேரயனமேயாண்டிற்பாதி
உகமுடிவுடன்மடங்கலூழியாமாயுள்வாழ்நாள்
மகிழ்வுறுகற்பந்தானேமலரயன்வாழ்நாளென்ப. (அஅ)

சொரிதுளிதிவலைதூவல்சீகரந்தூறன்மாரி
வருடமோடுறையேயாலிவானமுமழைப்பேர்பத்தாம்
பெருமழையென்பதானேபேசிலாசாரமாகும்
விரவியபனித்தல்சோனைவிடாமழையிருபேராமே. (அகூ)

வாலியதிவலைதூவல்வண்சிதர்சீகரத்தோ
டாலியேதளியேமிக்கவுறைதுளியாகவேழ்பேர்
ஆலியேகரகமற்றைக்கனோபலமாலங்கட்டி
மேலினுமந்தானும்பர்மேக்குமாங்கிழக்குக்கீழே. (கூ0)

பயனுறுமங்குல்சீதம்பயோதரந்தாராதாரம்
குயின்மழையெழிலிமஞ்சுகொண்டல்சீமூதங்கொண்மூ
வியன்முகில்விண்விசும்புவினையுமால்சலதரஞ்செல்
புயல்கனங்கந்தரங்கார்போற்றுமைமாரிமேகம். (கூக)

வெடியொலியசனிசெல்லுவிண்ணேறுமடங்கலாறே
இடியின்பேருருமுமற்றையனலேறுமிதன்பேரென்ப
நெடுவித்துத்துத்தடித்துநீள்சம்பைசபலையோடு
கடியசஞ்சலையேமின்னல்கனருசிமின்னினேழ்பேர். (கூஉ)

பனியிமந்துகினமும்பேர்பரிவேடமூர்கோள்வட்டம்
தனியிடுவானவில்லேயிந்திரதனுவென்றாகும்
இனையவைதேவரீட்டச்செய்யுணூற்றொன்றிசைத்தான்
புனைகுணபத்திரன்றாள்போற்றுமண்டலவன்றானே. (கூங)

தேவப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் — க0க.

வருடத்தின்பெயர்—வற்சரம், ஆண்டு, சமை, ஆயனம். ச.
ஆண்டிற்பாதியின்பெயர்—அயனம். க.
ஊழிகாலத்தின்பெயர்—உகமுடிவு, மடங்கல். உ.
வாழ்நாளின்பெயர்—ஆயுள். க.
அயன்வாழ்நாளின்பெயர்—கற்பம். க.

மழையின்பெயர்—துளி, திவலை, தூவல், சீகரம், தூறல், மாரி, வருடம், உறை, ஆலி, வானம். க0.
பெருமழையின்பெயர்—ஆசாரம். க.
விடாமழையின்பெயர்—பனித்தல், சோனை. உ.

துளியின்பெயர்—திவலை, தூவல், சிதர், சீகரம், ஆலி, தளி, உறை. எ.
ஆலங்கட்டியின்பெயர்—ஆலி, கரகம், கனோபலம். ங.
மேலின்பெயர்—உம்பர், மேக்கு. உ.
கீழின்பெயர்—கிழக்கு. க.

மேகத்தின்பெயர்—மங்குல், சீதம், பயோதரம், தாராதாரம், குயின், மழை, எழிலி, மஞ்சு, கொண்டல், சீமூதம், கொண்மூ, முகில், விண், விசும்பு, மால், சலதரம், செல், புயல், கனம், கந்தரம், கார், மை, மாரி. உங.

இடியின்பெயர்—வெடி, ஒலி, அசனி, செல், விண்ணேறு, மடங்கல், உரும், அனலேறு. அ.
மின்னின்பெயர்—வித்துத்து, தடித்து, சம்பை, சபலை, சஞ்சலை, மின்னல், கனருசி. எ.

பனியின்பெயர்—இமம், துகினம். உ.
பரிவேடத்தின்பெயர்—ஊர்கோள், வட்டம். உ.
வானவில்லின்பெயர்—இந்திரதனு. க.

இரண்டாவது

# மக்கட்பெயர்த்தொகுதி.

## காப்பு.

தேனவிழ்த்தளிகளெல்லாஞ்செவ்வழிபாடாநின்ற
பூநகைத்திலங்குகஞ்சப்பொகுட்டின்மீதேயொதுங்கு
நான்முகக்கடவுள்பாதநாவினைவிற்றியேத்தி
மானவர்க்கியன்றபேரைவகுத்திடுந்தொகுதிசொல்வாம். (௧)

துறவர்சார்பில்லோர்நீத்தோர்துய்த்தவர்முனிவர்மெய்யர்
அறவர்மாதவர்கடிந்தோரந்தணரடிகளையர்
உறுவர்தாபதர்விளங்குமிருடிகளுயர்ந்தோர்யோகர்
அறிஞர்பண்ணவர்சிறந்தவருந்தவர்முனிவராமே. (௨)

தாவில்சௌமியரேயோகர்திகம்பரர்சமணநீத்தோர்
மாவிரதியரேபாசுபதர்காளாமுகர்சைவத்தோர்
மேவுமால்சமயத்தோர்பேர்மிக்கபாகவதராகும்
சீவகர்பௌத்தரோடுதேரர்சாக்கியரேபுத்தர். (௩)

நீரினிற்பூவில்வானினினைத்துழியொதுங்குகின்ற
சாரணரெண்மராவார்சமணரிலிருத்தி * பெற்றோர்
பாரியசடைமுடித்தபடிவர்தாபதரேயென்ப
கூரியகும்பயோனிகுறுமுனியகத்தியன்பேர். (௪)

ஐயர்வேதியரேநூலோரறுதொழிலாளராய்ந்தோர்
மையில்பூசுரரேசெந்தீவளர்ப்பவர்தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரேயாதிவருணர்முப்புரிநூன்மார்பர்
மெய்யர்விப்பிரரேவேதபாரகர்வேள்வியாளர். (௫)

இருபிறப்பாளர்பார்ப்பாரேற்றமேற்குலருயர்ந்தோர்
வருமறையவர்தம்பேராம்வன்னியேபிரமசாரி
அருமறைக்கொடியோன்வின்னூலாளன்பாரத்துவாசன்
தருநெறிவழாத்துரோணாசாரியன்பேர்மூன்றுமே. (௬)

* இருத்தி - சித்தி.

# பெயர்ப்பிரிவு.

இ - ள். அளிகள் எல்லாம் தேன் அவிழ்த்துச் செவ்வழி பாடா நின்ற - வண்டுகளெல்லாம் தேனின்பொருட்டு அலர்த்திச் செவ்வழிப்பண்ணைப் பாடுகின்ற—பூ நகைத்து இலங்கு கஞ்சப் பொகுட்டின் மீது ஒதுங்கு-மற்ற மலர்களெல்லாவற்றையும் இகழ்ந்து விளங்காநின்ற தாமரையினது கொட்டையின்மேல் நடந்த—நான்முகக் கடவுள் பீரதம் நாவினால் நவிற்றி ஏத்தி-நான்கு முகங்களையுடைய அருகக்கடவுளது திருவடிகளை நாக்கினாற்சொல்லித் துதிசெய்து,—மானவர்க்கு இயன்ற பேரை வகுத்திடும் தொகுதி சொல்வாம் - மக்கட்பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவாம். எ - று.

முனிவர்பெயர்—துறவர், சார்பில்லோர், நீத்தோர், தவர், முனைவர், மெய்யர், அறவர், மாதவர், கடிந்தோர், அந்தணர், அடிகள், ஐயர், உறுவர், தாபதர், இருடிகள், உயர்ந்தோர், யோகர், அறிஞர், பண்ணவர், அருந்தவர். ௨0.

சமணநீத்தோர்பெயர்—சௌமியர், யோகர், திகம்பரர். ௩.
சைவர்பெயர்—மாவிரதியர், பாசுபதர், காளாமுகர். ௩.
மால்சமயத்தோர்பெயர்—பாகவதர். ௧.
புத்தர்பெயர்—சீவகர், பௌத்தர், தேரர், சாக்கியர். ௪.

சமணரிற்சித்திபெற்றோராவார்—நீரிலும் பூதலத்திலும் வானிலும் நினைத்தவிடங்களிற் சஞ்சரிக்கின்ற சாரணரென்மர்.
சடைமுடித்தபடிவர்பெயர்—தாபதர். ௧.
அகத்தியன்பெயர்—கும்பயோனி, குறுமுனி. ௨.

மறையவர்பெயர்—ஐயர், வேதியர், நூலோர், அறுதொழிலாளர், ஆய்ந்தோர், பூசுரர், தீவளர்ப்பவர், தொழுகுலத்தோர், அந்தணர், ஆதிவருணர், முப்புரிநூன்மார்பர், மெய்யர், விப்பிரர், வேதபாரகர், வேள்வியாளர். ௧௫.

இருபிறப்பாளர், பார்ப்பார், மேற்குலர், உயர்ந்தோர். ௪. (ஆ ௧௧.)
பிரமசாரியின்பெயர்—வன்னி. ௧.
துரோணாசாரியன்பெயர்—மறைக்கொடியோன், வின்னூலாளன், பாரத்துவாசன். ௩.

சான்றவர்மிக்கோர்நல்லோர்தகுதியோர்மேலோராய்ந்தோர்
ஆன்றவருலகமேதாவிபரறிஞர்கள்பேராசான்
ஊன்றுதேசிகனேயோசனுபாத்தியாயன்பணிக்கன்
என்றவாசாரியன்பேரேற்றமாணாக்கன்கற்போன். (௭)

கலைஞர்மேதையரேமூத்தோர்கற்றவரவைவிற்பன்னர்
தலைமையாங்கவிஞர்சங்கஞ்சாரதிசூரிசாடு
புலவர்பண்டிதர்பேர்போற்றிலறிஞரும்புதருமாகும்
கலைஞரேகவிவல்லோராங்கணக்காயரோத்துரைப்போர். (௮)

குரவனையன்சுவாமிகோமானேயடிகளத்தன்
பரவியவுரவோனீசன்பதியிறைமூத்தோன்பேராம்
குரிசிலோடண்ணலேந்தல்கூறியதோன்றல்செம்மல்
பெருமையிற்சிறந்தோனென்றுபேசினர்மாசினூலோர். (௯)

நாதனேகொழுநன்காந்தனாட்டியபதிகோனீசன்
ஆதிபனதிபன்செம்மலரன்பிராணதிமன்னன்
ஏதிலெப்பொருட்குந்தானேயிறைபெயரிவைபன்மூன்றும்
ஓதுசீருலகமென்பதுயர்ந்தவர்க்கியம்புநாமம். (௧௦)

சவைசமவாயஞ்சங்கஞ்சமுதாயஞ்சமூகங்கோட்டி
அவைகுழாங்குழுவேகூட்டமடர்திரள்கணங்களீரா
றிவைதிரண்டோர்பேர்பண்ணையெய்தியவோரைபொய்தல்
அவைபெண்கள்கூட்டமாயங்கெடவரலதுவுமாமே. (௧௧)

புரவலன்பெருமானேந்தல்பூபாலன்வேந்தன்மன்னன்
நரபதிபொருநன்சக்கிரிநகைமுடிநிருபனோடு
குரிசில்பார்த்திவனேகோவேகொற்றவனிறைவனண்ணல்
அரசன்பேரிவையீரெட்டாந்தலைவன்காவலனுமாமே. (௧௨)

தருதெய்வவிரதன்கங்கைதனயன்சந்தனுமுன்பெற்றோன்
கருதியபிரமசாரிகாங்கேயன்வீட்டுமன்பேர்
பரவுபாரதரேமற்றைப்பௌரவரென்னுநாமங்
குருகுலவேந்தர்க்காகுங்கௌரவரென்றுங்கூறும். (௧௩)

தருமிகுருவளத்தாரான்யுதிட்டிரன்பொறையன்சாற்றும்
முரசுயர்கொடியோனீதிமொழியுநல்லறத்தின்சேயே
குருகுலப்பாண்டுமைந்தன்குந்திதன்புதல்வன்மெய்ம்மை
விரதமாக்கொள்வோன்மேன்மைத்தருமன்பேரெட்டுமாமே. (௧௪)

அறிஞர்பெயர்—சான்றவர், மிக்கோர், நல்லோர், தகுதியோர், மேலோர், ஆய்ந்தோர், ஆன்றவர், உலகம், மேதாவியர். ௧.
ஆசாரியன்பெயர்—ஆசான், தேசிகன், ஓசன், உபாத்தியாயன், பணிக்கன். ௫. மாணுக்கன்பெயர்—கற்போன். ௧.

பண்டிதர்பெயர்—கலைஞர், மேதையர், மூத்தோர், கற்றவர், அவை, விற்பன்னர், கவிஞர், சங்கம், சாரதி, சூரி, சாடு, புலவர், அறிஞர், புதர். ௧௪.
கலைஞர்பெயர்—கவிவல்லோர். ௧.
ஒத்துரைப்போர்பெயர்—துணைக்காயர். ௧.

மூத்தோன்பெயர்—குரவன், ஐயன், சுவாமி, கோமான், அடிகள், அத்தன், உரவோன், ஈசன், பதி, இறை. ௧0.
பெருமையிற்சிறந்தோன்பெயர்—குரிசில், அண்ணல், ஏந்தல், தோன்றல், செம்மல். ௫.

எப்பொருட்குமிறைவின்பெயர்—நாதன், கொழுநன், காந்தன், பதி, கோன், ஈசன், ஆதிபன், அதிபன், செம்மல், அரன், பிரான், ஆதி, மன்னன். ௧௩.
உயர்ந்தவர்பெயர்—உலகம். ௧.

திரண்டோர்பெயர்—சவை, சமவாயம், சங்கம், சமுதாயம், சமூகம், கோட்டி, அவை, குழாம், குழு, கூட்டம், திரள், கணம். ௧௨.
பெண்கள்கூட்டத்தின்பெயர்—பண்ணை, ஓரை, பொய்தல், ஆயம், கெடவரல். ௫.

அரசன்பெயர்—புரவலன், பெருமான், ஏந்தல், பூபாலன், வேந்தன், மன்னன், நரபதி, பொருநன், சக்கிரி, நிருபன், குரிசில், பார்த்திவன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், தலைவன், காவலன். ௧௮.

வீட்டுமன்பெயர்—தெய்வவிரதன், கங்கைதனயன், சந்தனுமுன் பெற்றோன், பிரமசாரி, காங்கேயன். ௫.
குருகுலவேந்தர்பெயர்—பாரதர், பௌரவர், கௌரவர். ௩.

தருமன்பெயர்—குவலைத்தாரான், யுதிட்டிரன், பொறையன், முரசக்கொடியோன், அறத்தின்சேய், பாண்டுமைந்தன், குந்திபுதல்வன், மெய்ம்மைவிரதமாக்கொள்வோன். ௮.

மருவுகாந்தாரிமைந்தனந்தியாவர்த்தத்தாமன்
அரவுயர்த்தவன்வணங்காமுடியினனரசர்மன்னன்
உரைகெழுசுயோதனன்கண்ணென்றுமில்லாதோனென
திருதராட்டிரன்றன்செல்வன்சீர்த்துரியோதனன்பேர். (௧௫)

கடுங்கதிர்மதலைவீசுங்கவசகுண்டலனேகச்சை
நெடுங்கொடியினன்கானீனனீளங்கர்கோமான்கன்னன்
மடங்கலின்கொடியோன்வெய்யமாருதிவாயுமைந்தன்
இடிம்பைதன்கொழுநன்வீமன்கதாயுதனென்றுமேற்கும். (௧௬)

குற்றமில்கிருட்டிணன்பற்குனன்றனஞ்சயன்காண்டீவன்
வெற்றிசேர்சவ்வியசாசிவீபற்சுவிசயன்பார்த்தன்
சொற்றகேசவற்குத்தோழன்சுவேதவாகனன்கிரீடி
அற்றமிலருச்சுனற்கேயமைந்தபேர்பன்னொன்றுமே. (௧௭)

வில்லவன்கொங்கன்வஞ்சிவேந்தனேபோந்தின்றாரோன்
கொல்லிவெற்பன்குடக்கோக்குட்டுவன்குடகன்கோதை
மல்லல்சேருதியன்வானவரம்பனேமலையமானே
செல்லறீர்பொருநையாற்றோன்சேரலன்சேரன்பேரே. (௧௮)

நேரியன்சென்னிபொன்னித்துறைவனேநேரிவெற்பன்
ஆரின்மாலையனேகிள்ளியபயனேகோழிவேந்தன்
சீரியவளவன்மிக்கசெம்பியன்புலியுயர்த்தோன்
சூரியன்புனனாடன்கோச்சோழன்மாலென்றுஞ்சொல்லும். (௧௯)

செழியனேகூடற்கோமான்றென்னவன்வேம்பின்றாரோன்
வழுதியேகுமரிச்சேர்ப்பன்வைகையந்துறைவன்மாறன்
விழைவுறுபொதியவெற்பன்மீனவன்கைதவன்சொற்
பழையபஞ்சவனேவெய்யகௌரியன்பாண்டியன்பேர். (௨௦)

குறும்பரேயரட்டர்வேளிர்குறுநிலமன்னராகுஞ்
செறிந்திடும்புரோசரும்பேர்தேர்ச்சியிற்றுணைவரெண்ணர்
உறைந்திடுநூலோர்சூழ்வோருழையர்மந்திரரேநீதி
அறிந்திடுமுதுவர்முன்னோரமாத்தியரமைச்சர்நாமம். (௨௧)

பெருகியபொருநன்சேனாபதிபடைத்தலைவன்பேரே
வருநிமித்திகன்பேர்சாக்கைவள்ளுவனென்றுமாகுங்
கருதுகாவிதியரென்பகணக்கர்தம்வழியினுள்ளார்
பரவியபரிவாரப்பேர்பரியாளமென்னலாமே. (௨௨)

துரியோதனன்பெயர்—காந்தாரிமைந்தன், நந்தியாவர்த்தத்தாமன், அரவுயர்த்தவன், வணங்காமுடியினன், அரசர்மன்னன், சுயோதனன், திருதராட்டிரன்றன்செல்வன். ௭.

கன்னன்பெயர்—கதிர்மதலை, கவசகுண்டலன், கச்சைக்கொடியினன், கானீனன், அங்கர்கோமான். ௫.

வீமன்பெயர்—மடங்கற்கொடியோன், மாருதி, வாயுமைந்தன், இடிம்பைகொழுநன், கதாயுதன். ௫.

அருச்சுனன்பெயர்—கிருட்டிணன், பற்குனன், தனஞ்சயன், காண்டீவன், சவ்வியசாசி, வீபற்சு, விசயன், பார்த்தன், கேசவற்குத்தோழன், சுவேதவாகனன், கிரீடி. ௧௧.

சேரன்பெயர்—வில்லவன், கொங்கன், வஞ்சிவேந்தன், போந்தின்றாரோன், கொல்லிவெற்பன், குடக்கோ, குட்டுவன், குடகன், கோதை, உதியன், வானவரம்பன், மலயமான், பொருநையாற்றோன், சேரலன். ௧௪.

சோழன்பெயர்—நேரியன், சென்னி, பொன்னித்துறைவன், நேரிவெற்பன், ஆரின்மாலையன், கிள்ளி, அபயன், கோழிவேந்தன், வளவன், செம்பியன், புலியுயர்த்தோன், சூரியன், புனனாடன், மால். ௧௪.

பாண்டியன்பெயர்—செழியன், கூடற்கோமான், தென்னவன், வேம்பின்றாரோன், வழுதி, குமரிச்சேர்ப்பன், வைகையந்துறைவன், மாறன், பொதியவெற்பன், மீனவன், கைதவன், பஞ்சவன், கௌரியன். ௧௩.

குறுநிலமன்னர்பெயர்—குறும்பர், அரட்டர், வேளிர், புரோசர். ௪.

அமைச்சர்பெயர்—தேர்ச்சித்துணைவர், எண்ணர், நூலோர், சூழ்வோர், உழையர், மந்திரர், முதுவர், முன்னோர், அமாத்தியர். ௯.

படைத்தலைவன்பெயர்—பொருநன், சேனாபதி. ௨.

நிமித்திகன் * பெயர்—சாக்கை, வள்ளுவன். ௨.

கணக்கர்வழியினுள்ளார்பெயர்—காவிதியர். ௧.

பரிவாரத்தின்பெயர்—பரியாளம். ௧.

* நிமித்திகன் - வருங்காரியஞ்சொல்வோன்.

மிக்கசெம்பியனேகாரிவிராடனேநிருதிதானும்
தக்கதுந்துமாரிதானுஞ்சகரனுநளனுந்தாமுன்
அக்குரன்சந்திமானோடந்திமான்சிசுபாலன்னே
வக்கிரன்கன்னன்சந்தனிடைவள்ளல்வகுத்தவாறே. (௨௩)

பாரியாயெழிலிநள்ளிபசுந்தொடைமலயன்பேகன்
ஓரியேகடையிலுற்றோருறுபொருடண்டாதீந்தும்
வாரியிலிரந்தோர்க்கிட்டும்வளர்புகழ்துதிக்கவீந்தும்
பேரியல்வையமெண்ணப்பெற்றனர்முப்பாலாகும். (௨௪)

இளங்கோக்கண்மன்னர்பின்னரிப்பரெட்டியரேநாய்கர்
வளம்பெறுவணிகர்நல்லான்காவலருழவர்மற்றும்
விளங்கியபரதர்மேயவினைஞர்செட்டியர்பன்னொன்றும்
உளங்கெழுவைசியர்பேராமுறுசிரேட்டிகளுமாகும். (௨௫)

மண்மகள்புதல்வர்வாய்ந்தவளமையர்களமரென்றும்
உண்மைசால்சதுர்த்தர்மாருவுழவர்மேழியர்வேளாளர்
திண்மைகொளேரின்வாழ்நர்காராளர்வினைஞர்செம்மை
நண்ணுபின்னவர்பன்னொன்றுநவின்றசூத்திரர்தம்பேரே. (௨௬)

வெம்பியபிடகராயுள்வேதியர்மருத்துவர்க்காம்
அம்புவிமற்றுமாமாத்திரரென்றுமவர்க்கேகூறும்
கும்பகாரன்குலாலன்குறித்தவேட்கோவன்சக்கிரி
நம்புமட்பகைவனைந்துநாட்டியகுயவனுமம். (௨௭)

சிற்பரோவியரேமோகர்சித்திரகாரர்நாமஞ்
சிற்பியர்துவட்டாவோவர்தபதியர்சிறப்பின்மிக்க
அற்புதர்யவனர்கொல்லரக்கசாலையர்புனைந்தோர்
கற்பில்கம்மியரேகண்ணுள்வினைஞர்கண்ணாளர்நாமம். (௨௮)

கருமரேமனுவர்கொல்லர்காட்டியநாமமாகும்
மரவினையாளன்மற்றைமயனொடுதபதிதச்சன்
புரியும்பொன்செய்யுங்கொல்லர்பொன்வினைமாக்கடட்டார்
உரைகெழுசொன்னகாரரக்கசாலையருமோதும். (௨௯)

தருமுறைதெரிந்தசிற்பாசாரியர்மண்ணீட்டாளர்
பொருளினையுருக்குந்தட்டார்பொன்செய்யும்புலவரென்ப
பெருகியபணித்தட்டார்தம்பேர்கலந்தருநர்தாமே
வருமுறைமுத்தங்கோப்பார்மணிகுயிற்றுநரென்றுமே. (௩௦)

வரைவின்றி யாவர்க்குங்கொடுக்கு முதல்வள்ளலெழுவர்பெயர்—செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன். ௭.

இரப்போர்க்குக்கொடுக்குமிடைவள்ளலெழுவர்பெயர்--அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன். ௭.

புகழ்வோர்க்குக்கொடுக்குங் கடைவள்ளலெழுவர்பெயர்—பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலயன், பேகன், ஓரி. ௭.

வைசியர்பெயர்—இளங்கோக்கள், மன்னர்பின்னர், இப்பர், எட்டியர், நாய்கர், வணிகர், ஆன்காவலர், உழவர், பரதர், விணைஞர், செட்டியர், சிரேட்டிகள். ௧௨.

சூத்திரர்பெயர்—மண்மகள்புதல்வர், வளமையர், களமர், சதுர்த்தர், உழவர், மேழியர், வேளாளர், ஏரின்வாழ்நர், காராளர், விணைஞர், பின்னவர். ௧௧.

மருத்துவர் * பெயர்—பிடகர், ஆயுள்வேதியர், மாமாத்திரர். ௩.

குயவன்பெயர்—கும்பகாரன், குலாலன், வேட்கோவன், சக்கிரி, மட்பகைவன். ௫.

சித்திரகாரர்பெயர்—சிற்பர், ஓவியர், மோகர். ௩.

கண்ணுளர்பெயர்—சிற்பியர், துவட்டா, ஓவர், தபதியர், அற்புதர், யவனர், கொல்லர், அக்கசாலையர், புணைந்தோர், கம்மியர், கண்ணுள்விணைஞர். ௧௧.

கொல்லர்பெயர்—கருமர், மனுவர். ௨.

தச்சன்பெயர்—மரவிணையாளன், மயன், தபதி. ௩.

தட்டார்பெயர்—பொன்செய்யுங்கொல்லர், பொன்விணைமாக்கள், சொன்னகாரர், அக்கசாலையர். ௪.

சிற்பாசாரியர்பெயர்—மண்ணீட்டாளர் ௧.

பொருளிணையுருக்குந்தட்டார்பெயர்—பொன்செய்யும்புலவர். ௧.

பணித்தட்டார்பெயர்—கலந்தருநர். ௧.

முத்தங்கோப்பார்பெயர்—மணிகுயிற்றுநர். ௧.

---

* மருத்துவர். - வைத்தியர்.

கலத்தைச்செய்கஞ்சகாரர்கன்னுவர்கன்னராகும்
மிலைச்சரேயநாரியர்க்காமிலேச்சரும்விதித்தபேரே
துலைப்படும்யவனரென்பசோனகருவச்சரும்பேர்
மலைப்பிலாவுமணருப்புவாணிகர்காணுங்காலை. (௩௧)

இருந்தகாழியரேதூசரீரங்கோலியரேவண்ணார்
வரும்பெருமஞ்சிகன்சீமங்கலிமாசுதீர்த்துத்
திருந்துமேனாதிமூன்றுஞ்சிறந்தநாவிதன்பேராகும்
பொருந்தரேவேதகாரர்போற்றுங்காருகர்நெய்வார்பேர். (௩௨)

பொல்லரேதுன்னரென்பபுகன்றதோற்றுன்னர்செம்மார்
உல்லியர்கூவனூலோரொளிவளைபோழ்நர்தாமே
மெல்லியசங்கறுப்போர்குனரூன்விற்போரென்ப
சொல்லியபறம்பர்தாமேதோல்வினைமாக்கணாமம். (௩௩)

கொலைஞரேகளைஞர்வங்கர்குணுங்கர்மாதங்கரோடு
புலைஞரேயிழிஞரேழ்பேர்பொருந்துசண்டாளர்நாமம்
உலவுசென்னியரேபண்டரோவர்வந்தித்துநிற்போர்
பலர்புகழ்மதங்கர்சூதர்பண்ணவர்பாணராமே. (௩௪)

சக்கிரிநந்திசெக்கான்றன்பெயராகுமென்ப
தொக்ககள்விற்போர்நாமஞ்சௌண்டிகர்துவசரோடு
தக்கதோர்பிழியர்மற்றும்படுவருஞ்சாற்றுமன்றே
மிக்கமீகாமனும்மீகான்மாலுமிநீகானும். (௩௫)

மாவலர்வதுவரோடுவாதுவர்பண்ணுவார்பேர்
சோர்விலாப்பாகரோடாதோரணர்யானைப்பாகர்
காவலர்மெய்காப்பாளர்கஞ்சுகியென்றுங்காட்டும்
மேவுகாரோடரென்பவுறைகாரர்விதித்தபேரே. (௩௬)

தூயதேர்ப்பாகன்சூதன்வலவன்சாரதியுஞ்சொல்லும்
வேயர்சாரணரேயொற்றர்விதித்தபேர்மடையர்நாமம்
ஏயவாலுவரேமிக்ககூவியரென்றுநூலை
ஆயும்பானசிகரென்றும்பாசகரென்றுமாமே. (௩௭)

நாடகர்கண்ணுள்ளாளர்நடர்வயிரியர்நிருத்தர்
கோடியர்பொருநர்கூத்தரவிநயரென்றுங்கூறும்
நீடியவாயிலோரேநெடுந்தமிழ்க்கூத்தரென்பர்
ஆடும்வேழம்பரென்பகழாயருக்கடைத்தநாமம். (௩௮)

கன்னார்பெயர்—கஞ்சகாரர், கன்னுவர். ௨.
அநாரியர்பெயர்—மிலேச்சர், மிலேச்சர். ௨.
சோனகர்பெயர்—யவனர், உவச்சர். ௨.
உப்புவாணிகர்பெயர்—உமணர். ௧.

வண்ணார்பெயர்—காழியர், தூசர், ஈரங்கோலியர். ௩.
நாவிதன்பெயர்—பெருமஞ்சிகன், சிமங்கலி, ஏனாதி. ௩.
வேதகாரர்பெயர் *—பொருந்தர். ௧.
நெய்வாரர்பெயர்—காருகர். ௧.

துன்னர்†பெயர்-பொல்லர். ௧. தோற்றுன்னர்பெயர்-செம்மார். ௧.
கூவனூலோர் ‡ பெயர்-உல்லியர். ௧. சங்கறுப்போர்பெயர்—வளை
போழ்நர். ௧. ஊன்விற்போர்பெயர்—சூனர். ௧.
தோல்வினைமாக்கள்பெயர்—பறம்பர். ௧.

சண்டாளர்பெயர்—கொலைஞர், களைஞர், வங்கர், குணுங்கர், மாத
ங்கர், புலைஞர், இழிஞர். ௭.
பாணர்பெயர்—சென்னியர், பண்டர், ஓவர், வந்தித்துநிற்போர்,
மதங்கர், சூதர், பண்ணவர். ௭.

செக்கான்பெயர்—சக்கிரி, நந்தி. ௨.
கள்விற்போர்பெயர்—சௌண்டிகர், துவசர், பிழியர், படுவர். ௪.
மீகாமன்பெயர்—மீகான், மாலுமி, நீகான். ௩.

பண்ணுவார் ¶ பெயர்—மாவலர், வதுவர், வாதுவர். ௩.
யானைப்பாகர்பெயர்—பாகர், ஆதோரணர். ௨.
மெய்காப்பாளர்பெயர்—காவலர், கஞ்சுகி. ௨.
உறைகாரர்பெயர்—காரோடர். ௧.

தேர்ப்பாகன்பெயர்—சூதன், வலவன், சாரதி. ௩.
ஒற்றர்பெயர்—வேயர், சாரணர். ௨.
மடையர்பெயர்-வாலுவர்[வல்லவர்,] கூவியர், பானசிகர், பாசகர். ௪

கூத்தர்பெயர்—நாடகர், கண்ணுளாளர், நடர், வயிரியர், நிருத்தர்,
கோடியர், பொருநர், அவிநயர். ௮.
தமிழ்க்கூத்தர்பெயர்—வாயிலோர். ௧.
கழாயர்பெயர்§—வேழம்பர். ௧.

---

* வேதகாரர்—கூடைமுதலியவைபின்னுவோர்.
† துன்னர்-தையற்காரர். ‡ கூவனூல்-கிழ்நீர்க்குழியறிசாத்திரம்.
¶ பண்ணுவார்—குதிரைப்பாகர். § கழாயர்—கழைக்கூத்தர்.

குயிலுவர்நரம்பினுயகருவியைக்கொளுத்துமாக்கள்
இயலுந்தோற்கருவியாளரியவராம்வெறியாட்டாளன்
சயமுறுதேவராளன்சாலினிதேவராட்டி
அயலவர்நொதுமலாளர்வம்பலரென்றுமாமே. (௩௯)

புதியவர்விருந்தோரென்பவதிதிவம்பலரும்போற்றும்
பதிகனேவழிச்செல்வோனும்வியவனேயேவுவான்பேர்
முதுவர்முதுணர்ந்தோர்நாமங்கிழவரேயுரியோர்பேராம்
அதிகமாங்குறிக்கொள்வோர்பாராயணரென்பதாமே. (௪0)

வித்தகர்வினையுரைப்போர்விதியுளிவழியுரைப்போர்
உத்தமமானபண்புற்றுரைப்பவர்தூதராகும்
தொத்தொடுகிணைகர்தாசர்தொழும்பொடுதொறுவிருத்தி
அத்தகுதொண்டுசேடராளிவையடிமையாமே. (௪௧)

சிலதனேநண்பன்பாங்கன்சேடனேதுணைவன்றோழன்
எலுவனுமாமிவன்முன்னிலைப்பெயரேடாவென்ப
சிலதியேசகியேபாங்கிசேடியேயிகுளைதோழி
நலமுறுமுன்னிலைப்பேர்நாடின்மற்றேடியெல்லா. (௪௨)

அந்தகன்சிதடனென்பகுருடனுங்கோணல்கூன்பேர்
சிந்துவாமனமேகுஞ்சங்குறள்வதிர்செவிடென்றாகும்
முந்தியமுடமேபங்குகுணியூமைமூகைமுங்கை
தந்தபெண்டகனேபேடிநபுஞ்சகனலியேசண்டன். (௪௩)

காதகன்சாருகன்றன்கடுங்கொலையாளிநாமம்
வேதனைசெய்வோன்பேரேயருந்துதன்விளம்பலாகும்
பீதனேசகிதனோடுபீருவுமச்சமுள்ளோன்
ஓதியசவனன்வேகியுற்றவஞ்சகனிசாதன். (௪௪)

படிறர்பல்லவர்பரத்தர்பகரிடங்கழியரோடு
விடருங்காமுகருந்தூர்த்தர்மிக்கநாசரிகரென்ப
கடிநகர்ப்பதிவாழ்கின்றசதுரர்காமுகரென்றும்பேர்
அடைவுளகிராமமுற்றோன்கிராமியனாகுமன்றே. (௪௫)

நரப்புக்கருவியாளர்பெயர்—குயிலுவர். க.
தோற்கருவியாளர்பெயர்—இயவர். க.
வெறியாட்டாளன்பெயர்—தேவராளன். க.
தேவராட்டியின்பெயர்—சாலினி. க.
அயலவர்பெயர்—நொதுமலாளர், வம்பலர். உ.

புதியவர்பெயர்—விருந்தோர், அதிதி, வம்பலர். ங.
வழிச்செல்வோன்பெயர்—பதிகன். க.
ஏவுவான்பெயர்—வியவன். க. முதுணர்ந்தோர்பெயர்—முதுவர். க.
உரியோர்பெயர்-கிழவர். க. குறிக்கொள்வோர்பெயர்-பாராயணர். க

தூதர்பெயர்—வித்தகர், வினையுரைப்போர், வழியுரைப்போர், பண்புரைப்பவர். ச.
அடிமையின்பெயர்—தொத்து, கிணகர், தாசர், தொழும்பு, தொறு, விருத்தி, தொண்டு, சேடர், ஆள். கூ.

தோழன்பெயர்—சிலதன், நண்பன், பாங்கன், சேடன், துணைவன், எலுவன். சு.
தோழன்முன்னிலைப்பெயர்—ஏடா. க.
தோழிபெயர்—சிலதி, சகி, பாங்கி, சேடி, இகுளை. ரு.
தோழிமுன்னிலைப்பெயர்—ஏடி, எல்லா. உ.

குருடன்பெயர்-அந்தகன், சிதடன். உ. கூனின்பெயர்-கோணல். க.
குறளின்பெயர்—சிந்து, வாமனம், குஞ்சம். ங.
செவிட்டின்பெயர்—வதிர். க. முடத்தின்பெயர்--பங்கு, குனி. உ.
ஊமையின்பெயர்—மூகை, மூங்கை. உ.
அலியின்பெயர்—பெண்டகன், பேடி, நபுஞ்சகன், சண்டன். ச.

கொலையாளியின்பெயர்—காதகன், சாருகன். உ.
வேதனைசெய்வோன்பெயர்—அருந்துதன். க.
அச்சமுள்ளோன்பெயர்—பீதன், சகிதன், பீரு. ங.
வேகியின்பெயர்—சவனன். க. வஞ்சகன்பெயர்—நிசாதன். க.

தூர்த்தர்பெயர்—படிறர், பல்லவர், பரத்தர், இடங்கழியர், விடர், காமுகர். சு.
நாகரிகர்பெயர்—சதுரர், காமுகர். உ.
கிராமமுற்றோன்பெயர்—கிராமியன். க.

வலவைவல்லுநனேவல்லோன்மாட்டார்பேர்வல்லாரென்ப
குலமுளோன்குலீனனுகுங்கரியவன்குறித்தகள்வன்
உலவுநோயுற்றெழிந்தோனுல்லாகன்பதாதிகாலாள்
அலைவில்சந்தத்தனென்பதாபத்தமானோன்பேரே. (சசு)

மந்தனேகூர்மையில்லோனக்கனிர்வாணிநாமம்
வெந்திறலியவுளென்பமிகுபுகழாளன்பேரே
உந்தியவருளோனேகாருண்ணியனென்பரெட்டர்
வந்திகள்கவிகள்கற்றோர்வண்டரேகடிகைமாக்கள். (சஎ)

புரவலனீகையாளன்போற்றும்வேளாளன்றியாகி
உரைகெழுவேள்வியாளனுபகாரிகொடையுளோனும்
வரைவறக்கொடுத்தளிப்போன்வள்ளியோனென்றுகூறும்
இரவலன்பரிசிலாளன்யாசகன்றீனனேற்போன். (சஅ)

கரவடர்சோரர்தேனர்பட்டிகர்புரையோர்கள்வர்
திருடராந்தரித்திரன்பேரகிஞ்சனன்றீனன்பேதை
மருவுநல்கூர்ந்தோனில்லோன்வறியனுதுலனேயேழை
விரவியவுறுகணுளனிலம்பாட்டோன்மிடியனுமே. (சக)

வயவனேதிறலோன்மற்றைவண்டனேமிண்டன்மள்ளன்
வியவனேவிறலோன்மீளிவீரனேதிண்ணியன்பேர்
நயமில்கூளியரேருளர்நாட்டும்வாளுழவர்மள்ளர்
சயமிகுமறவர்தானைத்தலைவராம்படருமாமே. (ருo)

அரிகளேசெறுநர்சேராரமரருள்ளாரேநள்ளார்
மருவலர்தெவ்வர்மாணர்மாற்றலர்மன்னுரொன்னர்
தரியலரொட்டார்வட்கார்சார்பிலார்பற்றூர்செற்றூர்
பரரொடுகேளாரொல்லார்பகைவர்பேரெழுமூன்றமே. (ருக)

ஒல்லுநர்தொடர்ந்தார்சேர்ந்தாரொட்டுநர்பெட்டார்வேட்டார்
புல்லுநர்பசைந்தார்மித்திரர்புரிந்தாரார்வலர்விழைந்தார்
நல்லவர்காதலித்தார்நள்ளுநர்நயந்தார்கூட்டம்
மெல்லவொன்றுநர்மூவாறுமேவினர்நாமமாமே. (ருஉ)

உற்றவரிகுளைநட்டோருறவொக்கல்கிளையேசார்ந்தோர்
பற்றினர்சிறந்தோர்நட்புப்பந்தமேபரிசனங்கேள்
சுற்றமினண்புகூளிகுடும்பமேகடும்புநள்ளி
சுற்றமூவாறுபேருஞ்சூழ்ந்தபாசனமுஞ்சொல்லும். (ருங)

வல்லோன்பெயர்-வலவை,வல்லுநன்.உ.மாட்டார்பெயர்-வல்லார்
குலமுளோன்பெயர்—குலீனன். க. கரியவன்பெயர்—கள்வன்.க.
நோயுற்றொழிந்தோன்பெயர்—உல்லாகன். க.
காலாளின்பெயர்-பதாதி.க.ஆயத்தமானோன்பெயர்-சந்நத்தன். க.

கூர்மையில்லோன்பெயர்—மந்தன். க.
நிர்வாணியின்பெயர்-நக்கன்.க. மிகுபுகழாளன்பெயர்-இயவுள். க.
அருளோன்பெயர்-காருண்ணியன். க. கடிகைமாக்கள்*பெயர்—
எட்டர், வந்திகள், கவிகள், கற்றோர், வண்டர். ரு.

கொடையுளோன்பெயர்—புரவலன், ஈகையாளன், வேளாளன், தியாகி, வேள்வியாளன், உபகாரி. சு.
வரைவறக்கொடுத்தளிப்போன்பெயர்—வள்ளியோன். க.
ஏற்போன்பெயர்—இரவலன், பரிசிலாளன், யாசகன், தீனன். ச.

திருடர்பெயர்—கரவடர், சோரர், தேனர், பட்டிகர், புறையோர், கள்வர். சு. தரித்திரன்பெயர்—அகிஞ்சனன், தீனன், பேதை, நல்கூர்ந்தோன், இல்லோன், வறியன், ஆதுலன், ஏழை, உறுகணாளன், இலம்பாட்டோன், மிடியன். கக.

திண்ணியன்பெயர்—வயவன், திறலோன், வண்டன், மிண்டன், மள்ளன், வியவன், விறலோன், மீளி, வீரன். கூ.
தானைத்தலைவர்பெயர்—கூளியர், ஏற்றோர், வாளுழவர், மள்ளர், மறவர், படர். சு.

பகைவர்பெயர்—அரிகள், செறுநர், சேரார், அமரார், உள்ளார், நள்ளார், மருவலர், தெவ்வர், மாணார், மாற்றலர், மன்னார், ஒன்னார், தரியலர், ஒட்டார், வட்கார், சார்பிலார், பற்றார், செற்றார், பரர், கேளார், ஒல்லார். உக.

மேவினர்பெயர்—ஒல்லுநர், தொடர்ந்தார், சேர்ந்தார், ஒட்டுநர், பெட்டார், வேட்டார், புல்லுநர், பஷசந்தார், மித்திரர், புரிந்தார், ஆர்வலர், விழைந்தார், நல்லவர், காதலித்தார், நள்ளுநர், நயந்தார், கூட்டம், ஒன்றுநர். கஅ.

சுற்றத்தின்பெயர்—உற்றவர், இருளை, நட்டோர், உறவு, ஒக்கல், கிளை, சார்ந்தோர், பற்றினர், சிறந்தோர், நட்பு, பந்தம், பரிசனம், கேள், நண்பு, கூளி, குடும்பம், கடும்பு, நள்ளி, பாசனம். கச.

* கடிகைமாக்கள் - மங்கலபாடகர்.

பொறியிலார்கயவர்நீசர்புள்ளுவர்புல்லர்தீயோர்
சிறியசிந்தையர்கனிட்டர்தீக்குணர்தீம்பர்தேரார்
முறையிலார்முசுண்டர்மூர்க்கர்முகடர்பல்லவரேகையர்
மறைவிலாக்கலர்மூவாறுமன்னுபூரியருங்கீழோர். (௫௪)

முழுமகன்சிதடன்பேதைமூடனேமண்ணையஞ்ஞன்
இழுதையேமடனேயாதனேழையேயறிவிலான்பேர்
தொழுவர்கம்மியரேமற்றைத்தொழில்செய்வோர்நாமமாகும்
வழுவிலாவாயிலாளர்வாயில்காப்போர்தம்பேரே. (௫௫)

அரிவையங்கனைமடந்தையாடவளாட்டிமாயோள்
சுரிகுழன்மகடூஉக்காந்தைசுந்தரிவனிதைமாது
தெரிவைமானினியேநல்லாள்சிறுமியேதையனாரி
பிரியைகாரிகையணங்குபிணாப்பெண்டுபேதைபெண்பேர். (௫௬)

ஆடவன்மைந்தன்காளையாடூஉவேமகன்புமானே
நீடியகுமரனேழுங்கிருமித்தபுருடனுமம்
நாடியநம்பியோடுநங்கையென்றிரண்டாண்பெண்ணைத்
தேடியகவிகளெல்லாஞ்சிறப்பிக்குநாமமாமே. (௫௭)

பேதையேபெதும்பைமங்கைபெருகியமடந்தையோடு
தீதிலாவரிவைமற்றைத்தெரிவைபேரிளம்பெண்ணென்ப
ஏதமில்பருவமாண்டேழெய்துபன்னொன்றுபன்மூன்
றேதுபத்தொன்பானையந்துடன்முப்பத்தொன்றெண்ணந்தே. ()

முன்னியகைம்மைபெற்றோன்மொழிந்தகோளகனேயாகும்
பின்னைவேற்றோற்குப்பெற்றபிள்ளைகுண்டகனேயென்ப
பன்னிவாழ்க்கைப்படாமுன்படர்ந்தொருகளவினாலே
கன்னியேபெற்றபிள்ளைகானீனனென்றேயோதும். (௫௯)

உயர்ந்தநாற்குலத்திலாண்பெண்ணுயர்பிழிவிரண்டுங்கூடி
இயங்கியபிள்ளைப்பேரேயநுலோமனென்றுகூறும்
நயந்தவப்பெண்ணுமாணுநண்ணியவுயர்வுதாழ்வில்
வியந்திடும்பிள்ளைப்பேரேவிறற்பிரதிலோமனுமே. (௬0)

பெருத்தவவ்வநுலோமன்னேபிரதிலோமனென்றபேரில்
உரைத்தவாண்பெண்ணில்வந்தேயுற்றவனந்தராளன்
நிரைத்தவர்மாறிக்கூடிப்பிறந்தவனீண்டபேரே
விரித்ததுவினவிக்கேட்கில்விராத்தியனென்னுநூலே. (௬௧)

கீழோர்பெயர்—பொறியிலார், கயவர், நீசர், புள்ளுவர், புல்லர், தீயோர், சிறியசிந்தையர், கனிட்டர், தீக்குணர், தீம்பர், தேரார், முறையிலார், முசுண்டர், மூர்க்கர், முசுடர், பல்லவர், கையர், கலர், பூரியர். கக.

அறிவிலான்பெயர்—முழுமகன், சிதடன், பேதை,மூடன்,மண்ணை, அஞ்ஞன், இழுதை, மடன், ஆதன், ஏழை. கo.
தொழில்செய்வோர்பெயர்—தொழுவர், கம்மியர். உ.
வாயில்காப்போர்பெயர்—வாயிலாளர். க.

பெண்பெயர்—அரிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், ஆட்டி, மாயோள், சுரிகுழல், மகடூஉ, காந்தை, சுந்தரி, வனிதை, மாது, தெரிவை, மானினி, நல்லாள், சிறுமி, தையல், நாரி, பிரியை, காரிகை, அணங்கு, பிணா, பெண்டு, பேதை. உச.

புருடன்பெயர்—ஆடவன், மைந்தன், காளை, ஆடூஉ, மகன், புமான், குமரன். எ.
ஆணைச்சிறப்பிக்கும்பெயர்—நம்பி. க.
பெண்ணைச்சிறப்பிக்கும்பெயர்—நங்கை. க.

பெண்பாற்குரியபருவமாவன—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். முறையே இவற்றிணுண்டாவன, எ, கக, கங., கசு, உரு, ஙக, சo.

கைம்மைபெற்றோன்பெயர்—கோளகன். க.
வேற்றோற்குப்பெற்றபிள்ளையின்பெயர்—குண்டகன். க.
கன்னிபெற்றபிள்ளையின்பெயர்—கானீனன். க.

நாற்குலத்துள் உயர்குலத்தானுமிழிகுலப்பெண்ணுங்கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர்—அநுலோமன். க.
உயர்குலப்பெண்ணு மிழிகுலத்தானுங் கூடிப்பெற்றபிள்ளையின்பெயர்—பிரதிலோமன். க.

அநுலோமத்தானும்பிரதிலோமப்பெண்ணுங் கூடிப்பெற்ற பிள்ளையின்பெயர்—அந்தராளன். க.
அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தானுங் கூடிப்பெற்றபிள்ளையின்பெயர்—விராத்தியன். க.

முந்தியகுரத்தியத்தைமுதல்விகோமாட்டியாசாள்
தந்திடுமிறைவியையைசாமியேதலைவிநாமம்
நந்தியபிண்டிவாமனன்னெறிவழாதுநோற்பாள்
நந்தியேயவ்வையம்மைகன்னியேகௌந்தியென்ப. (௬௨)

கைம்மையேகைனிபூண்டகலன்கழிமடந்தையேங்கி
விம்மியவிதவைநான்கேயமங்கலைவிளங்குநாமம்
மைம்மையேவந்தியென்பமலடிக்குவகுத்தபேராம்
செம்மையாங்கோலஞ்செய்வாடிகழ்வண்ணமகளேயென்ப. (௬௩)

பரத்தையேகணிகைசூளைபயனிலாள்வரைவின்மாது
பொருட்பெண்டுபெறுவகொள்வாள்விலைமகள்போற்றும்வேசை
விருத்தையேமூத்தாளென்பமின்னிடைக்குமரிகன்னி
நிருத்தஞ்செய்மாதுகூத்திநாடகக்கணிகைநீள்பேர். (௬௪)

குட்டினிதொழுத்தைகூளிகுறளியேபடுவிகுண்டம்
துட்டையேபசதியாகுஞ்சூழ்ந்திடும்யுவதியேயீ
ரெட்டாண்டிற்பெண்மதங்கியெய்தியவிறலியென்ப
திட்டமாம்பாடுவிச்சிதம்பதியிரட்டையாண்பெண். (௬௫)

குறவர்கானவரேமள்ளர்குன்றவர்புனவரோடும்
இறவுளர்குறிஞ்சிதன்னிலின்புறுமாக்கள்பேரே
குறியறிகுறத்திமற்றைக்கொடிச்சிபெண்ணிறைவன்றானே
திறன்மிகுமலையன்வெற்பன்சிலம்பன்கானகநாடன்பேர். (௬௬)

கோளூறுமறவரோடுமெயினரேகுறித்தபாலை
யாளர்புள்ளுவரிறுக்கரனைத்துமாமவரோடாடும்
வாள்விழியெயிற்றிவன்கட்பிணாவொடுமறத்திபெண்பேர்
மீளியேகாளையென்பவிடலையுந்தலைவனாமம். (௬௭)

குறவர்மாகுலவர்வெய்யகுன்றவர்கிராதர்மற்றை
மறவர்கானவரேதீயவனசரர்சவரர்சொல்லும்
முறையழிகொலைஞர்பாவமூர்த்திகண்முருடர்சற்றும்
பொறையிலாரெயினர்வேடர்புளிஞரீரேழ்பொதுப்பேர். (௬௮)

முல்லையர்பொதுவரண்டர்முந்துகோவிந்தரேயான்
வல்லவர்குடவர்பாலர்மதித்தகோவலர்கோபாலர்
சொல்லியவமுதராயர்தொறுவரேயிடையரென்ப
முல்லையின்மாக்கள்பேர்தாமுந்நான்குமொன்றுமாமே. (௬௯)

தலைவியின்பெயர்—குரத்தி, அத்தை, முதல்வி, கோமாட்டி, ஆசாள், இறைவி, ஐயை, சாமி. அ.
நோற்பாள்பெயர்—கந்தி, ஔவை, அம்மை, கன்னி, கௌந்தி. ரு.

அமங்கலையின்பெயர்—கைம்மை, கைனி, கலன்கழிமடந்தை, விதவை. ச.
மலடியின்பெயர்—மைம்மை, வந்தி. உ.
கோலஞ்செய்வாள்பெயர்—வண்ணமகள். க.

வேசையின்பெயர்—பரத்தை, கணிகை, சூளை, பயனிலாள், வரைவின்மாது, பொருட்பெண்டு, பெறுவகொள்வாள், விலைமகள். அ.
மூத்தாள்பெயர்—விருத்தை. க. குமரியின்பெயர்—கன்னி. க.
நாடகக்கணிகைபெயர்—நிருத்தமாது, கூத்தி. உ.

அசதியின்பெயர்—குட்டினி, தொழுத்தை, கூனி, குறளி, படுவி, குண்டம், துட்டை. எ.
பதினறுண்டிற்பெண்பெயர்—யுவதி. க.
பாடுவிச்சிபெயர்—மதங்கி, விறலி. உ.
தம்பதியின்பெயர்—இரட்டை, ஆண்பெண். உ.

குறிஞ்சிநிலமாக்கள்பெயர்—குறவர், கானவர், மள்ளர், குன்றவர், புனவர், இறவுளர். சு.
குறிஞ்சிநிலப்பெண்பெயர்—குறத்தி, கொடிச்சி. உ.
குறிஞ்சிநிலத்திறைவன்பெயர்—மலையன், வெற்பன், சிலம்பன், கானகநாடன். ச.

பாலைநிலமாக்கள்பெயர்—மறவர், எயினர், புள்ளுவர், இறுக்கர். ச.
பாலைநிலப்பெண்பெயர்—எயிற்றி, வன்கட்பிணா, மறத்தி. ந.
பாலைநிலத்தலைவன்பெயர்—மீளி, காளை, விடலை. ந.

புளிஞர்பொதுப்பெயர்—குறவர், மாகுலவர், குன்றவர், கிராதர், மறவர், கானவர், வனசரர், சவரர், கொலைஞர், பாவமூர்த்திகள், முருடர், பொறையிலார், எயினர், வேடர். கச.

முல்லைநிலமாக்கள்பெயர்—முல்லையர், பொதுவர், அண்டர், கோவிந்தர், ஆன்வல்லவர், குடவர், பாலர், கோவலர், கோபாலர், அமுதர், ஆயர், தொறுவர், இடையர். கந.

தொறுவியேபொதுவியாய்ச்சிசூழ்ந்திடுங்குடத்திமற்றை
நிறைபுணரிடைச்சிமுல்லைநிலத்திற்பெண்ணாமமைந்தாம்
குறைவறுகானநாடன்குறும்பொறைநாடனோடு
முறைசெயுமண்ணறோன்றன்முல்லையிற்றலைவனாமம். (எ0)

களமரேதொழுவர்மள்ளர்கம்பளருழவரோடு
விளைஞரேகடைஞரேழ்பேர்விளைவுறுமருதமாக்கள்
அளவறுகடைச்சிமற்றையாற்றுக்காலாட்டிபெண்பேர்
உளமகிழ்மகிழ்நனூரன்கிழவனுந்தலைவனாமே. (எக)

பரதவர்நுளையரோடுபஃறியர்திமிலர்சாலர்
கருதியகடலர்கோலக்கழியரேநெய்தன்மாக்கள்
விரவியபரத்திமேவுநுளைச்சியேயளத்திநீண்டு
பெருகியகடற்பிணாவேநெய்தலிற்பெண்ணினாமம். (எஉ)

கொண்கனேதுறைவனோடுகுறித்தமெல்லம்புலம்பன்
தண்கடற்சேர்ப்பனெய்தற்றலைவனைச்சாற்றுநாமம்
பண்படுமளவர்தாமேபகர்ந்திடுமந்நிலத்தில்
உண்படுமுப்பமைப்போருமணரும்விதித்தபேரே. (எந)

அணியினிற்பண்பினுற்றவுவமையின்மகடூஉவாடூஉத்
தணிவின்முன்னிலைப்பேர்வேறுசாற்றியதோற்றமாக
உணருமைந்திணைப்பாற்பட்டகருப்பொருளுரைத்தாமிப்பாற்
கணிதமின்முறைப்பேர்காட்டிக்காயத்தின்பேருஞ்சொல்வாம். ()

தாதைதன்றந்தையேமூதாதையேபாட்டனாமம்
பேதமொன்றில்லாமற்றும்பிதாமகனென்றுமாகும்
தாதையேயப்பனையன்றந்தையேயம்மானத்தன்
ஏதமில்பிதாவென்றேழுமீன்றவனாமமாமே. (எரு)

அவ்வையம்மனைபயந்தாளம்மையேயாயேயன்னை
எவ்வமிலாயிமோய்தாயீன்றவணாமமொன்பான்
செவ்விதின்வளர்த்ததாதிசெவிலிகோடாய்கைத்தாயாம்
தவ்வைமுன்பிறந்தாள்சேட்டைதங்கையேபின்னைதானே. (எசு)

ஞாதியர்தாயத்தாரேநாட்டுந்தங்குடியிற்சுற்றம்
மாதுலனம்மான்மாமன்சகலனோர்குடியிற்கொண்டோன்
மூதுணர்சேட்டன்றம்முன்முன்னவனண்ணன்மூத்தோன்
பேதமிலிளவல்பின்னேயநுசனேகனிட்டன்பின்னோன். (எஎ)

முல்லைநிலப்பெண்பெயர்—தொறுவி, பொதுவி, ஆய்ச்சி, குடத்தி, இடைச்சி. ௫.
முல்லைநிலத்தலைவன்பெயர்—கானநாடன், குறும்பொறைநாடன், அண்ணல், தோன்றல். ௪.

மருதநிலமாக்கள்பெயர்—களமர், தொழுவர், மள்ளர், கம்பளர், உழவர், விளைஞர், கடைஞர். ௭.
மருதநிலப்பெண்பெயர்—கடைச்சி, ஆற்றுக்காலாட்டி. ௨.
மருதநிலத்தலைவன்பெயர்—மகிழ்நன், ஊரன், கிழவன். ௩.

நெய்தனிலமாக்கள்பெயர்—பரதவர், நுளையர், பஃறியர், திமிலர், சாலர், கடலர், கழியர். ௭.
நெய்தனிலப்பெண்பெயர்-பரத்தி, நுளைச்சி, அளத்தி, கடற்பிணா. ௪.

நெய்தனிலத்தலைவன்பெயர்—கொண்கன், துறைவன், மெல்லம்புலம்பன், கடற்சேர்ப்பன். ௪.
உப்பமைப்போர்பெயர்—அளவர், உமணர். ௨.

அணியும் பண்பும் உவமையும், அடுத்து வந்த ஆடூஉ மகடூஉப் பெயர்களும், முன்னிலைப்பெயர்களும் ஐந்திணைக்கருப்பொருட்பெயர்களுஞ்சொன்னாம், இனி முறைப்பெயர்களும் காயத்தின்பெயர்களுஞ்சொல்வாம்.

பாட்டன்பெயர்—தாதைதன்றாதை, மூதாதை, பிதாமகன். ௩.
ஈன்றவன்பெயர்—தாதை, அப்பன், ஐயன், தந்தை, அம்மான், அத்தன், பிதா. ௭.

ஈன்றவள்பெயர்—அவ்வை, அம்மனை, பயந்தாள், அம்மை, யாய், அன்னை, ஆயி, மோய், தாய். ௯.
வளர்த்ததாதியின்பெயர்—செவிலி, கோடாய், கைத்தாய். ௩.
முன்பிறந்தாள்பெயர்—தௌவை, சேட்டை. ௨.
தங்கையின்பெயர்—பின்னை. ௧.

தங்குடிச்சுற்றத்தின்பெயர்—ஞாதியர், தாயத்தார். ௨.
மாமன்பெயர்—மாதுலன், அம்மான். ௨.
ஓர்குடியிற்கொண்டோன்பெயர்—சகலன். ௧.
மூத்தோன்பெயர்—சேட்டன், தம்முன், முன்னவன், அண்ணன். ௪.
பின்னோன்பெயர்—இளவல், பின், அநுசன், கனிட்டன். ௪.

கணவனேகொழுநன்வேட்டோன்கண்டன்வல்லவனேபத்தாத்
துணைவனேதலைவன்கொண்கன்சூழ்ந்திருந்தவனேகாந்தன்
மணமகனுரியோனன்பன்மணவாளன்பதியேகேள்வன்
அணையுங்காதலன்பேர்பன்னேழன்றிநாயகனுமாமே. (௭௮)

இல்லவளுரிமைபன்னிகுடும்பினியில்லேயில்லாள்
வல்லவைகளமேதாரமனையாட்டிமனைவிருந்தம்
சொல்லியபாரிவாழ்க்கைத்துணைகளத்திரமேகாந்தை
நல்லகாதலிவிரும்புநாயகிதேவிநாமம். (௭௯)

சந்ததிமதலைசூனுத்தனயன்காதலனேமெய்யன்
நந்தனன்சிறுவன்றோன்றல்குட்டனேநாட்டுஞ்செம்மல்
முந்தியமருமான்பிள்ளைமுளைசுதன்புதல்வன்புத்திரன்
மைந்தன்கால்பொருள்சேயெச்சம்வழிபிறங்கடைமகன்பேர். (௮0)

சிறுவிபுத்திரியினோடுசிறந்திருந்தனையையை
மறுவில்பந்தனைமதிப்பாமகள்சுதைபுதல்வியேழ்பேர்
இறையாகுமெச்சந்தானிவ்விருபாற்குமேற்குமென்ப
குறுமக்கண்மகார்சிறாரைக்கூறுபவிவர்தம்பன்மை. (௮௧)

தானையேபதாதிவெய்யதந்திரந்தளமேதண்டம்
வானியேகனம்யூகம்வாகினியனீகம்பாடி
சேனையேகவனங்கூடிச்செறிபலம்பரிகலந்தான்
ஊனமில்படைமூவைந்தாமுறுபதாகினியுமப்பேர். (௮௨)

அணியுண்டையொட்டேயூகமாயவைபடைவகுப்பாம்
அணிநெற்றிகையேதூசியடுபடையுறுப்பின்பேராம்
அணிபின்னிற்கூழையாந்தார்கொடிப்படையாகுமென்ப
பணியக்கிழறுதலோடேயறைபோதல்படையறற்பேர். (௮௩)

மக்களேநரரேமாக்கண்மானவர்மாந்தர்மண்ணோர்
தக்கவாண்டையரேமைந்தர்சாற்றியமனுடரின்பம்
தொக்கமானுடரீரைந்துஞ்சொல்லியமனிதர்பேராம்
மக்கடம்பரப்பிற்குப்பேர்மன்பதைபைஞ்ஞீலென்ப. (௮௪)

உடலுறுப்பங்கம்யாக்கையுயிர்நிலைதேகங்காயம்
சடலமேமூர்த்தமெய்யேதாவரந்தனுவாதாரம்
கடமொடுபுதைபுணர்ப்புக்காத்திரம்பூட்சியாகம்
புடைகொள்பூதிகஞ்சரீரம்புற்கலமுடம்பின்பேரே. (௮௫)

காதலன்பெயர்—கணவன், கொழுநன், வேட்டோன், கண்டன், வல்லவன், பத்தா, துணைவன், தலைவன், கொண்கன், தவன், காந்தன், மணமகன், உரியோன், அன்பன், மணவாளன், பதி, கேள்வன், நாயகன். கஅ.

தேவிபெயர்—இல்லவள், உரிமை, பன்னி, குடும்பினி, இல், இல்லாள், வல்லவை, களம், தாரம், மனையாட்டி, மனை, விருந்தம், பாரி, வாழ்க்கைத்துணை, களத்திரம், காந்தை, காதலி, நாயகி. கஅ.

மகன்பெயர்—சந்ததி, மதலை, சூனு, தனயன், காதலன், மெய்யன், நந்தனன், சிறுவன், தோன்றல், குட்டன், செம்மல், மருமான், பிள்ளை, மூலை, சுதன், புதல்வன், புத்திரன், மைந்தன், கால், பொருள், சேய், எச்சம், வழி, பிறங்கடை. உ௬.

புதல்விபெயர்—சிறுவி, புத்திரி, தனயை, ஐயை, பந்தனை, மகள், சுதை. எ.
மகன் மகள் என்னுமிருபாற்கும் பொதுப்பெயர்—எச்சம். க.
பிள்ளைப்பன்மையின்பெயர்—குறுமக்கள், மகார், சிறார். ௩.

படையின்பெயர்—தானை, பதாதி, தந்திரம், தளம், தண்டம், வாணி, ககனம், யூகம், வாகினி, அனீகம், பாடி, சேனை, கவனம், பலம், பரிகலம், பதாகினி. க௬.

படைவகுப்பின்பெயர்—அணி, உண்டை, ஒட்டு, யூகம். ௪.
படையுறுப்பின்பெயர்—அணி, நெற்றி, கை, தூசி. ௪.
பின்னணியின்பெயர்—கூழை. க.
கொடிப்படையின்பெயர்—தார். க.
படையறற்பெயர்—கிழறுதல், அறைபோதல். உ.

மனிதர்பெயர்—மக்கள், நரர், மாக்கள், மானவர், மாந்தர், மண்ணோர், ஆண்டையர், மைந்தர், மனுடர், மானுடர். க0.
மக்கட்பரப்பிற்குப்பெயர்—மன்பதை, ஞெபஞ்ஞீல். உ.

உடம்பின்பெயர்—உடல், உறுப்பு, அங்கம், யாக்கை, உயிர்நிலை, தேகம், காயம், சடலம், மூர்த்தம், மெய், தாவரம், தனு, ஆதாரம், கடம், புதை, புணர்ப்பு, காத்திரம், பூட்சி, ஆகம், பூதிகம், சரீரம், புற்கலம். உஉ.

வடிவமோடுருவமேனிசட்டகம்வடிவின்பேராம்
கடியுநீள்பிரேதம்வேறுகாட்டியசவம்பிணப்பேர்
அடையுமற்றப்பேர்தானேகளேவரமழனமென்றும்
உடலினிற்குறைகவந்தமட்டையூபமுமுரைக்கும். (௮௬)

சரணமேபதமேமற்றைத்தாளொடங்கிரியேபாதம்
கருதியசலனமற்றைக்கழலுடனடியுங்காலாம்
பரடென்பகரட்டினாமம்பற்றியகணைக்கால்சங்கம்
தருமுழந்தாண்முழந்துசானுவுமதன்பேர்தானே. (௮௭)

நெடியவூருக்குறங்குநீள்வாமங்கவான்றொடைப்பேர்
கடிதடநிதம்பமென்பகவின்றிகழல்குலின்பேர்
நடுநுசுப்பொடுமருங்குநாட்டுமத்திமமேயுக்கம்
இடையின்பேர்மருங்கின்பக்கமொக்கலையென்பதாமே. (௮௮)

உதரமோடகடுகுக்கியுடன்பண்டிவயிற்றின்பேராம்
திதலையேபொறியேதுத்திதேமலாஞ்சுணங்குமாமே
இதலையுந்திநாபியிலஞ்சியேபோகில்கொப்பூழ்
புதியவாண்குறியேகோசம்பூப்பகம்பெண்ணின்சின்னம். (௮௯)

அகலமேமருமநெஞ்சேயாகமேயுரமேமார்பாம்
நகிலமேகொம்மைகொங்கைநறுங்குயந்தனங்குருக்கண்
பகர்பயோதரஞ்சுவர்க்கம்பறம்பிவைமுலையின்பல்பேர்
திகழ்முலைக்கண்ணினாமஞ்சிலீமுகஞ்சூசுகங்கள். (௯௦)

கரமத்தம்பாணிதோளேகைத்தலநாற்பேராங்கூர்ப்
பரமுழங்கைகிலுத்தம்பணித்திடுமணிக்கட்டென்ப
உரவியவகங்கையங்கைகுடங்கையேயுள்ளங்கைப்பேர்
விரல்களங்குலியென்றாகுமிகுமுகிர்நகமதாமே. (௯௧)

விறன்மிகுபுயமுமொய்ம்புமேவியவாகுவுந்தோள்
கறையில்கந்தரங்கிரீவங்களங்கண்டங்கழுத்தினாமம்
புறம்வெரிநபரம்வென்னேபோற்றியமுதுகுநாற்பேர்
சிறுபுறங்கயிலெருத்தஞ்சுவல்பிடர்நிகலந்தோண்மேல். (௯௨)

வதனமானனமேதுண்டம்வத்திரமுகமென்றாகும்
இதழுதடதரமேபாலிகைமுத்தமென்றும்பேர்மே
லுதடதேயோட்டமாங்கீழுதட்டின்பேரதரமென்றும்
விதமுறுமெயிறுதந்தமேவியதசனம்பல்லே. (௯௩)

வடிவின்பெயர்—வடிவம், உருவம், மேனி, சட்டகம். ௪.
பிணத்தின்பெயர்—பிரேதம், சவம், களேவரம், அழனம். ௪.
உடற்குறையின்பெயர்—கவந்தம், மட்டை, யூபம். ௩.

காலின்பெயர்—சரணம், பதம், தாள், அங்கிரி, பாதம், சலனம், கழல், அடி. ௮.
கரட்டின்பெயர்—பரடு. ௧. கணைக்காலின்பெயர்—சங்கம். ௧.
முழந்தாளின்பெயர்—முழந்து, சானு. ௨.

தொடையின்பெயர்—ஊரு, குறங்கு, வாமம், கவான். ௪.
அல்குலின்பெயர்—கடிதடம், நிதம்பம். ௨.
இடையின்பெயர்—நடு, நுசுப்பு, மருங்கு, மத்திமம், உக்கம். ௫.
மருங்கின்பக்கத்தின்பெயர்—ஒக்கலை. ௧.

வயிற்றின்பெயர்—உதரம், மோடு, அகடு, குக்கி, பண்டி. ௫.
தேமலின்பெயர்—திதலை, பொறி, துத்தி, சுணங்கு. ௪.
கொப்பூழின்பெயர்—இதலை, உந்தி, நாபி, இலஞ்சி, போகில். ௫.
ஆண்குறியின்பெயர்-கோசம். ௧. பெண்குறியின்பெயர்-பகம். ௧.

மார்பின்பெயர்—அகலம், மருமம், நெஞ்சு, ஆகம், உரம். ௫.
முலையின்பெயர்—நகிலம், கொம்மை, கொங்கை, குயம், தனம், குருக்கண், பயோதரம், சுவர்க்கம், பறம்பு. ௯.
முலைக்கண்ணின்பெயர்—சிலீமுகம், சூசுகம். ௨.

கைத்தலத்தின்பெயர்—கரம், அத்தம், பாணி, தோள். ௪.
முழங்கையின்பெயர்-கூர்ப்பரம்.௧.மணிக்கட்டின்பெயர்-கிலுத்தம்
உள்ளங்கையின்பெயர்—அகங்கை, அங்கை, குடங்கை. ௩.
விரலின்பெயர்—அங்குலி. ௧. நகத்தின்பெயர்—உகிர். ௧.

தோளின்பெயர்—புயம், மொய்ம்பு, வாகு. ௩.
கழுத்தின்பெயர்—கந்தரம், கிரீவம், களம், கண்டம். ௪.
முதுகின்பெயர்—புறம், வெரிந், அபரம், ஓவன். ௪.
பிடரின்பெயர்—சிறுபுறம், கயில், எருத்தம், சுவல். ௪.
தோண்மேலின்பெயர்—நிகலம். ௧.

முகத்தின்பெயர்—வதனம், ஆனனம், துண்டம், வத்திரம். ௪.
உதட்டின்பெயர்—இதழ், அதரம், பாலிகை, முத்தம். ௪.
மேலுதட்டின்பெயர்—ஓட்டம். ௧. கீழுதட்டின்பெயர்-அதரம். ௧.
பல்லின்பெயர்—எயிறு, தந்தம், தசனம். ௩.

பன்னியமுறுவன்மூரல்பல்லுமாநகையுமாகும்
முன்னியதாடிகட்டஞ்சுவுகமோவாயின்பேராம்
மன்னுநாச்சிகுவைதாரைமற்றைத்தாலுவுநாக்காகும்
கன்னமேயள்ளுக்கேள்விகாதின்பேர்செவியுமாமே. (௯௪)

அணன்மிடறுகுமற்றையண்ணமேயுண்ணாக்கின்பேர்
அணரியேயணலேயண்ணமானமேல்வாய்ப்புறப்பேர்
குணமுறுகவுள்கபோலங்கொடிறனுகதுப்பின்கூற்றும்
துணைசெயாக்கிராணங்கோணந்துண்டமேநாசிமூக்காம். (௯௫)

நயனநேத்திரமேயக்கநாட்டங்கோநேர்க்கஞ்சக்கு
வியனுறும்பார்வைதாரைவிலோசனம்விழியேயக்கி
செயமுறுதிருக்குத்திட்டிதிருட்டியம்பகமேகண்ணும்
மயமுறுதாரைகண்ணின்மணிவிளிம்பிமையினுமம். (௯௬)

பிருகுடிநுதலேநீண்டபீருவேபுருரம்பூருப்
புருவமாம்புகுடியும்பேர்புடைபடுநிடலத்தோடு
திருநுதல்குளமிலாடஞ்சேர்ந்தமத்தகமேநெற்றி
மருவியபாலமுண்டமளிகமும்வகுக்கலாமே. (௯௭)

உரவியதலையேமூர்த்தமுவ்வியோடுத்தமாங்கம்
சிரமுடிசென்னிமுண்டஞ்சிகரமத்தகமுமாகும்
திருமுடிசிமிலிசிக்கஞ்சிகையிவைகுடுமிநாற்பேர்
விரவியசுடிகைசூழிமேவியநவிரமுச்சி. (௯௮)

உளைநவிர்குடுமிபித்தையோரியேகுழல்கார்குஞ்சி
தளைசிகைதொங்கல்பங்கிதானீராறுண்மயிர்ப்பேர்
வளர்குழல்கதுப்புக்கேசமருவியசுரியனுன்கும்
இளையமைந்தர்க்குமற்றையிளங்கொடியார்க்குமேற்கும். (௯௯)

குருள்குழல்விலோதமோதிகூழைகுந்தளமராட்டம்
குரலைம்பாலளகம்பத்தும்பெண்மயிர்கூந்தலும்பேர்
பெருகியகொப்புமுச்சிபின்னகங்கொண்டைபந்தம்
திருமிகுதம்மில்லம்பொற்சிகழிகைமயிர்முடிப்பேர். (௧௦௦)

ஓரியேகேசம்பங்கியுளையுரோமம்மராட்டம்
நேருமிப்பேர்களாறும்பிறமயிர்நிகழ்த்துமென்ப
சேருமவ்வுரோமமற்றைச்சிரோந்தமுஞ்செறிமயிர்ப்பேர்
வாருங்குந்தளம்விலோதமயிர்க்குழற்சிப்பேர்வைக்கும். (௧௦௧)

பல்லுக்கும் நகைக்கும் பொதுப்பெயர்—முறுவல், மூரல். உ.
மோவாயின்பெயர்—தாடி, கட்டம், சுவுகம். ௩.
நாக்கின்பெயர்—நா, சிருவை, தாரை, தாலு. ௪.
காதின்பெயர்—கன்னம், அள், கேள்வி, செவி. ௪.

மிடற்றின்பெயர்—அணல். க. உண்ணாக்கின்பெயர்—அண்ணம். க.
மேல்வாய்ப்புறத்தின்பெயர்—அணரி, அணல், அண்ணம். ௩.
கதுப்பின்பெயர்—கவுள், கபோலம், கொடிறு, அனு. ௪.
மூக்கின்பெயர்—ஆக்கிராணம், கோணம், துண்டம், நாசி. ௪.

கண்ணின்பெயர்—நயனம், நேத்திரம், அக்கம், நாட்டம், கோ, நோக்கம், சக்கு, பார்வை, தாரை, விலோசனம், விழி, அக்கி, திருக்கு, திட்டி, திருட்டி, அம்பகம். க௬.
கண்மணியின்பெயர்-தாரை.க.கண்ணிமையின்பெயர்-விளிம்பு. க.

புருவத்தின்பெயர்—பிருகுடி, நுதல், பீரு, புருரம், பூரு, புகுடி.௬.
நெற்றியின்பெயர்—நிடலம், நுதல், குளம், இலாடம், மத்தகம், பாலம், முண்டம், அளிகம். அ.

தலையின்பெயர்—மூர்த்தம், உவ்வி, உத்தமாங்கம், சிரம், முடி, சென்னி, முண்டம், சிகரம், மத்தகம். ௯.
குடுமியின்பெயர்—முடி, சிமிலி, சிக்கம், சிகை. ௪.
உச்சியின்பெயர்—சுடிகை, சூழி, நவிரம். ௩.

ஆண்மயிரின்பெயர்—உளை, நவிர், குடுமி, பித்தை, ஓரி, குழல்,கார், குஞ்சி, தளை, சிகை, தொங்கல், பங்கி. க௨.
ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும் பொதுப்பெயர்—குழல், கதுப்பு, கேசம், சுரியல். ௫.

பெண்மயிரின்பெயர்—குருள், குழல், விலோதம், ஓதி, கூழை, குந்தளம், மராட்டம், குரல், ஐம்பால், அளகம், கூந்தல். கக.
மயிர்முடியின்பெயர்—கொப்பு, முச்சி, பின்னகம், கொண்டை, பந்தம், தம்மில்லம், சிகழிகை. ஏ.

பிறமயிரின்பெயர்—ஓரி, கேசம், பங்கி, உளை, உரோமம், மராட்டம். ௬.
செறிமயிரின்பெயர்—உரோமம், சிரோந்தம். உ.
மயிர்க்குழற்சியின்பெயர்—குந்தளம், விலோதம். உ.

குடிலமேவேணிநீண்டகோடீரம்பின்னலோடு
சடிலமென்றைந்துபேருஞ்சடையெனவடைவேசாற்றும்
நெடியகாத்திரமுறுப்புநீளங்கமவயவப்பேர்
கடியமூட்டுங்கொளுத்துங்கந்துஞ்சந்தாகுமன்றே.. (க0௨)

சிரையேசங்கனனநாடிதிருந்தியநரம்புமுப்பேர்
அரலையேகழலைகோழையையொடுகாசமாகும்
மருவுமங்கிதமேசேக்கைவசிவடுவுடற்றழும்பாம்
தருபொறிவரையிறைப்பேர்சரைநரைபலிதமும்பேர். (க0௩)

அழிதலையோட்டினுமங்கபாலமேயத்தியென்பு
கழிவுறுமெலும்பினுமங்களேவரமென்றுங்காட்டும்
கழியுடன்முழுவெலும்புகங்காளமென்பர்நூலோர்
விழைபொறிகரணங்கந்தமேவுமிந்திரியமுப்பேர். (க0௪)

தருசுவையொளியூறோசைசாற்றியநாற்றமோருங்
கருவிநாக்கண்ணேமெய்யேகாதொடுமூக்குமாகும்
தெரிதருமுயிரேயாதன்சேதனன்பசுவேசீவன்
அரியபுற்கலனேகூத்தனணுவியமானனான்மா. (க0௫)

இருபதோடிருபான்முப்பானிருபானீரைந்துமேலும்
மருவியவாறுசெய்யுண்மக்கடம்பெயர்க்குச்செய்தான்
குருநறுங்குன்றைவேந்தன்குணபத்திரன்றந்தநோன்மை
தருநெறிநோற்கும்வீரைதழைத்தமண்டலவன்றானே. (க0௬)

மக்கட்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ௨0௭.

சடையின்பெயர்—குடிலம், வேணி, கோடீரம், பின்னல், சடிலம். ௫.
அவயவத்தின்பெயர்—காத்திரம், உறுப்பு, அங்கம். ௩.
சந்தின்பெயர்—மூட்டு, கொளுத்து, சந்து. ௩.

நரம்பின்பெயர்—சிரை, சங்கனனம், நாடி. ௩.
கழலையின்பெயர்—அரலை. ௧. கோழையின்பெயர்—ஐ, காசம். ௨.
உடற்றழும்பின்பெயர்—அங்கிதம், சேக்கை, வீசி, வடு. ௪.
இறையின்பெயர்—பொறி, வரை. ௨.
நரையின்பெயர்—சரை, பலிதம். ௨.

தலையோட்டின்பெயர்—கபாலம். ௧.
எலும்பின்பெயர்—அத்தி, என்பு, களேவரம். ௩.
கழியுடலின் முழுவெலும்பின்பெயர்—கங்காளம். ௧.
இந்திரியத்தின்பெயர்—பொறி, கரணம், கந்தம். ௩.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றை முறையே அறியுங் கருவியாவன: நா, கண், மெய், காது, மூக்கு.
உயிரின்பெயர்—ஆதன், சேதனன், பசு, சீவன், புற்கலன், கூத்தன், அணு, இயமானன், ஆன்மா. ௯.

—oo:o:oo—

மூன்றாவது

# விலங்கின்பெயர்த்தொகுதி.

## காப்பு.

துலங்குமுக்குடைநிழற்றத்துந்துபிமுழங்கத்தேவர்
நலம்பெறுகவரிவீசநன்மலர்மாரிதூவ
அலங்குளையரியணைக்கீழமர்ந்தநான்முகனைப்போற்றி
விலங்கின்பேர்த்தொகுதிதன்னைமேதினிவியப்பச்சொல்வாம். (க)

அரிவயப்போத்துச்சீயமறுகுகேசரியேபூட்கை
மருவியமிருகராசன்வயமாவேமடங்கலோடு
பரவுகண்டீரவம்பஞ்சானனஞ்சிங்கப்பல்பேர்
பெருகியயானையாளிப்பேர்யாளியறுகுபூட்கை. (உ)

வல்லியம்வயமாவோடுசித்திரகாயமற்றும்
வெல்லுமாவுழுவைபாய்மாவியாக்கிரந்தரக்குவேங்கை
கொல்லவேயெழுந்தசீறுங்குயவரிகொடுஞ்சார்த்தூலம்
புல்லொடுபுண்டரீகங்கொடுவரிபுலியினாமம். (௩)

தும்பிமாதங்கந்தூங்கறோல்கறையடியெறும்பி
உம்பல்வாரணம்புழைக்கையொருத்தல்வல்விலங்குநாகம்
கும்பிநால்வாயேபூட்கைகுஞ்சரங்கரேணுவத்தி
கம்பவேழம்மூவாவேகரிகயங்களிறுகைம்மா. (௪)

சிந்துரம்வயமாவேகஞ்செறியிபம்புகர்முகங்கள்
தந்தியேமதாவளந்தந்தாவளம்வழுவையாம்பல்
மந்தமாமருண்மாமற்றைமதகயம்போதகத்தோ
டுந்துமேழைந்துமேலுமிரண்டுமற்றுயர்ந்தயானை. (௫)

உதவிசெய்தினத்தைக்காக்கும்பலேயூதநாதன்
மதகயமதோற்கடம்பின்வாலின்பேர்தாலவட்டம்
அதனுனிவேசகந்தானுமுதுகின்பேர்மஞ்சாம்
மதசமுங்கும்பந்தானுமத்தகமென்றுகூறும். (௬)

# பெயர்ப்பிரிவு.

இ - ள். துலங்கும் முக்குடை நிழற்ற - விளங்காநின்ற மூன்று குடைகளும் நிழலைச்செய்யவும்,—துந்துபி முழங்க-துந்துபியானது ஒலிக்கவும்,—தேவர் நலம் பெறு கவரி வீச-தேவர்கள் நன்மைபெற்ற சாமரத்தை வீசவும்,—நல் மலர் மாரி தூவ - நல்ல புட்பமழையைச் சொரியவும்,—அலங்கு உளை அரி அணைக்கீழ் அமர்ந்த நான்முகனைப் போற்றி - பிரகாசிக்கின்ற பிடர்மயிரையுடைய சிங்கத்தினாலே தாங்கப்படுகின்ற ஆசனத்தின்கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளைத் துதித்து,—விலங்கின் பேர்த் தொகுதி தன்னை மேதினி வியப்பச் சொல்வாம் - விலங்கின்பெயர்த்தொகுதியைப்பூமியிலுள்ளோர் அதிசயிக்கும்படியாக (யாம்) கூறுவாம். எ - று.

சிங்கத்தின்பெயர்—அரி, வயப்போத்து, சீயம், அறுகு, கேசரி, பூட்கை, மிருகராசன், வயமா, மடங்கல், கண்டீரவம், பஞ்சானனம். ௧௧.

யானையாளியின்பெயர்—யாளி, அறுகு, பூட்கை. ௫.

புலியின்பெயர்—வல்லியம், வய்மா, சித்திரகாயம், வெல்லுமா, உழுவை, பாய்மா, வியாக்கிரம், தரக்கு, வேங்கை, குயவரி, சார்த்தூலம், புல், புண்டரீகம், கொடுவரி. ௧௪.

யானையின்பெயர்—தும்பி, மாதங்கம், தூங்கல், தோல், கறையடி, எறும்பி, உம்பல், வாரணம், புழைக்கை, ஒருத்தல், வல்விலங்கு, நாகம், கும்பி, நால்வாய், பூட்கை, குஞ்சரம், கரேணு, அத்தி, வேழம், உவா, கரி, கயம், களிறு, கைம்மா. ௨௪.

சிந்துரம், வயமா, இபம், புகர்முகம், தந்தி, மதாவளம், தந்தாவளம், வழுவை, ஆம்பல், மந்தமா, மருண்மா, மதகயம், போதகம். ௧௫. (ஆ ௫௭.)

யானைக்கூட்டத்துத்தலையானையின்பெயர்—யூதநாதன். ௧.

மதகயத்தின்பெயர்—மதோற்கடம். ௧.

யானைவாலின்பெயர்—தாலவட்டம். ௧.

யானைவாணுனியின்பெயர்—வேசகம். ௧.

யானைமுதுகின்பெயர்—மஞ்சு. ௧.

யானைமத்தகத்தின்பெயர்—மதகம், கும்பம். ௨.

கரடமேமதம்பாய்கின்றசுவடுகைந்நுதிகளேபுட்
கரமதாமதத்தினுமங்கடங்கடாந்தானமாகும்
பெருகியபிரதிமானம்பேசுகொம்பின்னடுப்பேர்
கருதுகோடெயிறுதந்தநிரியாணங்கடைக்கணுமே. (௭)

கண்டிடுஞ்செவியடிப்பேர்சூளிகைகவுள்கதுப்பாம்
விண்டகையுமிழுநீரேவிலாழிபல்லடிகரீரம்
கொண்டகாத்திரமேமுன்கால்கூறியவபரம்பின்கால்
தொண்டைதொண்டலந்துதிக்கைசுண்டையுமப்பேராமே. (௮)

வடவையத்தினியிரண்டும்பிடிகளாங்கரிணியும்பேர்
கடகம்பானைத்திரட்பேர்கயந்தலைபோதகங்கள்
துடியடிகளபமோடுகயமுனியானைக்கன்றும்
படுகுழிபயம்பாமென்பபாகலம்யானைநோயே. (௯)

பரிதுரகஞ்சிறந்தபாடலங்கிள்ளைபாய்மாத்
துரகதம்வாசியுன்னிதுசிகந்தருவங்கற்கி
அரியயமிவுளிமாவேயச்சுவம்புரவிகோரம்
குரகதங்கோணங்கொக்குக்கொய்யுளைசடிலங்கோடை. (௧௦)

கந்துகங்கனவட்டம்போர்காட்டும்பத்திரிதுரங்கம்
குந்தமத்திரியாறைந்துங்குதிரையினுமமாகும்
வந்தமேசகத்தினோடுசுவல்குசைமயிர்குளம்பு
வந்தபேர்குரங்குரச்சைமாதிகமதுபோமார்க்கம். (௧௧)

குல்வியபசுப்பேர்கூலங்கோக்குடஞ்சுரபியாவே
இலகியநிரையேதேனுப்பெற்றமிவ்வெட்டுமாகும்
பலமுறுகபிலைதேனுப்பரவுதெய்வப்பசுப்பேர்
மலடுதான்வசையாமீற்றாவற்சலைகன்றுவற்சம். (௧௨)

பரவுமோரீற்றாக்கிட்டிபத்திரைநற்பசுப்பேர்
சுரைமுலையாகுமற்றைச்சுதையுதைகாற்பசுப்பேர்
திருமுலைமடியினுமஞ்செருத்தலாபீனமென்ப
நிரைதொறுக்காலிகோட்டநீண்டகாலேயங்கூட்டம். (௧௩)

பாறல்சேப்பெற்றம்பூணிபாண்டில்கொட்டியமிறாலே
எருடுமூரிபுல்லமெருத்தின்பேரிமின்முரிப்பாம்
பாறல்பேரெருத்தினுமம்பகடுந்தூர்வகமுமாகும்
ஏறுக்கநிரையேநந்தியிடபமாங்கூளியும்பேர். (௧௪)

யானைமதம்பாய்சுவட்டின்பெயர்—கரடம். க. யானைக்கைந்நுதி யின்பெயர்—புட்கரம். க. யானைமதத்தின்பெயர்-கடம், கடாம், தானம். ௩. யானைக்கொம்பினடுவின்பெயர்—பிரதிமானம். க.
யானைத்தந்தத்தின்பெயர்—கோடு, எயிறு. உ.
யானைக்கடைக்கண்ணின்பெயர்—நிரியாணம். க.

யானைச்செவியடியின்பெயர்—சூளிகை. க. யானைக்கவுளின்பெயர்-கதுப்பு.க. யானைத்துதிக்கையுமிழ்நீரின்பெயர்—விலாழி. க. யானைப்பல்லடியின்பெயர்—கீரம். க. யானைமுன்காலின்பெயர்-காத்திரம். க. யானைப்பின்காலின்பெயர்—அபரம். க. யானைத்துதிக்கையின்பெயர்-தொண்டை, தொண்டலம், சுண்டை. ௩.
யானைப்பிடியின்பெயர்—வடவை, அத்தினி, கரிணி. ௩.
யானைத்திரளின்பெயர்—கடகம். க. யானைக்கன்றின்பெயர்—கயந்தலை, போதகம், துடியடி, களபம், கயமுனி. ரு.
யானைபடுகுழியின்பெயர்-பயம்பு.க.யானைநோயின்பெயர்-பாகலம்

குதிரையின்பெயர்—பரி, துரகம், பாடலம், கிள்ளை, பாய்மா, துரகதம், வாசி, உன்னி, தூசி, கந்தருவம், கற்கி, அரி, அயம், இவுளி, மா, அச்சுவம், புரவி, கோரம், குரகதம், கோணம், கொக்கு, கொய்யுளை, சடிலம், கோடை. உச.

கந்துகம்,கனவட்டம்,பத்திரி,துரங்கம்,குந்தம்,அத்திரி.சுஃ.ஆ ௩௦
குதிரைமயிரின்பெயர்—மேசகம், சுவல், குசை. ௩.
குதிரைக்குளம்பின்பெயர்—குரம், குரச்சை. உ.
குதிரைபோமார்க்கத்தின்பெயர்—மாதிகம். க.

பசுவின்பெயர்-கூலம்,கோ,குடம்,சுரபி,ஆ,நிரை,தேனு,பெற்றம்.அ
தெய்வப்பசுவின்பெயர்—கபிலை, தேனு. உ.
மலட்டுப்பசுவின்பெயர்—வசை. க.
ஈன்றபசுவின்பெயர்-வற்சலை.க.பசுவின்கன்றின்பெயர்-வற்சம்.க.

ஓரீற்றுப்பசுவின்பெயர்—கிட்டி.க. நற்பசுவின்பெயர்-பத்திரை.க.
பசுவின்முலைப்பெயர்—சுரை.க.உதைகாற்பசுவின்பெயர்-சுதை.க.
முலைமடியின்பெயர்—செருத்தல், ஆபீனம். உ.
பசுக்கூட்டத்தின்பெயர்-நிரை,தொறு,காலி,கோட்டம், காலேயம்.

எருத்தின்பெயர்-பாறல்,சே,பெற்றம்,பூணி,பாண்டில்,கொட்டியம், இருல்,ஏறு,மூரி,புல்லம்.க௦.எருத்தின்முரிப்பின்பெயர்-இமில்.க.
பேரெருத்தின்பெயர்—பாறல், பகடு, ஊர்வகம். ௩.
இடபத்தின்பெயர்—ஏறு, உக்கம், நரை, நந்தி, கூளி. ரு.

துர்வகந்துரியமென்பபொதியெருதெருமையின்பேர்
காராவேவடவைமேதிசைரிபங்கவரிகாரா
மூரியேமகிடமெட்டுமொழியுமற்றுண்பொதுப்பேர்
பாரியகடாவினோடுபகடாமைமலட்டினாமம். (கரு)

அருணஞ்செம்மறியேமோத்தையசமுதனுடுவேகொச்சை
துருவையேழகம்வற்காலிதள்ளலேபள்ளைவெள்ளை
வருடைமேடங்கடாமைமறிவெறிகொறியேசாகம்
புருவையேதகர்மூவேழுமிரண்டுமாட்டின்பொதுப்பேர். (கசு)

துருவைமைகொறிமுப்பேருந்தோற்றுஞ்செம்மறியாட்டின்பேர்
செருமலிதகர்கடாவேதிண்ணகமேழகங்கள்
பரவுகம்பளமென்றைந்தும்பற்றுமவ்வாணின்பல்பேர்
மருவியகுட்டன்சோரன்மறிபறழ்குட்டியாமே. (கஎ)

வெள்ளைவற்காலிகொச்சைவெள்ளாட்டினாமமாகும்
வெள்ளையேயதன்மறிப்பேர்மேவியசெச்சைசாகம்
தள்ளியமோத்தைமுப்பேர்சாற்றுமேயிவற்றினாண்பேர்
வள்ளியசரபத்தோடுவருடையும்வரையாடாமே. (கஅ)

கேழலேயரிகுரோடங்கிரிகிடிகிருட்டியேனம்
மோழலேயிருளிமூந்துவல்லுளிகளிறுமைம்மா
போழ்முகக்கோட்டுமாவேபோத்திரிவராகங்கோலம்
சூழுமீரெட்டும்பன்றிசூகரமெறுழியும்பேர். (ககூ)

சல்லியமுளவுமாவெய்சல்லகமுட்பன்றிப்பேர்
சொல்லுமிப்பன்றிமுள்ளுச்சூழ்சலஞ்சலலமென்ப
பல்லுகமுளியமெண்குபல்லூகமெலுவினோடு
பல்லமேகரடிநாமம்பகர்குடாவடியுமாமே. (உ0)

சவரிசீகரமேவீசுஞ்சாமரங்கவரியும்பேர்
கவரிமாபடகம்பட்டமானமாவெகினுங்காட்டும்
கவயமாவாமாகாட்டாகாத்திரிநகுலமென்று
இவையிருபேருமன்றித்தீர்வையுங்கீரியாமே. (உக)

அரிணஞ்சாரங்கநவ்வியடலுழைபிணையேகுனம்
மிருகமேமறிகுரங்கமேவுமானேணமும்பேர்
இரலைவச்சயமேபுல்வாய்கலைகருமானுமேற்கும்
இரலைபுல்வாய்க்கும்பேராமென்றனர்குன்றுநூலோர். (உஉ)

பொதியெருத்தின்பெயர்—தூர்வகம், தூரியம். ௨.
எருமையின்பெயர்—காரான், வடலவை, மேதி, சைரிபம், கவரி, காரா, மூரி, மஹிடம். அ. எருமையாண்பெயர்-கடா, பகடு. ௨.
மலட்டெருமையின்பெயர்—மை. ௧.

ஆட்டின்பொதுப்பெயர்—அருணம், செம்மறி, மோத்தை, அசம், உதள், உடு, கொச்சை, துருவை, ஏழகம், வற்காலி, துள்ளல், பள்ளை, வெள்ளை, வருடை, மேடம், கடா, மை, மறி, வெறி, கொறி, சாகம், புருவை, தகர். ௨௩.

செம்மறியாட்டின்பெயர்—துருவை, மை, கொறி. ௩.
செம்மறியாட்டாணின்பெயர்—தகர், கடா, திண்ணகம், ஏழகம், கம்பளம். ௫.
ஆட்டுக்குட்டியின்பெயர்—குட்டன், சோரன், மறி, பறழ். ௪.

வெள்ளாட்டின்பெயர்—வெள்ளை, வற்காலி, கொச்சை. ௩.
வெள்ளாட்டுக்குட்டியின்பெயர்—வெள்ளை. ௧.
வெள்ளாட்டாணின்பெயர்—செச்சை, சாகம், மோத்தை. ௩.
வரையாட்டின்பெயர்—சரபம், வருடை. ௨.

பன்றியின்பெயர்—கேழல், அரி, குரோடம், கிரி, கிடி, கிருட்டி, ஏனம், மோழல், இருளி, வல்லுளி, களிறு, மைம்மா, கோட்டுமா, போத்திரி, வராகம், கோலம், சூகரம், எறுழி. ௧௮.

முட்பன்றியின்பெயர்—சல்லியம், முளவுமா, எய், சல்லகம். ௪.
முட்பன்றிமுள்ளின்பெயர்—சலம், சலலம். ௨.
கரடியின்பெயர்—பல்லுகம், உளியம், எண்கு, பல்லூகம், எலு, பல்லம், குடாவடி. ௭.

சாமரத்தின்பெயர்—சவரி, சீகரம், கவரி. ௩.
கவரிமாவின்பெயர்—படகம், பட்டம், மானமா, எகின். ௪.
காட்டாவின்பெயர்—கவயமா, ஆமா. ௨.
கீரியின்பெயர்—காத்திரி, நகுலம், தீர்வை. ௩.

மானின்பெயர்—அரிணம், சாரங்கம், நவ்வி, உழை, பிணை, சூனம், மிருகம், மறி, குரங்கம், ஏணம். ௧௦.
கலையின்பெயர்—இரலை, வச்சயம், புல்வாய், கருமான். ௪.
புல்வாயின்பெயர்—இரலை. ௧.

கழுதையின்பேர்வாலேயங்கர்த்தபங்காளவாயே
அழகிலத்திரியேகோகுவேசரிகரமுமாகும்
குழைவுறுவேசரிப்பேர்கோவேறுகழுதைக்கூற்றும்
அழிவிலொட்டகந்தாசேரமத்திரிநெடுங்கழுத்தல். (உந)

ஓரிகோமாயுவூளனொண்டனேயிகலன்சம்பு
பூரிமாயன்குரோட்டாச்சிருகாலனரியேபோற்றும்
ஓரியேகோலாங்கூலமுற்றமைம்முகனேகள்வன்
சீரிபகலையோடைந்துமுசுவெனச்செப்பலாமே. (உச)

சூரனேமுடுவல்பாசிபுரோகதிசுனகன்குக்கல்
கூரனேயெகினனக்கன்குரைமுகன்ஞமலிஞாளி
சாரமேயன்சுணங்கன்சுவாவேநாய்தானைம்முப்பேர்
வீரியமுடுவல்பெண்ணாய்விருகங்கொக்கிரண்டுஞ்செந்நாய். (உரு)

வெருகுடனலவனோதிவிடாரகம்விலாளம்பூசை
பொருதுமார்ச்சாலம்பாக்கனிற்புலிபூனையோன்பான்
மருமிகுதுருக்கநானமான்மதநரந்தநான்கும்
கருதுகத்தூரியின்பேர்காட்டியமறுவிநாவி. (உசு)

வலிமுகங்கடுவன்பாயும்வானரமரியேமந்தி
பிலவங்கங்கோகிலங்கான்பெயர்ந்தகோடரமேயூகம்
கலகமர்க்கடமேநாகங்கவிகுரங்கிவையீராறும்
குலவுகாருகமேயூகங்கூறியகருங்குரங்கே. (உஎ)

சாய்ந்தசாயானதங்கள்சரடமேகாமரூபி
ஏய்ந்ததண்டோமானோதியிசைகோம்பிமுசலியோத்தி
ஓந்தியாஞ்சுவவுசுண்டனுறுசுசுந்தரிமூஞ்சூறே
ஆய்ந்திடுசிகரியாகோடிரும்பனுமகழெலிப்பேர். (உஅ)

கருப்பைகாரெலியினாமங்களதந்துந்துளமேயாகுப்
பெருச்சாளிமூடிகத்தோடுந்துருவென்றும்பேராம்
வரிப்புறம்வெளிலணிற்பேர்வருந்தடிமுசலிகோதாத்
தரித்தெழுமுடும்பினாமஞ்சசமுயலென்னலாமே. (உகூ)

## விலங்கினாண்மரபு.

கடுவன்மாவொருத்தல்போத்துக்கலைதகர்களிறுசேவி
னொடுபகடும்பலேறேடோரியீராறுமாண்பேர்
வடுவறுகுரங்குபூனைமற்றிவைகடுவனாமே
அடுதிறல்யானைபன்றியாடல்வெம்புரவிமாவாம். (ஙo)

கழுதையின்பெயர்—வாலேயம், கர்த்தபம், காளவாய், அத்திரி, கோகு, வேசரி, கரம். எ.
கோவேறுகழுதையின்பெயர்—வேசரி. க.
ஒட்டகத்தின்பெயர்—தாசேரம், அத்திரி, நெடுங்கழுத்தல். ங.

நரியின்பெயர்—ஓரி, கோமாயு, ஊளன், ஒண்டன், இகலன், சம்பு, [சம்புகம்.] பூரிமாயன், குரோட்டா, சிருகாலன். கூ.
முசுவின்பெயர்--ஓரி,கோலாங்கூலம்,மைம்முகன்,கள்வன்,கலை.ரு.

நாயின்பெயர்—சூரன், முடுவல், பாசி, புரோகதி, சுனகன், குக்கல், கூரன், எகினன், அக்கன், குரைமுகன், ஞமலி, ஞாளி, சாரமேயன், சுணங்கன், சுவா. கரு. பெண்ணாயின்பெயர்—முடுவல். க.
செந்நாயின்பெயர்—விருகம், கொக்கு. உ.

பூனையின்பெயர்—வெருகு, அலவன், ஓதி, [ஒது] விடாரகம், விலாளம், பூசை, மார்ச்சாலம், பாக்கன், இற்புலி. கூ.
கத்தூரியின்பெயர்—தூருக்கம், நானம், மான்மதம், நரந்தம். ச.
நாவியின்பெயர்—மறுவி. க.

குரங்கின்பெயர்—வலிமுகம், கடுவன், வானரம், அரி, மந்தி, பிலவங்கம், கோகிலம், கோடரம், யூகம்,மர்க்கடம்,நாகம்,கவி.கஉ.
கருங்குரங்கின்பெயர்—காருகம், யூகம். உ.

ஓந்தியின்பெயர்—சாயானதம், சரடம், காமரூபி, தண்டு, ஓமான், ஓதி, கோம்பி, முசலி, ஓத்தி. கூ.
மூஞ்சூற்றின்பெயர்—சுவவு, சுண்டன், சுசுந்தரி. ங.
எலியின்பெயர்—சிகரி, ஆகு, இரும்பன். ங.

காரெலியின்பெயர்—கருப்பை. க. பெருச்சாளியின்பெயர்—களநம், தூந்தூளம், ஆகு, மூடிகம், உந்தூரு. ரு.
அணிலின்பெயர்—வரிப்புறம், வெளில். உ.
உடும்பின்பெயர்—தடி,முசலி,கோதா. ங. முயலின்பெயர்-சசம்.க.

## விலங்கினாண்மரபு.

விலங்கினாண்பெயர்—கடுவன், மா, ஒருத்தல், போத்து, கலை, தகர், களிறு, சே, பகடு, உம்பல், ஏறு, ஓரி. கஉ.
கடுவனென்னும்பெயர்—குரங்கு, பூனை, இரண்டுக்குமாம்.
மாவென்னும்பெயர்—யானை, பன்றி, புரவி. ஙம்.

கரடிபுல்வாய்மான்யானைகவரியோடெருமைபன்றி
பொருபுலிமரையென்றொன்பான்புகன்றிடுமொருத்தலாகும்
மரைபசுப்புலியேழுளைமற்றைப்புல்வாயும்போத்தாம்
கருதியமுசுவுமானுங்கலையெனக்காட்டலாமே. (௩௧)

தருவாடுவேழம்யாளிசுறுத்தகரென்றேசொல்லும்
கரியொடுசுறவுபன்றிகளிறெனக்காட்டலாமே
செருமலிகுதிரைபெற்றம்புல்வாயேசேவென்றாகும்
எருமையோடியானைபெற்றம்பகடிபமும்பலாமே. (௩௨)

ஆணுடனெருமைபன்றியாய்மயிர்க்கவரிசங்கு
மானொடுமரைபுல்வாயுமாறுகொள்சுறவுமேறும்
ஊனுகர்நரியினோடுமுசுவிவையோரியாகும்
மானநூல்விலங்கினாணின்மரபெனவடைத்தவாறே. (௩௩)

## விலங்கின்பெண்மரபு.

பிடிபிணைபெட்டைமந்திபிணாவோடாநாகுபாட்டி
கொடுவிலங்கின்பெண்பாலாங்குஞ்சரங்கவரியோடு
நெடியவொட்டகமிம்மூன்றுநெடும்பிடிநிகழ்த்துநாமம்
வடிவுளவுழைபுல்வாய்நாய்வராகமேபிணையின்வைக்கும். (௩௪)

ஒட்டகங்கழுதைவாசியுறுசிங்கமரையிவ்வைந்தும்
பெட்டையாமுசுவோடேகம்பேசியகுரங்குமந்தி
பட்டபுல்வாய்நாய்பன்றிபகர்ந்திடும்பிணாவெனும்பேர்
கட்டியவெருமைபெற்றங்காட்டுளமரையேயாவாம். (௩௫)

எருமையேமரையேபெற்றமேற்றநீர்ச்சாதிநாகாம்
நரிபன்றிநாயிம்மூன்றுநாட்டியபாட்டியாகும்.
பெருகுபெண்பால்பிணாப்பெண்பேணுமாணைவையுமாணும்
பொருவினாலுணர்ந்துசொன்னபுலவர்தம்வாக்குத்தானே. (௩௬)

## விலங்கின்பிள்ளைமரபு.

பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பொடுகுருளைகன்று
மறியேபோதகமிவ்வொன்பான்வல்விலங்கின்பிள்ளைப்பேர்
பறழொடுகுருளைகுட்டிபற்றியமூன்றுபேரும்
உறுபுலிமுயல்வராகமோதியநரிநாயாமே. (௩௭)

முறுகுநாயன்றிமற்றைமொழிந்திடும்பிள்ளையென்ப
மறியென்பதாடழுங்குமானொடுகுதிரைவைக்கும்
பறழ்பிள்ளைகுழவிகுட்டிபார்ப்பெனவைந்துபேரும்
குறியுளகுரங்கேயாதிகோட்டில்வாழ்விலங்கின்பிள்ளை. (௩௮)

ஒருத்தலென்னும்பெயர்—கரடி, புல்வாய், மான், யானை, கவரி, எருமை, பன்றி, புலி, மரை. கூ ம்.
போத்தென்னும்பெயர்—மரை, பசு, புலி, பூனை, புல்வாய். ரு ம்.
கலையென்னும்பெயர்—முசு, மான். உ ம்.

தகரென்னும்பெயர்—தருவாடு, வேழம், யாளி, சுறு. ச ம்.
களிறென்னும்பெயர்—கரி, சுறவு, பன்றி. ௩ ம்.
சேவென்னும்பெயர்—குதிரை, பெற்றம், புல்வாய். ௩ ம்.
பகடென்னும்பெயர்—எருமை, யானை, பெற்றம். ௩ ம்.
உம்பலென்னும்பெயர்—இபம். க ம்.

ஏறென்னும்பெயர்—ஆன், எருமை, பன்றி, கவரி, சங்கு, மான், மரை, புல்வாய், சுறவு. கூ ம்.
ஓரியென்னும்பெயர்—நரி, முசு. உ ம்.

## விலங்கின்பெண்மரபு.

விலங்கின்பெண்பாற்பெயர்—பிடி, பிணை, பெட்டை, மந்தி பிணா, ஆ, நாகு, பாட்டி. அ.
பிடியென்னும்பெயர்—குஞ்சரம், கவரி, ஒட்டகம். ௩ ம்.
பிணையென்னும்பெயர்—உழை, புல்வாய், நாய், வராகம், ச ம்.

பெட்டையென்னும்பெயர்—ஒட்டகம், கழுதை, வாசி, சிங்கம், மரை. ரு ம். மந்தியென்னும்பெயர்—முசு,ஊகம்,குரங்கு. ௩ ம்.
பிணாவென்னும்பெயர்—புல்வாய், நாய், பன்றி. ௩ ம்.
ஆவென்னும்பெயர்—எருமை, பெற்றம், மரை. ௩ ம்.

நாகென்னும்பெயர்—எருமை, மரை, பெற்றம், நீர்ச்சாதி. ச ம்.
பாட்டியென்னும்பெயர்—நரி, பன்றி, நாய். ௩ ம்.
பிணாப்பெண்ணென்னும்பெயர்கள்—பெண்பாலெவற்றிற்குமாம்.
ஆணென்னும்பெயர்—ஆண்பாலெவற்றிற்குமாம்.

## விலங்கின்பிள்ளைமரபு.

விலங்கின்பிள்ளைப்பெயர்—பறழ், பிள்ளை, குழவி, குட்டி, பார்ப்பு, குருளை, கன்று, மறி, போதகம். கூ.
பறழ்குருளைகுட்டியென்னும்பெயர்கள்—புலி, முயல், வராகம், நரி, நாய். ரு ம்.

பிள்ளையென்னும்பெயர்—நாயொழிந்தவற்றிற்காம்.
மறியென்னும்பெயர்—ஆடு, அழுங்கு, மான், குதிரை. ச ம்.
பறழ் பிள்ளை குழவி குட்டி பார்ப்பென்னும்பெயர்கள்—குரங்கு முதன் மரக்கோட்டில்வாழ் விலங்கின்பிள்ளைகட்காம்.

கடமைமானெருமைபெற்றங்கவயமொட்டகமேயானை
விடுபரிமரைகராமேமேவியகவரிகன்றாம்
கடமைமானெருமையானைகாட்டியகுழவியாகும்
அடுபுலிசிங்கம்யானையானபோதகமென்றாமே. (௩௯)

முறுகியகீரிபூனைமுயலணிலென்பநான்கும்
பறழொடுகுட்டிபிள்ளைபன்னியமூன்றுமாகும்
பறழொடுகுட்டிதானேபாக்கனுமணிலுமென்ப
பறழ்பிள்ளையிரண்டுஞ்சொல்லிற்பார்ப்பொடுதவழ்சாதிப்பேர். ()

குருளையுங்கன்றுமானிற்கொள்ளுபகுழவியோடு
குருளையும்யாளிகொள்ளுங்குழவியேமுசுவினுக்கும்
குருளையுமுசுவின்கூற்றுங்கூறியமாவேமானே
மிருகமேகுரங்கோநான்கும்விலங்கினிற்பொதுப்பேராமே. (௪௧)

சாலமேவியூகம்யூதஞ்சாற்றியகுலம்விருந்தம்
கோலமார்கணம்விலங்கின்கூட்டமாம்பிறவுமேற்கும்
கூலம்வேசகமேதோகைகுறித்திடுமிலாங்கூலம்வால்
வாலதியென்றும்பேராம்வாலின்கீழ்வெருகமாமே. (௪௨)

மருப்பொடுசிருங்கங்கோடுமற்றையவுலவைகொம்பாம்
குருத்திடும்விடாணமும்பேர்குமரங்கொம்பிலாவிலங்காம்
கிருத்தியேபுறணிபோர்வைகிளரதளொலியருக்குத்
துருத்தியேசருமம்பச்சைதுவக்குரிவடகந்தோலாம். (௪௩)

தசைபுலால்புலவுபுண்ணேதடியொடுபுளிதந்தூவே
பிசிதம்வள்ளூரம்விடக்குப்பேசிலூனின்பேர்பத்தாம்
பொசிதருமுடையேயூழ்த்தல்பூதியேதசைபுலாலாம்
பசுவினதிறைச்சிதானேபகர்ந்தவள்ளூரமதாமே. (௪௪)

எருவையேநெய்த்தோர்சோரியியம்பிடுமுதிரம்புண்ணீர்
குருதிசெம்பால்புலாணீர்குறித்தசோணிதமேசெந்நீர்
கருதியசுடுவன்மற்றைக்கறையீராறிரத்தத்தின்பேர்
விரவியநிணங்கொழுப்புவிளரொடுவிழுக்குமாமே. (௪௫)

கருவொடுசினைபீள்சூலேகருப்பமேவயாவுமாகும்
மருவியவழும்பினுமம்வழுக்கென்பவீருளீரல்
கருதியமுடையினுமங்காட்டியபுலவோடுத்தை
உருவியமலமேமாசேயுபமலமுள்ளின்மாசாம். (௪௬)

கன்றென்னும்பெயர்—கடமை, மான், எருமை, பெற்றம், கவயம், ஒட்டகம், யானை, பரி, மரை, கராம், கவரி. கக ம்.
குழவியென்னும்பெயர்—கடமை, மான், எருமை, யானை. ச ம்.
போதகமென்னும்பெயர்—புலி, சிங்கம், யானை. ங ம்.

பறழ்குட்டிபிள்ளையென்னும்பெயர்கள்—கீரி, பூனை, முயல், அணில். ச ம்.
பறழ்குட்டியென்னும்பெயர்கள்—பாக்கன், அணில். உ ம்.
பறழ்பிள்ளையென்னும்பெயர்கள்—பார்ப்பு, தவழ்சாதி. உ ம்.

குருளைகன்றென்னும்பெயர்கள்—மான். க ம்.
குழவிகுருளையென்னும்பெயர்கள்—யாளி. க ம்.
குழவிகுருளையென்னும்பெயர்கள்—முசு. க ம்.

மரபு முற்றிற்று.

விலங்கின்பொதுப்பெயர்—மா, மான், மிருகம், குரங்கு. ச.

விலங்கின்கூட்டத்தின்பெயர்—சாலம், வியூகம், யூதம், குலம், விருந்தம், கணம். சு.
விலங்கின்வாலின்பெயர்—கூலம், வேசகம், தோகை, இலாங்கூலம், வாலதி. ரு. விலங்கின்வாற்கீழிடத்தின்பெயர்—வெருகம். க.

விலங்கின்கொம்பின்பெயர்—மருப்பு, சிருங்கம், கோடு, உலவை, விடாணம். ரு. கொம்பிலாவிலங்கின்பெயர்—குமரம். க.
தோலின்பெயர்—கிருத்தி, புறணி, போர்வை, அதள், ஒலியல், தொக்கு, துருத்தி, சருமம், பச்சை, துவக்கு, உரி, வடகம். கஉ.

ஊனின்பெயர்—தசை, புலால், புலவு, புண், தடி, புளிதம், தூ, பிசிதம், வள்ளூரம், விடக்கு. க0.
புலாலின்பெயர்—முடை, ஊழ்த்தல், பூதி, தசை. ச.
பசுவினிறைச்சியின்பெயர்—வள்ளூரம். க.

இரத்தத்தின்பெயர்—எருவை, செய்த்தோர், சோரி, உதிரம், புண்ணீர், குருதி, செம்பால், புலானீர், சோணிதம், செந்நீர், சுடுவன், கறை. கஉ.
கொழுப்பின்பெயர்—நிணம், விளர், விழுக்கு. ங.

கருப்பத்தின்பெயர்—கரு, சினை, பீள், சூல், வயாவு. ரு.
வழும்பின்பெயர்—வழுக்கு. க. ஈரலின்பெயர்—ஈருள். க.
முடையின்பெயர்—புலவு, ஊத்தை. உ. மாசின்பெயர்—மலம். க.
உண்மாசின்பெயர்—உபமலம். க.

அரவுகட்செவியேபோகியகியரிவியாளஞ்சர்ப்பம்
உரகம்பன்னகமேநாகமுற்றமாசுணமேசக்கிரி
பரவியபுயங்கம்பாந்தளங்கதம்பணிபாம்பின்பேர்
இரைகொளுந்துண்டஞ்சாரையிராசிலமென்பதும்பேர். (சஎ)

விடமுமிழ்மண்டலிக்குமேவுகோளகமேநாமம்
கொடியமாலுதானனேகண்குத்திப்பாம்பென்றுகூறும்
நெடியமாசுணமேபாந்தணீள்பெரும்பாம்பினுமம்
முடியவேயெழுந்துசீறுமூர்க்கனேநாகமென்ப. (சஅ)

வருகருவழலையின்பேரிராசமாநாகமாகும்
குரவியபறவைநாகங்குக்குடசர்ப்பமென்ப
பரவியபடம்பணம்பைபடப்பொறியுத்திதுத்தி
கருதியதட்டநஞ்சுகாலும்பல்லதட்டங்காற்றும். (சகூ)

எகினமோதிமமராளம்விகங்கம்வக்கிராங்கமன்னம்
சிகியொடுஞமலிதோகைசிகாவளஞ்சிகண்டிமஞ்ஞை
ஓகரமேமயூரமற்றுமுறுபிணிமுகங்கலாபி
மகிழ்வுறுநவிரம்பீலிகேகயமயில்பன்முப்பேர். (ரு0)

சரணமேசிகண்டங்கூந்தல்சந்திரகங்கலாபங்கூழை
பெருகியதோகைதொங்கல்பீலியாந்தூவியும்பேர்
மருவியவகவலாலன்மயிற்குரலேங்கலும்பேர்
வருமுருந்திறகின்முள்ளாமற்றன்னச்சிறகுதூவி. (ருக)

மன்னியகலுழன்மற்றைவைனனேவைனதேயன்
பன்னகவைரியோடுதார்க்கியன்பறவைவேந்தன்
உன்னியகருடனுமுவணமுமதற்கேகூறும்
சொன்னசாதகப்புட்டானேசூழ்ந்தசாரங்கமென்ப. (ருஉ)

சிம்புள்வாருண்டமற்றைச்செப்பியவருடையோடு
சம்பரந்துரோணம்வெய்யசரபமெண்காற்புட்பேராம்
வெம்பியநேமிப்புள்ளுவிரும்புசக்கரவாகப்புட்
கொம்பியகோகம்யானைக்குருகென்றுகூறலாமே. (ருங)

இருந்தபுண்டரமேகங்கமெருவையேபவணையோடு
கருஞ்சிறையுவணமைந்துங்கழுகென்பசகுந்தமும்பேர்
திருந்தியசேனம்பாரசிகைபாறுசேருங்கங்கம்
பருந்தின்பேரசுணமாவேபகரிற்கேகயமென்றோதும். (ருச)

பாம்பின்பெயர்—அரவு, கட்செவி, போகி, அகி, அரி, வியாளம், சர்ப்பம், உரகம்,பன்னகம், நாகம், மாசுணம், சக்கிரி, புயங்கம், பாந்தள், அங்கதம், பணி. கசு.
சாரைப்பாம்பின்பெயர்—துண்டம், இராசிலம். உ.

மண்டலிப்பாம்பின்பெயர்—கோளகம். க.
கண்குத்திப்பாம்பின்பெயர்—மாலுதானன். க.
பெரும்பாம்பின்பெயர்—மாசுணம், பாந்தள். உ.
நாகத்தின்பெயர்—மூர்க்கன். க.

கருவழலைப்பாம்பின்பெயர்—இராசமாநாகம். க.
பறவைநாகத்தின்பெயர்—குக்குடசர்ப்பம். க.
பாம்பின்படத்தின்பெயர்—பணம், பை. உ. படப்பொறியின் பெயர்—உத்தி, துத்தி. உ. பாம்பினச்சுப்பல்லின்பெயர்—தட்டம். க. பாம்புயிர்ப்பின்பெயர்—அதட்டம். க.

அன்னத்தின்பெயர்—எகினம், ஓதிமம், மராளம், விகங்கம், வக்கிராங்கம். ரு.
மயிலின்பெயர்—சிகி,ஞமலி,தோகை,சிகாவளம், சிகண்டி, மஞ்ஞை, ஒகரம், மயூரம், பிணிமுகம், கலாபி, நவிரம், பீலி, கேகயம்.கஙு.

மயிற்பீலியின்பெயர்—சரணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், கலாபம், கூழை, தோகை, தொங்கல், தூவி. கூ.
மயிற்குரலின்பெயர்—அகவல், ஆலல், ஏங்கல். ங.
இறகின்முள்ளின்பெயர்—முருந்து.க.அன்னச்சிறகின்பெயர்—தூவி.

கருடன்பெயர்—கலுழன், வைனன், வைனதேயன், பன்னகவைரி, தார்க்கியன், பறவைவேந்தன், உவணம். எ.
சாதகப்புள்ளின்பெயர்—சாரங்கம். க.

எண்காற்புள்ளின்பெயர்—சிம்புள், வாருண்டம், வருடை, சம்பரம், துரோணம், சரபம். சு.
சக்கரவாகப்புள்ளின்பெயர்--நேமிப்புள், கோகம், யானைக்குருகு.

கழுகின்பெயர்—புண்டரம், கங்கம், எருவை, பவனை, உவணம், சகுந்தம். சு.
பருந்தின்பெயர்—சேனம், பாரசிகை, பாறு, கங்கம். ச.
அசுணமாவின்பெயர்—கேகயம். க.

சாருவேயரியேவன்னிதத்தையேசுகமேகிள்ளை
கீரமேசுவாகதந்தான்கிளியவந்திகையுமாகும்
கீரமுங்கிள்ளைதானுங்கிளர்கருங்கிளியினுமம்
சாரமாநிலாமுகிப்பேர்சகோரஞ்செம்போத்துக்குக்கில். (௫௫)

கோகிலங்களகண்டம்மேகோரகைகுயிலின்பேர்தான்
ஆகுமேபிகத்தினோடுபரபுட்டந்தானுமப்பேர்
கூகையுமுலூகமும்போர்க்குடிஞையுங்குராலுங்கோட்டான்
நாகணவாய்ப்புட்பூவைநவிற்றுஞ்சாரிகையுமாமே. (௫௬)

கஞ்சனங்கிகிணியோடுவயவனேகஞ்சரீடம்
விஞ்சுபாரத்துவாசம்வலியனைவிதித்தபேரே
வஞ்சுளன்வயவன்மற்றைவயானென்பகாரிப்பிள்ளை
கஞ்சனங்கயவரயென்பகரிக்குருவிப்பேர்தானே. (௫௭)

சிரல்கவுதம்பொன்வாய்ப்புட்டித்திரிசிச்சிலிப்பேர்
கருதியபெரும்புள்ளோடுகௌசிகமுமன்கூகை
குருகுகாலாயுதம்போர்க்குக்குடமாண்டலைப்புட்
பெருகுவாரணமென்றைந்தும்பேசியகோழியாமே. (௫௮)

குலிங்கமேசடகமேயூர்க்குருவியாம்புலிங்கமும்பேர்
நிலங்குபூழாங்காதம்பநெடியகானங்கோழிப்பேர்
கலிங்கமேகம்புள்வானம்பாடியாங்குறும்பூழ்காடை
இலங்குகோரசமேபுல்லோடிதல்சிவலிவைமுப்பேரே. (௫௯)

சிரவமேகௌதாரிப்பேர்சில்லையேபகண்டையாகும்
மருவியசலாங்குதானேவாய்த்தபொய்யாப்புள்ளாமே
கரடம்வாயசமரிட்டங்கரும்பிள்ளைகொடியேகாகம்
இருடிபிங்கலையேயாந்தைகின்னரமென்பதும்பேர். (௬௦)

கரும்புறாவின்பேர்பாராவதமென்பகபோதமும்பேர்
பொருந்துதூதுணங்கபோதங்களரவம்புறாப்பொதுப்பேர்
பரிந்துகன்மேய்வுகாளபதமேமாடப்புறாவாம்
திருந்தியவுள்ளலுள்ளான்சிதகந்தூக்கணங்குரீஇயே. (௬௧)

கிளியின்பெயர்—சாரு, அரி, வன்னி, தத்தை, சுகம், கிள்ளை, கீரம், சுவாகதம், அவந்திகை. க.
கருங்கிளியின்பெயர்—கீரம், கிள்ளை. உ.
நிலாமுகியின்பெயர்-சகோரம்.க.செம்போத்தின்பெயர்-குக்கில்.க

குயிலின்பெயர்—கோகிலம், களகண்டம், கோரகை, பிகம், பரபுட்டம். ரு.
கோட்டான்பெயர்—கூகை, உலூகம், குடிஞை, குரால். ச.
நாகணவாய்ப்புள்ளின்பெயர்—பூவை, சாரிகை. உ.

வலியன்பெயர்—கஞ்சனம், கிகிணி, வயவன், கஞ்சரீடம், பாரத்துவாசம். ரு.
காரிப்பிள்ளையின்பெயர்—வஞ்சுளன், வயவன், வயான். ௩.
கரிக்குருவியின்பெயர்—கஞ்சனம், கயவாய். உ.

சிச்சிலியின்பெயர்—சிரல், கவுதம், பொன்வாய்ப்புள், தித்திரி. ச.
கூகையின்பெயர்—பெரும்புள், கௌசிகம், ஊமன். ௩.
கோழியின்பெயர்—குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப்புள், வாரணம். ரு.

ஊர்க்குருவியின்பெயர்—குலிங்கம், சடகம், புலிங்கம். ௩.
நிலங்கின்பெயர்—பூழ். க. கானங்கோழியின்பெயர்—காதம்பம். க.
வானம்பாடியின்பெயர்—கலிங்கம், கம்புள். உ.
காடையின்பெயர்—குறும்பூழ். க.
சிவலின்பெயர்—கோரசம், புல், இதல். ௩.

கவுதாரியின்பெயர்—சிரவம். க. பகண்டையின்பெயர்—சில்லை. க.
பொய்யாப்புள்ளின்பெயர்—சலாங்கு. க.
காகத்தின்பெயர்—கரடம், வாயசம், அரிட்டம், கரும்பிள்ளை, கொடி. ரு. ஆர்தையின்பெயர்—இருடி, பிங்கலை, கின்னரம். ௩.

கரும்புறாவின்பெயர்—பாராவதம், கபோதம். உ.
புறாப்பொதுவின்பெயர்—தூதுணம், கபோதம், களரவம். ௩.
மாடப்புறாவின்பெயர்—கன்மேய்வு, காளபதம். உ.
உள்ளான்பெயர்—உள்ளல். க.
தூக்கணங்குருவியின்பெயர்—சிதகம். க.

கருதியகம்புள்சம்பங்கோழியாங்கவுஞ்சமன்றில்
குருகுவண்டானமென்பகொய்யடிநாரையின்பேர்
பெருகியபிதாவேபோதாப்பெருநாரைசிகரியொன்றே
கருநிறநாரைவெள்ளைநாரைசாரசமென்றுமே. (சுஉ)

மன்னுநீர்க்காக்கையர்க்கமற்றுங்காரண்டமும்பேர்
பன்னியகுரண்டங்கொக்காம்வலாகமும்பகமுமப்பேர்
உன்னமேகிராமமற்றையுற்குரோசத்தினோடு
கின்னரமின்னநீரிற்கிளர்ந்தெழுபறவையாமே. (சுங)

அரியளிஞிமிறுமந்தியறுபதஞ்சிலீமுகஞ்சஞ்
சரிகமேசரகமேசஞ்சாளிகஞ்சுரும்புகீடம்
பிரமரமாவேகீதம்பிருங்கமேபிரசம்புள்ளு
வரிகொள்புண்டரீகந்தும்பிமதுபநாலைந்தும்வண்டாம். (சுச)

கரும்புளேகேசவந்தேன்கண்டபெண்வண்டினாமம்
சுரும்பொடுமதுகரங்கள்சொற்றிடுந்தும்பியாண்பேர்
துருஞ்சிலாலாலமென்பசோர்விலஞ்சலிகைவாவல்
தருங்கோபமீயன்மூதாச்சரகமேபிரசந்தேனீ. (சுரு)

சிதடிசில்லிகையேசில்லைசிள்வீடுசிமிலியும்பேர்
பதமுறுசலபம்விட்டிற்பறவையாம்பதங்கமும்பேர்
விதமுறுநுளம்புதானேநிலத்திமின்மினிகச்சோதம்
கொதுகின்பேர்மசகந்துள்ளல்கூறின்மற்றசவலும்பேர். (சுசு)

## பறவையாண் பெண்மரபு.

மயிலெழாலல்லாப்புள்ளின்வகுத்தவாண்சேவலென்ப
மயிலெழாலெனுமிரண்டில்வாய்த்தவாண்போத்ததாகும்
அயர்வுறுகோழிகூகையல்லாப்பெண்ணளகென் * றோதார்
பெயர்பெறுமெல்லாப்புள்ளின்பெண்பெடைபெட்டைபேடை. ()

விகங்கமாசுகியேவீயேவிகிரமேகுடிஞைபக்கி
சகுந்தம்பத்திரிபதங்கந்தாழ்பிணிமுகத்தினோடு
பகர்ந்திடுங்ககமேகோலப்பறவையேபதகம்போகில்
புகழ்ந்திடுகுரீஇமூவைந்தும்புட்பொதுவயானமும்பேர். (சுஅ)

---

* "கோழிகூகையல்லாப்பெண்ணளகென்றோதும்" என்றுபாடஞ்சொல்வாருமுளர். அது தொல்காப்பியப் பொருளதிகாரத்து மரபியலில் "கோழிகூகையாயிரண்டல்லவை, சூழுங்காலையளகெனலமையா" என்னும், ருரு-ஞ் சூத்திரத்திற்கு மாறுபடுதலிற் பொருந்தாதென்க. மயிலின்பெண்ணும் அளகெனப்படும். அது "அப்பெயர்க்கிளவி மயிற்குமுரித்தே" என்னும், ருசு-ஞ் சூத்திரத்தாலறிக.

சம்பங்கோழியின்பெயர்—கம்புள். க.
அன்றிலின்பெயர்—கவுஞ்சம். க.
கொய்யடிநாரையின்பெயர்—குருகு, வண்டானம். உ.
பெருநாரையின்பெயர்—பிதா, போதா. உ.
கருநாரையின்பெயர்-சிகரி.க.வெள்ளைநாரையின்பெயர்-சாரசம்.க.

நீர்க்காக்கையின்பெயர்—அர்க்கம், காரண்டம். உ.
கொக்கின்பெயர்—குரண்டம், வலாகம், பகம். ந.
நீர்வாழ்பறவையின்பெயர்—உன்னம், கிராமம், உற்குரோசம், கின்னரம். ச.

வண்டின்பெயர்—அரி, அளி, ஞிமிறு, மந்தி, அறுபதம், சிலீமுகம், சஞ்சரிகம், சரகம், சஞ்சாளிகம், சுரும்பு, கீடம், பிரமரம், மா, கீதம், பிருங்கம், பிரசம், புள், புண்டரீகம், தும்பி, மதுபம். உ0.

பெண்வண்டின்பெயர்—கரும்புள், கேசவம், தேன். ந.
ஆண்வண்டின்பெயர்—சுரும்பு, மதுகரம், தும்பி. ந.
அருஞ்சிலின்பெயர்-ஆலாலம்.க. வாவலின்பெயர்-அஞ்சலிகை. க.
இந்திரகோபத்தின்பெயர்—ஈயல், மூதா. * உ.
தேனீயின்பெயர்—சரகம், பிரசம். உ.

சிள்வீட்டின்பெயர்—சிதடி, சில்லிகை, சில்லை, சிமிலி. ச.
விட்டிற்பறவையின்பெயர்—சலபம், பதங்கம். உ.
நுளம்பின்பெயர்—கிலத்தி. க.
மின்மினியின்பெயர்—கச்சோதம். க.
கொதுகின்பெயர்—மசகம், துள்ளல், அசவல். ந.

## பறவையாண் பெண்மரபு.

மயிலும் எழாலுமல்லனவாகிய புள்ளினாண்பெயர்—சேவல். க.
மயில் எழாலென்னுமிரண்டினாண்பெயர்—போத்து. க.
கோழிகூகைகளின்பெண்பெயர்—அளகு. க.
பறவைப்பெண்ணின்பெயர்—பெடை, பெட்டை, பேடை. ந.

புட்பொதுவின்பெயர்—விகங்கம், ஆசுகி, வீ, விகிரம், குடிஞை, பக்கி, சகுந்தம், பத்திரி, பதங்கம், பிணிமுகம், கதம், பறவை, பதகம், போகில், குரீஇ, வயானம். கசு.

* ஈயன்மூதா என ஒருபெயராகக் கொள்வாருமுளர்.

சிறகொடுசதனம்வாசஞ்சிறைபிஞ்சங்கூரல்பக்கம்
பறைசதந்தூவிதோகைபத்திரங்குரலேகூழை
இறையெனவுரைத்தமூவைந்தேற்றதுமிறகின்பேரே
அறைதருமரிட்டங்கோசமண்டமேசினையேமுட்டை. (௬௯)

பிள்ளையும்பார்ப்புங்குஞ்சின்பேர்சுச்சுச்சுவவுதுண்டம்
ஒள்ளியவலகுமூக்காமோசனிக்கின்றதென்ப
புள்ளெழச்சிறகடித்துப்புடைத்தலினுமமாகும்
துள்ளுபுள்ளீட்டத்தோகைதுழனியாந்தொழுதிகூட்டம். (௭௦)

கலைசுறாமீனேறென்பகாட்டியமகரமாகும்
செலமுறுயானைமீனேதிமிபெருமீனுமம்
அலைவுறுதிமிங்கிலப்பேரானையைவிழுங்குமீனும்
மலைதிமிங்கிலகிலந்தான்மற்றதைவிழுங்குமீனே. (௭௧)

நலந்தருநந்துசுத்திநாகொடுவளைகம்புக்கோ
டிலங்கியவாரணம்வண்டிடம்புரிவெள்ளைசங்காம்
வலம்புரிநாமந்தானேவைத்தகொக்கரையென்றோதும்
சலஞ்சலம்பணிலமென்றுசாற்றினரேற்றநூலோர். (௭௨)

இப்பியாயிரமேசூழ்ந்ததிடம்புரியென்றகூறும்
ஒப்பில்சங்காயிரஞ்சூழுறுவலம்புரியென்றோதும்
அப்படியதுவுஞ்சூழ்ந்தசலஞ்சலமாகுமற்றைத்
தப்பிலாச்சலஞ்சலங்கள்சார்ந்ததுபாஞ்சசன்னியம். (௭௩)

இடங்கர்சிஞ்சுமாரம்வன்மீனெழிற்கராமுதலையின்பேர்
கொடுந்திறற்கராமற்றாண்பேர்கூர்மமேயுறுப்படக்கி
ஒடுங்குகச்சபமேயாமைகமடமுமுரைக்கற்பாற்றாம்
மடங்கியதுளிபெண்ணுமைமலங்கின்பேர்நூறையென்ப. (௭௪)

ஏரலோடெருந்தேயூரல்கிளிஞ்சிலாமிறவிறான்மீன்
ஆரலேயாராலின்பேர்கெண்டைமீன்சபரஞ்சேலாம்
ஊர்கருநந்தாநத்தைநாகுமாமுருவேயட்டை
நீருறுமயிலைமற்சநெடும்புழன்மீன்பொதுப்பேர். (௭௫)

இறகின்பெயர்—சிறகு, சதனம், வாசம், சிறை, பிஞ்சம், கூரல், பக்கம், பறை, சதம், தூவி, தோகை, பத்திரம், குரல், கூழை, இறை. கடு.
முட்டையின்பெயர்—அரிட்டம், கோசம், அண்டம், சினை. ச.

பறவைக்குஞ்சின்பெயர்—பிள்ளை, பார்ப்பு. உ.
பறவைமூக்கின்பெயர்—சுச்சு, சுவவு, துண்டம், அலகு. ச.
புட்சிறகடித்துப்புடைத்தலின்பெயர்—ஓசனித்தல். க.
புள்ளீட்டத்திரேளைசையின்பெயர்—துழனி. க.
பறவைக்கூட்டத்தின்பெயர்—தொழுதி. க.

மகரமீனின்பெயர்—கலை, சுறு, மீனேறு. ந.
பெருமீனின்பெயர்—யானைமீன், திமி. உ.
யானைமீனைவிழுங்குமீனின்பெயர்—திமிங்கிலம். க.
திமிங்கிலத்தைவிழுங்குமீனின்பெயர்—திமிங்கிலகிலம். க.

சங்கின்பெயர்—நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், வண்டு, இடம்புரி, வெள்ளை. க0.
வலம்புரிச்சங்கின்பெயர்—கொக்கரை. க.
சலஞ்சலத்தின்பெயர்—பணிலம். க.

இடம்புரி—இப்பியாயிரஞ்சூழ்ந்தது.
வலம்புரி—இடம்புரிச்சங்காயிரஞ்சூழ்ந்தது.
சலஞ்சலம்—வலம்புரியாயிரஞ்சூழ்ந்தது.
பாஞ்சசன்னியம்—சலஞ்சலங்களாயிரஞ்சூழ்ந்தது.

முதலையின்பெயர்—இடங்கர், சிஞ்சுமாரம், வன்மீன், கராம். ச.
ஆண்முதலையின்பெயர்—கராம். க.
ஆமையின்பெயர்—கூர்மம், உறுப்படக்கி, கச்சபம், கமடம். ச.
பெண்ணாமையின்பெயர்—துளி. க.
மலங்கின்பெயர்—நூறை. க.

கிளிஞ்சிலின்பெயர்—ஏரல், எருந்து, ஊரல். ந.
இருன்மீனின்பெயர்—இறவு. க.
ஆரான்மீனின்பெயர்—ஆரல். க.
கெண்டைமீனின்பெயர்—சபரம், சேல். உ.
நத்தையின்பெயர்--கருநந்து, நாகு. உ. அட்டையின்பெயர்--உரு. க.
மீன்பொதுப்பெயர்—மயிலை, மற்சம், புழல். ந.

புள்ளியேகெவுளிபல்லிபோற்றுங்கோகிலமுமப்பேர்
நொள்ளைநாகரவண்டின்பேருலூதையேநோன்சிலம்பி
ஒள்ளியபிலஞ்சுலோபம்பிபீலிகையூரெறும்பாம்
தெள்ளுநாங்கூழ்பூநாகஞ்சிதலையேகறையான்செல்லே. (எசு)

நளிவிடந்தெறுக்காறுட்டணுட்டியவிருச்சிகந்தேள்
களவனேகுளிரநள்ளிகவைத்தாள்கர்க்கடகஞெண்டே
உளுவுசுவாகுமென்பவுற்றமண்டூகந்தேரை
தளரரிநுணலைநீகந்தவளையாம்பேகமும்பேர். (எஎ)

கிருமியேபுழுப்பொட்டும்பேர்கீடங்கோற்புழுவுலண்டாம்
பிரசங்கோற்றேனிருலேபேசியதேனின்கூடாம்
விரவியவிலங்கினீட்டம்விருத்தமோரெழுபத்தெட்டும்
வருமுறையுரைத்தான்வீரைமன்னன்மண்டலவன்றனே. (எஅ)

விலங்கின்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ. விருத்தம் – உஅரு.

நான்காவது

## மரப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

திருக்கிளர்தேவர்கோமானேவலிற்குபேரன்செய்த
விருப்புறுபொன்னெயிற்குள்விளங்கவெண்ணெழுத்திரண்டும்
பரப்பியவாதிமூர்த்திபங்கயப்பாதம்போற்றி
மரப்பெயர்த்தொகுதிதன்னைவருமுறைகூறலுற்றும். (க)

சந்தானம்வேண்டிற்றெல்லாந்தருமரிசந்தனம்பூ
மந்தாரம்பாரிசாதங்கற்பகமற்றுரைந்தாம்
சந்தாரஞ்சாந்துசாந்தஞ்சந்திரதிலகத்தோடு
வந்தேறுபடீரம்பூசுமலயசஞ்சந்தனப்பேர். (உ)

பல்லியின்பெயர்—புள்ளி; கெவுளி, கோகிலம். ஙூ.
நாகரவண்டின்பெயர்-சொள்ளை.க. சிலம்பியின்பெயர்-உலூதை.க.
எறும்பின்பெயர்—பிலஞ்சுலோபம், பிபீலிகை. உ.
நாங்கூழின்பெயர்—பூநாகம். க.
செல்லின்பெயர்—சிதலை, கறையான். உ.

தேளின்பெயர்-நளிவிடம்*, தெறுக்கால், துட்டன்,விருச்சிகம்.ச.
ஞெண்டின்பெயர்—களவன், குளிரம், நள்ளி, கவைத்தாள், கர்க்கடகம். ரு. உளுவின்பெயர்—உசு. க.
தவளையின்பெயர்—மண்டூகம்,தேரை,அரி,நுணலை,பீகம்,பேகம். சு.

புழுவின்பெயர்—கிருமி, பொட்டு. உ.
உலண்டின்பெயர்—கீடம், கோற்புழு. உ.
கோற்றேனின்பெயர்—பிரசம். க.
தேன்கூட்டின்பெயர்—இறால். க.

# பெயர்ப்பிரிவு.

இ-ள். திருக் கிளர் தேவர் கோமான் ஏவலில் குபேரன் செய்த விருப்பு உறு பொன் எயிற்குள்-அழகு நிறைந்த தேவர்க்கரசனாகிய இந்திரனது ஏவலினாலே குபேரன் இயற்றிய விருப்பம் பொருந்திய பொன்மதிற்குள் (எழுந்தருளியிருந்துகொண்டு)—எண் எழுத்து இரண்டும் விளங்கப் பரப்பிய - கணிதமும் இலக்கணமுமாகிய இரண்டையும் விளங்கும்படி பரப்பிய—ஆதிமூர்த்தி பங்கயப் பாதம் போற்றி - அருகக்கடவுளுடைய செந்தாமரை மலர்போலும் திருவடிகளைத் துதித்து,—மரப்பெயர்த் தொகுதி தன்னை வரும் முறை கூறலுற்றும் - மரப்பெயர்த்தொகுதியை வருமுறையே (யாம்) சொல்லலுற்றும். எ - று.

ஐந்தருவாவன—சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். ரு.
சந்தனமரத்தின்பெயர்—சந்து, ஆரம், சாந்து, சாந்தம், சந்திரதிலகம், படீரம், மலயசம். எ.

---

* நளி, விடம் என இருபெயராகக் கொள்வாருமுளர்.

மகிழமக்கற்பகத்தில்வளர்கொடிகாமவல்லி
அகருவேகாகதுண்டமகிலென்பழூழிலும்பேர்
பகரும்புன்காலியோடுபாடலம்பாதிரிப்பேர்
வகுளமேயிலஞ்சியென்பமகிழாங்கேசரமுமாமே. (௩)

மன்னியகோங்கினுமம்வருந்தருமோற்பலம்பூங்
கன்னிகாரமுமாமென்பசம்பகஞ்சண்பகப்பேர்
புன்னைபுன்னாகநாகம்வழைசுரபுன்னைப்பேரே
நன்னிறநரந்தநாரநாரங்கநாரத்தைப்பேர். (௪)

குருகுநாகரிவாசந்திமாதவிகுருக்கத்திப்பேர்
தருசிறுசண்பகப்பேர்சாதிமாலதியுமாகும்
கருமுகைபித்திகைப்பேர்திலகமஞ்சாடிகாட்டும்
மருகுதான்மகரவாழைவனமல்லிகைப்பேர்மௌவல். (௫)

மல்லிகையேபூருண்டிமாலதியனங்கமும்பேர்
அல்லிபுன்காலிகாசையஞ்சனிபூவைகாயாக்
குல்லையேசெச்சைவெட்சிகொந்தார்சிந்தூரமும்பேர்
குல்லைபூந்துளவினோடுதுழாய்வனந்துளசிகூறும். (௬)

செங்கோடுபஞ்சரந்தான்செருந்தியேபொருந்திநிற்கும்
அங்கோலஞ்சேவழிஞ்சில்சேமரமென்றுமாகும்
கொங்காருந்தருக்கமென்பகுங்குமமரவமும்பேர்
அங்கானவனிச்சந்தானேயருப்பலநறவஞ்சுள்ளி. (௭)

கரவீரங்கவீரமற்றைக்கணவீரமலரியின்பேர்
விரைமேவுதமனகந்தான்மேவியமருக்கொழுந்தே
இருவேலிமூலகந்தம்வேரிபீதகமுமேற்கும்
மருமேவுமிருவாட்சிக்குமயிலையுமனங்கமும்பேர். (௮)

முண்டகமுடங்கல்கைதைமுசலியேமடியேதாழை
கண்டல்கேதகையுமப்பேர்பறிவைபட்டிகையேகாட்டும்
வண்டுளர்வலம்புரிப்பேர்நந்தியாவர்த்தமென்ப
விண்டபூஞ்செவ்வரத்தமேவுமந்தாரமாமே. (௯)

தாலமேபெண்ணைபுல்லுத்தாளிபுற்பதிபனைப்பேர்
தாலமேகூந்தற்பூகந்தருகந்திபூகம்பூக்கம்
சாலநீள்கமுகுமுப்பேர்சாற்றிடுந்துவர்க்காய்பாகு
கோலமென்றிந்தமூன்றுங்குறித்தபாக்கிற்குநாமம். (௧௦)

கற்பகதருவிற்படர்கொடியின்பெயர்—காமவல்லி. ௧.
அகிலின்பெயர்—அகரு, காகதுண்டம், பூழில். ௩.
பாதிரிமரத்தின்பெயர்—புன்காலி, பாடலம். ௨.
மகிழமரத்தின்பெயர்—வகுளம், இலஞ்சி, கேசரம். ௩.

கோங்குமரத்தின்பெயர்—தருமோற்பலம், கன்னிகாரம். ௨.
சண்பகமரத்தின்பெயர்—சம்பகம். ௧.
புன்னைமரத்தின்பெயர்—புன்னாகம், நாகம். ௨.
சுரபுன்னையின்பெயர்—வழை. ௧.
நாரத்தையின்பெயர்—நரந்தம், நாரம், நாரங்கம். ௩.

குருக்கத்தியின்பெயர்—குருகு, நாகரி, வாசந்தி, மாதவி. ௪.
சிறுசண்பகத்தின்பெயர்—சாதி, மாலதி. ௨.
பித்திகையின்பெயர்-கருமுகை.௧. மஞ்சாடியின்பெயர்-திலகம். ௧.
மகரவாழையின்பெயர்—மருகு. ௧.
வனமல்லிகையின்பெயர்—மௌவல். ௧.

மல்லிகையின்பெயர்—பூருண்டி, மாலதி, அனங்கம். ௩.
காயாவின்பெயர்—அல்லி, புன்காலி, காசை, அஞ்சனி, பூவை. ௫.
வெட்சியின்பெயர்—குல்லை, செச்சை, சிந்தூரம். ௩.
துளசியின்பெர்—குல்லை, துளவு, துழாய், வனம். ௪.

செருந்திமரத்தின்பெயர்—செங்கோடு, பஞ்சரம். ௨.
அழிஞ்சிலின்பெயர்—அங்கோலம், சே, சேமரம். ௩.
குங்குமமரத்தின்பெயர்—துருக்கம், மரவம். ௨.
அனிச்சமரத்தின்பெயர்—அருப்பலம், நறவம், சுள்ளி. ௩.

அலரியின்பெயர்—கரவீரம், கவீரம், கணவீரம். ௩.
மருக்கொழுந்தின்பெயர்—தமனகம். ௧.
இருவேலியின்பெயர்—மூலகந்தம், வேரி, பீதகம். ௩.
இருவாட்சியின்பெயர்—மயிலை, அனங்கம். ௨.

தாழையின்பெயர்—முண்டகம், முடங்கல், கைதை, முசலி, மடி, கண்டல், கேதகை. ௭. பட்டிகையின்பெயர்—பறிவை. ௧.
நந்தியாவர்த்தத்தின்பெயர்—வலம்புரி. ௧.
செவ்வரத்தத்தின்பெயர்—மந்தாரம். ௧.

பனையின்பெயர்—தாலம், பெண்ணை, புல், தாளி, புற்பதி. ௫.
கூந்தற்பூகத்தின்பெயர்—தாலம். ௧.
கமுகின்பெயர்—கந்தி, பூகம், பூக்கம். ௩.
பாக்கின்பெயர்—துவர்க்காய், பாகு, கோலம். ௩.

பனசமேவருக்கைபாகல்பலவிவைபலாவின்பேரே
அணையவீரப்பலாவேயாசினியென்பதாகும்
வினவியமாந்திசூதமேவுமாமிரமேகொக்கே
சினைபடுமாழைமாவாஞ்சேதாரந்தேமாவின்பேர். (௧௧)

தாழைதென்னாளிகேரமிலாங்கலிதாந்தெங்கின்பேர்
குழூநெய்யரிபன்னாடைசொல்லியநாரியும்பேர்
வாழையேகதலியாகுமற்றரம்பையுமதன்பேர்
வேழமேகன்னலிக்குமென்கழைகரும்புநாற்பேர். (௧௨)

காம்புபாதிரிமுடங்கல்கழைபணைவிண்டுநேமி
தூம்புவேய்தட்டைமுந்தூழ்துளைகிளைமுளையேவேணு
ஆம்பல்கீசகம்வேல்வேரலரியமைதிகிரிவேழம்
மேம்படுவரைமூவெட்டுமூங்கிலாம்வெதிருமப்பேர். (௧௩)

வடமுடனியக்குரோதம்பூதங்கான்மரம்வானோங்கிப்
படருந்தொன்மரமேகோளிபழுமரமாலின்பேரே
குடசம்வெட்பாலையென்பகிரிமல்லிகையுமேகூறும்
உடையென்பகுடைவேலாகுமுழுகரஞ்சகமேபுன்கு. (௧௪)

விரைசெறிசெயலைபிண்டிமேவுகாகோளிமூன்றும்
அருகனெம்மானிருந்தேயறம்பகரசோகின்பேராம்
அரசின்பேர்சுவலைகுஞ்சராசனமச்சுவத்தம்
திருமரம்பணையேபோதிகணவம்பிப்பலமும்செப்பும். (௧௫)

சிந்தகமாமிலஞ்சிந்தூரமேயெகின்புளிப்பேர்
திந்திடீகமுமப்பேரேதேக்கின்பேர்சாகஞ்சாதி
வந்தெழுமிதழிதாமமதலையேகடுக்கைகொன்றை
முந்துகிஞ்சுகத்தினோடுகவிருமுண்முருக்கினாமம். (௧௬)

சம்புநேரேடுநாவல்சாதேவங்குழிநாவற்பேர்
நிம்பமேவேம்பினாமரீள்பிசுமர்த்தமும்பேர்
சம்பீரமுருகினோடுசதாபலமெலுமிச்சைப்பேர்
அம்புவியிலிகுசத்தோடருணஞ்சம்பளமுநாட்டும். (௧௭)

அதவுடனுதும்பரங்கள்கோளியேயதமேயத்தி
இதமுறுமாழைசிஞ்சமெகின்மூன்றும்புளிமாவின்பேர்
வதரிகோற்கொடியிலந்தைவளர்கோலிகுவலியும்பேர்
விதமுறுகோலங்கோண்டைவிளவிலக்கனியின்பேரே. (௧௮)

பலாமரத்தின்பெயர்—பனசம், வருக்கை, பாகல், பலவு. ௪
ஈரப்பலாவின்பெயர்—ஆசினி. ௧
மாமரத்தின்பெயர்—மாந்தி, சூதம், ஆமிரம், கொக்கு, மாழை. ௫
தேமாவின்பெயர்—சேதாரம்,[சககாரம்] ௧

தெங்கின்பெயர்—தாழை, தென், நாளிகேரம், இலாங்கலி. ௪
பன்னாடையின்பெயர்—நெய்யரி, நாரி. ௨
வாழையின்பெயர்—கதலி, அரம்பை. ௨
கரும்பின்பெயர்—வேழம், கன்னல், இக்கு, கழை. ௪

மூங்கிலின்பெயர்—காம்பு, பாதிரி, முடங்கல், கழை, பணை, விண்டு, நேமி, தூம்பு, வேய், தட்டை, முந்தூழ், தூளை, கிளை, மூளை, வேணு, ஆம்பல், கீசகம், வேல், வேரல், அரி, அமை, திகிரி, வேழம், வரை, வெதிர். ௨௫

ஆலமரத்தின்பெயர்—வடம், நியக்குரோதம், பூதம், கான்மரம், தொன்மரம், கோளி, பழுமரம். ௭
வெட்பாலையின்பெயர்—குடசம், கிரிமல்லிகை. ௨
குடைவேலின்பெயர்-உடை.௧.புன்கமரத்தின்பெயர்-கரஞ்சகம்.௧

அசோகமரத்தின்பெயர்—செயலை, பிண்டி, காகோளி. ௩
அரசமரத்தின்பெயர்—சுவலை, குஞ்சராசனம், அச்சுவத்தம், திருமரம், பணை, போதி, கணவம், பிப்பலம். ௮

புளியமரத்தின்பெயர்—சிந்தகம், ஆமிலம், சிந்தூரம், எகின், திந்திடகம். ௫ தேக்கின்பெயர்—சாகம், சாதி. ௨
கொன்றையின்பெயர்—இதழி, தாமம், மதலை, கடுக்கை. ௪
முண்முருக்கின்பெயர்—கிஞ்சுகம், கவிர். ௨

நாவலின்பெயர்-சம்பு,நேரேடு.௨.குழிநாவலின்பெயர்-சாதேவம்௧
வேம்பின்பெயர்—நிம்பம், பிசுமர்த்தம். ௨
எலுமிச்சையின்பெயர்—சம்பீரம், முருகு, சதாபலம், இலிகுசம், அருணம், சம்பளம். ௬

அத்திமரத்தின்பெயர்—அதவு, உதும்பரம், கோளி, அதம். ௪
புளிமாவின்பெயர்—மாழை, சிஞ்சம், எகின். ௩
இலந்தையின்பெயர்—வதரி, கோற்கொடி, கோலி, குவலி. ௩
இலந்தைக்கனியின்பெயர்—கோலம், கோண்டை. ௨

மாதுளமாதுளுங்கங்கழுமுளேமாதுளைப்பேர்
தாதுமாதுளையினுமந்தாடிமமென்றேசாற்றும்
சாதிவேத்திரமேசூரல்சாற்றியபிரம்புமுப்பேர்
தாதகியாத்தியாரேசல்லகியெல்லாமொன்றும். (கசு)

சில்லமேயில்லந்தேற்றுஞ்சிரீடமேபாண்டில்வாகை
வில்லமாலூரமேகூவிளமிவைவில்வப்பேரே
புல்லியபசுநாவிட்டில்புக்கிலைவபராயின்பேரே
பல்லிணர்க்கிலுகிலுப்பைபகன்றையாமுலவையோடை. (உ0)

குரவகமென்பவாடாக்குறிஞ்சியாங்குரண்டகந்தான்
பெருகியகுறிஞ்சியாகும்பேரீந்தின்பேர்கர்ச்சூரங்
குரவமேகோட்டமென்பமழைவண்ணக்குறிஞ்சிபாணம்
தருகரமஞ்சரிப்பேர்சாற்றுநாயுருவியாமே. (உக)

தளவுமாகதியேமௌவல்யூதிகைமுல்லைசாற்றும்
களவென்பகளாவினுமங்கதிரமேகருங்காலிப்பேர்
விளவொடுகபித்தம்வெள்ளில்விளாக்கடிப்பகையினோடு
விளையுமையவிசித்தார்த்தம்வெண்சிறுகடுகிம்முப்பேர். (உஉ)

மருதுபூதவத்தினோடுமற்றருச்சுனமுமேற்கும்
பெருகியகணியும்பீதசாலமுந்திமிசும்வேங்கை
திருமிகுமதுரசங்கோத்தனியேமுந்திரிகையாகும்
வருமதிமதுரம்யட்டிமதுகமேயதிங்கமென்ப. (உங)

காந்தள்செங்காந்தள்பற்றையிலாங்கலிதோன்றியும்பேர்
காந்துகங்கோடல்கோடைகருதுவெண்காந்தளாகும்
பூந்துணர்ப்பலாசுதானேபுனமுருக்கின்பேரென்ப
சாய்ந்தெழுசமியேவன்னிநுணாவின்பேர்தணக்குத்தானே. (உச)

குந்தமேகுருந்தமென்பகுமிழ்கூம்பல்குஞ்சங்குன்றி
இந்துளமராகதம்பமியைந்தநீபங்கடம்பாம்
சிந்துவாரந்நிர்க்குண்டிசெப்பில்வெண்ணொச்சியாகும்
தந்தசத்திக்கொடிப்பேர்தாடிமஞ்சந்தானுமே. (உரு)

அரிதகிபத்தியங்கள்கடுவேயாமலகநெல்லி
கருதியதான்றிதானேகலித்துருமந்தானாகும்
பரவுமாகதிகாமன்றிப்பலியென்பகலினியும்பேர்
உருளரிசிப்பேர்கொத்துமலியெனவுரைக்கலாமே. (உசு)

மாதுளையின்பெயர்—மாதுளம், மாதுளுங்கம், கழுமுள். ௩.
தாதுமாதுளையின்பெயர்—தாடிமம். ௧.
பிரம்பின்பெயர்—சாதி, வேத்திரம், சூரல். ௩.
ஆத்தியின்பெயர்—தாதகி, ஆர், சல்லகி. ௩.

தேற்றுமரத்தின்பெயர்—சில்லம், இல்லம். ௨.
வாகைமரத்தின்பெயர்—சிரீடம், பாண்டில். ௨.
வில்வமரத்தின்பெயர்—வில்லம், மாலூரம், கூவிளம். ௩.
பராய்மரத்தின்பெயர்—பசுநா, விட்டில், புக்கு. ௩.
கிலுகிலுப்பையின்பெயர்-சகன்றை.௧.உடையின்பெயர்-உலவை.௧.

வாடாக்குறிஞ்சியின்பெயர்-குரவகம்.௧. குறிஞ்சியின்பெயர்—குரண்டகம். ௧. பேரீந்தின்பெயர்-கர்ச்சூரம். ௧. கோட்டத்தின் பெயர்—குரவம். ௧. மழைவண்ணக்குறிஞ்சியின்பெயர்—பாணம். ௧. நாயுருவியின்பெயர்—கரமஞ்சரி. ௧.

முல்லையின்பெயர்—தளவு, மாகதி, மௌவல், யூதிகை. ௪.
களாவின்பெயர்—களவு. ௧. கருங்காலியின்பெயர்—கதிரம். ௧.
விளாவின்பெயர்—விளவு, கபித்தம், வெள்ளில். ௩.
வெண்கடுகின்பெயர்—கடிப்பகை, ஐயவி, சித்தார்த்தம். ௩.

மருதமரத்தின்பெயர்—பூதவம், அருச்சுனம். ௨.
வேங்கைமரத்தின்பெயர்—கணி, பீதசாலம், திமிசு. ௩.
முந்திரிகையின்பெயர்—மதுரசம், கோத்தனி. ௨.
அதிமதுரத்தின்பெயர்—யட்டி, மதுகம், அதிங்கம். ௩.

செங்காந்தளின்பெயர்--காந்தள், பற்றை, இலாங்கலி, தோன்றி. ௪.
வெண்காந்தளின்பெயர்—காந்துகம், கோடல், கோடை. ௩.
புனமுருக்கின்பெயர்—பலாசு. ௧.
வன்னியின்பெயர்—சமி. ௧. நுணாவின்பெயர்—தணக்கு. ௧.

குருந்தமரத்தின்பெயர்—குந்தம். ௧.
குமிழின்பெயர்—கூம்பல். ௧. குன்றியின்பெயர்—குஞ்சம். ௧.
கடம்பின்பெயர்—இந்துளம், மரா, கதம்பம், நீபம். ௪.
வெண்ணொச்சியின்பெயர்—சிந்துவாரம், நிர்க்குண்டி. ௨.
சத்திக்கொடியின்பெயர்—தாடிமஞ்சம். ௧.

கடுமரத்தின்பெயர்—அரிதகி, பத்தியம். ௨.
நெல்லியின்பெயர்-ஆமலகம்.௧.தான்றியின்பெயர்-கலித்துருமம்.௧.
திப்பலியின்பெயர்—மாகதி, காமன், கலினி. ௩.
கொத்துமலியின்பெயர்—உருளரிசி. ௧.

கன்னிகாக்கணமிரண்டுங்கருவிளைகிகிணியும்பேர்
முன்னமேதுரிஞ்சிலின்பேர்மொழிந்தசீக்கிரியுமாகும்
மன்னியவாடாதோடைவாசையென்றறையலாமே
பன்னல்கார்ப்பாசமின்னபருத்தியின்பெருத்தநாமம். (௨௭)

இத்தியேசுவியிரத்தியிரத்திரியிறலியாகும்
சித்திரகம்மேரண்டஞ்சிறந்தவாமணக்கினாமம்
வைத்திடுமிருப்பைதானேமதுகமாங்குலிகமும்பேர்
கைத்தகோடரமேகாளங்காஞ்சிரைமுட்டியெட்டி. (௨௮)

செங்கருங்காலிநாமஞ்சிறுமாரோடந்தானாகும்
தங்கியசாலஞ்சுள்ளிமராமரமாவேயாச்சா
பொங்கர்சான்மலியிரேவுபூரணியிலவமும்பேர்
வங்கமேவழுதலைப்பேர்வழுதுணையென்றுமாமே. (௨௯)

கழலினாமங்கர்ச்சூரங்கழற்காயேகழங்குமற்று
முழலுமாங்கற்றாழைப்பேர்முதிர்விலாக்குமரிகன்னி
இழைவுறுபுலிதொடக்கியிண்டுவாமீகையீங்கை
உழிஞையேசிறுபூளைப்பேருன்மத்தமூமத்தைப்பேர். (௩0)

அச்சமேமுனிகரீரமகத்தியாமெருக்கருக்கம்
பச்சிலைமரந்தமாலம்பசும்பிடியென்றும்பேரே
சுச்சுவேசுண்டியென்பசமங்கையேவறட்சுண்டிப்பேர்
வச்சிராங்கங்கண்டீர்வம்வச்சிரஞ்சதுரக்கள்ளி. (௩௧)

பல்லிணர்க்குளவிதானேமலைப்பச்சைபலினிஞாழல்
சில்லியேமேகநாதஞ்சாகினிசிறுகீரைப்பேர்
சொல்லியசகுடஞ்சேம்பாஞ்சூழ்ந்தநாளிகமேவள்ளை
நல்லநந்தைப்பேர்கொத்தானறுவிலியலியென்றாமே. (௩௨)

திரிபுரிசாறடைப்பேர்சிறந்தகூதளங்கூதாளி
விரவியவுருவாரந்தான்வெள்ளரிவிளங்குநாமம்
கருதுகக்கரிவாலுங்கிகண்டுதிகாஞ்சொறிப்பேர்
பரவுமஞ்சிகமேதாளிபகன்றையாஞ்சிவேலைதானே. (௩௩)

ஏலமாந்துடியோடாஞ்சியிரண்டுமேயிசங்கினுக்குக்
கோலுமுத்தாபலம்பேர்குண்டலியென்றுமாகும்
கூலமேகாரவல்லிகூறியபாகலின்பேர்
பாலையின்பேர்சீவந்திசீவனியென்றும்பன்னும். (௩௪)

கருவிளையின்பெயர்—கன்னி, காக்கணம், கிகிணி. ௩.
துரிஞ்சிலின்பெயர்—முன்னம், சீக்கிரி. உ.
ஆடாதோடையின்பெயர்—வாசை. க.
பருத்தியின்பெயர்—பன்னல், கார்ப்பாசம். உ.

இத்தியின்பெயர்—சுவி, இரத்தி, இரத்திரி, இறலி. ச.
ஆமணக்கின்பெயர்—சித்திரகம், ஏரண்டம். உ.
இருப்பையின்பெயர்—மதுகம், குலிகம். உ.
எட்டியின்பெயர்—கோடரம், காளம், காஞ்சிரை, முட்டி. ச.

செங்கருங்காலியின்பெயர்—சிறுமாரோடம். க.
ஆச்சாமரத்தின்பெயர்—சாலம், சுள்ளி, மராமரம், ஆ. ச.
இலவமரத்தின்பெயர்—பொங்கர், சான்மலி, பூரணி. ௩.
வழுதலையின்பெயர்—வங்கம், வழுதுணை. உ.

கழற்கொடியின்பெயர்—கர்ச்சூரம். க. கழற்காயின்பெயர்—கழங்கு, முழல். உ. கற்றாழையின்பெயர்—குமரி, கன்னி. உ.
புலிதொடக்கியின்பெயர்—இண்டு. க. ஈகையின்பெயர்—ஈங்கை. க.
சிறுபூளையின்பெயர்-உழிஞை. க. ஊமத்தையின்பெயர்-உன்மத்தம்.

அகத்தியின்பெயர்—அச்சம், முனி, கரீரம். ௩. எருக்கின்பெயர்—அருக்கம். க. பச்சிலைமரத்தின்பெயர்—தமாலம், பசும்பிடி. உ.
சுண்டியின்பெயர்—சுச்சு. க. வறட்சுண்டியின்பெயர்—சமங்கை. க.
சதுரக்கள்ளியின்பெயர்—வச்சிராங்கம், கண்டீர்வம், வச்சிரம். ௩.

மலைப்பச்சையின்பெயர்—குளவி. க. ஞாழலின்பெயர்—பலினி. க.
சிறுகீரையின்பெயர்—சில்லி, மேகநாதம், சாகினி. ௩.
சேம்பின்பெயர்—சகுடம். க. வள்ளையின்பெயர்—நாளிகம். க.
கொத்தான்பெயர்—நந்தை. க. நறுவிலியின்பெயர்—அலி. க.

சாறடையின்பெயர்—திரிபுரி. க. கூதாளியின்பெயர்—கூதளம். க.
வெள்ளரியின்பெயர்—உருவாரம். க.
கக்கரியின்பெயர்-வாலுங்கி. க. காஞ்சொறியின்பெயர்-கண்டூதி. க.
தாளியின்பெயர்—மஞ்சிகம். க. சிவேதையின்பெயர்-பகன்றை. க.

உ.
ஏலத்தின்பெயர்—துடி, ஆஞ்சி. உ.
இசங்கின்பெயர்—முத்தாபலம், குண்டலி. உ.
பாகலின்பெயர்—கூலம், காரவல்லி. உ.
பாலைமரத்தின்பெயர்—சீவந்தி, சீவனி.

விம்பமேதொண்டைகொவ்வைபசிரிபாவிரிதுரோணம்
தும்பையேயலாபுமற்றைச்சுரைநூழில்கொடிக்கொத்தானும்
கொம்பர்சேர்முருங்கையேசிக்குருவடகிலைக்கறிப்பேர்
பம்பியபீரம்பீர்க்காம்படலிகைபெரும்பீர்க்காமே. (௩௫)

பரவுபாற்சொற்றிநாமம்பாயசமென்றுகூறும்
விரவியவமுதவல்லிமேயசீவந்திசீந்தி
மருவியவிலதைவள்ளிவல்லிவண்கொடிமுப்பேராம்
சரமொடுகொசைகாசஞ்சாற்றிடுநாணலின்பேர். (௩௬)

நறியதாம்பூலவல்லிதாம்பூலிநாகவல்லி
செறிதருமிலைக்கொடிப்பேர்திரையன்மெல்லிலையுமாகும்
கறியொடுமரீசங்காயங்கலினைகோளகந்திரங்கல்
செறிதருமிளகினுமமிரியலுஞ்செப்பலாமே. (௩௭)

வரிசொல்லுவிரீகிசாலிவளர்நெல்லாம்யவமுமாகும்
தெரியுநன்னெல்லினோடுசெஞ்சாலிசெந்நெல்லின்பேர்
பரியும்பைங்கூழ்பசும்புல்பயிர்கதிர்குரலோடேனல்
பெருகியவிளஞ்சூல்பீட்டைபீளிளங்கதிரின்பேரே. (௩௮)

பழுதுறுபதரின்பேரேபதடியாம்போரேசும்மை
பொழியத்தூற்றாதநெல்லின்பொலியேபொங்கழியென்றாகும்
தழுவுகோதுமையேகோதிதண்டுலமரிசிதானே
வழுதுலைப்பலாலம்வைக்கோன்மலைநெல்லைவனமேவைக்கும். ()

தந்தவேயரிசிதோரைகுளநெல்லுத்தானீவாரம்
செந்தினைகவலைகம்பாந்தினையின்பேரெனலென்ப
யைந்தினைதானுமேனல்பகர்ந்திடுங்கருந்தினைப்பேர்
அந்தமாமிறடிகங்கேயருவியுமிருவியுந்தாள். (௪0)

துவரையாடகமேயாமஞ்சூரமேகடலையின்பேர்
அவரைசிக்கடியேசிம்பையழுந்தியவுழுந்துமாடம்
கவர்தருபயறுமுற்கங்காணமேகுலத்தங்கொள்ளாம்
இவையெலாமுதிரைகூலமிதைகாராமணியினுமம். (௪௧)

கொவ்வையின்பெயர்—விம்பம், தொண்டை. உ.
பசிரியின்பெயர்—பாவிரி. க. தும்பையின்பெயர்—துரோணம். க.
சுரையின்பெயர்-அலாபு. க. கொடிக்கொத்தான்பெயர்-நூழில். க.
முருங்கையின்பெயர்-சிக்குரு. க. இலக்கறியின்பெயர்-அடகு. க.
பீர்க்கின்பெயர்—பீரம். க. பெரும்பீர்க்கின்பெயர்—படலிகை. க.

பாற்சொற்றியின்பெயர்—பாயசம். க.
சீந்திக்கொடியின்பெயர்—அமுதவல்லி, சீவந்தி. உ.
கொடியின்பெயர்—இலதை, வள்ளி, வல்லி. ௩.
நாணலின்பெயர்—சரம், கர்சை, காசம். ௩.

வெற்றிலைக்கொடியின்பெயர்—தாம்பூலவல்லி, தாம்பூலி, நாகவல்லி, திரையல், மெல்லிலை. ௫.
மிளகின்பெயர்—கறி, மரீசம், காயம், கலினை, கோளகம், திரங்கல், மிரியல். எ.

நெல்லின்பெயர்—வரி, சொல், விரீகி, சாலி, யவம். ௫.
செந்நெல்லின்பெயர்—நன்னெல், செஞ்சாலி. உ.
பயிரின்பெயர்—பைங்கூழ், பசும்புல். உ.
கதிரின்பெயர்-குரல், ஏனல். உ. இளஞ்சூலின்பெயர்-பீட்டை. க.
இளங்கதிரின்பெயர்—பீள். க.

பதரின்பெயர்—பதடி. க. நெற்போரின்பெயர்—சும்மை. க.
தூற்றுதநெற்பொலியின்பெயர்—பொங்கழி. க.
கோதுமையின்பெயர்—கோதி. க. அரிசியின்பெயர்—தண்டுலம். க.
வைக்கோலின்பெயர்—வழுது, வை, பலாலம். ௩.
மலைநெல்லின்பெயர்—ஐவனம். க.

வேயரிசியின்பெயர்-தோரை. க. குளநெல்லின்பெயர்-நீவாரம். க.
கம்பின்பெயர்—செந்தினை, கவலை. உ.
தினையின்பெயர்—ஏனல். க. பைந்தினையின்பெயர்—ஏனல். க.
கருந்தினையின்பெயர்—இறடி, கங்கு. உ.
தினைத்தாளின்பெயர்—அருவி, இருவி. உ.

துவரையின்பெயர்—ஆடகம். க. கடலையின்பெயர்—மஞ்சூரம். க.
அவரையின்பெயர்-சிக்கடி, சிம்பை. உ. உழுந்தின்பெயர்-மாடம். க.
பயற்றின்பெயர்-முற்கம். க. கொள்ளின்பெயர்-காணம், குலத்தம். உ.
துவரைகடலைமுதலியவற்றின்பெயர்—முதிரை, கூலம். உ.
காராமணியின்பெயர்—இதை. க.

நண்ணியசொன்னல்சோளநாட்டியவிறுங்குமாமே
எண்ணொடுதிலமுநூவுமெட்கவ்வையிளங்காயின்பேர்
பண்ணியகுமிகைதானேபயனுறுமிளையெள்ளாகும்
மண்ணியவரகினுமமருவுகோத்திரவமாமே. (௪௨)

குசையொடுகுமுதங்கூர்ச்சங்குசந்தர்ப்பையென்றுகூறும்
பசையுறுபதமேதூர்வைபச்சறுகிளம்புல்சட்பம்
நிசியரிசனமேபீதநிகரில்காஞ்சனியேமஞ்சள்
நசையுறுமிஞ்சியல்லநறுமருப்பென்றுமாமே. (௪௩)

கருணையினுமங்கந்தஞ்சூரணமென்றுங்காட்டும்
தருவகலியம்விருக்கந்தாவரம்விடபிதாருத்
துருமமேகுசமென்றெட்டுஞ்சொல்லியமரப்பொதுப்பேர்
பரவுபூருகமேசாகிபாதபமென்றும்பன்னும். (௪௪)

மூலமேசருனங்கந்தமூலகங்கிழங்கினாமம்
காலொடங்குரமுளைப்பேர்கருதுதூர்சிவையேவேராம்
கோலியம்விடபங்கொம்பர்கோடரம்பொங்கர்சாகை
பாலமர்கவடுதாருப்பணைசினையுலவைகொம்பாம். (௪௫)

கலையொடாசினியேசேகுகாழ்ப்புக்காழ்வயிரமாகும்
தலமடைதகடுபன்னஞ்சதனம்பத்திரம்பலாசம்
இலைதமாலமுமாமற்றுமிதிற்றழையுலவையென்ப
புலனுறுகுழவிபிள்ளைபோதகம்போத்துக்கன்றும். (௪௬)

மெல்லியலிளங்கொம்பின்பேர்மேவியுகவரேகப்பாம்
வல்லரிகிசலயம்பூமஞ்சரிமுறியலங்கல்
பல்லவங்குழைதளிர்ப்பேர்பகர்குருத்தேமுருந்து
சொல்லுங்காற்குழைத்தலோடேயிலிர்த்தலுந்தளிர்த்தலின்பேர். ()

முகைநனைகலிகைபோகின்முகுளமேமொக்குண்மொட்டு
மகிழ்வுறுகோரகங்கண்மற்றைச்சாலகமரும்பாம்
தகைபெறுகுசுமம்போதுதாரலர்சுமனசந்தான்
மிகுமணமலரேதாமம்வீயிணர்துணர்பூவின்பேர். (௪௮)

தொத்துமஞ்சரியினோடுதுணரிணர்குலையைந்தும்பூங்
கொத்தின்பேர்மகரஞ்செய்யகொங்குகேசரம்பூந்தாதாம்
வைத்திடுந்துணருமாகுமகரந்தம்பூந்தேனென்ப
பைத்தெழுந்தாதிற்றூளேபராகமாம்பிரசமும்பேர். (௪௯)

சோளத்தின்பெயர்—சொன்னல், இறுங்கு உ.
எள்ளின்பெயர்—எண், திலம், நூ. ௩.
எள்ளிளங்காயின்பெயர்—கவ்வை. க.
இளையெள்ளின்பெயர்-குமிகை. க. வரகின்பெயர்-கோத்திரவம்.க.

தருப்பையின்பேயர்—குசை, குமுதம், கூர்ச்சம், குசம். ச.
அறுகின்பெயர்—பதம், தூர்வை. உ. இளம்புல்லின்பெயர்-சட்பம்.
மஞ்சளின்பெயர்—நிசி, அரிசனம், பீதம், காஞ்சனி. ச.
இஞ்சியின்பெயர்—அல்லம், நறுமருப்பு. உ.

கருணைக்கிழங்கின்பெயர்—கந்தம், சூரணம். உ.
மரப்பொதுவின்பெயர்—தரு, அகலியம், விருக்கம், தாவரம், விடபி, தாரு, துருமம், குசம், பூருகம், சாகி, பாதபம். கக.

கிழங்கின்பெயர்—மூலம், சகுனம், கந்தம், மூலகம். ச.
முளையின்பெயர்-கால், அங்குரம்.உ.வேரின்பெயர்-தூர், சிவை. உ.
மரக்கொம்பின்பெயர்—கோல், இபம், விடபம், கொம்பர், கோடரம், பொங்கர், சாகை, கவடு, தாரு, பணை, சினை, உலவை. கஉ.

மரவயிரத்தின்பெயர்—கலை, ஆசினி, சேகு, காழ்ப்பு, காழ். ரு.
இலையின்பெயர்—தலம், அடை, தகடு, பன்னம், சதனம், பத்திரம், பலாசம், தமாலம். அ. தழையின்பெயர்—உலவை. க.
மரக்கன்றின்பெயர்—குழவி, பிள்ளை, போதகம், போத்து. ச.

இளங்கொம்பின்பெயர்—மெல்லியல். க. கப்பின்பெயர் கவர். க.
தளிரின்பெயர்—வல்லரி, கிசலயம், மஞ்சரி, முறி, அலங்கல், பல்லவம், குழை. எ. குருத்தின்பெயர்—முருந்து. க.
தளிர்த்தலின்பெயர்—குழைத்தல், இலிர்த்தல். உ.

அரும்பின்பெயர்—முகை, நனை, கலிகை, போகில், முகுளம், மொக்குள், மொட்டு, கோரகம், சாலகம். கூ.
பூவின்பெயர்—குசுமம், போது, தார், அலர், சுமனசம், மலர், தாமம், வீ, இணர், துணர். க0.

பூங்கொத்தின்பெயர்—தொத்து, மஞ்சரி, துணர், இணர், குலை. ரு.
பூந்தாதின்பெயர்—மகரம், கொங்கு, கேசரம், துணர். ச.
பூக்தேனின்பெயர்—மகரந்தம். க.
தாதிற்றூளின்பெயர்—பராகம், பிரசம். உ.

அலர்தலையவிழ்தல்விள்ளன்மலர்தலாநெகிழ்தலும்பேர்
இலகியவிரிமலர்ப்பேரிகமலர்வெதிர்தொடர்ப்பூப்
பலமறுசாம்பல்செம்மல்பழம்பூவாந்தேம்பலும்பேர்
புலனுறுமேடுதோடுதளமடல்பூவிதழ்ப்பேர். (௫௦)

அல்லியேயகவிதழ்ப்பேரறைந்திடும்புறவிதழ்ப்பேர்
புல்லியேவடுவும்பிஞ்சும்போற்றுந்தீவிளியுங்காயாம்
பல்லியற்கவிஞர்சொற்றபழங்கனிபலமுமாகும்
மெல்லியபரலுங்காழும்பீசமும்விதைவித்தும்பேர். (௫௧)

குலைகுச்சந்தாறுசாறுகுடும்பொடுபடுவுங்கொத்தாம்
மலரவகேசிதானேவருபலமிலாமரப்பேர்
பலினங்காய்த்திருந்ததாருப்பகருலர்மரமேவானம்
புலர்விலாக்கோளியோடுவனபதிபூவாக்காய்க்கும். (௫௨)

இந்தனமுருடுகட்டையிடுகறல்சமிதைகாட்டம்
வெந்திடுஞெகிழியேழும்விறகென்பமுளரியும்பேர்
வந்தகோடரம்பொதும்பர்மரச்செறிவாகும்பொந்து
முந்துபேர்பொள்ளலாகுமுட்கடுகண்டகம்மே. (௫௩)

துடவைநந்தனவனம்பூந்தோட்டமேயரியுய்யானம்
கடிபொழிலுத்தியானங்காமரச்செறிவாராமம்
நெடியதண்டலையினோடுநீளுபவனமேசோலை
வடிவுடையூர்சூழ்சோலைவனமெனவைக்கலாமே. (௫௪)

அடவிகான்புறவம்பொச்சையாரணியங்காந்தாரம்
கடம்வனமுளரிதில்லங்ககனங்கண்டகமேதாவம்
விடர்சுரம்பழுவங்கானல்விபினமேகட்சிகானம்
கடறுகானனமேயத்தங்களரிகாடிருபானாற்பேர். (௫௫)

நிறைகருதூறுகுன்மநீள்பஞ்சிவிடபமும்பேர்
அறலிறல்பதுக்கைமுப்பேரறியலீஞ்சிறியதூறு
குறியகாடிறும்பென்றுகுறுங்கூறியபெருங்கான்வல்லை
மறையரணிளையிரண்டும்வைத்தகாவற்காட்டின்பேர். (௫௬)

மலர்தலின்பெயர்—அலர்தல், அவிழ்தல், விள்ளல், நெகிழ்தல். ௪.
விரிமலரின்பெயர்—இகமலர், வெதிர், தொடர்ப்பூ. ௩.
பழம்பூவின்பெயர்—சாம்பல், செம்மல், தேம்பல். ௩.
பூவிதழின்பெயர்—ஏடு, தோடு, தளம், மடல். ௪.

அகவிதழின்பெயர்—அல்லி. க. புறவிதழின்பெயர்—புல்லி. க.
காயின்பெயர்—வடு, பிஞ்சு, தீவிளி. ௩.
பழத்தின்பெயர்—கனி, பலம். உ.
விதையின்பெயர்—பரல், காழ், பீசம், வித்து. ௪.

கொத்தின்பெயர்—குலை, குச்சம், தாறு, சாறு, குடும்பு, படு. ௬.
பலமிலாமரத்தின்பெயர்—அவகேசி. க.
காய்த்திருந்தமரத்தின்பெயர்—பலினம். க.
உலர்ந்தமரத்தின்பெயர்—வானம். க.
பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்—கோளி, வனபதி. * உ.

விறகின்பெயர்—இந்தனம், முருடு, கட்டை, கறல், சமிதை, காட்டம், ஞெகிழி, முளரி. அ.
மரச்செறிவின்பெயர்—கோடரம், பொதும்பர். உ.
மரப்பொந்தின்பெயர்—பொள்ளல். க.
முள்ளின்பெயர்—கடு, கண்டகம். உ.

சோலையின்பெயர்—துடவை, நந்தனவனம், பூந்தோட்டம், அரி, உய்யானம், பொழில், உத்தியானம், கா, மரச்செறிவு, ஆராமம், தண்டலை, உபவனம். கஉ.
ஊர்சூழ்சோலையின்பெயர்—வனம். க.

காட்டின்பெயர்—அடவி, கான், புறவம், பொச்சை, ஆரணியம், காந்தாரம், கடம், வனம், முளரி, தில்லம், ககனம், கண்டகம், தாவம், விடர், சுரம், பழுவம், கானல், விபினம், கட்சி, கானம், கடறு, கானனம், அத்தம், களரி. உ௪.

பெருந்தூற்றின்பெயர்—குன்மம், பஞ்சி, விடபம். ௩.
சிறுதூற்றின்பெயர்—அறல், இறல், பதுக்கை. ௩.
குறுங்காட்டின்பெயர்—இறும்பு. க.
பெருங்காட்டின்பெயர்—வல்லை. க.
காவற்காட்டின்பெயர்—அரண், இளை. உ.

* பூத்துக்காய்க்குமரத்தின்பெயர்—வானபத்தியம். க.

முதையபலேயிலையுதிர்ந்தமுதிர்காட்டினாமமாகும்
பொதிகரிகாடுபொச்சைபொருந்துமேயிளைவேலிப்பேர்
அதிகமற்றகங்காழ்த்திட்டதாண்மரம்புறக்காழ்பெண்ணும்
விதியுளிவ்விரண்டுமில்லாவெளிறலியாகுமென்ப. (௫௭)

புண்டரீகத்தினோடம்போருகங்குசேசயம்பூ
முண்டகமரவிந்தம்மேமுளரிபங்கயம்வாரீசம்
இண்டையம்புயஞ்சரோசமெழிற்சதபத்திரிசூழ்ந்து
வண்டுளர்நளினங்கஞ்சம்வனசந்தாமரையினாமம். (௫௮)

சலசமேகமலமற்றுஞ்சார்ந்தகோகனதத்தோடு
தலமுனாந்திருமாலுந்திசரோருகம்பதுமமும்பேர்
மலரின்பேரிறும்புவாகும்மற்றிராசீவமும்பேர்
புலர்வில்பொன்னிறத்தகொட்டைபொகுட்டேகன்னிகையுமாகும்.

விரித்திடுஞ்சுருளினாமம்விசியொடுவளையமாகும்
மருக்கிளர்தாமரைக்காய்வராடகமென்பநூலோர்
அரத்தவுற்பலமேவாசமடர்ந்தசெங்குவளைகோலத்
திருக்கிளர்கல்லாரங்கள்செங்கழுநீரின்பேரே. (௬0)

கோலமார்பானல்காவிகுவலயமணத்தைமொண்டு
காலத்தேனுலவுகின்றகருங்குவளைக்குநாமம்
நீலமிந்தீவரந்தானிகழ்கருநெய்தலென்ப
கோலவுற்பலமுமாகுங்குமுதம்வெண்ணெய்தற்பேரே. (௬௧)

செங்குமுதஞ்செவ்வல்லிசேதாம்பலரக்காம்பற்பேர்
வெங்கள்ளுநாறுமல்லிகைரவம்வெள்ளாம்பற்பேர்
தங்கியதிரள்கோரைப்பேர்சாய்பஞ்சாய்க்கோரையென்ப
அங்குளசெருந்திதானேயடர்ந்தவாட்கோரையாமே. (௬௨)

ஒள்ளியகண்டன்முள்ளியுரைத்தமுண்டகமேயன்றி
முள்ளுடைமுலம்யாவும்முண்டகமென்றேசாற்றும்
தள்ளியநாரம்பாசிசைவலஞ்சடைச்சியும்பேர்
வள்ளியகல்லாரந்தான்மற்றைநீர்க்குளிரியாமே. (௬௩)

வல்லியும்புல்லும்பூடுமரமுதன்மருந்தென்றாகும்
சல்லியகரணிகூர்வேறைத்தபுண்மாற்றுந்துண்டம்
புல்லியசெய்வதானேசந்தானகரணிபோலும்
மெல்லியவிரணந்தீர்க்குஞ்சமனியகரணிவேறே. (௬௪)

முதிர்காட்டின்பெயர்—முதையல். க.
கரிகாட்டின்பெயர்-பொதி,பொச்சை.உ.வேலியின்பெயர்-இவ‌ை. க.
* ஆண்மரமென்பது—அகக்காழ். பெண்மரமென்பது—புறக்காழ்.
அலிமரமென்பது—வெளிறு.

தாமரையின்பெயர்—புண்டரீகம், அம்போருகம், குசேசயம், முண்டகம், அரவிந்தம், முளரி, பங்கயம், வாரிசம், இண்டை, அம்புயம், சரோசம், சதபத்திரி, நளினம், கஞ்சம், வனசம். கரு.

சலசம், கமலம், கோகனதம், திருமாலுந்தி, சரோருகம், பதுமம். கூ. (ஆ உக.)
தாமரைமலரின்பெயர்—இறும்பு, இராசீவம். உ.
தாமரைக்கொட்டையின்பெயர்—பொகுட்டு, கன்னிகை. உ.

தாமரைச்சுருளின்பெயர்—விசி, வளையம். உ.
தாமரைக்காயின்பெயர்—வராடகம். க.
செங்கழுநீரின்பெயர்—அரத்தவுற்பலம்,செங்குவளை,கல்லாரம். ந.

கருங்குவளையின்பெயர்—பானல், காவி, குவலயம். ந.
கருநெய்தலின்பெயர்—நீலம், இந்திவரம், உற்பலம். ந.
வெண்ணெய்தலின்பெயர்—குமுதம். க.

அரக்காம்பலின்பெயர்—செங்குமுதம்,செவ்வல்லி,சேதாம்பல். ந.
வெள்ளாம்பலின்பெயர்—அல்லி, கைரவம். உ.
திரள்கோரையின்பெயர்—சாய், பஞ்சாய்க்கோரை. உ.
வாட்கோரையின்பெயர்—செருந்தி. க.

முள்ளியின்பெயர்—கண்டல், முண்டகம். உ.
முள்ளுடைமூலமெல்லாவற்றிற்கும்பெயர்—முண்டகம். க.
பாசியின்பெயர்—நாரம், சைவலம், சடைச்சி. ந.
நீர்க்குளிரியின்பெயர்—கல்லாரம். க.

மருந்தென்பன—வல்லி, புல், பூடு, மரமுதலிய.
வேல் தைத்த புண் மாற்று மருந்தின்பெயர்—சல்லியகரணி.
துணிபட்ட உறுப்பைப்பொருத்துமருந்தின்பெயர்-சந்தானகரணி.
விரணந்தீர்க்குமருந்தின்பெயர்—சமனியகரணி.

---

* ஆண்மரத்துக்கு வன்மரமென்றும் பெயர்: அவை கருங்காலி முதலியன. பெண்மரத்துக்கு வன்புல்லென்றும்பெயர்: அவை பனை, கமுகு, தெங்கு, மூங்கில். அலிமரம் முருக்கும் நாரும் பாலுமுள்ள மரமுதலாயினவுமாம்.

மறைவிலாமிருதசஞ்சீவனியுடனமுதிரண்டும்
குறைவறமூர்ச்சைதீர்த்தேகுற்றுயிர்தருமருந்தாம்
உறையொடுகுளியம்யோகமுறுமருந்தின்பொதுப்பேர்
அறையுங்காலந்தப்பேரேயதகமுமாகுமென்ப. (௬௫)

அலங்கலேபிணையலாரஞ்சிகழிகையணிசுருக்கை
இலம்பகந்தெரியல்சுக்கையேற்றகத்திகையேதாமம்
துலங்கியபடலைகண்ணிதொடைதொங்கலொலியல்கோதை
மலர்ந்ததாரிவைமூவாறுமாலைமஞ்சரியுமப்பேர். (௬௬)

சூட்டுடனிலம்பகங்கள்சூழ்நுதலணியென்றுரும்
தீட்டுவாசிகையின்பேரேசிகழிகைபடலையென்ப
ஈட்டியகல்விகேள்வியிரீங்குடிகொடைபடைக்குள்
வாட்டமில்லவரைவென்றுமௌலிசூட்டுவதுவாகை. (௬௭)

பரப்புநீருலகுதன்னிற்பாவலர்கிளைஞருற்ற
நிரப்படுங்குணபத்திரன்றுணித்தலும்போற்றிசெய்து
விருப்புறுவிரதசீலன்வீரைமண்டலவன்செய்தான்
மரப்பெயர்க்கறுபத்தெட்டுமன்னியகவிதைதானே. (௬௮)

மாப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் - ௩௫௩.

---

ஐந்தாவது

# இடப்பெயர்த்தொகுதி.

---

## காப்பு.

கடலெழுமிரவிகோடிகால்சீத்துப்பொடித்ததென்ன
மடலவிழ்கமலவூர்திவந்தவாமனையேபோற்றி
அடைவுளதிணைதேமூர்வானகம்புறமாதியாய
இடனுடைத்தாகவைத்தவிடப்பெயர்த்தொகுதிசொல்வாம். (௧)

கேடிலாவபவருக்கங்கேவலத்தோடுசித்தி
வீடுகைவல்லியம்மேமீளாதகதியேநூலோர்
பாடுநிர்வாணத்தோடுபரகதிசிவமேமுத்தி
நீடுமீரைந்துமோக்கமமுதமுநிகழ்த்தலாமே. (௨)

மூர்ச்சைதீர்த்துக்குற்றுயிர் தருமருந்தின்பெயர்—மிருதசஞ்சீவனி, அமுது. உ.
மருந்தின்பொதுப்பெயர்—உறை, குளியம், யோகம், அதகம். ச.

மாலையின்பெயர்—அலங்கல், பிணையல், ஆரம், சிகழிகை, அணி, சுருக்கை, இலம்பகம், தெரியல், சுக்கை, கத்திகை, தாமம், படலை, கண்ணி, தொடை, தொங்கல், ஒலியல், கோதை, தார், மஞ்சரி. கக.

நுதலணியின்பெயர்—சூட்டு, இலம்பகம். உ.
வாசிகையின்பெயர்—சிகழிகை, படலை. உ.
வாகையாவது—கல்வி, கேள்வி, குடி, கொடை, படைகட்குள் வாட்டமில்லவரைவென்று மௌலி சூட்டுவது.

—oo✿oo—

# பெயர்ப்பிரிவு.

இ - ள். கடல் எழும் இரவி கோடி கால் சீத்துப் பொடித்தது என்ன - சமுத்திரத்தினின்றும் எழுகின்ற கோடிசூரியர் இருளை நீக்கி உதித்தாற்போல,—மடல் அவிழ் கமலவூர்தி வந்த வாமனையே போற்றி - இதழ் விரியப் பெற்ற தாமரைமலராகிய வாகனத்தின்மேற் சென்ற அருகக்கடவுளையே துதித்து,—அடைவு உள திணை - முறைமையுள்ள ஐவகைநிலங்களும்,—தேம் - தேசங்களும்,—ஊர் - ஊர்களும்,—வான்-வானமும்,—அகம் - உள்ளிடமும்,—புறம் - வெளியிடமும்,—ஆதி ஆய இடன் உடைத்து ஆக வைத்த - முதலாகிய இடங்களின் பெயர்களை உடையதாக வைக்கப்பட்ட,—இடப்பெயர்த்தொகுதி சொல்வாம் - இடப்பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவாம். எ - று.

அருகக்கடவுள் தாமரைமலரை வாகனமாகக் கொண்டு அதனை யூர்ந்து சென்றமை திருநூற்றந்தாதியில் "நாயகத் தேவர்தநம்முதற்றேவரை நாண்மலர்வான்—மீயகத் தேவர மேற்கொள்ளுந் தேவரை மெய்யடியார்—வாயகத் தேவரும் வண்புகழ்த் தேவரை மாற்றி நெஞ்சே—நீயகத் தேவரை யித்தனை நாளு நினைத்தனையே." என்னும் அசு-ம் பாட்டாலறிக.

மோக்கத்தின்பெயர்—அபவருக்கம், கேவலம், சித்தி, வீடு, கைவல்லியம், மீளாதகதி, நிர்வாணம், பரகதி சிவம், முத்தி, அமுதம். கக.

உயர்நிலையுவணைபுத்தேளுலகுபொன்னுலகுதானம்
வியனுலகந்துறக்கமேலுலகம்விமானம்
நயனுறுசுவர்க்கங்கற்பநாகம்விண்ணுலகோடும்பர்
செயமுறுதேவலோகஞ்சிறந்திடுமீரேழ்பேரே. (௩)

பரவியநாகலோகம்பவனமாஞ்சேடிசேணி
விரவுவிஞ்சையரூர்மற்றும்வீழதோகதிபாதாளம்
நிரயமேயளறேதீயேநீள்சுவப்பிரமேயூழல்
நரகிருள்பவர்க்கம்பத்துநரகமாம்பூதியும்பேர். (௪)

அரிதமாதிரம்விசும்போடம்பரமுலகுகாட்டை
கருதியதிசைகோவாசைககுபமுந்திகையுந்திக்காம்
பெருகுபூருவங்குணக்கேபிராசியைந்திரிகிழக்காம்
தெரியும்யாமியமவாசிதக்கிணஞ்சிவேதைதெற்கே. (௫)

குடக்குவாருணமேமேக்குக்குறித்தபச்சிமமேமேற்காம்
நடத்தியபிரத்தியக்குமற்றதன்பேரேநாட்டும்
வடக்குதக்குதீசியென்பமற்றையுத்தரமுமாகும்
விடப்படாத்திணையேமாவேவேலிபூநிலநாற்பேரே. (௬)

அவனிகாசினிசகத்தோடகலிடமகிலம்பாரி
குவலயம்விபுலைமற்றைக்கோத்திரைகோவேருவ்வே
புவனிமண்டலந்தலம்பூப்பொழில்வசுந்தரையுடன்பார்
பவனந்தாரணியிளேடுபடிபுவிதரணிவையம். (௭)

தாலமேயசலைநேமிவசுமதிதரைதரித்திரி
ஞாலந்தாத்திரியளக்கர்நாடுபூதலங்கிடக்கை
பாலமேபூதிகங்கள்பார்த்திவம்பொறையனந்தை
வேலைசூழ்மகியாறேழுமேதினியுலகும்பூமி. (௮)

பாடிமண்டலமேசும்மைபைதிரமுலகுதேயம்
நீடியவகலுளேணிநீவரங்கோட்டங்கண்டம்
நீடுறுசனபதங்கள்பெரும்பொழிலிவைபன்மூன்றும்
நாடுதண்ணடையுமாகுமழுவமுநாட்டுமப்பேர். (௯)

விலங்கலேபொறைவேதண்டம்விண்டுமாதிரமேவெற்புச்
சிலம்புகோத்திரமடுக்கல்சிலோச்சயஞ்சிமயம்பொங்கர்
நலங்கொள்குத்திரம்பறம்புநகங்குறும்பொறையேநாகம்
இலங்கியவரையேபொச்சையிறும்புகல்லகமேயோங்கல். (௰)

தேவலோகத்தின்பெயர்—உயர்நிலை, உவணை, புத்தேளுலகு, பொன்னுலகு, தானம், வியனுலகம், துறக்கம், மேலுலகம், விமானம், சுவர்க்கம், கற்பம், நாகம், விண்ணுலகு, உம்பர். கச.

நாகலோகத்தின்பெயர்—பவனம். க.

விஞ்சையருரின்பெயர்—சேடி, சேணி. உ.

நரகத்தின்பெயர்—அதோகதி, பாதாளம், நிரயம், அளறு, தீ, சுவப்பிரம், ஊழல், நரகு, இருள், பவர்க்கம், பூதி. கக.

திக்கின்பெயர்—அரிதம், மாதிரம், விசும்பு, அம்பரம், உலகு, காட்டை, திசை, கோ, ஆசை, ககுபம், திகை. கக.

கிழக்கின்பெயர்—பூருவம், குணக்கு, பிராசி, ஐந்திரி. ச.

தெற்கின்பெயர்—யாமியம், அவாசி, தக்கிணம், சிவேதை. ச.

மேற்கின்பெயர்—குடக்கு, வாருணம், மேக்கு, பச்சிமம், பிரத்தியக்கு. ரு.

வடக்கின்பெயர்—உதக்கு, உதீசி, உத்தரம். ஙா.

நிலத்தின்பெயர்—திணை, மா, வேலி, பூ. ச.

பூமியின்பெயர்—அவனி, காசினி, சகம், அகலிடம், அகிலம், பாரி, குவலயம், விபுலை, கோத்திரை, கோ, கு, புவனி, மண்டலம், தலம், பூ, பொழில், வசுந்தரை, பார், பவனம், தாரணி, புடி, புவி, தரணி, வையம். உச.

தாலம், அசலை, நேமி, வசுமதி, தரை, தரித்திரி, ஞாலம், தாத்திரி, அளக்கர், நாடு, பூதலம், கிடக்கை, பாலம், பூதிகம், பார்த்திவம், பொறை, அனந்தை, மகி, மேதினி, உலகு. உ0. (ஆடசச.)

நாட்டின்பெயர்—பாடி, மண்டலம், சும்மை, பைதிரம், உலகு, தேயம், அகலுள், ஏணி, நீவரம், கோட்டம், கண்டம், சனபதம், பொழில், தண்ணடை, அழுவம். கரு.

மலையின்பெயர்—விலங்கல், பொறை, வேதண்டம், விண்டு, மாதிரம், வெற்பு, சிலம்பு, கோத்திரம், அடுக்கல், சிலோச்சயம், சிமயம், பொங்கர், குத்திரம், பறம்பு, நகம், குறும்பொறை, நாகம், வரை, பொச்சை, இறும்பு, கல்லகம், ஓங்கல், உஉ.

பொருப்பொடுகுவடுகல்லுப்பொகுட்டோதிசிகிரிகுன்று
பருப்பதஞ்சைலஞ்சாரல்பாதவம்பதலைதாணுப்
பெருத்தபூதரமேசையம்பிறங்கலத்திரியேபீலி
உருத்திகழ்சிரிமலைப்பேரொன்றுடனெண்ணைந்தென்ப. (௧௧)

புடைபடுமிறும்புகுன்றுபொற்றையேசிறுமலைப்பேர்
படுகுறும்பொறையேபொச்சைபதலையுமதன்பேர்வாரந்
தடமொடுசாரல்சானுதகுமலைப்பக்கங்கோடு
கொடுமுடிசிகரங்கூடங்குவடிவைமலையினுச்சி. (௧௨)

நிலைபெறும்பொன்மலைப்பேர்நீள்சுராலயமேமேரு
விலையில்வெண்மலையேதண்டம்விசயார்த்தம்வெள்ளிவெற்பாம்
மலயந்தென்மலையேதென்றல்வருமலைசிமயநான்கும்
புலமைசேர்கும்பயோனிபொதியமாமலையினாமம். (௧௩)

பொறைதுறுகல்லென்றுகும்புகலுங்கற்பாழிகாண்டை
முறைமையாம்விவரத்தோடுமுடுக்கர்கந்தரமுழைப்பேர்
அறைமுரஞ்சாம்பிலங்கீழறையென்பகுகைநிகுஞ்சம்
சிறுசியதிடர்பதுக்கைதிட்டையுமிட்டநாமம். (௧௪)

சிலையொடுகன்னேசையஞ்சிராவணமுபலங்கல்லாம்
உலமென்பதிரண்டகற்பேருறும்பரல்பருக்கையென்ப
துலைபெறுதிடறுதிட்டைசுவன்மெட்டுக்குவாலேகுப்பை
குலவியதிடரேமேடுகுவையென்றுமிவையேகூறும். (௧௫)

பரவைதெண்டிரையேசிந்துபௌவமேபாராவாரம்
நரலையார்கலியேயுந்திநதிபதியம்புராசி
குரவையேசக்கரங்கார்கோள்வேலாவலயமுந்நீர்
அரிமகராலயந்நீராழியம்பரமேவேலை. (௧௬)

வாரிதியளக்கர்நீண்டவாரியேயுததியோதம்
வீரையன்னவமேயத்திவெள்ளஞ்சாகரமேயாழி
சாருறுசலதியுப்புச்சலநிதிசமுத்திரஞ்சூழ்
வாரணமிவையாறுறுமறிகடலுவரியும்பேர். (௧௭)

பாரியபாராவாரம்பகர்வேலைகடற்கரைப்பேர்
ஆருஞ்சீகரங்கல்லோலமற்றரங்கந்திரைப்பேர்
வாரமேபாரங்கோடுவரையணைதடமேகூலம்
தீரமேநீர்க்கரைப்பேர்செறிவரம்பிற்கும்பேரே. (௧௮)

பொருப்பு, குவடு, கல், பொகுட்டு, ஓதி, திகிரி, குன்று, பருப்பதம், சைலம், சாரல், பாதவம், பதலை, தாணு, பூதரம், சையம், பிறங்கல், அத்திரி, பீலி, கிரி. கக. (ஆ சக.)

சிறுமலையின்பெயர்—இறும்பு, குன்று, பொற்றை, குறும்பொறை, பொச்சை, பதலை. ஙு.
மலைப்பக்கத்தின்பெயர்—வாரம், தடம், சாரல், சானு. ச.
மலையினுச்சியின்பெயர்-கோடு,கொடுமுடி,சிகரம்,கூடம்,குவடு. ரு.

பொன்மலையின்பெயர்—சுராலயம், மேரு. உ.
வெள்ளிமலையின்பெயர்-வெண்மலை, வேதண்டம், விசயார்த்தம். ங.
பொதியமலையின்பெயர்—மலயம், தென்மலை, தென்றல்வருமலை, சிமயம். ச.

துறுகல்லின்பெயர்—பொறை. க. *கற்பாழியின்பெயர்-காண்டை.
மலைமுழையின்பெயர்—விவரம், முடுக்கர், கந்தரம். ங.
†அறையின்பெயர்—முரஞ்சு. க. கீழறையின்பெயர்—பிலம். க.
குகையின்பெயர்—நிகுஞ்சம். க.
சிறுதிடரின்பெயர்—பதுக்கை, திட்டை. உ.

கல்லின்பெயர்—சிலை, கன், சையம், சிராவணம், உபலம். ரு.
திரண்டகல்லின்பெயர்-உலம்.க.பருக்கைக்கல்லின்பெயர்-பரல். க.
மேட்டின்பெயர்—திடறு, திட்டை, சுவல், மெட்டு, குவால், குப்பை, திடர், குவை. அ.

கடலின்பெயர்—பரவை, தெண்டிரை, சிந்து, பௌவம், பாராவாரம், நரலை, ஆர்கலி, உந்தி, நதிபதி, அம்புராசி, குரவை, சக்கரம், கார்கோள், வேலாவலயம், முந்நீர், அரி, மகராலயம், நீராழி, அம்பரம், வேலை. உ0.

வாரிதி, அளக்கர், வாரி, உததி, ஓதம், வீரை, அன்னவம், அத்தி, வெள்ளம், சாகரம், ஆழி, சலதி, உப்பு, சலநிதி, சமுத்திரம், வாரணம், உவரி. கஎ.(ஆ ஙஎ.)

கடற்கரையின்பெயர்—பாராவாரம், வேலை. உ.
திரையின்பெயர்—சீகரம், கல்லோலம், அறல், தரங்கம். ச.
நீர்க்கரையின்பெயர்—வாரம், பாரம், கோடு, வரை, அணை, தடம், கூலம், தீரம். அ. இவை, வரம்பிற்கும்பெயர்.

---

* கற்பாழி—கற்புழை. † அறை—பாறை.

அருவியேகழிமுகம்பேரருவிப்பேருவகையாகும்
அருவியேமலையின்சாரலாற்றபிதானமென்ப
உரைசெயிலுவர்நீர்தானேயுறையென்பகுரம்புதான்செய்
கரையின்பேர்குலையுஞ்சேதுங்காட்டுபமீட்டதற்கே. (௧௯)

உந்தியேதுறையேமற்றையொலியலேகுடிஞையோணம்
சிந்துவேநதியேவீசுந்திரைவருபுனலேயாறும்
கந்தமார்கலுழிமுல்லைக்கான்யாறுங்கழிமுகப்பேர்
முந்தியகயவாயென்பபுகாரதோமுகமுமாமே. (௨௦)

கழியின்பேர்முரம்புகாயல்கானலுப்பளமென்றாகும்
கழிநிலமுப்பளப்பேர்காட்டுமுப்பளமேகாயல்
அழிவிலாவுவளகத்தோடளக்கராம்புளினமென்ப
ஒழிவிலாமணற்குன்றின்பேருவர்த்தரையிரிணமாமே. (௨௧)

பொன்னிகாவிரியிரண்டும்பொருந்துகாவேரியின்பேர்
பன்னியபொருநையின்பேர்பகர்ந்ததண்பொருந்தர்தானே
கன்னியேகுமரியென்பகௌதமையின்பேர்கோதை
மின்னியவிருத்தகங்கைவிமலைகோதாவரிப்பேர். (௨௨)

படுகரேதாங்கல்கேணிபல்வலம்படுவேபட்டம்
மடுவுவளகமேபண்ணைவாவியேசுனையேவட்டம்
தடமொடுகயம்பயம்பூந்தடாகமேகுளமேகுட்டம்
அடைவுளகிடங்குகுழியலந்தையேகுண்டம்பங்கம். (௨௩)

இலஞ்சிகோட்டகமேபொய்கையேல்வையேயோடையேரி
நிலந்தனிற்குளிர்ந்தநீரினிலையாறைந்தொன்றுநீங்கத்
தலந்தனிற்றெளிந்தநீரைச்சற்சலமென்றிசைப்பர்
இலங்கையேதுருத்தியாற்றினிடைக்குறையரங்கமும்பேர். (௨௪)

நுரைமொக்குள்பௌவத்தோடுநொவ்வியபுற்புதங்கள்
குரைகொணீர்க்குமிழியைந்தாங்கொப்புளுமப்பேர்தானே
நுரையின்பேர்பேனமாகுநொய்யநீர்ச்சுழியேயுந்தி
பிரளயம்வாரிநீத்தம்பெருக்கோதமோகம்வெள்ளம். (௨௫)

மண்டியநிறைபுனற்பேர்வழாறொடுபிராறுமாகும்
மிண்டியவகாதநீந்தும்வெம்புனலென்பநூலோர்
கண்டிடுங்கலங்கனீரேகலுழியாவிலமுமாகும்
குண்டழுந்தொடுகயங்கள்கூறுகம்பீரமாழம். (௨௬)

அருவியின்பெயர்—கழிமுகம். க. பேரருவியின்பெயர்-உவதை.க.
மலைச்சாரலாற்றின்பெயர்—அருவி. க.
உவர்நீரின்பெயர்—உறை. க.
செய்கரையின்பெயர்—குரம்பு, குலை, சேது. ங.

யாற்றின்பெயர்—உந்தி, துறை, ஒலியல், குடிஞை, ஓணம், சிந்து, நதி, வருபுனல். அ.
முல்லைக்கான்யாற்றின்பெயர்—கலுழி. க.
கழிமுகத்தின்பெயர்—கயவாய், புகார், அதோமுகம். ங.

கழியின்பெயர்—முரம்பு, காயல், கானல், உப்பளம். ச.
கழிநிலம்—இதற்கு உப்பளப்பெயர்கள் யாவும் வரும்.
உப்பளத்தின்பெயர்—காயல், உவளகம், அளக்கர். ங. மணற்குன்றின்பெயர்-புளினம். க. உவர்த்தரையின்பெயர்-இரிணம். க.

காவேரியின்பெயர்—பொன்னி, காவிரி, உ.
* பொருநையின்பெயர்—பொருந்தம். க.
கன்னியின்பெயர்—குமரி. க. கௌதமையின்பெயர்—கோதை. க.
கோதாவரியின்பெயர்—விருத்தகங்கை, விமலை. உ.

நீர்நிலையின்பெயர்—படுகர், தாங்கல், கேணி, பல்வலம், படு, பட்டம், மடு, உவளகம், பண்ணை, வாவி, சுனை, வட்டம், தடம், கயம், பயம், தடாகம், குளம், குட்டம், கிடங்கு, குழி, அலந்தை, குண்டம், பங்கம். உங.

இலஞ்சி, கோட்டகம், பொய்கை, ஏல்வை, ஓடை, ஏரி. கூ. (ஆ உக.)
தெளிந்தநீரின்பெயர்—சற்லம். க.
யாற்றிடைக்குறையின்பெயர்—இலங்கை, துருத்தி, அரங்கம். ங.

நீர்க்குமிழியின்பெயர்—நுரை, மொக்குள், பௌவம், புற்புதம், கொப்புள். ரு.
நுரையின்பெயர்—பேனம். க. நீர்ச்சுழியின்பெயர்—உந்தி. க.
வெள்ளத்தின்பெயர்-பிரளயம், வாரி, நீத்தம், பெருக்கு, ஓதம், ஓகம்.

நிறைபுனலின்பெயர்—வழாறு, பிராறு. உ.
நீந்துபுனலின்பெயர்—அகாதம். க.
கலங்கனீரின்பெயர்—கலுழி, ஆவிலம். உ.
ஆழத்தின்பெயர்—குண்டு, அழுந்து, கயம், கம்பீரம். ச.

* பொருநை—தாமிரபர்ணிநதி.

கோலமேபெருகுகின்றகொழுந்துநீரோட்டமென்ப
கோலியகிணறுகூபங்கூவலேயசும்புங்கூறும்
மேலிடாவஃகியூறும்வெம்புனலுறவியூற்றும் (உஎ)
ஓலமிட்டேரியுள்ளாருண்பதூருணியென்றோதும்.

அள்ளல்சேதகமேதோணியளறுடனளக்கர்தொய்யல்
கொள்ளமேசெதும்புபங்கங்குழையொடுகுழம்புகாலாழ்
தெள்ளியவசறுசெய்யலீரேழுஞ்சேருஞ்சேற்றிற் (உஅ)
புள்ளியேகுமிழ்பொகுட்டாநொதியருவருத்தசேறு.

பரவுசாட்டுவலமென்பபசும்புல்லுத்தரையின்பேரே
விரவியகரம்புபாழாம்வாலுகம்வெண்மணற்பேர்
மருவியவதரிஞோடேயிருநுண்மணலாமாற்றிற்
கரைதனிற்கொழித்தநுண்மைக்கருமணலறலென்றோதும். (உகூ)

கோடுசூழ்மலையின்சாரல்குறிஞ்சியாம்வனச்சார்முல்லை
நாடுசார்மருதமாகுநற்கடற்சார்வுநெய்தல்
நீடியகொடுங்கோன்மன்னர்நெடுங்குடைக்கீழ்வாழ்கின்ற
பாடிலாக்குடிகள்போலப்படுநிலம்பாலையாமே. (௩0)

பழனமேசெறுவரம்புள்பணைபானல்கைதைபண்ணை
கழனியேயாலவாலங்காட்டியதடிபுலஞ்செய்
விழைவுறுவயலேமாவேவிளைநிலமீரேழ்பேராம் (௩க)
குழைவுறுபாத்தியோடுகுண்டிலுஞ்சிறுசெய்கூறும்.

செந்நெலேவிளைவதானசிறப்புடைநிலஞ்சாலேயம்
இன்னதென்றுமலுண்டாமுருவரையென்பதானே
மன்னியவகணிபானல்வயல்பணைமருதநாற்பேர் (௩உ)
அந்நிலவரம்புதானேகுரம்பதனருகுகங்கு.

புறவொடுபுறம்பணைப்பேர்புணர்முல்லைகுறிஞ்சிக்கும்பேர்
பறையும்வன்பால்குறிஞ்சிபாலையாமருதந்தானே
நிறையுமென்பாலாம்வெற்பினீரினில்வெவ்வனத்திற் (௩௩)
கறைபடுமிகுதிதானேகருநிலமாகுமென்ப.

நீரோட்டத்தின்பெயர்—கோலம். க.
கிணற்றின்பெயர்—கூபம், கூவல், அசும்பு. ங.
ஊறுபுனலின்பெயர்—அஃகி, உறவி, ஊற்று. ங.
ஊரிலுள்ளாருண்ணுநீரின்பெயர்—ஊருணி. க.

சேற்றின்பெயர்—அள்ளல், சேதகம், தோணி, அளறு, அளக்கர், தொய்யல், கொள்ளம், செதும்பு, பங்கம், குழை, குழம்பு, காலாழ், அசறு, செய்யல். கச.
சேற்றிற்புள்ளியின்பெயர்—குமிழ், பொகுட்டு. உ.
அருவருத்தசேற்றின்பெயர்—நொதி. க.

பசும்புல்லுத்தரையின்பெயர்—சாட்டுவலம் க.
பாழ்நிலத்தின்பெயர்-கரம்பு. க. வெண்மணலின்பெயர்-வாலுகம். க.
நுண்மணலின்பெயர்—அதர், அயிர். உ.
கருமணலின்பெயர்—அறல். க.

மலைசார்ந்தநிலம்—குறிஞ்சி. வனஞ்சார்ந்தநிலம்—முல்லை.
நாடுசார்ந்தநிலம்—மருதம். கடல்சார்ந்தநிலம்—நெய்தல்.
கொடுங்கோன்மன்னர் குடைக்கீழ் வாழ்கின்ற குடிகள்போலப் படுநிலம்—பாலை.

விளைநிலத்தின்பெயர்—பழனம், செறு, வரம்புள், பணை, பானல், கைதை, பண்ணை, கழனி, ஆலவாலம், தடி, புலம், செய், வயல், மா. கச.
சிறுசெய்யின்பெயர்—பாத்தி, குண்டில். உ.

செந்நெல்விளைநிலத்தின்பெயர்—சாலேயம். க.
அனைத்துமுண்டாகுநிலத்தின்பெயர்—உருவரை. க.
மருதநிலத்தின்பெயர்—அகணி, பானல், வயல், பணை. ச.
வரம்பின்பெயர்—குரம்பு. க. வரம்பருகின்பெயர்—கங்கு. க.

முல்லைக்குங்குறிஞ்சிக்கும்பெயர்—புறவு, புறம்பணை. உ.
வன்பாலென்பது—குறிஞ்சியும் பாலையும்.
* மென்பாலென்பது—மருதம்.
கருநிலமென்பது—வெற்பினும் நீரினும்வனத்தினுங்கறைபடுமிகுதி.

---

* சமப்பாலென்பது முல்லையும் நெய்தலும். அது "முல்லையுநெய்தலு மொழிசமப் பாலே" என்னுந் திவாகரச் சூத்திரத்தாலறிக.

பாக்கமேயிருக்கைபாழிபட்டினம்பள்ளிமுட்டம்
பூக்கஞ்சம்வாகநொச்சிபூரியம்பாடிபூண்டி
மாக்கிளர்கோட்டம்வாழ்க்கைமடப்பமேகுடிகுடிக்கா
டாக்கமாங்குறிச்சிகுப்பமருப்பமோநத்தஞ்சும்மை. (௩௪)

அகரமேபுரமேசேரியகலுள்வைப்புறையுள்வேலி
நகரம்பக்கணங்கிராமநவில்கருவடங்குறும்பு
நிகரில்வேசனமேதாமநிவேசனம்பதியேபேடு
பகர்புரியெண்ணைந்தூர்நீர்பண்ணைசூழூர்கிராமம். (௩௫)

குடிநூறுபடவிருந்தாற்குறைவுளகிராமமாகும்
நெடியதுகுடியைஞ்ஞூறுநிறைந்ததுபெருங்கிராமம்
வடிவுடையிராசதானிமணிமதிற்கோபுரங்கள்
புடைபடுமகழாற்சூழ்ந்தபுரம்புரிநகரமும்பேர். (௩௬)

மலைசெறிவதுவேகேடமலையுடனாறுசூழூர்
அலைவறுகருவடங்களைஞ்ஞூறுகிராமத்திற்கே
தலைமைபெற்றதுமடப்பந்தாழ்கடற்றீரந்தன்னிற்
பலபலதீவிற்பண்டம்பகர்வபட்டனமென்றுமே. (௩௭)

மட்டறுநெல்லும்புல்லுமத்தகந்தன்னிலேற்றுத்
தட்டறுமலையினூரேசம்வாகமென்றுசாற்றும்
தொட்டதோணுமுகந்தான்சூழ்கழியிருக்கையென்ப
பட்டுநொச்சியுமேசிற்றூர்பள்ளியுமதன்பேர்பன்னும். (௩௮)

குறிச்சிசிற்றூரேசீறூர்குறிஞ்சிநன்னிலத்தூர்ப்பேராம்
பறித்திடுமுல்லையூரேபாடிபட்டினமேநெய்தல்
குறித்தெழுகுறும்பருரேகுறும்புபாலைக்கேகூற்றும்
பறித்தபாசறையேதெவ்வர்முனைப்பதிபாடிவீடு. (௩௯)

புரிகுடநகரம்பூக்கம்புரங்குடிநிகாயம்பள்ளி
சரணமாவாசம்பாக்கந்தாவளநிகமந்தாமம்
பரவியநிலயங்கோட்டம்பதிவாழ்க்கைசேர்வுபாழி
மருதநன்னிலத்தூரீரைந்திரட்டியாம்வசதியும்பேர். (௪௦)

காழகங்கடாரமாம்வாராணசிகாசியென்ப
ஈழமேசிங்களம்வீறெய்தியகருவூர்வஞ்சி
கோழியேயுறையூர்மாறன்கூடலேமதுரையாகும்
தாழ்விலாக்காஞ்சிகச்சிசாற்றிடிலவந்தியுஞ்சை. (௪௧)

ஊரின்பெயர்—பாக்கம், இருக்கை, பாழி, பட்டினம், பள்ளி மூட்டம், பூக்கம், சம்வாகம், நொச்சி, பூரியம், பாடி, பூண்டி, கோட்டம், வாழ்க்கை, மடப்பம், குடி, குடிக்காடு, குறிச்சி, குப்பம், அருப்பம், நத்தம், சும்மை. உஉ.

அகரம், புரம், சேரி, அகலுள், வைப்பு, உறையுள், வேலி, நகரம், பக்கணம், [பத்தணம்] கிராமம், கருவடம், குறும்பு, வேசனம், தாமம், நிவேசனம், பதி, பேடு, புரி. கஅ. (ஆ. சo.)
நீரும்வயலுஞ்சூழ்ந்தவூர்—கிராமம்.

சிறுகிராமமென்பது—நூறுகுடிநிறைந்தவூர்.
பெருங்கிராமமென்பது—ஐஞ்ஞூறுகுடிநிறைந்தவூர்.
இராசதானியின்பெயர்—புரம், புரி, நகரம். ங.

மலைசெறிந்தவூரின்பெயர்—கேடம். க.
மலையும் யாறுஞ்சூழ்ந்தவூரின்பெயர்—கருவடம். க.
ஐஞ்ஞூறுகிராமத்திற்குத் தலைமைபெற்ற கிராமத்தின்பெயர்—மடப்பம். க. பலபலதீவிற்பண்டம்விற்குமூரின்பெயர்—பட்டணம். க.

நெல்லும்புல்லும் நிறைந்தமலையினூரின்பெயர்—சம்வாகம். க.
கழியிருக்கையின்பெயர்—தோணுமுகம். க.
சிற்றூரின்பெயர்—பட்டு, நொச்சி, பள்ளி. ங.
குறிஞ்சிநிலத்தூரின்பெயர்—குறிச்சி, சிற்றூர், சீறூர். ங.

முல்லைநிலத்தூரின்பெயர்—பாடி. க.
நெய்தனிலத்தூரின்பெயர்—பட்டினம். க.
பாலைநிலத்தூரின்பெயர்—குறும்பு. க.
* பாசறையின்பெயர்—தெவ்வர்முனைப்பதி, பாடிவீடு. உ.

மருதநிலத்தூரின்பெயர்—புரி, குடம், நகரம், பூக்கம், புரம், குடி, நிகாயம், பள்ளி, சரணம், ஆவாசம், பாக்கம், தாவளம், நிகமம், தாமம், நிலயம், கோட்டம், பதி, வாழ்க்கை, சேர்வு, பாழி, வசதி. உக.

கடாரமென்னுமூரின்பெயர்—காழகம். க. காசியின்பெயர்—வாரணசி. க. சிங்களத்தின்பெயர்—ஈழம். க. கருவூரின்பெயர்—வஞ்சி. க. உறையூரின்பெயர்—கோழி. க. மதுரையின்பெயர்—கூடல். க. காஞ்சியின்பெயர்—கச்சி. க. அவந்திநகரின்பெயர்—உஞ்சை. க.

* பாசறை—பகைமேற்சென்றோருறைவிடம்.

மிதிலையேவிதேகையாங்காவிரிப்பூம்பட்டினம்புகாராம்
விதமுறுவினிதைகோலமிக்ககோசலைசாகேதம்
நிதிவளரயோத்திராமநிமலமாம்புலியூர்தில்லை
கதிதருசிதம்பரப்பேர்கமலையேதிருவாரூராம். (சஉ)

பெருகியகடகங்காப்புப்பிராகாரநொச்சியாரல்
புரிசைவேணகையேவாரிபுகழுவளகமேயிஞ்சி
அரணமேயெயிலேயோதையருஞ்சிறைவேதிசாலம்
மருவியவகப்பாவேலியறுமூன்றுமதிலினமம். (சங)

பரிகமேகிடங்குகேணிபாம்புரியுடுவேயோடை
விரவியவகழாறேபேர்மேவுமெந்திரமேகோசம்
மருவியநாஞ்சிஞேணிஞாயிலம்மதிலுறுப்பாம்
பரிகமேயகப்பாவோடுபதணமுள்ளுயர்ந்தமேடை. (சச)

விரிந்தகோபுரமேகோட்டிமிகும்புரவாயிலின்பேர்
பொருந்துமக்கதவில்விட்டுப்புகும்வழிபுதவுதானே
திருந்துமவ்வழிச்சார்திண்ணையளிந்தமாஞ்சிறந்தவாயிற்
பரந்திடும்படிச்சுருட்குப்பகரத்தினகமேநாமம். (சரு)

கோதிலாவணமங்காடிகூலம்பீடிகையுமப்பேர்
தீதில்வையாளிவீதிதிகழ்செண்டுவெளியேயென்ப
சாதியாம்புரவிவட்டந்திருமுற்றந்தானுமப்பேர்
வீதியின்பேரேஞெள்ளல்பூரியமரசர்வீதி. (சசு)

நெடுந்தெருமன்றமார்க்கநிகமமிம்முப்பேர்செப்பும்
ஒடுங்கியகுறுந்தெருக்களோதியமறுகுதானே
முடங்கியகோணந்தன்னைமுடுக்கெனலடுக்குமிப்பால்
அடங்கியமுச்சந்திப்பேரந்தியென்றறையலாமே. (சஎ)

தக்கசந்தாஞ்சதுக்கந்தருஞ்சிருங்காடகந்தான்
ஒக்குநாற்சந்தியாகுமோதியசதுக்கமும்பேர்
திக்குறும்வாடைசேடிசிரேணியாமாயர்வீதி
மிக்கவாபீனமாமாவேசனஞ்சிற்பர்வீதி. (சஅ)

பற்றியவேடர்வீதிபக்கணமாகுமென்ப
மற்றையம்பலமேமன்றம்பொதிபொதுச்சபையுமாகும்
தெற்றியம்பலந்தானென்றேசித்திரகூடநாமம்
வெற்றியத்தாணியோடுவேத்தவையரசிருக்கை. (சகூ)

மிதிலையின்பெயர்—விதேகை. க. காவிரிப்பூம்பட்டினத்தின்பெயர்—புகார். க.
அயோத்தியின்பெயர்—வினிதை, கோசலை, சாகேதம். ௩.
சிதம்பரத்தின்பெயர்-புலியூர்,தில்லை.உ. திருவாரூரின்பெயர்-கமலை

மதிலின்பெயர்—கடகம்,காப்பு, பிராகாரம், நொச்சி,ஆரல்,புரிசை, வேணகை, வாரி, உவளகம், இஞ்சி, அரணம், எயில், ஓதை, சிறை, வேதி, சாலம், அகப்பா, வேலி. கஅ.

அகழின்பெயர்—பரிகம், கிடங்கு, கேணி,பாம்புரி,உடு, ஓடை. ௬.
மதிலுறுப்பின்பெயர்—எந்திரம், கோசம், ஞாஞ்சில், தோணி, ஞாயில். ரு.
மதிலுள்ளுயர்ந்தமேடையின்பெயர்—பரிகம்,அகப்பா,பதணம். ௩.

நகரவாயிலின்பெயர்—கோபுரம், கோட்டி. உ.
நகரவாயிற்கதவில்விட்டுப்புகும்வழியின்பெயர்—புதவு. க.
நகரவாயிற்றிண்ணையின்பெயர்—அளிந்தம். க.
நகரவாயிற்படிச்சுருளின்பெயர்—அத்தினகம். க.

* அங்காடியின்பெயர்—ஆவணம், கூலம், பீடிகை. ௩.
குதிரைவையாளிவீதியின்பெயர்—செண்டுவெளி, புரவிவட்டம், திருமுற்றம். ௩.
வீதியின்பெயர்—ஞெள்ளல்.க. அரசர்வீதியின்பெயர்—பூரியம். க.

நெடுந்தெருவின்பெயர்—மன்றம், மார்க்கம், நிகமம். ௩.
குறுந்தெருவின்பெயர்—மறுகு. க.
கோணத்தெருவின்பெயர்—முடுக்கு. க.
முச்சந்தியின்பெயர்—அந்தி. க.

சந்தின்பெயர்—சதுக்கம். க.
நாற்சந்தியின்பெயர்—சிருங்காடகம், சதுக்கம். உ.
சிரேணியின்பெயர்—வாடை, சேடி. உ.
ஆயர்வீதியின்பெயர்-ஆபீனம்.க.சிற்பர்வீதியின்பெயர்-ஆவேசனம்.

வேடர்வீதியின்பெயர்—பக்கணம். க.
அம்பலத்தின்பெயர்—மன்றம், பொதி, பொது, சபை. ௪.
சித்திரகூடத்தின்பெயர்—தெற்றியம்பலம். க.
அரசிருக்கையின்பெயர்—அத்தாணி, வேத்தவை. உ.

* அங்காடி - கடைவீதி.

சாலைமாளிகைகுலங்கள்சாற்றியபவனங்கோயில்
மாலைவேலரசரிற்பேர்மந்திரநிலயங்கோட்டம்
ஆலயஞ்சினகரஞ்சேதிமந்தளிதேவர்கோயில்
சாலைமற்றறத்தின்சாலையறப்புறமோதம்பள்ளி. (௫௦)

வனைதருசமித்தமோமமண்டபமன்னன்றேவி
புனையில்லங்கந்தவாரம்போற்றுமந்தப்புரப்பேர்
மனையில்லம்புக்கின்மாடமந்திரம்வசதிவீடாம்
புனைகலனிருக்கைதானேபோற்றியபண்டசாலை. (௫௧)

விரவிறைவீட்டிறப்பேஸ்ளவியுமாம்விடங்கம்
தருமுகட்டின்பேர்வேயுள்வேய்தலாந்தகுமண்ணீடு
மருவியவேயாமாடமங்கணமுன்றின்முற்றம்
கருதுகல்விக்களப்பேர்கழகங்கல்லூரியாமே. (௫௨)

ஆயுதஞ்சூதுகூத்துப்பயில்களமரங்கமென்ப
வாயிலேகடைதுவாரம்வாரியாஞ்சோபானம்மே
தூயதாழ்வாரமென்பவங்கணந்தூம்புவாயாம்
ஆயபித்திகைசுவர்க்காமரமியநிலாமுற்றப்பேர். (௫௩)

ஆலயமோளிவாரியானைபின்கூடமாமே
சாலைமந்துரையிரண்டும்வாசியின்பந்திதானே
சாலகஞ்சாளரம்வாதாயனங்குறுங்கண்சாலம்
காலதர்பலகணிப்பேர்கரந்தகற்படைசுருங்கை. (௫௪)

குட்டிமம்படுத்தபூமிகுறடுவேதிகைமண்ணீடு
திட்டையேதிண்ணைசிற்றில்கூரையாங்குடில்குரம்பை
தட்டுருவடிச்சேரிப்பேர்தானடிக்குடிலென்றுமே
அட்டிலேபாகசாலையடுக்களைமடைப்பள்ளிப்பேர். (௫௫)

காழூறுகுமுதஞ்சுல்லிகாமரமடுப்புமுப்பேர்
தாழுமுத்தானமும்பேர்தடவொடுவேள்விக்குண்டம்
வேள்வியேயோமகுண்டநித்தமும்வேதியும்பேர்
பாழிதாபதங்கரண்டைபள்ளியேமுனிவர்வாசம். (௫௬)

அரசிருக்கையின்பெயர்—சாலை, மாளிகை, குலம்,பவனம்,கோயில்.ரு.
தேவர்கோயிலின்பெயர்—மந்திரம், நிலயம், கோட்டம், ஆலயம், சினகரம், சேதிமம், தளி. எ.
அறச்சாலையின்பெயர்-சாலை.க. ஓதும்பள்ளியின்பெயர்-அறப்புறம்.

ஓமமண்டபத்தின்பெயர்—சமித்தம். க.
மன்னன்றேவியில்லத்தின்பெயர்—கந்தவாரம், அந்தப்புரம். உ.
வீட்டின்பெயர்—மனை, இல்லம், புக்கில்,மாடம்,மந்திரம்,வசதி. சு.
பண்டசாலையின்பெயர்—கலனிருக்கை. க.

வீட்டிறப்பின்பெயர்—இறை, வளவி. உ.
முகட்டின்பெயர்—விடங்கம். க. * வேயுளின்பெயர்-வேய்தல்.க.
வேயாமாடத்தின்பெயர்—மண்ணீடு. க.
முற்றத்தின்பெயர்—அங்கணம், முன்றில். உ.
கல்வியயில்களத்தின்பெயர்—கழகம், கல்லூரி. உ.

ஆயுதஞ்சூதுகூத்துப்பயில்களத்தின்பெயர்—அரங்கம். க.
வாயிலின்பெயர்—கடை,துவாரம்,வாரி.ங. தாழ்வாரத்தின்பெயர்-சோபானம். க. † தூம்புவாயின்பெயர்—அங்கணம். க.
சுவரின்பெயர்—பித்திகை. க. நிலாமுற்றத்தின்பெயர்-அரமியம்.க.

யானைக்கூடத்தின்பெயர்—ஆலயம், ஒளி, வாரி. ங.
குதிரைப்பந்தியின்பெயர்—சாலை, மந்துரை, [மந்திரை.] உ.
பலகணியின்பெயர்—சாலகம், சாளரம், வாதாயனம், குறுங்கண், சாலம், காலதர். சு. ‡ கரந்தகற்படையின்பெயர்—சுருங்கை. க.

கற்படுத்தநிலத்தின்பெயர்—குட்டிமம். க.
திண்ணையின்பெயர்—குறடு, வேதிகை, மண்ணீடு, திட்டை. ச.
சிற்றிலின்பெயர்—கூரை. க. குடிலின்பெயர்—குரம்பை. க.
அடிச்சேரியின்பெயர்—அடிக்குடில். க.
மடைப்பள்ளியின்பெயர்—அட்டில், பாகசாலை, அடுக்களை. ங.

அடுப்பின்பெயர்—குமுதம், சுல்லி, காமரம், உத்தானம். ச.
ஓமகுண்டத்தின்பெயர்—தடவு, வேள்விக்குண்டம், வேள்வி, நித்தம், வேதி. ரு.
முனிவர்வாசத்தின்பெயர்—பாழி, தாபதம், கரண்டை, பள்ளி. ச.

---

* வேயுள் வேயப்படுமாடம். † தூம்புவாய் சலதாரை.
‡ கற்படை கோட்டையிற்கள்ளவழி.

மஞ்செனப்புகைசூழ்சுள்ளைமட்கலஞ்சுடுசூளைப்பேர்
பஞ்சரம்பண்ணுங்கூடாம்பகர்குலாயனமுமப்பேர்
குஞ்சுறைகட்சிகூண்டுகுடம்பையேகூட்டின்பேராம்
விஞ்சுநென்முதலாம்பண்டம்வீழ்குதிர்புகலென்றோதும். (ருஎ)

சட்டகம்பாயல்பள்ளிசயனமேயுறையுள்பாழி
கட்சியேயமளிசேக்கைகண்படைமளிதர்பாலாம்
பட்டமேபோர்த்துச்சேக்கைபண்ணையும்விலங்கின்பாலாம்
இட்டசேவகமேதண்டம்யானையின்றுயிலிடப்பேர். (ருஅ)

சுடுகாடுபுறங்காட்டோடுதொடர்காளவனம்பிணக்கா
டிடுகாடுபிதிர்வனத்தோடீமமேவனமயானம்
படுகாடுசுடுநிலங்கள்பன்னொன்றுஞ்சுடலையின்பேர்
கடிதாஞ்செம்புலம்பிணம்வீழ்களம்பறந்தலையுமாமே. (ருகூ)

வெற்றிகொள்களரியேயாகவபூமிவிளாகமேமொய்
செற்றிடும்போர்க்களம்வெஞ்செருக்களம்பொருகளப்பேர்
புற்றுவன்மீகமென்பபுகுமொதுக்கிடமேதுச்சில்
உற்றவேறிடமேகாந்தமொருவந்தமென்றும்பேரே. (சுo)

இழிவுகீழ்பயம்புதாழ்வேயேற்றிடும்படுகர்ஞெள்ளல்
குழியுவளகங்கிழக்குக்கூறவல்பள்ளம்பத்தாம்
பழையதாங்கொல்லைப்பேரேபகர்முதைப்புனமாமென்ப
விழைவுறுபுதியகொல்லையிதைப்புனமுழவுதொய்யல். (சுக)

வதிசுரம்வட்டைநீண்டவகுந்தொடுவயவைவாரி
அதர்நெறிசெலவுதாரியயனமேயிடைவைமார்க்கம்
பதவையேயத்தஞ்செப்பம்பட்டமேயியவைபாதை
உதவியசரியேதாரைபொழுக்கமேநடவையாறு. (சுஉ)

தெருவகிர்கிறிமூவொன்பான்செப்பியவழியின்பேரே
அருநெறிப்பேர்சுரத்தோடத்தமுங்கடமுமாகும்
கருதியகவலைதானேகவர்ந்திடுவழிப்பேரென்ப
பெருமதயானைசெல்லும்பிறவழிதண்டமாமே. (சுந)

சிறுவழிவிடங்கராகுஞ்சிறந்தகற்படியினுமம்
மறுவில்சோபானமேயாரோகணந்தானுமற்றும்
நெறிபடுமளக்கரென்பநீள்வழிநாமந்தானே
உறுதியாம்புதுவரம்பினுறுவழிமரிசியென்ப. (சுச)

மட்கலஞ்சுடுசூளையின்பெயர்—சுள்ளை. க.
பண்ணுங்கூட்டின்பெயர்—பஞ்சரம், குலாயனம். உ.
கூட்டின்பெயர்—கட்சி, கூண்டு, குடம்பை. ரு.
குதிரின்பெயர்—புகல். க.

மனிதர்துயிலிடத்தின்பெயர்—சட்டகம், பாயல், பள்ளி, சயனம்,
உறையுள், பாழி, கட்சி, அமளி, சேக்கை, கண்படை. கO.
விலங்குதுயிலிடத்தின்பெயர்-பட்டம், போத்து, சேக்கை, பண்ணை.
யானைதுயிலிடத்தின்பெயர்—சேவகம், தண்டம். உ.

சுடலையின்பெயர்—சுடுகாடு, புறங்காடு, காளவனம், பிணக்காடு,
இடுகாடு, பிதிர்வனம், ஈமம், வனம், மயானம், படுகாடு, சுடுநிலம். கக
பிணம்வீழ்களத்தின்பெயர்—செம்புலம், பறந்தலை. உ.

பொருகளத்தின்பெயர்—களரி, ஆகவபூமி, விளாகம், மொய், போர்
க்களம், செருக்களம். சு.
புற்றின்பெயர்—வன்மீகம். க. ஒதுக்கிடத்தின்பெயர்—துச்சில். க.
ஏகாந்தத்தின்பெயர்—வேறிடம், ஒருவந்தம். உ.

பள்ளத்தின்பெயர்—இழிவு, கீழ், பயம்பு, தாழ்வு, படுகர், ஞெள்ளல்,
குழி, உவளகம், கிழக்கு, அவல். கO.
பழங்கொல்லையின்பெயர்—முதைப்புனம். க.
புதுக்கொல்லையின்பெயர்—இதைப்புனம். க.
உழவின்பெயர்—தொய்யல். க.

வழியின்பெயர்—வதி, சுரம், வட்டை, வகுந்து, வயவை, வாரி,
அதர், நெறி, செலவு, தாரி, அயனம், இடவை, மார்க்கம், பதவை,
அத்தம், செப்பம், பட்டம், இயவை, பாதை, சரி, தாரை, ஒழு
க்கம், நடவை, ஆறு. உச.

தெரு, வங்கர், கிறி. ரு. (ஆ உஎ.)
அருநெறியின்பெயர்—சுரம், அத்தம், கடம். ரு.
கவர்வழியின்பெயர்—கவலை. க.
யானைசெல்லும்வழியின்பெயர்—தண்டம். க.

சிறுவழியின்பெயர்—விடங்கர். க.
கற்படியின்பெயர்—சோபானம், ஆரோகணம். உ.
நீள்வழியின்பெயர்—அளக்கர். க.
புதுவரம்பின்வழியின்பெயர்—மரிசி. க.

இடையுழிவழிநிலம்பாலில்லுழையுளிகண்பக்கம்
புடைதலைமுதல்வளாகம்புலம்வலஞ்சூழல்பாங்கர்
கடைவயின்பட்டிவைப்புக்கால்களந்தேயம்பாடே
இடமென்பமுன்பின்சார்வாய்கீழ்மேலுமதுவேயென்ப. (சுரு)

பாங்கர்பாரிசமருங்குபால்புடைபுறமேபக்கம்
ஞாங்கருஞ்சிறையுமாடுநாட்டுபவதுவேமீட்டும்
நாங்கிளர்நள்ளுநாப்பணனந்தலைபிரமமையம்
ஆங்குறுமத்தியத்தோடாகுநாநடுவேழ்பேரே. (சுசு)

ஈண்டேயிவ்விடமென்பேராமிம்பரேயிவணெனுஞ்சொல் [ல்
யாண்டேயெவ்விடமென்பேராம்யாங்கென்ப வெவணெனுஞ்சொ
ஆண்டேயவ்விடமென்பேர்தானுகுங்கூப்பிடுகுரோசம்
காண்டும்யோசனைபுகைப்பேர்காவதங்காதமாமே. (சுஎ)

முன்னுமேலுமற்றுமொழியுமஞ்ஞாங்கர்தானே
முன்னரேதலைத்தாளாகுமுதலொடுபுரமுமப்பேர்
அன்னதிவ்விடப்பேர்க்கெட்டோடறுபதுவிருத்தஞ்செய்தான்
மன்னுசீர்க்குணபத்திரன்றாள்வணங்குமண்டலவன்றனே. (சுஅ)

இடப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம் - சஉக.

## ஆ ரு வ து
## பல்பொருட்பெயர்த்தொகுதி.

### கா ப் பு.

உலகெலாமிறைஞ்சியேத்தவுலகெலாமுணர்ந்தமூர்த்தி
அலகிலாஞானவாரியாதிருகணங்களோடும்
இலகுமுவெயிலுள்யாளியெழிலணையிருந்தோன்பாதம்
பலமுறைவணங்கியேத்திப்பல்பொருட்பெயருஞ்சொல்வாம். (க)

மாசைபீதகமேபீதமாடையேமாடுவேங்கை
ஆசையேசுவணங்காரமருத்தங்காஞ்சனமேகாணம்
தேசிகங்கனங்கைத்துச்செந்தாதுபொலமேயத்தம்
பேசியசாமிவித்தம்பெருந்தனமுடலேபண்டம். (உ)

இடத்தின்பெயர்—இடை, உழி, வழி, நிலம், பால், இல், உழை, உளி, கண், பக்கம், புடை, தலை, முதல், வளாகம், புலம், வலம், சூழல், பாங்கர், கடை, வயின், பட்டி, வைப்பு, கால், களம், தேயம், பாடு, முன், பின், சார், வாய், கீழ், மேல். ௩௨.

பக்கத்தின்பெயர்—பாங்கர், பாரிசம், மருங்கு, பால், புடை, புறம், ஞாங்கர், சிறை, மாடு. ௯.

நடுவின்பெயர்—நள், நாப்பண், நளிந்தலை, பிரமம், மையம், மத்தியம், நா. ௭.

இவ்விடத்தின்பெயர்—ஈண்டு. க. இம்பரென்பது—இவண். க.
எவ்விடத்தின்பெயர்—யாண்டு. க. யாங்கென்பது—எவண். க.
அவ்விடத்தின்பெயர்—ஆண்டு. க.
கூப்பிடுதூரத்தின்பெயர்—குரோசம். க.
யோசனைதூரத்தின்பெயர்-புகை. க. காதத்தின்பெயர்-காவதம். க.

ஞாங்கரென்பது—முன், மேலுக்கும்பெயர்.
முன்னரின்பெயர்—தலைத்தாள், முதல், புரம். ௩.

# பெயர்ப்பிரிவு.

இ - ள். உலகு எலாம் இறைஞ்சி ஏத்த உலகு எலாம் உணர்ந்த மூர்த்தி - உலகத்தவர்கள் யாவரும் வணங்கித் துதிக்க உலகமுழுதையும் அறிந்த கடவுளும்,—அலகு இலா ஞான வாரி - அளவில்லாத ஞானக்கடலும்,—ஆறிருகணங்களோடும் இலகு மூவெயிலுள் எழில் யாளி அணை இருந்தோன் பாதம் - பன்னிரண்டு கணங்களோடும் விளங்குகின்ற மும்மதிலையுடைய சமவசரணத்தினுள்ளே அழகினையுடைய சிங்காசனத்தில் வீற்றிருந்தவரும் ஆகிய அருகக்கடவுளுடைய பாதத்தை,—பலமுறை வணங்கி ஏத்தி - பலதரம் வணங்கித் துதித்து,—பல்பொருட்பெயரும் சொல்வாம் - பல்பொருட் பெயர்த்தொகுதியும் (யாம்) கூறுவாம். எ - று.

பொன்னின்பெயர்—மாசை, பீதகம், பீதம், மாடை, மாடு, வேங்கை, ஆசை, சுவணம், காரம், அருத்தம், காஞ்சனம், காணம், தேசிகம், கனகம், கைத்து, செந்தாது, பொலம், அத்தம், சாமி, வித்தம், தனம், உடல், பண்டம். ௨௩.

இரணியநிதிவெறுக்கையீகைகல்யாணமேமம்
பொருளுரைசந்திரஞ்சாம்பூனதம்பூரியீழம்
திரவியஞ்சாதரூபஞ்செங்கொல்லுநிதானமாழை
அரிதபனியமாறேழுஞ்செம்பொனாடகமுமாமே. (௩)

எதிரில்பொன்வெள்ளிசெம்போடிரும்பீயம்பஞ்சலோகம்
பொதிகஞ்சந்தராவுங்கூட்டிப்புகன்றிடினேழுலோகம்
கதிர்நவமணியின்பேருங்கடவுண்மாமணியின்பேரும்
நிதிநிதானங்களென்பநீண்டபொற்காசுகாணம். (௪)

கருதியமணிப்பொதுப்பேர்காசொடுமனவுமாகும்
அரதனஞ்சலாகைதெய்வவகன்மணிப்பொதுப்பேர்தானே
மருவுசெம்மணியேமற்றைமாமணிமாணிக்கப்பேர்
பரவியபதுமராகங்கௌத்துபமென்றுபன்னும். (௫)

வரைவறுவாலவாயம்வைடூரியத்தினாமம்
நிரைபெறுமணியெனும்பேர்நீலமாமணியின்பேரே
மரகதமரியேபச்சைவச்சிரம்வைரமாரம்
தரளநித்திலமேமுத்துமௌத்திகந்தானுமப்பேர். (௬)

துப்புடன்றுவராத்தந்துகிர்பிரவாளமைந்தும்
மெய்ப்படுபவளமென்பவித்துருமந்தானும்பேர்
கைப்படுதகணைமாழைகாட்டும்வங்காரமும்பேர்
ஒப்பவேயுருக்கிக்கூட்டுமுலோகத்தின்கட்டியாமே. (௭)

சங்கநீணிதியத்தோடுதாமரைநிதியந்தானே
அங்கண்மாஞாலத்தேயவ்விருவுருவாகுமென்ப
பொங்கியகோசந்தண்டம்போற்றுபண்டாரமாகும்
தங்கிடுமுருக்கினாமமெஃகெனச்சாற்றலாமே. (௮)

கருதியசுல்லுத்தாரங்களதௌதம்வெண்பொன்னோடும்
இரசதம்வெள்ளியின்பேரேற்றகாரீயநாகம்
எருவையேயுதும்பரந்தாமிரமொடுவடுவேசெம்பாம்
பொருவறுசீருள்சிக்கமிவைகளின்பொதுப்பேராமே. (௯)

திருந்தியவீயம்வங்கஞ்சீருளேசீசமும்பேர்
புரிந்தபித்தளையேமாயாபுரியாரகூடமும்பேர்
கருங்கஞ்சமுறைகளேவெண்கலமதுகந்தராவாம்
கருங்கொல்லேயயமேசொன்னகரும்பொன்னுமிரும்பினாமம். (௧௦)

இரணியம், நிதி, வெறுக்கை, ஈகை, கல்யாணம், ஏமம், பொருள், உரை, சந்திரம், சாம்பூனதம், பூரி, ஈழம், திரவியம், சாதரூபம், செங்கொல், நிதானம், மாழை, அரி, தபனியம், ஆடகம். உ௦. (ஆ சங.)

பஞ்சலோகமாவன—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.
எழுலோகமாவன—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், கஞ்சம், தரா.
நவமணியின்பெயர்-நிதி. க. கடவுண்மணியின்பெயர்-நிதானம். க.
பொற்காசின்பெயர்—காணம். க.

மணிப்பொதுப்பெயர்—காசு, மனவு. உ.
தெய்வமணிப்பொதுப்பெயர்—அரதனம், சலாகை. உ.
மாணிக்கத்தின்பெயர்—செம்மணி, மாமணி. உ.
பதுமராகத்தின்பெயர்—கௌத்துபம். க.

வைடூரியத்தின்பெயர்—வாலவாயம். க.
நீலமணியின்பெயர்-மணி. க. மரகதத்தின்பெயர்-அரி, பச்சை. உ.
வைரத்தின்பெயர்—வச்சிரம். க.
முத்தின்பெயர்—ஆரம், தரளம், நித்திலம், மௌத்திகம். ச.

பவளத்தின்பெயர்—துப்பு, துவர், அரத்தம், துகிர், பிரவாளம், வித்துருமம். ரு.
உலோகக்கட்டியின்பெயர்—தகணை, மாழை, வங்காரம். ங.

சங்கநிதியென்பது—சங்கின்வடிவினது.
பதுமநிதியென்பது—தாமரைவடிவினது.
பண்டாரத்தின்பெயர்—கோசம், தண்டம். உ.
உருக்கின்பெயர்—எஃகு. க.

வெள்ளியின்பெயர்—சுல்லு, தாரம், களதௌதம், வெண்பொன், இரசதம். ரு. காரீயத்தின்பெயர்—நாகம். க.
செம்பின்பெயர்—எருவை, உதும்பரம், தாமிரம், வடு. ச.
இவைகளின்பொதுப்பெயர்—சீருள், சிக்கம். உ.

ஈயத்தின்பெயர்—வங்கம், சீருள், சீசம். ங.
பித்தளையின்பெயர்—மாயபுரி, ஆரகூடம். உ.
வெண்கலத்தின்பெயர்-கஞ்சம்,உறை.உ.தராவின்பெயர்-மதுகம்.க
இரும்பின்பெயர்—கருங்கொல், அயம், கரும்பொன். ங.

தொந்தமாயிரும்புள்வாங்குஞ்சலாகைசும்பகமேயென்ப
சந்திரகிரணநீர்கால்சலாகையேசந்திரகாந்தம்
வந்தசூரியகாந்தந்தான்மற்றதனொளிதீக்காலும்
நந்துகைரிகமேதாதுநற்செங்கல்காவிக்கல்லே. (கக)

கண்ணியபளிங்கினமங்காழ்படிகம்பருக்கை
மண்ணியகவுடிசோகிவராடியேபலகறைப்பேர்
பண்ணியம்வளமேகூலம்பண்டாரம்பண்ணிகாரம்
நண்ணியபலபண்டப்பேர்நடைப்பரிகாரமும்பேர். (கஉ)

விருப்பமாமரும்பண்டப்பேர்மேவியதாரமாகும்
கருப்பூரம்பளிதத்தோடுகனசாரஞ்சசிமுப்பேரே
பிரித்தமான்மதங்கத்தூரிபீதமேகலவையோடு
பொருத்தும்வட்டிகையுமற்றைப்புலியுநால்வகையிற்சாந்து. (கங)

கலவைச்சேறேகரலேகவண்ணமேகளபமேமெய்
குலவியவிரையேசாந்தாங்குங்குமப்பேர்செஞ்சாந்தாம்
இலகியதகரமேலங்காசறைமயிர்ச்சாந்தின்பேர்
கல்லவையேகளபமென்பகலம்பகங்கண்டபேரே. (கச)

உலப்பிலாத்தேய்வைசெச்சைசெறிகுழம்புற்றபேர்கைத்
தலத்தினிற்கொட்டலப்பல்சாத்துதல்சதுர்த்தலும்பேர்
புலர்த்தலேவரித்தலென்பபூசுதலின்பேர்தானே
அலைத்துமெய்ப்பூசும்பூச்சினபிதானமங்கராகம். (கரு)

இலகியவெழுதுகோலாவிளையவர்முலையுந்தோளும்
நலமிகவெழுதுகோலநவின்றிடுந்தொய்யிலென்ப
திலகமேசுடிகைசுட்டிதிலதமுமதன்பேர்செப்பும்
திலகம்புண்டரங்களென்பசெறிநெற்றிக்குறிகளாமே. (கசு)

இங்குலிகந்தான்சாதிலிங்கமாங்குலிகமும்பேர்
குங்குலியந்தானேகுங்குலுவாங்குக்குலுவுமப்பேர்
செங்கதிர்க்கிரணம்போலுஞ்சிந்தூரப்பேர்சேலேகம்
இங்குவேபெருங்காயப்பேரெழிலலத்தகஞ்செம்பஞ்சு. (கஎ)

பறையரக்கரத்தந்துப்பாம்பழுப்பென்பதரிதாரப்பேர்
அறுகுவெள்ளரிசிகூட்டியணிவ * தக்கதமென்றுரும்
குறுணியொவ்வொன்றதாகக்கொள்கலம்பல்லுணுச்கள்
பெறுமுறைபரப்பிவைப்பபிரப்பெனப்பேசலாமே. (கஅ)

---

* அக்கதத்தை அச்சுதமென்று வழங்குவர்.

* இரும்புள்வாங்குஞ்சலாகையின்பெயர்—சும்பகம். க.
சந்திரகிரணத்தினீர்கால்சலாகையின்பெயர்—சந்திரகாந்தம். க.
சூரியனொளியிற்றீக்கால்சலாகையின்பெயர்—சூரியகாந்தம். க.
காவிக்கல்லின்பெயர்—கைரிகம், தாது, செங்கல். ங.

பளிங்கின்பெயர்—காழ், படிகம், பருக்கை. ங.
பலகறையின்பெயர்—கவுடி, சோகி, வராடி. ங.
பலபண்டத்தின்பெயர்—பண்ணியம், வளம், கூலம், பண்டாரம், பண்ணிகாரம், நடைப்பரிகாரம். சு.

அரும்பண்டத்தின்பெயர்—தாரம். க.
கருப்பூரத்தின்பெயர்—பளிதம், கனசாரம், சசி. ங.
கத்தூரியின்பெயர்—மான்மதம். க.
நால்வகைச்சாந்தாவன—பீதம், கலவை, வட்டிகை, புலி.

சாந்தின்பெயர்-கலவைச்சேறு, கர்லேகவண்ணம், களபம், விரை. ச.
குங்குமத்தின்பெயர்—செஞ்சாந்து. க.
மயிர்ச்சாந்தின்பெயர்—தகரம், ஏலம், காசறை. ங.
கலவையின்பெயர்—களபம், கலம்பகம். உ.

செறிகுழம்பின்பெயர்—தேய்வை, செச்சை. உ.
அப்பலின்பெயர்—கொட்டல், சாத்துதல், சதுர்த்தல். ங.
பூசுதலின்பெயர்—புலர்த்தல், வரித்தல். உ.
மெய்ப்பூச்சின்பெயர்—அங்கராகம். க.

முலையினுந்தோளினுமெழுதுகோலத்தின்பெயர்—தொய்யில். க.
திலகத்தின்பெயர்—சுடிகை, சுட்டி, திலதம். ங.
நெற்றிக்குறியின்பெயர்—திலகம், புண்டரம். உ.

சாதிலிங்கத்தின்பெயர்—இங்குலிகம், குலிகம். உ.
குங்குலியத்தின்பெயர்—குங்குலு, குக்குலு. உ.
சிந்தூரத்தின்பெயர்—சேலேகம். க.
பெருங்காயத்தின்பெயர்-இங்கு. க. செம்பஞ்சின்பெயர்-அலத்தகம்.

அரக்கின்பெயர்-அரத்தம், துப்பு. உ. அரிதாரத்தின்பெயர்-பழுப்பு. க
அக்கதமென்பது—அறுகுவெள்ளரிசிகூட்டியணிவது.
பிரப்பென்பன—குறுணியொவ்வொன்றதாகக்கொள்கலத்துட்பல் லுணக்கள் பரப்பிவைப்பனவாம்.

---

* இரும்புள்வாங்குஞ்சலாகை—ஊசிக்காந்தம்.

வெந்திடுஞ்சமிதையோமவிறகெனவறையலாகும்
நிந்தைசெய்ஞெகிழிகொள்ளிநெருப்புறுவிறகின்பேரே
கந்துளேயிருந்தைநல்லங்கரியென்பகடைக்கொள்ளிக்கு
முந்துபேரலாதமுற்கமுளரியோடிராதமாமே. (௧௯)

அடலைவெண்பலிசாம்பர்ப்பேராந்திருநீறேபற்பம்
பொடியொடுவிபூதிகாப்பாம்புண்ணியசாந்தஞ்சாணி
பொடிதுகள்சுண்ணந்தூளிபூழியேபுழுதியாகும்
சுடுசுண்ணச்சாந்துமண்ணுஞ்சுதையொடுகளபமும்பேர். (௨௦)

நொய்யதோரிலவின்பஞ்சுநுவன்றபேர்பூளைதானே
பையெனும்பருத்திபன்னல்பரியுமாந்தூலம்பஞ்சாம்
ஐயநுண்ணிடையார்நூற்குமப்பஞ்சிற்றொடர்நுனிப்பேர்
துய்யெனுநாமமாகுந்தொடர்பிசின்பயினென்றேபேர். (௨௧)

அடிசில்போனகமேமூரலமலையேயயினிபொம்மல்
மடைமிசையுணாப்புழுக்கல்வல்சிபாளிதமேயன்னம்
தொடுபதமிதவைபாத்துத்துற்றுண்டிசொன்றிபுன்க
மொடுசெருவசனமூண்கூழோதனம்புகாவேசோறும். (௨௨)

மெச்சமிழ்தவியினோடுபலிசருவிண்ணோருணும்
அச்சமில்பொதிசோறென்பதாற்றுணாத்தோட்கோப்பும்பேர்
மிச்சிலோடெச்சஞ்சேடமிகுபொருளென்பமுப்பேர்
உச்சிட்டமொன்றேயெச்சில்பிரப்புப்பேருண்டியாமே. (௨௩)

நிறையநெய்பொதிபாற்சோறுநிகழ்த்துபாயசமென்றாகும்
நறையிடுங்கருனைதானேநாட்டியபொரியலின்பேர்
அறைதருவெந்தைபிட்டாமஃகுல்லியுக்காரிப்பேர்
வறையலின்பேரேயோச்சைமலாவகம்பிண்ணாக்கின்பேர். (௨௪)

நொடிதரிலருப்பம்பிட்டாநுவலையேபிண்டிமாப்பேர்
இடியுமாமிலட்டுகத்தோடேற்றமோதகமேதோசை
அடைநொலையபூபங்கஞ்சமண்டகையப்பவர்க்கம்
இடையறநுகர்வோர்தங்கட்கிவைகள்சிற்றுண்டியாமே. (௨௫)

கூடியதுவையெனுஞ்சொற்புளிங்கறிகூட்டமைத்து
நீடியேசமைப்பதாகுநீடாணங்கறிகளின்பேர்
காடியேயவாகுமோழைகஞ்சிபாகேகுழம்பாம்
பாடிலாவமிழ்துகீரம்பயசுதுத்தம்பயம்பால். (௨௬)

ஓமவிறகின்பெயர்—சமிதை. க.
நெருப்புறுவிறகின்பெயர்—ஞெகிழி, கொள்ளி. உ.
கரியின்பெயர்—கந்துள், இருந்தை, நல்லம். ந.
கடைக்கொள்ளியின்பெயர்—அலாதம், உற்கம், முளரி, இராதம். ச.

சாம்பரின்பெயர்—அடலை, வெண்பலி. உ.
திருநீற்றின்பெயர்—பற்பம், பொடி, விபூதி, காப்பு. ச.
சாணியின்பெயர்—புண்ணியசாந்தம். க.
புழுதியின்பெயர்—பொடி, துகள், சுண்ணம், தூளி, பூழி. ரு.
சுண்ணச்சாந்தின்பெயர்—மீண், சுதை, களபம். ந.

இலவின்பஞ்சின்பெயர்—பூளை. க.
பருத்திப்பஞ்சின்பெயர்-பன்னல், பரி. உ. பஞ்சின்பெயர்-தூலம். க.
நூற்கும்பஞ்சிற்றொடர்நுனியின்பெயர்—துய். க.
பிசினின்பெயர்—பயின். க.

சோற்றின்பெயர்—அடிசில், போனகம், மூரல், அமலை, அயினி, பொம்மல், மடை, மிசை, உணா, புழுக்கல், வல்சி, பாளிதம், அன்னம், பதம், மிதவை, பாத்து, நுற்று, உண்டி, சொன்றி, புன்கம், சரு, அசனம், ஊண், கூழ், ஓதனம், புகா. உசு.

விண்ணோருணின்பெயர்—அமிழ்து, அவி, பலி, சரு. ச.
* பொதிசோற்றின்பெயர்—ஆற்றுணா, தோட்கோப்பு. உ.
மிகுபொருளின்பெயர்—மிச்சில், எச்சம், சேடம். ந.
எச்சிலின்பெயர்-உச்சிட்டம். க. பேருண்டியின்பெயர்-பிரப்பு. க.

பாற்சோற்றின்பெயர்—பாயசம். க. பொரியலின்பெயர்—கருனை. க.
பிட்டின்பெயர்—வெந்தை. க. உக்காரியின்பெயர்—அஃகுல்லி. க.
வறையலின்பெயர்--ஒச்சை. க. பிண்ணாக்கின்பெயர்--மலாவகம். க.

மாவின்பெயர்—அருப்பம், பிட்டம், நுவணை, பிண்டி, இடி. ரு.
அப்பவர்க்கமாவன—இலட்டுகம், மோதகம், தோசை, அடை, நொலை, அபூபம், கஞ்சம், அண்டகை. இவைகள் சிற்றுண்டியாம்.

புளிங்கறியின்பெயர்—துவை. க. கறியின்பெயர்—நீடாணம். க.
கஞ்சியின்பெயர்—காடி, யவாகு, மோழை. ந.
குழம்பின்பெயர்—பாகு. க.
பாலின்பெயர்—அமிழ்து, ஈரம், பயசு, துத்தம், பயம். ரு.

---

* பொதிசோறு—கட்டுச்சோறு.

ததிதயிர்பெருகுமாகுந்தக்கிரங்காலசேயம்
மதித்மோடளையருப்பமச்சிகைமுசரேமோர்ப்பேர்
விதமுறையங்கவீனநவநீதம்வெண்ணெயாநெய்
இதமுறுகிருதநேயமிழுதாச்சியந்துப்பாமே. (உஎ)

கண்டம்பாளிதங்களென்பகண்டசர்க்கரையினுமம்
கண்டேயயிரும்புல்லகண்டமுமதற்கேகூற்றும்
விண்டெழுகட்டிகன்னல்விசயமேகுளமக்காரம்
பிண்டசர்க்கரையைந்தேபேர்பிரசந்தேன்மதுவுமப்பேர். (உஅ)

அரியல்பாடலிதேன்மட்டேயரிட்டமேசுண்டைதொண்டி
முருகுசாயனமேகௌவைமுண்டகஞ்சாதிசாலி
பிரசமாதவமேமேதைபிழிசேறுதணியன்மாரி
சுரைமதுசுமாலிமாலிசுலோகியேசொல்விளம்பி. (உகூ)

நறவொடாசவமேதொப்பிநனையிக்குஞாளிகுந்தி
வெறிவெடிசாறுபானம்விகுணியேசோபம்வேரி
மறவிதேஞ்சுவிகைதேறன்மகரந்தமதிரையாம்பல்
அறிவழிபடுவாறெட்டுங்கள்ளினுக்கமைத்தபேரே. (௩௰)

அரியதோரமிழ்துதானேயமரியேசுதைமருந்தாம்
கரளமேயாலங்காரிகடுவுடன்காளஞ்சிங்கி
விரவியவாலகாலம்விடமெட்டுநஞ்சின்பேரே
பருகுதறுவையேபானம்பகர்நேயந்தைலமெண்ணெய். (௩க)

அலைவறுதுற்றியுண்பவாந்திற்றிதின்பவாகும்
இலைநுகர்விலங்குணவேகுளகெனவியம்பலாகும்
நலனுறுபறவையோடுநாட்டொருசார்விலங்கின்
உலகினூணுண்டியூட்டியுணவிரையுறையுமாமே. (௩உ)

துப்புடனேதுவென்னுஞ்சொற்றுணைக்காரணப்பேர்
ஒப்பவேசாதனத்தோடுபகரணமுமாமப்பேர்
செப்பியயுகளத்தோடுசேர்ந்திடுமுபயமென்ப
அப்படியிரண்டிலக்கத்தபிதானமாகுந்தானே. (௩௩)

பணிவுறுகானல்வெண்டேர்பாழ்த்தபேய்த்தேருமாகும்
துணியறைதூக்குத்தானேசல்லியாஞ்சொல்லுநெல்லின்
மணிபலகறையினோடுமகிழ்விதையலகென்றாகும்
அணியொழுங்கோளிபந்திநிரைநிரல்வரிசையாமே. (௩ச)

தயிரின்பெயர்—ததி, பெருகு. உ.
மோரின்பெயர்—தக்கிரம், காலசேயம், மதிதம், அளை, அருப்பம், மச்சிகை, முசர். எ.
வெண்ணெயின்பெயர்—ஐயங்கவீனம், நவநீதம். உ.
நெய்யின்பெயர்—கிருதம், நேயம், இழுது, ஆச்சியம், துப்பு. ரு.

கண்டசர்க்கரையின்பெயர்—கண்டம், பாளிதம், அயிர், புல்ல கண்டம். ச.
சர்க்கரையின்பெயர்—கட்டி, கன்னல், விசயம், குளம், அக்காரம். ரு.
தேனின்பெயர்—பிரசம், மது. உ.

கள்ளின்பெயர்—அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌலை, முண்டகம், சாதி, சாலி, பிரசம், மாதவம், மேதை, பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம்பி. உசு.

நறவு, ஆசவம், தொப்பி, நனை, இக்கு, ஞாளி, குந்தி, வெறி, வெடி, சாறு, பானம், விருணி, சோபம், வேரி, மறவி, தேம், சுவிகை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல், படு.உஉ. (ஆசஅ.)

அமிழ்தின்பெயர்—அமரி, சுதை, மருந்து. ௩.
நஞ்சின்பெயர்—கரளம், ஆலம், காரி, கடு, காளம், சிங்கி, ஆலகாலம், விடம். அ.
பானத்தின்பெயர்—பருகுதல், துவை. உ.
எண்ணெயின்பெயர்—நேயம், தைலம். உ.

உண்பவற்றின்பெயர்—துற்றி. க. தின்பவற்றின்பெயர்—திற்றி. க.
இலைநுகர்விலங்குணவின்பெயர்—குளகு. க.
பறவையொருசார்விலங்குகளினுணவின்பெயர்—உண்டி, ஊட்டி, உணவு, இரை, உறை. ரு.

துணைக்காரணத்தின்பெயர்—துப்பு, எது, சாதனம், உபகரணம். ச.
இரண்டென்னுமிலக்கத்தின்பெயர்—யுகளம், உபயம். உ.

கானலின்பெயர்—வெண்டேர், பேய்த்தேர். உ.
சல்லியின்பெயர்—துணி, அறை, துரக்கு. ௩.
நென்மணிபலகறைமகிழ்விதையென்பவற்றின்பெயர்—அலகு. க.
வரிசையின்பெயர்—அணி, ஒழுங்கு, ஒளி, பந்தி, நிரை, நிரல். சு.

மகரகேதனனென்றவாமற்கேதொழும்புசெய்வோன்
இகலிலாக்குணபத்திரன்றனிருசரணிதயம்வைத்தோன்
மிருபுகழ்புனையாநின்றவீரைமண்டலவன்செய்தான்
பகர்தருமுப்பத்தைந்துபல்பொருட்பெயர்க்குச்செய்யுள். (௩௫)

பல்பொருட்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம் — ௪௫௬.

ஏழாவது

## செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

### காப்பு.

முழுமதிமுக்குடைக்கீழ்மூர்த்திதாள்போற்றல்செய்தே
எழுவகையுலோகந்தன்னிலேற்றமண்மரங்கடம்மிற்
பழுதறுதோலினூலிற்பற்பலவிதங்களாக
வழுவுறுதிடுஞ்செயற்கைவடிவப்பேர்த்தொகுதிசொல்வாம். (௧)

பரசொடுரவியந்தண்ணம்பாலமேகணிச்சியென்ப
விரவியமழுப்படைப்பேர்மேவுசக்கரப்பேர்நேமி
பரிதியேவலயமெஃகம்பகர்சுதரிசனமாழி
திருமிகுமொளிவட்டம்மேதிகிரியாம்வளையுமப்பேர். (௨)

தனுவொடுசிந்துவாரந்தடிசராசனங்கோதண்டம்
குனிசிலைதுரோணஞ்சாபங்கொடுமரத்தோடுவேணு
முனிதவர்சராசேரோபங்கார்முகமீரேழிவைவில்லின்பேர்
இனியதோர்சார்ங்கமால்வில்லீசன்விற்பினாகமாமே. (௩)

பூரியேதொடையேயாவம்பூட்டேசிஞ்சினிநரம்பு
நாரியேவடங்குணந்தானாணியொன்பானேநாமம்
கூரியசரமேவாளிகொடுங்கணைபகழிவண்டு
பாரியகதிரங்கங்கபத்திரமத்திரங்கோல். (௪)

பாணமாசுகமேபூதைபத்திரிவிசிகம்புங்கம்
தோணிசாயகமேபல்லந்தொடைசிலீமுகமேவம்பாம்
பூணுறுமம்புக்கட்டிப்புதைபுழுகாகுந்தூப்பி
கோணிலாக்குலையேபுங்கங்குதையுதண்மொட்டம்பாமே. (௫)

# பெயர்ப்பிரிவு.

இ - ள். முழுமதி முக்குடைக்கீழ் மூர்த்தி தாள் போற்றல் செய்து-பூரணசந்திரன்போலும் மூன்றுகுடையின்கீழ் வீற்றிருந்த அருகக்கடவுளுடைய பாதத்தைத் துதிசெய்து,—எழுவகை உலோகந்தன்னில் - எழுவகைப்பட்ட உலோகத்தினாலும்,—ஏற்ற மண் மரங்கள் தம்மில் - இயைந்த மண்ணினாலும் மரங்களினாலும்,—பழுது அறு தோலின் - குற்றமற்ற தோலினாலும்,—நூலின் - நூலினாலும்,—பற்பல விதங்கள் ஆக வழு உறுது இடும் - பலபலவிதங்களாகக் குற்றம் பொருந்தாமற் செயப்படுகின்ற,—செயற்கை வடிவப் பேர்த் தொகுதி சொல்வாம் - செயற்கைவடிவப்பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவாம். எ - று. இடுமென்னும்பெயரெச்சம் வடிவமென்னும் பெயரோடு முடிந்தது.

மழுப்படையின்பெயர்-பரசு,நவியம்,தண்ணம்,பாலம்,கணிச்சி. ரு.
சக்கரத்தின்பெயர்—நேமி, பரிதி, வலயம், எஃகம், சுதரிசனம், ஆழி, ஒளிவட்டம், திகிரி, வளை. கூ.

வில்லின்பெயர்—தனு, சிந்துவாரம், தடி, சராசனம், கோதண்டம், சிலை, த்ரோணம், சாபம், கொடுமரம், வேணு, முனி, தவர், சராரோபம், கார்முகம். கச.
மால்வில்லின்பெயர்-சார்ங்கம். க. ஈசன்வில்லின்பெயர்-பினாகம்.க

நாணியின்பெயர்—பூரி, தொடை, ஆவம், பூட்டு, சிஞ்சினி, நரம்பு, நாரி, வடம், குணம். கூ.
அம்பின்பெயர்—சரம், வாளி, கணை, பகழி, வண்டு, கதிரம், கங்கபத்திரம், அத்திரம், கோல். கூ.

பாணம், ஆசுகம், பூதை, பத்திரி, விசிகம், புங்கம், தோணி, சாயகம், பல்லம், தொடை, சிலீமுகம், ஏ. கஉ. (ஆ உக.)
அம்புக்கட்டின்பெயர்-புதை. க. அம்புக்குப்பியின்பெயர்-புழுகு.க.
அம்புக்குதையின்பெயர்—குலை, புங்கம். உ.
மொட்டம்பின்பெயர்—உதண். க.

ஆவமேதூணியாவநாழிகையம்புக்கூடாம்
கோவைசெய்வில்லிலிட்டகுதைதானுங்குலையென்றோதும்
மேவியவுடுவேயீர்க்கில்விரவியசிறகாமம்பு
பாவகமாகக்கட்டும்பாசம்பற்றுக்கையாமே. (௬)

அயில்சத்தியெஃகஞாங்கருடம்பிடியைந்தும்வேலாம்
வயிரமேகுலிசஞ்சம்பம்வச்சிராயுதத்தின்பேரே
சயமுறுமசனியென்றுஞ்சதகோடியென்றுஞ்சாற்றும்
குயமொடுபுள்ளமற்றைக்கொடுவாளேயரிவாளின்பேர். (௭)

கழுமுளேகழுக்கடைப்பேர்கைப்பிடிவாளேகண்டம்
கழுமுண்மூவிலைவேல்காளங்கழுவொடுசத்திசூலம்
சுழல்படைவட்டம்பாராவலையெனச்சொல்லுமிப்பால்
எழுவென்பகணையத்தோடேபரிகமுமென்னலாமே. (௮)

அசிநவிரேதிநாட்டமானநாந்தகமேகட்கம்
வசிமட்டாயுதந்துவத்திவஞ்சமேயுவணிகோணம்
இசையுங்கண்டகம்வாள்வேணுகரவாளமென்றுமேற்கும்
நசையுறுகோணமென்பநாட்டியகூன்வாளாமே. (௯)

கொண்டெழுமுடைவாளின்பேர்குறும்பிடிசுரிகையாகும்
பிண்டிபாலத்தினாமம்பீலித்தண்டெஃகமும்பேர்
விண்டடரிட்டியீட்டிவிட்டேற்றின்பேரேகோலாம்
தண்டிற்றுறிருப்புமுள்ளாஞ்சலாகைநாராசமாமே. (௧௦)

குந்தமேபடையைவெல்லுங்கொடுஞ்சிறுசவளமென்ப
குந்தந்தோமரமிரண்டுங்கொடும்பெருஞ்சவளமாகும்
வந்தவேதினமேயீரும்வாள்கரபத்திரமும்பேர்
உந்தியதுறிகைதானேகணிச்சியாமுளிக்கும்பேரே. (௧௧)

கவிபுகழ்கைவேலின்பேர்கப்பணந்தோமரந்தான்
நவியமேமழுக்கோடாலிநாட்டியகுடாரமும்பேர்
குவியிலைமூக்கரிந்தகத்தியேகுளிரென்றோதும்
சுவரகழ்கருவிநாமஞ்சொன்னபேர்கன்னமாமே. (௧௨)

தடிகதையெறுழேதண்டாந்தட்டையுந்தழலுங்கிள்ளை
கடிகருவிப்பேராகுங்குணில்குறுந்தடிப்பேர்காட்டும்
கொடியதோர்கவணினாமங்குணிலொடுகவணையோடே
ஒடிசிலுங்குளிருமென்றேயுரைத்திடலாகுமென்ப. (௧௩)

அம்புக்கூட்டின்பெயர்—ஆவம், தூணி, ஆவநாழிகை. ங.
விற்குதையின்பெயர்—குலே. க.
அம்புச்சிறகின்பெயர்—உடு, ஈர்க்கில். உ.
அம்புகட்டும்பாசத்தின்பெயர்—பற்றுக்கை. க.

வேலாயுதத்தின்பெயர்-அயில்,சத்தி,எஃகம்,ஞாங்கர்,உடம்பிடி. ரு.
வச்சிராயுதத்தின்பெயர்—வயிரம், குலிசம், சம்பம், அசனி, சதகோடி. ரு.
அரிவாளின்பெயர்—குயம், பூள்ளம், கொடுவாள். ங.

கழுக்கடையின்பெயர்—கழுமுள். க. கைவாளின்பெயர்-கண்டம். க.
சூலத்தின்பெயர்—கழுமுள், மூவிலைவேல், காளம், கழு, சத்தி. ரு.
சுழல்படையின்பெயர்—வட்டம், பாராவளை. உ.
எழுவின்பெயர்—கணையம், பரிகம். உ.

வாளின்பெயர்—அசி, நவிர், ஏதி, நாட்டம், நாந்தகம், கட்கம், வசி, மட்டாயுதம், தூவத்தி, வஞ்சம், உவணி, கோணம், கண்டகம், வேணு, கரவாளம். கரு.
கூன்வாளின்பெயர்—கோணம். க.

உடைவாளின்பெயர்—குறும்பிடி, சுரிகை. உ.
பிண்டிபாலத்தின்பெரர்—பீலித்தண்டு, எஃகம். உ.
ஈட்டியின்பெயர்—இட்டி. க. விட்டேற்றின்பெயர்—கோல். க.
இருப்புமுள்ளின்பெயர்-தாறு. க. நாராசத்தின்பெயர்-சலாகை. க.

சிறுசவளத்தின்பெயர்—குந்தம். க.
பெருஞ்சவளத்தின்பெயர்—குந்தம், தோமரம். உ.
ஈர்வாளின்பெயர்—வேதினம், கரபத்திரம். உ.
தறிகையின்பெயர்—கணிச்சி. க. உளியின்பெயர்—கணிச்சி. க.

கைவேலின்பெயர்—கப்பணம், தோமரம். உ.
கோடாலியின்பெயர்—நவியம், மழு, குடாரம். ங.
இலைமுக்கரிகத்தியின்பெயர்—குளிர். க.
சுவரகழ்கருவியின்பெயர்—கன்னம். க.

தண்டின்பெயர்—தடி, கதை, எறுழ். ங.
கிளிகடிகருவியின்பெயர்—தட்டை, தழல். உ.
குறுந்தடியின்பெயர்—குணில். க.
கவணின்பெயர்—குணில், கவணை, ஒடிசில், குளிர். ச.

ஏசிலஞ்சனக்கோல்கோலாந்தூலிகையெழுதுகோலே
சூசியேயூசியென்பசொற்றவூசித்துளைப்பேர்
பாசமாமோலைதீட்டும்படைகண்டத்துடனேயாணி
ஊசியேயெழுத்தாணிப்பேரிலேகணியென்றுமோதும். (கச)

தைத்திடுந்தொடர்துவக்கேயிடங்கணிசங்கிலிப்பேர்
வைத்தகற்பொறியேயள்ளுவலிபெறப்பற்றிரும்பாம்
அத்திரமென்பதம்பேயாதியாவிடுபடைப்பேர்
சத்திரமென்பசெங்கைத்தலம்விடாப்படையினாமம். (கரு)

படைதானைகழுமுளேவேல்படைக்கலஞ்சுதனந்துப்புக்
கடுமேதிகருவியெஃகங்கடியுமாயுதப்பொருப்பேர்
அடைவாம்வைநிசிதம்பூவள்ளயில்வசியாறுங்கூர்மை
தடெருடுகருவிப்புட்டில்படையுறைநுதிநுனிப்பேர். (கசு)

கருதியகோதையேகைக்கட்டிகைப்புடையுமாகும்
சிரகங்கிசகமிரண்டுஞ்செப்பியதலைத்திராணம்
அரணஞ்சாலிகைசடாரியாசுகந்தளமேகண்டம்
பருமமெய்யுறையேகச்சைபரம்பத்துங்கவசப்பல்பேர். (கஎ)

சேடகங்கடகந்தட்டிசேரும்வேதிகையேவட்டம்
கேடகந்தோலினோடுகிடுகெட்டும்பலகையின்பேர்
சூடுந்தோற்பலகைதட்டுத்தோற்பரந்தோலுமாகும்
நீடியபரிசையேமாவட்டணநெடியவட்டம். (கஅ)

நிலைபெறுபிரம்பின்வட்டநீள்வள்ளித்தண்டையாகும்
மலைவின்மந்தனமேசூழிமதயானைமுகபடாப்பேர்
கலைவிலாப்புரசைதூசாங்கழுத்திடுகயிறேகச்சை
இலகடம்பலகாரங்கள்யானைமேற்றவிசினாமம். (கக)

பரியினிற்கலணையின்பேர்பகர்ந்திடிற்பாரும்பண்ணும்
பருமமும்படையும்பன்னும்பல்லணந்தானுமாகும்
பரவியகச்சமோடுபடியங்கவடியின்பேரே
மருவுசம்மட்டியேகோல்வாய்த்தமத்திகையுமப்பேர். (உ0)

மறுவறுகுதிரைவாயின்வடம்வடிகயிறுவற்கம்
குறுமொடுகலியங்கௌவுங்கடிவாளங்கலினமும்பேர்
நிறுவிமற்றதற்கணிந்தநெடுமயிருளையென்றோதும்
செறிபுனைதளைவிலங்காஞ்சிருங்கலைநிகளமும்பேர். (உக)

அஞ்சனக்கோலின்பெயர்—கோல். க. எழுதுகோலின்பெயர்-தூலிகை.க.ஊசியின்பெயர்-சூசி.க.ஊசித்துளையின்பெயர்-பாசம்.க
எழுத்தாணியின்பெயர்—ஓலைதீட்டும்படை, கண்டம், ஆணி, ஊசி, இலேகனி. ரு.

சங்கிலியின்பெயர்—தொடர், துவக்கு, இடங்கணி. ஙு.
பற்றிரும்பின்பெயர்—கற்பொறி, அள். உ.
கைவிடுபடையின்பெயர்—அத்திரம். க.
கைவிடாப்படையின்பெயர்—சத்திரம். க.

ஆயுதப்பொதுப்பெயர்—படை, தானை, கழுமுள், வேல், படைக்கலம், சுதனம், துப்பு, ஏதி, கருவி, எஃகம். கo.
கூர்மையின்பெயர்-வை,நிசிதம்,பூ,வள்,அயில்,வசி. சு. படையுறையின்பெயர்-தடறு, கருவிப்புட்டில். உ. நுனியின்பெயர்-நுதி.க.

கைக்கட்டியின்பெயர்—கோதை, கைப்புடை. உ.
* தலைத்திராணத்தின்பெயர்—சிரகம், கிசகம். உ.
கவசத்தின்பெயர்—அரணம், சாலிகை, சடாரி, ஆசு, கந்தளம், கண்டம், பருமம், மெய்யுறை, கச்சை, பரம். கo.

பலகையின்பெயர்—சேடகம், கடகம், தட்டி, வேதிகை, வட்டம், கேடகம், தோல், கிடுகு. அ.
தோற்பலகையின்பெயர்—தட்டு, தோற்பரம், தோல். ஙு.
பரிசையின்பெயர்—மாவட்டணம், நெடியவட்டம். உ.

பிரம்பின்வட்டத்தின்பெயர்—வள்ளித்தண்டை. க.
யானைமுகபடாத்தின்பெயர்—மந்தனம், சூழி. உ.
யானைப்புரசையின்பெயர்—தூசு. க. யானைக்கழுத்திடுகயிற்றின்பெயர்-கச்சை.க.யானைமேற்றவிசின்பெயர்-இலகடம்,பலகாரம். உ.

குதிரைக்கலனையின்பெயர்-பரம்,பண்,பருமம்,படை,பல்லணம்.ரு.
குதிரையங்கவடியின்பெயர்—கச்சம், படி. உ.
குதிரைச்சம்மட்டியின்பெயர்—கோல், மத்திகை. உ.

குதிரைவாயின்வடத்தின்பெயர்—வடிகயிறு, வற்கம். உ.
குதிரைக்கடிவாளத்தின்பெயர்—கறுழ், கலியம், கலினம். ஙு.
குதிரைக்கணிமயிரின்பெயர்—உளை. க.
விலங்கின்பெயர்—புனை, தளை, சிருங்கலை, நிகளம். ச.

* தலைத்திராணம்—தலைச்சீரா.

## ஏழாவது செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

சூடிகைசேகரங்கிரீடஞ்சூடிகையகுடமௌலி
முடியின்பேரோராறாகுமுடிமாலையேகரோடி
முடியுறுப்பைந்தாந்தாமமுகுடமேபதுமத்தோடு
நெடியகோடகமேமற்றுநேர்ந்தகிம்புரியென்றாமே. (௨௨)

அம்பொனாரம்பதக்கங்கண்டிகைமதாணியும்பேர்
செம்பொனங்கதங்கேயூரந்திகழ்வாகுவலயத்தின்பேர்
பம்புதாடங்கந்தோடாம்பகர்குழைகுண்டலப்பேர்
கம்பிவல்லிகைகுணுக்குக்கடிப்பிணைகாதணிப்பேர். (௨௩)

கருதுகங்கணத்தினாமங்கடகமேதொடியுமாகும்
சரிதொடிகுருகுவண்டுசங்குசூடகமேகன்று
பெருகுகைவளையாம்பிள்ளைக்கைவளைபிடகமென்ப
விரவியசுடிகைசுட்டிவிட்டொளிரோடைபட்டம். (௨௪)

பரிபுரமென்பதானேபாதகிங்கிணியினாமம்
பெரியநூபுரஞ்சிலம்பிற்பேதமேவேறொன்றில்லை
பரியகங்காற்சரிப்பேர்பகர்ந்தகைச்சரிக்கும்பேரே
அரவமேசிலம்பினாமமாஞ்சிறுமணிசதங்கை. (௨௫)

நீடுபாடகத்தினாமநெடும்பாதகடகமென்ப
தேடியகுடச்சூலோசைசெய்தளைநெகிழும்பேர்
பாடுறுபாதசாலம்பதத்தணிப்பொதுப்பேராகும்
ஆடவர்கொடைவீரத்தாலணிவதுகழலென்றாமே. (௨௬)

எழுகோவைகளாற்சூழ்ந்தவெழின்மணிமேகலைப்பேர்
காழிருநான்கேகாஞ்சிகலாபமீரெட்டுத்தாமம்
தாழுமூவாறுகோவைசாற்றியபருமமென்ப
வீழுமெண்ணான்குகோவைவிரிசிகையென்பதாமே. (௨௭)

சரிமணிநாமந்தானேசாற்றியகலாபந்தோரை
அரையினிற்பட்டிகைப்பேரத்தொடுமணுவுமென்பர்
இரதனமரைநாணின்பேரேற்றிடுந்தொங்கலுத்தி
மருவியசெவிமலர்ப்பூமன்னுகன்னுவதஞ்சம். (௨௮)

முடியின்பெயர்—சுடிகை, சேகரம், கிரீடம், சூடிகை, மகுடம், மௌலி. சு. முடிமாலையின்பெயர்—கரோடி. க.
முடியுறுப்பைந்தாவன—தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி.

பதக்கத்தின்பெயர்—ஆரம், கண்டிகை, மதாணி. ௩.
வாகுவலயத்தின்பெயர்—அங்கதம், கேயூரம், உ.
தோட்டின்பெயர்—தாடங்கம். க. குண்டலத்தின்பெயர்—குழை. க.
காதணியின்பெயர்—கம்பி, வல்லிகை, குணுக்கு, கடிப்பிணை. ௪.

கங்கணத்தின்பெயர்—கடகம், தொடி. உ.
கைவளையின்பெயர்—சரி, தொடி, குருகு, வண்டு, சங்கு, சூடகம், கன்று. எ. பிள்ளைக்கைவளையின்பெயர்—பிடிகம். க.
சுட்டியின்பெயர்—சுடிகை. க. பட்டத்தின்பெயர்—ஓடை. க.

பாதகிங்கிணியின்பெயர்—பரிபுரம். க.
நூபுரமாவது சிலம்பின்பேதம்.
காற்சரியின்பெயர்—பரியகம். க.
கைச்சரியின்பெயர்—பரியகம். க.
சிலம்பின்பெயர்—அரவம். க. சதங்கையின்பெயர்—சிறுமணி. க.

பாடகத்தின்பெயர்—பாதகடகம். க.
ஓசைசெய்தளையின்பெயர்—குடச்சூல், ஞெகிழம். உ.
பதத்தணிப்பொதுவின்பெயர்—பாதசாலம். க.
ஆடவர்கொடையினாலும்வீரத்தினாலுமணிவதின்பெயர்—கழல். க.

எழுகோவைமணியின்பெயர்—மேகலை. க.
எட்டுக்கோவைமணியின்பெயர்—காஞ்சி. க.
பதினாறுகோவைமணியின்பெயர்—கலாபம். க.
பதினெட்டுக்கோவைமணியின்பெயர்—பருமம். க.
முப்பத்திரண்டுகோவைமணியின்பெயர்—விரிசிகை. க.

சரிமணியின்பெய்ர்—கலாபம், தோரை. உ.
அரைப்பட்டிகையின்பெயர்—அத்து, மனு. உ.
அரைநாணின்பெயர்—இரதனம். க.
ஆபரணத்தொங்கலின்பெயர்—உத்தி. க.
செவிமலர்ப்பூவின்பெயர்—கன்னாவதஞ்சம். க.

விரலணியாழிவீகமிலச்சினைமோதிரப்பேர்
சரமொடுகோழையாரந்தாமமேமணிவடப்பேர்
மருவுசங்கிலியேயென்பவயிரச்சங்கிலியினுமம்
உருவியன்மார்பிலிட்டவுபவீதம்பூணுநூலே. (௨௯)

இலம்பகம்புல்லகஞ்சுட்டிவைநுதலணிமுப்பேரே
பொலம்புனைதிருவேதெய்வவுத்தியாம்பிஞ்ஞகந்தான்
துலங்கியதலைக்கோலப்பேர்தொய்யகந்தலைப்பாளைப்பேர்
குலம்பெறுகல்லழுத்துங்குழிவட்டங்கேவணந்தான். (௩0)

அணிகளின்கடைப்புணர்ப்பேயதுமடைகயிலுமாகும்
புணருங்கோளகையேதாங்கிவயிரங்கிம்புரிபூணுற்பேர்
அணிகலன்வள்ளிபூணேயணியொடுகலமேமஞ்சு
பணியிழைபூடணங்கள்பகரிலாபரணமாமே. (௩௧)

தட்டம்பாசனமேதாலந்தளிகையுண்கலத்தின்பேரே
வட்டிலேசடகங்கோரம்வள்ளமாரஞ்சிறுவட்டிற்பேர்
கிட்டியகிண்ணங்கன்னல்கிளந்தநாழிகைவட்டிற்பேர்
சட்டுவஞ்சிலகமென்பதவ்வியுந்தருவியும்பேர். (௩௨)

விஞ்சுதர்ப்பணமேயாடிமிகுமொளிவட்டம்வேறு
வஞ்சியருருவங்காட்டவரும்படிமக்கலம்பொற்
கஞ்சனமுகுரமத்தம்புளகமெண்பேர்கண்ணாடி
கஞ்சனைகலசப்பானைபடியகம்படிக்கங்காட்டும். (௩௩)

தொட்டநெய்த்துடுப்பினுக்குச்சுருக்கொடுசுருவமாம்பேர்
இட்டமாந்தூபமுட்டியிந்தளந்தடவுமேற்கும்
மட்டமர்கின்றதூபமணியேகைம்மணியென்றுரும்
இட்டியேபாண்டில்கஞ்சங்கிணிஎன்னுந்தாளமுப்பேர். (௩௪)

அடிபடுபெருமணிப்பேரறைந்திடுங்கண்டையாகும்
படலிகைபரந்தவட்டங்கைம்மணிபகர்ந்தபேரே
திடுதிடென்றிடத்தெழித்தசேகண்டியெறிமணிப்பேர்
கடுகியபீலிசின்னங்காகளங்காளமாமே. (௩௫)

கோடுடனிரலையாம்பல்கொம்பின்பேர்வயிருங்கூறும்
பீடிகைதுமானங்காண்டம்பேணுங்கண்டிகைகடிப்பம்
கோடிகமிருமுப்பேர்பூண்கொள்கலம்பரணிகோயே
நீடுமஞ்சிகமேபெட்டிநெடியமஞ்சிகையேபேழை. (௩௬)

மோதிரத்தின்பெயர்—விரலணி, ஆழி, வீகம், இலச்சினை. ச.
மணிவடத்தின்பெயர்—சரம், காழ், ஆரம், தாமம். ச.
வயிரச்சங்கிலியின்பெயர்—சங்கிலி. க.
பூணுநூலின்பெயர்—உபவீதம். க.

நுதலணியின்பெயர்—இலம்பகம், புல்லகம், சூட்டு. ங.
தெய்வவுத்தியின்பெயர்-திரு.க.தலைக்கோலத்தின்பெயர்-பிஞ்ஞகம்
தலைப்பாளையின்பெயர்—தொய்யகம். க.
கல்லழுத்துங்குழிவட்டத்தின்பெயர்—கேவணம். க.

அணிகளின்கடைப்புணர்வின்பெயர்—மடை, கயில். உ.
பூணின்பெயர்—கோளகை, தாங்கி, வைரம், கிம்புரி. ச.
ஆபரணத்தின்பெயர்—அணிகலன், வள்ளி, பூண், அணி, கலம், மஞ்சு, பணி, இழை, பூடணம். கூ.

உண்கலத்தின்பெயர்—தட்டம், பாசனம், தாலம், தளிகை. ச.
வட்டிலின்பெயர்—சடகம், கோரம், வள்ளம். ங.
சிறுவட்டிலின்பெயர்—கிண்ணம். க.
நாழிகைவட்டிலின்பெயர்—கன்னல். க.
சட்டுவத்தின்பெயர்—சிலகம், தவ்வி, தருவி. ங.

கண்ணாடியின்பெயர்—தர்ப்பணம், ஆடி, ஒளிவட்டம், படிமக்கலம், கஞ்சனம், முகுரம், அத்தம், புளகம். அ.
கலசப்பானையின்பெயர்—கஞ்சனை.க.படிக்கத்தின்பெயர்—படியகம்

நெய்த்துடுப்பின்பெயர்—சுருக்கு, சுருவம். உ.
தூபமுட்டியின்பெயர்—இந்தளம், தடவு. உ.
தூபமணியின்பெயர்—கைம்மணி. க.
தாளத்தின்பெயர்—கிட்டி, பாண்டில், கஞ்சம். ங.

பெருமணியின்பெயர்—கண்டை. க.
கைம்மணியின்பெயர்—படலிகை, பரந்தவட்டம். உ.
எறிமணியின்பெயர்—சேகண்டி. க.
சின்னத்தின்பெயர்—பீலி. க. காளத்தின்பெயர்—காகளம். க.

கொம்பின்பெயர்—கோடு, இரலை, ஆம்பல், வயிர். ங.
பூண்கொள்கலத்தின்பெயர்—பீடிகை, துமானம், காண்டம், கண்டிகை, கடிப்பம், கோடிகம். சு. பரணியின்பெயர்—கோய். க.
பெட்டியின்பெயர்—மஞ்சிகம். க. பேழையின்பெயர்-மஞ்சிகை.க.

குண்டிகைகரகநீர்பெய்கோலமார்காண்டகங்கள்
கண்டநற்கமண்டலப்பேர்கடிப்பங்கோடிகமேகெண்டி
கொண்டவெண்குடையினுமங்குளிர்தொங்கல்கவிப்புப்பிச்சம்
தண்டுசேர்கவிகையாதபத்திரஞ்சத்திசத்திரம். (௩௭)

ஆலவட்டத்தினோடுமடுத்திடுங்கால்செய்வட்டம்
மேலிடுமுக்கந்தாலவிருந்தம்பேராலவட்டம்
பீலிவீசனஞ்சாந்தாற்றிபெருகியவிசிறிநான்கும்
சீலமாங்காற்றுவீசுஞ்சிற்றாலவட்டந்தானே. (௩௮)

இடக்கையின்பேரேயாமந்திரிகையாங்குளிர்முழாவாம்
படித்தெழுபணவந்திண்டியானகம்படகமுப்பேர்
கடிப்பின்பேர்குணிலாம்மோந்தைதானொருகட்பறைப்பேர்
அடித்தபேரிகைப்பேர்நந்தியாகுளிசிறுபறைப்பேர். (௩௯)

சல்லரிதிமிலையென்பதண்ணுமைநிசாளமாகும்
பல்லுளகொடியபன்றிப்பறைகுடப்பறையென்றுமே
கல்லெனும்பகுவாயாமோர்கட்பறைபதலைதானே
ஒல்லெனுங்கரடிநாமமுறுபறைதட்டையாமே. (௪௦)

தொண்டகமுருகியம்போர்த்துடிகுறிஞ்சிப்பறைப்பேர்
மிண்டியதுடியேபாலைவேடர்தம்பறையினுமம்
கொண்டெழுபம்பையேறங்கோட்பறைமுல்லைக்காகும்
கிண்டியமருதமுற்றகிளர்பறைகிணையென்றுமே. (௪௧)

நிறுவுசாப்பறையேயென்பநெய்தலிற்பறையினுமம்
பெறுமுவகைப்பறைக்குப்பேரேதூரியமென்றோதும்
உறுமியதண்ணுமைப்பேருடுக்கையாமிடைசுருங்கு
பறையின்பேர்துடிமருங்கின்மார்ச்சனைபகரின்மண்ணும். (௪௨)

தூரியமுழவுதிண்டிதுந்துபிமுருடுதக்கை
பேரியேதகுணிச்சம்போர்ப்பீலியேதடாரிபம்பை
வீரியமுரசுதண்ணமேவுகோடணையியங்கள்
வாரியினதிர்சகண்டைவாச்சியப்பொதுவீரெண்பேர். (௪௩)

இரதமேகொடிஞ்சியோடுமியந்திரங்குயவுவையம்
அரியொடுகூவிரந்தேராஞ்சயந்தனமுமப்பேர்
பரிதியேசில்லியாழிபாரியகாலேநேமி
உருளுடனுருளிதேரினுருளென்பவுந்தியும்பேர். (௪௪)

கமண்டலத்தின்பெயர்—குண்டிகை, கரகம், காண்டகம். ௩.
கெண்டியின்பெயர்—கடிப்பம், கோடிகம். ௨.
வெண்குடையின்பெயர்—குளிர், தொங்கல், கவிப்பு, பிச்சம், கவிகை, ஆதபத்திரம், சத்தி, சத்திரம். ௮.

பேராலவட்டத்தின்பெயர்—ஆலவட்டம், கால்செய்வட்டம், உக்கம், தாலவிருந்தம். ௪.
சிற்றாலவட்டத்தின்பெயர்—பீலி, வீசனம், சாந்தாற்றி, விசிறி. ௪.

இடக்கையின்பெயர்—ஆமந்திரிகை. ௧. முழவின்பெயர்—குளிர். ௧.
படகத்தின்பெயர்—பணவம், திண்டி, ஆனகம். ௩.
கடிப்பின்பெயர்-குணில். ௧. ஒருகட்பறையின்பெயர்-மொந்தை. ௧.
பேரிகையின்பெயர்—நந்தி. ௧. சிறுபறையின்பெயர்—ஆகுளி. ௧.

திமிலையின்பெயர்—சல்லரி. ௧. நிசாளத்தின்பெயர்—தண்ணுமை. ௧.
பன்றிப்பறையின்பெயர்—குடப்பறை. ௧.
ஒருகட்பகுவாய்ப்பறையின்பெயர்—பதலை. ௧.
கரடிப்பறையின்பெயர்—தட்டை. ௧.

குறிஞ்சிப்பறையின்பெயர்—தொண்டகம், முருகியம், துடி. ௩.
பாலைப்பறையின்பெயர்—துடி. ௧.
முல்லைப்பறையின்பெயர்—பம்பை, ஏறங்கோட்பறை. ௨.
மருதப்பறையின்பெயர்—கிணை. ௧.

நெய்தற்பறையின்பெயர்—சாப்பறை. ௧.
உவகைப்பறையின்பெயர்—தூரியம். ௧.
தண்ணுமையின்பெயர்—உடுக்கை. ௧.
இடைசுருங்குபறையின்பெயர்—துடி. ௧.
மார்ச்சனையின்பெயர்—மண். ௧.

வாச்சியப்பொதுவின்பெயர்—தூரியம், முழவு, திண்டி, துந்துபி, முருடு, தக்கை, பேரி, தகுணிச்சம், பீலி, தடாரி, பம்பை, முரசு, தண்ணம், கோடணை, இயம், சகண்டை. ௧௬.

தேரின்பெயர்—இரதம், கொடிஞ்சி, இயந்திரம், குயவு, வையம், அரி, கூவிரம், சயந்தனம். ௮.
தேருருளின்பெயர்—பரிதி, சில்லி, ஆழி, கால், நேமி, உருள், உருளி, உந்தி. ௮.

ஆரெனுநாமந்தேரினகத்தினுட்செறிகதிர்ப்பேர்
தேர்நடுப்பேரேதட்டுச்செப்பியநாப்பணும்பேர்
சார்பலகைப்பாப்பாராஞ்சார்ந்தகூவிரங்கொடிஞ்சி
தேர்மொட்டுக்கூம்புதேரின்மரச்சுற்றுக்கிடுகுதானே. (௪௫)

பாண்டில்கஞ்சிகைவையம்போர்ப்பரிகள்பூண்டேர்க்குமூர்தி
தாண்டியசகடுவையஞ்சாகாடேயொழுகைசாடு
தூண்டியவுருளிநேமிசகடமுஞ்சொல்லும்பண்டி
ஈண்டியபண்டியுள்ளினிரும்புகந்திருசுமாமே. (௪௬)

விஞ்சியமுத்தினூர்திவெண்முத்தின்சிவிகைதானே
தஞ்சமாஞ்சிவிகைவையந்தண்டிகையணிகம்யானம்
கஞ்சிகைமணிக்காற்பள்ளியென்பனகதிர்வேன்மன்னர்
எஞ்சலில்சிறப்பினேறுமிராசவாகனமதாமே. (௪௭)

அலமுழுபடைதொடுப்போடாலமேபடைவாணுஞ்சில்
கலனையேகலப்பையேழ்பேர்கந்தெழுமதலைதம்பம்
நிலைபெறுதறிகாறுணுநெடுந்தூணும்வெளில்யானைத்தூண்
புலையில்வேள்வித்தூண்யூபம்போதிகைகுறுந்தறிப்பேர். (௪௮)

கதவின்பேரரரிவாரிகாப்பொடுகவாடந்தோட்டி
புதவுமாங்காழுஞ்சேப்பும்போற்றியகடிகையுந்தாழ்
மதமுறும்யானைதன்னைவணக்குமங்குசமேதோட்டி
விதமுறுகோணமென்றும்விளம்புவரளந்தநூலோர். (௪௯)

பட்டடையடைகுறட்டின்பாலதாமுலையாணிக்கோல்
சுட்டுக்கோலென்றுநாமஞ்சொல்லுபநல்லநூலோர்
முட்டியபெருங்குறட்டைமுருடெனமொழிபவோங்கிக்
கொட்டுஞ்சம்மட்டிகூடங்கோள்கொழுவென்றுகூறும். (௫௦)

பாதையேவங்கந்தோணிபாரதிபஃறியம்பி
போதமேமதலையானம்புணைசதாநௌவேநாவாய்
பேதமில்பாறுதொள்ளைபேணுறுமரக்கலப்பேர்
வாதைதீர்மரக்கலப்பாயிதையெனவழங்கலாமே. (௫௧)

படம்பிபஃறியோடம்பகர்பெயர்திமிலேதோணி
படுபட்டிகையேயம்பிபடுவையேபுணையேதெப்பம்
மிகைபடுமிதவையும்பேர்விசியின்பேரரியென்றாகும்
பகர்தருபர்ரிமஞ்சம்பரியங்கம்பாண்டில்கட்டில். (௫௨)

தேரினகத்திற்செறிகதிரின்பெயர்—ஆர். க.
தேர்நடுவின்பெயர்—தட்டு, நாப்பண். உ.
தேர்ப்பலகைப்பாவின்பெயர்—பார். க.
தேர்க்கொடிஞ்சியின்பெயர்—கூவிரம். க.
தேர்மொட்டின்பெயர்-கூம்பு. க.தேர்மரச்சுற்றின்பெயர்-கிடுகு.க.

பரிகள்பூண்டூர்க்குமூர்தியின்பெயர்—பாண்டில்,கஞ்சிகை,வையம்.
பண்டியின்பெயர்—சகடு, வையம், சாகாடு, ஒழுகை, சாடு, உருள், சகடம். எ. பண்டியுள்ளிரும்பின்பெயர்—கந்து, இருசு. உ.

முத்துச்சிவிகையின்பெயர்—முத்தினூர்தி. க.
சிவிகையின்பெயர்—வையம், தண்டிகை, ஆனிகம், யானம். ச.
இராசவாகனத்தின்பெயர்—கஞ்சிகை, மணிக்காற்பள்ளி. உ.

கலப்பையின்பெயர்—அலம், உழுபடை, தொடுப்பு, ஆலம், படைவாள், நாஞ்சில், கலனை. எ.
தூணின்பெயர்—கந்து, மதலை, தம்பம், தறி, கால், தாணு. சு.
யானைத்தூணின்பெயர்—வெளில். க.
வேள்வித்தூணின்பெயர்-யூபம்.க.குறுந்தறியின்பெயர்-போதிகை.

கதவின்பெயர்—அரரி, வாரி, காப்பு,*கவாடம்,தோட்டி, புதவு.சு.
தாழின்பெயர்—காழ், சீப்பு, கடிகை. ங.
யானைத்தோட்டியின்பெயர்—அங்குசம், கோணம். உ.

அடைகுறட்டின்பெயர்—பட்டடை. க.
உலையாணிக்கோலின்பெயர்—சுட்டுக்கோல். க.
பெருங்குறட்டின்பெயர்—முருடு. க.
சம்மட்டியின்பெயர்—கூடம். க. கொழுவின்பெயர்—கோள். க.

மரக்கலத்தின்பெயர்—பாதை, வங்கம், தோணி, பாரதி, பஃறி, அம்பி, போதம், மதலை, யானம், புணை, சதா, நௌ, நாவாய், பாறு, தொள்ளை. கரு.
மரக்கலப்பாயின்பெயர்—இதை. க.

ஓடத்தின்பெயர்-பகடு,அம்பி,பஃறி.ங.தோணியின்பெயர்-திமில்.க.
தெப்பத்தின்பெயர்-பகடு,பட்டிகை,அம்பி,படுவை,புணை,மிதவை.சு.
விசியின்பெயர்—அரி. க.
கட்டிலின்பெயர்—பாரி, மஞ்சம், பரியங்கம், பாண்டில். ச.

* கபாடமெனினுமொக்கும்.

விட்டரந்தவத்தோர்பீடம்விளங்கும்பீடிகையுமப்பேர்
இட்டசிங்காதனம்பத்திராசனமென்பதாமே
திட்டையேகறையேமற்றுச்செப்பியவுலூகலந்தான்
முட்டியவுரலின்முப்பேர்முசலமேதடியுலக்கை. (ருங)

உறிசிதர்சிக்கந்தூக்கோடோதியசிமிலிநாற்பேர்
நிறுவியவுஞ்சலூசனீண்டவிண்டாங்டுமப்பேர்
இறைவையேசேணியேணிமால்புகண்ணேணியின்பேர்
குறைவிலம்பணந்தூம்போடுகுளகங்கச்சமுமரக்கால். (ருச)

விரவியகுஞ்சநாழிவிரித்தகொத்தளிப்பாயாரை
பெருகியசாப்பைபுற்பாய்பிரப்பம்பாய்சாதிப்பாயாம்
சருமந்தோற்பாய்தடுக்கேதவிசாகுங்குழாயேதண்டாம்
பெருகுகோடிகம்பூந்தட்டேபெட்டியேமூழிவாயாம். (ருரு)

சட்டமேகிடுகாமென்பசாற்றியகம்பந்தம்பம்
விட்டொளிர்கௌசிகங்கண்மத்திகைவிளக்குத்தண்டாம்
தட்டொடுசின்னஞ்சேட்டைதருமுறமுற்றிலும்பேர்
புட்டிலேயிறைவையென்பவட்டிகைகூடையாமே. (ருசு)

சுளகின்பேர்சூர்ப்பமென்பதுடைப்பஞ்சோதனிமாறும்பேர்
வளமுறுமூழிமூழையகப்பையாமத்துமத்தம்
வெளிறயிர்கடைதறிப்பேர்மெச்சும்பாவாற்றிகுச்சாம்
அளவில்காருகர்நாடாநூனாழியேயாகுமென்ப. (ருஎ)

கிழார்பூட்டைகாம்பியம்பிகிளந்தகாராம்பியாகும்
பிழாரிடாரிறைகூடைப்பேர்பெருந்தூம்பம்பணநீர்ப்பத்தர்
துழாவியகாசுவல்லுச்சூதின்பேர்கழங்குமாகும்
தழாதருள்கவற்றிற்றாயமாயமாஞ்சாரிநாயாம். (ருஅ)

கடிகையேதுணியேதுண்டங்காட்டியவகிர்வார்வள்ளாம்
சுடுவொடுசுமடுதாங்குஞ்சுமையடைசும்மாட்டின்பேர்
வடிவுறுவலையேசாலமற்றதிற்கயிறுமாமே
தொடருறுநூலேதந்துசூத்திரம்பனுவலும்பேர். (ருகூ)

தவத்தோர்பீடத்தின்பெயர்—விட்டரம், பீடிகை. உ.
சிங்காதனத்தின்பெயர்—பத்திராசனம். க.
உரலின்பெயர்—திட்டை, கறை, உலூகலம். ௩.
உலக்கையின்பெயர்—முசலம், தடி. உ.

உறியின்பெயர்—சிதர், சிக்கம், தூக்கு, சிமிலி. ௪.
உஞ்சலின்பெயர்—ஊசல், விண்டாண்டு. உ.
ஏணியின்பெயர்—இறைவை, சேணி. உ.
கண்ணேணியின்பெயர்—மாலப்பு. க.
மரக்காலின்பெயர்—அம்பணம், தூம்பு, குளகம், கச்சம். ௪.

நாழியின்பெயர்—குஞ்சம். க. கொத்தளிப்பரியின்பெயர்—ஆரை. க.
புற்பாயின்பெயர்-சாப்பை. க. பிரப்பம்பாயின்பெயர்-சாதிப்பாய். க
தோற்பாயின்பெயர்—சருமம். க. தடுக்கின்பெயர்—தவிசு. க.
குழாயின்பெயர்—தண்டு. க. பூந்தட்டின்பெயர்—கோடிகம். க.
பூப்பெட்டியின்பெயர்—மூழிவாய். க.

சட்டத்தின்பெயர்—கிடுகு. க.
விளக்குத்தண்டின்பெயர்—கம்பம், தம்பம், கௌசிகம், மத்திகை. ௪.
முறத்தின்பெயர்—தட்டு, சின்னம், சேட்டை, மூற்றில். ௪.
புட்டிலின்பெயர்—இறைவை. க. கூடையின்பெயர்-வட்டிகை. க.

சுளகின்பெயர்-சூர்ப்பம். க. துடைப்பத்தின்பெயர்-சோதனி, மாறு.
அகப்பையின்பெயர்—மூழி, மூழை. உ.
மத்தின்பெயர்—மத்தம். க. தயிர்கடைதறியின்பெயர்-வெளில். க.
பாவாற்றியின்பெயர்—குச்சு. க. நூனாழியின்பெயர்—நாடா. க.

ஆம்பியின்பெயர்—*கிழார், பூட்டை, காம்பி, அம்பி. ௪.
இறைகூடையின்பெயர்—பிழார், இடார். உ.
நீர்ப்பத்தரின்பெயர்—தூம்பு, அம்பணம். உ.
சூதின்பெயர்—காசு, வல்லு, கழங்கு. ௩.
கவற்றிற்றுயத்தின்பெயர்—ஆயம். க. சாரியின்பெயர்—நாய். க.

துண்டத்தின்பெயர்-கடிகை, துணி. உ. வகிரின்பெயர்-வார், வள். உ.
சும்மாட்டின்பெயர்—சுடுவு, சுமடு, சுமையடை. ௩.
வலையின்பெயர்—சாலம். க. வலைக்கயிற்றின்பெயர்—சாலம். க.
நூலின்பெயர்—தந்து, சூத்திரம், பனுவல். ௩.

* காராம்பி என்பாருமுளர்.

பழுதையேதாமங்கச்சைபாசமேயிரச்சேநாணே
வழுவிலாத்தாம்பேயக்கம்வடம்புரிகயிறதாமே
தழுவுதாமனியேதாம்புபசுக்கட்டுங்கயிறுதானாம்
சுழல்கறங்கேகாற்றுடிசொல்லியகதலியும்பேர். (௬௦)

பந்துமட்டத்துருத்திபகர்பெருந்துருத்திநீரைச்
சிந்தியசிவிறியாகும்சீப்புக்கங்கதமேசிக்கம்
பைந்தொடிமகளிராடப்படுங்களமோரையென்ப
தொந்தமாம்பாதங்காப்புக்கழறொடுதோல்செருப்பாம். (௬௧)

இட்டபாதுகையேபாவன்மிதியடியிதன்மேலிட்ட
கொட்டையாங்குடைபற்சீவுங்கோன்மெல்கோல்வளிசந்தூண்டில்
பட்டவம்மனையம்மானைபந்துகந்துகமென்றோதும்
முட்டையேதவிட்டினாமம்முடையுமாநொறுங்குநொய்யே. (௬௨)

ஊதியவுலைத்துருத்தியுதியுமத்திரியுமாகும்
கோதிலாச்சிவையினோடுகுருகுகொல்லுலைமூக்கின்பேர்
சோதனிசேக்குங்காடுதுரானரன்மயலேசெத்தை
சாதுயர்ப்பாடைவெள்ளில்சிலாவட்டஞ்சாணைக்கல்லே. (௬௩)

தடம்படுபதலைதாழிதளஞ்சாடியகளும்பேர்
இடங்கரேஙிறையேவட்டமேற்றநீர்ச்சாலிம்முப்பேர்
கிடந்தகர்ப்பரைதசும்புகடாகமாங்குடத்தினாமம்
குடங்கரேயிடங்கர்தாழிகுணங்கடங்கலசங்கும்பம். (௬௪)

தடாவொடுகரீரநீரைத்தருமுகைகுழிசிநான்கும்
மிடாவென்பபானையின்பேர்மேவியகுண்டத்தோடு
மிடாவுமாம்விரும்புநல்லார்வெண்டயிர்கடையுந்தாழி
விடாதமந்தினியினோடுகர்க்கரிவிளம்பலாமே. (௬௫)

சிரகங்கர்க்கரியேகன்னல்சீகரநான்குபேரும்
கரகத்தினாமமாகுங்கருதுவற்கரியுமென்ப
திருவறஞ்செய்யாரேற்குந்தீயமட்கலத்தினாமம்
பரவியகடிஞையையம்பாத்திரமென்றுமேற்கும். (௬௬)

இடிஞ்சிலேபாண்டிலென்பவெரிசுடர்த்தகழிநாமம்
ஒடுங்கியகுடுவைகுண்டமொளிபெறுவிசளைசட்டி
அடங்குசுத்திகையினோடுசராவமேயகலின்பேர்தான்
இடுங்கலம்பாண்டமேற்குங்கொள்கலமெவற்றிற்கும்பேர். (௬௭)

கயிற்றின்பெயர்—பழுதை, தாமம், கச்சை, பாசம், இரச்சு, நாண்,
தாம்பு, அக்கம், வடம், புரி. கo.
பசுக்கட்டுங்கயிற்றின்பெயர்—தாமணி, தாம்பு. உ.
காற்றாடியின்பெயர்—சுழல், கறங்கு, கதலி. ௩.

மட்டத்துருத்தியின்பெயர்—பந்து.க. பெருந்துருத்தியின்பெயர்—
சிவிறி. க. சீப்பின்பெயர்—கங்கதம், சிக்கம். உ.
மகளிராடுங்களத்தின்பெயர்—ஊரை. க.
செருப்பின்பெயர்—பாதங்காப்பு, கழல், தொடுதோல். ௩.

மிதியடியின்பெயர்—பாதுகை, பாவல். உ.
மிதியடியின்மேலிட்டகொட்டையின்பெயர்—குடை. க. பற்சீவுங்
கோலின்பெயர்—மெல்கோல்.க. தூண்டிலின்பெயர்-வளிசம்.க.
அம்மானையின்பெயர்—அம்மனை. க. பந்தின்பெயர்—கந்துகம். க.
தவிட்டின்பெயர்-முட்டை,முடை.உ.நொய்யின்பெயர்-நொறுங்கு

உலைத்துருத்தியின்பெயர்—உதி, அத்திரி. உ.
கொல்லுலைமூக்கின்பெயர்—சிவை, குருகு. உ.
செத்தையின்பெயர்—காடு, தூரால், நரல், மயல். ச.
பாடையின்பெயர்—வெள்ளில். க.
சாணைக்கல்லின்பெயர்—சிலாவட்டம். க.

சாடியின்பெயர்—பதலை, தாழி, தளம், அகளம். ச.
நீர்ச்சாலின்பெயர்—இடங்கர், நிறை, வட்டம். ௩.
கர்ப்பரையின்பெயர்—தசும்பு, கடாகம். உ.
குடத்தின்பெயர்—குடங்கர், இடங்கர், தாழி, குணம், கடம்,
கலசம், கும்பம். எ.

மிடாவின்பெயர்—தடா, கரீரம், முகை, குழிசி. ச.
பானையின்பெயர்—குண்டம், மிடா. உ.
தயிர்கடைதாழியின்பெயர்—மந்தினி, கர்க்கரி. உ.

கரகத்தின்பெயர்—சிரகம், கர்க்கரி, கன்னல், சீகரம், வற்கரி. ரு.
ஏற்குமட்கலத்தின்பெயர்—கடிஞை, ஐயம், பாத்திரம். ௩.

தகழியின்பெயர்—இடிஞ்சில், பாண்டில். உ.
குடுவையின்பெயர்—குண்டம். க. சட்டியின்பெயர்—விசனை. க.
அகலின்பெயர்—சுத்திகை, சராவம். உ.
கொள்கலம்யாவற்றிற்கும்பெயர்—இடுங்கலம், பாண்டம். உ.

கோடிகோடிகம்படாமேகோசிகங்கூறைபஞ்சி
சாடிநீவியமேசீரைசம்படங்கலைகலிங்கம்
சூடிகாடிகமேபுட்டந்துசுகாழகமேவட்டம்
ஆடையாவரணந்தானையறுவையம்பரமாசாரம். (சுஅ)

மடிபரிவட்டஞ்சேலைவத்திரமுடுக்கைவாசம்
இடையறுபுடைவையாறைந்திலக்காரமென்றும்பேராம்
இடையல்வேதகமேபட்டேயேடகமிவைதுகிற்பேர்
நடைபெறுநாகம்பாரிநல்லாடையிருபேராமே. (சுகூ)

பட்டுவர்க்கத்திறுமம்பரீளிதங்கோசிகம்பேர்
பட்டுநேத்திரமாங்காம்புபடுமதன்விகற்பநாமம்
இட்டநற்பணித்துசின்பேரேற்றிடுந்தேவாங்கந்தான்
மட்டமாமுரிகஞ்சூழுமயிரகமயிர்ப்படாமே. (எ0)

அத்தவாளந்தானேயுல்லாசமாம்வடகமும்பேர்
புத்தகமென்பசித்திரப்படாமாரும்போர்வைமீக்கோள்
வைத்தமுன்றானைதோகைமாதர்கொய்சகமேநீவி
உத்தரீயம்மேகாசமுத்தராசங்கமும்பேர். (எக)

கம்பலங்கம்பளங்கள்கம்பளிப்படாத்தின்வர்க்கம்
வம்புவார்விசிகைகச்சாம்வைத்தபட்டிகையுமாகும்
விம்புவட்டுடையுமப்பேர்விரிகஞ்சம்விடுந்தலைப்பாம்
கம்பலம்படங்குவாணிவிதானமேற்கட்டியாமே. (எஉ)

கஞ்சுளியங்கிமற்றைக்காஞ்சுகமொடுகுப்பாயம்
விஞ்சுகஞ்சுகமேமெய்ப்பையிளிரும்வாரணமேசட்டை
கஞ்சிகையவிடியோடுகாண்டமேயெழினிகண்டம்
தஞ்சமரம்படாம்படங்கள்சடிதியிலிடுதிரைப்பேர். (எங)

தவிசணைதளிமமெத்தையுபதானந்தலையணைப்பேர்
துவசமேசத்திவானிதோகைகேதனம்பதாகை
தவழ்விலோதனம்படங்குதரும்படாம்பெருங்கொடிப்பேர்
துவதுங்கால்வீதிக்கட்டிதுடங்கியகொடிவிடங்கம். (எச)

புடைவையின்பெயர்—கோடி, கோடிகம், படாம், கோசிகம், கூறை, பஞ்சி, சாடி, நீவியம், சீரை, சம்படம், கலை, கலிங்கம், சூடி, காடிகம், புட்டம், தூசு, காழகம், வட்டம், ஆடை, ஆவரணம், தானை, அறுவை, அம்பரம், ஆசாரம். உச.

மடி, பரிவட்டம், சேலை, வத்திரம், உடுக்கை, வாசம், இலக்காரம். எ. (ஆ நக.)

துகிலின்பெயர்—இடையல், வேதகம், பட்டு, ஏடகம். ச.

நல்லாடையின்பெயர்—நாகம், பாரி. உ.

பட்டுவர்க்கத்தின்பெயர்—பாளிதம், கோசிகம். உ.

பட்டின்பெயர்—நேத்திரம். க.

பட்டுவிகற்பத்தின்பெயர்—காம்பு. க.

நற்பணித்தூசின்பெயர்—தேவாங்கம். க.

மயிர்ப்படாத்தின்பெயர்—முரிகம், மயிரகம். உ.

அத்தவாளத்தின்பெயர்—உல்லாசம், வடகம். உ.

சித்திரப்படாத்தின்பெயர்—புத்தகம். க.

போர்வையின்பெயர்—மீக்கோள். க.

முன்றானையின்பெயர்—தோகை. க.

மாதர்கொய்சகத்தின்பெயர்—நீவி. க.

உத்தரீயத்தின்பெயர்—ஏகாசம், உத்தராசங்கம். உ.

கம்பளிப்படாத்தின்வர்க்கப்பெயர்—கம்பலம், கம்பளம். உ.

கச்சின்பெயர்—வம்பு, வார், விசிகை, பட்டிகை, வட்டுடை. ரு.

விடுந்தலைப்பின்பெயர்—கஞ்சம். க.

மேற்கட்டியின்பெயர்—கம்பலம், படங்கு, வானி, விதானம். ச.

சட்டையின்பெயர்—கஞ்சுளி, அங்கி, காஞ்சுகம், குப்பாயம், கஞ்சுகம், மெய்ப்பை, வாரணம். எ.

இடுதிரையின்பெயர்—கஞ்சிகை, அவிடி, காண்டம், எழினி, கண்டம், படாம், படம். எ.

மெத்தையின்பெயர்—தவிசு, அணை, தளிமம். ந.

தலையணையின்பெயர்—உபதானம். க.

பெருங்கொடியின்பெயர்—துவசம், சத்தி, வானி, தோகை, கேதனம், பதாகை, விலோதனம், படங்கு, படாம். கூ.

வீதியிற்கட்டியகொடியின்பெயர்—விடங்கம். க.

கத்திகைசிறுகொடிப்பேர்கருதுகூவிரந்தேர்க்கட்டும்
சத்தியாந்துணிசிதாராஞ்சாற்றியசிதவலும்பேர்
சித்திரமோவியஞ்சேர்தீட்டும்வட்டிகையாமென்ன
வைத்தனர்பொறித்தறீட்டல்வரைதலுமெழுதலாமே. (எரு)

மற்றவற்கலையிறைஞ்சிமரவுரிசீரையும்பேர்
சுற்றலேயுடுத்தலென்பதற்றலேயிருக்கலாகும்
குற்றமிலெழுபத்தாறுதொடர்செய்தான்குணபத்திரன்றாள்
நிற்றலும்வணங்கிநீதிநிறுத்தமண்டலவன்றானே. (எசு)

செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆக விருத்தம் — ௫௱௨.

## எட்டாவது

## பண்புபற்றியபெயர்த்தொகுதி.

### காப்பு.

கடிமலர்ப்பிண்டிநீழற்காவலன்சரணம்போற்றி
வடிவினிலளவுதன்னில்வண்ணத்திற்காட்சியாகும்
நெடியதோர்பொருளின்மற்றுநீளுணர்வாலேகாணப்
படுபொருளின்குணப்பேர்ப்பண்பதாந்தொகுதிசொல்வாம். (க)

நல்லகோளகையேகொம்மைநாட்டியவலயந்தட்டுச்
சொல்லியபரிதிபாண்டில்சூழ்ந்திடுகடகநேமி
சில்லிமண்டலமேயாழிதிகிரிபாலிகைவிருத்தம்
வல்லைசக்கரமீரெட்டும்வட்டமென்றிட்டநாமம். (உ)

உண்டையேகுவவுகொம்மையொடுபந்தம்புஞ்சஞ்சேடு
முண்டமேசணையேவட்டுமுத்தையேதுறுமல்சோகம்
கொண்டசேர்வுடனேமாழைகுவிதலேதொழுதிபூகம்
பிண்டமூவாறுபேருந்திரட்சியாம்பிழம்புமாமே. (௩)

தொழுதியேகுவவுதோடுதொகைசமுதாயஞ்சங்கம்
தழுவியகுழுவேகோட்டிசமவாயநிகாயங்குப்பை
குழுமலேகுவாலிராசிகுவிதன்மூவைந்துங்கூட்டம்
அழகியதகட்டினுமமரியடரைம்மையாமே. (ச)

சிறுகொடியின்பெயர்—கத்திகை. க.
தேரிற்கட்டுங்கொடியின்பெயர்—கூவிரம். க.
தூணியின்பெயர்—சிதார், சிதவல். உ.
சித்திரத்தின்பெயர்—ஓவியம், வட்டிகை. உ.
எழுதலின்பெயர்—பொறித்தல், தீட்டல், வரைதல். ௩.

மரவுரியின்பெயர்—வற்கலை, தூறைஞ்சி, சீரை. ௩.
உடுத்தலின்பெயர்—சுற்றல். க.
இறுக்கலின்பெயர்—தற்றல். க.

# பெயர்ப்பிரிவு.

இ - ள். கடி மலர்ப் பிண்டி நீழற் காவலன் சரணம் போற்றி-மணம் பொருந்திய பூக்களையுடைய அசோகமரத்தினது நிழலின்கண்ணே வீற்றிருந்த அருகக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்து,—வடிவினில் - வடிவினாலும்,—அளவுதன்னில் - அளவினாலும்,—வண்ணத்தில் - வண்ணத்தினாலும்,—காட்சி ஆகும் நெடியது பொருளின் - கண்ணுக்குப் புலப்படும் பெரிதாகிய பொருளினிடத்தும்,—மற்று - அஃதன்றி,—நீள் உணர்வால் காணப்படு பொருளின் - உயர்ந்த அறிவினாற் காணப்படும் பொருளினிடத்தும் பொருந்திய,—குணப்பேர்ப் பண்பதாந் தொகுதி சொல்வாம் - பண்புகளின்பெயர்களைத் தெரிவிக்கின்ற பண்புப்பெயர்த் தொகுதியை (யாம்) கூறுவாம். எ - று. ஓர், ஏ அசை.

வட்டத்தின்பெயர்—கோளகை, தொம்மை, வலயம், தட்டு, பரிதி, பாண்டில், கடகம், நேமி, சில்லி, மண்டலம், ஆழி, திகிரி, பாலிகை, விருத்தம், வல்லை, சக்கரம். கசு.

திரட்சியின்பெயர்—உண்டை, குவவு, கொம்மை, பந்தம், புஞ்சம், சேடு, முண்டம், கணை, வட்டு, முத்தை, துறுமல், சோகம், சேர்வு, மாழை, குவிதல், தொழுதி, பூகம், பிண்டம், பிழம்பு. கக.

கூட்டத்தின்பெயர்—தொழுதி, குவவு, தோடு, தொகை, சமுதாயம், சங்கம், குழு, கோட்டி, சமவாயம், நிகாயம், குப்பை, குழுமல், குவால், இராசி, குவிதல். க௫.
தகட்டின்பெயர்—அரி, அடர், ஐம்மை. ௩.

குடிலமேகுலாவல்கோணல்கோட்டங்கூன்கோண்வளாவல்
வடிவுளதட்டுவாங்கல்வணர்பத்தும்வளைவின்பேரே
பட்டையேபடர்ச்சிபம்பல்பரந்திடும்வடிவினுமம்
புடைபடுகுமிழ்ப்புத்தானேபுளகமாமொக்குள்கொப்புள். (ரு)

குழல்சுகிர்தூம்புநாழிகூறியபுரைவேய்வேணு
ஒழுகியசுரைநாளத்தோடொன்பதுமுட்டுளைப்பேர்
புழைகுழறுளையுடைத்தாம்பொருள்பிணர்சர்ச்சரைப்பேர்
செழுமயிர்கதிர்கள்போலச்சேர்ந்திடுந்தொகுதிகற்றை. (சு)

மதநனிபெருகலூக்கன்மற்றையவிதப்புச்சால
அதிகமேசிறப்பிறப்பேர்டலைதவவமலையான்றல்
கதழ்வொடுபிறங்கல்கூரேகழுமல்பூரிப்பேயூங்கு
புதுமையேயுருத்தன்மூவேழ்மிகுதியாம்பொங்கலும்பேர். (எ)

மன்னுமோடுக்கமோங்கல்வார்தல்சேணொழுக்கம்பொங்கல்
பன்னியநிமிர்தல்புங்கம்பரிபுரையுச்சந்துங்கம்
மின்னியநிவப்புகப்புமிசைமேடுபிறங்கலேந்தல்
உன்னதஞ்சிகரமூவேழுயர்ச்சியுத்துங்கமும்பேர். (அ)

விரிவின்பேர்விசாலமாகும்விபுலமுமாம்பரப்புப்
பரவைபப்பழுவர்தாவல்பாய்தலாஞெமிர்தலும்பேர்
மருவியபயினிசங்கமற்றிவையிரண்டுங்கூடல்
பருமையினுமம்பீனம்பனம்பரூஉவென்றும்பேரே. (கூ)

பாடுமாண்பாழிமீளிபணைபொழில்பகடுமூரி
மோடுமாறடவேவீறுமுடலைகொன்கருமையண்ணல்
ஈடுமாநளியேமானமிருமையேகயவோடேந்தல்
பீடுவான்குவவுசெம்மைபெருமைப்பேரிருபத்தேழே. (க0)

அணுநுழைமுளரிநுட்பமாய்தன்முள்ளயிர்நுணங்கு
நுணுகொடுநுவணைநுழைநொசிவீராறிவைநுண்மைப்பேர்
கணமிறைவறிதுசின்னங்கன்றுசுதன்னமொட்டே
அணைதருகிலமேதோகமற்பமிட்டிடையுமாமே. (கக)

அகறல்கண்ணறையேபாழியாய்வொடுபடர்தலான்றல்
அகலுளேவியலிடங்களகலமிவ்வெட்டுமாகும்
திகழ்செம்மையிருசுசெப்பஞ்செவ்வனேர்செவ்வையைந்தாம்
நிகழுஞ்சேண்சேய்மைதூரநீளிடைதானுமப்பேர். (கஉ)

வளைவின்பெயர்—குடிலம், குலாவல், கோணல், கோட்டம், கூன், கோண், வளாவல், தட்டு, வாங்கல், வணர். க0.
பரந்தவடிவின்பெயர்—படலை,படர்ச்சி, பம்பல். ௩. குமிழ்ப்புவடிவின்பெயர்-புளகம். க. மொக்குள்வடிவின்பெயர்-கொப்புள். க.

உட்டுளையின்பெயர்—குழல், சுசிர், தூம்பு, நாழி, புரை, வேய், வேணு, சுரை, நாளம். கூ. துளையுடைப்பொருளின்பெயர்—புழை, குழல். உ. சர்ச்சரையின்பெயர்—பிணர். க.
மயிர்த்தொகுதிகதிர்த்தொகுதிபோல்வனவற்றின்பெயர்-கற்றை. க.

மிகுதியின்பெயர்—மதம், நனி, பெருகல், ஊக்கல், விதப்பு, சால, அதிகம், சிறப்பு, இறப்பு, அலே, தவ, அமலை, ஆன்றல், கதழ்வு, பிறங்கல், கூர், கழுமல், பூரிப்பு, ஊங்கு, புதுமை, உருத்தல், பொங்கல். உஉ.

உயர்ச்சியின்பெயர்—மோடு, ஊக்கம், ஓங்கல், வார்தல், சேண், ஒழுக்கம், பொங்கல், நிமிர்தல், புங்கம், பரி, புரை, உச்சம், துங்கம், நிவப்பு, உகப்பு, மிசை, மேடு, பிறங்கல், ஏந்தல், உன்னதம், சிகரம், உத்துங்கம். உஉ.

விரிவின்பெயர்—விசாலம், விபுலம். உ.
பரப்பின்பெயர்-பரவை,பப்பு,அழுவம்,தாவல்,பாய்தல்,ஞெமிர்தல்
கூடலின்பெயர்—பயினி, சங்கம். உ.
பருமையின்பெயர்—பீனம், பனம், பரூஉ. ௩.

பெருமையின்பெயர்—பாடு, மாண், பாழி, மீளி, பணை, பொழில், பகடு, மூரி, மோடு, மால், தடவு, வீறு, முடலை, கொன், கருமை, அண்ணல், ஈடு, மா, நளி, மானம், இருமை, கயவு, ஏந்தல், பீடு, வான், குவவு, செம்மை. உஎ.

நுண்மையின்பெயர்—அணு, நுழை, முளரி, நுட்பம், ஆய்தல், முள், அயிர், நுணங்கு, நுணுகு, நுவணை, நூழை, நொசிவு. கஉ.
அற்பத்தின்பெயர்—கணம், இறை, வறிது, சின்னம், கன்று, ஆசு, தன்னம், ஒட்டு, இலம், தோகம், இட்டிடை. கக.

அகலத்தின்பெயர்—அகறல், கண்ணறை, பாழி, ஆய்வு, படர்தல், ஆன்றல், அகலுள், வியலிடம். அ.
செவ்வையின்பெயர்—செம்மை,இருசு,செப்பம்,செவ்வன்,நேர். ரு.
தூரத்தின்பெயர்—சேண், சேய்மை, நீளிடை. ௩.

வடிதலேயொழுகல்போகல்வரியுறைவார்தநீர்தல்
நெடிலொடாயதமேநேர்புநெடுமைசேண்கொடிநீளப்பேர்
அடையவெல்லாஞ்சமத்தமடங்கலேயகிலம்யாவும்
முடியவேயனைத்தகண்டமுழுவதாமுற்றுமப்பேர். (கங)

குறைதலின்பேர்நிரப்பேகுன்றலேபருகலஃகல்
சிறுகலேயீனமூனஞ்சிங்கலேயெஞ்சறேய்வாம்
துறுமலேசடிலத்தோடுதுன்னலேகஞறல்வீங்கல்
செறிநளிபொதுளல்செற்றுத்திணுங்கல்பத்துநெருங்கல். (கச)

பிறங்குதறிளைத்தலார்தல்பெருகுதல்கழுமன்மல்கல்
நிறைந்திடலாந்துவன்றல்பூரணங்கமழுநேரும்
பறைந்தபால்பயலருத்தம்பாகங்கூறைந்தும்பாதி
அறைந்தசீர்குருக்கனஞ்ஞாட்பதிபாரம்பொறையுமாமே. (கரு)

மிருதுவேசுகுமாரங்கோமளஞ்சாயல்கயவுமென்மை
மருவியவிலகுநொவ்வோடிலேசிவைவகுக்குநொய்மை
துருவமேதுவமேசற்றுஞ்சலியாதுதோன்றிநிற்றல்
கருதுபற்றுக்கோடேற்றங்கந்துதூத்தஞ்சமும்பேர். (கசு)

அளவையேகடனேகச்சமளத்தலினுமப்பேர்
அளவின்மையமானமற்றையபாரமேயநந்தமும்பேர்
வெளிபடாத்துதைதலோடுததைதலுமிடைதலென்ப
ஒளிபெறுகழிவுங்கூர்ப்புமுள்ளதுசிறத்தலின்பேர். (கஎ)

அடிமுதலெழுவாய்மோனையாதிபூருவந்தலைத்தாள்
இடைசமன்பகலேநாப்பணெய்துமத்தியநள்ளும்பேர்
கடையின்பேரிறுதியந்தங்காட்டியபின்னேமுற்று
முடிவுடனெல்லையாகுமொழிந்திடுமீறுமப்பேர். (கஅ)

தாறொடுவரையேமானந்தனைதுணையவதிமட்டே
காறொடுபரிமாணங்களளவின்பேர்கருதிலொன்பான்
கூறியவெல்லையின்பேர்கொற்றமேவரைப்புக்காட்டை
ஏறியபரியந்தத்தோடேணியிவ்வைந்துமென்ப. (ககூ)

குருகுபாறவளம்வெள்ளைகுருத்துவால்சுவேதம்பாண்டு
நரைவிளர்பத்தும்வெண்மைசிதமுஞ்சுக்கிலமுநாட்டும்
குருதிகிஞ்சுகமிராகங்குறித்திடுஞ்சேதுபூவல்
அருணஞ்சேய்சோணஞ்செக்கரரத்தஞ்சேப்பிவைசிவப்பாம். (உ௦)

நீளத்தின்பெயர்—வடிதல், ஒழுகல், போகல், வரி, உறை, வார்தல், தீர்தல், நெடில், ஆயதம், நேர்பு, நெடுமை, சேண், கொடி. கங.

முழுவதின்பெயர்—அடைய, எல்லாம், சமத்தம், அடங்கல், அகிலம், யாவும், முடிய, அனைத்து, அகண்டம், முற்றும். க௦.

குறைதலின்பெயர்—நிரப்பு, குன்றல், அருகல், அஃகல், சிறுகல், ஈனம், ஊனம், சிங்கல், எஞ்சல், தேய்வு. க௦.

நெருங்கலின்பெயர்—துறுமல், சடிலம், துன்னல், கஞறல், வீங்கல், செறி, நளி, பொதுளல், செற்று, திணுங்கல். க௦.

நிறைந்திடலின்பெயர்—பிறங்குதல், திளைத்தல், ஆர்தல், பெருகுதல், கழுமல், மல்கல், துவன்றல், பூரணம், கமம். கூ.

பாதியின்பெயர்—பால், பயல், அருத்தம், பாகம், கூறு. ரு.

பாரத்தின்பெயர்—சீர், குரு, கனம், ஞாட்பு, பொறை. ரு.

மென்மையின்பெயர்—மிருது, சுகுமாரம், கோமளம், சாயல், கயவு. ரு.

நொய்மையின்பெயர்—இலகு, நொவ்வு, இலேசு. ங.

சலியாதுநிற்றலின்பெயர்—துருவம், துவம். உ.

பற்றுக்கோட்டின்பெயர்—ஊற்றம், கந்து, தா, தஞ்சம். ச.

அளத்தலின்பெயர்—அளவை, கடன், கச்சம். ங.

அளவின்மையின்பெயர்—அமானம், அபாரம், அநந்தம். ங.

மிடைதலின்பெயர்—துதைதல், ததைதல். உ.

உள்ளதுசிறத்தலின்பெயர்—கழிவு, கூர்ப்பு. உ.

அடியின்பெயர்—முதல், எழுவாய், மோனை, ஆதி, பூருவம், தலைத்தாள். சா.

இடையின்பெயர்—சமன், பகல், நாப்பண், மத்தியம், நள். ரு.

கடையின்பெயர்—இறுதி, அந்தம், பின், முற்று, முடிவு, எல்லை, ஈறு. எ.

அளவின்பெயர்—தாறு, வரை, மானம், தனை, துணை, அவதி, மட்டு, காறு, பரிமாணம். கூ.

எல்லையின்பெயர்—கொற்றம், வரைப்பு, காட்டை, பரியந்தம், ஏணி. ரு.

வெண்மையின்பெயர்—குருகு, பால், தவளம், வெள்ளை, குருத்து, வால், சுவேதம், பாண்டு, நரை, விளர், சிதம், சுக்கிலம். கஉ.

சிவப்பின்பெயர்—குருதி, கிஞ்சுகம், இராகம், சேது, பூவல், அருணம், சேய், சோணம், செக்கர், அரத்தம், சேப்பு. கக.

பாசுபையரிதஞ்சாமம்பசுமைசாமளமேபச்சை
பேசுபிங்கலம்பசப்புப்பீதகம்பீதம்பொன்மை
பூசியகுரால்புற்கோடுபுகர்கபிலமுமாமென்ப
மாசின்பேர்கறைகளங்கமலினமாங்கசடுமப்பேர். (௨௧)

இருண்மணிநீலநல்லமேற்றகாழகமேகாளம்
கருள்களங்காரிகார்மால்கஃறமாயங்கறுப்பின்பேரே
விரியன்மின்னிலவுவில்வாள்வெயினிழல்வாமநீமம்
அரிநகைகிரணங்காந்தியாஞ்சோதியொளியீரேழ்பேர். (௨௨)

அலங்குதனகல்விளங்கலவிர்தலினொடுவயங்கல்
இலங்குதன்மிளிர்தன்மின்னலிலகுதலுடனிமைத்தல்
துலங்குதலொளிர்தலெங்குஞ்சுடருதல்பிறழ்தலீரேழ்
நலங்கொளவொளிசெயற்பேர்தயங்கலுநாட்டலாமே. (௨௩)

எழில்வண்ணம்யாணர்மாமையிராமமேர்நவ்விநோக்குச்
செழுமையேசேடுசெவ்விசித்திரநலமேமாதர்
குழகொடுபொற்புநன்குகோலமேமணிவனப்புப்
பழிபடாவிடங்கமாழைபத்திரந்தோட்டிபாங்கு. (௨௪)

சுந்தரமணங்குமஞ்சுசொக்குத்தேசிகமம்பொன்னே
சந்தங்காரிகைகவின்பூத்தளிமமேவாமங்காமர்
அந்தமேமயமேயொண்மையாய்ந்தவாறேழுந்தானே
வந்திடுமழகின்பேராம்வட்கல்புல்லெனன்மழுங்கல். (௨௫)

வரிபுகர்சாயல்சந்தமாமைகேழ்பசப்புவண்ணம்
குருவுருவருணமேனியீராறுநிறப்பேர்கூறும்
கருதுகட்டழகுகாமர்கருதலங்காரமும்பேர்
பெருகியவிசித்திரந்தான்பேரழகாகுமென்ப. (௨௬)

குருளையேமழவுவெண்மைகுழவுகோமளமேகொம்மை
புருவையௌவனமேநாகுபோதகந்தருணநவ்வி
முருகிளையிளமையீரேழ்முற்றலேவிருத்தமும்பாம்
மருவியவண்ணஞ்சந்தம்வடிவின்பேர்செண்ணமாமே. (௨௭)

மிடல்வயந்திண்மைமைந்துமெய்ந்நலந்தீரமும்பல்
முட்ளைகொன்வாய்மைகூளிமூரியேயூக்கமீளி
அடல்விறலீடேயேணேயாண்மையேதிறலேநோன்மை
முடுகலேமல்லல்பாழிமொய்ம்புரன்முரணேதுப்பு. (௨௮)

பச்சையின்பெயர்—பாசு,பை,அரிதம்,சாமம்,பசுமை,சாமளம். சு.
பொன்மையின்பெயர்—பிங்கலம், பசப்பு, பீதகம், பீதம். ச.
புகர்நிறத்தின்பெயர்—குரால், புற்கு, கபிலம். ௩.
மாசின்பெயர்—கறை, களங்கம், மலினம், கசடு. ச.

கறுப்பின்பெயர்—இருள், மணி, நீலம், நல்லம், காழகம், காளம், கருள், களம், காரி, கார், மால், கறை, மாயம். க௩.
ஒளியின்பெயர்—விரியல், மின், நிலவு, வில், வாள், வெயில், நிழல், வாமம், நீமம், அரி, நகை, கிரணம், காந்தி, சோதி. கச.

ஒளிசெயலின்பெயர்—அலங்குதல், நகல், விளங்கல், அவிர்தல், வயங்கல், இலங்குதல், மிளிர்தல், மின்னல், இலகுதல், இமைத்தல், துலங்குதல், ஒளிர்தல், சுடருதல், பிறழ்தல், தயங்கல். கரு.

அழகின்பெயர்—எழில், வண்ணம், யாணர், மாமை, இராமம், ஏர், நவ்வி, நோக்கு, செழுமை, சேடு, செவ்வி, சித்திரம், நலம், மாதர், குழகு, பொற்பு, நன்கு, கோலம், மணி, வனப்பு, விடங்கம், மாழை, பத்திரம், தோட்டி, பாங்கு. உரு.

சுந்தரம், அணங்கு, மஞ்சு, சொக்கு, தேசிகம், அம், பொன், சந்தம், காரிகை, கவின், பூ, தளிமம், வாமம், காமர், அந்தம், மயம், ஒண்மை. கஎ. (ஆ சஉ.)
மழுங்கலின்பெயர்—வட்கல், புல்லெனல். உ.

நிறத்தின்பெயர்—வரி, புகர், சாயல், சந்தம், மாமை, கேழ், பசப்பு, வண்ணம், குரு, உரு, வருணம், மேனி. கஉ.
கட்டழகின்பெயர்—காமர், அலங்காரம். உ.
பேரழகின்பெயர்—விசித்திரம். க.

இளமையின்பெயர்—குருளை, மழவு, வெண்மை, குழவு, கோமளம், கொம்மை, புருவை, யௌவனம், நாகு, போதகம், தருணம், நவ்வி, முருகு, இளை. கச. மூப்பின்பெயர்—முற்றல், விருத்தம். உ.
வண்ணத்தின்பெயர்—சந்தம். க. வடிவின்பெயர்—செண்ணம். க.

வலியின்பெயர்—மிடல், வயம், திண்மை, மைந்து, மெய்ந்நலம், திரம், உம்பல், மூட்டை, கொன், வாய்மை, கூளி, மூரி, ஊக்கம், மீளி, அடல், விறல், ஈடு, ஏண், ஆண்மை, திறல், நோன்மை, முடுகல், மல்லல், பாழி, மொய்ம்பு, உரன், முரண், துப்பு. உஅ.

தானமேமதமேதோற்றஞ்சத்துவந்தாவேயாற்றல்
மானமல்லூரமேமுன்புமதுகையேயெறுழெண்ணைந்தும்
ஊனமில்வலிவீரப்பேருறுபராக்கிரமஞ்சூரம்
ஈனமில்சௌரியம்வீரியமேசேவகமுமாமே. (௨௯)

தளவிலாவமைதியான்றல்சால்பொடுசெழுமைவாய்த்தல்
வளநிறைமாண்புமாண்டன்மாண்பத்துமாட்சிமைப்பேர்
நளிர்பனியளிசீதந்தண்ணன்மழைசாந்தமேழும்
குளிர்வளப்பங்கொழுப்பாங்கொழுமையேசெழுமையென்ப. (௩௦)

மேதைஞாபகந்தெருட்சிமிகுமதியுணர்வுஞானம்
போதமேதெளிவுபுந்திபுலனுரனறிவின்பேராம்
மேதகுபுனிதந்தூவேமேத்தியஞ்சௌசந்தூய்மை
தூய்துபாவனமேசுத்தஞ்சுசிபவித்திரந்துப்பும்பேர். (௩௧)

குறைவிலாவலனேவென்றிகொற்றமேவெற்றமுல்லை
விறல்சயம்வாகையாடுவிசயம்பத்திவைவெற்றிப்பேர்
மறுவில்சீர்விபவமாடுவாழ்க்கையேவிருத்தியாக்கம்
பொறியிடந்திருப்பெருக்கம்போற்றியவெறுக்கைசெல்வம். (௩௨)

பரிவுநார்வாரமீரம்பற்றளிபாசமன்பாம்
புரிவாணநேயமும்பேர்போற்றியதயையிரக்கம்
கருணையேகிருபைமற்றுக்கருதியதகவிவ்வைந்தும்
அருளின்பேருழுவலென்பதெழுமையுந்தொடர்ந்தவன்பு. (௩௩)

உன்னமேயகமேசித்தமுள்ளமேயிதயநெஞ்சு
முன்னமேழ்மனத்தின்பேராமுதிர்சிந்தைநினைவுசேத்துச்
சொன்னவிங்கிதங்கருத்துச்சூழலெண்ணங்குறிப்பாம்
வன்மைநாட்டியந்தியானமதம்வினையேடலும்பேர். (௩௪)

கண்ணலேகருதல்பேணல்காணலேறுதலல்சுட்டல்
எண்ணலேபுகறலெட்டுங்குறித்திடலென்னலாகும்
நண்ணியகணித்தலோடுநாட்டியகுணித்தலெல்லாம்
மண்ணுளோர்வரையறுத்தற்பெயரென்பமதித்தலும்பேர். (௩௫)

உன்னலேபடர்தலூழ்த்தலுள்ளுதலொடுசிந்தித்தல்
முன்னலேவலித்தலூகமொழிபவேநினைத்தலெண்பேர்
மன்னுசெம்மாப்பேமாப்புமற்றையேக்கழுத்தமும்பேர்
இன்னவையிறுமாப்பாகுமிவையேவீற்றிருத்தலென்ப. (௩௬)

தானம், மதம், தோற்றம், சத்துவம், தா, ஆற்றல், மானம், மல், உரம், முன்பு, மதுகை, எறும். கஉ. (ஆ சo.)
வீரத்தின்பெயர்—பராக்கிரமம், சூரம், சௌரியம், வீரியம், சேவகம். டு.

மாட்சிமையின்பெயர்—அமைதி, ஆன்றல், சால்பு, செழுமை, வாய்த்தல், வளம், நிறை, மாண்பு, மாண்டல், மாண். சo.
குளிரின்பெயர்—நளிர், பனி, அளி, சீதம், தண், மழை, சாந்தம். எ.
வளப்பத்தின்பெயர்-கொழுப்பு. க. கொழுமையின்பெயர்-செழுமை

அறிவின்பெயர்—மேதை, ஞாபகம், தெருட்சி, மதி, உணர்வு, ஞானம், போதம், தெளிவு, புந்தி, புலன், ஊரன். கக.
சுத்தத்தின்பெயர்—புனிதம், தூ, மேத்தியம், சௌசம், தூய்மை, தூய்து, பாவனம், சுசி, பவித்திரம், துப்பு. கo.

வெற்றியின்பெயர்—வலன், வென்றி, கொற்றம், வெற்றம், முல்லை, விறல், சயம், வாகை, ஆடு, விசயம். கo.
செல்வத்தின்பெயர்—சீர், விபவம், மாடு, வாழ்க்கை, விருத்தி, ஆக்கம், பொறி, இடம், திரு, பெருக்கம், வெறுக்கை. கக.

அன்பின்பெயர்—பரிவு, நார், வாரம், ஈரம், பற்று, அளி, பாசம், புரிவு, ஆணம், நேயம். கo.
அருளின்பெயர்—தயை, இரக்கம், கருணை, கிருபை, தகவு. டு.
எழுமையுந்தொடர்ந்தவன்பின்பெயர்—உழுவல். க.

மனத்தின்பெயர்—உன்னம், அகம், சித்தம், உள்ளம், இதயம், நெஞ்சு, முன்னம். எ.
குறிப்பின்பெயர்-சிந்தை, நினைவு, சேத்து, இங்கிதம், கருத்து, சூழல், எண்ணம், வன்மை, நாட்டியம், தியானம், மதம், வினை, ஏடல். கரு.

குறித்தலின்பெயர்—கண்ணல், கருதல், பேணல், காணல், நுதலல், சுட்டல், எண்ணல், புகறல். அ
வரையறுத்தலின்பெயர்—கணித்தல், குணித்தல், மதித்தல். ந.

நினைத்தலின்பெயர்—உன்னல், படர்தல், ஊழ்த்தல், உள்ளுதல், சிந்தித்தல், முன்னல், வலித்தல், ஊகம். அ.
ஏமாப்பின்பெயர்—செம்மாப்பு, ஏக்கழுத்தம். உ.
இவ்விரண்டும் இறுமாப்பிற்கும்பெயராம்; இவையே வீற்றிருத்தற்கும் பெயராம்.

கச

த்ருக்கொடுமலர்ச்சிமத்தந்தன்குபாடவங்களிப்புச்
செருக்கபிமானமேமந்திகழ்பெருமிதமதர்ப்புப்
பொருத்திடுமதர்வீராறும்புகலுமுள்ளக்களிப்பாம்
உருத்திடுஞானஞ்சீலமோதுநல்லுணர்வினுமம். (௩௭)

நகைகடிமகிழ்ச்சியேமநயஞ்சுகந்தொய்யலின்பம்
மகிழுமானந்தமொன்றேமன்னுபேரின்பமென்ப
திகழ்நனவுணர்வுதேறறேற்றநற்றெளிவுநாற்பேர்
புகழ்பெறுகமித்தன்றல்சகித்திடல்பொறைமுப்பேரே. (௩௮)

நறுமையேவிழுமஞ்சேடுநயநன்றியாணர்நன்னர்
உறுதியாங்கடவுளொண்மையுத்தமம்பத்துநன்றாம்
அறமென்பதருமந்தானேயாகுமூழின்பேர்தெய்வம்
நிறுவியவிதியேயுண்மைவரன்முறைநியதியும்பேர். (௩௯)

தவமென்பவிரதநோன்பாமுவவொடுதவசுமாகும்
உவகைமாராயமற்றையோகையேபிரியமும்பேர்
நவமதாங்கேண்மைகண்ணேநாகரிகங்கண்ணோட்டம்
இவைநயப்புணர்வுமாமேயேணிலையுடைமையென்ப. (௪0)

தூக்கியகேண்மையேகேடொடர்பென்பநட்புமுப்பேர்
ஊக்கமேயுரனிரண்டுமுள்ளத்தின்மிகுதியென்ப
நீக்கிலாவகைதிறங்கணிகரிலாக்கூறுபாடே
ஆக்கமேபலன்பயம்பேறதிகமூதியமிலாபம். (௪௧)

வெறுப்பொடுமுனைவொல்லாமைவேண்டாமையுவர்ப்பேமாவே
அறுத்திடலவாவின்மைப்பேரலமென்பதமையுமென்றல்
துறத்தல்சார்பறுத்தலோடுதுறவியேவிரத்திமுப்பேர்
மறுத்தனுண்சமழ்ப்புவெள்கல்வட்கலுட்கிலச்சைவெட்கம். (௪௨)

ஒருமைதொட்டிமைகுறிப்போடொற்றுமையென்பமுப்பேர்
தருபெருந்துணையேதுப்புச்சகாயமேயிணையும்பேராம்
பெருகியமன்னறுஞ்சறிதிநிலைபெறுதன்முப்பேர்
விரவியதாணுவும்பேர்மேவியவாணையேவல். (௪௩)

செயன்முறைநடையாசாரஞ்செய்திகையறையேகையே
இயல்புமஞ்சரியேநீள்சாரித்திரமொழுக்கம்பத்தாம்
மயலறுநெறிநியாயமரியாதைநீதிமுப்பேர்
வியனுறுமழுக்கின்மைக்குவிமலமுமமலமும்பேர். (௪௪)

உள்ளக்களிப்பின்பெயர்—தருக்கு,மலர்ச்சி,மத்தம்,தன்கு,பாடவம், களிப்பு, செருக்கு, அபிமானம், ஏமம், பெருமிதம், மதர்ப்பு, மதர்வு. கஉ. நல்லுணர்வின்பெயர்—ஞானம், சீலம். உ.

இன்பத்தின்பெயர்—நகை, கடி, மகிழ்ச்சி, ஏமம், நயம், சுகம், தொய்யல். எ. பேரின்பத்தின்பெயர்—ஆனந்தம். க.
தெளிவின்பெயர்—நனவு, உணர்வு, தேறல், தேற்றம். ச.
பொறையின்பெயர்—கமித்தல், நோன்றல், சகித்திடல். ங.

நன்றின்பெயர்—நறுமை, விழுமம், சேடு, நயம், நன்றி, யாணர், நன்னர், கடவுள், ஒண்மை, உத்தமம். கo.
தருமத்தின்பெயர்—அறம். க.
ஊழின்பெயர்—தெய்வம், விதி, உண்மை, வரன்முறை, நியதி. கு.

தவத்தின்பெயர்—விரதம், நோன்பு, உவவு, தவசு. ச.
உவகையின்பெயர்—மாராயம், ஓகை, பிரியம். ங.
கண்ணோட்டத்தின்பெயர்-கேண்மை, கண், நாகரிகம்,நயப்புணர்வு.
நிலையுடைமையின்பெயர்—ஏண். க.

நட்பின்பெயர்—கேண்மை, கேள், தொடர்பு. ங.
உள்ளத்தின்மிகுதியின்பெயர்—ஊக்கம், உரன். உ.
கூறுபாட்டின்பெயர்—வகை, திறம். உ.
இலாபத்தின்பெயர்-ஆக்கம்,பலன்,பயன்,பேறு,அதிகம்,ஊதியம்சு

அவாவின்மையின்பெயர்—வெறுப்பு, முனிவு, ஒல்லாமை, வேண்டாமை, உவர்ப்பு, மா, அறுத்திடல். எ. அமையுமென்றலின் பெயர்—அலம் க. துறத்தலின்பெயர்—சார்பறுத்தல், துறவி, விரத்தி. ங. வெட்கத்தின்பெயர்—மறுத்தல், நாண், சமழ்ப்பு, வெள்கல், வட்கல், உட்கு, இலச்சை. எ.

ஒற்றுமையின்பெயர்—ஒருமை, தொட்டிமை, குறிப்பு. ங.
சகாயத்தின்பெயர்—துணை, துப்பு, இணை. ங.
நிலைபெறுதலின்பெயர்—மன்னல், துஞ்சல், திதி, தாணு. ச.
ஏவலின்பெயர்—ஆணை. க.

ஒழுக்கத்தின்பெயர்—செயல், முறை, நடை, ஆசாரம், செய்தி, கையறை, கை, இயல்பு, மஞ்சரி, சாரித்திரம். கo.
நீதியின்பெயர்—நெறி, நியாயம், மரியாதை. ங.
அழுக்கின்மையின்பெயர்—விமலம், அமலம். உ.

தொல்லைமுன்பண்டுமுந்தைதொன்றுபூருவம்புராணம்
ஒல்லையேபுராதனத்தோடுற்றவூழ்பழமைபத்தாம்
நல்லநூதனம்விருந்துநவங்கடிபுத்தேள்கோடி
புல்லியயாணர்வம்புபுனிறென்பான்புதுமையின்பேர். (௪௫)

நீக்கிலாத்துப்புமல்லனெடியமங்கலமேபூவே
போக்கமேமலர்ச்சிபொம்மல்பொற்பிவைபொலிவெண்பேராம்
தீர்க்கமேதரிப்புமன்றதேறிவைநிச்சயப்பேர்
ஆக்கமேநந்தலென்பவபிதானநாமம்பேராம். (௪௬)

பாங்கொடுகாணிதாயம்பால்கெழுதகைமையாட்சி
ஈங்கிவையுரித்தினுமெண்ணமேகணிதமென்ப
நீங்கருநிலைதண்டாமைநிகரிலானுமையும்பேர்
பாங்குறுமரபுபாரம்பரியமேமுறைமையாகும். (௪௭)

வியப்புவிம்மிதத்தினோடுவிசித்திரமிறும்பூதின்ன
மயக்கிலாவதிசயப்பேர்மற்றையற்புதமுமாகும்
செயத்தருகாரணப்பேர்திறமேதுப்பொருட்டுவாயில்
நயத்தருநிமித்தமும்பேர்நாடுங்கால்வழியேபின்னும் (௪௮)

மல்லொடுவளமேவாரிபகுதியும்வருவாயின்பேர்
புல்லுதல்கெழுமலென்பபொருந்தலேயமைவுமப்பேர்
பல்பலமுறையின்பேரேபரியாயந்திணைகுடிப்பேர்
நல்லதாம்வெகுவிதந்நாநாவிதம்விவிதமாமே. (௪௯)

அறிந்திடும்பொருட்பேர்சித்துச்சேதனமென்பராய்ந்தோர்
அறிந்திடாப்பொருளசித்தோடசேதனஞ்சடமுமாகும்
சிறந்திடவுயிர்களீசன்செய்திடுஞ்சீலநூலை
அறிந்துமஃதறியாதாரைப்போறலேயறிமடந்தான். (௫0)

அறிவின்மைமடமெய்யாமைமருட்சிபேதைமையென்றாகும்
பெறுமுதுக்குறைவுதானேபேரறிவென்றுகூறும்
குறைவிலாக்கோணைகன்னிகுமரியேயழிவின்மைப்பேர்
உறவியேயுறவின்பேராநிறைவேறல்சபலமாமே. (௫௧)

உம்மையேகழிபிறப்பாமொழிந்திடுவருபிறப்பிற்
கம்மையுமறுமையும்பேரானவிப்பிறப்பினுமம்
இம்மையாமொருபிறப்பேயியம்பிடிலொருமைதானே
ஏழ்மையெப்பிறப்புமென்பவேழ்பவமெழுபிறப்பாம். (௫௨)

பழமையின்பெயர்—தொல்லை, முன், பண்டு, முந்தை, தொன்று, பூருவம், புராணம், ஒல்லை, புராதனம், ஊழ். ௧0.
புதுமையின்பெயர்—நூதனம், விருந்து, நவம், கடி, புத்தேள், கோடி, யாணர், வம்பு, புனிறு. ௯.

பொலிவின்பெயர்—துப்பு, மல்லல், மங்கலம், பூ, போக்கம், மலர்ச்சி, பொம்மல், பொற்பு. அ.
நிச்சயத்தின்பெயர்—தீர்க்கம், தரிப்பு, மன்ற, தேறு. ச.
ஆக்கத்தின்பெயர்—நந்தல்.௧.பேரின்பெயர்-அபிதானம்,நாமம். உ.

உரித்தின்பெயர்—பாங்கு, காணி, தாயம்; பால், கெழுதகைமை, ஆட்சி. ௬. கணிதத்தின்பெயர்—எண்ணம். ௧.
நிலைநீங்காமையின்பெயர்—தண்டாமை, ஆனாமை. உ.
முறைமையின்பெயர்—மரபு, பாரம்பரியம். உ.

அதிசயத்தின்பெயர்—வியப்பு, விம்மிதம், விசித்திரம், இறும்பூது, அற்புதம். ரு.
காரணத்தின்பெயர்—திறம், ஏது, பொருட்டு, வாயில், நிமித்தம். ரு.
பின்னின்பெயர்—வழி. ௧.

வருவாயின்பெயர்—மல், வளம், வாரி, பகுதி. ச.
பொருந்தலின்பெயர்—புல்லுதல், கெழுமல், அமைவு. ௩.
பல்பலமுறையின்பெயர்—பரியாயம்.௧.குடியின்பெயர்—திணை. ௧.
வெகுவிதத்தின்பெயர்—நாநாவிதம், விவிதம். உ.

அறிவுடைப்பொருளின்பெயர்—சித்து, சேதனம். உ.
அறிவில்பொருளின்பெயர்—அசித்து, அசேதனம், சடம். ௩.
அறிந்துமறியார்போறல்—அறிமடம். ௧.

அறிவின்மையின்பெயர்—மடம்,எய்யாமை,மருட்சி,பேதைமை. ச.
பேரறிவின்பெயர்—முதுக்குறைவு. ௧.
அழிவின்மையின்பெயர்—கோணை, கன்னி, குமரி. ௩.
உறவின்பெயர்—உறவி. ௧. நிறைவேறலின்பெயர்—சபலம். ௧.

கழிபிறப்பின்பெயர்—உம்மை. ௧.
வருபிறப்பின்பெயர்—அம்மை, மறுமை. உ.
இப்பிறப்பின்பெயர்-இம்மை.௧.ஒருபிறப்பின்பெயர்—ஒருமை. ௧.
எப்பிறப்பிற்கும்பெயர்-எம்மை.௧.எழுபிறப்பின்பெயர்-ஏழ்பவம்.௧.

## எட்டாவது பண்புபற்றியபெயர்த்தொகுதி.

முருகுதேன்கடியாமோதமோதவங்கந்தம்வேரி
விரைநறைமன்றல்வம்புவெறிமருமணம்பன்முப்பேர்
பரிமளமிகுமணப்பேர்பரவிநாறுதல்கந்தித்தல்
விரவியகமழ்தலும்பேர்மேவுதூர்க்கந்தம்பூதி. (ருங.)

தூயசேறமுதசாரஞ்சுவைதீந்தேமினிமையின்பேர்
தீயதேங்கனிதித்திப்பாமதுரமுமாகுந்தித்தம்
ஆயதுவைத்தலின்பேராமிலம்புளிப்பதாகும்
காயமேகடுகங்காழ்ப்புக்கரில்காரங்கடுக்கார்ப்பாமே. (ருச)

வெருவுசூர்பீர்வெறுப்புவெறிவெடிகவலைபீதி
உருவுபேம்விறப்புக்கொன்னேயுட்குநாம்பனிப்பணங்கு
தருபுலம்பதிர்ப்படுப்புத்தரம்பயமுருமச்சப்பேர்
துரிதமேபிரமம்வந்துசூழ்கதனங்கலக்கம். (ருரு)

நிலைபெருதோடறேங்கன்ஞெரேலெனல்கூசறிட்கல்
உலமரலளுக்கன்ஞொள்கலொடுதுடுக்கெனலேதுட்கல்
குலைதல்வெய்துறலேயச்சக்குறிப்புத்துண்ணெனலுங்கூறும்
தலையிழிபுடனேசாய்ப்புத்தஞ்சமேதண்மைதாழ்வு. (ருசு)

விதிர்ப்பொடுவிதப்புக்கம்பம்விதலைகம்பிதம்பனிப்புப்
பொதிர்ப்புலைவிவைநடுக்கம்பொருந்திடுமெளிமையெண்மை
மதிப்பிலாப்பரிபவங்கண்மற்றிழிதகவுமாகும்
பிதற்றுசிற்றறிவுவெண்மைவெளிறுபுல்லறிவின்பேரே. (ருஎ)

ஆசுதோம்பிழையேபோக்கேயரில்கரில்பழியரிப்புக்
காசுலைமதவறேமானங்கறைகுறைமிறைகழிப்பு
மாசொடுதுகளேதப்புமறுநவைவசைகொழிப்பே
ஏசொடுபுரையேகோதேயேதமூவொன்பான்குற்றம். (ருஅ)

வழுக்கொடுமறவிபுன்மைமறலொடுபொல்லாங்கேகீழ்
இழுக்கொடுசோர்வுபொச்சாப்பிகழ்ச்சியுமறத்தலின்பேர்
பழித்திடுந்துவ்வுமன்னும்பகர்ந்திடுமிழிவுதானே
இளைத்திடுந்தளர்ச்சியேட்டையசாவுமாமிளைவிரக்கம். (ருகூ)

கடுகியவெம்மைகோரங்கருமையேயுருமம்வெப்பம்
உடனழலழனந்தாபமுருப்பமுட்டணப்பேரோன்பான்
கொடுமையின்பேரேசண்டங்கோடணைகடினங்கோரம்
கடுமையுக்கிரமுறைப்புக்கலாஞ்சடம்வஞ்சம்பூதி. (சுo)

மணத்தின்பெயர்—முருகு, தேன், கடி, ஆமோதம், மோதவம், கந்
தம், வேரி, விரை, நறை, மன்றல், வம்பு, வெறி, மரு. ௧௩.
மிகுமணத்தின்பெயர்—பரிமளம். ௧. நாறுதலின்பெயர்—கந்தித்
தல், கமழ்தல். ௨. துர்க்கந்தத்தின்பெயர்—பூதி. ௧.

இனிமையின்பெயர்—சேறு, அமுது, சாரம், சுவை, தீம், தேம். ௬.
தித்திப்பின்பெயர்—தேம், கனி, மதுரம். ௩.
கைத்தலின்பெயர்—தித்தம். ௧. புளிப்பின்பெயர்—ஆமிலம். ௧.
கார்ப்பின்பெயர்—காயம், கடுகம், காழ்ப்பு, கரில், காரம், கடு. ௬.

அச்சத்தின்பெயர்—வெருவு, சூர், பீர், வெருப்பு, வெறி, வெடி,
கவலை, பீதி, உருவு, பேம், விறப்பு, கௌன், உட்கு, நாம், பனி
ப்பு, அணங்கு, புலம்பு, அதிர்ப்பு, அடுப்பு, தரம், பயம், உரும். ௨௨.
கலக்கத்தின்பெயர்—துரிதம், பிரமம், கதனம். ௩.

அச்சக்குறிப்பின்பெயர்—ஒடல், தேங்கல், ஞெரேலெனல், கூசல்,
திட்கல், உலமரல், அளுக்கல், ஞொள்கல், துடுக்கெனல், துட்
கல், குலைதல், வெய்துறல், துண்ணெனல். ௧௩.
தாழ்வின்பெயர்—தலையிழிபு, சாய்ப்பு, தஞ்சம், தண்மை. ௪.

நடுக்கத்தின்பெயர்—விதிர்ப்பு, விதப்பு, கம்பம், விதலை, கம்பிதம்,
பனிப்பு, பொதிர்ப்பு, உலைவு. ௮.
எளிமையின்பெயர்—எண்மை, பரிபவம், இழிதகவு. ௩.
புல்லறிவின்பெயர்—சிற்றறிவு, வெண்மை, வெளிறு. ௩.

குற்றத்தின்பெயர்—ஆசு, தோம், பிழை, போக்கு, அரில், கரில்,
பழி, அரிப்பு, காசு, மை, தவறு, மானம், கறை, குறை, மிறை,
கழிப்பு, மாசு, துகள், தப்பு, மறு, நவை, வசை, கொழிப்பு, ஏசு,
புரை, கோது, ஏதம். ௨௭.

மறத்தலின்பெயர்—வழுக்கு, மறவி, புன்மை, மறல், பொல்லாங்கு,
கீழ், இழுக்கு, சோர்வு, பொச்சாப்பு, இகழ்ச்சி. ௧௦.
இழிவின்பெயர்—துவ்வு, மன். ௨. தளர்ச்சியின்பெயர்—ஏட்டை,
அசா. ௨. இரக்கத்தின்பெயர்—இனைவு. ௧.

உட்டணத்தின்பெயர்—வெம்மை, கோரம், கருமை, உருமம், வெப்
பம், அழல், அழனம், தாபம், உருப்பம். ௯.
கொடுமையின்பெயர்—சண்டம், கோடணை, கடினம், கோரம்,
கடுமை, உக்கிரம், உறைப்பு, கலாம், சடம், வஞ்சம், பூதி. ௧௧.

குறையிலம்பாடுமிச்சைகுறுவாழ்க்கைமிடிகிரப்புச்
சிறுமையேயொற்கமின்மைதீயநல்குரவேயல்கல்
வறுமையின்பெயர்பன்னொன்றும்வருதரித்திரமுமாகும்
மறலிகன்முனைமுரண்டாமடிதெவ்வோடரிபகைப்பேர். (சுக)

வெறுத்தலேச்சினங்குரோதம்வெகுளிமற்றரிப்புச்சீற்றம்
செறித்திடுங்கலாங்கதங்கள்செயிரொன்பான்கோபத்தின்பேர்
கறுப்பொடுசிவப்பேபோதக்கன்றலேபுழுங்கல்சீறிக்
குறித்திடும்புகைதல்பொங்கிக்கொதித்தல்கோபக்குறிப்பாம். ()

குருத்தமுன்கோபம்வெம்பல்கொந்தலேகனிதல்கோம்பல்
பெருத்தகோபம்விடைத்தல்பெருகியமுனைதல்சீறல்
உருத்தலேயுலறல்காய்தலுடற்றறீவிரமுமாகும்
தரித்திடும்வயிரஞ்செற்றஞ்சலம்பவந்தொந்தம்வேரம். (சுங)

உயவனுக்கங்கவற்சியுயங்குதல்கசிவணங்கே
அயர் * வொடுநொசிவேநோவேயாய்வொடுமிறைசமழ்த்தல்
வயாவொடாகுலமழுங்கல்வருத்தமூவைந்தும்வைக்கும்
வியன்மிகுமேற்றனெள்ளல்சாலூரமேதைமேன்மை. (சுச)

வீற்றெருடுவிகிர்தம்பின்னம்விபரீதம்விரூபம்விள்ளல்
வேற்றுமைதிரிபுபேதம்விகடமீரைந்துந்தானே
ஏற்றியவேறுபாட்டுக்கியம்பியநாமமாகும்
போற்றியதனிமையேகம்புலம்புகேவலமுமாமே. (சுரு)

இருளுணராமைமத்தமிளமைமாழாத்தல்பித்தம்
வெருள்களிகழுமன்மோகமேவுமுன்மத்தமாழ்கல்
கருதியவனந்தரங்களன்பேதுமைபன்மைந்து
மருண்மறன்மான்றன்மூவேழ்மயக்கமாமயர்வுமப்பேர். (சுசு)

தீங்குகோளந்தராயஞ்செப்புவிக்கினமுட்டுப்பா
டோங்கியவலாபந்தட்டேயூறேயந்தராமுந்தீதாம்
ஆங்குளவலைசலாஞ்சியழுங்கலேமடியேஞொள்கல்
தூங்கலேயசைவேமந்தஞ்சோகமாலசியஞ்சோம்பாம். (சுஎ)

குடிலம்புள்ளுவமேகூடங்குத்திரமாயைகுய்யம்
படிறுசாட்டியமேவஞ்சம்பட்டிமைதானுமப்பேர்
செடிசீத்தைசிதம்பினேடுசீரணங்குணமின்மைப்பேர்
மிடிதருந்தூமதப்பேர்விளம்பனம்விளம்பந்தாமே. (சுஅ)

* அயா என்றும் கூறுவர்.

வறுமையின்பெயர்--குறை,இலம்பாடு,மிச்சை,குறுவாழ்க்கை,மிடி, நிரப்பு,சிறுமை,ஒற்கம்,இன்மை,நல்குரவு,அல்கல்,தரித்திரம்.கஉ.
பகையின்பெயர்—மறல்,இகல்,முனை,முரண்,தா, மடி, தெவ்,அரி. அ.

கோபத்தின்பெயர்—வெறுத்தல், சினம், குரோதம், வெகுளி, அரிப்பு, சீற்றம், கலாம், கதம், செயிர். க.
கோபக்குறிப்பின்பெயர்—கறுப்பு, சிவப்பு, கன்றல், புழுங்கல், புகைதல், கொதித்தல். சா.

முன்கோபத்தின்பெயர்-வெம்பல்,கொந்தல்,கனிதல்,கோம்பல். ச.
பெருங்கோபத்தின்பெயர்—விடைத்தல், முனைதல், சீறல், உருத்தல், உலறல், காய்தல், உடற்றல், தீவிரம். அ.
* வைரத்தின்பெயர்—செற்றம், சலம், பவம், தொந்தம்,வேரம்.ரு.

வருத்தத்தின்பெயர்—உயவு, அனுக்கம், கவற்சி, உயங்குதல், சசிவு, அணங்கு, அயர்வு, நொசிவு, நோ, ஆய்வு, மிறை, சமழ்த்தல், வயாவு, ஆகுலம், அழுங்கல். கரு.
மேன்மையின்பெயர்—ஏற்றம், ஞெள்ளல், சாலூரம், மேதை. ச.

வேறுபாட்டின்பெயர்—வீற்று, விகிர்தம், பின்னம், விபரீதம்,விருபம், விள்ளல், வேற்றுமை, திரிபு, பேதம், விகடம். க0.
தனிமையின்பெயர்—ஏகம், புலம்பு, கேவலம். ங.

மயக்கத்தின்பெயர்—இருள், உணராமை, மத்தம், இளமை, மாழாத்தல், பித்தம், வெருள், களி, கழுமல், மோகம், உன்மத்தம், மாழ்கல், அனந்தர், ஏமம், களன், பேது, மையல், மைந்து, மருள், மறல், மான்றல், மயர்வு. உஉ.

தீதின்பெயர்—தீங்கு,கோள்,அந்தராயம்,விக்கினம், முட்டுப்பாடு, அலாபம், தட்டு, ஊறு, அந்தரம். க.
சோம்பின்பெயர்—அலசல், ஆஞ்சி, அழுங்கல், மடி, ஞொள்கல், தூங்கல், அசைவு, மந்தம், சோகம், ஆலசியம். க0.

வஞ்சத்தின்பெயர்—குடிலம், புள்ளுவம், கூடம்,குத்திரம், மாயை, குய்யம், படிறு, சாட்டியம், பட்டிமை. க.
குணமின்மையின்பெயர்—செடி, சீத்தை, சிதம்பு, சீரணம். ச.
தாமதத்தின்பெயர்—விளம்பனம், விளம்பம். உ.

* வைரம்-நெடுங்காலமாக நிகழுங்கோபம்.

இழிவொடுதிரிதனந்தவிறுதலேழுறிதல்கந்தல்
வழுகயஞ்சிதைவழுங்கன்மடிசுதங்கேடாநிந்தை
இழிவெள்ளனகலொல்லாமையிகழ்ச்சியாழுவர்ப்புமப்பேர்
குழைவுருவருவருப்புக்குற்சிதம்பயிர்ப்புமாமே. (சுக)

மறமகங்கலுடம்பங்கம்வருஞ்செடிதுரிதம்பாவம்
வறிதுகொன்வீண்விருதாமன்னியபயனிலாமை
அறைதருசந்தேகப்பேரயிர்ப்பையங்கடுத்தல்சங்கை
கறையிலோர்தலைக்காமப்பேர்கைக்கிளையாகுமென்ப. (எ0)

சிறந்திடுஞ்சன்மந்தோற்றஞ்செனனமேபவஞ்சனிப்புப்
பிறந்தையுற்பவமென்றேழும்பிறப்பாமுற்பத்தியும்பேர்
அறைந்தசூதகமாசௌசம்புனிறேயீன்றணிமையின்பேர்
துறந்தவாலாமைபூப்புத்தோகைமார்தொடாப்பொருட்டே. (எக)

அன்றேவோடந்தோவாவேர்வத்தோவோடச்சோவையோ
என்னேயெற்றெவனெனுஞ்சொலதிசயமுறவிரங்கல்
மன்னுமௌவியமேயென்பமனக்கோட்டமழுக்காற்றின்பேர்
சொன்னநோனாமைகூரஞ்சூழ்ந்திடும்பொறாமைமுப்பேர். (எஉ)

அல்லலேயலக்கண்மம்மரரந்தைகோட்டாலைபீழை
செல்லல்கேதங்கலக்கஞ்சிறுமைகுருறுகண்புன்கண்
சொல்லுமிட்டளமின்னாவேதுனிபருவரலேதுக்கம்
ஒல்லுநோவழுங்கல்பீடையுலமரலல்லகண்டம். (எங)

கவ்வையாதனைபழங்கண்கையாறுநடலைபையுள்
எவ்வமேதம்வெறுப்பேயிடும்பையேயிடுக்கணின்னல்
வவ்வியபடர்பனித்தல்வறுமைவெய்துறலேலைபதல்
வெவ்வியகவலைதீயவிழுமமாறேழுந்துன்பம். (எச)

மாதர்நச்சிச்சையேடைவயாநம்புநசைநயப்புக்
காதல்வெப்பம்விருப்பங்காமமேயிராகம்பற்றே
ஆதரம்பெட்புவேட்கையார்வமேமேவல்வெஃகல்
ஓதியவிழைவுமூவேழுறுபெயராசையாமே. (எரு)

சூழ்தருமோகநம்பல்சொற்றிடுமிரதிவெஃகல்
தாழ்தலேகவர்தல்பெட்டல்சார்புடனிவறல்வேண்டல்
வீழ்தல்வேணவாவீராறும்வேட்கையின்பெருக்கமென்ப
மாழ்கியவிரகங்காமமதனமேகாமநோயாம். (எசு)

கேட்டின்பெயர்—இழிவு, திரிதல், நந்தல், இறுதல், முறிதல், கந்தல், வழு, கயம், சிதைவு, அழுங்கல், மடி, சுதம். கஉ.
இகழ்ச்சியின்பெயர்—நிந்தை, இழிவு, எள்ளல், நகல், ஒல்லாமை, உவர்ப்பு. சு. அருவருப்பின்பெயர்—குற்சிதம், பயிர்ப்பு. உ.

பாவத்தின்பெயர்—மறம், அகம், கலுடம், பங்கம், செடி, துரிதம். சு.
பயனிலாமையின்பெயர்—வறிது, கொன், வீண், விருதா. ச.
சந்தேகத்தின்பெயர்—அயிர்ப்பு, ஐயம், கடுத்தல், சங்கை. ச.
ஒருதலைக்காமத்தின்பெயர்—கைக்கிளை. க.

பிறப்பின்பெயர்—சன்மம், தோற்றம், செனனம், பவம், சனிப்பு, பிறந்தை, உற்பவம், உற்பத்தி. அ.
சூதகத்தின்பெயர்-ஆசௌசம். க. ஈன்றணிமையின்பெயர்-புனிறு. க
தோகைமார்தொடாப்பொருட்டின்பெயர்—வாலாமை, பூப்பு. உ.

அதிசயமுறவிரங்கலின்பெயர்—அன்னோ, அந்தோ, ஆ, ஓ, அத்தோ, அச்சோ, ஐயோ, என்னே, எற்று, எவன். கய.
மனக்கோட்டத்தின்பெயர்—ஔவியம். க.
அழுக்காற்றின்பெயர்—நோனமை, கூரம், பொறாமை. ங.

துன்பத்தின்பெயர்—அல்லல், அலக்கண், மம்மர், அரந்தை, கோட்டாலை, பீழை, செல்லல், கேதம், கலக்கம், சிறுமை, சூர், உறுகண், புன்கண், இட்டளம், இன்னா, துனி, பருவரல், துக்கம், நோ, அழுங்கல், பீடை, உலமரல், அல்லகண்டம். உங.

கவ்வை, யாதனை, பழங்கண், கையாறு, நடலை, பையுள், எவ்வம், ஏதம், வெறுப்பு, இடும்பை, இடுக்கண், இன்னல், படர், பனித்தல், வறுமை, வெய்துறல், பைதல், கவலை, விழுமம். கக. (ஆ சஉ.)

ஆசையின்பெயர்—மாதர், நச்சு, இச்சை, ஏட்டை, வயா, நம்பு, நசை, நயப்பு, காதல், வெப்பம், விருப்பம், காமம், இராகம், பற்று, ஆதரம், பெட்பு, வேட்கை, ஆர்வம், மேவல், வெஃகல், விழைவு. உக.

வேட்கைப்பெருக்கத்தின்பெயர்—மோகம், நம்பல், இரதி, வெஃகல், தாழ்தல், கவர்தல், பெட்டல், சார்பு, இவறல், வேண்டல், வீழ்தல், வேணவா. கஉ.
காமநோயின்பெயர்—விரகம், காமம், மதனம். ங.

மாரியாமயமேபுன்கண்மடிநிழன்மடங்கல்பையுள்
சூர்பிணியுரோகங்குந்தஞ்சூழணங்கிராறுந்நோய்
பாரியவாதைபீதிவேதனைபண்ணுநோயாம்
ஓரும்யாதனைகொல்லாநோன்புருருறுநரகநோயே. (எஎ)

அன்னவேயனையசேத்தேயாங்கொப்பப்புரையப்போல
என்னவேபொருவவெள்ளவிகலவேகடுப்பமானச்
சொன்னகேள்தகவுதூக்குத்துணையிணைநிகரநேர
மன்னும்வீழ்வுறழவற்றேமலைவெண்மூன்றுவமைப்பேரே. (எஅ)

மாலைநீர்தகவுபெற்றிமரபொடுகிழமைவண்மை
சால்பொடுதகுதிபான்மைதகைமையேயியல்புதன்மை
பால்விதிகொள்கைபண்புபடிமுறைபரிசிவ்வெல்லாம்
கோலமார்குணநாலைந்தாங்குணநிறமிரண்டும்பண்பாம். (எகூ)

கையொழியாமைகைதுவாமையாங்கையொழுக்கம்
கையறல்செயலறற்பேர்கையடையடைக்கலப்பேர்
மையிலாவுரிமையின்பேர்வருசெழுதகைமையோடு
பொய்யிலாக்கிழமைமற்றையுரித்தெனப்புகலலாமே. (அ0)

தொடியொருபலமாங்கஃசுசொற்றகாற்பலமாந்துக்கு
நெடியகாத்துலாங்களென்பநிறைநூறுபலமேயாகும்
படியிலொன்றேகமென்பபத்தென்பதசமாநூறு
நொடிதரிற்சதமென்றாகுமாயிரநூற்றுப்பத்தே. (அக)

தேங்கியபுகழான்குன்றைக்குணபத்திரன்றிருத்தாள்போற்றி
வீங்குநீர்ப்பழனஞ்சூழ்ந்தவீரைமண்டலவன்செய்தான்
பாங்கினால்விளங்குபண்புபற்றியபெயரினீட்டம்
ஓங்கியகவிதையெண்ணிலொன்பதிற்றொன்பதொன்றே. (அ௨)

பண்புபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம் - ௬க௪.

நோயின்பெயர்—மாரி, ஆமயம், புன்கண், மடி, நிழல், மடங்கல், பையுள், சூர், பிணி, உரோகம், குந்தம், அணங்கு. கஉ.
வேதனைபண்ணுநோயின்பெயர்—வாதை, பீதி. உ.
நரகநோயின்பெயர்—யாதனை. க.

உவமையின்பெயர்—அன்ன, அனைய, சேத்து, ஆங்கு, ஒப்ப, புரைய, போல, என்ன, பொருவ, எள்ள, இகல, கடுப்ப, மான, கேழ், தகவு, தூக்கு, துணை, இணை, நிகர, நேர, வீழ்வு, உறழ, அற்று, மலைவு. உச.

குணத்தின்பெயர்—மாலை, நீர், தகவு, பெற்றி, மரபு, கிழமை, வண்மை, சால்பு, தகுதி, பான்மை, தகைமை, இயல்பு, தன்மை, பால், விதி, கொள்கை, பண்பு, படி, முறை, பரிசு. உ0.
பண்பின்பெயர்—குணம், நிறம். உ.

கையொழியாமையின்பெயர்—கைதூவாமை. க.
ஒழுக்கத்தின்பெயர்—கை. க. செயலறலின்பெயர்—கையறல். க.
அடைக்கலத்தின்பெயர்—கையடை. க.
உரிமையின்பெயர்—கெழுதகைமை, கிழமை, உரித்து. ங.

ஒருபலத்தின்பெயர்—தொடி. க. காற்பலத்தின்பெயர்—கஃசு. க.
தூக்கின்பெயர்—கா, துலாம். உ.
நூறுபலத்தின்பெயர்—நிறை. க. ஒன்றன்பெயர்—ஏகம். க.
பத்தின்பெயர்—தசம். க. நூற்றின்பெயர்—சதம். க.
ஆயிரத்தின்பெயர்—நூற்றுப்பத்து. க.

ஒன்பதாவது

# செயல்பற்றியபெயர்த்தொகுதி.

## காப்பு.

வியன்மிக்கவைரத்தால்வேர்வீழ்த்துப்பொற்கவடுகொண்டு
மயமிக்கமரகதத்தால்வண்டழைபொதுளிப்பூந்தொத்
தியலுற்றபதுமராகமெதிர்பிண்டியிறைதாள்போற்றிச்
செயல்பற்றும்பெயர்க்கூட்டத்தைச்செப்புவமிப்பாற்கேண்மின். ()

செயல்விதிகருமங்கன்மஞ்செய்தொழில்வினையுமப்பேர்
அயர்தலைவனைதலாற்றல்குயிறலோடிழைத்தல்செய்தல்
நியமித்தல்விதித்தன்மற்றுநிருமித்தலொடுசிட்டித்தல்
பயனுறப்படைத்தலோடுபாரித்தல்பிறப்பித்தற்பேர். (௨)

தொடலையுண்டாட்டுப்பொய்தல்சூழ்விலாசனையேவண்டல்
கெடவரல்பண்ணையுப்புக்கிரீடையேகேளியோரை
புடைமுலையாராடற்பேர்பொழுதுபோக்கேவினோதம்
படிபாராட்டுதல்குலாவல்பரிந்துகொண்டாடன்மெச்சல். (௩)

வதுவைகைப்பற்றலேதீவலஞ்செய்தன்மணங்கல்யாணம்
விதியுளிவேட்டன்மன்றல்விவாகமெண்பேர்விளங்கும்
புதுவிழாமுருகுசாறுபுத்தேளுற்சவமாஞ்சேறு
துதைமலர்கொண்டுபோற்றுந்துணங்கறலிரண்டுமப்பேர். (௪)

புனைதல்கைசெய்தல்வேய்தல்பொற்புடனலங்கரித்தல்
வனைதலையணிதல்பூசன்மண்ணலொப்பனையொன்பானும்
வனமலர்மிலைதல்வேய்தன்மலைதல்சூடுதலிம்முப்பேர்
சினைமலரடைச்சலோடுசெருகுதல்சொருகுதற்பேர். (௫)

அருந்திடலுய்த்தன்மாந்தலயிறலையமுதுசெய்தல்
பொருந்தவேதாங்கைதொட்டல்புசித்தல்போசனமேயார்தல்
பரிந்தனர்நுகர்தனின்றல்பாரணமிசைதறுற்றல்
இருந்துணற்பேர்விழுங்கலிசைதருநொண்டனுங்கல். (௬)

# பெயர்ப்பிரிவு.

இ - ள். வியன் மிக்க வைரத்தால் வேர் வீழ்த்து - அதிசயம் மிகுந்த வச்சிரத்தினால் வேரோட்டி,—பொற்கவடு கொண்டு - பொன்னாலாகிய கொம்புகளைப் பொருந்தி,—மயம் மிக்க மரகதத்தால் வண் தழை பொதுளி - அழகு மிகுந்த மரகதத்தினால் அழகிய இலைகள் தழைக்கப்பெற்று,—இயல் உற்ற பதுமராகப் பூந்தொத்து எதிர் பிண்டி இறை தாள் போற்றி - குணம் பொருந்திய பதுமராகத்தாலாகிய மலர்த்திரள்கள் தோன்றப்பெறுகின்ற அசோக மரத்தினிழலின்கண் வீற்றிருந்த கடவுளுடைய பாதங்களைத்துதித்து,—இப்பால் செயல் பற்றும் பெயர்க்கூட்டத்தைச் செப்புவம் - இனிச் செயல்பற்றிய பெயர்த்தொகுதியை (யாம்) கூறுவோம்,—கேண்மின் - கேளுங்கள். எ - று.

செய்தொழிலின்பெயர்—செயல், விதி, கருமம், கன்மம், வினை. ௫.
செய்தலின்பெயர்—அயர்தல், வனைதல், ஆற்றல், குயிறல், இழைத்தல். ௫.
பிறப்பித்தலின்பெயர்—நியமித்தல், விதித்தல், நிருமித்தல், சிட்டித்தல், படைத்தல், பாரித்தல். ௬.

மகளிர்விளையாட்டின்பெயர்—தொடலை, உண்டாட்டு, பொய்தல், விலாசனை, வண்டல், கெடவரல், பண்ணை, உப்பு, கிரீடை, கேளி, ஓரை. ௧௧.
பொழுதுபோக்கலின்பெயர்—வினோதம். ௧.
மெச்சலின்பெயர்—பாராட்டுதல், குலாவல், கொண்டாடல். ௩.

விவாகத்தின்பெயர்—வதுவை, கைப்பற்றல், தீவலஞ்செய்தல், மணம், கல்யாணம், விதியுளி, வேட்டல், மன்றல். ௮.
உற்சவத்தின்பெயர்—விழா, முருகு, சாறு, சேறு, துணங்கறல். ௫.

ஒப்பனையின்பெயர்—புனைதல், கைசெய்தல், வேய்தல், பொற்பு, அலங்கரித்தல், வனைதல், அணிதல், பூசல், மண்ணல். ௯.
சூடுதலின்பெயர்—மிலைதல், வேய்தல், மலைதல். ௩.
சொருகுதலின்பெயர்—அடைச்சல், செருகுதல். ௨.

உண்ணலின்பெயர்—அருந்திடல், துய்த்தல், மாந்தல், அயிறல், அமுதுசெய்தல், கைதொட்டல், புசித்தல், போசனம், ஆர்தல், நுகர்தல், தின்றல், பாரணம், மிசைதல், துற்றல். ௧௪.
விழுங்கலின்பெயர்—மொண்டல், நுங்கல். ௨.

துயிலல்கண்வளர்தல்பள்ளிதுயிறலேயுறங்கறுஞ்சல்
பயிலுங்கண்படையனந்தர்படைகனவோடுபத்தும்
இயலுநித்திரையாந்தூங்கலென்பதுநிரம்பாத்தூக்கம்
அயலவரெடுத்தலெற்றலாங்கவையெழுப்பலாமே. (௭)

விரவியவழுதலின்பேர்விம்மலேகலுழ்கலக்கம்
பொருமுதல்கசிவேயேங்கலுரோதனமிரங்கலெட்டாம்
தெரிசனம்பார்வைநோக்கஞ்சிறப்பிற்கண்ணுறல்காண்டற்பேர்
அருமையிற்சிறக்கணித்தலபாங்கமேகடைக்கணித்தல். (௮)

புரவுதானம்பகுத்தல்பொழிதலேயுதவனீட்டல்
விரவுபகாரம்வேள்விவிதரணங்கவிகைவண்மை
அருளல்வேளாண்மையீகையளித்தலேயுதாரம்வீசல்
தருதலினோடுதியாகங்கொடைகடப்பாடுஞ்சாற்றும். (௯)

படைமயக்குற்றபோதும்படைமடமொன்றிலாதான்
மடைசெறிகடகத்தோளான்மதிக்குடைமன்னர்மன்னன்
கெடிமன்னர்வணங்குந்தாளான்கிருட்டிணராயன்கைபோற்
கொடைமடமென்றுசொல்பவரையாதுகொடுத்தலாமே. (௧௦)

போற்றியபயிக்கம்பார்கம்பொருந்தியபலியேபிண்டம்
சாற்றியபிடிதமையஞ்சரிதையேழ்பிச்சையின்பேர்
ஏற்றலேகுறைகோள்பின்சென்றிரத்தலேவேண்டலும்பேர்
மாற்றலேகரத்தலாகுமறுத்தலுநிறுத்தலும்பேர். (௧௧)

தெரித்தலேவரைதலோடுதீட்டுதல்பொறித்தல்கீறல்
வரித்தலேயெழுதுதற்பேர்வரிபொறிகணக்கிரேகை
விரித்தவக்கரமெழுத்தாம்விரகொடுசிதைத்தறேய்த்தல்
அரக்குதல்கீழ்தலும்பேரடைவேதுய்தாக்கல்சீத்தல். (௧௨)

அர்ச்சனைவழிபாடேயாராதனைமூன்றும்பூசை
எச்சமேகிரதுவேள்வியிட்டியேயசனமோமம்
மெச்சியமகமேயூபம்விதியுளியாகமாகும்
நிச்சயமீதூரற்பேரிடங்கழிநெருங்கலும்பேர். (௧௩)

வியர்த்தலேசுவேதம்வேர்வாங்கசிவுமாமயாவுயிர்த்தல் *
மயக்கறவருத்தந்தீர்தல்வடுப்படல்கதுவாயாமே
உயிர்த்தலேவிடுதலென்பவொருங்கென்பவடங்கறுனே
கயக்குச்சோர்வாம்பிறக்குக்காட்டியவழுவின்பேரே. (௧௪)

---

* அயர்வுயிர்த்தல் என்றும் கூறுவர்.

நித்திரையின்பெயர்—துயிலல், கண்வளர்தல், பள்ளி, துயிறல்,உறங்கல், தூஞ்சல், கண்படை, * அனந்தர், படை, கனவு. க0.
நிரம்பாத்தூக்கத்தின்பெயர்—தூங்கல். க.
எழுப்பலின்பெயர்—எடுத்தல், எற்றல். உ.

அழுதலின்பெயர்—விம்மல், கலுழ், கலக்கம், பொருமுதல், கசிவு, ஏங்கல், உரோதனம், இரங்கல். அ.
காண்டலின்பெயர்—தெரிசனம்,பார்வை,நோக்கம்,கண்ணுறல்.ச.
கடைக்கணித்தலின்பெயர்—சிறக்கணித்தல், அபாங்கம். உ.

கொடையின்பெயர்—புரவு, தானம், பகுத்தல், பொழிதல், உதவல், நீட்டல், உபகாரம், வேள்வி, விதரணம்,கவிகை, வண்மை, அருளல், வேளாண்மை, ஈகை, அளித்தல், உதாரல், வீசல், தருதல், தியாகம், கடப்பாடு. உ0.

வரையாதுகொடுத்தலின்பெயர்—கொடைமடம். க.

பிச்சையின்பெயர்—பயிக்கம், பாகம், பலி, பிண்டம், பிடிதம், ஐயம், சரிதை. எ.
இரத்தலின்பெயர்—ஏற்றல், குறைகோள், வேண்டல். ௩.
கரத்தலின்பெயர்—மாற்றல், மறுத்தல், நிறுத்தல். ௩.

எழுதுதலின்பெயர்—தெரித்தல், வரைதல், தீட்டுதல், பொறித்தல், கீறல், வரித்தல். சு. எழுத்தின்பெயர்—வரி, பொறி, கணக்கு, இரேகை, அக்கரம். ரு. அரக்குதலின்பெயர்—சிதைத்தல், தேய்த்தல், கிழ்தல். ௩. தூய்தாக்கலின்பெயர்—சீத்தல். க.

பூசையின்பெயர்—அர்ச்சனை, வழிபாடு, ஆராதனை. ௩.
யாகத்தின்பெயர்—எச்சம், கிரது, வேள்வி, இட்டி, யசனம், ஓமம், மகம், யூபம், விதியுளி. கூ.
மீதூரலின்பெயர்—இடங்கழி, நெருங்கல். உ.

வேர்வின்பெயர்—வியர்த்தல், சுவேதம், கசிவு. ௩. வருத்தந்தீர்தலின்பெயர்-அயாவுயிர்த்தல். க. வடுப்படலின்பெயர்-கதுவாய்.க. விடுதலின்பெயர்—உயிர்த்தல். க. அடங்கலின்பெயர்—ஒருங்கு.க.சோர்வின்பெயர்-கயக்கு. க. வழுவின்பெயர்-பிறக்கு.க.

---

* அனந்தலெனினுமமையும்.

மூடுதல்கவித்தன்மூய்தன்முடியவேபரத்தலூர்தல்
நீடியநானமென்பநிகழ்த்துமஞ்சனத்தினுமம்
ஆடலேபடிதறோய்தலாமிவைகுளித்தலென்ப
பீடறப்பிறகிடற்பேர்பிறக்கிடல்பின்றலாமே. (௧௫)

முடக்கமேமடங்கல்குத்திமுணங்கொடுநொறிலொடுக்கம்
அடக்கமாம்வதிதல்வைகலல்கலேயிறுத்தருழ்தல்
விடுத்தலாறுந்தங்கற்பேர்வசித்தலோடிறையுமப்பேர்
ஒடுக்கமேபதுங்கல்பாந்தலுரைத்தலேயுரிஞ்சறேய்த்தல். (௧௬)

மெலிவின்மைதனம்புணர்ச்சிவிழைச்சொடுவிழைவுதல்லே
கலவியேகிரீடையாடல்காதலோர்கூட்டமெண்பேர்
புலவியேபுலத்தலென்பவூடலுமதன்பொருட்டே
நலமிகுதுனியெனுஞ்சொனுட்டியபுலவிநீட்டம். (௧௭)

கூடியுங்கூட்டமின்மைகுலவியபுலவியென்ப
ஊடலேநணுகாராகியுரைமறுத்திருத்தலாகும்
ஆடவர்நீங்கவுள்ளேயடைத்துறறுனியேயென்பர்
ஊடலைத்தீர்த்தலின்பேருணர்த்தலேயொல்லலாகும். (௧௮)

வந்தனம்பணிதல்காணல்வழிபடல்பணிவிறைஞ்சல்
தந்தலைவணங்கல்பார்த்தருழ்தலொன்பானுந்தண்டன்
முந்தியதழுவல்விள்ளன்முயங்கலாலிங்கனப்பேர்
அந்தமாத்தொழல்கைகூப்பலஞ்சலிகும்பிடற்பேர். (௧௯)

துஞ்சலேவீடன்மாளல்சொற்றிடும்விளிவுவீவு
முஞ்சலேயுலத்தல்பொன்றன்முடிதலேதுவன்றன்மாய்தல்
எஞ்சியமரணம்வியோகமில்லெனல்கழிவிறத்தல்
அஞ்சியதபுதல்சாவினபிதானம்பன்னேழாமே. (௨௦)

பரிதலேஞெமிர்தல்பற்றுதொடிதலேயிடிதல்சால
முரிதலேயிறுதலாறுமுறிதலேயொசிதலும்பேர்
இரிதலேநெரிதல்சோரலிடைதலேயுடைதலோடு
சரிதலேகெடுதலேழுஞ்சாய்தலினுமமாமே. (௨௧)

ஒசித்தலேயகைத்தல்கோடலொடித்தலேமுறித்தலின்பேர்
இசித்தலேஞெமிர்த்தலோடேயிறுத்தலுமதன்பேரென்ப
ஒசிந்திடலசைதல்சாய்ந்தேயுவளலுந்துவளலாமே
இசைப்பின்பேர்புணர்ச்சிமற்றையிசைவுமாமியைபுமாமே. (௨௨)

மூடுதலின்பெயர்—கவித்தல், மூய்தல். ௨.
பரத்தலின்பெயர்—ஊர்தல். ௧. மஞ்சனத்தின்பெயர்—நானம். ௧.
குளித்தலின்பெயர்—ஆடல், படிதல், தோய்தல். ௩.
பிறகிடலின்பெயர்—பிறக்கிடல், பின்றல். ௨.

அடக்கத்தின்பெயர்—முடக்கம், மடங்கல், குத்தி, முணங்கு, நொறில், ஒடுக்கம். ௬.
தங்கலின்பெயர்—வதிதல், வைகல், அல்கல், இறுத்தல், தாழ்தல், விடுத்தல், வசித்தல், இறை. ௮. பாந்தலின்பெயர்—ஒடுக்கம், பதுங்கல். ௨. தேய்த்தலின்பெயர்—உரைத்தல், உரிஞ்சல். ௨.

காதலோர்கூட்டத்தின்பெயர்—மைதுனம், புணர்ச்சி, விழைச்சு, விழைவு, தல், கலவி, கிரீடை, ஆடல். ௮.
புலத்தலின்பெயர்—புலவி, ஊடல். ௨.
புலவிநீட்டத்தின்பெயர்—துனி. ௧.

கூடியுங்கூட்டமின்மையின்பெயர்—புலவி. ௧.
நணுகாராகியுரைமறுத்திருத்தலின்பெயர்—ஊடல். ௧.
ஆடவர்நீங்கவுள்ளேயடைத்திருத்தலின்பெயர்—துனி. ௧.
ஊடலைத்தீர்த்தலின்பெயர்—உணர்த்தல், ஒல்லல். ௨.

தண்டனிடலின்பெயர்—வந்தனம், பணிதல், காணல், வழிபடல், பணிவு, இறைஞ்சல், வணங்கல், பார்த்தல், தாழ்தல். ௯.
ஆலிங்கனத்தின்பெயர்—தழுவல், விள்ளல், முயங்கல். ௩.
கும்பிடலின்பெயர்—தொழல், கைகூப்பல், அஞ்சலி. ௩.

சாவின்பெயர்—துஞ்சல், வீடல், மாளல், விளிவு, வீவு, முஞ்சல், உலத்தல், பொன்றல், முடிதல், துவன்றல், மாய்தல், மரணம், வியோகம், இல்லெனல், கழிவு, இறத்தல், தபுதல். ௧௭.

முறிதலின்பெயர்—பரிதல், ஞெமிர்தல், ஒடிதல், இடிதல், முரிதல், இறுதல், ஒசிதல். ௭.
சாய்தலின்பெயர்—இரிதல், நெரிதல், சோரல், இடைதல், உடைதல், சரிதல், கெடுதல். ௭.

முறித்தலின்பெயர்—ஒசித்தல், அலைத்தல், கோடல், ஒடித்தல், இசித்தல், ஞெமிர்த்தல், இறுத்தல். ௭.
துவளலின்பெயர்—ஒசிந்திடல், அசைதல், உவளல். ௩.
இசைப்பின்பெயர்—புணர்ச்சி, இசைவு, இயைபு. ௩.

வசப்படவலித்தல்சூழ்தல்வளாகமும்வளைத்தன்முப்பேர்
இசைத்திடிற்பிடித்தலின்பேர்தொடல்பற்றலிருபேராகும்
விசித்தலைதொடுத்தல்பந்தம்வீக்குதல்சிமிழ்த்தல்யாப்பே
அசைத்தலைபிணித்தலார்த்தலொன்பதுங்கட்டலாமே. (உங)

அரிதலின்பேர்சேதித்தலறுத்திடல்விடுவாய்செய்தல்
விரிவுறச்சூலல்கொய்தல்விதியுளியீர்தலாறும்
பரிதல்கண்டித்தலோடுபகுத்திடறடிதலெற்றல்
தரமுறத்துமித்தலாறும்வெட்டலாந்தறித்தலும்பேர். (உச)

கீறலைகீளல்கீண்டல்கிழித்திடல்கீன்றல்கீழ்தல்
பீறலாறும்பேர்மற்றுப்பிளிறலைஞெண்டல்கிண்டல்
மாறிடக்கிளைத்தன்முப்பேர்வரன்றறெள்ளுதல்கொழித்தல்
ஆறலைவழிப்பறித்தலதர்கோளுமப்பேராமே. (உரு)

கட்டலைகளைதல்குற்றல்பறித்தல்கத்தரித்தல்கொய்தல்
குட்டலைதகர்த்தலாகுமுடைத்தலுங்கூறுமப்பேர்
தொட்டலையகழ்தலோடுதொடுதறோண்டுதலின்பேராம்
தட்டல்வாரித்தலாணைதகைதலைதடுத்தலின்பேர். (உசு)

அடுத்ததுப்புரவுந்துவ்வுமைம்பொறிநுகர்வவாகும்
விடுத்தன்மோசனமேமோக்கம்வீதமாந்தீர்தலும்பேர்
அடுக்குதற்பேரேயேற்றலாமோவலொழிதலென்ப
நடுக்குறத்தாழ்தலின்பேர்குரங்குதல்குனிவுநாட்டும். (உஎ)

வலத்தலைநிணத்தலென்பமுடைதலாமாற்றலின்பேர்
விலக்கலாமிசையின்பேரேமீமிசையாந்தாபித்தல்
நிலைப்படச்செய்தலின்பேர்நிறுத்தலைநோன்றலென்ப
சொலித்திடலிடத்தலாகுந்துவர்தலைவகிர்தலென்ப. (உஅ)

சிதர்த்தலையுகுத்தறூவல்சிந்தலையுளர்தலும்பேர்
எதிர்த்துவீசுதலையோச்சல்செலவிடலெறிதன்முப்பேர்
இதத்தொடுபொருத்தன்மாட்டலிருபெயர்மூட்டலென்ப
நதுத்தலைநொதுத்தலோடுநவித்தலுமவித்தற்பேரே. (உகூ)

புடைத்தலையெறிதலெற்றல்பொத்தெனக்குத்தன்முப்பேர்
அடித்தலைகொட்டன்மொத்தலறைதலையகைத்தலெற்றல்
பிடித்தனரதுக்கன்மோதல்பேசியவழுக்கலென்ப
வடித்தலைவசமாக்கற்பேர்மழித்தன்முண்டிதமேயாக்கல். (ங0)

வளைத்தலின்பெயர்—வலித்தல் சூழ்தல், வளாகம். ௩.
பிடித்தலின்பெயர்—தொடல், பற்றல். ௨.
கட்டலின்பெயர்—விசித்தல், தொடுத்தல், பந்தம்,வீக்குதல்,செமிழி
த்தல், யாப்பு, அசைத்தல், பிணித்தல், ஆர்த்தல். ௯.

அரிதலின்பெயர்—சேதித்தல், அறுத்திடல், விடுவாய்செய்தல்,
கூலல், கொய்தல், ஈர்தல். ௬.
வெட்டலின்பெயர்—பரிதல், கண்டித்தல், பகுத்திடல், தடிதல்,
எற்றல், துமித்தல், தறித்தல். எ.

கீறலின்பெயர்-கீளல், கிண்டல், கிழித்திடல்,கீன்றல்,கிழ்தல்,பீறல்.
கிளைத்தலின்பெயர்—பிளிறல், ஞெண்டல், கிண்டல். ௩.
கொழித்தலின்பெயர்—வரன்றல், தெள்ளுதல். ௨.
வழிப்பறித்தலின்பெயர்—ஆறலை, அதர்கோள். ௨.

பறித்தலின்பெயர்-கட்டல், களைதல், குற்றல்.௩. கத்தரித்தலின்பெ
யர்-கொய்தல்.க.குட்டலின்பெயர்—தகர்த்தல்,உடைத்தல். ௨.
தோண்டுதலின்பெயர்—தொட்டல், அகழ்தல், தொடுதல். ௩.
தடுத்தலின்பெயர்—தட்டல், வாரித்தல், ஆணை, தகைதல். ௪.

ஐம்பொறிநுகர்வின்பெயர்—துப்புரவு, துவ்வு. ௨.
விடுத்தலின்பெயர்—மோசனம், மோக்கம், வீதம், தீர்தல். ௪.
அடுக்குதலின்பெயர்—ஏற்றல். க. ஒழிதலின்பெயர்—ஒவல். க.
தாழ்தலின்பெயர்—குரங்குதல், குனிவு. ௨.

முடைதலின்பெயர்-வலத்தல், நிணத்தல்.௨.மாற்றலின்பெயர்-வில
க்கல். க. மிசையின்பெயர்-மீமிசை. க. நிலைப்படச்செய்தலின்
பெயர்—தாபித்தல். க. நிறுத்தலின்பெயர்—நோன்றல். க.
சொலித்திடலின்பெயர்-இடத்தல்.க.வகிர்தலின்பெயர்-துவர்தல்.க

சிந்தலின்பெயர்—சிதர்த்தல், உகுத்தல், தூவல், உளர்தல். ௪.
வீசுதலின்பெயர்—ஓச்சல், செலவிடல், எறிதல். ௩.
மூட்டலின்பெயர்—பொருத்தல், மாட்டல். ௨.
அவித்தலின்பெயர்—நதுத்தல், நொதுத்தல், நவித்தல். ௩.

குத்தலின்பெயர்—புடைத்தல், எறிதல், எற்றல். ௩.
அடித்தலின்பெயர்—கொட்டல், மொத்தல், அறைதல், அசைத்தல்,
எற்றல், அதுக்கல்,மோதல்,வழுக்கல். அ. வசமாக்கலின்பெயர்-
வடித்தல். க. முண்டிதமாக்கலின்பெயர்—மழித்தல். க.

அளித்தல்பாதீடுபெய்தலாமுப்பேர்செறித்தலென்ப
துளைத்தலின்பேர்திளைத்தல்குயிறலாந்தொள்ளலும்பேர்
வளைத்தலேகவர்தல்வெளவல்வாருதல்கொளலுமாகும்
இளத்துங்காற்குறைகொண்டிகேடுறுங்கொள்ளையாமே. (௩௧)

வருடறைவரலேலநீவல்வருமுப்பேர்தடவலாகும்
விரியலேபரத்தலென்பவிளம்புபாரித்தலும்பேர்
தெரியவேதோண்டனோண்டல்சேரவேமுகத்தலின்பேர்
சொரிதலேபொழிதறூவறுயல்வரலசைதலின்பேர். (௩௨)

திதிநிலைபெறுத்தனோக்கல்சிறப்பொடுபுரத்தனான்கும்
விதமுடன்காத்தலின்பேர்வேலியேயமஞ்சேமம்
கதவரண்காப்புத்தட்டிகடியெட்டுங்காவற்பேரே
பதமுறவோம்பல்போற்றல்பாதுகாத்தற்பேராகும். (௩௩)

பகுத்தலேபாத்துப்பாகம்பங்கீடுபாதியும்பேர்
இகுத்தலேவிரித்தலின்பேரேற்றிடும்பொதிதல்வீக்கம்
மிகைப்படப்புதைத்தலின்பேர்தணித்தல்சேமித்தலென்ப
திகைக்கவேயவைத்தல்குற்றறெறுதலென்பதுநெரித்தல். (௩௪)

எருக்கல்காதுதல்சவட்டலெற்றுதலொழித்தல்கோறல்
முருக்கல்வீட்டுதல்படுத்தன்முதிர்கொலைசெய்தலொன்பான்
உரைத்தமாரணமுமப்பேருறுகோளணங்குவேட்டம்
விரித்திடிற்கொலையினாற்பேர்வேட்டைபாபத்தியென்ப. (௩௫)

குடமேமெய்கோட்டிக்கையைக்குவித்தலினாமந்தானே
கடுகியநாடனேடல்கையரிக்கொளலேதேடல்
தொடர்புறுதுருவுமாகுந்துவட்டலேறுடக்கலென்ப
தொடுதலேதிவளலூறுபரிசனந்துவளலும்பேர். (௩௬)

கடத்தலேபடர்தல்சேறல்கழிதலேயிவறலேகல்
விடுத்திடலிறத்தல்போகன்மெல்லெனவழங்கனீங்கல்
தடத்தினிற்செலவேயில்லறணத்தலேயியங்கறீர்தல்
நடத்தலின்பேரீரெட்டாமொதுங்கலுநாட்டுமப்பேர். (௩௭)

மிதித்திடலுகளல்பாய்தல்விரைவுடனேயுறுக்கல்
குதித்தலின்பேரேநான்காங்குப்புறலிதுவுமப்பேர்
கதித்தலேயகைத்தல்பம்பல்கனாறலேபொலிவுபாய்ச்சல்
இதத்துடனொதுக்கலேர்பென்றெட்டுமேயெழுச்சியின்பேர். (௩௮)

செறித்தலின்பெயர்—அளித்தல், பாதீடு, பெய்தல். ௩.
துளைத்தலின்பெயர்—திளைத்தல், குயிறல், தொள்ளல். ௩.
வாருதலின்பெயர்—வளைத்தல், கவர்தல், வெளவல், கொளல். ௪.
கொள்ளையின்பெயர்—சூறை, கொண்டி. ௨.

தடவலின்பெயர்—வருடல், தைவரல், நீவல். ௩.
பரத்தலின்பெயர்—விரியல், பரித்தல். ௨.
முகத்தலின்பெயர்—தோண்டல், நோண்டல். ௨. தூவலின்பெயர்-சொரிதல்,பொழிதல். ௨. அசைதலின்பெயர்-துயல்வரல். க.

காத்தலின்பெயர்—திதி, நிலைபெறுத்தல், நோக்கல், புரத்தல். ௪.
காவலின்பெயர்—வேலி, ஏமம், சேமம், கதவு, அரண், காப்பு, தட்டி, கடி. அ.
பாதுகாத்தலின்பெயர்—ஓம்பல், போற்றல். ௨.

பகுத்தலின்பெயர்—பாத்து, பாகம், பங்கீடு, பாதி. ௪.
விரித்தலின்பெயர்—இருத்தல். க. பொதிதலின்பெயர்-வீக்கம். க.
புதைத்தலின்பெயர்—தணித்தல், சேமித்தல். ௨.
குற்றலின்பெயர்-அலைத்தல். க. நெரித்தலின்பெயர்-தெறுதல். க.

கொலைசெய்தலின்பெயர்—எருக்கல், காதுதல்,சவட்டல், எற்றுதல், ஒழித்தல், கோறல், முருக்கல், வீட்டுதல், படுத்தல், மாரணம். க0.
கொலையின்பெயர்—ஊறு, கோள், அணங்கு, வேட்டம். ௪.
வேட்டையின்பெயர்—பாபத்தி. க.

மெய்கோட்டிக்கைகுவித்தலின்பெயர்—குடம். க.
தேடலின்பெயர்—நாடல், நேடல், கையரிக்கொளல், துருவு. ௪.
துவட்டலின்பெயர்—நுடக்கல். க.
தொடுதலின்பெயர்—திவளல், ஊறு, பரிசனம், துவளல். ௪.

நடத்தலின்பெயர்—கடத்தல், படர்தல், சேறல், கழிதல், இவறல், ஏகல், விடுத்திடல், இறத்தல், போகல், வழங்கல், நீங்கல், செலவு, இல்லல், தணத்தல், இயங்கல், தீர்தல், ஒதுங்கல். கஎ.

குதித்தலின்பெயர்—மிதித்திடல், உகளல், பாய்தல், உறுக்கல், குப்புறல். ரு.
எழுச்சியின்பெயர்—கதித்தல், அகைத்தல், பம்பல், களுறல், பொலிவு, பாய்ச்சல், ஒதுக்கல், ஏர்பு. அ.

கடுமையேகதழ்வுவல்லைகதனமேதுரிதமொல்லை
அடைவுளநொறிலென்றேழுங்கடுப்பெனவறையலாகும்
மூடுகலேவிசையேதாரைமுந்தியகவனம்வேகம்
சடிதிசீக்கிரமேயீண்டேவிரைவின்பேர்விதுப்புஞ்சாற்றும். (௩௯)

ஐயெனலொடுபொள்ளென்றலானருத்திரமேசண்டம்
நொய்தென்றல்கதுமென்றிட்டஞெடியினிற்பொருக்கென்றிட்டல்
வெய்தென்றன்ஞெள்ளல்கோரம்விரைவினிற்குறிப்புப்பத்தாம்
மொய்யெனலொடுமெல்லென்றல்லையெனருழ்த்தன்மந்தம். (௪௦)

தெருமரன்மறுகலோடேயலமரறிரிதல்கொட்கல்
சொரிதலேசுூர்த்தலோடுபிரமரிசுழலலெட்டாம்
பரிகரிதாவல்சேறல்பாறுதலோவன்மீளல்
வரிசையிற்ருண்டறத்தல்வாவருவுதல்கடத்தல். (௪௧)

நீதியிற்பாறலோடனிமிர்தனீளுதலுமப்பேர்
ஆதியேவீதியென்பவிருபெயரிவைநேரோடல்
மாதிசாரிகையேசுற்றுவாளிமண்டலமாவோடல்
ஓதியபவனியொன்றேயுலாப்போதலாகுமென்ப. (௪௨)

மருவுதனண்ணல்சார்தன்மற்றையவணுகல்புல்லல்
அருகுறல்சிவணறுன்னலண்ணலொன்பான்பேர்கிட்டல்
ஒருவுதறுறத்தல்வல்லியுணர்வொடுதணப்புநீங்கல்
வருமுறையுலாவலின்பேர்வழங்கலோடசைதலாமே. (௪௩)

நடவலேயுகைத்தலொய்தனலமொடுதுண்டலூர்தல்
கடவலேபகைத்தலுய்த்தல்கடிதோட்டல்செலுத்தலொன்பான்
உடனுராய்ப்போதலின்பேருரிஞ்சலோடுரோஞ்சலாகும்
படியவேநெகிழ்தலொல்கலிருபெயர்குழைவின்பாலாம். (௪௪)

ஆற்றறுத்திடுதருனேயாம்வலியழித்தலின்பேர்
ஆற்றியவழிப்படுத்தற்பெயராற்றுப்படையென்ருகும்
ஏற்றல்போதரலெனுஞ்சொல்லெதிர்கொடுபோதலென்ப
மாற்றியவுழுதலோடுமடித்தலேயுழக்கலாகும். (௪௫)

மூரண்விளைசமரேயார்ப்புமொய்தும்பைஞாட்புத்தாக்குச்
செருமறல்காளபங்கள்சினவலேயமர்மலைப்போ
டிரணமாகவநிகர்த்தலிகலேவெஞ்சமமுடன்றல்
பொருதல்சங்கிராமந்தெவ்வுப்பூசலாயோதனம்போர். (௪௬)

கடுப்பின்பெயர்—கடுமை, கதழ்வு, வல்லை, கதனம், துரிதம், ஒல்லை, நொறில். எ.

விரைவின்பெயர்—முடுகல், விசை, தாரை, கவனம், வேகம், சடிதி, சீக்கிரம், ஈண்டு, விதுப்பு. கூ.

விரைவுக்குறிப்பின்பெயர்—ஐயெனல், பொள்ளென்றல், க்ஷத்திரம், சண்டம், நொய்தென்றல், கதுமென்றிட்டல், பொருக்கென்றிட்டல், வெய்தென்றல், ஞௌ்ளல், கோரம். கo. மந்தத்தின்பெயர்—மொய்யெனல், மெல்லெனல், பையெனல், தாழ்த்தல். ச.

சுழலலின்பெயர்—தெருமரல், மறுகல், அலமரல், திரிதல், கொட்கல், சொரிதல், சூர்த்தல், பிரமரி. அ.

கடத்தலின்பெயர்—பரிகரி, தாவல், சேறல், பாறுதல், ஓவல், மீளல், தாண்டல், தத்தல், வாவல், தாவுதல். கo.

ஓடலின்பெயர்—பாறல், நிமிர்தல், நீளுதல். ந.

நேரோடலின்பெயர்—ஆதி, வீதி. உ.

மண்டலமாவோடலின்பெயர்—மாதி, சாரிகை, சுற்று, வாளி. ச.

உலாப்போதலின்பெயர்—பவனி. க.

கிட்டலின்பெயர்—மருவுதல், நண்ணல், சார்தல், அணுகல், புல்லல், அருகுறல், சிவணல், துன்னல், அண்ணல். கூ.

நீங்கலின்பெயர்—ஒருவுதல், துறத்தல், வல்லி, உணர்வு, தணப்பு. ரு.

உலாவலின்பெயர்—வழங்கல், அசைதல். உ.

செலுத்தலின்பெயர்—நடவல், உகைத்தல், ஒய்தல், தூண்டல், ஊர்தல், கடவல், அகைத்தல், உய்த்தல், ஓட்டல். கூ.

உராய்ப்போதலின்பெயர்—உரிஞ்சல், உரோஞ்சல். உ.

குழைவின்பெயர்—நெகிழ்தல், ஒல்கல். உ.

வலியழித்தலின்பெயர்—ஆற்றறுத்தல். க.

வழிப்படுத்தலின்பெயர்—ஆற்றுப்படை. க.

எதிர்கொடுபோதலின்பெயர்—ஏற்றல், போதரல். உ.

உழக்கலின்பெயர்—உழுதல், மடித்தல். உ.

போரின்பெயர்—முரண், வினை, சமர், ஆர்ப்பு, மொய், தும்பை, ஞாட்பு, தாக்கு, செரு, மறல், காளபம், சினவல், அமர், மலைப்பு, இரணம், ஆகவம், நிகர்த்தல், இகல், சமம், உடன்றல், பொருதல், சங்கிராமம், தெவ்வு, பூசல், ஆயோதனம். உரு.

முட்டுதலுடனேதாக்கறலைப்படன்முடுகலேற்றல்
கிட்டலேயெதிர்தலாகுங்கிடைத்தலுமதன்பேர்தானே
ஒட்டலர்நாடழித்தலுற்றபேர்கொற்றவள்ளை
ஒட்டுநர்மேற்சாராமையுரைத்தபேர்தழிஞ்சியாமே. (௪௭)

நடநட்டநடனம்வாணிநாடகநிருத்தந்தூக்குப்
படிதநாட்டியமேகண்ணுள்பத்துந்தாண்டவமுங்கூத்தாம்
நடையுநட்டணமுமப்பேர்நடித்திடல்பெயர்தலாலல்
அடைவிலேயகவறாங்கலசைவொடாறிவையாடற்பேர். (௪௮)

பிரமரிவீரட்டானம்பேசிலுப்பிதமலைப்புப்
புரியமேயிலயமற்றும்போற்றுமுள்ளாளனம்மே
கரணமேபரதமொன்பான்கருதுகூத்தின்விகற்பம்
பருமித்தல்சிரமஞ்செய்தல்பழகலேயுழத்தலென்ப. (௪௯)

கொடுகொட்டிபாண்டரங்கங்கூறுகாபாலமூன்றும்
பொடியணிசிவனிருத்தம்போற்றியபரவைசெய்யாள்
குடமல்லோடல்லியந்தான்கொண்டல்வண்ணன்றன்கூத்தாம்
குடையொடுதுடியிரண்டுங்குமரனதாடலாமே. (௫௦)

துடியென்பதெழுவர்மாதர்தூங்கலினுமமாகும்
கடையமேயிராணிக்குக்காட்டியநாட்டியப்பேர்
வடிவமைதுர்க்கைதூக்குமற்றதுமரக்காலென்ப
நெடியகாமன்கொண்டாடுநிருத்தமேவிதித்தபேடாம். (௫௧)

அடுத்திடும்வெறிகழங்கோடணங்கிவைவெறியாட்டின்பேர்
தொடுத்தகைகோத்தாடற்பேர்சொல்லியகுரவையென்ப
முடக்கியவிருகைதானும்பழுப்புடைமுறையேயொற்றித்
துடக்கியநடையினுமந்துணங்கையென்றியம்பலாமே. (௫௨)

குடந்தங்கைகூப்பிமெய்யைக்கோப்பொடுகோட்டிநிற்றல் [ம்
குடங்கையைக்குவித்துக்கொட்டல்கொம்மைகொட்டுதலென்றுகு
அடர்ந்துவாய்கையாற்கொட்டலாவலங்கொட்டலென்ப
படங்குந்திநிற்றலின்பேர்பகரிற்குஞ்சித்தலாமே. (௫௩)

வட்டித்தலொற்றறுத்தல்வட்டணையுடனேமற்றும்
தட்டலென்றிந்தநான்குந்தாளம்போடுதலின்பேரே
கிட்டியதாளவொற்றுக்கிளந்தபேர்சதியேசீரென்
றிட்டபேரிரண்டுமாமென்றியம்பினர்வியந்தநூலோர். (௫௩)

எதிர்தலின்பெயர்—முட்டுதல், தாக்கல், தலைப்படல், முடுகல், ஏற்றல், இட்டல், இடைத்தல். எ.
ஓட்டலர்நாடழித்தலின்பெயர்—கொற்றவள்ளை. க.
ஓட்டுநர்மேற்சாராமையின்பெயர்—தழிஞ்சி. க.

கூத்தின்பெயர்—நடம், நட்டம், நடனம், வாணி, நாடகம், நிருத்தம், தூக்கு, படிதம், நாட்டியம், கண்ணுள், தாண்டவம், நடை, நட்டணம். கரு. ஆடலின்பெயர்-நடித்திடல், பெயர்தல், ஆலல், அகவல், தூங்கல், அசைவு. சு.

கூத்தின்விகற்பத்தின்பெயர்—பிரமரி, வீரட்டானம், உப்பிதம், மலைப்பு, புரியம், இலயம், உள்ளாளனம், கரணம், பரதம். கூ.
சிரமஞ்செய்தலின்பெயர்—பருமித்தல். க.
பழகலின்பெயர்—உழத்தல். க.

சிவனிருத்தத்தின்பெயர்—கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம். ந. திருமகளாடலின்பெயர்—பாவை. க.
கொண்டல்வண்ணன்கூத்தின்பெயர்—குடம், மல், அல்லியம். ந.
குமரனாடலின்பெயர்—குடை, துடி. உ.

எழுவகைமாதராடலின்பெயர்—துடி. க.
அயிராணியாடலின்பெயர்—கடையம். க.
துர்க்கையாடலின்பெயர்—மரக்கால். க.
காமனாடலின்பெயர்—பேடு. க.

வெறியாட்டின்பெயர்—வெறி, கழங்கு, அணங்கு. ந.
கைகோத்தாடலின்பெயர்—குரவை. க.
முடக்கியவிருகைபழுப்புடையொற்றியாடலின்பெயர்-துணங்கை.

கைகூப்பிமெய்கோட்டிநிற்றலின்பெயர்—*குடந்தம். க.
குடங்கையைக்குவித்துக்கொட்டலின்பெயர்—கொம்மை, கொட்டுதல். உ. வாய்கையாற்கொட்டலின்பெயர்-ஆவலங்கொட்டல். க.
குந்திநிற்றலின்பெயர்—குஞ்சித்தல். க.

தாளம்போடலின்பெயர்—வட்டித்தல், ஒற்றறுத்தல், வட்டணை, தட்டல். சு.
தாளவொற்றின்பெயர்—சதி, சீர். உ.

* குடந்தம் நால்விரல்முடக்கிப் பெருவிரனிறுத்தி நெஞ்சிடைவைத்து மெய்கோட்டிநிற்றல்.

உவளித்தறூய்மைசெய்தலுபலாளனம்முமப்பேர்
இவர்தலைமீக்கோளென்பவிரண்டுமேறுதலினுமம்
அவாமற்றுமிறங்குதற்பேர்சுதமவதாரமாகும்
மவுனப்பேர்மூகமோனம்வாளாகேளாவென்றுமே. (ருரு)

திறைமிறைகப்பமேபாகுடமரசிறைப்பேர்செப்பும்
கறைகடன்வரியிறுப்புக்கரங்குடியிறையைந்தேபேர்
துன்றுபடுமுல்கேயாயஞ்சுங்கஞ்சாரிகையுமாகும்
நெறியொடுவலித்தலொட்டனேரலையுடன்பாடென்ப. (ருசு)

முயற்சிதாளாண்மையூக்கமுந்துதாளுத்தியோகம்
இயற்றலையுஞற்றுழப்போடாள்வினையிவையுற்சாகம்
வியக்குமூராண்மையொன்றேமிகவோங்கிச்சேறலாகும்
நயக்கும்பேராண்மையொன்றேநாட்டியவருமைசெய்தல். (ருஎ)

கரப்பொடுகட்டல்பட்டிகரவடங்கயவுகள்ளம்
திருட்டொடுபடிறுசோரந்தேயமுங்களவீரைந்தாம்
விரித்திடுந்தேனுவோடுசௌரியமீண்டுமப்பேர்
தரித்தசம்பிரதமென்பதக்கதாஞ்சித்தின்பேரே. (ருஅ)

தரித்தலைபொறுத்தலோடுதாங்குதல்சுமத்தலின்பேர்
பரித்தலுமாகுமென்பபருவரலருவலின்பேர்
தெரித்தொன்றைவரைவேநீக்கறெற்றலைமாறுபாடாம்
விரித்திடுந்தைத்தலத்துமேவியபொல்லந்துன்னம். (ருகூ)

சுறுக்கெனச்சுடல்சந்தாபந்தூபிதமிருபேர்சொல்லும்
மறைப்பேயாவரணமாகுமாய்த்தலுமப்பேர்தானே
நெறிப்படவழுந்துதற்பேர்ஞெமுங்குதலென்றுகூறும்
மிறைத்தலையகைத்தல்சாலவேதனையுலைப்புமுப்பேர். (சு0)

நாம்பலைபழங்கணோடுநாட்டியமெலிவுஞொள்கல்
தேம்பலைகிருசம்போதச்சிக்கலைழிளைத்தலின்பேர்
சாம்பலைகூம்பலென்பவிருபெயரொடுங்கல்சாற்றும்
மேம்படச்சொல்லுகின்றமேற்கோளேபூட்கையென்ப. (சுக)

வருட்டலைதெருட்டலின்னவற்புறுத்தற்பேர்தானே
உருத்தலைநாறரேற்றன்முளைத்தலாம்பொடித்தலும்பேர்
விரித்திடலெதிர்தல்விள்ளலவிழ்தலையலர்தலாகும்
தரிப்பறநூக்கலூன்றனுன்றலுந்தள்ளன்முப்பேர். (சுஉ)

தூய்மைசெய்தலின்பெயர்—உவளித்தல், உபலாளனம். உ.
ஏறுதலின்பெயர்—இவர்தல், மீக்கோள். உ.
இறங்குதலின்பெயர்—அவா, சுதம், அவதாரம். ந.
மௌனத்தின்பெயர்—மூகம், மோனம், வாளா, கேளா. ச.

அரசிறையின்பெயர்—திறை, மிறை, கப்பம், பாகுடம். ச.
குடியிறையின்பெயர்—கறை, கடன், வரி, இறுப்பு, கரம். ரு.
சுங்கவிறையின்பெயர்—உல்கு, ஆயம், சாரிகை. ந.
உடன்பாட்டின்பெயர்—வலித்தல், ஒட்டல், நேரல். ந.

உற்சாகத்தின்பெயர்—முயற்சி, தாளாண்மை, ஊக்கம், தாள், உத்தியோகம், இயற்றல், உஞற்று, உழப்பு, ஆள்வினை. கூ.
மிக்கசெயலின்பெயர்—ஊராண்மை. க.
அருமைசெய்தலின்பெயர்—பேராண்மை. க.

களவின்பெயர்—கரப்பு, கட்டல், பட்டி, கரவடம், கரவு, கள்ளம், திருட்டு, படிறு, சோரம், தேயம், தேனு, சௌரியம். கஉ.
சித்தின்பெயர்—சம்பிரதம். க.

சுமத்தலின்பெயர்—தரித்தல், பொறுத்தல், தாங்குதல், பரித்தல். ச.
அருவலின்பெயர்—பருவரல். க.
நீக்கலின்பெயர்—வரைவு. க. மாறுபாட்டின்பெயர்—தெற்றல். க.
நைத்தலின்பெயர்—அத்து, பொல்லம், துன்னம். ந.

சுடலின்பெயர்—சந்தாபம், தூபிதம். உ.
மறைப்பின்பெயர்—ஆவரணம், மாய்த்தல். உ.
அழுந்துதலின்பெயர்—ஞெமுங்குதல். க.
உலைப்பின்பெயர்—மிறைத்தல், அலைத்தல், வேதனை. ந.

இளைத்தலின்பெயர்—நாம்பல், பழங்கண், மெலிவு, ஞொள்கல், தேம்பல், கிருசம், சிக்கல். எ.
ஒடுங்கலின்பெயர்—சாம்பல், கூம்பல். உ.
மேற்கோளின்பெயர்—பூட்கை. க.

வற்புறுத்தலின்பெயர்—வருட்டல், தெருட்டல். உ.
முனைத்தலின்பெயர்—உருத்தல், நாறல், தோற்றல், பொடித்தல். ச.
அலர்தலின்பெயர்—விரித்திடல், எதிர்தல், விள்ளல், அவிழ்தல். ச.
தள்ளலின்பெயர்—நூக்கல், ஊன்றல், நோன்றல். ந.

முழவலேநகையேயார்ப்புமூரலேயிளியேயாசம்
அறிவொடுசிரித்தலாறேயசியவமதிச்சிரிப்பாம்
குறியொடுவிடல்வியோகங்கூடலேயோகமென்ப
மறலரிலபரமோடுவருந்துவக்கிலைவபிணக்காம். (சுங)

விற்றற்பேர்பகர்தல்கூறல்விலைநொடைமாறலந்தாம்
ஒற்றுமைகுறிக்கோளென்பவொற்றுவேய்சொற்றபேரே
இற்றிவைநிற்கமற்றையினைதலைக்காவற்பேரே
பெற்றிடல்பயத்தல்வாய்த்தல்கிடைத்தலாம்பேசுமுப்பேர். (சுச)

முளிதலேவறத்தலோடுமுதிர்ந்திடலுலரல்காய்தல்
பிளிற்றலேபில்கல்காலலுமிழ்தல்கொப்பளித்தற்பேரே
தளர்ச்சியாமறைபுகற்பேர்சரண்புகலாகுமென்ப
விளக்கியவியங்கோளேவல்வீதலேவறுமையெய்தல். (சுரு)

அலைசலேஞெகிழ்தன்ஞொள்கலலையலேயாஞ்சியும்பேர்
உலைவுறுசொறிகண்டேதினவெனவிருபேரோதும்
கலவலேயளாவலோடுகலம்பகமேகலாவல்
துலைபெறுகின்றசங்கீரணமைந்துந்துழாவலின்பேர். (சுசு)

விம்மியேயுமிழ்தல்கான்றன்மேவுமுற்காரஞ்சத்தி
தும்மலேசுவாசமூச்சாங்கொட்டாவியேயாவித்தல்
அம்மவிச்செயல்பற்றும்பேர்க்கறுபத்தேழ்விருத்தஞ்செய்தான்
மைம்முகிற்குணபத்திரன்றாள்வணங்குமண்டலவன்றனே. (சுஎ)

செயல்பற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ. விருத்தம் — சுஅக.

பத்தாவது

## ஒலிபற்றியபெயர்த்தொகுதி.

### காப்பு.

வலியுற்றவெவ்வினைப்பேர்மாற்றியேயநந்தஞானம்
பொலிவுற்றகேவலப்பெண்புணர்ந்துவீற்றிருந்தபோதன்
மலருற்றுநடந்தவாமன்மரைபுரைபாதம்போற்றி
ஒலிபற்றும்பெயர்க்கூட்டத்தையுணர்த்துவமிப்பாற்கேண்மின். (க)

சிரித்தலின்பெயர்—முறுவல், நகை, ஆர்ப்பு, மூரல், இளி, ஆசம். ௬.
அவமதிச்சிரிப்பின்பெயர்—அசி. க.
விடலின்பெயர்—வியோகம். க. கூடலின்பெயர்—யோகம். க.
பிணக்கின்பெயர்—மறல், அரில், அபரம், துவக்கு. ௪.

விற்றலின்பெயர்—பகர்தல், கூறல், விலை, நொடை, மாறல். ௫.
ஒற்றுமையின்பெயர்—குறிக்கோள். க. ஒற்றின்பெயர்—வேய். க.
தலைக்காவலின்பெயர்—இளை. க.
கிடைத்தலின்பெயர்—பெற்றிடல், பயத்தல், வாய்த்தல். ௩.

காய்தலின்பெயர்—முளிதல், வறத்தல், முதிர்ந்திடல், உலரல். ௪.
கொப்பளித்தலின்பெயர்—பிளிற்றல், பில்கல், காலல், உமிழ்தல். ௪.
மறைபுகலின்பெயர்—சரண்புகல். க.
ஏவலின்பெயர்-வியங்கோள். க. வறுமையெய்தலின்பெயர்-வீதல். க.

அலையலின்பெயர்—அலைசல், ஞெகிழ்தல், ஞொள்கல், ஆஞ்சி. ௪.
சொறியின்பெயர்—கண்டூதி, தினவு. உ.
சுழாவலின்பெயர்—கலவல், அளாவல், கலம்பகம், கலாவல், சங்கிரணம். ௫.

சத்திசெய்தலின்பெயர்—உமிழ்தல், கான்றல், உற்காரம். ௩.
மூச்சின்பெயர்—தும்மல், சுவாசம். உ.
கொட்டாவின்பெயர்—ஆவித்தல். க.

# பெயர்ப்பிரிவு.

இ - ள். வலி உற்ற வெவ்வினைப் பேர் மாற்றி - வலிமைபொருந்திய கடிய வினைகளின் பெயரை ஒழித்து—அநந்தஞானம் பொலிவு உற்ற கேவலப்பெண் புணர்ந்து வீற்றிருந்த போதன் - அனந்தஞானமானது பொலியப்பெற்ற கைவல்லியமாகிய பெண்ணைச் சேர்ந்து வீற்றிருந்தருளிய ஞானியும்—மலர் உற்று நடந்த வாமன் - தாமரைமலரிலே பொருந்தி நடந்தருளிய அழகினையுடையவருமாகிய அருகக்கடவுளுடைய—மரை புரை பாதம் போற்றி - தாமரைப்பூவைப்போலும் பாதங்களைத் துதித்து,—இப்பால் ஒலி பற்றும் பெயர்க்கூட்டத்தை உணர்த்துவம் - இனி ஒலிபற்றிய பெயர்த்தொகுதியை (யாம்) அறிவிப்போம்,—கேண்மின் - கேளுங்கள். எ - று. ஏ அசை.

மாற்றமேமொழியேகிரேவாணியேகதையெதிர்ப்புக்
கூற்றுரைபனுவல்செப்புக்குயில்வினாக்கிளவிகாதை
ஏற்றிடுநொடியத்தோடிசைபறைவாக்குப்பாணி
தோற்றமாறுவலினோடுமூவேழுஞ்சொல்லின்பேரே. (௨)

வசித்தல்பாசுரமேவார்த்தைவாசகம்வசனமும்பேர்
திசைப்படுமுறையேபாழிசிதைவிலாப்பதமென்றோதும்
இசைத்தலேபிதற்றல்பேசலியம்புதலிறுத்தலும்பேர்
விசைப்பின்மீதுரையேபல்கால்விளம்புதலாகுமென்ப. (௩)

பழிச்சலேத்துதறுதித்தல்பரசுதல்பரவல்போற்றல்
வழுத்தறோத்திரமேமெச்சல்வாழ்த்தலாந்துதியுமேற்கும்
அழிப்பிலாவாசிவாழ்த்தேயாசிடையென்றுங்கூறும்
பழிச்சொலேசிறுசொறீச்சொற்பரிவாதம்பழித்தலென்ப. (௪)

விரித்தலேகனைத்தலோடுமிழற்றுதல்விளம்பல்கூறல்
உரைத்தலேநொடித்தல்சாற்றலோதுதல்குயிறல்சொற்றல்
தெரித்தலேநவிலலோடுவலித்திடல்செப்பலாடல்
பரப்புடன்மொழிதலோடுபணித்தல்பன்னெட்டுஞ்சொல்லல். (௫)

சாதம்வாய்வாய்மையாணைசத்தியந்திடம்வேளாண்மை
நீதியாநிலைமையுண்மைநிச்சயஞ்சரதமெய்ப்பேர்
வாதையாமிச்சைதள்ளல்வலக்காரம்வழுதுபெட்டுச்
சாதனைமாயம்வஞ்சஞ்சடம்பிசிபடிறுபொய்ப்பேர். (௬)

படித்தல்வாசித்தலோதல்பாடலத்தியயனமும்பேர்
பிடித்தொன்றைவிடாதுபேசல்பிதற்றுதலென்றுபேரே
இடக்கரேமறைத்தசொற்பேரென்பகூகனமுமாமே
இடித்தலேகழறலென்பவிருபெயருறுதிச்சொல்லே. (௭)

அம்பலேகௌவையேசலலர்பழிமொழிநாற்பேரே
அம்பலேசிலரறிந்திட்டதுபுறங்கூறலாகும்
அம்புவிப்பலருந்தூற்றுமம்மொழியலரேயென்ப
வெம்பியபெருஞ்சொல்லென்பமிகப்பலரறிசொல்லாமே. (௮)

மிழலையேகுதலைகொஞ்சல்வினவுமுல்லாபமுற்ற
மழலையேயொற்றுநீங்கிவழுப்படாநிரம்பாமென்சொல்
பிழைபடுங்கொடுவாய்குஞ்சம்பிசுனங்கொண்டியங்தொடுப்பு
விழைவிலாக்குறளையாறும்வெறும்புறங்கூற்றின்பேரே. (௯)

சொல்லின்பெயர்—மாற்றம், மொழி, கீர், வாணி, கதை, எதிர்ப்பு, கூற்று, உரை, பனுவல், செப்பு, குயில், விளு, கிளவி, காதை, நொடி, இயம், இசை, பறை, வாக்கு, பாணி, நுவல். உக.

வாசகத்தின்பெயர்—வசித்தல், பாசுரம், வார்த்தை, வசனம். ச.
பதத்தின்பெயர்—உரை, பாழி. உ.
இயம்புதலின்பெயர்—இசைத்தல், பிதற்றல், பேசல், இறுத்தல். ச.
பல்கால்விளம்புதலின்பெயர்—மீதுரை. க.

வாழ்த்தலின்பெயர்—பழிச்சல், ஏத்துதல், துதித்தல், பரசுதல், பரவல், போற்றல், வழுத்தல், தோத்திரம், மெச்சல், துதி. க0.
வாழ்த்தின்பெயர்—ஆசி, ஆசிடை. உ.
பழித்தலின்பெயர்-பழிச்சொல், சிறுசொல், தீச்சொல், பரிவாதம். ச.

சொல்லலின்பெயர்—விரித்தல், கதைத்தல், பிறற்றுதல், விளம்பல், கூறல், உரைத்தல், நொடித்தல், சாற்றல், ஓதுதல், குயிறல், சொற்றல், தெரித்தல், நவிலல், வலித்திடல், செப்பல், ஆடல், மொழிதல், பணித்தல். கஅ.

மெய்யின்பெயர்—சாதம், வாய், வாய்மை, ஆணை, சத்தியம், திடம், வேளாண்மை, நிலைமை, உண்மை, நிச்சயம், சரதம். கக.
பொய்யின்பெயர்—மிச்சை, தள்ளல், வலக்காரம், வழுது, பெட்டு, சாதனை, மாயம், வஞ்சம், சடம், பிசி, படிறு. கக.

படித்தலின்பெயர்—வாசித்தல், ஓதல், பாடல், அத்தியயனம். ச.
விடாதுபேசலின்பெயர்—பிதற்றுதல். க.
மறைத்தசொல்லின்பெயர்—இடக்கர், கூகனம். உ.
உறுதிச்சொல்லின்பெயர்—இடித்தல், கழறல். உ.

பழிமொழியின்பெயர்—அம்பல், கௌவை, ஏசல், அலர். ச.
சிலரறிந்துபுறங்கூறலின்பெயர்—அம்பல் க.
பலருந்தூற்றலின்பெயர்—அலர். க.
பலரறிசொல்லின்பெயர்—பெருஞ்சொல். க.

நிரம்பாமென்சொல்லின்பெயர்—மிழலை, குதலை, கொஞ்சல், உல்லாபம், மழலை. ரு.
புறங்கூறலின்பெயர்—கோடுவாய், குஞ்சம், பிசுனம், கொண்டியம், தொடுப்பு, குறளை. சு.

வழுவிலாச்சபதமாணைவஞ்சினமொடுவட்டித்தல்
தழுவியபிரமாணஞ்சூள்சத்தியம்விரதமும்பேர் [பேர்
மொழிமைமூதுரைமுன்சொல்லு முதுசொல்லும் பழஞ்சொல்லும்
பழமொழிமுதுமையாகும்படுங்கதைகாரணச்சொல். (க0)

தரித்திடுந்திசைச்சொலென்பசாருந்தேசிகமென்றுகும்
விரிச்சியேவாய்ப்புளென்பமிக்கநற்சொன்னிமித்தம்
அரிப்புறப்பொரவழைத்தலறைகூவலாகுமென்ப
உரைத்திடுமுகமனின்பேருபசாரநயஞ்சம்மானம். (கக)

வினுவலேகடாவலாகும்விடையதற்கெதிர்மொழிப்பேர்
வினவொடுவிடையுங்கூடிவிரும்பியபொருள்சல்லாபம்
தனுதமேம்பாட்டுரைப்பேர்தானெடுமொழியென்றுமே
இனுநகையசச்சொலென்பவெய்துமேயசதியாடல். (கஉ)

கடைப்பிடியோர்ப்புவேறுகாட்டியகுறிக்கோடேற்றம்
அடுத்தநற்பொருளிலாமையநர்த்தமேயாகுமென்ப
எடுத்தவாளாவெனுஞ்சொலிதுகேளாவாகுமென்ப
கொடுத்திடும்புனருத்திப்பேர்கூறியகூறலாமே. (கங)

கூவலேயுளத்தலோடுகுறுகவேயிகுத்தல்கேதல்
வாவெனல்கரைதலேயாகருடணமொடுவிளித்தல்
மேவுமற்றகவலொன்பான்வினவியேயழைத்தற்பேரே
ஆவலாற்கிழறுத்தலறைபோதலாகுமென்ப. (கச)

தோற்றஞ்சேர்சுலோகமெய்ப்பேசொன்மாலைநாற்பேர்சொல்லும்
ஏற்றமேகியாதியென்பவியன்றமேம்பாட்டினுமம்
ஊற்றமாஞ்சீர்த்திகீர்த்தியொளிபுகழ்மீக்கூற்றும்பேர்
மேற்றிகழ்சீர்த்திகீர்த்திமிகுபுகழிருபேராமே. (கரு)

இகமியாமதிமோவாழியிகுஞ்சின்முன்னிலையசைச்சொல்
இகமியாவரோபோமாதோடிருந்தோருமேழசைச்சொல்
புகலுங்காலொப்பிலாதபோலுமப்பொருட்டேயாகும்
நிகரிலாவொடுவுமோடுநேருமேயுடனிகழ்ச்சி. (கசு)

அம்மோடாந்தந்நந்தும்மேயல்லால்வான்பாக்குத்தில்லே
எம்மோடேமன்னேபானேயும்மீரெட்டிடைச்சொல்லென்ப
அம்மோடிற்றற்றேயத்தேயல்லில்லன்ஞனேயையே
தம்நும்மேயவ்வேகுவ்வேசாரியைபன்மூன்றென்ப. (கஎ)

சத்தியத்தின்பெயர்—சபதம், ஆணை, வஞ்சினம், வட்டித்தல், பிரமாணம், சூள், விரதம். எ. மூதுரையின்பெயர்—மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல். ச.
பழமொழியின்பெயர்-முதுமை.க.கதையின்பெயர்-காரணச்சொல்.

திசைச்சொல்லின்பெயர்—தேசிகம். க.
நன்னிமித்தத்தின்பெயர்—விரிச்சி, வாய்ப்புள். உ.
பொரவழைத்தலின்பெயர்—அறைகூவல். க.
முகமனின்பெயர்—உபசாரம், நயம், சம்மானம். ங.

வினவலின்பெயர்-கடாவல்.க. எதிர்மொழியின்பெயர்—விடை.க.
வினவும்விடையுங்கூடியபொருளின்பெயர்—சல்லாபம். க.
தனதுமேம்பாட்டைத்தானெடுத்துரைத்தலின்பெயர்-நெடுமொழி.
அசதியாடலின்பெயர்—நகை, நயச்சொல். உ.

தேற்றத்தின்பெயர்—கடைப்பிடி, ஓர்ப்பு, குறிக்கோள். ங.
பொருளின்மையின்பெயர்—அநர்த்தம். க.
கேளாவென்பதின்பெயர்—வாளா. க.
கூறியதுகூறலின்பெயர்—புனருத்தி. க.

அழைத்தலின்பெயர்—கூவல், உளைத்தல், இருத்தல், கேதல், வாவெனல், கரைதல், ஆகருடணம், விளித்தல், அகவல். கூ.
கிழறுத்தலின்பெயர்—அறைபோதல். க.

சொன்மாலையின்பெயர்—தோற்றம், சீர், சுலோகம், மெய்ப்பு. ச.
ஏற்றத்தின்பெயர்—கியாதி.க. மேம்பாட்டின்பெயர்—ஊற்றம். க.
புகழின்பெயர்—சீர்த்தி, கீர்த்தி, ஒளி, மீக்கூற்று. ச.
மிகுபுகழின்பெயர்—சீர்த்தி, கீர்த்தி. உ.

முன்னிலையசைச்சொல்லின்பெயர்—இக, மியா, மதி, மோ, வாழி, இரும், சின். எ. அசைச்சொல்லின்பெயர்—இக, மியா, அரோ, போ, மாது, இருந்து, ஒரும், போல். அ.
உடனிகழ்ச்சியிடைச்சொல்லின்பெயர்—ஒடு, ஓடு. உ.

இடைச்சொல்லின்பெயர்—அம், ஆம், தம், நம், நும், ஏ, அல், ஆல், வான், பாக்கு, தில், எம், ஏம், மன், பான், உம். கசு.
சாரியையின்பெயர்—அம், இற்று, அற்று, அத்து, அல், இல், அன், ஆன், ஐ, தம், நும், அ, கு. கங.

கரமொடுகானேகாரங்காட்டியவகரமென்ப
தரமுறவெழுத்துக்கேற்றசாரியைநான்கேசாற்றும்
சருதிடிலேயேயாலேகுவ்வொடின்னதுவேகண்ணே
விரவியவாறுந்தானேவேற்றுமையுருபினுமம். (கஎ)

என்னேகொலெவனேயாதேயிவையையக்கிளவிநாற்பேர்
உன்னிடிலவ்வேயிவ்வேயுவ்வொடுமூன்றுஞ்சுட்டாம்
மன்னியயாண்டும்யாங்குமற்றிடத்தையுறற்சொல்
என்னிளியேயேசிச்சீயேளனமிகழ்ச்சியாமே. (கசு)

உலவியவிஞ்சைவித்தையூதியஞ்சாலமோதி
கலையுடனுறுதிகேள்வியிருநான்குங்கல்வியின்பேர்
நலமுறக்கெழுமல்கற்றனவிலலேபயிலலும்பேர்
பலமுறவோதலின்பேர்பாடமையாடலாமே. (உ0)

ஆதிநூலெழுதாக்கேள்வியாரணமோத்துச்சாகை
ஏதமில்சுருதிதன்னோடிருக்கிவையேழும்வேதம்
வேதநூற்பொருளினும்மவிதித்திடுஞானபாகை
ஆதியாங்கருமபாகையருத்தபாகையுமாமென்ப. (உக)

மெய்தெரியாரணந்தான்வேதத்தின்ஞானபாகை
மையிலுட்பொருளினுமமற்றுபநிடதமென்ப
வைதிகம்வேதமுற்றமார்க்கமேபார்க்குங்காலை
ஐயமிலிருக்கினோடுபௌடிகமாதிவேதம். (உஉ)

ஏமமாமிரண்டாம்வேதமிசைதைத்திரியத்தோடு
தோமிலாயசுவாமென்றுசொல்லுவர்நல்லநூலோர்
சாமமேமூன்றும்வேதந்தகைபெறுகீதஞ்சாரும்
வாமமார்நான்காம்வேதமதர்வமாம்வகுக்குங்காலை. (உங)

தந்துரைபுனைந்துரைத்தல்சார்முகவுரையினோடு
முந்தியபதிகமேநான்முகமிவைபாயிரப்பேர்
அந்தமாமாகமத்தோடாரிடம்பிடகமற்றுத்
தந்திரம்பனுவலோடுசமயஞ்சூத்திரமுநூற்பேர். (உச)

படலமேசருக்கங்காண்டம்பரிச்சேதமத்தியாயம்
இடாறமிலம்பகஞ்சனான்முடிபிருமுப்பேரே
தொடையடிவரையொன்றின்றிச்சூத்திரங்குறித்துயாப்பாம்
படிபுகழ்கின்றநூற்பாவகவலேப்பகருங்காலே. (உரு)

எழுத்தின்சாரியையின்பெயர்—கரம், கான், காரம், அகரம். ச.
வேற்றுமையுருபின்பெயர்—ஐ, ஆல், கு, இன், அது, கண். சு.

ஐயச்சொல்லின்பெயர்—என்னை, கொல், எவன், யாது. ச.
சுட்டின்பெயர்—அ, இ, உ. ௩.
இடத்தையச்சொல்லின்பெயர்—யாண்டு, யாங்கு. உ.
இகழ்ச்சிச்சொல்லின்பெயர்—என், இளி, ஏயே, சிச்சீ, ஏளனம். ரு.

கல்வியின்பெயர்—விஞ்சை, வித்தை, ஊதியம், சாலம், ஓதி, கலை, உறுதி, கேள்வி. அ.
கற்றலின்பெயர்—கெழுமல், நவிலல், பயிலல். ௩.
ஓதலின்பெயர்—பாடம், மையாடல். உ.

வேதத்தின்பெயர்—ஆதிநூல், எழுதாக்கேள்வி, ஆரணம், ஓத்து, சாகை, சுருதி, இருக்கு. எ.
வேதநூற்பொருளின்பெயர்—ஞானபாகை, கருமபாகை, அருத்தபாகை. ௩.

வேதத்தின்ஞானபாகையின்பெயர்—ஆரணம். க.
வேதத்துட்பொருளின்பெயர்—உபநிடதம். க.
வேதமார்க்கத்தின்பெயர்—வைதிகம். க.
ஆதிவேதத்தின்பெயர்—இருக்கு, பௌடிகம். உ.

இரண்டாம்வேதத்தின்பெயர்—தைத்திரியம், யசு. உ.
மூன்றாம்வேதத்தின்பெயர்—சாமம். க. அது கீதநடையுள்ளது.
நான்காம்வேதத்தின்பெயர்—அதர்வம். க.

பாயிரத்தின்பெயர்—தந்துரை, புனைந்துரைத்தல், முகவுரை, பதிகம், நூன்முகம். ரு.
நூலின்பெயர்—ஆகமம், ஆரிடம், பிடகம், தந்திரம், பனுவல், சமயம், சூத்திரம். எ.

நூன்முடிபின்பெயர்—படலம், சருக்கம், காண்டம், பரிச்சேதம், அத்தியாயம், இலம்பகம். சு.
சூத்திரயாப்பின்பெயர்—நூற்பாவகவல். க.

நேரினமணியையோர்ந்துநிரல்படவைத்திட்டாங்கே
ஓரினப்பொருளையாய்ந்திட்டொருவழிவைப்பதோத்தாம்
ஆருமோர்நெறியேயன்றியருத்தங்கள்விராய்ச்சிறந்த
பாரியபொதுச்சொற்றானேபடர்வதுபடலமென்ப. (௨௬)

சருக்கத்தின்முடிவின்மற்றுஞ்சாரிலம்பகத்தினீற்றில்
விருத்தமாநடையேயாகும்வேற்றிசைப்பாவினுமம்
விரித்துரையதனினோடுமெய்யுரையுரைப்பொருட்பேர்
பெருத்திடும்பொழிப்பெனுஞ்சொற்பிண்டமாக்கொண்டுகூறும். ()

பலத்தினைத்தருவதாயபதிகம்பல்வகைப்பொருட்கள்
துலக்கமேயாகிக்காணத்தொகுதிசெய்திடுவதாகும்
இலக்கியமெடுத்துக்காட்டலிதிகாசமுதாரணப்பேர்
அலக்கண்டீர்ஞாபகந்தானரும்பொருள்பிசியுமாமே. (௨அ)

காட்டியயாப்புத்தூக்குக்கவிசெய்யுள்கவிதைபாவே
பாட்டெனப்படும்வெண்பாவிற்படும்பெயர்வெள்ளைமுற்பாச்
சூட்டியவகவற்பேராசிரியமேதொகைகலிப்பா
மூட்டியபேர்முரற்கைமுடுகியலராகமாமே. (௨௯)

குற்றெழுத்துத்தொடர்ந்தசெய்யுளேகுளகமென்ப
இற்றெனவிருபத்தாறேயெழுத்துநான்கடியுமாகி
உற்றதுசந்தப்பாட்டாமதின்மிகலுவந்தநாமம்
சற்றெனுமருங்குநல்லாய்தாண்டகமென்பதாமே. (௩0)

கற்றறியெழுத்துமெண்ணுங்கணக்கெனச்சொல்லுநாமம்
சொற்றிடுங்கரணமோடுசூழ்ந்திடுங்கணிதமெண்ணும்
மற்றுறுபெயரெழுத்துவடிவுதன்மையிலெழுத்தாம்
ஒற்றின்பேருடலுடம்போடுறுப்புமெய்புள்ளியாமே. (௩௧)

வரியிராகம்பண்கேயமன்விளிகொளையினோடு
பரவுகாந்தருவங்கீதம்பாணிகாமரமிசைப்பாட்
டுரவியபாலையாழேயுலவியகுறிஞ்சியாழே
மருதஞ்செவ்வழியாழென்னவகுத்தநாலிசையுநாற்பண். (௩௨)

நிறைந்திடுமராகத்தோடுநேர்திறமுறுப்புமற்றைக்
குறுங்கலியாசானைந்துங்குறித்தபாலைத்திறங்கள்
புறைந்தநைவளங்காந்தாரம்படுமலைமருளயிர்ப்புச்
செறிந்தபஞ்சுரமெய்யாற்றுச்செந்திறங்குறிஞ்சியென்ப. (௩௩)

ஒத்தென்பது—ஒருசாதியாயுள்ள மணிகளை வரிசையாகவைத்தாற் போல ஒருசாதியாயுள்ள பொருள்களை ஒருவழிப்படவைப்பது.
படலமென்பது-ஒருவழிப்படாமற் கலந்தபொருள்களோடுபொருந்திப் பலபொருள்களைத்தரும் பொதுச்சொற்கள் தொடர்வது.

வேற்றிசைப்பாவென்பது—சருக்கமுடிவினு மிலம்பகத்தீற்றினும் வேறுனநடையது.
உரைப்பொருளின்பெயர்—விரித்துரை, மெய்யுரை. உ.
பொழிப்பென்பது—பிண்டமாகக்கொண்டு கூறுவது.

பதிகமென்பது—பலவகைப் பொருட்கள் விளக்கமாகிக் காணத் தொகுதிசெய்வது.
உதாரணத்தின்பெயர்-இலக்கியம்,எடுத்துக்காட்டல்,இதிகாசம். ௩.
அரும்பொருளின்பெயர்—ஞாபகம், பிசி. உ.

பாட்டின்பெயர்—யாப்பு, தூக்கு, கவி, செய்யுள், கவிதை, பா. சு.
வெண்பாவின்பெயர்—வெள்ளை, முற்பா. உ.
அகவலின்பெயர்—ஆசிரியம், தொகை. உ.
கலிப்பாவின்பெயர்-முரற்கை.க.அராகத்தின்பெயர்-முடுகியல். க.

குளகமென்பது—குற்றெழுத்துத்தொடர்ந்தசெய்யுள்.
சந்தப்பாட்டென்பது-இருபத்தாறெழுத்துநான்கடியாகிவருவது.
தாண்டகமென்பது—இருபத்தாறெழுத்தின்மிக்குவருவது.

கணக்கின்பெயர்—எழுத்து, எண். உ.
எண்ணின்பெயர்—கரணம், கணிதம். உ.
எழுத்தாவன—பெயரெழுத்து, வடிவெழுத்து, தன்மையெழுத்து.
ஒற்றின்பெயர்—உடல், உடம்பு, உறுப்பு, மெய், புள்ளி. ரு.

இசைப்பாட்டின்பெயர்—வரி, இராகம், பண், கேயம், விளி, கொளை, காந்தருவம், கீதம், பாணி, காமரம். கO.
நாற்பண்ணின்பெயர்—பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ். ச.

பாலையாழ்த்திறங்களின்பெயர்—அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான். ரு.
குறிஞ்சியாழ்த்திறத்தின்பெயர்—நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சரம், மெய், ஆற்றுச்செந்திறம். அ.

பெருநவிர்படுகுறிஞ்சியந்தையென்றிந்தநான்கும்
மருதயாழ்த்திறனேயாகும்வகுக்குநேர்திறத்தினோடு
தருபெயர்திறமேயாமைசாதாரிநான்குமுல்லை
விரவியதிறனில்யாழும்விளரியுநெய்தலாமே. (௩௪)

தளர்வறுபேரியாழேசகோடயாழ்மகரயாழே
வளையுஞ்செங்கோட்டியாழேமற்றைநால்வகையாழ்ப்பேராம்
களையறுகுரலேதுத்தங்கைக்கிளையுழையினோடே
இளியொடுவிளரிதாரமென்பவேழிசையினாமம். (௩௫)

குரன்மிடறுகுந்துத்தங்கூறுநாக்கிளையேயண்ணம்
சிரமுழையிளியேநெற்றிசேர்ந்திடும்விளரிநெஞ்சாம்
தரமுளதாரநாசிதனித்தனிப்பிறக்குமென்னப்
பொருவிலாவாதிமூர்த்திபுலவருக்குரைத்தவாறே. (௩௬)

நான்கொடுநான்குமூன்றுநலம்பெறுமிரண்டினோடு
நான்குமூன்றிரண்டினோடுநல்லமாத்திரைகளாகும்
ஆங்குள ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔவென்னுமேழும்
தீங்கிலாவக்கரங்கள்செப்புமேழிசைக்குந்தானே. (௩௭)

கால்கிளர்மௌவன்முல்லைகடம்பொடுவஞ்சிநெய்தல்
மேலுளவீரைபுன்னைவிரும்பியமணங்களேழாம்
பாலொடுதேன்கடாமேபகர்தயிர்நெய்யினோடே
ஏலமேவாழையேதாடிமக்கனியேழ்சுவைக்காம். (௩௮)

வண்டொடுகிள்ளைவாசிமதயானைதவளைதேனு
ஒண்டிறலாடென்றேழுமோதுமேழிசையிலோசை
திண்டிறல்விசுவாமித்திரன்யமனங்கிதிங்கள்வெய்யோன்
கண்டசொற்கௌதமன்சீர்க்காசிபனீசராமே. (௩௯)

கருதுமந்தரத்தினோடுகாகுளிமந்தவோசை
மருவியமந்தத்தோடுமத்திமஞ்சமனிசைப்பேர்
உரனுறுதாரநீண்டவுச்சமேவல்லிசைப்பேர்
குரலினுக்குரித்தாய்நின்றகூறுமாசான்றிறங்கள். (௪௦)

துறையிரண்டென்பவெள்ளைதோற்றுஞ்செந்துறைகளாகும்
நிறைநரம்பதுவேகூடணிகழும்பண்ணாகுமென்ப
குறைநரம்பதுதிறங்களென்பதுகூறும்யாழின்
உறையுமின்னிசையெழாலேயோதியநூலின்பண்பாம். (௪௧)

மருதயாழ்த்திறத்தின்பெயர்—நவிர், படு, குறிஞ்சி, பியந்தை. ச.
முல்லையாழ்த்திறத்தின்பெயர்—நேர்திறம், பெயர்திறம், யாமை, சாதாரி. ச.
நெய்தல்யாழ்த்திறத்தின்பெயர்—திறனில்யாழ், விளரி. உ.

நால்வகையாழாவன—பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ். *
ஏழிசையாவன—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

ஏழிசைக்குந் தனித்தனி பிறப்பிடங்களாவன—குரல்-மிடறு, துத்தம்-நா, கிளை-அண்ணம், உழை-சிரம், இளி-நெற்றி, விளரி-நெஞ்சு, தாரம்-நாசி.

ஏழிசைக்குமாத்திரைகளாவன—குரல், ச. துத்தம், ச. கிளை, ௩. உழை, உ. இளி, ச. விளரி, ௩. தாரம். உ.
ஏழிசையக்கரங்களாவன—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

ஏழிசைக்குமுறையே மணங்களாவன—மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், வீரை, புன்னை.
ஏழிசைக்குமுறையே சுவைகளாவன—பால், தேன், தயிர், நெய், ஏலம், வாழை, தாடிமக்கனி.

ஏழிசையோசையாவன—வண்டு, கிள்ளை, வாசி, யானை, தவளை, தேனு, ஆடு.
ஏழிசையீசராவார்—விசுவாமித்திரன், இயமன், அங்கி, திங்கள், வெய்யோன், கௌதமன், காசிபன்.

மந்தவோசையின்பெயர்—மந்தரம், காகுளி. உ.
சமனிசையின்பெயர்—மந்தம், மத்திமம். உ.
வல்லிசையின்பெயர்—தாரம், உச்சம். உ.
குரலினுக்குரிய படுமலைப்பாலைமுதலியதிறமேழும் † பாலையாழ்த்திறனும்.

துறையிரண்டின்பெயர்—வெள்ளை, செந்துறை.
பண்ணென்னும்பெயர்—நிறைநரம்பிற்று.
திறமென்னும்பெயர்—குறைநரம்பிற்று.
யாழினெழுமின்னிசையின்பெயர்—எழால்.

---

* பேரியாழிற்கு நரம்பு, உக, சகோடயாழிற்கு, கசு, மகரயாழிற்கு, கஎ, செங்கோட்டியாழிற்கு. எ.

† திறமேழாவன, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, செம்பாலை, விளரிப்பாலை, கோடிப்பாலை, மேற்செம்பாலை,அரும்பாலை என்பன.

இன்னிசைக்குழலினுமமேற்றவங்கியமேவாரி
கின்னரம்வீணையின்பேர்கிளத்தியதண்டுமாகும்
மன்னியயாழ்ப்பேர்கோடவதியொடுவிபஞ்சியாகும்
முன்னியகருவியோடுமொழிந்திடுங்கலமும்மப்பேர். (௪௨)

வரும்பிரமாணந்தன்னில்வலிகட்டுத்திவவென்றோதும்
திரும்பியமுறுக்காணிப்பேர்தேரின்மாடகமென்றுமே
நரம்பின்பேர்குரலேகோலேதுயரியேநாடின்முப்பேர்
புரிந்ததந்திரியுமப்பேர்போதன்முன்புகன்றவாறே. (௪௩)

அரவமேகளனேயோதையாகுலமாரவாரம்
சுருதிகோடணைபுலம்புதொனியியந்துழனியோசை
உரையிசையிடியேநாதமுரைத்தகோசணையேபாடே
இரைசும்மைவகுணிமூவேழிவைகளேயொலியினுமம். (௪௪)

தெளிறலேமுரலன்முக்கல்சிரற்றுதல்பயிலல்வேறு
குளிறலேநரலலோடுகுருமித்தனெளிர்தல்சாலப்
பிளிறலேயுளையும்போதப்பிரற்றலுமெடுத்தலோசை
வளியினுலைசையுஞ்சிலையிலையொலிமருமராஞ்சம். (௪௫)

சிரற்றலேதொனித்தலோடுதெழித்தலேகுமிறல்விம்மல்
உரற்றலேயரற்றல்வேறுமுரைத்தலேயுளைத்தலேங்கல்
இரைத்தலேயிரட்டல்சாலவிடித்தலேயிமிழ்த்தன்மற்றைக்
குரைத்தலேமுழக்கல்வீசிக்குளிறலேயிசைத்தலோடு. (௪௬)

சிலம்பலேயியம்பலோடுசிலைத்தலேதுவைத்தல்கூடி
அலம்பலேகறங்கல்சீறியமுங்கலேதழங்கலோடு
சிலும்பலேகலித்தல்போதத்தெவிட்டலேகனைத்தலோடே
உலம்புதல்புலம்பலெண்ணுன்கிவையொலித்தலின்பேரென்ப. ()

இம்மெனல்கல்லென்றிட்டலிழுமெனல்வல்லென்றிட்டல்
பொம்மெனலொல்லென்றிட்டல்பொள்ளெனனெரேலென்றிட்ட[ல்
கொம்மெனல்விடேலென்றிட்டல்குறிப்பொடுமுகேரென்றிட்டல்
அம்மெனல்சரேலென்றிட்டலனுகரணத்திேசை. (௪அ)

படபடென்றொலித்தல்சாலப்பதபதகளகளென்றல்
மொடுமொடென்றிட்டல்வேறுமொகமொகமொளகொளென்றல்
திடுதிடென்றிட்டலோடுநெடநெடநெறுநெறென்றல்
கடகடகலகலென்றல்கருதியவுபயவோசை. (௪௯)

இன்னிசைக்குழலின்பெயர்—வங்கியம். க.
வீணையின்பெயர்—வாரி, கின்னரம், தண்டு. ௩.
யாழின்பெயர்—கோடவதி, விபஞ்சி, கருவி, கலம். ச.

யாழ்வலிக்கட்டின்பெயர்—திவவு. க.
முறுக்காணியின்பெயர்—மாடகம். க.
நரம்பின்பெயர்—குரல், கோல், தியரி, தந்திரி. ச.

ஒலியின்பெயர்—அரவம், களன், ஓதை, ஆகுலம், ஆரவாரம், சுருதி, கோடணை, புலம்பு, தொனி, இயம், துழனி, ஓசை, உரை, இசை, இடி, நாதம், கோசணை, பாடு, இரை, சும்மை, வகுணி. உக.

எடுத்தலோசையின்பெயர்—தெளிறல், முரலல், முக்கல், சிரற்று தல், பயிலல், குளிறல், நரலல், குருமித்தல், நெளிர்தல், பிளி றல், உளை, பிரற்றல். கஉ.
அசையுஞ்சிலையானும் இலையானுமெழுமொலியின்பெயர்—மருமரா ஞ்சம். க.

ஒலித்தலின்பெயர்—சிரற்றல், தொனித்தல், தெழித்தல் குமிறல், விம்மல், உரற்றல், அரற்றல், உரைத்தல், உளைத்தல், ஏங்கல், இரைத்தல், இரட்டல், இடித்தல், இமிழ்த்தல், குரைத்தல், முழ க்கல், குளிறல், இசைத்தல். கஅ.

சிலம்பல், இயம்பல், சிலைத்தல், துவைத்தல், அலம்பல், கறங் கல், அழுங்கல், தழங்கல், சிலும்பல், கலித்தல், தெவிட்டல், கனைத்தல், உலம்புதல், புலம்பல். கச. (ஆ ௩உ.)

அனுகரணவோசையின்பெயர்—இம்மெனல், கல்லெனல், இழு மெனல், வல்லெனல், பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெ னல், நெரேலெனல், கொம்மெனல், விடேலெனல், முகேரெ னல், அம்மெனல், சரேலெனல். க௩.

உபயவோசையின்பெயர்—படபடெனல், பதபதெனல், களகளெ னல், மொடுமொடெனல், மொகமொகெனல், கொளகொளெ னல், திடுதிடெனல், நெடநெடெனல், நெறுநெறெனல், கடக டெனல், கலகலெனல். கக.

பூசலேதமரமற்றுப்பொருந்தியகுமுறலார்ப்புக்
கோசணையுலம்பலோடுகோடணைகோலாகாலம்
வீசியகலகம்வேறுமிகவுளாறுதறெழித்தல்
பேசுமாகுலமொன்றல்லாப்பேரொலியீராறும்பேர். (ருo)

ஒன்றல்லாப்பேரொலியின்பெயர்—பூசல், தமரம், குமுறல், ஆர்ப்பு, கோசணை, உலம்பல், கோடணை, கோலாகாலாம், கலகம், உளாறுதல், தெழித்தல், ஆகுலம். கஉ.

திமிர்தலேயெடுத்துவந்ததிமிலமேகளகளங்கள்
குமுதமேபேரொலிப்பேர்கூப்பிடலலறல்கத்தல்
கமையிலாதழைத்தலாகுங்கதறலுமாங்தெழித்தல்
அமைவரவுரப்பல்சீறியதிர்த்திடலதட்டலின்பேர். (ருக)

பேரொலியின்பெயர்—திமிர்தல், திமிலம், களகளம், குமுதம். ச.
கமையிலாதழைத்தலின்பெயர்—கூப்பிடல், அலறல், கத்தல், கதறல். ச.
அதட்டலின்பெயர்—தெழித்தல், உரப்பல், அதிர்த்திடல். ங.

இறந்ததுநிகழ்வுமற்றையெதிர்வுமாம்புராணஞ்செய்தோன்
அறந்தருகுணபத்திரன்முளரணெனச்சரணமானேன்
மறந்தலைப்படாதவீரைமன்னன்மண்டலவன்செய்தான்
சிறந்திடுமொலிபற்றும்பேர்ச்செய்யுளைம்பத்திரண்டே. (ருஉ)

ஒலிபற்றியபெயர்த்தொகுதி முற்றிற்று.

ஆ விருத்தம் - எஙங.

—oo;o;oo—

# பொருளகராதி.


பக்கம்.

அ

அகத்தி ௮௭
அகத்தியன் ௩௧
அகப்பை ௧௩௯
அகலம் ௧௪௭
அகல் ௧௪௧
அகவல் ௧௯௧
அகவிதழ் ௯௩
அகழ் ௧௦௯
அகில் ௮௧
அங்காடி ௧௦௯
அசதி ௪௭
அசதியாடல் ௧௮௭
அசுணமா ௭௧
அசுரர் ௧௭
அசைச்சொல் ௧௮௭
அசைதல் ௧௭௫
அசோகமரம் ௮௩
அச்சக்குறிப்பு ௧௫௯
அச்சமுள்ளோன் ௪௧
அச்சம் ௧௫௯
அச்சுவினி ௨௩
அஞ்ஞனக்கோ ௧௨௯
அடக்கம் ௧௭௧
அடங்கல் ௧௬௯
அடி ௧௪௯
அடிச்சேரி ௧௧௧
அடித்தல் ௧௭௩
அடிமை ௪௧
அடுக்குதல் ௧௭௩
அடுப்பு ௧௧௧
அடைகுறடு ௧௩௭
அடைக்கலம் ௧௬௫
அட்டை ௭௭
அணிகளின் கடைப்புணர்வு ௧௩௩
அணில் ௬௫

பக்கம்.

அதிசயமுற விரங்கல் ௧௬௩
அதிசயம் ௧௫௭
அதிமதுரம் ௮௫
அத்தம் ௨௫
அத்தவாளம் ௧௪௩
அத்திமரம் ௮௩
அநாரியர் ௩௯
அப்பல் ௧௧௯
அப்பவர்க்கம் ௧௨௧
அமங்கலை ௪௭
அமரர்மாது ௧௫
அமாவாசை ௨௭
அமிழ்து ௧௨௩
அமைச்சர் ௩௫
அமையுமென்றல் ௧௫௫
அம்பலம் ௧௦௯
அம்பு ௧௨௫
அம்புகட்டும்பாசம் ௧௨௭
அம்புக்கட்டு ௧௨௫
அம்புக்குதை ௧௨௫
அம்புக்குப்பி ௧௨௫
அம்புக்கூடு ௧௨௭
அம்புச்சிறகு ௧௨௭
அம்மானை ௧௪௧
அயலவர் ௪௧
அயன்வாழ்நாள் ௨௯
அயிராணியாடல் ௧௭௯
அயோத்தி ௧௦௯
அரக்காம்பல் ௯௫
அரக்கு ௧௧௯
அரக்குதல் ௧௬௯
அரசமரம் ௮௩
அரசரில் ௯௧௧

பக்கம்.

அரசர்வீதி ௧௦௯
அரசன் ௩௩
அரசிருக்கை ௧௦௯
அரசிறை ௧௮௧
அராகம் ௧௯௧
அரி ௯
அரிசி ௮௯
அரிதல் ௧௭௩
அரிதாரம் ௧௧௯
அரிவாள் ௧௨௭
அருகன் ௭
அருச்சுனன் ௩௫
அருநெறி ௧௧௩
அருந்ததி ௨௫
அருமைசெய்தல் ௧௮௧
அரும்பண்டம் ௧௧௯
அரும்பு ௯௧
அரும்பொருள் ௧௯௧
அருவருத்தசேறு ௧௦௫
அருவருப்பு ௧௬௩
அருவல் ௧௮௧
அருவி ௧௦௩
அருளோன் ௪௩
அருள் ௧௫௩
அரைநாண் ௧௩௧
அரைப்பட்டி ௧௩௧
அலரி ௮௧
அலர்தல் ௧௮௧
அலி ௪௧
அலையல் ௧௮௩
அல்குல் ௫௩
அவந்தி ௧௦௭
அவமதிச்சிரிப் ௧௮௩
அவயவம் ௫௭
அவரை ௮௯

| | பக்கம். |
|---|---|
| அவாவின்மை | ௧௫௫ |
| அவிட்டம் | ௨௫ |
| அவித்தல் | ௧௭௩ |
| அவ்விடம் | ௧௧௫ |
| அழகு | ௧௫௧ |
| அழிஞ்சில் | ௮௧ |
| அழிவின்மை | ௧௫௭ |
| அழுக்காறு | ௧௯௩ |
| அழுக்கின்மை | ௧௫௫ |
| அழுதல் | ௧௯௧ |
| அழுந்துதல் | ௧௮௧ |
| அழைத்தல் | ௧௮௭ |
| அளத்தல் | ௧௪௧ |
| அளவின்மை | ௧௪௧ |
| அளவு | ௧௪௧ |
| அறச்சாலை | ௧௧௧ |
| அறிஞர் | ௩௩ |
| அறிந்துமறியார் போறல் | ௧௫௭ |
| அறிவிலான் | ௪௫ |
| அறிவில்பொருள் | ௧௫௭ |
| அறிவின்மை | ௧௫௭ |
| அறிவு | ௧௫௩ |
| அறிவுடைப்பொருள் | ௧௫௭ |
| அறுகு | ௯௧ |
| அறை | ௧௦௧ |
| அற்பம் | ௧௪௭ |
| அனிச்சமரம் | ௮௧ |
| அனுடம் | ௨௫ |
| அனைத்துமுண்டாகுநிலம் | ௧௦௫ |
| அன்பு | ௧௫௩ |
| அன்றில் | ௭௫ |
| அன்னச்சிறகு | ௭௧ |
| அன்னம் | ௭௧ |
| **ஆ** | |
| ஆகாயம் | ௧௭ |
| ஆக்கம் | ௧௫௭ |
| ஆசாரியன் | ௩௩ |
| ஆசை | ௧௯௩ |
| ஆச்சாமரம் | ௮௭ |
| ஆடல் | ௧௭௯ |
| ஆடவர்கொடைவீரத்தாலணிவது | ௧௩௧ |
| ஆடவர்நீங்கஉள்ளேயடைத்திருத்தல் | ௧௭௧ |
| ஆடாதோடை | ௮௭ |
| ஆடு | ௯௩ |
| ஆட்டுக்குட்டி | ௯௩ |
| ஆணைச் சிறப்பிக்கும் பெயர் | ௪௫ |
| ஆண்குறி | ௫௩ |
| ஆண்டிற்பாதி | ௨௯ |
| ஆண்மயிர் | ௫௫ |
| ஆண்முதலை | ௭௭ |
| ஆண்வண்டு | ௭௫ |
| ஆதிவேதம் | ௧௮௯ |
| ஆத்தி | ௮௫ |
| ஆந்தை | ௭௩ |
| ஆபரணத் தொங்கல் | ௧௩௧ |
| ஆபரணம் | ௧௩௩ |
| ஆமணக்கு | ௮௭ |
| ஆமை | ௭௭ |
| ஆம்பி | ௧௩௯ |
| ஆயத்தமானேன் | ௪௩ |
| ஆயர்வீதி | ௧௦௯ |
| ஆயிரம் | ௧௯௫ |
| ஆயிலியம் | ௨௩ |
| ஆயுதஞ் சூதுகூத்துப் பயில்களம் | ௧௧௧ |
| ஆயுதம் | ௧௨௯ |
| ஆரான்மீன் | ௭௭ |
| ஆலங்கட்டி | ௨௯ |
| ஆலமரம் | ௮௩ |
| ஆலிங்கனம் | ௧௭௧ |
| ஆழம் | ௧௦௩ |
| **இ** | |
| இகழ்ச்சி | ௧௯௩ |
| இகழ்ச்சிச்சொ | ௧௮௯ |
| இசங்கு | ௮௭ |
| இசைப்பு | ௧௭௧ |
| இஞ்சி | ௯௧ |
| இடக்கை | ௧௩௫ |
| இடத்தையச்சொல் | ௧௮௯ |
| இடபம் | ௬௧ |
| இடபராசி | ௨௩ |
| இடம் | ௧௧௫ |
| இடம்புரி | ௭௭ |
| இடாகினி | ௧௫ |
| இடி | ௨௯ |
| இடுதிரை | ௧௪௩ |
| இடை | ௫௩ |
| இடை | ௧௨௯ |
| இடைசுருங்குபறை | ௧௩௫ |
| இடைச்சொல் | ௧௮௭ |
| இத்தி | ௮௭ |
| இந்திரகோபம் | ௭௫ |
| இந்திரன் | ௧௧ |
| இந்திரன்மனைவி | ௧௫ |
| இந்திரன்மைந்தன் | ௧௫ |
| இந்திரியம் | ௫௭ |
| இப்பிறப்பு | ௧௫௭ |
| இயம்புதல் | ௧௮௫ |
| இரக்கம் | ௧௫௯ |
| இரண்டாம்வேதம் | ௧௮௯ |
| இரண்டு | ௧௨௩ |
| இரத்தம் | ௬௯ |
| இரத்தல் | ௧௬௯ |
| இரா | ௨௭ |
| இராகு | ௨௧ |
| இராக்கதர் | ௧௭ |
| இராசதானி | ௧௦௭ |
| இராசவாகனம் | ௧௩௭ |
| இராசி | ௨௭ |
| இருப்புமுள் | ௧௨௭ |

| | பக்கம். |
|---|---|
| இருப்பை | அஎ |
| இரும்பு | ககஎ |
| இரும்புள்வாங்குஞ்சலாகை | கககூ |
| இருவாட்சி | அக |
| இருவேலி | அக |
| இருள் | உஎ |
| இரேவதி | உரு |
| இலந்தை | அங |
| இலந்தைக்கனி | அங |
| இலவமரம் | அஎ |
| இலவின்பஞ்சு | கஉக |
| இலாபம் | கருரு |
| இலை | கூக |
| இலைக்கறி | அகூ |
| இலைநுகர்விலங்குணு | கஉங |
| இலைமூக்கரிகத் | கஉஎ |
| இவ்விடம் | ககரு |
| இழிவு | கருகூ |
| இளங்கதிர் | அகூ |
| இளங்கொம்பு | கூக |
| இளஞ்சூல் | அகூ |
| இளமை | கருக |
| இளம்புல் | கூக |
| இளைத்தல் | கஅக |
| இளையெள் | கூக |
| இறகு | எஎ |
| இறங்குதல் | கஅக |
| இறுன்மீன் | எஎ |
| இறுக்கல் | கசரு |
| இறுமாப்பு | கருங |
| இறை | ருஎ |
| இறைகூடை | கஙகூ |
| இனிமை | கருகூ |
| இன்பம் | கருரு |
| **ஈ** | |
| ஈகை | அஎ |
| ஈசன்வில் | கஉரு |
| ஈட்டி | கஉஎ |
| ஈயம் | ககஎ |

| | பக்கம். |
|---|---|
| ஈரப்பலா | அங |
| ஈரல் | சுக |
| ஈர்வாள் | கஉஎ |
| ஈன்றணிமை | கசுங |
| ஈன்றபசு | சுக |
| ஈன்றவள் | சகூ |
| ஈன்றவன் | சகூ |
| **உ** | |
| உக்கரிரி | கஉக |
| உச்சி | ருரு |
| உஞ்சல் | கஙகூ |
| உடம்பு | ருக |
| உடற்குறை | ருங |
| உடற்றழும்பு | ருஎ |
| உடனிகழ்ச்சியிடைச்சொல் | கஅஎ |
| உடன்பாடு | கஅக |
| உடுத்தல் | கசரு |
| உடும்பு | சுரு |
| உடைவாள் | கஉஎ |
| உட்டணம் | கருகூ |
| உட்டுளை | கசஎ |
| உண்கலம் | கஙங |
| உண்ணல் | கசுஎ |
| உண்ணுக்கு | ருரு |
| உண்ப | கஉங |
| உண்மாசு | சுகூ |
| உதடு | ருங |
| உதாரணம் | ககக |
| உதைகாற்பசு | சுக |
| உத்தரட்டாதி | உரு |
| உத்தரம் | உரு |
| உத்தராடம் | உரு |
| உத்தரீயம் | கசங |
| உப்பமைப்போர் | சகூ |
| உப்பளம் | க0ங |
| உப்புவாணிகர் | ஙகூ |
| உமை | கரு |
| உயர்ச்சி | கசஎ |
| உயர்ந்தவர் | ஙங |
| உயிர் | ருஎ |

| | பக்கம். |
|---|---|
| உரல் | கஙகூ |
| உராய்ப்போதல் | கஎஎ |
| உரித்து | கருஎ |
| உரிமை | கசுரு |
| உரியோர் | சக |
| உருக்கு | ககஎ |
| உலரப்பொரு | ககூக |
| உரோகிணி | உங |
| உலக்கை | கஙகூ |
| உலண்டு | எகூ |
| உலர்ந்தமரம் | கூங |
| உலாப்போதல் | கஎஎ |
| உலாவல் | கஎஎ |
| உலைத்துருத்தி | கசக |
| உலைப்பு | கஅக |
| உலையாணிக்கோல் | கஙஎ |
| உலோகக்கட்டி | ககஎ |
| உவகைப்பறை | கஙரு |
| உவகை | கருரு |
| உவமை | கருசு |
| உவர்த்தரை | க0ங |
| உவர்நீர் | க0ங |
| உழக்கல் | கஎஎ |
| உழவு | ககங |
| உழுந்து | அகூ |
| உளி | கஉஎ |
| உளு | எகூ |
| உள்ளக்களிப்பு | கருரு |
| உள்ளங்கை | ருங |
| உள்ளதுசிறத்தல் | கசகூ |
| உள்ளத்தின்மிகுதி | கருரு |
| உள்ளான் | எங |
| உறவு | கருஎ |
| உறி | கஙகூ |
| உறுதிச்சொல் | கஅரு |
| உறைகாரர் | ஙகூ |
| உறையூர் | க0எ |
| உற்சவம் | கசுஎ |

| | பக்கம். |
|---|---|
| உற்சாகம் | கஅக |
| **ஊ** | |
| ஊசி | கஉகூ |
| ஊசித்துளை | கஉகூ |
| ஊடலைத்தீர்த்த | கஎக |
| ஊமத்தை | அஎ |
| ஊமை | சக |
| ஊரிலுள்ளாருண்ணு நீர் | க0ரு |
| ஊர் | க0எ |
| ஊர்க்குருவி | எங |
| ஊர்சூழ்சோலை | கூங |
| ஊழிகாலம் | உக |
| ஊழித்தீ | கக |
| ஊழ் | கருரு |
| ஊறுபுனல் | க0ரு |
| ஊன் | சுகூ |
| ஊன்விற்போர் | ஙகூ |
| **எ** | |
| எச்சில் | கஉக |
| எட்டி | அஎ |
| எட்டுக்கோவைமணி | கஙக |
| எண் | கககூ |
| எண்காற்புள் | எக |
| எண்ணெய் | கஉங |
| எதிர்கொடுபோதல் | கஎஎ |
| எதிர்தல் | கஎகூ |
| எதிர்மொழி | கஅஎ |
| எப்பிறப்பு | கருஎ |
| எப்பொருட்குமிறைவன் | ஙங |
| எருக்கு | அஎ |
| எருது | சுக |
| எருத்தின்முரிப்பு | சுக |
| எருமை | சுங. |
| எலி | சுரு |
| எலுமிச்சை | அங |
| எலும்பு | ருஎ |
| எல்லை | கசகூ |
| எவ்விடம் | ககரு |
| எழு | கஉஎ |
| எழுச்சி | கஎரு |
| எழுதல் | கசரு |
| எழுதுகோல் | கஉகூ |
| எழுதுதல் | கசுகூ |
| எழுத்தாணி | கஉகூ |
| எழுத்தின்சாரி | கஅகூ |
| எழுத்து | கசுகூ |
| எழுபிறப்பு | கஎரு |
| எழுப்பல் | கசுகூ |
| எழுமையுந்தொடர்ந்தவன்பு | கருங |
| எழுவகைமாதராடல் | கஎகூ |
| எளிமை | கருக |
| எள் | கூக |
| எள்ளிளங்காய் | கூக |
| எறிமணி | கஙங |
| எறும்பு | எகூ |
| **ஏ** | |
| ஏகாந்தம் | ககங |
| ஏணி | கஙகூ |
| ஏமாப்பு | கருங |
| ஏலம் | அஎ |
| ஏவல் | கருரு |
| ஏவல் | கஅங |
| ஏவுவான் | சக |
| ஏழுகோவைமணி | கஙக |
| ஏறுதல் | கஅக |
| ஏற்குமட்கலம் | கசக |
| ஏற்போன் | சங |
| ஏற்றம் | கஅஎ |
| **ஐ** | |
| ஐம்பொறிநுகர் | கஎங |
| ஐயச்சொல் | கஅகூ |
| ஐயன் | கங |
| **ஒ** | |
| ஒடுங்கல் | கஅக |
| ஒட்டகம் | சுரு |
| ஒட்டலர்நாடழித்தல் | கஎகூ |
| ஒட்டுநேர்மேற்சாராமை | கஎகூ |
| ஒதுக்கிடம் | ககங |
| ஒப்பனை | கசுஎ |
| ஒருகட்பகுவாய்ப்பறை | கஙரு |
| ஒருகட்பறை | கஙரு |
| ஒருகலை | உஎ |
| ஒருதலைக்காமம் | கசுங |
| ஒருபலம் | கசுரு |
| ஒருபிறப்பு | கருஎ |
| ஒழிதல் | கஎங |
| ஒழுக்கம் | கருரு |
| ஒழுக்கம் | கசுரு |
| ஒளி | கருக |
| ஒளிசெயல் | கருக |
| ஒற்றர் | ஙகூ |
| ஒற்று | கககூ |
| ஒற்றுமை | கருரு |
| ஒற்றுமை | கஅங |
| ஒன்று | கசுரு |
| **ஓ** | |
| ஓசைசெய்தலை | கஙக |
| ஓடம் | கஙஎ |
| ஓடல் | கஎஎ |
| ஓடை | அரு |
| ஓதல் | கஅகூ |
| ஓதும்பள்ளி | ககக |
| ஓத்துரைப்போர் | ஙங |
| ஓந்தி | சுரு |
| ஓமகுண்டம் | ககக |
| ஓமமண்டபம் | ககக |
| ஓமவிறகு | கஉக |
| ஓரீற்றுப்பசு | சுக |
| ஓர்குடியிற்கொண்டோன் | சகூ |
| **க** | |
| கக்கரி | அஎ |
| கங்கணம் | கஙக |

பக்கம்.

கங்கை ௧௫
கச்சு ௧௪௩
கஞ்சி ௧௨௧
கடத்தல் ௧௭௭
கடம்பு ௮௫
கடலை ௮௯
கடல் ௧௦௧
கடல்சார்ந்தநிலம் ௧௦௫
கடவுண்மணி ௧௧௧
கடற்கரை ௧௦௧
கடற்கரையிற்பலபலதீவிற்பண்டம்விற்குமூர் ௧௦௭
கடாரமென்னுமூர் ௧௦௭
கடிகைமாக்கள் ௪௩
கடிப்பு ௧௩௫
கடுப்பு ௧௭௭
கடுமரம் ௮௫
கடை ௧௪௯
கடைக்கணித்தல் ௧௬௯
கடைக்கொள்ளி ௧௨௧
கட்டல் ௧௭௩
கட்டழகு ௧௫௧
கட்டில் ௧௩௭
கணக்கர்வழியினுள்ளார் ௩௫
கணக்கு ௧௯௧
கணிதம் ௧௫௭
கணைக்கால் ௫௩
கண் ௫௫
கண்குத்திப்பாம் ௭௧
கண்டசர்க்க ௧௨௩
கண்ணடி ௧௩௩
கண்ணாளர் ௩௭
கண்ணிமை ௫௫
கண்ணேணி ௧௩௯
கண்ணோட்டம் ௧௫௫
கண்மணி ௫௫
கதவு ௧௩௭
கதிர் ௮௯
கதுப்பு ௫௫
கதை ௧௮௭
கத்தரித்தல் ௧௭௩
கத்தூரி ௬௫
கத்தூரி ௧௧௯
கந்தருவர் ௧௭
கந்தன் ௧௧
கப்பு ௯௧
கமண்டலம் ௧௩௫
கமுகு ௮௧
கம்பளிப்படா ௧௪௩
கம்பு ௮௯
கயிறு ௧௪௧
கரகம் ௧௪௧
கரடி ௬௩
கரடிப்பறை ௧௩௫
கரடு ௫௩
கரத்தல் ௧௬௯
கரந்தகற்படை ௧௧௧
கரி ௧௨௧
கரிகாடு ௫௯
கரிக்குருவி ௭௩
கரியவன் ௪௩
கருங்காலி ௮௫
கருங்கிளி ௭௩
கருங்குரங்கு ௬௫
கருங்குவளை ௯௫
கருடன் ௭௧
கருணைக்கிழங்கு ௯௧
கருநாரை ௭௫
கருநெய்தல் ௬௫
கருந்தினை ௮௯
கருப்பம் ௬௯
கருப்பூரம் ௧௧௯
கருமணல் ௧௦௫
கரும்பு ௮௩
கரும்புறு ௭௩
கருவழலைப்பாம்பு ௭௧
கருவிளை ௮௭
கருவூர் ௧௦௭
கர்க்கடகம் ௨௩
கர்ப்பரை ௧௪௧
கலக்கம் ௧௫௯
கலங்கனீர் ௧௦௩
கலசப்பானை ௧௩௩
கலப்பை ௧௩௭
கலவை ௧௧௯
கலிப்பா ௧௯௧
கலை ௬௩
கலைஞர் ௩௩
கல் ௧௦௧
கல்லுழுத்துங்குழிவட்டம் ௧௩௩
கல்வி ௧௮௯
கல்விபயில்களம் ௧௧௧
கவசம் ௧௨௯
கவண் ௧௭௨
கவரிமா ௬௩
கவர்வழி ௧௧௩
கவற்றிற்றாயம் ௧௩௯
கவுதாரி ௭௩
கழலை ௫௭
கழற்காய் ௮௭
கழற்கொடி ௮௭
கழாயர் ௩௯
கழி ௧௦௩
கழிநிலம் ௧௦௩
கழிபிறப்பு ௧௫௭
கழிமுகம் ௧௦௩
கழியிருக்கை ௧௦௭
கழியுடலின் முழுவெலும்பு ௫௭
கழுகு ௭௧
கழுக்கடை ௧௨௭
கழுதை ௬௫
கழுத்து ௫௩
களவு ௧௮௧
களா ௮௫
கள் ௧௨௩
கள்விற்போர் ௩௯

| | பக்கம். |
|---|---|
| கறி | ௧௨௧ |
| கறுப்பு | ௧௫௧ |
| கற்பகதருவிற்படர் கொடி | ௮௧ |
| கற்படி | ௧௧௩ |
| கற்படுத்தநிலம் | ௧௧௧ |
| கற்பாழி | ௧௦௧ |
| கற்றல் | ௧௮௯ |
| கற்றுழை | ௮௭ |
| கனலொழுங்கு | ௧௯ |
| கன்னன் | ௩௫ |
| கன்னார் | ௩௧ |
| கன்னி | ௨௩ |
| கன்னி | ௧௦௩ |
| கன்னிபெற்றபிள்ளை | ௬௫ |
| **கா** | |
| காகம் | ௭௩ |
| காசி | ௧௦௭ |
| காஞ்சி | ௧௦௭ |
| காஞ்சொறி | ௮௭ |
| காடு | ௯௩ |
| காடுகாள் | ௧௫ |
| காடை | ௭௩ |
| காட்டழல் | ௧௯ |
| காட்டா | ௯௩ |
| காண்டல் | ௧௯௧ |
| காதணி | ௧௩௧ |
| காதம் | ௧௧௫ |
| காதலன் | ௫௧ |
| காதலோர்கூட்டம் | ௧௭௧ |
| காது | ௫௫ |
| காத்தல் | ௧௭௫ |
| காமநோய் | ௧௯௩ |
| காமனுடல் | ௧௭௯ |
| காமன் | ௧௩ |
| காயா | ௮௧ |
| காய் | ௯௩ |
| காய்தல் | ௧௮௩ |
| காய்த்திருந்தமர | ௯௩ |
| காரணம் | ௧௫௭ |
| காராமணி | ௮௯ |
| காராம்பி | ௧௩௯ |
| காரிப்பிள்ளை | ௭௩ |
| காரியம் | ௧௧௭ |
| காரெலி | ௯௫ |
| கார்த்திகை | ௨௩ |
| கார்ப்பு | ௧௫௯ |
| காலநுட்பம் | ௨௫ |
| காலம் | ௨௭ |
| காலவிரைவு | ௨௭ |
| யாலன் | ௧௩ |
| காலாள் | ௪௩ |
| கால் | ௫௩ |
| காவல் | ௧௭௫ |
| காவற்காடு | ௯௩ |
| காவிக்கல் | ௧௧௧ |
| காவிரிப்பூம்பட்டினம் | ௧௦௯ |
| காவேரி | ௧௦௩ |
| காளம் | ௧௩௩ |
| காளி | ௧௫ |
| காளியேவல்செய்மகள் | ௧௫ |
| காற்சரி | ௧௩௧ |
| காற்பலம் | ௧௯௫ |
| காற்றுடி | ௧௪௧ |
| காற்று | ௧௭ |
| கானங்கோழி | ௭௩ |
| கானல் | ௧௨௩ |
| **கி** | |
| கிடைத்தல் | ௧௮௩ |
| கிட்டல் | ௧௭௭ |
| கிணறு | ௧௦௫ |
| கிராமமுற்றேன் | ௪௧ |
| கிலுகிலுப்பை | ௮௫ |
| கிழக்கு | ௯௯ |
| கிழங்கு | ௯௧ |
| கிளி | ௭௩ |
| கிளிகடிகருவி | ௧௨௭ |
| கிளிஞ்சில் | ௭௭ |
| கிளைத்தல் | ௧௭௩ |
| **கீ** | |
| கீரி | ௯௩ |
| கீழறுத்தல் | ௧௮௭ |
| கீழறை | ௧௦௧ |
| கீழுதடு | ௫௩ |
| கீழோர் | ௪௫ |
| கீழ் | ௨௯ |
| கீழ்காற்று | ௧௯ |
| கீறல் | ௧௭௩ |
| **கு** | |
| குகை | ௧௦௧ |
| குங்குமமரம் | ௮௧ |
| குங்குமம் | ௧௧௯ |
| குங்குலியம் | ௧௧௯ |
| குடங்கையைக்குவித்துக்கொட்டல் | ௧௭௧ |
| குடம் | ௧௪௧ |
| குடி | ௧௫௭ |
| குடியிறை | ௧௮௧ |
| குடில் | ௧௧௧ |
| குடுமி | ௫௫ |
| குடுவை | ௧௪௧ |
| குடைவேல் | ௮௩ |
| குட்டல் | ௧௭௩ |
| குணமின்மை | ௧௯௧ |
| குணம் | ௧௯௫ |
| குண்டலம் | ௧௩௧ |
| குதித்தல் | ௧௭௫ |
| குதிரை | ௯௧ |
| குதிரைக் கடிவாளம் | ௧௨௯ |
| குதிரைக்கணிமயிர் | ௧௨௯ |
| குதிரைக்கல | ௧௨௯ |
| குதிரைக்குளம்பு | ௯௧ |
| குதிரைச்சம்மட்டி | ௧௨௯ |
| குதிரைபோமார்க்கம் | ௯௧ |
| குதிரைப்பந்தி | ௧௧௧ |

பக்கம்.

குதிரைமயிர் கூக
குதிரையங்கவடி கஉக
குதிரையின்வடம் கஉக
குதிரைவையாளி க0க
குதிர் கக௩
குத்தல் கஎ௩
குந்திநிற்றல் கஎக
குபேரன் க௩
குமரனுடல் கஎக
குமரி சஎ
குமிழ் அரு
குமிழ்ப்புவடிவு கசஎ
கும்பராசி உ௩
கும்பிடல் கஎக
குயவன் ௩எ
குயில் எ௩
குரங்கு கூரு
குருகுலவேந்தர் ௩௩
குருக்கத்தி அக
குருடன் சக
குருத்து கூக
குருந்தமரம் அரு
குலமுளோன் ச௩
குழம்பு கஉக
குழாய் க௩க
குழிநாவல் அ௩
குழைவு கஎஎ
குளநெல் அக
குளித்தல் கஎக
குளிர் கரு௩
குறள் சக
குறிக்கொள்வோர் சக
குறிஞ்சி அரு
குறிஞ்சிநிலத்திறைவன் சஎ
குறிஞ்சிநிலத்தூ க0எ
குறிஞ்சிநிலப்பெண் சஎ
குறிஞ்சிநில மாக்கள் சஎ
குறிஞ்சிப்பறை க௩ரு
குறித்தல் கரு௩
குறிப்பு கரு௩
குறுங்காடு கூ௩
குறுநிலமன்னர் ௩ரு
குறுந்தடி கஉஎ
குறுந்தறி க௩எ
குறுந்தெரு க0க
குறைதல் கசக
குற்றம் கருக
குற்றல் கஎரு
குன்றி அரு

கூ

கூகை எ௩
கூடல் கசஎ
கூடல் கஅ௩
கூடியுங்கூட்டமின்மை கஎக
கூடு கக௩
கூடை க௩க
கூட்டம் கசரு
கூதாளி அஎ
கூத்தர் ௩க
கூத்தின்விகற்ப கஎக
கூத்து கஎக
கூந்தற்பூகம் அக
கூப்பிடுதூரம் ககரு
கூர்மையில் ச௩
கூர்மையின் கஉக
கூவனூலோர் ௩க
கூறியதுகூறல் கஅஎ
கூறுபாடு கருரு
கூன் சக
கூன்வாள் கஉஎ

கெ

கெண்டி க௩ரு
கெண்டைமீன் எஎ

கே

கேடு ககூ௩
கேட்டை உரு
கேது உக
கேளாவென்பது கஅஎ

கை

கைகூப்பிமெய்கோட்டிநிற்றல் கஎக
கைகோத்தாடல் கஎக
கைக்கட்டி கஉக
கைச்சரி க௩க
கைத்தலம் ரு௩
கைத்தல் கருக
கைம்மணி க௩௩
கைம்மைபெற்றோன் சரு
கையொழியாமை ககூரு
கைவளை க௩க
கைவாள் கஉஎ
கைவிடாப்படை கஉக
கைவிடுபடை கஉக
கைவேல் கஉஎ

கொ

கொக்கு எரு
கொடி அக
கொடிக்கொத்தான் அக
கொடிப்படை ருக
கொடுங்கோன்மன்னர்குடைக்கீழ்வாழ்கின்றகுடிகள்போலப்படுநிலம் க0ரு
கொடுமை கருக
கொடை ககூக
கொடையுளோன் ச௩
கொட்டாவி கஅ௩
கொண்டல்வண்ணன்கூத்து கஎக
கொதுகு எரு

| | பக்கம். | | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| கொத்தளிப்பா | கஙக | கோழை | ௫எ | சல்லி | கஉங |
| கொத்தான் | அஎ | கோற்றேன் | எக | சனி | உக |
| கொத்து | கஙு | **கௌ** | | **சா** | |
| கொத்துமலி | அ௫ | கௌதமை | க0ங | சா | கஎக |
| கொப்பளித்தல் | கஅங | **ச** | | சாடி | கசக |
| கொப்பூழ் | ௫ங | சகாயம் | க௫௫ | சாணி | கஉக |
| கொம்பிலாவிலங்கு | சக | சக்கரம் | கங௫ | சாணைக்கல் | கசக |
| கொம்பு | கஙங | சக்கரவாகப்புள் | எக | சாதகப்புள் | எக |
| கொய்யடிநாரை | எ௫ | சங்கறுப்போர் | ஙக | சாதிலிங்கம் | ககக |
| கொலை | கஎ௫ | சங்கிலி | கஉக | சாந்து | ககக |
| கொலைசெய்தல் | கஎ௫ | சங்கு | எஎ | சாமம் | உஎ |
| கொலையாளி | சக | சடை | ௫எ | சாமரம் | கூங |
| கொல்லர் | ஙஎ | சடைமுடித்த படிவர் | ஙக | சாம்பர் | கஉக |
| கொல்லுலைமூக்கு | கசக | சட்டம் | கஙக | சாய்தல் | கஎக |
| கொவ்வை | அக | சட்டி | கசக | சாரி | கஙக |
| கொழித்தல் | கஎங | சட்டுவம் | கஙங | சாரியை | கஅஎ |
| கொழு | கஙஎ | சட்டை | கசங | சாரைப்பாம்பு | எக |
| கொழுப்பு | கூக | சண்டாளர் | ஙக | சாறடை | அஎ |
| கொழுமை | க௫ங | சண்பகமரம் | அக | **சி** | |
| கொள்கலம் | கசக | சதங்கை | கஙக | சிங்கம் | ௫க |
| கொள்ளு | அக | சதயம் | உ௫ | சிங்கராசி | உங |
| கொள்ளை | கஎ௫ | சதுரக்கள்ளி | அஎ | சிங்களம் | க0எ |
| கொன்றை | அங | சத்திக்கொடி | அ௫ | சிங்காதனம் | கஙக |
| **கோ** | | சத்திசெய்தல் | கஅங | சிச்சிலி | எங |
| கோங்குமரம் | அக | சத்தியம் | கஅஎ | சிதம்பரம் | க0க |
| கோடாலி | கஉஎ | சந்தனமரம் | எக | சித்திரகாரர் | ஙஎ |
| கோட்டம் | அ௫ | சந்திரகிரணத்தினீர் கால்சலாகை | ககக | சித்திரகூடம் | க0க |
| கோட்டான் | எங | சந்திரன் | உக | சித்திரப்படாம் | கசங |
| கோணத்தெரு | க0க | சந்து | ௫எ | சித்திரம் | கச௫ |
| கோதாவரி | க0ங | சந்து | க0க | சித்திரை | உ௫ |
| கோதுமை | அக | சந்தேகம் | ககூங | சித்து | கஅக |
| கோபக்குறிப்பு | ககூக | சமணநீத்தோர் | ஙக | சிந்தல் | கஎங |
| கோபம் | ககூக | சம்பங்கோழி | எ௫ | சிந்தூரம் | ககக |
| கோலஞ்செய்வாள் | சஎ | சம்மட்டி | கஙஎ | சிரமஞ்செய்தல் | கஎக |
| கோவேறுகழு | கூ௫ | சரிமணி | கஙக | சிரித்தல் | கஅங |
| கோழி | எங | சர்க்கரை | கஉங | சிரேணி | க0க |
| கோழிகூகைகளின் பெண் | எ௫ | சர்ச்சரை | கசஎ | சிலம்பி | எக |
| | | சஞ்சலம் | எஎ | சிலம்பு | கஙக |
| | | சலியாதுநிற்றல் | கசக | சிலரறிந்துபுறங்கூறல் | கஅ௫ |
| | | | | சிவப்பு | கசக |

| | பக்கம். |
|---|---|
| சிவல் | எங |
| சிவனிருத்தம் | களக |
| சிவன் | எ |
| சிவிகை | கஙஎ |
| சிவேதை | அஎ |
| சிள்வீடு | எரு |
| சிறுகீரை | அஎ |
| சிறுகொடி | கசரு |
| சிறுசண்பகம் | அக |
| சிறுசவளம் | கஉஎ |
| சிறுசெய் | க0ரு |
| சிறுதிடர் | க0க |
| சிறுதூறு | கூங |
| சிறுபறை | கஙரு |
| சிறுபூளை | அஎ |
| சிறுமலை | க0க |
| சிறுவட்டில் | கஙங |
| சிறுவழி | ககங |
| சிற்பர்வீதி | க0கூ |
| சிற்பாசாரியர் | ஙஎ |
| சிற்ருலவட்டம் | கஙரு |
| சிற்றில் | ககக |
| சிற்றூர் | க0எ |
| சின்னம் | கஙங |
| **சீ** | |
| சீந்திக்கொடி | அகூ |
| சீப்பு | கசக |
| **சு** | |
| சுங்கவிறை | கஅக |
| சுடலை | ககங |
| சுடல் | கஅக |
| சுட்டி | கஙக |
| சுட்டு | கஅகூ |
| சுண்டி | அஎ |
| சுண்ணச்சாந்து | கஉக |
| சுத்தம் | கருங |
| சுமத்தல் | கஅக |
| சும்மாடு | கஙகூ |
| சுரபுன்னை | அக |
| சுரை | அகூ |
| சுவரசம்கருவி | கஉஎ |
| சுவர் | ககக |
| சுழலல் | கஎஎ |
| சுழல்காற்று | ககூ |
| சுழல்படை | கஉஎ |
| சுளகு | கஙகூ |
| சுற்றம் | சங |
| **சூ** | |
| சூடுதல் | கசுஎ |
| சூதகம் | கசுங |
| சூது | கஙகூ |
| சூத்திரயாப்பு | கஅகூ |
| சூத்திரர் | ஙஎ |
| சூரியனொளியிற்றீக் கால்சலாகை | ககூ |
| சூரியன் | ககூ |
| சூலம் | கஉஎ |
| **செ** | |
| செக்கான் | ஙகூ |
| செங்கருங்காலி | அஎ |
| செங்கழுநீர் | கூரு |
| செங்காந்தள் | அரு |
| செத்தை | கசக |
| செந்நாய் | சுரு |
| செந்நெல் | அகூ |
| செந்நெல்விளைநிலம் | க0ரு |
| செம்பஞ்சு | கககூ |
| செம்பு | ககஎ |
| செம்போத்து | எங |
| செம்மறியாடு | சுங |
| செம்மறியாட்டாண் | சுங |
| செயலறல் | கசுரு |
| செய்கரை | க0ங |
| செய்தல் | கசுஎ |
| செய்தொழில் | கசுஎ |
| செருந்தி | அக |
| செருப்பு | கசக |
| செலுத்தல் | கஎஎ |
| செல் | எகூ |
| செல்வம் | கருங |
| செவிடு | சக |
| செவிமலர்ப்பூ | கஙக |
| செவ்வரத்தம் | அக |
| செவ்வாய் | உக |
| செவ்வை | கசஎ |
| செறிகுழம்பு | கககூ |
| செறித்தல் | கஎரு |
| செறிமயிர் | ருரு |
| **சே** | |
| சேம்பு | அஎ |
| சேரன் | ஙரு |
| சேறு | க0ரு |
| சேற்றிற்புள்ளி | க0ரு |
| **சை** | |
| சைவர் | ஙக |
| **சொ** | |
| சொருகுதல் | கசுஎ |
| சொலித்திடல் | கஎங |
| சொல் | கஅரு |
| சொல்லல் | கஅரு |
| சொறி | கஅங |
| சொன்மாலை | கஅஎ |
| **சோ** | |
| சோதி | உரு |
| சோம்பு | கசுக |
| சோர்வு | கசுகூ |
| சோலை | கூங |
| சோழன் | ஙரு |
| சோளம் | கூக |
| சோறு | கஉக |
| சோனகர் | ஙகூ |
| **ஞா** | |
| ஞாழல் | அஎ |
| **ஞெ** | |
| ஞெண்டு | எகூ |
| **த** | |
| தகடு | கசரு |
| தகழி | கருக |
| தங்கல் | கஎக |
| தங்குடிச்சுற்றம் | சகூ |
| தங்கை | சகூ |

| | பக்கம். |
|---|---|
| தச்சன் | ௩௭ |
| தடவல் | ௧௭௫ |
| தடுக்கு | ௧௩௯ |
| தடுத்தல் | ௧௭௩ |
| தட்டார் | ௩௭ |
| தண்டனிடல் | ௧௭௪ |
| தண்டு | ௧௨௭ |
| தண்ணுமை | ௧௩௫ |
| தமிழ்க்கூத்தர் | ௩௯ |
| தம்பதி | ௪௭ |
| தயிர் | ௧௨௩ |
| தயிர்கடைதறி | ௧௩௯ |
| தயிர்கடைதாழி | ௧௪௧ |
| தரா | ௧௧௭ |
| தரித்திரன் | ௪௩ |
| தருமதேவதை | ௯௩ |
| தருமம் | ௧௫௫ |
| தருமன் | ௩௩ |
| தருப்பை | ௯௧ |
| தலை | ௫௫ |
| தலைக்காவல் | ௧௮௩ |
| தலைக்கோலம் | ௧௩௩ |
| தலைத்திராணம் | ௧௨௯ |
| தலைப்பாளை | ௧௩௩ |
| தலையணை | ௧௪௩ |
| தலையோடு | ௫௭ |
| தலைவி | ௪௭ |
| தவத்தோர்பீடம் | ௧௩௯ |
| தவம் | ௧௫௫ |
| தவளை | ௭௯ |
| தவிடு | ௧௪௧ |
| தழை | ௯௧ |
| தளர்ச்சி | ௧௫௯ |
| தளிர் | ௯௧ |
| தளிர்த்தல் | ௯௧ |
| தள்ளல் | ௧௮௧ |
| தறிகை | ௧௨௭ |
| தனது மேம்பாட்டைத்தானெடுத்துரைத்தல் | ௧௮௭ |
| தனிமை | ௧௯௧ |
| தனு | ௨௩ |
| **தா** | |
| தாதிற்றூள் | ௯௧ |
| தாதுமாதுளை | ௮௫ |
| தாமதம் | ௧௯௧ |
| தாமரை | ௯௫ |
| தாமரைக்காய் | ௯௫ |
| தாமரைக் கொட்டை | ௯௫ |
| தாமரைச்சுருள் | ௯௫ |
| தாமரைமலர் | ௯௫ |
| தாழை | ௮௧ |
| தாழ் | ௧௩௭ |
| தாழ்தல் | ௧௭௩ |
| தாழ்வாரம் | ௧௧௧ |
| தாழ்வு | ௧௫௯ |
| தாளம் | ௧௩௩ |
| தாளம்போடல் | ௧௭௯ |
| தாளவொற்று | ௧௭௯ |
| தாளி | ௮௭ |
| தானைத்தலைவன் | ௪௩ |
| தான்றி | ௮௫ |
| **தி** | |
| திக்கு | ௯௯ |
| திசைச்சொல் | ௧௮௭ |
| திண்ணியன் | ௪௩ |
| திண்ணை | ௧௧௧ |
| தித்திப்பு | ௧௫௯ |
| திப்பிலி | ௮௫ |
| திமிங்கிலத்தைவிழுங்குமீன் | ௭௭ |
| திமிலை | ௧௩௫ |
| திரட்சி | ௧௪௫ |
| திரண்டகல் | ௧௦௧ |
| திரண்டோர் | ௩௩ |
| திரள்கோரை | ௯௫ |
| திருடர் | ௪௩ |
| திருநீறு | ௧௨௧ |
| திருமகளாடல் | ௧௭௯ |
| திருமகள் | ௧௫ |
| திருவாதிரை | ௨௩ |
| திருவாரூர் | ௧௦௯ |
| திருவோணம் | ௨௫ |
| திரை | ௪௦௧ |
| திலகம் | ௧௧௯ |
| தினை | ௮௯ |
| தினைத்தாள் | ௮௯ |
| தின்ப | ௧௨௩ |
| **தீ** | |
| தீக்கடைகோல் | ௧௯ |
| தீது | ௧௯௧ |
| தீத்தெய்வத்தின் பாரி | ௧௯ |
| தீத்தெய்வம் | ௧௯ |
| தீப்பொறி | ௧௯ |
| **து** | |
| துகில் | ௧௪௩ |
| துடைப்பம் | ௧௩௯ |
| துணி | ௧௪௫ |
| துணிபட்ட உறுப்பைப்பொருத்து மருந்து | ௯௫ |
| துணைக்காரணம் | ௧௨௩ |
| துண்டம் | ௧௩௯ |
| தும்பை | ௮௯ |
| துரிஞ்சில் | ௮௭ |
| துரியோதனன் | ௩௫ |
| துருஞ்சில் | ௭௫ |
| துரோணாசாரிய | ௩௧ |
| துர்க்கந்தம் | ௧௫௯ |
| துர்க்கை | ௧௭ |
| துர்க்கையாடல் | ௧௭௯ |
| துலாம் | ௨௩ |
| துவட்டல் | ௧௭௫ |
| துவரை | ௮௯ |
| துவரைகடலை முதலியவை | ௮௯ |
| துவளல் | ௧௭௧ |
| துழாவல் | ௧௮௩ |
| துளசி | ௮௧ |

பக்கம்.

துளி ௨௯
துளைத்தல் ௧௭௫
துளையுடைப்பொருள் ௧௪௭
துறத்தல் ௧௫௫
துறுகல் ௧௦௧
துன்பம் ௧௬௩
துன்னர் ௩௯

தூ

தூக்கணங்குருவி ௭௩
தூக்கு ௧௬௫
தூண் ௧௩௭
தூண்டில் ௧௪௧
தூதர் ௪௧
தூபமணி ௧௩௩
தூபமுட்டி ௧௩௩
தூம்புவாய் ௧௧௧
தூய்தாக்கல் ௧௬௯
தூய்மைசெய்தல் ௧௮௧
தூரம் ௧௪௭
தூர்த்தர் ௪௧
தூவல் ௧௭௫
தூற்றுதநெற்பொலி ௮௯

தெ

தெங்கு ௮௩
தெப்பம் ௧௩௭
தெய்வப்பசு ௬௧
தெய்வமெல்லியர் ௧௫
தெய்வம் ௧௭
தெய்வமணிப்பொது ௧௧௭
தெய்வவுத்தி ௧௩௩
தெளிந்தநீர் ௧௦௩
தெளிவு ௧௫௫
தெற்கு ௯௯
தென்றல் ௧௯

தே

தேக்கு ௮௩
தேடல் ௧௭௫

பக்கம்.

தேமல் ௫௩
தேமா ௮௩
தேய்த்தல் ௧௭௧
தேரிற்கட்டுங் கொடி ௧௪௫
தேரினகத்திற்செறி கதிர் ௧௩௭
தேருருள் ௧௩௫
தேர் ௧௩௫
தேர்கொடிஞ்சி ௧௩௭
தேர்நடு ௧௩௭
தேர்ப்பலகைப்பா ௧௩௭
தேர்ப்பாகன் ௩௯
தேர்மரச்சுற்று ௧௩௭
தேர்மொட்டு ௧௩௭
தேவராட்டி ௪௧
தேவர் ௧௭
தேவர்கோயில் ௧௧௧
தேவலோகம் ௯௯
தேவி ௫௧
தேள் ௭௯
தேற்றம் ௧௮௭
தேற்றுமரம் ௮௫
தேனீ ௭௫
தேன் ௧௨௩
தேன்கூடு ௭௯

தை

தைத்தல் ௧௮௧

தொ

தொடுதல் ௧௭௫
தொடை ௫௩
தொழில்செய்வோர் ௪௫

தோ

தோகைமார்தொடாப்பொருட்டு ௧௬௩
தோடு ௧௩௧
தோணுமுகம் ௧௦௭
தோணி ௧௩௭

பக்கம்.

தோண்டுதல் ௧௭௩
தோண்மேல் ௫௩
தோல் ௯௯
தோல்வினைமாக்கள் ௩௯
தோழன் ௪௧
தோழன்முன்னிலை ௪௧
தோழி ௪௧
தோழிமுன்னிலை ௪௧
தோள் ௫௩
தோற்கருவியாள ௪௧
தோற்பலகை ௧௨௯
தோற்பாய் ௧௩௯
தோற்றுன்னர் ௩௯

ந

நகம் ௫௩
நகரவாயில் ௧௦௯
நகரவாயிற்கதவில்விட்டுப்புகும்வழி ௧௦௯
நகரவாயிற்படிச்சுருள் ௧௦௯
நகரவாயிற்றிண்ணை ௧௦௯
நஞ்சு ௧௨௩
நடத்தல் ௧௭௫
நடு ௧௪௫
நடுக்கம் ௧௫௬
நட்பு ௧௫௫
நணுகாராகியுரைமறுத்திருத்தல் ௧௭௯
நத்தை ௭௭
நந்தியாவர்த்தம் ௮௧
நரகரோய் ௧௬௫
நரகம் ௯௯
நரப்புக்கருவியாளர் ௪௧
நரம்பு ௫௭
நரி ௬௫
நரை ௫௭
நல்லாடை ௧௪௩

பக்கம்.

நல்லுணர்வு ௧௫௫
நவமணி ௧௧௭
நறும்புகை ௧௯
நறுவிலி ௮௭
நற்பசு ௯௧
நற்பணித்தூசு ௧௪௩
நன்று ௧௫௫
நன்னிமித்தம் ௧௮௭

நா

நாகணவாய்ப்புள் ௭௩
நாகம் ௭௧
நாகரவண்டு ௭௯
நாகரிகர் ௪௧
நாகலோகம் ௯௯
நாக்கு ௫௫
நாங்கூழ் ௭௯
நாடகக்கணிகை ௪௭
நாடு ௯௯
நாடுசார்ந்தநிலை ௧௦௫
நாணல் ௮௯
நாணி ௧௨௫
நாமகள் ௧௫
நாயுருவி ௮௫
நாய் ௬௫
நாரத்தை ௮௧
நாராசம் ௧௨௭
நாவல் ௮௩
நாவி ௬௫
நாவிதன் ௩௯
நாழி ௧௩௯
நாழிகை ௨௫
நாழிகைவட்டில் ௧௩௩
நாள் ௨௭
நாறுதல் ௧௫௯
நாற்சந்தி ௧௦௯
நான்காம்வேதம் ௧௮௯

நி

நிசாளம் ௧௩௫
நிச்சயம் ௧௫௭
நித்திரை ௧௬௯
நிமித்திகன் ௩௫
நிரம்பாத்தூக்கம் ௧௬௯
நிரம்பாமென்சொல் ௧௮௫
நிர்வாணி ௪௩
நிலங்கு ௭௩
நிலம் ௯௯
நிலவு ௨௭
நிலாமுகி ௭௩
நிலாமுற்றம் ௧௧௧
நிலைநீங்காமை ௧௫௭
நிலைபெறுதல் ௧௫௫
நிலைப்படச்செய்தல் ௧௭௩
நிலையுடைமை ௧௫௫
நிறம் ௧௫௧
நிறுத்தல் ௧௭௩
நிறை ௧௬௫
நிறைந்திடல் ௧௪௯
நிறைபுனல் ௧௦௩
நிறைவேறல் ௧௫௭
நினைத்தல் ௧௫௩

நீ

நீக்கல் ௧௮௧
நீங்கல் ௧௭௭
நீதி ௧௫௫
நீந்துபுனல் ௧௦௩
நீரும்வயலுஞ்சூழ்ந்தவூர் ௧௦௭
நீரோட்டம் ௧௦௫
நீர் ௧௯
நீர்க்கரை ௧௦௧
நீர்க்காக்கை ௭௫
நீர்க்குமிழி ௧௦௩
நீர்க்குளிரி ௯௫
நீர்ச்சால் ௧௪௧
நீர்ச்சுழி ௧௦௩
நீர்நிலை ௧௦௩
நீர்ப்பத்தர் ௧௩௯
நீர்வாழ்பறவை ௭௫
நீலமணி ௧௧௭
நீளம் ௧௪௯
நீள்வழி ௧௧௩

நு

நுணா ௮௫
நுண்மணல் ௧௦௫
நுண்மை ௧௪௭
நுதலணி ௯௭
நுதலணி ௧௩௩
நுரை ௧௦௩
நுளம்பு ௭௫
நுனி ௧௨௯

நூ

நூல் ௧௩௯
நூல் ௧௮௯
நூறு ௧௬௫
நூற்கும்பஞ்சிற்றொடர்நுனி ௧௨௧
நூனாழி ௧௩௯
நூன்முடிபு ௧௮௯

நெ

நெடுந்தெரு ௧௦௯
நெடும்பொழுது ௨௭
நெய் ௧௨௩
நெய்தற்பறை ௧௩௫
நெய்தனிலத்தலைவன் ௪௯
நெய்தனிலத்தூர் ௧௦௭
நெய்தனிலப்பெண் ௪௯
நெய்தனிலமாக்கள் ௪௯
நெய்த்துடுப்பு ௧௩௩
நெய்வார் ௩௯
நெரித்தல் ௧௭௫
நெருங்கல் ௧௪௯
நெருப்பு ௧௯
நெருப்புறுவிற ௧௨௧
நெல் ௮௯
நெல்லி ௮௫

பக்கம்.

நெல்லும்புல்லு நிறைந்தமலையினார் ௧௦௭
நெற்போர் ௮௯
நெற்றி ௫௫
நெற்றிக்குறி ௧௧௯
நென்மணிபலகறைமகிழ்விதையென்பன ௧௨௩

நே

நேரோடல் ௧௭௭

நொ

நொய் ௧௪௧
நொய்மை ௧௪௯

நோ

நோயுற்றொழிந்தோன் ௪௩
நோய் ௧௬௫
நோற்பாள் ௪௭

ப

பகண்டை ௭௩
பகல் ௨௭
பகைவர் ௪௩
பக்கம் ௧௧௫
பங்கீடு ௧௭௫
பசிரி ௮௯
பசு ௬௧
பசுக்கட்டுங்கயிறு ௧௪௧
பசுக்கூட்டம் ௬௧
பசும்புல்லுத்தரை ௧௦௫
பசுவினிறைச்சி ௬௯
பசுவின்கன்று ௬௧
பசுவின்முலை ௬௧
பசுவின்முலைமடி ௬௧
பச்சிலைமரம் ௮௭
பச்சை ௧௫௧
பஞ்சு ௧௨௧
படகம் ௧௩௫
படிக்கம் ௧௩௩
படித்தல் ௧௮௫

பக்கம்.

படை ௫௧
படைத்தலைவன் ௩௫
படையறல் ௫௧
படையுறுப்பு ௫௧
படையுறை ௧௨௧
படைவகுப்பு ௫௧
பட்டம் ௧௩௧
பட்டிகை ௮௧
பட்டு ௧௪௩
பட்டுவர்க்கம் ௧௪௩
பட்டுவிகற்பம் ௧௪௩
பணித்தட்டார் ௩௭
பண்டசாலை ௧௧௧
பண்டாரம் ௧௧௭
பண்டி ௧௩௭
பண்டிதர் ௩௩
பண்டியுள்ளிரும்பு ௧௩௭
பண்ணுங்கூடு ௧௧௩
பண்ணுவார் ௩௯
பண்பு ௧௬௫
பதக்கம் ௧௩௧
பதத்தணி ௧௩௧
பதம் ௧௮௫
பதர் ௮௯
பதிஞருண்டிற்பெண் ௪௭
பதிறுகோவைமணி ௧௩௧
பதினெட்டுக்கோவைமணி ௧௩௧
பதுமராகம் ௧௧௭
பத்து ௧௬௫
பந்து ௧௪௧
பயறு ௮௯
பயனிலாமை ௧௬௩
பயிர் ௮௯
பரணி ௨௩
பரணி ௧௩௩
பரத்தல் ௧௭௧
பரத்தல் ௧௭௫

பக்கம்.

பரந்தவடிவு ௧௪௭
பரப்பு ௧௪௭
பராய்மரம் ௮௫
பரிகள்பூண்டேர்க்குமூர்தி ௧௩௭
பரிசை ௧௨௯
பரிதிகிரணம் ௨௧
பரிதியின்வட்டம் ௨௧
பரிவாரம் ௩௫
பரிவேடம் ௩௯
பருக்கைக்கல் ௧௦௧
பருத்தி ௮௭
பருத்திப்பஞ்சு ௧௨௧
பருந்து ௭௧
பருமை ௧௪௭
பருவம் ௨௭
பலகணி ௧௧௧
பலகறை ௧௧௯
பலகை ௧௨௯
பலதேவன் ௯
பலபண்டம் ௧௧௯
பலபலதீவிற்பண்டம்விற்குமூர் ௧௦௭
பலமிலாமரம் ௯௩
பலரறிசொல் ௧௮௫
பலருந்தூற்றல் ௧௮௫
பலாமரம் ௮௩
பல் ௫௩
பல்கால்விளம்பல் ௧௮௫
பல்பலமுறை ௧௫௭
பல்லி ௭௯
பல்லுக்கும்நகைக்கும்பொதுப்பெ ௫௫
பவளம் ௧௧௭
பழகல் ௧௭௯
பழங்கொல்லை ௧௧௩
பழமை ௧௫௭
பழமொழி ௧௮௭
பழம் ௯௩
பழம்பூ ௯௩

| | பக்கம். | | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|---|---|
| பழித்தல் | கஅரு | பாம்பின்படப்பொறி | எக | பிள்ளைக்கைவளை | கஙக |
| பழிமொழி | கஅரு | பாம்பின்படம் | எக | பிள்ளைப்பன்மை | ருக |
| பளிங்கு | கககூ | பாம்பு | எக | பிறகிடல் | கஎக |
| பள்ளம் | ககங | பாம்புயிர்ப்பு | எக | பிறப்பித்தல் | கசாஎ |
| பறவைக்குஞ்சு | எஎ | பாயிரம் | கஅகூ | பிறப்பு | கசாங |
| பறவைக்கூட்டம் | எஎ | பாரம் | கசகூ | பிறமயிர் | ருரு |
| பறவைநாகம் | எக | பாலைநிலத்தலைவன் | சஎ | பின் | கருஎ |
| பறவைப்பெண் | எரு | பாலைநிலத்தூர் | க0எ | பின்னணி | ருக |
| பறவைமூக்கு | எஎ | பாலைநிலப்பெண் | சஎ | பின்னைநாள் | உஎ |
| பறவையொருசார் விலங்குகளினூ | கஉங | பாலைநிலமாக்கள் | சஎ | பின்னோன் | சகூ |
| பறித்தல் | கஎங | பாலைப்பறை | கஙரு | **பீ** | |
| பற்சீவுங்கோல் | கசக | பாலைமரம் | அஎ | பீர்க்கு | அகூ |
| பற்றிரும்பு | கஉகூ | பால் | கஉக | **பு** | |
| பற்றுக்கோடு | கசகூ | பாவம் | கசாங | புகர்நிறம் | கருக |
| பனி | உகூ | பாவாற்றி | கஙகூ | புகழ் | கஅஎ |
| பனிக்காற்று | ககூ | பாழ்நிலம் | க0ரு | புகை | ககூ |
| பனை | அக | பாற்சொற்றி | அக | புடைவை | கசங |
| பன்றி | சாங | பாற்சோறு | கஉக | புட்சிறகடித்துப்புடைத்தல் | எஎ |
| பன்றிப்பறை | கஙரு | பானம் | கஉங | புட்டில் | கஙகூ |
| பன்னுடை | அங | பானை | கசக | புட்பொது | எரு |
| **பா** | | **பி** | | புதல்வி | ருக |
| பாகல் | அஎ | பிசின் | கஉக | புதன் | உக |
| பாக்கு | அக | பிச்சை | கசாகூ | புதியவர் | சக |
| பாகறை | க0எ | பிடர் | ருங | புதுக்கொல்லை | ககங |
| பாசி | கூரு | பிடித்தல் | கஎங | புதுமை | கருஎ |
| பாஞ்சசன்னியம் | எஎ | பிட்டு | கஉக | புதுவரம்பின்வழி | ககங |
| பாடகம் | கஙக | பிணக்கு | கஅங | புதைத்தல் | கஎரு |
| பாடுவிச்சி | சஎ | பிணம் | ருங | புத்தர் | ஙக |
| பாடை | கசக | பிணம்வீழ்களம் | ககங | புத்தன் | கக |
| பாட்டன் | சகூ | பிண்டிபாலம் | கஉஎ | புருடன் | சரு |
| பாட்டு | ககக | பிண்ணாக்கு | கஉக | புருவம் | ருரு |
| பாணர் | ஙகூ | பித்தளை | ககஎ | புலத்தல் | கஎக |
| பாண்டியன் | ஙரு | பித்திகை | அக | புலவிநீட்டம் | கஎக |
| பாதகிங்கிணி | கஙக | பிரப்பம்பாய் | கஙகூ | புலால் | சாகூ |
| பாதி | கசகூ | பிரமசாரி | ஙக | புலி | ருகூ |
| பாதிரிமரம் | அக | பிரமன் | கூ | புலிதொடக்கி | அஎ |
| பாதுகாத்தல் | கஎரு | பிரம்பின்வட்டம் | கஉகூ | புல்லறிவு | கருகூ |
| பாந்தல் | கஎக | பிரம்பு | அரு | புல்வாய் | சாங |
| பாம்பினச்சுப்பல் | எக | | | புழு | எகூ |

பக்கம்.

புழுதி ௧௨௧
புளிங்கறி ௧௨௧
புளிஞர்பொது ௪௭
புளிப்பு ௧௫௯
புளிமா ௮௩
புளியமரம் ௮௩
புள்ளீட்டத்தினோசை ௭௭
புறங்கூறல் ௧௮௫
புறவிதழ் ௯௩
புழுப்பொது ௭௩
புற்பாய் ௧௩௯
புற்று ௧௧௩
புனமுருக்கு ௮௫
புனர்பூசம் ௨௩
புன்கமரம் ௮௩
புன்னைமரம் ௮௧

பூ

பூ ௯௧
பூங்கொத்து ௯௧
பூசம் ௨௩
பூசுதல் ௧௧௯
பூசை ௧௬௯
பூஞை ௬௫
பூணுநூல் ௧௩௩
பூண் ௧௩௩
பூண்கொள்கல ௧௩௩
பூதம் ௧௭
பூந்தட்டு ௧௩௯
பூந்தாது ௯௧
பூந்தேன் ௯௧
பூப்பெட்டி ௧௩௯
பூமி ௯௯
பூரட்டாதி ௨௫
பூரணை ௨௭
பூரம் ௨௩
பூராடம் ௨௫
பூவாதுகாய்க்குமரம் ௯௩
பூவிதழ் ௯௩

பக்கம்.

பெ

பெட்டி ௧௩௩
பெண் ௪௫
பெண்கள்கூட்டம் ௩௩
பெண்குறி ௫௩
பெண்ணூமை ௭௭
பெண்ணாய் ௯௫
பெண்ணைச் சிறப்பிக்கும்பெயர் ௪௫
பெண்மயிர் ௫௫
பெண்வண்டு ௭௫
பெருங்காடு ௯௩
பெருங்காயம் ௧௧௯
பெருங்குறடு ௧௩௭
பெருங்கொடி ௧௪௩
பெருங்கோபம் ௧௬௧
பெருச்சாளி ௬௫
பெருஞ்சவளம் ௧௨௭
பெருநாரை ௭௫
பெருந்துருத்தி ௧௪௧
பெருந்தூறு ௯௩
பெருமணி ௧௩௩
பெருமழை ௨௯
பெருமீன் ௭௭
பெருமை ௧௪௭
பெருமையிற்சிறந்தோன் ௩௩
பெரும்பாம்பு ௭௧
பெரும்பீர்க்கு ௮௯

பே

பேய் ௧௭
பேரருவி ௧௦௩
பேரழகு ௧௫௧
பேரறிவு ௧௫௭
பேராலவட்ட ௧௩௫
பேரிகை ௧௩௫
பேரின்பம் ௧௫௫
பேரீந்து ௮௫
பேருண்டி ௧௨௧
பேரெருது ௬௧

பக்கம்.

பேர் ௧௫௭
பேழை ௧௩௩

பை

பைந்திணை ௮௯

பொ

பொதிசோறு ௧௨௧
பொதிதல் ௧௭௫
பொதியமலை ௧௦௧
பொதியெருது ௬௩
பொய் ௧௮௫
பொய்யாப்புள் ௭௩
பொரவழைத்தல் ௧௮௭
பொரியல் ௧௨௧
பொருளகம் ௧௧௩
பொருநை ௧௦௩
பொருந்தல் ௧௫௭
பொருளிணையுருக்குந்தட்டார் ௩௭
பொருளின்மை ௧௮௭
பொலிவு ௧௫௭
பொழுதுபோக்கல் ௧௬௭
பொறை ௧௫௫
பொற்காசு ௧௧௭
பொன் ௧௧௫
பொன்மலை ௧௦௧
பொன்மை ௧௫௧

போ

போர் ௧௭௭
போர்வை ௧௪௩

ம

மகம் ௨௩
மகரமீன் ௭௭
மகரம் ௨௩
மகரவாழை ௮௧
மகளிராடுங்களம் ௧௪௧
மகளிர்விளையாட்டு ௧௬௭
மகன் ௫௧

| | பக்கம். |
|---|---|
| மகிழமரம் | ௮௧ |
| மக்கட்பரப்பு | ௫௧ |
| மஞ்சள் | ௯௧ |
| மஞ்சனம் | ௧௭௧ |
| மஞ்சாடி | ௮௧ |
| மடைப்பள்ளி | ௧௧௧ |
| மடையர் | ௩௯ |
| மட்கலஞ்சுடுசூளை | ௧௧௩ |
| மட்டத்துருத்தி | ௧௪௧ |
| மணம் | ௧௫௯ |
| மணற்குன்று | ௧௦௩ |
| மணிக்கட்டு | ௫௩ |
| மணிப்பொது | ௧௧௭ |
| மணிவடம் | ௧௩௩ |
| மண்டலமாவோடல் | ௧௭௭ |
| மண்டலிப்பாம்பு | ௭௧ |
| மதகயம் | ௫௯ |
| மதிதெரிகலையிரா | ௨௭ |
| மதிமறைகலையி | ௨௭ |
| மதிலுள்ளுயர்ந்தமேடை | ௧௦௯ |
| மதிலுறுப்பு | ௧௦௯ |
| மதில் | ௧௦௯ |
| மதுரை | ௧௦௭ |
| மத்தியானம் | ௨௭ |
| மத்து | ௧௩௯ |
| மந்தம் | ௧௭௭ |
| மயக்கம் | ௧௯௧ |
| மயிர்க்குழற்சி | ௫௫ |
| மயிர்ச்சாந்து | ௧௧௯ |
| மயிர்த்தொகுதிகதிர்த்தொகுதி | ௧௪௭ |
| மயிர்ப்படாம் | ௧௪௩ |
| மயிர்முடி | ௫௫ |
| மயிலிறகின்முள் | ௭௧ |
| மயிலுமெழாலுமல்லனவாகிய புள்ளினுண் | ௭௫ |
| மயிலெழாலென்னுமிரண்டினுண் | ௭௫ |
| மயில் | ௭௧ |
| மயிற்குரல் | ௭௧ |
| மயிற்பீலி | ௭௧ |
| மரகதம் | ௧௧௭ |
| மரக்கலப்பாய் | ௧௩௭ |
| மரக்கலம் | ௧௩௭ |
| மரக்கன்று | ௯௧ |
| மரக்கால் | ௧௩௯ |
| மரக்கொம்பு | ௯௧ |
| மரச்செறிவு | ௯௩ |
| மரப்பொது | ௯௧ |
| மரப்பொந்து | ௯௩ |
| மரவயிரம் | ௯௧ |
| மரவுரி | ௧௪௫ |
| மருக்கொழுந்து | ௮௧ |
| மருங்கின்பக்கம் | ௫௩ |
| மருதநிலத்தலைவன் | ௬௯ |
| மருதநிலத்தூர் | ௧௦௭ |
| மருதநிலப்பெண் | ௬௯ |
| மருதநிலமாக்கள் | ௬௯ |
| மருதநிலம் | ௧௦௫ |
| மருதநிலவரம்பு | ௧௦௫ |
| மருதப்பறை | ௧௩௫ |
| மருதமரம் | ௮௫ |
| மருத்துவர் | ௩௭ |
| மருந்தின்பொது | ௯௭ |
| மருந்தென்பன | ௯௫ |
| மலங்கு | ௭௭ |
| மலடி | ௬௭ |
| மலட்டுப்பசு | ௬௧ |
| மலட்டெருமை | ௬௩ |
| மலர்தல் | ௯௩ |
| மலை | ௯௯ |
| மலைசார்ந்தநிலம் | ௧௦௫ |
| மலைசெறிந்தவூர் | ௧௦௭ |
| மலைச்சாரலாறு | ௧௦௩ |
| மலைநெல் | ௮௯ |
| மலைப்பக்கம் | ௧௦௧ |
| மலைப்பச்சை | ௮௭ |
| மலைமுழை | ௧௦௧ |
| மலையினுச்சி | ௧௦௧ |
| மலையும்யாறுஞ்சூழ்ந்தவூர் | ௧௦௭ |
| மல்லிகை | ௮௧ |
| மழுங்கல் | ௧௫௧ |
| மழுப்படை | ௧௨௫ |
| மழை | ௨௯ |
| மழைவண்ணக்குறிஞ்சி | ௮௫ |
| மறத்தல் | ௧௫௯ |
| மறைத்தசொல் | ௧௮௫ |
| மறைபுகல் | ௧௮௩ |
| மறைப்பு | ௧௮௧ |
| மறையவர் | ௩௧ |
| மனக்கோட்ட | ௧௬௩ |
| மனம் | ௧௫௩ |
| மனிதர் | ௫௧ |
| மனிதர்துயிலிடம் | ௧௧௩ |
| மன்னன்றேவியில்லம் | ௧௧௧ |


**மா**


| | பக்கம். |
|---|---|
| மா | ௧௨௧ |
| மாசு | ௬௯ |
| மாசு | ௧௫௧ |
| மாடப்புறா | ௭௩ |
| மாட்சிமை | ௧௫௩ |
| மாட்டார் | ௬௩ |
| மாணாக்கன் | ௩௩ |
| மாணிக்கம் | ௧௧௭ |
| மாதம் | ௨௭ |
| மாதர்கொய்சக | ௧௪௩ |
| மாதுளை | ௮௫ |
| மாமரம் | ௮௩ |
| மாமன் | ௬௯ |
| மார்ச்சனை | ௧௩௫ |
| மார்பு | ௫௩ |
| மாலை | ௨௭ |
| மாலை | ௯௭ |
| மால்சமயத்தோர் | ௩௧ |

| | பக்கம். |
|---|---|
| மால்வில் | ௧௨௫ |
| மாறுபாடு | ௧௮௧ |
| மாற்றல் | ௧௭௩ |
| மான் | ௬௩ |
| **மி** | |
| மிகுதி | ௧௪௭ |
| மிகுபுகழாளன் | ௪௩ |
| மிகுபுகழ் | ௧௮௭ |
| மிகுபொருள் | ௧௨௧ |
| மிகுமணம் | ௧௫௯ |
| மிக்கசெயல் | ௧௮௧ |
| மிசை | ௧௭௩ |
| மிடறு | ௫௫ |
| மிடா | ௧௪௧ |
| மிடைதல் | ௧௪௯ |
| மிதியடி | ௧௪௧ |
| மிதியடியின்கொட்டை | ௧௪௧ |
| மிதிலை | ௧௦௯ |
| மிதுனம் | ௨௩ |
| மிருகசீரிடம் | ௨௩ |
| மிளகு | ௮௯ |
| மின் | ௨௯ |
| மின்மினி | ௭௫ |
| **மீ** | |
| மீகாமன் | ௩௯ |
| மீதூரல் | ௧௬௯ |
| மீனம் | ௨௩ |
| மீன்பொது | ௭௭ |
| **மு** | |
| முகடு | ௧௧௫ |
| முகத்தல் | ௧௭௫ |
| முகமன் | ௧௮௭ |
| முகம் | ௫௩ |
| முசு | ௬௫ |
| முச்சந்தி | ௧௦௯ |
| முடக்கியவிருகைபழுப்புடையொற்றியாடல் | ௧௭௯ |
| முடம் | ௪௧ |
| முடி | ௧௩௧ |
| முடிமாலை | ௧௩௧ |
| முடை | ௬௯ |
| முடைதல் | ௧௭௩ |
| முட்டை | ௭௭ |
| முட்பன்றி | ௬௩ |
| முட்பன்றிமுள் | ௬௩ |
| முண்டிதமாக்க | ௧௭௩ |
| முண்முருக்கு | ௮௩ |
| முதலை | ௭௭ |
| முதிர்காடு | ௯௫ |
| முதுகு | ௫௩ |
| முத்தங்கோப்பர் | ௩௬ |
| முத்து | ௧௧௭ |
| முத்துச்சிவிகை | ௧௩௭ |
| முந்திரிகை | ௮௫ |
| முப்பத்திரண்டுகோவைமணி | ௧௩௧ |
| முயல் | ௬௫ |
| முருங்கை | ௮௯ |
| முலை | ௫௩ |
| முலைக்கண் | ௫௩ |
| முலைமடி | ௬௧ |
| முல்லை | ௮௫ |
| முல்லைக்கான்யாறு | ௧௦௩ |
| முல்லைக்குங் குறிஞ்சிக்கும்பொது | ௧௦௫ |
| முல்லைநிலத் தலைவன் | ௪௯ |
| முல்லைநிலத்தூர் | ௧௦௭ |
| முல்லைநிலப்பெ | ௪௯ |
| முல்லைநிலமாக்க | ௪௭ |
| முல்லைப்பறை | ௧௩௫ |
| முழங்கை | ௫௩ |
| முழந்தாள் | ௫௩ |
| முழவு | ௧௩௫ |
| முழுவது | ௧௪௯ |
| முளை | ௯௧ |
| முளைத்தல் | ௧௮௧ |
| முள் | ௯௩ |
| முள்ளி | ௯௫ |
| முள்ளுடைமூலமெல்லாம் | ௯௫ |
| முறம் | ௧௩௯ |
| முறிதல் | ௧௭௧ |
| முறித்தல் | ௧௭௧ |
| முறைமை | ௧௫௭ |
| முற்றம் | ௧௧௧ |
| முனிவர் | ௩௧ |
| முனிவர்வாசம் | ௧௧௧ |
| முன்கோபம் | ௧௬௧ |
| முன்பிறந்தாள் | ௪௯ |
| முன்றானை | ௧௪௩ |
| முன்னர் | ௧௧௫ |
| முன்னிலையசைச்சொல் | ௧௮௭ |
| முன்னைநாள் | ௨௭ |
| **மூ** | |
| மூக்கு | ௫௫ |
| மூங்கில் | ௮௩ |
| மூச்சு | ௧௮௩ |
| மூஞ்சூறு | ௬௫ |
| மூடுதல் | ௧௭௯ |
| மூட்டல் | ௧௭௩ |
| மூதுணர்ந்தோர் | ௪௧ |
| மூதுரை | ௧௮௭ |
| மூதேவி | ௧௫ |
| மூத்தாள் | ௪௭ |
| மூத்தோன் | ௩௩ |
| மூத்தோன் | ௪௯ |
| மூப்பு | ௧௫௧ |
| மூர்ச்சைதீர்த்துக்குற்றுயிர்தருமருந்து | ௯௭ |
| மூலம் | ௨௫ |
| மூன்றும்வேத | ௧௮௯ |
| **மெ** | |
| மெச்சல் | ௧௬௭ |
| மெத்தை | ௧௪௩ |
| மெய் | ௧௮௫ |
| மெய்காப்பாளர் | ௩௯ |
| மெய்கோட்டிக்கைகுவித்தல் | ௧௭௫ |

பக்கம்.

மெய்ப்பூச்சு ௧௧௯
மென்மை ௧௪௯

மே

மேகம் ௨௯
மேடம் ௨௩
மேடு ௧௦௧
மேம்பாடு ௧௮௭
மேலுதடு ௫௩
மேல் ௨௯
மேல்காற்று ௧௯
மேல்வாய்ப்புற ௫௫
மேவினர் ௪௩
மேற்கட்டி ௧௪௩
மேற்கு ௯௯
மேற்கோள் ௧௮௧
மேன்மை ௧௯௧

மொ

மொக்குள் ௧௪௭
மொட்டம்பு ௧௨௫

மோ

மோக்கம் ௯௭
மோதிரம் ௧௩௩
மோர் ௧௨௩
மோவாய் ௫௫

மௌ

மௌனம் ௧௮௧

ய

யமன் ௧௩

யா

யாகம் ௧௬௯
யாறு ௧௦௩
யாற்றிடைக்குறை ௧௦௩
யானை ௫௯
யானைக்கடைக்கண் ௬௧
யானைக்கவுள் ௬௧
யானைக்கழுத்திடு கயிறு ௧௨௯
யானைக்கன்று ௬௧
யானைக்கூட்டம் ௧௧௧

பக்கம்.

யானைக் கூட்டத்துத் தலையானை ௫௯
யானைக்கைந்நுதி ௬௧
யானைக்கொம்பின ௬௧
யானைசெல்லும் வழி ௧௧௩
யானைச்செவியடி ௬௧
யானைத்தந்தம் ௬௧
யானைத்திரள் ௬௧
யானைத்துதிக்கை யுமிழ்நீர் ௬௧
யானைதுயிலிடம் ௧௧௩
யானைத்தூண் ௧௩௭
யானைத்தோட் ௧௩௭
யானைநோய் ௬௧
யானைபடுகுழி ௬௧
யானைப்பல்லடி ௬௧
யானைப்பாகர் ௩௯
யானைப்பிடி ௬௧
யானைப்பின்கால் ௬௧
யானைப்புரசை ௧௨௯
யானைமதம் ௬௧
யானைமதம்பாய்சுவடு ௬௯
யானைமத்தகம் ௫௯
யானை மீனைவிழுங்கு மீன் ௭௭
யானைமுகபடா ௧௨௯
யானைமுதுகு ௫௯
யானைமுன்கால் ௬௧
யானைமேற்றவிசு ௧௨௯
யானையாளி ௫௯
யானைவால் ௫௯
யானைவாலுதி ௫௯

யோ

யோசனைதூரம் ௧௧௫

வ

வகிர் ௧௩௯
வகிர்தல் ௧௭௩
வசமாக்கல் ௧௭௩

பக்கம்.

வச்சிராயுதம் ௧௨௭
வஞ்சகன் ௪௧
வஞ்சம் ௧௬௧
வடக்கு ௯௯
வடிவு ௫௩
வடிவு ௧௫௧
வடுப்படல் ௧௬௯
வட்டம் ௧௬௫
வட்டில் ௧௩௩
வண்டு ௭௫
வண்ணம் ௧௫௧
வண்ணார் ௩௯
வயிறு ௫௩
வரகு ௯௧
வரம்பருகு ௧௦௫
வரம்பு ௧௦௫
வரிசை ௧௨௩
வருடம் ௨௬
வருணன் ௧௯
வருத்தந்தீர்தல் ௧௬௯
வருத்தம் ௧௬௧
வருபிறப்பு ௧௫௭
வருவாய் ௧௫௭
வரையறுத்தல் ௧௫௩
வரையாடு ௬௩
வரையாதுகொடுத்தல் ௧௬௯
வரைவறக் கொடுத்தளிப்போன் ௪௩
வலம்புரிச்சங்கு ௭௭
வலி ௧௫௧
வலியழித்தல் ௧௭௭
வலியன் ௭௩
வலை ௧௩௯
வலைக்கயிறு ௧௩௯
வல்லோன் ௪௩
வழி ௧௧௩
வழிச்செல்வோன் ௪௧
வழிப்படுத்தல் ௧௭௭
வழிப்பறித்தல் ௧௭௩
வழு ௧௬௯

பக்கம்

வழுதலை ௮௭
வழும்பு ௬௯
வளப்பம் ௧௫௩
வளர்த்ததாதி ௪௯
வளைத்தல் ௧௭௩
வளைவு ௧௪௭
வள்ளை ௮௭
வறட்சுண்டி ௮௭
வறுமை ௧௬௧
வறுமைசெய்தல் ௧௮௩
வறையல் ௧௨௧
வற்புறுத்தல் ௧௮௧
வனஞ்சார்ந்தநிலம் ௧௦௫
வனமல்லிகை ௮௧
வன்னி ௮௫

வா

வாகுவலயம் ௧௩௧
வாகைமரம் ௮௫
வாசகம் ௧௮௫
வாசிகை ௯௭
வாச்சியப்பொது ௧௩௫
வாடாக்குறிஞ்சி ௮௫
வாடை ௧௯
வாட்கோரை ௯௫
வாயில் ௧௧௧
வாயில்காப்போ ௪௫
வாய்கையாற் கொட்டல் ௧௭௯
வாருதல் ௧௭௫
வாவல் ௭௫
வாழை ௮௩
வாழ்த்தல் ௧௮௫
வாழ்த்து ௧௮௫
வாழ்நாள் ௨௯
வாள் ௧௨௭
வானம்பாடி ௭௩
வானவில் ௨௯

பக்கம்.

வி

விசாகம் ௨௫
விசி ௧௩௭
விஞ்சையரூர் ௯௯
விஞ்சையர் ௧௭
விடல் ௧௮௩
விடாதுபேசல் ௧௮௫
விடநமழை ௨௯
விடுதல் ௧௬௯
விடுத்தல் ௧௭௩
விடுந்தலைப்பு ௧௪௩
விட்டிற்பறவை ௭௫
விட்டேறு ௧௨௭
விண்ணேருண் ௧௨௧
விண்மீன் ௨௫
விண்வீழ்கொள் ௧௯
விதை ௯௩
விநாயகன் ௧௧
வியாழன் ௨௧
விரணந்தீர்க்குமருந்து ௯௫
விரல் ௫௩
விரித்தல் ௧௭௫
விரிவு ௧௪௭
விரிமலர் ௯௩
விருச்சிகம் ௨௩
விரைவு ௧௭௭
விரைவுக்குறிப் ௧௭௭
விலங்கிணுண் ௬௫
விலங்கின் கூட்ட ௬௯
விலங்கின்கொம் ௬௧
விலங்கின்பிள்ளை ௬௭
விலங்கின்பெண் ௬௭
விலங்கின்பொது ௬௯
விலங்கின்வால் ௬௯
விலங்கின்வாற்கீழிடம் ௬௯
விலங்கு ௧௨௯
விலங்குதுயிலிடம் ௧௧௩
வில் ௧௨௫

பக்கம்.

வில்வமரம் ௮௫
வியாகம் ௧௬௭
விழுங்கல் ௧௬௭
விளக்கு ௧௯
விளக்குத்தண்டு ௧௩௯
விளா ௮௫
விளைநிலம் ௧௦௫
விறகு ௯௩
விற்குதை ௧௨௭
விற்றல் ௧௮௩
வினவல் ௧௮௭
வினவும்விடையுங் கூடியபொருள் ௧௮௭

வீ

வீசுதல் ௧௭௩
வீடு ௧௧௧
வீட்டிறப்பு ௧௧௧
வீட்டுமன் ௩௩
வீதி ௧௦௯
வீதியிற்கட்டியகொடி ௧௪௩
வீமன் ௩௫
வீரபத்திரன் ௧௧
வீரம் ௧௫௩
வீற்றிருத்தல் ௧௫௩

வெ

வெகுவிதம் ௧௫௭
வெட்கம் ௧௫௫
வெட்சி ௮௧
வெட்டல் ௧௭௩
வெட்பாலை ௮௩
வெண்கடுகு ௮௫
வெண்கலம் ௧௧௭
வெண்காந்தள் ௮௫
வெண்குடை ௧௩௫
வெண்ணெய் ௧௨௩
வெண்ணெய்தல் ௯௫
வெண்ணொச்சி ௮௫
வெண்பா ௧௯௧
வெண்மணல் ௧௦௫
வெண்மை ௧௪௧

| | பக்கம். |
|---|---|
| வெய்யில் | உள |
| வெள்ளம் | க0ங |
| வெள்ளரி | அள |
| வெள்ளாடு | சுங |
| வெள்ளாட்டா | சுங |
| வெள்ளாட்டுக்குட்டி | சுங |
| வெள்ளாம்பல் | கூரு |
| வெள்ளி | உக |
| வெள்ளி | ககள |
| வெள்ளிமலை | க0க |
| வெள்ளைநாரை | எரு |
| வெறியாட்டாளன் | சக |
| வெறியாட்டு | களகூ |
| வெற்றிலைக்கொடி | அகூ |
| வெற்றி | கருங |
| **வே** | |
| வேகி | சக |
| வேங்கைமரம் | அரு |
| வேசை | சள |
| வேடர்வீதி | க0கூ |
| வேட்கைப்பெருக்கம் | ககூங |
| வேட்டை | களரு |
| வேதகாரர் | ஙகூ |
| வேதத்தின் ஞானபாகை | கஅகூ |
| வேதத்துட்பொருள் | கஅகூ |
| வேதநூற்பொருள் | கஅகூ |
| வேதமார்க்கம் | கஅகூ |
| வேதம் | கஅகூ |
| வேதனைசெய்வோன் | சக |
| வேதனைபண்ணுநோய் | ககூரு |
| வேம்பு | அங |
| வேயரிசி | அக |
| வேயாமாடம் | ககக |
| வேயுள் | ககக |
| வேர் | கூக |
| வேர்வு | ககூகூ |
| வேலாயுதம் | கஉள |
| வேலி | கூரு |
| வேல்தைத்தபுண்மாற்றுமருந்து | கூரு |
| வேறுபாடு | ககூக |
| வேள்வித்தூண் | கஙள |
| வேற்றுமையுருபு | கஅகூ |
| வேற்றோர்க்குப்பெற்றபிள்ளை | சரு |
| **வை** | |
| வைகறை | உள |
| வைக்கோல் | அகூ |
| வைசியர் | ஙள |
| வைடூரியம் | ககள |
| வைரச்சங்கிலி | கஙங |
| வைரமணி | ககள |
| வைரம் | ககூக |
| வைரவன் | கங |


முற்றிற்று.

உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு

முதலிரண்டுதொகுதிகளின்

## பதப்பொருள்விளக்கம்.

இது

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்

அ. குமாரசுவாமிப்புலவரால்

இயற்றி,

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

இராக்ஷச ஹு புரட்டாதி மீ.

(*Copyright Registered.*)

# முதலாவது
# தெய்வப்பெயர்த்தொகுதி.

## அருகன்பெயர்.

க. அருகன் - பூசிக்கத்தக்கவன், மதிக்கத்தக்கவன். அநகன் - பாவமில்லாதவன், துக்கமில்லாதவன், கலக்கமில்லாதவன். (அந்-இன்மை. அகம் - பாவம், துக்கம், கலக்கம்.) * எண்குணன் - எட்டுக்குணங்களுடையவன். நிச்சிந்தன் - சிந்தித்தற்கரியவன். அறவாழிவேந்தன் - அறச்சக்கரத்தலைவன். வாமன் - வணங்கப்படத்தக்கவன். சினன் - வினைகளைவென்றவன், பூசிக்கத்தக்கவன். வரன் - சிறந்தவன், தலைவன். உறுவன் - யாவரினுமிக்கவன். சாந்தன் - பொறுமையுடையவன், மகிழ்ச்சியுடையவன். சினேந்திரன் - † எண்வகைக் கன்மங்களையும் வென்றவன். முனைவன் - முதல்வன். மாசேனன் - பெரியசேனையுடையவன். தேவன் - பிரகாசமுடையவன், மகிழ்ச்சியுடையவன். மூவுலகுணர்ந்தமூர்த்தி - மூன்றுலகங்களாலு மறியப்பட்ட கடவுள். புனிதன் - சுத்தமுடையவன், புதியவன். வென்றோன் - வினைகளை வென்றவன். விராகன் - இச்சையில்லாதவன். பூமிசைநடந்தோன் - தாமரைப்பூவை வாகனமாகக் கொண்டுசென்றவன். போதன் - அறிவுடையவன்.

உ. பண்ணவன் - தகுதியுடையவன். கமலவூர்தி - தாமரைப்பூவாகிய வாகனமுடையவன். பரமேட்டி - மேலானவிடத்தில் இருப்பவன். காதிவென்றோன் - ‡ உபாதிகளைவென்றவன். புண்ணியன் - நற்செயலுடையவன். புலவன் - எல்லார்க்குமறிவாயுள்ளவன். புத்தன் - அறிவுடையவன். பூரணன் - நிறைவுடையோன். பொன்னெயிற்கோன் - (உதயதரம் பிரீதிதரம் கல்யாணதரம் என்னும்) பொன்மதில்களுக்குத் தலைவன். விண்ணவன் - சுவர்க்கவாசி. விமலன் - மலமில்லாதவன். வீரன்-முடிவில்லாத வீரியமுடையவன். விநாயகன் - உயிர்களுக்கு உறுதிபோதிப்பவன். வீதசோகன் - சோகமில்லாதவன். அண்ணல் - பெருமையுடையவன். மத

---

* எண்குணங்களாவன: முடிவிலாவறிவு, முடிவிலாக்காட்சி, முடிவிலாவீரியம், முடிவிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழிவின்மை என்பன.

† எண்வகைக் கன்மங்களாவன: ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்பன.

‡ உபாதிகள் ஞானாவரணீயம் முதலியன.

னைவென்றோன் - மன்மதனை வென்றவன். அருட்கொடிவேந்தன் - அருளாகிய கொடியையுடைய தலைவன். ஆசான் - குருமூர்த்தி.

௩. முத்தன் - காமாதிகளால் விடப்பட்டவன், பாசங்களால் விடப்பட்டவன். மாமுனி - விருப்பு வெறுப்பு முதலியன நீங்கினவர்களுள்ளே மிக்கவன். கருத்தன் - உலகத்தைப் படைத்தவன். முக்குடைச்செல்வன் - மூன்று குடைகளாகிய சிறப்புடையவன். முன்னோன் - எவர்க்கும் முன்னுள்ளவன். சித்தன் - செயற்பாலன வற்றைச் செய்து முடித்தவன், எண்வகைச்சித்திகளையுமுண்டாக்கினவன். எண்சிறப்புமுள்ளோன் - * எட்டாகிய சிறப்புக்களுடையவன். திகம்பரன் - திக்கினைவஸ்திரமாகவுடையவன், வஸ்திரமில்லாதவன். கொல்லாவேதன் - கொல்லாமை போதிக்கும் வேதமுடையவன். நித்தன் — பிறப்பிறப்பற்றவன். நின்மலன் - மலமில்லாதவன். நின்னாமன் - நாமமின்மையுடையவன். நிராயுதன்-ஆயுதம் பிடியாதவன். நேமிநாதன்-அருளாழிக்குத்தலைவன். அத்தன் - அகிலகாரணமானவன், மெய்ப்பொருளாயுள்ளவன். ஆனந்தன் - இன்பமுடையவன். சோதி - ஒளியாகி நிற்பவன். அரியணைச்செல்வன்-சிங்காசனமாகிய சிறப்புடையவன். ஆதி-பிரபஞ்சகாரணன்.

௪. ஆத்தன் - சத்தியமுடையவன், தக்கவன். குற்றங்களில்லான் - (பசிமுதலிய) குற்றங்களில்லாதவன். அசோகமர்கடவுள் - அசோகமரநீழலிலிருக்கும் கடவுள். ஆதன் - முதன்மையுடையவன். சாத்தன் - துட்டர்களைத் தண்டிப்போன். வேதாந்தன் - வேதத்தின் முடிந்தபொருளாயுள்ளவன். நாதன் - தலைவன். சமி - அந்தக்கரணங்களையடக்கினவன், (விருப்பு வெறுப்பிற்) சமமுடையோன். அநாமயன்—நோயில்லாதவன். சுயம்பு - தானேதோன்றினவன். நீத்தவன் - பற்றினை நீக்கினவன். பிதா - உயிர்கட்குத் தந்தை. விதாதா—சிருட்டிப்பவன். நிரம்பரன் - வஸ்திரமில்லாதவன். அனந்தஞானி - முடிவில்லாத ஞானமுடையவன். நீர்த்தன் - நியமிப்பவன், மேன்மையுடையவன். மால்-பெருமையுடையவன். பகவன் - திரிகாலஞானமுடையவன். சாமி - எல்லாமுடையவன். சீபதி - திருவுக்கு நாயகன். சீமான் - † ஸ்ரீயையுடையவன். செய்யோன் - நேர்மையுடையவன்.

---

* எட்டுச்சிறப்புக்களுமிவை என்பதைச் "சுடர்மண்டலஞ்சுர துந்துபி தெய்வத்துவனி சிங்கப்—பிடர்மண்டல வணைபிண்டிவெண்சா மரைபெய்ம் மலரி—னடர்மண்டல மழையம்பொற் குடைமும்மை யாமடியோ—மிடர்மண்டலங் கெடுப்பாற்கிமை யோர்செயுமெண் சிறப்பே" என்னுந் திருநூற்றந்தாதியானுணர்க.

† ஸ்ரீ - அலங்காரம், செல்வம், ஒளி, புத்தி.

ரு. நிருமலன் - மலமில்லாதவன். வரதன் - வரங்கொடுப்பவன். சாது - நேர்மையுடையவன், காரியங்களைச் செய்துமுடிப்போன், நல்லொழுக்கமுடையவன். நிரஞ்சனன் - குற்றமில்லாதவன். விறலோன் - வலிமையுடையவன். யோகி - யோகமுடையவன். தருமராசன் - தருமங்களுக்குத் தலைவன். யுகாதி - யுகமுதல்வன். சதுர்முகன் - நான்குமுகங்களுடையவன். சாதரூபி - சித்திரமானரூபமுடையவன். திருமறுமார்பன் - திரு என்னும் மறுவமைந்த மார்புடையவன். சிவகதிக்கிறை - வீட்டுலகுக்கு நாயகன்.

## சிவன்பெயர்.

சு. சிவன் - சுகத்தோடு கூடினவன், விகாரமில்லாதவன், நல்லோருடைய மனந் தன்னிடத்திலே கிடக்கப்படுபவன், நல்லோர் மனத்திற் கிடப்பவன், நன்மையுடையவன், நன்மைகொடுப்பவன், ஒளியுடையவன், முத்திகொடுப்பவன். சங்கரன்-சுகஞ்செய்பவன். இறையோன் - எங்குந் தங்குதலுடையவன். சம்பு - சுகஞ்செய்பவன். சதாசிவன் - எப்பொழுதும் நன்மைசெய்பவன். பேயொடாடி - பேயோடு ஆடுபவன். அரவணிந்தமூர்த்தி - பாம்பணிந்த வடிவமுடையவன். புராந்தகன் - முப்புரங்களையழித்தவன். பூதநாதன் - பூதகணங்களுக்குத் தலைவன், உயிர்களுக்குத் தலைவன். கங்கைவேணியன் - கங்கைதரித்த சடையுடையவன். கங்காளன்-முழுவெலும்பு தரித்தவன். கடுக்கையங்கண்ணிசூடி - கொன்றை மாலையணிந்தவன். மங்கையோர்பாகன்—தேவியை ஒருபாகத்திலுடையவன். முன்னோன் - எல்லார்க்கும் முன்னானவன். மகேச்சுரன் - மேலாகிய ஐசுவரியமுடையவன், ஈசுவரருள்ளே மிக்கோன். வாமதேவன் - மேலானதேவன், இடப்பக்கத்திற் றேவியையுடையவன்.

எ. நீலகண்டன் - கரிய கழுத்துடையவன். மாதேவன் - மேலான தேவன், பெரிய ஒளிமயமானவன். நிருமலன் - மலமில்லாதவன். குன்றவில்லி - மலையாகிய வில்லையுடையவன். சூலபாணியன் - சூலந்தரித்த கையுடையவன். ஈசானன் - மகாசாமர்த்தியமுடையவன். பசுபதி - ஆன்மாக்களைக் காப்பவன். சுடலையாடி - சுடலையிலாடுதலுடையவன். காலகாலன் - யமனுக்கும் முடிவுசெய்தவன். கபாலி - தலையோட்டினைத்தரித்தவன். உருத்திரன்-பகைவரையழுவிப்போன், துக்கத்தினை நீக்குவோன், தீங்கினை நீக்குவோன், சமுசாரபந்தத்தினின்றும் உயிர்களைவிடுவிப்போன், சப்தமயப்பிரபஞ்சத்தினைத் தன்வசஞ்செய்தவன், எல்லாச்சொற்களாலுஞ் சொல்லப்படுவோன், பிரமஞானத்தைப் போதிப்பவன்,மௌனசமாதியைப் போதிப்பவன், பிரமவித்தையினால் உயிர்களுடைய

அறியாமையைக் கரைப்பவன், ஆன்மாக்களால் அழுதடையப்படுபவன், தமோகுணத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டவன், உயிர்களிடத்துள்ள அஞ்ஞானநிமித்தந் துயருறுவோன், எவ்வுலகிற்கும் அச்சங்கொடுப்பவன். கைலையாளி - கைலாசமலையில் வசிப்பவன். ஆலமர்கடவுள் - கல்லாலின்புடையிருந்த கடவுள். நித்தன் - பிறப்பிறப்பற்றவன். ஐம்முகன் - ஈசானம் முதலிய ஐந்துமுகங்களுடையவன். பரசுபாணி - மழுவாயுதந்தரித்த கையுடையவன்.

அ. அந்திவண்ணன் - செந்நிறமுடையவன். முக்கண்ணன் - மூன்றுகண்களுடையவன். அழலாடி - அழலிலாடுதலுடையவன். பாண்டரங்கன் - பாண்டரங்கமென்னுங் கூத்துடையவன். சந்திரசேகரன் - சந்திரனைச் சிரபூஷணமாகவுடையவன். ஆனந்தன் - பெருமகிழ்ச்சியுடையவன். அநந்தன் - அழிவில்லாதவன், அளவிலடங்காதவன். ஆதி - உற்பத்திக்குக் காரணன். தந்தியுரியோன் - யானைத்தோலுடையவன். நம்பன்-விரும்பப்படுபவன். தற்பரன் - ஆன்மாவுக்கு மேலானவன். நீறணிந்தோன் - விபூதியணிபவன். நந்தி - மகிழ்ச்சியுடையவன். ஈச்சுரன் - மகாமகிமையுடையவன். ஏறூர்ந்தோன் - இடபவாகனம் செலுத்துபவன். நக்கன்-சங்காரகருத்தன், நிருவாணி. ஞானமூர்த்தி - அறிவுருவாயுள்ளவன்.

௯. வரன் - மேலானவன். மறைமுதலி - வேதத்திற்கு முதல்வன். ஈசன் - எல்லாமேன்மையுமுடையவன். மானிடமேந்தி - மானை இடப்பக்கத்திலேந்தினவன். சோதி - ஒளிவடிவாயுள்ளவன். பிரமன்மாற்கரியோன் - பிரமவிட்டுணுக்களாலறியப்படாதவன். தாணு-அசைவில்லாதவன், ஊழியிலும்நிலைபெறுபவன். பிஞ்சகன் - தலைக்கோலமுடையவன், சங்காரகர்த்தன். பினாகபாணி - பினாகமென்னும் வில்லுத்தரித்த கையுடையவன். பரமன் - மகிமையுடையவன். எண்டோளன் - எட்டுப்புயமுடையவன். பர்க்கன் - ஒளியுடையவன். பவன் - எல்லாவற்றையும் பிறப்பிப்பவன். யோகி - யோகமுடையவன். பகவான் - மகிமை, வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுமுடையவன். ஏகன் - முக்கியமுடைவன். அரன் - முடிவில் எல்லாவற்றையுமழிப்பவன், மலத்தினை அழிப்பவுன், உயிர்களை உயர்ந்தநிலையிற் போகச்செய்வோன். உமாபதி - பார்வதிதேவிக்கு நாயகன்.

## பலதேவன்பெயர்.

௧௦. பலதேவன் - சாமர்த்தியத்தால் விளங்குவோன். ஓர்குண்டலன் - ஒற்றைக் குண்டலமுடையவன். இரேவதிகொண்கன் - இரேவதிதேவிக்கு நாயகன். முசலி-உலக்கைப்படையுடையவுன்.

வெள்ளை - வெண்ணிறமுடையவன். நீலாம்பரன் - கரியவஸ்திரமுடையவன். அநந்தன்-சேடாவதாரமாயுள்ளவன். அலப்படைகொண்டோன் - கலப்பையை ஆயுதமாகவுடையவன். அச்சுதன்முன்னர் வந்தோன் - கிருஷ்ணனுக்கு முன் பிறந்தவன். பலபத்திரன்-சாமர்த்தியத்தினாலே மிக்கவன். காமபாலன் - மன்மதனைக்காப்பவன். பனந்தாமன் - பனைவடிவமான கொடியுடையவன்.

## அரியின்பெயர்.

கக. அரி - அடியார்துயர் களைபவன், பகைவரையழிப்பவன். மாதவன் - இலக்குமிக்கு நாயகன், மதுவித்தை என்னும் வேதபாகத்தினாற் புகழப்பட்டவன், மௌந தியானயோகங்களுடையவன், மதுவென்பவன்மரபிற் பிறந்தவன். மாயன் - மாயமுடையவன், அதிசயமான செயலுடையவன், கருநிறமுடையவன். வாமனன் - குறள்வடிவுடையவன். வாசுதேவன்—வசுதேவனுடைய புத்திரன். சீதரன்-இலக்குமியை மார்பிலே தரித்தவன். நந்தகோபன்மகன் - நந்தனாகிய இடையனுக்கு மகன். உவணகேதனன்-கருடக்கொடியுடையவன். பதுமநாபன்-நாபியிற்றாமரைப்பூவுடையவன். கேசவன்-அழகிய மயிருடையவன், * கேசியென்னுமசுரனைக் கொன்றவன். பஞ்சவர்க்குத்தூதன் - (தருமன்முதலிய) ஐவர்க்குந் தூதுசென்றவன். சார்ங்கபாணி-சார்ங்கமென்னும் வில்லைக் கையிலுடையவன். சங்கமேந்தி-(பாஞ்சசன்னியமென்னும்)சங்கினையேந்தினவன்.

கஉ. கொண்டல்வண்ணன்-கருநிறமுடையவன். காகுத்தன்-† ககுத்தனுடைய மரபிற் பிறந்தவன். கோவிந்தன் - பசுக்களையடைந்தவன், சலத்திலே யமிழ்ந்திய பூமியைப் பன்றியாயடைந்தவன். அச்சுதன் - அழிவில்லாதவன், தன்னுடைய தானத்தினின்றும் பெயராதோன். மால் - பெருமையுடையவன். விண்டு-வியாபகமுடையவன். வேலையிற்றுயின்றோன் - பாற்கடலில் நித்திரை செய்பவன். உந்திபூத்தோன் - உந்தியிலே தாமரைப்பூவுடையவன். துழாய்மௌலி - முடியிலே துளவமாலையையுடையவன். ஆதிவராகன் - முதன்மையான பன்றியவதாரமுடையவன். வைகுண்டநாதன் - வைகுண்டத்தலைவன். முண்டகாசனைகேள்வன்-இலக்குமிக்கு நாயகன். தாமோதரன் - கயிற்றினாற்கட்டப்பட்ட வயிற்றினையுடையவன், வயிற்றிலே துளவமாலையுடையவன். ‡ முராரி-முராசுரனுக்குப் பகைவன். நேமி - நிமிமரபிற்பிறந்தவன், நடத்துவோன்.

---

* கேசி-கஞ்சனாலனுப்பப்பட்டுக் குதிரைவடிவாய் வந்த ஓரசுரன்.

† ககுத்தன் - சூரியவமிசத்துள்ள ஓரரசன்.

‡ முரன் - நரகாசுரனுடைய தமையன்.

கங. வலவன் - (அருச்சுனனுக்குத்) தேர்ப்பாகனானவன். தேவகிமைந்தன் - தேவகியென்பவளுடைய புதல்வன். வனமாலி- துளசிமாலை அணிபவன். படியிடந்தோன் - பூமியைக்கிழித்தவன். சலசலோசனன் - தாமரைப்பூப்போன்ற கண்ணுடையவன். அனந்தசயனன் - சேடனாகிய படுக்கையுடையவன். பீதாம்பரன் - பொன்வஸ்திரமுடையவன். உலகளந்தருள்வோன் - உலகத்தையளந்தவன். * பஞ்சாயுதன் - ஐந்தாகிய படையுடையவன். உலகுண்டபெம்மான் - பூமியையுண்டபெருமான். அலகைமுலையோடாவியருந்தினோன் - பூதனையென்னும் பசாசினை முலைப்பாலோடுண்டவன். நாரசிங்கன் - மனுடவடிவும் சிங்கவடிவுமான உருவமுடையவன்.

கச. அரவணைச்செல்வன் - பாம்பணையிற் கிடப்பவன். கண்ணன் - கரியவன், எல்லாஞ்செய்பவன். அறிதுயிலமர்ந்தமூர்த்தி - அறியும் (யோக) நித்திரைசெய்பவன். பிரமனைப்பெற்றதாதை - பிரமாவைப்பெற்றவன். †பின்னைகேள்வன் - நப்பின்னை என்பவளுக்கு நாயகன், இலக்குமிக்கு நாயகன். முகுந்தன் - மோக்ஷங்கொடுப்பவன். கரியவன் - கருநிறமுடையவன். நெடியோன் - நீண்டவடிவத்தையுடையவன். காவற்கடவுள் - காத்தற்றொழிற்குக் கடவுள். நாரணன் - சலத்திலே வசிப்பவன், நரசன்மமடைபவன்.

## பிரமன்பெயர்.

கரு. பிரமன் - வேதமோதுவோன். மேதினிபடைத்தோன் - உலகினைச்சிருட்டித்தவன். பிதாமகன் - தந்தையாயுள்ளார்க்குந் தந்தை. பிதா - உலகிற்குத் தந்தை. விதாதா - உலகைச் சிருட்டித்தவன். வரன் - (தேவர்களுட்) சிரேட்டன். அயன் - விட்டுணுவிடத்திற் பிறந்தவன். மலரோன் - தாமரைப்பூவிலிருப்பவன். மண்பொதுத்தந்தை - பூமிக்குப் பொதுவான பிதா. வேதா - சிருட்டிப்பவன். இரணியகருப்பன்-பொன்மயமான கருப்பமுடையவன், கருவிற் பொன்னுடையவன். போதன் - அறிவுடையவன். மாலுந்திவந்தோன் - விட்டுணுவின் உந்தியினின்றுமுதித்தவன். குரவன் - பெருமையுடையவன். ஓதிமமுயர்த்தகொடியினன் - அன்னக்கொடியுடையவன். அன்னவூர்தி - அன்னவாகனமுடையவன்.

கசு. இறை - சர்வலோகத்திற்குந் தலைவன். ‡ சதானந்தன் - வெகுமகிழ்ச்சியுடையவன். எண்கணன் - எட்டுக் கண்களுடைய

---

* பஞ்சாயுதங்களாவன: வில், வாள், சங்கு, சக்கரம், தண்டு என்பன.

† நப்பின்னை-மிதிலையரசன்மகள். ‡ சதம்-வெகு.

வன். விதி - எல்லாஞ் சிருட்டிப்பவன். சுயம்பு - தானேதோன்றினவன். மறையவன் - வேதங்களையோதுவோன். அநந்தன் - முடிவில்லாதவன். ஞானி - அறிவுடையவன். மான்மகன் - விட்டுணுவின் மகன். வாணிகேள்வன் - நாமகளுக்குநாயகன். பகவன் - ஐசுவரியம் முதலிய ஆறுமுடையவன். வானோர்முதுவன் - தேவருள்ளே மிக்கவன். நான்முகன்-நான்குமுகங்களுடையவன். விரிஞ்சன் - சிருட்டிப்பவன், அன்னவாகனமுடையவன். கமலயோனி - விட்டுணுவின் உந்திக்கமலத்தைப் பிறப்பிடமாகவுடையவன்.

## புத்தன்பெயர்.

கஎ. புத்தன் - (எல்லாவற்றையும் கணபங்கமென்று) நினைப்பவன். தருமராசன் - கொல்லாமை வாய்மை முதலியதருமங்களுக்குத்தலைவன். முனீந்திரன் - முனிவருள்ளேமிக்கவன். சினன் - (சம்சாரத்தை) வென்றவன். ததாகதன்-நல்லறிவுடையவன். ஆதி- முதல்வன். தேவன்-ஒளியுடையவன். சாக்கியன்-தேக்கமரச்சோலையிலிருப்பவன், சாக்கியமரபிற் பிறந்தவன். சைனன்-உபாசகன். விநாயகன் - நன்மைபோதிப்பவன், மேலானவன். சினந்தவிர்ந்தோன் - கோபமில்லாதவன். அரசுநீழலிலிருந்தோன் - அரசமரநீழலில் இருந்தவன். வரன் - மேலானவன். பகவன் - மேன்மை முதலிய ஆறுமுடையவன், மேலானவன். செல்வன் - சிறப்புடையவன்.

கஅ. அண்ணல் - பெருமையுடையவன். மாயாதேவிசுதன் - மாயாதேவியுடையமகன். அகளங்கமூர்த்தி - குற்றமில்லாத வடிவமுடையவன். கலைகட்கெல்லா நாதன் - கலைகளுக்குத்தலைவன். முக்குற்றமில்லோன்-மூன்று குற்றமுமில்லாதவன். எண்ணில்கண்ணுடையோன் - பலகண்களுடையவன். வாமன்-அழகுடையவன். புண்ணியத்தின்மூர்த்தி - புண்ணியவடிவமுடையவன். புண்ணியமுதல்வன் - புண்ணியத்துக்குத்தலைவன். சாந்தன் - பொறுமையுடையோன். பூமிசைநடந்தோன் - பூவின்மேற்சென்றவன்.

## இந்திரன்பெயர்.

ககூ. இந்திரன் - பகைவரைப்போக்குவோன், சகல நன்மை தீமைகளையுங்காண்பவன், நெல்லுமுதலிய தானியங்களைக் கொடுப்பவன், பெருமகிமையுடையவன். மேகவாகனன்-மேகத்தினை வாகனமாகவுடையவன். வேள்விக்குவேந்தன் - யாகங்களுக்குத்தலைவன். விண்முழுதுமாளி - விண்ணுலகமுழுதுமாள்பவன். பாகசாதனன் - *பாகனென்னுமசுரனைக் கொன்றவன். வச்சிரபாணி-வச்

* பாகன் - விருத்திராசுரனுடைய தம்பி.

சிராயுதத்தைக் கையிலுடையவன். கோபதி-விண்ணுலகத்துக்குத் தலைவன். நாகநகர்க்குநாதன்-தேவலோகத்துக்குத் தலைவன். நான் மருப்பியானையூர்தி - அயிராவதயானையை வாகனமாக ஊர்பவன். போகி - போகங்களுடையவன். வாசவன் - செல்வமுடையவன். வேந்தன் - ஒளியுடையவன். புரந்தரன் - பகைவருடம்பைப் பிளப்பவன். புலவன் - அறிஞன். சக்கிரன் - துட்டர்களை வெல்வதில் வல்லவன்.

உ0. மருதநிலத்துவேந்தன் - மருதநிலத்தலைவன். மருத்துவன் - தேவர்களையுடையவன். வானோர்கோமான் - தேவருக்கரசன். புருகூதன் - யாகத்தில் அழைக்கப்படுபவன். சசிமணாளன் - இந்திராணிக்குநாயகன். புரோகிதன் - தேவகாரியங்களில் முன்வைக்கப்படுபவன். கௌசிகன்-குசிகர்மரபிலுள்ளவன், கூகைவடிவங் கொண்டவன். கரியவன் - கருநிறமுடையவன். சுனாசீரன் - நல்ல சேனைகளுடையவன். ஆகண்டலன் - சத்துருக்களைக் கண்டிப்பவன். வலாரி - வலாசுரனுக்குப் பகைவன். அரி - சத்துருக்களைச் சங்கரிப்பவன். சதக்கிரது - நூறுயாகங்களுடையவன். ஆயிரங்கண்ணன் - ஆயிரங் கண்களுடையவன்.

## விநாயகன்பெயர்.

உக. விநாயகன் - தன்னின் மேலான நாயகனில்லாதவன், துட்டர்களையும் இடையூறுகளையுங் கண்டிப்போன். அங்குசபாசமேந்தி - அங்குசத்தையும் பாசத்தையுந் தரித்தவன். அம்பிகைதனயன் - உமையின்மகன். முன்னோன் - யாவராலும் முன்னாகக் கொள்ளப்படுபவன். ஐங்கரன் - ஐந்து கைகளுடையவன். மூத்தோன் - மூத்தபிள்ளை. ஒற்றைமருப்பினன் - ஒருகொம்புடையவன். ஏரம்பன் - உருத்திரனுடைய சமீபத்திலிருப்பவன், (அடியாரை) வளர்விப்பவன். கங்கைபெற்றோன் - கங்கையைத் தரித்தவன், கங்கையாற் பெறப்பட்டவன். முக்கண்ணன் - மூன்றுகண்களுடையவன். கணபதி - கணங்களுக்குத் தலைவன். ஈசன்மைந்தன் - சிவனுக்கு மகன். கயமுகன் - யானைமுகம்போன்ற முகமுடையவன். ஆகுவாகனன் - பெருச்சாளிவாகனமுடையவன்.

## வீரபத்திரன்பெயர்.

உஉ. வீரபத்திரன்-வீரத்தினாலே மிக்கவன். உக்கிரன் - கோபமுடையவன். அழற்கண்வந்தோன் - சிவனுடைய நெற்றிக்கண்ணினின்றும் வந்தவன். உமைமகன் - உமையின் புத்திரன். சிம்புளானோன் - எண்காற்பறவைவடிவங் கொண்டவன். முக்கணன் - மூன்றுகண்களுடையவன். சடையோன்-சடையுடையவன். யானை

முகவனுக்கிளையோன் - விநாயகருக்குத் தம்பி. வில்லி - வில்லு டையவன். செக்கர்வானிறத்தன் - செக்கர்வானம்போலும் நிறமு டையவன். குரோதன் - கோபமுடையவன். சிறுவிதிமகஞ்சிதை த்தோன் - தக்கனுடைய யாகம் அழித்தவன். பத்திரைக்குக் கேள் வன் - பத்திரைக்கு நாயகன்.

## கந்தன்பெயர்.

உ௩. கந்தன் - சேர்க்கப்பட்டவன், சத்துருக்களையழிப்ப வன். முருகன் - * தெய்வத்தன்மையுடையவன், இளமையுடை யவன். வேள் - விரும்பப்படுபவன். சாமி - எல்லாமுடையவன். ஆறுமுகன் - ஆறுமுகங்களுடையவன். குகன் - காப்பவன், இரக சியமானவன், தன்சேனைகளைக் காப்பவன். குழகன் - அழகன். மாயோன்மருகன் - விட்டுணுவுக்கு மருகன். சேய் - செந்நிறமு டையவன். கார்த்திகேயன் - கார்த்திகைகளின் புத்திரன். வரை பகவெறிந்தோன் - (கிரௌஞ்ச) மலையைப் பிளந்தவன். செட்டி - வைசியனாகப் பிறந்தவன். அரன்மகன் - சிவனுக்கு மகன். கங்கை மைந்தன் - கங்கையின் மகன். அண்டலைக்கொடியுயர்த்தோன் - கோழிக்கொடியுடையவன். சரவணபவன் - சரவணவாவியிற் பிற ந்தவன். கடம்பன் - கடப்பமாலை தரித்தவன். தாரகற்செற்றோன் - தாரகாசுரனைக்கொன்றவன். ஆசான் - குரு.

உ௪. குறிஞ்சிவேந்தன் - குறிஞ்சி நிலத்திற்குத் தலைவன். வேலினுக்கிறை - வேற்படைக்குத் தலைவன். விசாகன் - விசாகநா ளிற் பிறந்தவன். சேந்தன் - திருச்செந்தூரையுடையவன். காங் கேயன் - கங்கையின் புத்திரன். செவ்வேள் - செம்மையாகிய வேள். சிலம்பன் - மலைகளையுடையவன். மஞ்ஞையூர்தி - மயில் வாகனமுடையவன். சூர்ப்பகைவன் - சூரனுக்கு விரோதி. வள் ளிமணவாளன்-வள்ளிநாயகிக்கு நாயகன். தெய்வயானைகாந்தன் - தெய்வயானையம்மைக்கு நாயகன். குமரன் - அருவருப்புகளையழி ப்பவன், என்றுமிளமையுடையவன். புலவன் - அறிவுடையவன்.

## காமன்பெயர்.

உ௫. காமன் - காமத்தினையுண்டாக்குவோன். திருமகண்மை ந்தன் - இலக்குமியின் புத்திரன். மாரன் - விகாரமுடையார்க்கு மரணவேதனைசெய்வோன். சித்தசன் - மனசிற்பிறந்தவன். சம்ப ராரி - சம்பரனுக்குப் பகைவன். உருவிலி - வடிவமில்லாதவன். மன்மதன் - புத்தியைமயக்குவோன். மீன்கொடியுயர்த்தோன் றல் - மீன்கொடியுடையவன். இரதிகாதலன் - இரதிதேவிக்கு

* முருகு - தெய்வத்தன்மை, இளமை.

நாயகன். வசந்தன் - வேனிற்காலத்தலைவன். வேனிலாளி - வேனிற்காலத்தலைவன். கருப்புவில்லி - கரும்பாலாயவில்லுடையவன். கந்தர்ப்பன் - கெட்ட கர்வமுள்ளவன். மதன் - மயக்கஞ்செய்பவன். பூவாளி - புட்பமாகிய பாணமுடையவன்.

உசு. திங்கட்குடையோன் - சந்திரனைக் குடையாகவுடையவன். தென்றற்றேரினன் - தென்றற்காற்றைத் தேராகவுடையவன். வில்லி - வில்லையுடையவன். மோகன் - மயக்கஞ்செய்பவன். ஐங்கணைக்கிழவன் - ஐந்து பாணங்களுக்குத் தலைவன். வேள் - விருப்பத்திற்குரியோன். அநங்கன் - உருவமில்லாதவன். மான்மைந்தன் - விட்டுணுவின் மகன். மனோபவன் - மனசிற்பிறந்தவன். மனோசன் - மனசிற்பிறந்தவன். அங்கசன் - விருப்பமுண்டாக்குவோன். மனோபு - மனசிற்பிறந்தவன். ஆழிமுரசோன் - சமுத்திரத்தை முரசமாகவுடையவன்.

## வைரவன்பெயர்.

உஎ. வைரவன் - பயஞ்செய்பவன். முத்தன் - மகிழ்ச்சியுடையவன். குமரன் - அருவருப்புகளை யழிப்பவன். முடுவற்படையோன் - நாய்ப்படையுடையவன். காரி - கருநிறமுடையவன். சித்தன் - சித்திகளையுடையவன். கேத்திரபாலன் - ஆலயங்களைக்காப்பவன். வித்தகன் - நாகரிகமுடையவன். ஞாளியூர்தி - நாய்வாகனமுடையவன். கருங்குதிரையாளி - கருங்குதிரையுடையவன். வடுகன் - பிரமசரியமுடையவன்.

## ஐயன்பெயர்.

உஅ. ஐயன் - வணங்கப்படத்தக்கவன். காரி - கருநிறமுடையவன். கடல்வண்ணன் - கருநிறமுடையவன். சாத்தா - (துட்டரைத்) தண்டிப்பவன். பூரணைகேள்வன் - பூரணைக்கு நாயகன். யோகி - யோகமுடையவன். புட்கலைமணாளன் - புட்கலைக்குநாயகன். மாசாத்தன் - மகாநிக்கிரகமுடையவன். செண்டாயுதன் - செண்டினை ஆயுதமாகவுடையவன். வெள்ளையானையூர்தி - வெள்ளையானைவாகனமுடையவன். ஆரியன் - அருச்சிக்கத்தக்கவன். அறத்தைக்காப்போன் - தருமத்தைக்காப்பவன். அரிகரகுமரன் - (மோகினிவடிவங்கொண்ட) விட்டுணுவுக்குஞ் சிவனுக்கும் மகன்.

## குபேரன்பெயர்.

உகூ. குபேரன் - அருவருப்பான சரீரமுடையவன். அரனதுதோழன் - சிவனுக்கு நண்பன். கின்னரர்பிரான் - கின்னரர்களுக்குத்தலைவன். அளகையாளி - அளகை நகரியையாள்பவன். புருடவாகனன் - நரவாகனமுடையவன். சோமன் - நன்மைசெய்பவன். புட்-

பகவிமானமுள்ளோன் - புட்பம்போன்ற விமானமுடையவன். இருநிதிக்கிழவன் - சங்கநிதி பதுமநிதிகளுக்குத் தலைவன். ஏகபிங்கலன் - பொன்னிறமான ஒற்றைக்கண்ணுடையவன். இயக்கர்கோமான் - இயக்கருக்குத் தலைவன். மரகதன்— தனதன் - திரவியங்கொடுப்பவன், தனத்தைக்காப்பவன். மந்திரி - சிவனுக்குத் தோச்சித்துணைவன். வைச்சிரவணன் - * விச்சிரவாவினுடைய புதல்வன்.

## யமன்பெயர்.

௩௦. யமன் - சங்காரஞ் செய்வோன். சமன் - நடுநிலையுடையவன். செங்கோற்கடவுள் - நீதிசெய்யுங் கடவுள். கூற்று - உயிர்களை யுடம்பினின்று பிரிப்போன். தருமன் - நீதிசெய்பவன். அந்தகன் - அழிவுசெய்பவன். சண்டன் - கடுங்கோபமுடையவன். நமன் - நியமித்தலுடையவன். வைவச்சுதன்-சூரியனுடையமகன். நடுவன் - நடுநிலையுடையவன். தென்றிசைக்கோன் - தென்றிசைக்குத் தலைவன். அரி - முடிவுசெய்பவன். மறலி - வலிமையுடையவன். எருமையூர்தி - எருமைவாகனமுடையவன்.

## காலன்பெயர்.

காலன் - இருவினைகளையுங் கணக்கிடுவோன், வயசுகணிப்போன். கால் - காலத்தைச்செய்பவன். மறல் - வலியுடையவன். மடங்கல் - இறுதிசெய்வோன். பாசத்தன் - பாசமுடையவன்.

## தருமதேவதையின்பெயர்.

௩க. தருமதேவதை-தருமத்தெய்வம். மரகதவல்லி- பூகநிழலுற்றவஞ்சி - கமுகநிழலிலிருக்கும் பெண். பரமசுந்தரி - பேரழகுடையவள். இயக்கி - பகவதி - மேன்மைவீரம் முதலியன வுடையவள். அம்மை - தாய்போல்பவள். அருகனைமுடிதரித்தாள் - அம்பிகை - தாயொப்பவள். அறத்தின்செல்வி - தருமமாகிய செல்வமுடையவள். அம்பாலிகை - தாயொப்பவள்.

## உமையின்பெயர்.

௩௨. உமை - பெண்ணே! உ! வேண்டாம் (என்று தவத்தினின்று தடுக்கப்பட்டவள்,) காப்பவள். அரனிடத்தவள் - சிவனுடைய இடப்பாகத்திருப்பவள். காமக்கோட்டத்தி - காமக்கோட்டமுடையவள். அம்பிகை - (உலகத்துக்குத்) தாய். மாதா - தாய். தருமத்தின்செல்வி - (முப்பத்திரண்டு) அறங்களின் சிறப்புடைய

---

* விச்சிரவா - புலத்தியமுனிவருடைய மகன்.

வள். தேவி - பிரகாசமுடையவள். சாம்பவி-சம்புவின் மனைவி. மலைமடந்தை - மலை (யரசனுடைய) மகள். பரை - மேலானவள். சிவை - நன்மைசெய்பவள், சிவனுடைய மனைவி. கௌரி - பச்சை நிறமுடையவள். பார்ப்பதி - மலையின்புதல்வி. பவானி - பவனுடைய மனைவி. சத்தி-வலிமையுடையவள். நாரி-மேலானபெண்.

## கங்கையின்பெயர்.

௩௩. கங்கை - சிவன் சடையினின்று பூமியையடைந்தது, விசிட்டமானதானத்திலே செல்லுதலுடையது, உயிர்களை உயர்ந்த நிலையிற் போக்குவது. வரநதி - மேலான நதி. மந்தாகினி - மெல்ல வளைந்து செல்லுவது. திரிபதகை - (சுவர்க்க மத்திய பாதலமாகிய) மூன்றுலகங்களிலுஞ் செல்வது. சுரநதி-தேவர்களுடைய நதி. சானவி - சன்னுமுனிவருடைய செவியினின்றும் வந்தது. பகீரதி - பகீரதனாற் கொண்டுவரப்பட்டது.

## காடுகோள்பெயர்.

காடுகோள் - காட்டில் வாசஞ்செய்தற்குரியவள்; (இது காடுகிழாஅள் என்பதன் மரூஉ.) மூதணங்கு - பழையபெண். மோடி - பலமுடையவள். கொற்றி - வெற்றியுடையவள். சூரி - வீரமுடையவள். வடுகி - வடுகனை (ப்பிள்ளையாக) உடையவள். மாரி - கொலைசெய்பவள். வடுகன்றாய் - வைரவருடைய தாய்.

## திருமகள்பெயர்.

௩௪. திருமகள்-பொருட்குரிய பெண், அழகுடையவள். கடற்பிறந்தகோதை - பாற்கடலிற் பிறந்த பெண். மா - உலகமாதா, திரவியமுடையவள். அரிப்பிரியை - விட்டுணுவின் மனைவி. செய்யாள்-செம்மையுடையவள். ஆக்கம்-செல்வமுடையவள். பொன்-பொன்னுடையவள். பொறி - செல்வமாயுள்ளவள். ஸ்ரீதேவி - எல்லாராலும் சேவிக்கப்படுபவள். அலர்மகள் - (தாமரை) மலரிலிருப்பவள். பொருளின்செல்வி-பொருட்செல்வமுடையவள். தாக்கணங்கு - தகுதியுடையபெண், கண்டார்க்கு விருப்புண்டாக்கித் தாக்கும் பெண். இளையாள் - பின்பிறந்தவள். பூமின் - (தாமரைப்) பூவில்வாழும் பெண். இலக்குமி - எப்பொருளையுங் காண்பிப்பவள். சலசை - தாமரைப்பூவிலிருப்பவள். இந்திரை - மேலான செல்வமுடையவள்.

## நாமகள்பெயர்.

௩௫. நாமகள் - நாவில்வாழ்பவள். கலைமகள் - சாத்திரங்கட்குரியவள். பனுவலாட்டி - நூலுக்குரியவள். காயத்திரி - பாடு

வோனைக் காப்பவள். ஞானமூர்த்தி - ஞானரூபி. உலகமாதா - உலகத்திற்குத்தாய். பிராமி - பிரமாவின் மனைவி. வெள்ளைமெய்யாள் - வெண்ணிறமேனியுடையவள். வெண்சலசமுற்றுள் - வெண்டாமரையிலிருப்பவள். பாரதி - பரதனென்னும் யாகபுரோகிதனுடைய துதிக்குக் காரணமாயிருப்பவள். இசைமடந்தை - இசைக்குரியவள். அயன்மனைவி - பிரமாவின் மனைவி. வாக்காள்-வாக்கிலுள்ளவள். வாணி - சொல்லப்படுபவள்.

## மூதேவியின்பெயர்.

கசு. மூதேவி - மூத்ததேவி. சேட்டை - மூத்தவள். இந்திரைக்குமூத்தாள் - இலக்குமிக்கு மூத்தவள். சீர்கேடி - சீர்கெட்டவள். சிறப்பிலாதாள் - சிறப்பில்லாதவள். * ஏகவேணி - எண்ணெய்பூசுதல், வாருதல் முதலிய சுத்தக்கிரியை செய்யப்படாது முதுகிலே தூங்கும் ஏகபந்தமான சடையுடையவள். காகத்துவசமுற்றுள் - காகக்கொடியுடையவள். கேட்டை - கேடுசெய்பவள். கெடலணங்கு - கேட்டைத்தரும்பெண். கழுதைவாகினி - கழுதை வாகனமுடையவள். கலதி - கீழ்மையுடையவள். தௌவை - மூத்தவள். முகடி -

## இந்திரன்மனைவியின்பெயர்.

கஎ. இந்திராணி - இந்திரனுடைய மனைவி. புலோமசை - புலோமனுடைய புதல்வி. சசி - அன்னம்போல நடப்பவள். † அயிராணி - பூசிக்கத்தக்கவள், நன்குமதிக்கப்படுபவள்.

## இந்திரன்மைந்தன்பெயர்.

சயந்தன் - (சத்துருக்களை) வெல்லுபவன், அழகினுலெவரையும் வெல்வோன்.

## அமரர்மாதின்பெயர்.

அரமகள் - அரம்பை - விருப்பங்கொடுப்பவள்.

## தெய்வமெல்லியர்பொதுப்பெயர்.

சூர் - அணங்கு -

## காளியின்பெயர்.

கஅ. காளி - கருநிறமுடையவள். சூரி - வீரமுடையவள். மாலினி - கரியவள். எண்டோளி - எட்டுத்தோள்களுடையவள்.

---

* இதன்பொருள் அத்யாத்மராமாயணவுரையிற் கண்டது.

† அர்யாணி என்னும் ஆரியபதம் அயிராணி என்றாயிற்று.

சூலி - சூலமுடையவள். சண்டிகை - கோபமுடையவள், சண்டாசுரனைக்கொன்றவள். தேவி - பிரகாசமுடையவள். வீரி - வீரமுடையவள். மாதரி - கங்காளி - கங்காளமுடையவள். வேதாளி - வேதாளவைரவசம்பந்தி. மாதங்கி - மதங்கமுனியின் புதல்வி. தாரகற்செற்றதையல்-தாரகாசுரனைக்கொன்றவள். பைரவி-அச்சங்கொடுப்பவள். சிவை - சிவனுடைய மனைவி. சாமுண்டி - சண்டனையு முண்டனையுங் கொல்லவந்தவள். ஆரணி - வல்லணங்கு - வலிமையுடையவள். ஐயை - அருச்சிக்கப்படத்தக்கவள். யாமளை - பச்சைநிறமுடையவள். முக்கண்ணி - மூன்றுகண்களுடையவள்.

௩௧. அலகைக்கொடியுயர்த்தாள் - பேய்க்கொடியுடையவள். * மதுபதி - மதுவுக்குத்தலைவி. ஆளியூர்தி - சிங்கவாகனமுடையவள். மாயை-மாயமுடையவள். யோகினி-யோகத்தையுடையவள்.

## இடாகினியின்பெயர்.

இடாகினி - இடனென்பவனைக் கொல்லவந்தவள். வலவை - வல்லமையுடையவள். சூர்மகள் - அச்சஞ்செய்யும்பெண். மாயவள் - மாயத்தையுடையவள்.

## காளியேவல்செய்மகளின்பெயர்.

சன்மினி - தோற்சட்டையுடையவள். வஞ்சப்பெண் - வஞ்சத்தையுடையவள்.

## துர்க்கையின்பெயர்.

௪0. துர்க்கை - பிரயாசத்தாலறியப்படுபவள், காடுமுதலிய அரண்களிலேயிருப்பவள், † துர்க்கனைக்கொன்றவள். அமரி - போரில்வல்லவள், அலங்கரித்தலில்லாதவள். எண்டோளி-எட்டுத்தோளுடையவள். வெற்றி - வெற்றமுடையவள்; வெற்றம் - வெற்றி. அந்தரி-பிரமத்தைத்தரித்தவள். அம்பணத்தி - ‡ மரக்காலென்னுங் கூத்துடையவள். சமரி - போரில்வல்லவள். பாலைக்கிழத்தி-பாலைநிலத்துக்குத்தலைவி. சயமகள்-வெற்றியுடையவள். வீரச்செல்வி - வீரச்சிறப்புடையவள். குமரி - அழிவில்லாதவள். மகிடற்செற்றாள் - மகிடாசுரனைக்கொன்றவள். கொற்றவை - வெற்றியுடையவள். சக்கிரபாணி-சக்கிரப்படையைக் கையிலுடையவள். விமலை-மலமில்லாதவள். கலையானத்தி - மான்வாகனமுடையவள். விச

---

* மது - கள்ளு. † "துர்க்கனைக்கொன்றவாற்றாற் றுர்க்கையாயினள்" என்பது காசிகாண்டம்; வச்சிரபஞ். கஅ.

‡ மரக்காலின்மேலே நின்றாடப்படுதலின் மரக்காலெனப்பட்டது; மரக்கால் - ஓரளவைக்கருவி.

மை - வெற்றியுடையவள். நாரணி-எங்கும் வியாபகமுடையவள். விந்தை —

சக. நீலி - கருநிறமுடையவள். * காத்தியாயனி - கத்தியயன் மரபிற் பிறந்தவள். மேதிச்சென்னிமிதித்தமெல்லியல் - மகிடாசுரனுடைய தலையைவெட்டி அதன்மேலேநின்றவள். கௌரி - பச்சைநிறமுடையவள். ஐயை - அருச்சிக்கப்படத்தக்கவள். மாலினுக்கிளையநங்கை-விஷ்ணுவுக்குத் தங்கை. பகவதி - மேன்மை,வீரம் முதலிய ஆறுமுடையவள். வாள்கைக்கொண்டாள் - வாட்படை கையிற்கொண்டவள். சூலி - சூலமுடையவள். சண்டிகை-கோபமுடையவள், சண்டாசுரனைக்கொன்றவள். கன்னி - கன்னித்தன்மையுடையவள். சுந்தரி - அழகுடையவள்.

## தேவர்பெயர்.

சஉ. தேவர் - பிரகாசமுடையவர், கிரீடையுடையவர். அமரர் - மரணமில்லாதவர். பண்ணவர் - தகுதியுடையவர். புத்தேளிர் - அறிவுடையவர். கடவுளர் - மிக்கவர். அண்டர் - ஆகாயத்திலிருப்பவர். உம்பர் - மேலானவர். இமையவர் - கண்ணிமையாதவர். விபுதர் - விசேஷவறிவுடையவர். வானோர் - வானிலிருப்பவர். இலேகர் - கண்டம் முதலிய உறுப்புக்களிலே நல்ல ரேகையுடையவர், உயிர்களுடைய நன்மைதீமைகளை எழுதுவோர். புலவர்-அறிஞர். விண்ணோர் — சுவர்க்கலோகத்திலிருப்பவர். அமுதர்-மரணமில்லாதவர். ஆதித்தர் - அதிதியின்புத்திரர். மேலோர் - மேலானவர். ஐயர் - பூசிக்கத்தக்கவர். சுரர் - † பாற்கடலிற்றோன்றிய நறவமுண்டவர், நல்லொளியுடையவர், நன்மைசொல்பவர். தீர்த்தர் - யாகசம்பந்தமுடையவர். உயர்நிலத்தவர் - மேலுலகத்திலுள்ளவர்.

சந. தெய்வம் - பிரகாசமுடையது. அணங்கு - அஞ்சப்படுவது. புத்தேள்— சூர் - அஞ்சப்படுவது. கடவுள்-மிக்கது. தே - ஒளியுடையது. தெய்வதம் - பிரகாசமுடையது.

## அசுரர்பெயர்.

அசுரர் - தேவத்துவமடையாதவர், அமிர்தம்பெறாதவர், உயிர்களைக்கவர்வோர், யாகபாகத்தால் விலக்கப்பட்டவர். தானவர் - ‡ தனுவென்பவளிடத்திற்பிறந்தவர். அவுணர் - தாழ்வுடையவர்,

* கதனுடைய மரபிற் பிறந்தவளென்பது வாசஸ்பத்தியம்.

† "வாருணிநறவம் பிறந்ததுபின்னர் மற்றது நுகர்தலாற்றேவர் சீர்கெழுசுரராயினர்" என்பது கூர்மபுராணம்.

‡ தனு - தக்கன்புத்திரிகளுளொருத்தி.

இழிவுடையவர். தைத்தியர் - திதியின்புத்திரர். திதியின்மைந்தர் - திதியின்புத்திரர். நிசாசரர் - இரவிற்சரிப்பவர்.

## இராக்கதர்பெயர்.

சச. இராக்கதர் - தம்மைக்காப்பவர். நிருதர் - நிருதியின் குமாரர். பிசிதவூணர் - நிணந்தின்பவர். நிசாசரர் - இராத்திரியிற் சரிப்பவர். அரக்கர் - தம்மைக்காப்பவர். சாலகடங்கடர் - * சாலகடங்கடையென்பவளின் புத்திரர்.

## விஞ்சையர்பெயர்.

விஞ்சையர் - வித்தையுடையவர். வித்தியாதரர் - வித்தைகளைத்தரித்தவர். கேசரர் - ஆகாயத்திற்சரிப்பவர்.

## கந்தருவர்பெயர்.

கந்தருவர்—பாடுந்தொழிலுடையவர். யாழ்வல்லோர்-யாழிற் சமர்த்தர். காந்தருவர் - பாடுந்தொழிலுடையவர். கின்னரர் - சிறிது மனுஷரூபமுடையவர்.

## பூதத்தின்பெயர்.

சரு. பூதம் - விரும்பியதையடைதலுடையது. குறள் - குறுமையானவடிவுடையது. கிருத்திமம்-ஏவப்படுவது. கூளி—பாரிடம் - சபையிலிருப்பது. சாதகம்—

## பேயின்பெயர்.

பேய் - அச்சஞ்செய்வது. பிரேதம் - செல்லுதலுடையது. வேதாளம் - வெறி - கலக்கஞ்செய்வது. மயல் - மயக்கஞ்செய்தலுடையது. பிசாசம் - மாமிசமுண்ணுதலுடையது. பாசம்-பிணித்தலுடையது. வியந்தரம் - ஏவலைத்தரித்தலுடையது. மண்ணை - அழுக்குடையது. சோகு - துயர்செய்வது. கழுது - கூளி - கூவிளியுடையது. அலகை - கடி-அச்சஞ்செய்வது. சாவு - சவசம்பந்தமுடையது.

## ஆகாயத்தின்பெயர்.

சசு. ஆகாயம் - எப்பக்கத்திலுஞ் சூரியன்முதலியவைகளின் பிரகாசமுடையது, பூமிமுதலியனபோலப் பிரகாசமில்லாதது. அண்டம் - வானுலகு - மேகஞ் சஞ்சரித்தற்குரியவுலகம். மங்குல் - அந்தரம் - அவகாசங்கொடுத்தலுடையது, வெளியாயுள்ளது, நடுவிலுள்ளது. அம்பரம் - மழைக்காலத்திலே பிரா

* சாலகடங்கடை - வித்தியுற்கேசன் மகள்.

ணிகளுக்கு நீர் கொடுத்தலுடையது, முகிலொலித்தற்கிடனாயுள்ளது. கோ - உயிர்கள்செல்லுதற்கிடனாயுள்ளது. குண்டலம் - ககனம்-பறவைகள் செல்லுதற்கிடனாயுள்ளது. காயம் - சூரியன்முதலிய பிரகாசித்தலுடையது. குடிலம் - புட்கரம் - பிராணிகள் போக்குவரவுசெய்தற்கிடனாய் நின்று காப்பது, நீர் கொடுத்துக் காத்தலுடையது. அநந்தம்-அந்தமில்லாதது. வெளி - வெளியாயுள்ளது. மீ - மேலிலுள்ளது. மாகம் - ஆசினி - நபம் - மேகங்களாலே மறைக்கப்பட்டு மழுங்குதலுடையது. கம் - (வடிவின்மையால்) அறியத்தகாதது. விண்டலம்-முகில்களுக்குரியவிடம். விசும்பு - வேணி - வியோமம்- போக்குவரவிற்கிடங்கொடுப்பது, எங்கும் வியாபகமுடையது.

## காற்றின்பெயர்.

சஎ. காற்று - வாதம் - இடையறாது செல்லுதலுடையது. கால் - வளி - பெலமுடையது. மருத்து - உலகினையழித்தலுடையது. வாடை - வடக்கிலிருந்து வருதலுடையது. பவனம்-சுத்திசெய்தலுடையது, செல்லுதலுடையது. வாயு - இடையறாது செல்லுதலுடையது. கூதிர் - குளிர்விப்பது. மாருதம்-உலகினையழித்தலுடையது. மால் - பெருமையுடையது. கோதை - மார்பில் மாலையையுடையது. கொண்டல் - கிழக்கிலிருந்து வருதலுடையது. உலவை - உலாவுதலுடையது. கோடை - மேற்கிலிருந்து வருதலுடையது. ஊதை-ஊதுதலுடையது. வங்கூழ்- ஒலி - ஒலித்தலுடையது. சதாகதி - இடையறாது செல்லுதலுடையது. உயிர்ப்பு - உயிர்த்தற்காரணமாயுள்ளது. அரி - அழித்தலுடையது. கந்தவாகன் - வாசனையைக்கொண்டு செல்லுதலுடையது. பிரபஞ்சனன் - மரக்கொம்புமுதலியவைகளை முரித்தலுடையது. சலனன் - செல்லுதலுடையது.

## மேல்காற்றின்பெயர்.

சஅ. மேல்காற்று - மேற்கினின்று வருங்காற்று. கோடை - மேற்கினின்று வருவது.

## கீழ்காற்றின்பெயர்.

கீழ்காற்று - கிழக்கினின்றுவருங்காற்று. கொண்டல் - கிழக்கினின்றுவருவது.

## வாடையின்பெயர்.

வாடை - வடக்கிலிருந்து வருவது. வடகாற்று - வடக்கினின்று வருங்காற்று. வடந்தை - வடக்கிலிருந்துவருவது.

## பனிக்காற்றின்பெயர்.

பனிக்காற்று - பனியோடு கூடிய காற்று. கூதிர் - குளிருடையது. ஊதை - உயிர்த்தலுடையது.

## சுழல்காற்றின்பெயர்.

சுழல்காற்று - சுற்றுங்காற்று. சாரிகை - சுற்றுதலுடையது. சூறை - கவர்தலுடையது.

## தென்றற்காற்றின்பெயர்.

சக. தென்றல் - தெற்கினின்றுவருவது. தென்கால் - தெற்கினின்று வருங்காற்று. சிறுகால் - சிறியகாற்று. தென்றி - தென்றிசையிலிருந்து வருவது. மலயக்கால் - பொதியத்தினின்று வருங்காற்று. வசந்தன் - வசந்தகாலத்தில் வருவது.

## நெருப்பின்பெயர்.

நெருப்பு— அரி - அழித்தலுடையது. வசு - பேரொளியுடையது. தகனன் - சாம்பலாகவெரித்தலுடையது. அங்கி - மேலேசெல்லுதலுடையது. அனல் - விறகுமுதலியவைகளாலே திருப்தியடையாதது, உயிர்கள் ஜீவித்தற்குக் காரணமாயுள்ளது. அயவாகனன் - ஆட்டுவாகனமுடையது. தீ - பிரகாசமுடையது. எரி - எரித்தலுடையது. சுசி - சோகஞ்செய்தலுடையது, சுத்தமுடையது. சிகி - சுவாலையுடையது. ஆரல் - தன்பாலிடப்பட்டதையுண்ணுதலுடையது. காற்றின்சகாயன் - காற்றின் நண்பன். கருநெறி - புகைமயமான கரிய வழியுடையது. கனலி - கோபித்தலுடையது. அங்காரகன் - கரியினையழித்தலுடையது. சித்திரபானு - பலவிதகிரணமுடையது.

ருo. தழல் - பற்றுதலுடையது. உதாசனன் - ஓமஞ்செய்யப்பட்டதை யுண்ணுதலுடையது. தனஞ்சயன் - தனத்தையழித்தலுடையது. சாதவேதா - வேதங்கள் பிறத்தற்குக் காரணமாயுள்ளது, பிராணிகளையறிதலுடையது. முளரி - விறகின்சம்பந்தமுடையது. தென்கீழ்த்திசையிறை - தென்கிழக்குத் திக்குப்பாலகன். சேர்ந்தார்க்கொல்லி - சேர்ந்தாரையழித்தலுடையது. * எழுநா -

---

* எழுநாக்குகளாவன:—காளி, கராளி, மனோசவை, சுலோகிதை, சுதூம்பரவருணை, புலிங்கினி, விசுவருபை என்பன. (முண்டகோபநிடதம். க: ச.) தத்துவப்பிரகாசவுரைகாரர் அக்கினியின் எழுநாக்குகளாவன: இரணியை, கனகை, இரத்தை, கிருட்டிணை, சுப்பிரபை, அதிரத்தை, வெகுரூபி என்பன என்பர்.

எழுநாக்கு வடிவமான சுவாலையுடையது. வன்னி - தன்பாலிடப் பட்ட * ஹவ்வியத்தைத் தேவர்கள்பா லடைவிப்போன். பாவ கன் - சுத்திசெய்பவன். தேயு - ஒளியுடையது. அழல் - அழலுத லுடையது. சுடர் - ஒளியுடையது. ஞெகிழி - விறகின்சம்பந்தமு டையது.

## ஊழித்தீயின்பெயர்.

ருக. இவ்விருத்தத்தில் கனலொழுங்கு என்பதை இப்பொ ருட்கேற்பக் கனற்கொழுந்தெனத் திரித்துக்கொள்க. ஊழித்தீ - காலாக்கினி. வடவை - பெண்குதிரையின்முகத்திலுள்ளது. தீத்தி ரள் - தீயின்திரட்சி. மடங்கல் - இறுதிசெய்வது. வடவாமுகம் - பெண்குதிரையின் முகத்திலிருப்பது. கடையனல் - இறுதியிலுண் டாகுமக்கினி.

## கனற்கொழுந்தின்பெயர்.

கனற்கொழுந்து - அக்கினியின்கொழுந்து. சுவாலை - பிரகாச முடையது.

## விண்வீழ்கொள்ளியின்பெயர்.

விண்வீழ்கொள்ளி - உற்கை-எரித்தலுடையது.

## நறும்புகையின்பெயர்.

நறும்புகை - நறுமணப்புகை. வெடி - நறுமணமுடையது. நறை - நறுமணமுடையது. குய் —

## காட்டழலின்பெயர்.

ருஉ. காட்டழல் - காட்டக்கினி. தாவம் - எரித்தலுடையது.

## தீக்கடைகோலின்பெயர்.

தீக்கடைகோல் - ஞெலிகோல் - கடையுங்கோல்.

## விளக்கின்பெயர்.

விளக்கு - விளக்குவது. தீவிகை - பிரகாசித்தலுடையது. தீபம்-பிரகாசித்தலுடையது. சுடர்-பிரகாசித்தலுடையது. ஒளி - ஒளிர்தலுடையது.

---

* ஹவ்வியம் - தேவர்களை உத்தேசித்து மந்திரசம்பந்தமாக ஓமத்திலேவிடும் பால், நெய் முதலிய உணவுகள்.

## புகையின்பெயர்.

புகை - யாண்டும் புகுதலுடையது. ஆவி-வளர்ச்சியுடையது. தூபம்-பிரகாசமுடையது. தூமம் - அசைதலுடையது. அரி - செல்லுதலுடையது.

## தீப்பொறியின்பெயர்.

தீப்பொறி-அக்கினிப்பொறி. புலிங்கம்-பூற்காரத்தாற்செல்வது.

## தீத்தெய்வத்தின்பெயர்.

தீத்தெய்வம்-அக்கினிதேவன். பாவகன்-சுத்தஞ்செய்வோன்.

## தீத்தெய்வத்தின்பாரியின்பெயர்.

தீத்தெய்வத்தின்பாரி - * சுவாகாதேவி -

## நீரின்பெயர்.

௫௩. நீர் - சுத்திக்குக்காரணமாயுள்ளது. வாரி-வரம்பினாலே தடுக்கப்படுவது. ஆலம் - கிலாலம் - நெருப்பினைத்தணித்தலுடையது, உதராக்கினியைத் தணித்தலுடையது, மறித்துக் கட்டப்படுவது. மழையலர் - மேகங்களின் புட்பம்போன்றிருப்பது. கமலம் - தாகமுள்ளவரால் விரும்பப்படுவது. காண்டம் - விரும்பப்படுவது. நீரம் - பள்ளத்திற்செல்லுதலுடையது, சுத்திக்குக் காரணமாயுள்ளது. புட்கரம் - தேவபூசைக்குக்காரணமாயுள்ளது, யாவராலும் பூசிக்கப்படுவது. சிந்து - ஒழுகுதலுடையது. புனல்- சலிலம் - பிராணிகளாலடையப்படுவது. பாணி - குடிக்கப்படுவது. கார் - மேகசம்பந்தமுடையது. அறல் - முரிதலுடையது. புவனம் - பதார்த்தங்கள் முளைத்தற்குக் காரணமாயுள்ளது. நாரம் - பரமாத்துமாவாற் சிருட்டிக்கப்பட்டது. கனவிரதம் - முகிலின் இரசமாயுள்ளது. கவந்தம் - விரும்பப்படுவது, சரீரத்தினைநிலைபெறுத்துதலுடையது, உயிர்களுக்குச் சுகங் கொடுப்பது. மாரி - மேகசம்பந்தமுடையது. அம்பு-பெருகும்போதொலித்தலுடையது. உதம்-நெகிழ்ச்சியுடையது. அப்பு - வியாபித்தலுடையது. வருணம்-யாவராலுங் கொள்ளப்படுவது. சீவனம்-உயிர்கள் சீவித்தற்குக் காரணமாயுள்ளது. வனம்-யாவராலும் பூசிக்கப்படுவது. வார்-இந்திரனாலே வேண்டப்பட்டது.

௫௪. பயம்-குடிக்கப்படுவது, செல்லுதலுடையது. மழை - இளமைப்பருவத்திற்குரிய குணஞ்செய்தலுடையது. உதகம் - நெகிழ்ச்சியுடையது. தோயம் - உயிர்களை நிலைபெறுத்துதலுடையது.

---

* சுவாகா - தக்கன்மகள்.

பயசு - குடிக்கப்படுவது, செல்லுதலுடையது. சம்பரம் - இந்திரனாற் கொடுக்கப்பட்டது. பானீயம் - குடிக்கப்படுவது. வயம் - செல்லுதலுடையது. சீவனீயம்-சீவித்தற்குக் காரணமாயுள்ளது. தீர்த்தம்-கடத்தற்குரியது, சுத்தமுடையது. இரம் - உண்ணப்படுவது. சீதம் - குளிர்ச்சியுடையது. அயம் - செல்லுதலுடையது அளகம் - செல்லுதலுடையது. ஆம் - அம் - அமுதம் - இனிமையுடையது. கம் -புகழப்படுவது. சலம்-குளிர்வித்தலுடையது.

## வருணன்பெயர்.

வருணன் - பாசத்தாற்சத்துருக்களைக்கட்டுபவன், வரங்கேட்கப்படுபவன். புனல்வேந்தன் - நீருக்குத்தலைவன்.

## சூரியன்பெயர்.

ருரு. சூரியன் - சனங்களைத் தொழிலில்விடுவோன். பரிதி - வட்டவடிவமுடையவன். பாற்கரன் - ஒளிசெய்பவன். ஆதித்தன்- அதிதியின் மகன், கிரணங்களினாலே நீர்கவர்வோன். பனிப்பகை- பனியையழிப்பவன். சுடர் - பிரகாசமுடையவன், சுடுதலுடையவன். பதங்கன் - செல்லுதலுடையவன். இருள்வலி - இருளைக்கெடுப்பவன். சவிதா - சனங்களைத் தொழில்களிலேசெலுத்துவோன். சூரன் — என்றும் போக்குவரவுசெய்வோன். எல் - பிரகாசமுடையவன். மார்த்தாண்டன் - மிருதண்டருடையபுதல்வன், பிரமாண்டத்தைச் சீவிக்கச்செய்வோன். என்றூழ் - அருணன் - சஞ்சரித்தலுடையவன். ஆதவன் - பிரகாசமுடையவன். மித்திரன் - எல்லாவுயிர்களிலும் நண்புடையோன், மழையைக்கொடுப்போன். ஆயிரஞ்சோதியுள்ளோன் - ஆயிரங்கிரணமுடையவன். தரணி - ஆகாசத்தைக்கடப்பவன். செங்கதிரோன் - சிவந்தகிரணமுடையவன். சண்டன் - கோபமுடையவன். தபனன் - வெம்மைசெய்வோன். ஒளி - பிரகாசமுடையவன். சான்றோன் - (கருமங்களுக்குச்) சாட்சிகளாயுள்ளவன்.

ருசு. அனலி - அனலுடையது. அரி - இருளையழிப்பவன். பானு - பிரகாசிப்பவன். அலரி - கிரணங்களாற் பரப்பவன், அலர்த்துபவன். அண்டயோநி - பிரமாண்டத்திற்குக்காரணன். கனலி - கனலுதலுடையவன். விகர்த்தனன் - இருளைப்போக்குபவன், ‡விசுவகன்மாவினாலே தணிக்கப்பட்ட ஒளியுடையவன். கதிரவன்-

‡ தன் கணவனாகிய சூரியனுடைய வெம்மையைத் தாங்கலாற்றாது வருந்திய சஞ்சையென்னும் மகள்பொருட்டு விச்சுவகன்மா சாகத்தீவிலே சாணைக்கல்லிலே வைத்துச் சூரியனைக் கடைந்து வெம்மையைக் குறைத்தான் என்பது மார்க்கண்டேயபுராணம்.

கிரணமுடையவன். பகலோன் - பகற்காலத்திற்குரியவன். வெய்யோன் - உட்டணகிரணமுடையவன். தினகரன் - தினங்களைச்செய்பவன். பகல் - நாளினைப்பிரிப்பவன். சோதி - பிரகாசமுடையவன். திவாகரன் - தினங்களைச்செய்பவன். அரியமா - வேகத்தோடுசெல்பவன். இனன் - சஞ்சரித்தலுடையவன். உதையன் - உதித்தலுடையவன். ஞாயிறு — எல்லை - விளக்கமுடையவன். கிரணமாலி - கிரணக்கூட்டமுடையவன்.

ருஎ. * ஏழ்பரியோன் - சப்தா என்னுங் குதிரையுடையவன், ஏழுகுதிரைகளுடையவன். வேந்தன் - பிரகாசமுடையவன். விரிச்சிகன்-குரூரமான கிரணமுள்ளவன். விரோசனன் - மிக்கவொளியுடையவன். இரவி - துதிக்கப்படுபவன். விண்மணி - ஆகாயத்திலே இரத்தினம்போலவிளங்குவோன். அருக்கன் - யாவராலும் பூசைசெய்யப்படுவோன்.

## பரிதியின்வட்டத்தின்பெயர்.

பரிதியின்வட்டம்-சூரியன்போலத்தோன்றும் வட்டம். விசயம் —

## பரிதியின்கிரணத்தின்பெயர்.

பரிதியின்கிரணம் - சூரியனுடைய கிரணம். கரம் - இருளைநீக்குதலுடையது. தீவிரம் — பேரொளியுடைது.

## சந்திரன்பெயர்.

ருஅ. சந்திரன்-எப்போதும் பிரகாசமுடையவன். நிலவு-பிரகாசமுடையவன். சோமன்-அமிர்தம்பிறப்பிப்போன். களங்கன் - களங்கமுடையவன். நிசாபதி-இராத்திரிக்குத் தலைவன். பிறை - கலையினன் - கலைகளையுடையவன். உடுவின்வேந்தன் - நட்சத்திரங்களின்தலைவன். கலாநிதி - கலைகட்கு இருப்பிடமானவன். குபேரன் - அருவருப்பானசரீரமுடையவன். அலவன் - இராக்காலமுடையவன். சசி - முயற்களங்கமுடையவன். திங்கள் - அம்புலி - நிசாகரன்-இரவினைச்செய்பவன். இமகிரணன் -

* போசசம்புகாவியவுரைகாரர் ஒருகுதிரையே எழுமையுடையதாக வழங்கப்படுமென்பர். நிருத்தவுரைகாரர் "சப்தா என்னுங் குதிரை" என்பர்; "நகநுதி யச்சிணுற்ற நுதிநுவல் பக்கமாகும்—மகிழ்வுறு சந்தச்சான வயப்பரி யேழினுமங்—திகழ்காயத்திரியினோடு திருட்டுபு செகதிவென்றி—மிகுமனுட் டுபுநற்பந்திவிருகதி விளங்கி யோங்கும்" "மருவு முட்டிணிகே யென்னும் வாம்பரி யேழும்பூண்ட" என்பது மச்சபுராணம்.

குளிர்ந்த கிரணமுடையவன். தண்ணவன் - குளிர்ச்சியுடையவன் குரங்கி - மான்களங்கமுடையவன்.

௩௯. மதி - களிப்பினைத்தருபவன். இராக்கதிர் - இரவுக்குரியவொளியாயுள்ளவன். இந்து - குளிர்ந்த கிரணத்தால் நனைப்பவன். தானவன்- அல்லோன் - இராக்காலமுடையவன். விது - தேவர்களாற் பானம்பண்ணப்படுபவன். குமுதநண்பன் - குமுதப்பூவிற்கு நாயகன். சுதாகரன் - அமுதகிரணமுடையவன். * வேந்தன் - பிரகாசமுடையவன். ஆலோன் - இராக்காலமுடையவன். முயலின்கூடு - முயற்களங்கத்திற்கிடமாயுள்ளவன். பசுங்கதிர்த்தே - பசியகிரணமுடையதேவன்.

## செவ்வாயின்பெயர்.

௪௰. செவ்வாய் - செந்நிறமுடையது. செந்தீவண்ணன்-செந்நிறமுடையவன். அங்காரகன் - செந்நிறமுடையவன், சரீரத்தை வருத்துவோன். சேய் - செந்நிறமுடையவன். குருதி - செந்நிறமுடையது. வக்கிரன் - கொடுமையுடையவன். பௌமன் - † பூமியின்மகன். குசன் - பூமியினின்றும் பிறந்தவன். நிலமகன் - பூமியின்மகன். அரத்தன் - சிவப்புநிறமுடையவன். அழலோன் - நெருப்பினிறமுடையவன். ‡ மங்கலன் - ஆரல் - நெருப்பினிறமுடையவன். உதிரன் - சிவப்புநிறமுடையவன்.

## புதன்பெயர்.

௪௧. புதன் - அறிவுடையவன். சிந்தைகூரியன் - கூரியபுத்தியுடையவன். கணக்கன் - கணிதத்தலைவன். தேர்ப்பாகன் - தேருக்குப் பாகன். அருணன் - பச்சைநிறமுடையவன். சாமன் - பச்சைநிறமுடையவன். தூதுவன் - அறிவிப்போன். மால் - பெருமையுடையவன். மதிமகன் - சந்திரனுடைய மகன். அறிஞன் - அறிவு

---

* இது ராஜா என்னும் வடமொழிக்குச் சமபதம்.

† பரத்துவாசமுனிவர் நிருமதையாற்றங்கரையிலே ஒரு பெண்ணைக் கண்டு மயங்கிப் பூமியிலே வீழ்த்திய வீரியத்தினின்றும் பிறந்து பூமிதேவியால் வளர்க்கப்பட்டமையாற் செவ்வாய்க்குப் பூமகன் எனப் பெயராயிற்று என்பது விநாயகபுராணம்.

‡ விநாயகக்கடவுளுடைய மங்கலக்காட்சி பெற்றமையால் மங்கலனெனப்பட்டான் என்பர். "மங்கலந்திகழ் காட்சிநாம் வந்தருள் வனப்பாற்—றங்குவையக மங்கலனெனவுனைச் சாற்றும்" என்பது விநாயகபுராணம்.

டையவன். பாகன் - தேர்ப்பாகன். புலவன் - அறிஞன். * அறு வழி - தார்த்தஸ்திரிமகன். மேதை - அறிஞன். பச்சை - பச்சை நிறமுடையவன். புந்தி - புத்தியுள்ளோன். பண்டிதன் - ஞான முள்ளோன்.

## வியாழன்பெயர்.

சுஉ. வியாழன் - மஞ்சணிறமுடையவன். தெய்வமந்திரி - தேவர்களுக்குப் புத்திசொல்வோன். சிகண்டிசன் - அங்கிராமுனி யின் மகன். அமைச்சன் - தேவர்களுக்கு மந்திரி. சீவன் - தேவர் களைச் சீவிப்பிப்போன். வேதன் - சாஸ்திரஞானமுடையவன். ஆண்டளப்பான் - ஆண்டுகளையளப்பவன். ஆசான் - தேவர்களுக் காசாரியன். வேந்தன் - பிரகாசமுடையவன். பொன் - பொன் னிறமுடையவன்.

## வெள்ளியின்பெயர்.

வெள்ளி - வெண்ணிறமுடையவன். அசுரமந்திரி - அசுரருக் குப் புத்திசொல்வோன். உசனன் - அசுரர்மேன்மையை வளர்ப் போன். பார்க்கவன் - பிருகுவமிசத்திற் பிறந்தவன். சுங்கன் —

சுக்கிரன் - வெண்ணிறமுடையவன், தேவர்களுக்குத் துக்கங் கொடுப்பவன். பளிங்கு - பளிங்குநிறமுடையவன். புகர் —

† கவி - கவியென்னுமுனியின் புத்திரன், சாதுரியமாகப் புகழ் வோன். மழைக்கோள் - மழைக்குரிய கிரகம்.

## சனியின்பெயர்.

சுங. சனி - மெல்லச் செல்வோன். கதிர்மகன் - சூரியனு டைய மகன். மந்தன் - மெல்லச்செல்வோன். காரி - கருநிறமு டையவன். கரியவன் - கருநிறமுடையவன். சௌரி - சூரியனு டையமைந்தன். மேற்கோள் - மேலுள்ள கிரகம். முதுமகன் - முதியமகன். பங்கு-முடமுடையவன். நீலன்-கருநிறமுடையவன். முடவன் - முடக்காலுடையவன். நோய்முகன் - நோய்பொருந் திய முகமுடையவன்.

## இராகுவின்பெயர்.

இராகு - சந்திரனை உண்டு கக்குவோன். தமம் - வருத்துதலு டையது. கறுப்பு - கறுப்புநிறமுடையது.

---

* அறு - கற்புவழுவினவள்; என்றது; சந்திரனைப் புணர்ந்து கற்பிலே வழுவிய வியாழன் மனைவியாகிய தாரையை. வழி - மகன். † பிருகுமுனி மரபிலுள்ள அப்பிராணன் மகன்.

## கேதுவின்பெயர்.

கேது - தன்னையறிவிக்குமியல்புடையது. செம்மை - சிவப்பு நிறமுடையது. சிகி - கதிர்ப்பகை-சூரியனுக்குப்பகைவன்.

## மேடத்தின்பெயர்.

சுசு. மேடம்-ஆட்டுவடிவமுடையது. மை - வருடை - ஆடு - கொறி - மறி -

## இடபத்தின்பெயர்.

இடபம் - எருத்துவடிவமுடையது. குண்டை - சே - மூரி - புல்லம் - கோ - விடை -

## மிதுனத்தின்பெயர்.

மிதுனம் - இரட்டையாயுள்ளது. தண்டு - யாழ்வடிவுள்ளது. யாழ் - யாழ்வடிவுள்ளது. விழவு - இரட்டை-இரண்டாயுள்ளது. சவைமகள் -

## கர்க்கடகத்தின்பெயர்.

கர்க்கடகம் - நண்டுவடிவமுடையது. நண்டு - ஞெண்டு - அலவன் - சேக்கை - நள்ளி -

## சிங்கத்தின்பெயர்.

சுரு. சிங்கம் - சிங்கவடிவமுடையது. அரி - ஆளி - மா - கொடும்புலி -

## கன்னியின்பெயர்.

கன்னிக்கு - (௰டந்தையர்பேரெல்லாம் வரும்.)

## துலாத்தின்பெயர்.

துலாம் - தராசுவடிவுடையது. துலை - நிறுப்பான் - சீர் - கோல் - தூக்கு - வாணிகன் -

## விருச்சிகத்தின்பெயர்.

விருச்சிகம் - தேள்வடிவுள்ளது. தெறுக்கால் - தேள் -

## தனுவின்பெயர்.

சுசு. தனு - வில்வடிவமுடையது. கொடுமரம் - வில்வடிவமுடையது. துரோணம் - வளைந்தவடிவுடையது. * சாபம் - வில்வடிவமுடையது. சிலை-வில்வடிவமுடையது.

## மகரத்தின்பெயர்.

மகரம் - மகரமீன்வடிவமுடையது. மான் - கலை - சுறு -

## கும்பத்தின்பெயர்.

கும்பம் - குடவடிவமுடையது. குடம் - கரீரம் - சாடி - குடங்கர் -

## மீனத்தின்பெயர்.

மீனம் - மீன்வடிவமுடையது. மீன் - மயிலை - மற்சம் - கர்வமுடையது. சலசரம் - சலத்திற்சரிப்பது.

## அச்சுவினியின்பெயர்.

சுஎ. அச்சுவினி - குதிரைரூபமுடையது. பரி - குதிரைவடிவுடையது. மருத்துவநாள் - மருத்துவருக்குரியநாள். வாசி - குதிரைவடிவுடையது. ஐப்பசி — யாழ் - ஏறு - இரலை - முதனாள் - நாள்களுள் முதலிலுள்ளது. சென்னி -

## பரணியின்பெயர்.

கிழவன் - சோறு - பகலவன் - தராசு - தாழி - தருமனாள் - அடுப்பு - அடுப்புப்போல்வது. பூதம் - தாசி - முக்கூட்டு - மூன்றுசேர்ந்தது.

## கார்த்திகையின்பெயர்.

சுஅ. எரிநாள் - அக்கினிக்குரியநாள். ஆரல் - அக்கினிக்குரியது. இறால் - அறுவாய் - ஆறுபிரிவுள்ளது. அளக்கர் - நாவிதன் - அங்கி - அக்கினிக்குரியது. அளகு -

## உரோகிணியின்பெயர்.

பிரமனாள் - பிரமாவுக்குரியநாள். சகடு - தேர்ச்சில்லுப்போன்றது. பண்டி - சதி - வையம் -

---

* சாபம் - மூங்கிலாற் செய்யப்படுவது; பம்-மூங்கில்.

உருள் - விமானம் - தேர் - ஊற்
றல் - உரோணி -

## மிருகசீரிடத்தின்பெயர்.

சுகூ. மிருகசீரிடம் - மானின்தலைபோன்றது. திங்களுள் - சந்திரனுக்குரியநாள். மதி - சந்திரனுக்குரியநாள். பேராளன் - மான்றலை - மான்தலைபோல்வது. மாழ்கு - மார்கழி - மும்மீன் - மூன்று நட்சத்திரம். நரிப்புறம் - பாலை -

## திருவாதிரையின்பெயர்.

செங்கை - மூதிரை - யாழ் - ஈசன்றினம் - சிவனுக்குரியநாள்.

## புனர்பூசத்தின்பெயர்.

எ௦. அதிதிநாள் - அதிதிக்குரியநாள். கழை - புனர்தம் - கரும்பு - புனிதம் - பிண்டி - ஆவணம் -

## பூசத்தின்பெயர்.

குருவினுள் - கொடிறு - வண்டு - காற்குளம் -

## ஆயிலியத்தின்பெயர்.

அரவினுள் - ஆதிசேடனுக்குரியநாள். கௌவை - பாம்பு - ஆதிசேடனுக்குரியநாள். ஆயில் -

## மகத்தின்பெயர்.

எக. கொடுநுகம் - வளைந்தநுகம்போல்வது. வேள்வி - வாய்க்கால் - வேட்டுவன் - மாசி - முதலில்வருஞ்சனி - முதற்கோணத்திசைக்கண்வருநாள்.

## பூரத்தின்பெயர்.

இடையெழுஞ்சனி - துர்க்கை-துர்க்கைக்குரியநாள். எலி - பகவதிநாள் - துர்க்கைக்குரியநாள். நாவிதன் - கணை -

## உத்தரத்தின்பெயர்.

எஉ. பங்குனி - கடையெழுஞ்சனி - செங்கதிர்நாள் - சூரியனுக்குரியநாள்.

## அத்தத்தின்பெயர்.

காமரம் - அங்கிநாள் - கௌத்துவம் - கைம்மீன் - களிறு - நவ்வி - ஐவிரல் -

## சித்திரையின்பெயர்.

எங. நெய் - பயறு - மீன் - அறுவை - ஆடை - தூசு - நடுநாள்-நடுவிலுள்ள நாள். தச்சன் - துவட்டாநாள் - துவட்டாவுக்குரியநாள்.

## சோதியின்பெயர்.

விளக்கு - விளக்குப்போல்வது. மரக்கால் - வீழ்க்கை - வெறுறுகம் - காற்றினுள் - காற்றுக்குரியநாள். காற்று - தீபம் -

## விசாகத்தின்பெயர்.

எசு. விசாகம் - ஒளியுடையது. முற்றில்-சுளகுபோன்றது. வைகாசி - காற்றுநாள் - முறம் - சுளகுபோன்றது. சுளகு - சுளகுபோன்றது. சேட்டை -

## அனுடத்தின்பெயர்.

புல் - முடப்பனைபோன்றது. தாளி - முடப்பனைபோன்றது. பெண்ணை - முடப்பனைபோன்றது. தேள் - போந்தை - முடப்பனைபோன்றது. மித்திரநாள் -

## கேட்டையின்பெயர்.

எடு. சேட்டை - இந்திரனுள்-இந்திரனுக்குரியநாள். வேதி - தழல் - எரி - வல்லாரை -

## மூலத்தின்பெயர்.

தேட்கடை - குருகு - கொக்கு - சிலை - அன்றில் - ஆனி - அசுரநாள் -

## பூராடத்தின்பெயர்.

எசு. உடைகுளம் - உடைகுளம்போல்வது. முற்குளம் - நீர்நாள் -

## உத்தராடத்தின்பெயர்.

கடைக்குளம் - ஆனி - விச்சுவநாள் - ஆடி -

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

## திருவோணத்தின்பெயர்.

மாயோனாள் - விட்டுணுவுக்குரியநாள். உலக்கை - முக்கோல் - சிரவணம் - சோணை -

## அவிட்டத்தின்பெயர்.

எஎ. காகப்புள் - வசுக்கணாள் - பறவை - புள் - ஆவணி -

## சதயத்தின்பெயர்.

செக்கு - சுண்டன் - போர் - குன்று - வருணனாள் -

## பூரட்டாதியின்பெயர்.

எஅ. முற்கொழுங்கால் - நாழி - புரட்டை -

## உத்தரட்டாதியின்பெயர்.

முரசு - பிற்கொழுங்கால் - மன்னன் -

## இரேவதியின்பெயர்.

இரவிநாள் - சூரியனுக்குரியநாள். கலம் - தோணி - தொழு - நாவாய் - தோணிபோல்வது. கடைநாள் - இறுதியிலுள்ளநாள். சூலம் - பெருநாள் -

## அருந்ததியின்பெயர்.

எகூ. அருந்ததி - வடமீன் - வடக்கில்விளங்கும் நட்சத்திரம். சாலி - கீர்த்தியுடையவள்.

## விண்மீனின்பெயர்.

விண்மீன் - விண்ணிலேமீன்போல்வது. உடு - ஆகாயத்திலே செல்லுதலுடையது. தாரகை - விண்ணிலே செல்லுதலுடையது. பம்-பிரகாசமுடையது. உற்கை - தழல்போல்வது. சுக்கை - பூப்போல்வது.

## நாழிகையின்பெயர்.

நாழிகை - கழிந்துபோதலுடையது. கடிகை-விதிக்கப்பட்ட காரியத்தைச் செய்தற்குரியதாய் விளங்குவது. கன்னல் - இரித்தை -

## காலநுட்பத்தின்பெயர்.

துடி - கலை - விகலை -

## காலத்தின்பெயர்.

அ௰. காலம் - கணிக்கப்படுவது. வேலை-செல்லுதலுடையது. அமையம் - செவ்வி - ஏல்வை - பொழுது - பாணி - காலை - கணிக்கப்படுவது. கொன் - பதம் - போழ்து -

## நெடும்பொழ்தின்பெயர்.

நீட்டித்தல் - பாணித்தல் - நெடித்தல் -

## காலவிரைவின்பெயர்.

அக. ஒல்லை - இறை - சிறுவரை - இலேசம் - வல்லை - மாத்திரை -

## மத்தியானத்தின்பெயர்.

மத்தியானம் - பகலின் நடுப்பாகம். * நண்பகல் - பகலின் நடுப்பாகம். உச்சி-சூரியனையுச்சத்திலுடையது. நடுப்பகல் - பகலின் நடு.

## இராசியின்பெயர்.

இராசி - காலபலனைக் கொடுப்பது. இல் - கிரகங்களுக்கு வீடாயிருப்பது. பவனம் - கிரகங்களுக்கு வீடாயிருப்பது. ஓரை - செல்லுதலுடையது.

## இராவின்பெயர்.

அஉ. இரா - சுகங்கொடுப்பது. அல் - விபாவரி - சந்திரன்முதலியன பிரகாசித்தலுடையது. கங்குல் - அல்கல் - சனங்கள் போக்குவரவின்றித் தங்குதற்குக் காரணமாயுள்ளது. யாமினி - யாமங்களையுடையது. நத்தம் - ஒடுங்குதற்குக் காரணமானது. எல்லி - யாமம் - மாலை - இரசனி - காமமுண்டாக்குவது. நிசி - சனங்களுடைய தொழில்களைக்குறைப்பது.

## பகலின்பெயர்.

எல் - திவா -

## நாளின்பெயர்.

ஏல்வை - திவசம் - பிரகாசமுடையது. வைகல் - கழிதலுடையது. அல்கல் - தினம் - எல்லை - ஆ்னியம் - திரும்பிவருதலுடையது. பகல் -

* நன்பகல் என வழங்குவாருமுளர்.

## இருளின்பெயர்.

௮௩. சருவரி - தொழிலைக் கெடுப்பது. அந்தகாரம் - சனங்களுடைய கண்களைக் குருடாக்குதலுடையது. கச்சளம் - மலினமான சலம்போன்றிருப்பது. தமம் - சனங்களை யொடுங்கியிருக்கச் செய்வது. துவாந்தம்-வழிகளை மறைத்தலுடையது. திமிரம் - நிலத்திற்கிரமுண்டாக்குதலுடையது. துணங்கறல் -

## முன்னைநாளின்பெயர்.

நெருநல் - நென்னல் -

## பின்னைநாளின்பெயர்.

பின்றை - பின்னுள்ளது. பிற்றை - பின்னுள்ளது.

## வைகறையின்பெயர்.

௮௪. வைகறை - நாளின்முடிவாயுள்ளது. புலரி - இருள்புலர்தலுடையது. விடியல் - இருள் புலர்தலுடையது.

## நிலவின்பெயர்.

நிலவு - பிரகாசமுடையது. சந்திரிகை - சந்திரனிலிருத்தலுடையது.

## வெய்யிலின்பெயர்.

வெய்யில் - வெம்மையுடையது. ஆதவம் - தபித்தலுடையது. என்றூழ் - சூரியனாலுருக்கப்படுவது.

## மாலையின்பெயர்.

சாயம் - பகலைமுடிப்பது. சந்தி - பகலுமிரவுஞ் சந்திக்குங் காலம்.

## சாமத்தின்பெயர்.

சாமம் - யாமம் - சனங்களைச் சரியாதுதடுப்பது.

## பருவத்தின்பெயர்.

பருவம் - பிரிவுடையது. ஆனியம் - திரும்பிவருதலுடையது. இருது - செல்லுதலுடையது.

## ஒருகலையின்பெயர்.

௮௫. திதி - பக்கம் -

## மாதத்தின்பெயர்.

மாதம் - பூதங்களுக்குப் பரிணாமத்தைச்செய்வது. மதி - சந்திரசம்பந்தமுடையது. திங்கள் -

## மதிதேரிகலையிராவின்பெயர்.

சினிவாலி - சந்திரன் அணுவாகக் காணப்படுதலுடையது.

## மதிமறைகலையிராவின்பெயர்.

குகு - இருளாலே மறைத்தலுடையது.

## பூரணையின்பெயர்.

அசு. பூரணை சந்திரகலை நிறைதலுடையது. உவா - பவ்வம் - சந்திரகலைநிறைதலுடையது.

## அமாவாசையின்பெயர்.

ஆமாவாசை - சூரியனுஞ் சந்திரனுங்கூட வசித்தலுடையது. இந்துவோடிரவிகூட்டம் - சூரியனுஞ்சந்திரனுங் கூடுதலுடையது. அமை - சூரியசந்திரர்கள் கூடிச் சமீபமாக வசித்தலுடையது.

## முதற்பக்கந்தொடங்கி மூன்றுவட்டமாக வருகிற ஐந்து பக்கங்களின்பெயர்.

நந்தை - பத்திரை - சயை - இரித்தை - பூரணை -

## ஆவணிமுதலிரண்டிரண்டு மாதமாகிய வறுவகைப் பருவத்தின்பெயர்.

அஎ. கார் மழைபெய்தலுடையது. கூதிர் - குளிர்காற்றுடையது. முன்பனி - முன்னிரவிற் பனியையுடையது. பின்பனி - பின்னிரவிற்பனியையுடையது. இளவேனில் - இளவெய்யிலுடையது. முதுவேனில் - முதிர்ந்த வெய்யிலுடையது. ஆவணி புரட்டாதி - கார். ஐப்பசி கார்த்திகை - கூதிர். மார்கழி தை-முன்பனி. மாசி பங்குனி - பின்பனி. சித்திரை வைகாசி - இளவேனில். ஆனி ஆடி - முதுவேனில்.

## வருடத்தின்பெயர்.

அஅ. வருடம் - பிரீதிசெய்தலுடையது. வற்சரம் - இருதுக்கள்வசித்தலுடையது. ஆண்டு - சமை - சனங்கட்குத்துயர்செய்தலுடையது. ஆயனம் - வரிசையாக இருதுக்களை விடுதலுடையது.

## ஆண்டிற்பாதியின்பெயர்.

ஆண்டிற்பாதி - வருடத்திற்பாதி. அயனம் - சூரியகதிக்குக் காரணமாயுள்ளது.

## ஊழிகாலத்தின்பெயர்.

உகமுடிவு - உகத்தினந்தம், மடங்கல் - இறுதிசெய்வது.

## வாழ்நாளின்பெயர்.

வாழ்நாள் - வாழுநாள். ஆயுள் - செல்லுதலுடையது.

## அயன்வாழ்நாளின்பெயர்.

அயன்வாழ்நாள் - பிரமாவின்வாழ்நாள். கற்பம் - உலகத்தை யழித்தல்வல்லது.

## மழையின்பெயர்.

அக. மழை - இளமையடைவிப்பது. துளி - துளித்தலுடையது. திவலை - தூவல் - தூவுதலுடையது. சீகரம் - குளிர்செய்வது. தூறல் - தூறுந்தன்மையுடையது. மாரி - அழித்தலுடையது. வருடம் - பூமியை நனைத்தலுடையது. உறை - சொரிதலுடையது. ஆலி - துளியுடையது. வானம் -

## பெருமழையின்பெயர்.

ஆசாரம் - பரத்தலுடையது.

## விடாமழையின்பெயர்.

பனித்தல் - சோனை -

## துளியின்பெயர்.

கo. துளி - துளித்தலுடையது. திவலை - தூவல் - தூவுதலுடையது. சிதர் - சிதறுதலுடையது. சீகரம் - குளிர்ச்சி செய்வது. ஆலி - தளி - உறை - சொரிதலுடையது.

## ஆலங்கட்டியின்பெயர்.

ஆலங்கட்டி - மழைக்கட்டி. ஆலி - கரகம் - பயிரைக் கெடுப்பது. கனோபலம் - மேகத்தின்கற்போன்றது.

## மேலின்பெயர்.

உம்பர் - மேக்கு -

## கீழின்பெயர்.

கிழக்கு -

## மேகத்தின்பெயர்.

கக. மேகம் - நீரால் பூமியை நனைப்பது. மங்குல் - சீதம் - குளிர்ச்சியுடையது. பயோதரம் - நீரைத்தரித்திருப்பது.

தாராதாரம் - சலதாரைகளைத் தரித்திருப்பது. குயின் - மழை - எழிலி - எழுச்சியுடையது. மஞ்சு - கொண்டல் - சீமூதம்-நீர் கட்டப்பட்டிருத்தலுடையது. கொண்மூ - முகில் - விண் - விசும்பு - மால் - சலதரம் - நீர் தரித்திருப்பது. செல் - புயல் - கனம் - நீரால் வெம்மைநீக்குவது. கந்தரம் - நீர் தரித்திருப்பது. கார் - கருநிறமுடையது. மை - கருநிறமுடையது. மாரி -

## இடியின்பெயர்.

௬௨. இடி - இடித்தலுடையது. வெடி-ஒலியுடையது. ஒலி - ஒலித்தலுடையது. அசனி - அழித்தலுடையது. செல் - விண்ணேறு - மடங்கல் - இறுதிசெய்வது. உரும் - அனலேறு -

## மின்னின்பெயர்.

வித்துத்து - அதிக பிரகாசமுடையது. தடித்து - இருளைக்கண்டித்தலுடையது. சம்பை-மழையையறிவித்து உழவர்துயரைப் போக்குவது. சபலை - மெல்லப்போவது. சஞ்சலை - அசைவுடையது. மின்னல் - பிரகாசமுடையது. கனருசி - மேகத்தின்காந்தி.

## பனியின்பெயர்.

௬௩. இமம் - வருத்தத்தைக்கொடுப்பது. துகினம் - தாமரையை வருத்துவது.

## பரிவேடத்தின்பெயர்.

பரிவேடம் - சூழ்ந்துவளைப்பது. ஊர்கோள் - *குறைவின்றி மண்டலமாக வொளி பரத்தலுடையது. வட்டம் - வட்டவடிவமுடையது.

## வானவில்லின்பெயர்.

இந்திரதனு - இந்திரவில்.

* திருக்கோவையாருரை.

# இரண்டாவது
# மக்கட்பெயர்த்தொகுதி.

## முனிவர்பெயர்.

உ. முனிவர் - மௌநமுடையவர். துறவர் - பொருட்பற்று உடற்பற்று என்னும் இருவகைப்பற்றினையும் விடுதலுடையவர். சார்பில்லோர் - அவ்விருவகைப்பற்றுமில்லாதவர். நீத்தோர் - அவ்விருவகைப்பற்றினையும் நீக்கினவர். தவர் - மனம் பொறியின்வழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உடம்பை வாட்டுதலாகிய தவமுடையவர். முனைவர் - மௌநமுடையவர், கோபமுடையவர். மெய்யர் - உண்மையுணர்ச்சியுடையவர். அறவர் - அறநெறியுடையவர். மாதவர் - மகாதவமுடையவர். கடிந்தோர் - புலன்களிற்செல்லும் இச்சையை அறுத்தவர். அந்தணர் - அழகிய தண்ணளியுடையவர். அடிகள் - ஐயர் - எவராலும் பூசிக்கத்தக்கவர். உறுவர் - யாவரினுமிக்கவர். தாபதர் - தவமுடையவர். இருடிகள் - அறிவின்மிக்கவர். உயர்ந்தோர் - உயர்ச்சியுடையவர். யோகர் - கடவுளைத் தியானிப்பவர். அறிஞர் - அறிவுடையவர். பண்ணவர் - பெருமையுடையவர். அருந்தவர் - பிறராற் செயற்கருந்தவமுடையவர்.

## சமணநீத்தோர்பெயர்.

௩. சமணநீத்தோர் - சமணசமயத்துள்ளமுனிவர். சௌமியர் - சாந்தமுடையவர். யோகர் - கடவுளைத்தியானிப்பவர். திகம்பரர் - உடையில்லாதவர்.

## சைவத்தோர்பெயர்.

சைவத்தோர் - சிவனைக்கடவுளாகவுடையமுனிவர். மாவிரதியர்-மகாவிரதசமயமுடையவர். பாசுபதர் - பாசுபதசமயமுடையவர். காளாமுகர் - காளாமுகசமயமுடையவர்.

## மால்சமயத்தோர்பெயர்.

மால்சமயத்தோர் - விட்டுணுசமயத்தவர். பாகவதர் - பகவானாகிய விஷ்ணுவுக்குப் பாடலாடல் செய்பவர்.

## புத்தர்பெயர்.

புத்தர் - அறிவுடையவர். சீவகர் - சீவித்தலைச்செய்வோர் பௌத்தர் - புத்தனைக் குருவாகவுடையவர். தேரர் - பிச்சையாற்

சேவிப்போர். சாக்கியர் - தேக்கஞ்சோலையில் வசிப்பவர். (சாகம்-தேக்கமரம்.)

சிலர் சமணருள் நிகண்டவாதிகளையே திகம்பரர் என்பர். சைவத்தோர் என்பது சைவத்தவத்தோரைக் குறித்துநின்றது; திவாகரநிகண்டுட் கண்டது. சமணர் என்பதற்குச் சிரமத்தோடு தவஞ்செய்வார் என்பர்.

## சமணரிற் சித்திபெற்றோராவார்.

ச. நீரிலும் பூதலத்திலும் ஆகாயத்திலும் மற்றைய இடங்களிலும் நினைத்துழிச் செல்லுகின்ற சாரணர் எண்மர்; அவர், தலசாரணர், சலசாரணர், பலசாரணர், புட்பசாரணர், தந்துசாரணர், சதுரங்குலசாரணர், சங்கசாரணர், ஆகாசசாரணர் எனப்படுவர். சாரணர் - நினைத்துழிச்செல்வோர்.

## சடைமுடித்தபடிவர்பெயர்.

சடைமுடித்தபடிவர் - சடையை முடித்த வடிவமுடையவர். தாபதர் - தவமுடையவர்.

## அகத்தியன்பெயர்.

அகத்தியன்-விந்தமலையை அடக்கினவன். கும்பயோனி-குடத்தைப் பிறப்பிடமாகவுடையவன். குறுமுனி - குறிய ரூபமுடைய முனி.

உருப்பசி என்னும் நாட்டிய ஸ்திரியிலே மோகங்கொண்ட மித்திரன் வருணன் என்னும் இருவராலும் ஒரு குடத்திலே வீழ்த்தப்பட்ட வீரியத்தினின்று அகத்தியரும் வசிட்டரும் அவதரித்தார்கள் என்பது பாகவதம். மித்திரனுடைய வீரியத்தினால் அகத்தியரும் வருணனுடைய வீரியத்தினால் வசிட்டனும் பிறந்தனர் என்பது இராமாயணம்.

## மறையவர்பெயர்.

ரு. மறையவர் - வேதமோதுதலுடையவர். ஐயர் - பூசிக்கத்தக்கவர். வேதியர் - வேதமோதுதலுடையவர். நூலோர் - பூணுநூலுடையவர். அறுதொழிலாளர் - ஓதல், ஓதுவித்தல் முதலிய ஆறுதொழில்களையும் ஆள்பவர். ஆய்ந்தோர் - வேதங்களை ஆராய்தலுடையவர். பூசுரர் - பூமிக்குத்தேவர். தீவளர்ப்பவர் - அக்கினி வளர்ப்பவர். தொழுகுலத்தோர் - தொழுங்குலமுடையவர். அந்தணர் - அழகிய தண்ணளியுடையவர். *ஆதிவருணர் - முதற்குலமுடையவர். முப்புரிநூன்மார்பர் - முப்புரிநூல்தரித்த மார்புடையவர். மெய்யர் - மெய்யுணர்வுடையவர். விப்பிரர் - பூரணமாக்கு

வோர். வேதபாரகர் - வேதம் என்னுங் கடலின் கரையிற் போத லுடையவர். (வேதமுழுதுங் கற்பவர் என்றபடி) வேள்வியாளர்- யாகஞ்செய்பவர்.

அந்தணர் என்பதற்கு வேதாந்தத்தை அணவினவர் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

௬. இருபிறப்பாளர்-உபநயநத்துக்கு முன் ஒன்றும் உபநய நத்தோடு ஒன்றுமாகிய இருபிறப்புடையவர். பார்ப்பார் - வேதங் களைப் பார்ப்பவர். மேற்குலர் - மேலானகுலமுடையவர். உயர்ந் தோர் - குலமுதலியவற்றால் உயர்ச்சியுடையவர்.

## பிரமசாரியின்பெயர்.

பிரமசாரி - வேதத்தை அநுசரித்து விரதம் அநுட்டிப்பவன். வன்னி - வருணத்திற்குரிய ஒழுக்கமுடையவன்.

## துரோணாசாரியன்பெயர்.

துரோணாசாரியன் - துரோணனாகிய குரு. மறைக்கொடி யோன் - வேதத்தைக்கொடியாகவுடையவன். வின்னூலாளன் - வில்வேதத்தில் நற்பயிற்சியுடையவன். பாரத்துவாசன் - பரத்து வாசமுனிவர் மகன்.

துரோணன் - துரோணகும்பத்திற் பிறந்தவன். துரோணகு ம்பம் - பதக்கென்னும் அளவுகொண்ட நீர்கொள்ளுங் குடம். "பர த்துவாசனென்பான் - விரதவேள்விதன்னின் மேனகையாலான- சுரததாதுவீழ்ந்த துரோணகும்பந்தன்னில் - வரதனொருவன்வந் தான்" என்றார் பாரதகாரர்.

## அறிஞர்பெயர்.

௭. அறிஞர்-மெய்ப்பொருளையறிந்தவர். சான்றவர் - குணம் முதலியவைகளால் நிறைந்தவர். மிக்கோர் - மேற்பட்டவர். நல் லோர் - நன்மையுடையவர். தகுதியோர் - நடுநிலைமையுடையவர். மேலோர் - மேன்மையுடையவர். ஆய்ந்தோர் - நூலாராய்ச்சியு டையவர். உலகம் - உண்மையைக்கண்டுணரும் பெரியோர். மேதா வியர் - அறிவுடையவர்.

## ஆசாரியன்பெயர்.

ஆசாரியவன் - ஒழுக்கமுடையவன். ஆசான்-ஆசாரியன்.(ஆசா ர்யன். என்பது ஆசான் என விகாரமாயிற்று.) ஓசன் - வெளிப் படுத்துவோன். உபாத்தியாயன் - மாணவர்க்கு நூல்களைக் கற்பிப் பவன். பணிக்கன் - கல்விபயிற்றுபவன்.

## மாணுக்கன்பெயர்.

மாணுக்கன் - பாலியப்பருவமுடையவன். கற்போன் - கற்றலுடையவன்.

## பண்டிதர்பெயர்.

அ. பண்டிதர் - மெய்யுணர்வுடையவர். கலைஞர்-கலைகளையறிந்தவர். மேதையர் - அறிவுடையவர். மூத்தோர்-அறிவான்முதிர்ந்தவர். கற்றவர் - நூல்களைப்படித்தவர். அவை - சபைக்குரியவர். விற்பன்னர் - கல்வியில் மேற்போனவர். கவிஞர் - சாதுரிய வருணனைகளைச் செய்பவர். சங்கம் - விசாரணையுடையவர். சாரதி - யாவரையுநடத்துவோன், சூரி - நற்செயலிற்செலுத்துவோன். சாடு - சொற்களைப் பிளந்துணரும் வன்மையுடையவன். புலவர் - அறிவுடையவர். புதர் - அறிவுடையவர்.

## கலைஞர்பெயர்.

கலைஞர் - கலைகளையறிந்தவர். கவிவல்லோர் - கவிசெய்தலில் வல்லவர்.

## ஓத்துரைப்போர்பெயர்.

ஒத்துரைப்போர் - ஓதப்படுமவைகளையுரைப்பவர். கணக்காயர் - கல்வியாராய்வுடையவர்.

## மூத்தோன்பெயர்.

௯. மூத்தோன் - அறிவுமுதலியவற்ருல் முதிர்ந்தோன். குரவன் - கௌரவமுடையவன். ஐயன் - பூசிக்கத்தக்கவன். சுவாமி - பொருளுடையவன். கோமான் - பூமியையுடையவன். அடிகள் - அத்தன் - பொருளுடையவன். உரவோன்-அறிவுடையவன், வலிமையுடையவன். ஈசன் - ஆளுகையுடையவன். பதி - காப்பவன். இறை - உயர்ச்சியையுடையவன்.

## பெருமையிற் சிறந்தோன்பெயர்.

பெருமையிற்சிறந்தோன் - பெருமையால் மிக்கவன். குரிசில் - கௌரவமுடையவன். அண்ணல் - எவராலுமடையப்படுபவன். ஏந்தல் - யாவரினும் மிக்கவன். தோன்றல் - உயர்ச்சியுடையவன். செம்மல் - நடுநிலைமையுடையவன்.

## எப்பொருட்குமிறைவன்பெயர்.

௧௦. நாதன்-எவரையும் விசாரணைசெய்வோன். கொழுநன் - கொழுமையுடையவன். காந்தன்-எவராலும் விரும்பப்படுவோன்

பதி - காப்பவன். கோன் - செல்லுகையுடையவன். ஈசன் - ஆளு கையுடையவன். ஆதிபன்-மேலான பரிபாலனமுடையவன். அதி பன்-ஆதிபன். செம்மல் - நடுநிலைமையுடையவன். அரன் - தீங்கு களையழிப்பவன். பிரான் - எவராலுமடையப்படுவோன். ஆதி - முதன்மையுடையவன். மன்னன் - பெருமையுடையவன்.

## உயர்ந்தவர்பெயர்.

உலகம் - உண்மையைக்கண்டுணரும் அறிஞர்.

## திரண்டோர்பெயர்.

௧௧. திரண்டோர் - கூட்டமானவர். சவை - பலருங்கூடுத லாற்பிரகாசித்தலுடையது. சமவாயம்-கூடிவருதலுடையது. சங் கம் - பலருங்கூடுதலுடையது. சமுதாயம் - எவராலும் நன்கடை யப்படுவது. சமூகம் - நல்லநியாயமுடையது. கோட்டி - பலவித சம்பாஷணையுடையது. அவை, குழாம் - சனங்களாற்குழுவாதலு டையது. குழு - கூடுதலுடையது. கூட்டம் - கூட்டப்படுவது. திரள் - கூடுதலுடையது. கணம் - மதிக்கப்படுவது.

## பெண்கள்கூட்டத்தின்பெயர்.

பண்ணை - விளையாட்டுடையது. ஒரை - ஒரைப்பாவைவிளை யாட்டுடையது. பொய்தல் - விளையாட்டுடையது. ஆயம் - திரளா னது. கெடவரல் - விளையாட்டுடையது.

## அரசன்பெயர்.

௧௨. அரசன் - உயிர்க்கினிமைசெய்பவன். புரவலன் - பூமி யைக் காப்பவன். பெருமான் - பெருமையுடையவன். ஏந்தல் - யாவரினும் மிக்கவன். பூபாலன் - பூமியைக் காப்பவன். வேந் தன் - ஆணையை விதிப்பவன். மன்னன் - பெருமையுடையவன். நரபதி - மனிதரைக்காப்பவன். பொருநன் - போர்செய்பவன். சக்கிரி - தேசமுடையவன், ஆஞ்ஞாசக்கரமுடையவன். நிருபன் - மனிதரைக்காப்பவன். குரிசில் - கௌரவமுடையன். பார்த்தி வன் - பூமியையாள்வோன். கோ-செல்லுகையுடையோன். கொற் றவன் - அரசியலுடையோன். இறைவன் - இறைபெறுபவன். அண்ணல்-எவராலுமடையப்படுவோன். தலைவன்-பெருமையுடை யவன். காவலன் - பூமியைக் காப்பவன்.

## வீட்டுமன்பெயர்.

௧௩. வீட்டுமன் - பயங்கரமானவிரதமுடையவன். தெய்வ விரதன் - பிரமசரியவிரதமுடையவன். கங்கைதனயன் - கங்கா

நதியின் மகன். சந்தனுமுன்பெற்றோன் - சந்தனுவின் மூத்தமகன். பிரமசாரி - பிரமசரியவிரதமுடையவன். காங்கேயன் - கங்கையுடையமகன்.

## குருகுலவேந்தர்பெயர்.

குருகுலவேந்தர் - குருவென்னுமரசன்குலத்திற் பிறந்த அரசர். பாரதர் - பரதனென்னும் அரசன்மரபிலுள்ளவர். பௌரவர் - பூருவென்னுமரசன்மரபிலுள்ளவர். கௌரவர் - குருவென்னுமரசன் மரபிலுள்ளவர்.

## தருமன்பெயர்.

கச. தருமன் - தருமநெறியுடையவன். குவளைத்தாரான் - குவளைமாலையையுடையவன். யுதிட்டிரன் - போரிலே திடமாய்நிற்பவன். பொறையன் - பொறுமையுடையவன். முரசக்கொடியோன் - முரசமெழுதிய கொடியுடையவன். அறத்தின்சேய் - இயமனுடையமகன். பாண்டுமைந்தன் - பாண்டுவென்னுமரசனுக்கு மகன். குந்திபுதல்வன் - குந்தியுடைய மகன். மெய்ம்மைவிரதமாக்கொள்வோன் - உண்மையை உறுதியான விரதம்போலக் கொள்பவன்.

## துரியோதனன்பெயர்.

கரு. துரியோதனன் - துக்கத்தோடு பொரப்படுவோன். காந்தாரிமைந்தன் - காந்தாரியுடையமகன். நந்தியாவர்த்தத்தாமன் - நந்தியாவர்த்தமாலையுடையவன். அரவுயர்த்தவன் - சர்ப்பக்கொடியுயர்த்தினவன். வணங்காமுடியினன் - யாரையும் வணங்காதமுடியுடையவன். அரசர்மன்னன் - இராசாதிராசன். சுயோதனன் - சுகத்தோடு பொருபவன். திருதராட்டிரன்செல்வன் - திருதராட்டிரனுடையமகன்.

## கன்னன்பெயர்.

கசு. கன்னன் - குண்டலம்பொருந்திய காதுடையவன். (பிறக்கும்பொழுது குண்டலம்பொருந்திய காதோடு பிறந்தவன்.) கதிர்மதலை - சூரியன்மகன். கவசகுண்டலன் - கவசமுங் குண்டலமுமுடையவன். கச்சைக்கொடியினன் - கச்சைவரைந்த கொடியுடையவன். கச்சை - யானையின்நடுப்பாகத்தைப்பெரும்பாலும்மூடிக்கட்டுந்தோல். கானீனன் - கன்னிபெற்றபிள்ளை. அங்கர்கோமான் - அங்கதேசத்தார்க்கு அரசன்.

## வீமன்பெயர்.

வீமன் - பயங்கரவடிவமுடையவன். மடங்கற்கொடியோன் - சிங்கக்கொடியுடையவன். மாருதி - வாயுவின்மகன். இடிம்பை

கொழுநன் - இடிம்பையென்னும் அரக்கிக்கு நாயகன். கதாயுதன் - தண்டாயுதமுடையோன்.

## அருச்சுனன்பெயர்.

௬௭. அருச்சுனன் - தூயசெயலுடையவன். கிருட்டிணன் - கறுப்புநிறமுடையவன். பற்குனன் - உத்தரநாளிற் பிறந்தவன். தனஞ்சயன் - பகையரசரைவென்றுபெற்ற திரவியமுடையவன். காண்டீவன் - காண்டீபமென்னும் வில்லுடையவன். சவ்வியசாசி - இடக்கையையும் பாணப்பிரயோகத்திலே ஆளுதலுடையவன். வீபற்சு - விசயம்பெறவேண்டும் என்னுஞ் சிந்தனை மேலிட்டவன். விசயன் - விசேஷவெற்றிபெறுபவன். பார்த்தன் - பிருதையுடைய மகன். கேசவற்குத்தோழன் - கண்ணபிரானுக்கு நண்பன். சுவேதவாகனன் - வெள்ளைக் குதிரைவாகனமுடையவன். கிரீடி - இந்திரனாலிடப்பட்ட கிரீடமுடையவன்.

## சேரன்பெயர்.

௬௮. சேரன் - சேரகுலமுடையவன், சேரம் என்னும் மலையுடையவன். வில்லவன் - விற்கொடியுடையவன். கொங்கன் - கொங்கதேசமுடையவன். வஞ்சிவேந்தன் - வஞ்சிநகருக்கு அரசன். போந்தின்றாரோன் - பனைமாலையுடையவன். கொல்லிவெற்பன் - கொல்லிமலையுடையவன். குடக்கோ - மேற்குத்தேசத் தலைவன். குட்டுவன் - குட்டநாடுடையவன். குடகன் - குடகநாடுடையவன். கோதை - உதியன் - வானவரம்பன் - மலையமான் - மலையமாநாடுடையவன். பொருநையாற்றோன் - பொருநைநதியுடையவன். சேரலன் - எவராலுமடையப்படுவோன்.

## சோழன்பெயர்.

௬௯. சோழன் - சோழகுலமுடையவன், சோழம் என்னுந் தேசமுடையவன். நேரியன் - நேரிமலையுடையவன். சென்னி - தலைமையுடையவன். பொன்னித்துறைவன் - காவேரிநதியுடையவன். நேரிவெற்பன் - நேரிமலையுடையவன். ஆரின்மாலையன் - ஆத்திமாலையுடையவன். கிள்ளி - அபயன் - பயமின்மையைச் செய்வோன். கோழிவேந்தன் - உறையூருக்குத்தலைவன். வளவன் - செல்வமுடையவன். செம்பியன் - சிபிச்சக்கரவர்த்தி மரபுடையவன். புலியுயர்த்தோன் - புலிக்கொடியை யுயர்த்தினவன். சூரியன் - சூரியமரபிற்பிறந்தவன். புனனாடன் - நீர்வளம்பொருந்திய நாடுடையவன். மால் - பெருமையுடையவன்.

## பாண்டியன்பெயர்.

உ0. பாண்டியன் - பாண்டியகுலமுடையோன், பாண்டிதேசமுடையவன். செழியன் - செல்வமுடையவன். கூடற்கோமான்-மதுரைக்கு அரசன். தென்னவன் - தென்றிடையவன். வேம்பின்றாரோன் - வேப்பமாலையுடையவன். வழுதி - குமரிச்சேர்ப்பன்-கன்னியாற்றங்கரைவரையுமாள்பவன். வைகையந்துறைவன்-வைகையாற்று வளமுடையவன். மாறன் - பொதியவெற்பன்-பொதியமலையுடையவன். மீனவன் - கயற்கொடியுடையவன். கைதவன் - பஞ்சவன் - கீர்த்தி விஸ்தாரமுடையவன். கௌரியன்-பகைவருக்குக் கேடுசெய்பவன்.

## குறுநிலமன்னர்பெயர்.

உக. குறுநிலமன்னர்-அற்பநிலமுடையசிற்றரசர். குறும்பர் - போர்செய்பவர். அரட்டர் - வேளிர் - புரோசர் - மிக்கசாமர்த்தியமுடையவர்.

## அமைச்சர்பெயர்.

அமைச்சர் - அரசனுக்கு அணிமையிலிருப்பவர். தேர்ச்சித்துணைவர்-ஆலோசனைக்குத் துணையாய்நிற்பவர். எண்ணர்-ஆலோசனையுடையவர். நூலோர்-ஆலோசனையுடையவர். சூழ்வோர் - ஆலோசனைசெய்பவர். உழையர் - அரசனுக்கு அணிமையிலிருப்பவர். மந்திரர் - ஆலோசனைக்குரியவர். முதுவர் - அறிவின் முதிர்ச்சியுடையவர். முன்னோர் - அரசனாலே முன்வைக்கப்படுவோர். அமாத்தியர் - அரசனுக்கு அணிமையிலிருப்பவர்.

ஆசிரியநிகண்டுகாரர் "ஆட்டர் குறும்பர் புரோசர் குறுநிலமன்னராம் வேளிரென்றும்பெயர்" என்றார். "ஆறிருமதியினெய்தியரட்டனையடர்த்து" என்றார் சிந்தாமணிகாரர்.

## படைத்தலைவன்பெயர்.

உஉ. படைத்தலைவன் - சேனைத்தலைவன். பொருநன் - போர்செய்பவன். சேனாபதி - சேனைக்குத்தலைவன்.

## நிமித்திகன்பெயர்.

நிமித்திகன் - வருங்காரியஞ் சொல்வோன். சாக்கை - உட்கருமங்கள் உசாவப்படுவோன். வள்ளுவன் - சிறப்புடையோன்.

## கணக்கர்வழியினுள்ளார்பெயர்.

கணக்கர்வழியினுள்ளார் - மந்திரவோலை யெழுதுவோர் வழியினுள்ளார். காவிதியர் - காவிதிப்பட்டமுடையவர்.

## பரிவாரத்தின்பெயர்.

பரிவாரம் - சூழ்ந்துநிற்போர். பரியாளம்-சூழ்ந்துநிற்போர். உசாக்கையர் என்பது சாக்கையர் எனநின்றதுபோலும்."ஒன்றியமோனர்போலவுசாக்கையரொருங்குபோனர்." என்பது இரகுவமிசம்.

## முதல்வள்ளலெழுவர்பெயர்.

உங. செம்பியன் - காரி - விராடன்-பிரசித்திபெற்றவன். நிருதி - துந்துமாரன்-துந்து என்னும் அசுரனைக்கொன்றவன். சகரன் - நஞ்சோடு பிறந்தவன். நளன் - பிரகாசமுடையவன்.

## இடைவள்ளலெழுவர்பெயர்.

அக்குரன் - குரூரமில்லாதவன். சந்திமான் - அந்திமான் - சிசுபாலன் - குழந்தைகளைப் பாலனஞ்செய்வோன். வக்கிரன் - கன்னன்-(குண்டலமணிந்த) காதுடையவன். சந்தன் -

முதல்வள்ளல் - தடையின்றி யாவர்க்குங் கொடுப்போன். ஆசிரியநிகண்டுகாரர் காரி என்றது சகாரி என்பர். "அழிவிலாச் சகரன்சகாரிசெம்பியனிருதியணிநளன்றுந்துமாரனைறைவிராடனெழுவர்" என்பது ஆசிரியநிகண்டு. சகாரி - சகனுக்குப் பகைவன்; இவன் விக்கிரமாதித்தன். விராடன் - மச்சதேசராசன். துந்துமாரன் - சூரியவமிசத்துக் குவலயாச்சுவனுடைய மகன். "அந்தமார்குவலயாச்சுவன்புதல்வனசுரதுந்துவைச்செயித்திடலாற்-றுந்துமாரனென்றியம்பிடும்பெயராய்த்துலங்கினன்" என்பதுபாகவதம். "துந்துவெனுந்தானவனைச்சுடுசெரத்தான் மாய்த்தானும்" என்பது இராமாயணம். புரஞ்சயன் என்னும் பெயரினனும் இவனே. சகரன் - சூரியவமிசத்தில் அசிதன்மகன்; இவன் தாய் கருப்பவதியாயிருக்கும்போது அக்கருப்பம் அழியும்படி மாற்றவளால் இடப்பட்ட நஞ்சோடு பிருகுமுனிவருடைய கிருபையாற் கேடின்றிப் பிறந்தான் என்பது விட்டுணுபுராணம். நளன் - நிடதராசனாகிய வீரசேனன் மகன். இடைவள்ளல் - இரப்போர்க்குக் கொடுப்போன். அக்குரன் - கண்ணபிரானுடைய சிறியபிதா. சிசுபாலன் - தமகோஷன்மகன்; கண்ணபிரானுக்கு மைத்துனன். சந்தன் என்பதற்கு அரிச்சந்திரன் என்பாருமுளர்.

## கடைவள்ளலெழுவர்பெயர்.

உச. கடைவள்ளலெழுவர் - மத்திமக் கொடையாளரெழுவர். பாரி - ஆய் - எழிலி - நள்ளி - மலையன் - பேகன் - ஓரி.

## வைசியர்பெயர்.

உரு. வைசியர்-தொழிலிற்பிரவேசிப்போர். இளங்கோக்கள்-இளவரசர். மன்னர்பின்னர் - அரசருக்குப் பின்வருணமுடையவர். இப்பர் - எட்டியர் - அரசராற் கொடுக்கப்படும் எட்டி என்னும் பட்டம் பெறுதற்குரியவர். நாய்கர் - தலைமையுடையவர். வணிகர் - வாணிகத்தொழிலுடையோர். ஆன்காவலர் - பசுக்காப்பவர். உழவர் - உழவுத்தொழிலுடையவர். பரதர் - பலரையுந் தாங்குதலுடையவர். விலைஞர் - பொருள்களை விற்பவர். செட்டியர், சிரேட்டியர் - சிரேட்டமுடையவர்.

## சூத்திரர்பெயர்.

உசு. சூத்திரர் - தொழிலிற் கிலேசமுறுவோர். மண்மகள்புதல்வர் - பூமிதேவிக்குப் புத்திரர். வளமையர் - செல்வமுடையவர், நிலவளமுடையவர். களமர் - நெல்விளைவிப்போர். சதுர்த்தர் - நான்காம் வருணமுடையவர். உழவர் - உழவுத்தொழிலுடையவர். மேழியர் - மேழிக்கொடியுடையவர். வேளாளர் - மண்ணினையாள்பவர். ஏரின்வாழ்நர்-ஏர்த்தொழிலாற் சீவிப்போர். காராளர் - மழையாற் பயன்பெறுவோர். விளைஞர் - தானியங்களை விளைவிப்பவர். பின்னவர் - பின்வருணமுடையவர்.

நச்சினார்க்கினியர் களமர் என்பதற்குக் களத்திற் செல்வோர் என்றும், வேளாளர் என்பதற்கு வேள் என்னும் பட்டவுரிமையை யாள்பவர் என்றுங் கூறுவர். காராளர் என்பதற்கு மழையாலாகும் வெள்ளத்தை யாள்வோர் எனவும், அது பெருக்காளர் என்பதற்குச் சமபதம் எனவும், வேளாளர் என்பதும் அப்பொருளுடையது எனவுங் கூறுவாருமுளர். பெருக்காளர் - வேளாளர் என்பது பிங்கலநிகண்டு.

## மருத்துவர்பெயர்.

உஎ. மருத்துவர் - மருந்துசெய்வோர். பிடகர் - வைத்தியஞ் செய்பவர். ஆயுள்வேதியர் - ஆயுள்வேதவுணர்ச்சியுடையவர். மாமாத்திரர் - மேன்மையுடையவர்.

## குயவன்பெயர்.

கும்பகாரன் - குடஞ்செய்வோன். குலாலன் - மண்ணைக் கூட்டிச் சேர்ப்பவன். வேட்கோவன் - மண்ணுக்குப் பகைவன். சக்கிரி - திரிகைச்சக்கரமுடையவன். மட்பகைவன் - மண்ணுக்குப் பகைவன்.

மட்பகைவன் என்பதற்கு மண்ணைப் பிரிக்குங் கருவியுடை யோன் எனக்கூறுவாருமுளர். மட்பகை-மண்ணைப்பிரிக்குங் கருவி என்பது பரிமேலழகருரை.

## சித்திரகாரர்பெயர்.

உஅ. சித்திரகாரர்-சித்திரஞ்செய்வோர். சிற்பர் - சிற்பசாத் திரத்தில் வல்லவர். ஓவியர் - சித்திரங்களையமைப்போர்- மோகர்- சித்திரத்தால் யாரையும் மயக்குவோர்.

## கண்ணுளர்பெயர்.

கண்ணுளர் - நோக்குவோர் கண்களை ஆள்பவர். சிற்பியர் - சிற்பசாத்திரம் வல்லவர். துவட்டர் - மரஞ்சீவியமைப்போர். தப தியர் - நிலைபெறுத்துவோர். அற்புதர் - அற்புதச்செயலுடையோர். யவனர் - கொல்லர் - கொற்றொழில்செய்வோர். அக்கசா லையர் - அக்கசாலையிற்றொழில்செய்வோர். புனைந்தோர் - அலங்கரி ப்போர். கம்மியர் - தொழிலிடையறாதோர். கண்ணுள்வினைஞர் - பார்ப்பவர் கண்ணுள்ளே தந்தொழிலை நிறுத்துவோர்.

## கொல்லர்பெயர்.

உகூ. கொல்லர் - கொற்றொழில்செய்வோர். கருமர் - தொ ழிலுடையவர். மனுவர் -

## தச்சன்பெயர்.

தச்சன் - மரஞ்சீவுவோன். மரவினையாளன் - மரத்திலே தொழில்செய்வோன். மயன் - அதிசயமான தொழிலுடையோன். தபதி - நிலைபெறுத்துவோன்.

## தட்டார்பெயர்.

தட்டார்-தட்டுந்தொழிலோர். பொற்கொல்லர், பொன்வினை மாக்கள்-பொன்னிலே தொழில்செய்யுமாக்கள். சொன்னகாரர் - பொன்னாற்பணிசெய்வோர். அக்கசாலையர்-பொன்செய்யுஞ் சாலை யுடையவர்.

## சிற்பாசாரியர்பெயர்.

௩0. சிற்பாசாரியர் - சிற்பநூல் வல்லவர். மண்ணீட்டா ளர் - சுதைமண்ணாற் பாவைசெய்வோர், வேயாமாடம் முதலிய செய்வோர்.

## பொருளினையுருக்குந்தட்டார்பெயர்.

பொருளினையுருக்குந் தட்டார் - பொன்னையுருக்குந் தட்டார். பொன்செய்யும்புலவர் - பொன்னை அரித்தெடுக்கும் புலவர்.

## பணித்தட்டார்பெயர்.

பணித்தட்டார் - இரத்தினப்பணிசெய்வோர்.

## முத்தங்கோப்பார்பெயர்.

முத்தங்கோப்பார் - முத்துக்களைக் கோப்பவர். மணிகுயிற்றுநர் - மணியைப் பதிப்பவர்.

## கன்னார்பெயர்.

௩க. கஞ்சகாரர் - வெண்கலத்திற் றொழில்செய்வோர். கன்னுவர் -

## அநாரியர்பெயர்.

அநாரியர் - பூசிக்கப்படாதவர். மிலேச்சர், மிலேச்சர் - திருந்தாத பேச்சுடையவர்.

## சோனகர்பெயர்.

சோனகர் - சோனகமென்னுந் தேசத்துக்குரியவர். யவனர் - யவனமென்னுந் தேசத்துக் குரியவர். உவச்சர் -

## உப்புவாணிகர்பெயர்.

உப்புவாணிகர் - உப்புவாணிகஞ் செய்வோர். உமணர் - உமண்சாதியார்.

## வண்ணார்பெயர்.

௩உ. வண்ணார் - புடைவையை நன்னிறமாக்குவோர். காழியர் - புடைவையைச் சுத்தஞ்செய்வோர். தூசர் - புடைவையைச் சுத்தமாக்குவோர். ஈரங்கோலியர்-சீலையில் ஈரத்தைச்சேர்ப்பவர். ஈரங்கொல்லியர் என்னும் பாடத்திற்கு சீலையின் ஈரத்தைக் கெடுப்போர்.

## நாவிதன்பெயர்.

நாவிதன் - எங்குஞ் செல்லுதற்குரிமையில்லாதவன். மஞ்சிகன் - கத்திக்கூடுடையவன். சிமங்கலி - மயிர்களைப் பிரித்துக் களைதலுடையவன். ஏனாதி -

## வேதகாரர்பெயர்.

வேதகாரர் - பிரம்பினாற் கூடைமுதலியனபின்னுவோர். பொருந்தர் - பொருந்துதலைச்செய்வோர்.

## நெய்வார்பெயர்.

காருகர் - நெய்தற்றொழில்செய்வோர்.

## துன்னர்பெயர்.

ருரு. துன்னர் - தைக்குந்தொழிலோர். பொல்லர் - தைக்குந்தொழிலோர்.

## தோற்றுன்னர்பெயர்.

தோற்றுன்னர் - தோல்தைப்பவர். செம்மார் - தோலிற்றொழில்செய்வோர்.

## கூவனூலோர்பெயர்.

கூவனூலோர் - கிணறுகுறிக்கும் நூலுடையோர். உல்லியர் கிணறுகுறிப்போர்.

## சங்கறுப்போர்பெயர்.

சங்கறுப்போர் - சங்கரிவோர். வளைபோழ்நர் - சங்கரிவோர்.

## ஊன்விற்போர்பெயர்.

ஊன்விற்போர் - இறைச்சிவிற்பவர். சூனர் - கொலைத்தொழிலுடையவர்.

## தோல்வினைமாக்கள்பெயர்.

தோல்வினைமாக்கள் - தோலிற்றொழில்செய்வோர். பறம்பர்.

## சண்டாளர்பெயர்.

ருச. சண்டாளர் - மிக்க கோபமுடையவர். கொலைஞர்-கொலைத்தொழில் செய்வோர். களைஞர் - உயிரைக் களைவோர். வங்கர்-கொடுமை செய்வோர். குணங்கர் - பேய்போல்பவர். மாதங்கர் - பெருந்துன்பஞ்செய்பவர். புலைஞர்-இழிதொழிலுடையோர். இழிஞர் - இழிவுடையவர்.

## பாணர்பெயர்.

பாணர் - பாடுவோர். சென்னியர் - மண்டைப்பாத்திரமுடையவர். வண்டர் - தொனிசெய்வோர். ஓவர் - சித்திரம்போல நிற்போர். வந்தித்துநிற்போர் - துதித்துநிற்போர். மதங்கர் - கேட்போரைமகிழ்விப்போர். சூதர் - புகழையுண்டாக்குவோர். பண்ணவர் - பண்ணுடையவர்.

## செக்கான்பெயர்.

ருரு. செக்கான் - செக்காட்டுவோன். சக்கிரி, நந்தி - செக்குடையவன்.

## கள்விற்போர்பெயர்.

சௌண்டிகர் - சுண்டிவிற்போர். (சுண்டி - கள்ளு.) துவசர்-கொடிகட்டியிருப்போர். பிழியர், படுவர் - கள்ளுவிற்போர்.

## மீகாமன்பெயர்.

மீகாமன் - தோணியின்மேற்செல்லுவோன். மீகான் - தோணியின்மேற் போவோன். மாலுமி - நீகான் - தோணிக்குத்தலைவன்.

## பண்ணுவார்பெயர்.

நகூ. பண்ணுவார் - குதிரையை அலங்கரிப்பவர். மாவலர் - குதிரைசெலுத்துதலில் வல்லவர். வதுவர், வாதுவர் - சண்டையில் வல்லவர்.

## யானைப்பாகர்பெயர்.

பாகர் - யானையைக் காப்பவர். ஆதோரணர் - யானையைச் சாதுரியமாக நடத்துவோர்.

## மெய்காப்பாளர்பெயர்.

மெய்காப்பாளர் - சரீரத்தைக் காப்போர். காவலர் - காத்தல்வல்லோர். கஞ்சுகி - சட்டையுடையவர்.

## உறைகாரர்பெயர்.

உறைகாரர்-படையுறைமுதலிய செய்வோர். காரோடர் -

## தேர்ப்பாகன்பெயர்.

நஎ. சூதன் - குதிரைகளைச்செலுத்துவோன். வலவன் - வன்மையுடையவன். சாரதி - குதிரைகளைச் செலுத்துவோன்.

## ஒற்றர்பெயர்.

ஒற்றர் - மறைந்தாராய்வோர். வேயர் - வேய்வுசெய்து ஆராய்வோர். சாரணர் - சஞ்சரிப்போர்.

## மடையர்பெயர்.

மடையர் - சோறுசமைப்போர். வல்லவர் - உண்போர்க்குப் பிரியமுண்டாக்குவோர். கூவியர் - உண்பவரையழைப்பவர். பானசிகர், பாசகர் - பாகஞ்செய்வோர்.

## கூத்தர்பெயர்.

நஅ. நாடகர் - நடனஞ்செய்வோர். கண்ணுளாளர் - கூத்திற் பயிற்சியுடையவர். நடர் - கூத்தாடுவோர். வயிரியர் - ஊதுகொம்புடையவர். நிருத்தர் - கூத்தாடுவோர். கோடியர்-வேடத்தினலே தம்மை அலங்கரிப்போர். பொருநர் - வேருருவர்போலத் தம்மை வேஷத்தாற் காண்பிப்போர். அவிநயர் - கைமுதலியன காட்டும் பாவனையாற் பாட்டின் பொருளைக் காட்டுவோர்.

## தமிழ்க்கூத்தர்பெயர்.

வாயிலோர் -

## கழாயர்பெயர்.

கழாயர், வேழம்பர் - மூங்கிலிலேறிநின்றாடுவோர்.

## நரப்புக்கருவியாளர்பெயர்.

நக. நரப்புக்கருவியாளர் - யாழ்வாசிப்போர். குயிலுவர் - யாழ்வாசிப்போர்.

## தோற்கருவியாளர்பெயர்.

தோற்கருவியாளர் - தோலாற்செய்த வாச்சியத்தொழிலில் ஆட்சியுடையவர். இயவர் - வாச்சியமுடையோர்.

## வெறியாட்டாளன்பெயர்.

வெறியாட்டாளன் - வெறியாட்டுடையவன். தேவராளன் - தெய்வந் தன்மேல் வரும்படியாள்வோன்.

## தேவராட்டியின்பெயர்.

தேவராட்டி - தெய்வத்தையாள்பவள். சாலினி - சாலமுடையவள்.

## அயலவர்பெயர்.

அயலவர் - அயலாயுள்ளவர். நொதுமலாளர் - நொதுமலாயிருப்பவர். வம்பலர் - புதியரல்லாதவர்.

## புதியவர்பெயர்.

உ0. விருந்தோர் - புதியவர். அதிதி - செல்பவன். வம்பலர் - நிலையின்மையுடையவர்.

## வழிச்செல்வோன்பெயர்.

பதிகன் - வழியிற்போவோன்.

## ஏவுவான்பெயர்.

வியவன் - ஏவலையுடையவன்.

## மூதுணர்ந்தோர்பெயர்.

மூதுணர்ந்தோர் - பழமையறிந்தவர்.

## உரியோர்பெயர்.

கிழவர் - உரிமையுடையவர்.

## குறிக்கோள்வோர்பெயர்.

குறிக்கொள்வோர் - ஒன்றைக்குறித்துத் தியானிப்பவர். பாராயணர் - பற்றிப்போகிறவர்.

## தூதர்பெயர்.

சக. தூதர் - சத்துருவைப் பரிதபிக்கச் செய்வோர். வித்தகர் - சொற்சாமர்த்தியமுடையவர். வினையுரைப்போர் - கருமங்களைச் சொல்வோர். வழியுரைப்போர் - தன்னரசன் சொன்னபடி சொல்வோர். பண்புரைப்போர் - குணங்களைச் சொல்வோர்.

## அடிமையின்பெயர்.

அடிமை - அடித்தொண்டுசெய்யுந் தன்மையுடையவர். தொத்து - கிணகர் - தாசர் - யசமானனுடைய காரியங்களைக் கவனமாகச்செய்வோர். தொழும்பு - தொழுது நிற்றலுடையவர். தொறு - விருத்தி-கூலிபெறுவோர். தொண்டு - பழமையாக வந்தவர். சேடர் - யசமானனாலனுப்பப்படுவோர். ஆள் - ஆளப்படுவோர்.

## தோழன்பெயர்.

சஉ. தோழன் - தொழுதுநிற்றலுடையவன். சிலதன் - குற்றேவலுக்குரியவன். நண்பன் - நண்புடையவன். பாங்கன் - பக்கத்திலே நிற்போன். சேடன் - அனுப்பப்படுவோன். துணைவன் - துணையாயுள்ளவன். எலுவன் - தோழமையுடையவன்.

## தோழன் முன்னிலைப்பெயர்.

ஏடா -

## தோழியின்பெயர்.

தோழி - தொழுதுநிற்றலுடையவள். சிலதி - குற்றேவலுக்குரியவள். சகி - கூடநிற்பவள். பாங்கி - பக்கத்திலே நிற்பவள். சேடி - அனுப்பப்படுபவள். இகுளை -

## தோழி முன்னிலைப்பெயர்.

ஏடி - எல்லா -

## குருடன்பெயர்.

சங. அந்தகன் - இருளையேகாண்போன். சிதடன் -

## கூனின்பெயர்.

கோணல் - வளைவுடையது.

## குறளின்பெயர்.

குறள், சிந்து - குறுமையானவடிவுடையது. வாமனம் - அழகுடையது. குஞ்சம் - குறளுடையது.

## செவிட்டின்பெயர்.

செவிடு - செவியிற் குற்றமுடையது. வதிர் - கேள்வியடை பட்டவன்.

## முடவன்பெயர்.

முடவன் - உறுப்பிற் குற்றமுடையோன். பங்கு - உறுப்பிற் பங்கமுடையவன். குணி - உறுப்பிற் குற்றமுள்ளவன்.

## ஊமையின்பெயர்.

ஊமை - பேச இயலாது ஊம் என்று தொனி செய்வோன். மூகை, மூங்கை - பேச்சுத்தடையுடையவன்.

## அலியின்பெயர்.

அலி - ஆண்பெண்ணல்லாதது. பெண்டகன் - நாணத்தினால் வேற்றிடம் போவோன். பேடி-பேய்த்தன்மையுடையது. நபுஞ்சகன் - ஆண்பெண்ணல்லாதவன். சண்டன் - அமைதியுடையவன்.

## கொலையாளியின்பெயர்.

சச. காதகன் - கொலைத்தொழிலுடையோன். சாருகன் - பீடைசெய்வோன்.

## வேதனைசெய்வோன்பெயர்.

வேதனைசெய்வோன் - வருத்தஞ்செய்வோன். அருந்துதன் - புண்படக்குடைவோன்.

## அச்சமுள்ளோன்பெயர்.

அச்சமுள்ளோன் - பயமுள்ளோன். பீதன் - பயமுடையோன். சகிதன் - பொறுமையுடையவன். பீரு-பயமுடையவன்.

## வேகியின்பெயர்.

வேகி - வேகமுடையோன். சவனன் - மிக்ககதியுடையவன்.

## வஞ்சகன்பெயர்.

வஞ்சகன் - கபடமுடையவன். நிசாதன் - பாவமுடையவன்.

## தூர்த்தர்பெயர்.

சரு. தூர்த்தர் - பரதாரத்தை வஞ்சித்துப் பிடிப்பவர். பல்லவர் - உறுதியில்லாதவர். பரத்தர் - பிறன்மனைவியைச் சேர்வோர். இடங்கழியர் - இடத்தினின்று கழிக்கப்படுவோர். விடர் - அறைப்புதலுடையவர். காமுகர் - மிக்கவிருப்புடையர்.

## நாகரிகர்பெயர்.

நாகரிகர் - நாகரிகமுடையவர். சதுரர் - சாமர்த்தியமுடைய வர். காமுகர் - விரும்பப்படுவோர்.

## கிராமமுற்றோன்பெயர்.

கிராமியன் - கிராமத்திலிருப்போன்.

## வல்லோன்பெயர்.

சசு. வலவை - வன்மையுடையோன். வல்லுநன் - வல்லமையுடையவன்.

## மாட்டார்பெயர்.

மாட்டார்-வன்மையில்லாதவர். வல்லார்-வல்லவராகாதவர்.

## குலமுளோன்பெயர்.

குலீனன் - நற்குலமுடையவன்.

## கரியவன்பெயர்.

கரியவன் - கருநிறமுடையோன். கள்வன் - கருநிறமுடையவன்.

## நோயுற்றொழிந்தோன்பெயர்.

நோயுற்றொழிந்தோன் - நோயடைந்து நீங்கினவன். உல்லாகன் - நோய்நீங்கி வன்மைபெற்றவன்.

## காலாளின்பெயர்.

காலாள் - காலாற்செல்லுவது. பதாதி - காலாற்செல்வது.

## ஆயத்தமானோன்பெயர்.

ஆயத்தமானோன் - போருக்கு முயற்சியுள்ளவன். சந்நத்தன்-சட்டைபூண்டு நிற்போன்.

## கூர்மையில்லோன்பெயர்.

சஎ. மந்தன் - கூரியபுத்தியில்லாதவன்.

## நிர்வாணியின்பெயர்.

நிர்வாணி-வஸ்திரமில்லாதவன். நக்கன்-வெட்கமுடையவன்.

## மிகுபுகழாளன்பெயர்.

இயவுள் - செல்லுகையுடையோன்.

## அருளோன்பெயர்.

காருண்ணியன் - கருணையுடையவன்.

## கடிகைமாக்கள்பெயர்.

கடிகைமாக்கள் - நாழிகையறிவிப்போர். எட்டர் - விருப்பத்தைக் கொடுப்பவர். வந்திகள் - துதிசொல்வோர். கவிகள் - புகழ்ந்து பாடுவோர். கற்ருேர் - மங்கலகவிகளைக் கற்றவர். வண்டர் - தொனிசெய்வோர்.

## கொடையுளோன்பெயர்.

சஅ. புரவலன் - கொடையுடையவன். ஈகையாளன் - கொடையாளி. வேளாளன் - கொடையாளி. தியாகி - (பொருளைப் பிறரிடம்) விடுதலுடையவன். வேள்வியாளன் - கொடையாளி. உபகாரி - உபகாரமுடையவன்.

## வரைவறக்கொடுத்தளிப்போன்பெயர்.

வரைவறக் கொடுத்தளிப்போன் - வரைவின்றிக் கொடுத்துக் காப்போன். வள்ளியோன் - பெருங்கொடையாளன்.

## ஏற்போன்பெயர்.

இரவலன் - இரத்தற்ருெழிலுடையோன். பரிசிலாளன் - பெற்றதனையாள்வோன். யாசகன் - பிரார்த்தித்துக் கேட்போன். தீனன் - கேடுடையவன்.

புரவலன் என்பதற்குப் புரத்தல்வல்லன் எனவும், இரவலன் என்பதற்கு இரத்தல்வல்லன் எனவும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

## திருடர்பெயர்.

சகூ. கரவடர் - கபடமுடையவர். சோரர் - திருடுதலுடையவர். தேனர் - திருடுவோர். பட்டிகர் - களவுசெய்பவர். புரையோர் - குற்றமுடையோர். கள்வர் - களவுசெய்பவர்.

## தரித்திரன்பெயர்.

தரித்திரன் - கேடான நிலையுடையவன். அகிஞ்சனன் - சிறிதும் பொருளில்லாதவன். தீனன் - கேடுடையவன். பேதை - பேய்போல எண்ணப்படுவோன். நல்கூர்ந்தோன் - நல்குரவடைந்தோன். வறியன் - வறுமையுடையவன். ஆதுலன் - நோயுடையவன். ஏழை - இகழப்படுவோன். இலம்பாட்டோன் - பொருளின்மையுடையவன். மிடியன் - வறுமையுடையவன்.

## திண்ணியன்பெயர்.

ருo. திண்ணியன் - திண்மையுடையவன். வயவன், திறலோன் - வலிமையுடையவன். வண்டன் - மிண்டன் -

மிண்டுதலுடையவன். மள்ளன் - வலிமையுடையவன். வியவன்-ஏவலுடையவன். விறலோன், மீளி - வலிமையுடையவன். வீரன்-வீரமுடையவன்.

## தானைத்தலைவர்பெயர்.

தானைத்தலைவர் - சேனைக்குத் தலைவர். கூளியர், ஏருளர்-இடபம்போலும் வலிமையுடையவர். வாளுழவர் - வாளாற்றொழில்செய்வோர். மள்ளர், மறவர் - வலிமையுடையவர். படர் - போர் செய்பவர்.

## பகைவர்பெயர்.

ருக. பகைவர் - பிரிவுடையோர். அரிகள் - போருக்கு வருவோர். செறுநர் - செறுதலுடையவர். சேரார் - சேராதவர். அமரார் - விரும்பாதவர். உள்ளார் - நினையாதவர். நள்ளார் - நண்புசெய்யாதவர். மருவலர் - பொருந்தாதவர். தெவ்வர் - பகையுடையவர். மாணார் - மாட்சிமைப்படாதவர். மாற்றலர் - மாறுபாடுடையவர். மன்னார், ஒன்னார் - பொருந்தாதவர். தரியலர் - தரியாதவர். ஒட்டார் - சேராதவர். வட்கார் - கோபம் மழுங்காதவர், நாணமுடையவர். சார்பிலார் - பற்றில்லாதவர். பற்றார் - பற்றுதலில்லாதவர். செற்றார் -செறுதலுடையவர். பரர்-கொல்லத்திரிவோர். கேளார் - கேளாதவர். ஒல்லார் - பொருந்தாதவர்.

## மேவினர்பெயர்.

ருஉ. மேவினர்-விரும்பினவர். ஒல்லுனர்-பொருந்துதலுடையவர். தொடர்ந்தார் - தொடர்தலுடையவர். சேர்ந்தார் - சேர்ந்தவர். ஒட்டுநர் - சேர்தலுடையவர். பெட்டார் - விருப்பமுடையவர். வேட்டார் - வேட்கையுடையவர். புல்லுநர் - தழுவுதலுடையவர். பசைந்தார் - அன்புடையவர். மித்திரர் - சிநேகஞ்செய்வோர். புரிந்தார் - அன்புசெய்வோர். ஆர்வலர் - விருப்பமுடையவர். விழைந்தார் - விரும்பினவர். நல்லவர் - நன்மைசெய்பவர். காதலித்தார் - விரும்பினவர். நள்ளுநர்-நட்புடையவர். நயந்தார்-விரும்பினவர். கூட்டம் - கூடுதலுடையவர். ஒன்றுநர் - பொருந்துதலுடையவர்.

## சுற்றத்தின்பெயர்.

ருங. சுற்றம் - சூழவிருப்போர். உற்றவர் - சேர்ந்தவர். இருளை, நட்டோர் - நண்புடையவர்.உறவு-சேர்வுடையவர். ஒக்கல்-ஒத்துநடப்பவர். கிளை-கிளைபோல்பவர். சார்ந்தோர்-பற்றுதலுடை

யவர். பற்றினர் - பற்றுடையவர். சிறந்தோர் - மிக்கவர். நண்பு - நட்டலுடையவர். பந்தம்-பிரியஞ்செய்பவர். பரிசனம்-சூழவிருக்குஞ்சனம். கேள் - உரிமையுடையோர். நண்பு - சிநேகமுடையவர். கூளி, குடும்பம் - தாங்குவோர். கடும்பு - காத்தலுடையவர். நள்ளி - நண்புடையவர். பாசனம் -

## கீழோர்பெயர்.

௫௪. பொறியிலார் - நல்வினையில்லாதவர். கயவர் - ஒழுக்கந்தவறினவர். நீசர் - நீசத்தன்மையுடையவர். புள்ளுவர் - வஞ்சகமுடையவர். புல்லர் - புன்மையுடையவர். தீயோர் - தீமைசெய்பவர். சிறியசிந்தையர் - அற்பவெண்ணமுடையவர். கனிட்டர் - சிறுமையுடையவர். திக்குணர் - துர்க்குணமுடையவர். தீம்பர் - தீங்குடையவர். தேரார் - அறிவில்லாதவர். முறையிலார் - நீதியில்லாதவர். முசுண்டர், மூர்க்கர் - மோகமுடையவர். முசுடர், பல்லவர் - நிலையற்றவர். கையர் - சிறுமையுடையவர். கலர் - தருமநெறியினின்று விலகினவர்.

## அறிவிலான்பெயர்.

௫௫. அறிவிலான் - அறிவில்லாதவன். முழுமகன் - அறிவு நுழைதற்கேற்ற புரையில்லாத மகன். சிதடன் - அறிவுகுருடானவன். பேதை - பேய்த்தனமுடையவன். மூடன் - மயக்கமுடையவன். மண்ணை - பேய்போல்பவன். அஞ்ஞை - அறிவில்லாதவன். இழுதை - இழுக்குடையவன். மடன் - அறிவில்லாதவன். ஆதன் - கோபமுள்ளவன். ஏழை - இகழப்படுவோன்.

## தொழில்செய்வோர்பெயர்.

தொழுவர் - தொழுதலுடையவர். கம்மியர் - தொழிலுடையவர்.

## வாயில்காப்போர்பெயர்.

வாயிலாளர் - வாயிலிலே நிற்றலுடையவர்.

## பெண்பெயர்.

௫௬. பெண் - விரும்பப்படுபவள். அரிவை - அங்கனை - நல்லுறுப்புடையவள். மடந்தை - அறியாமையுடையவள். ஆடவள் - ஆட்டி - மாயோள் - மாயமுடையவள். சுரிகுழல்-சுரித்தகூந்தலுடையவள். மகடூஉ - காந்தை - விரும்பப்படுபவள். சுந்தரி - அழகுடையவள். வனிதை - புருடனையடைபவள். மாது - அழகுடையவள். தெரிவை - தெரிந்

துகொள்ளப்படுபவள். மானினி - மானமுடையவள். நல்லாள் - சிறப்புடையவள். சிறுமி - சிறுமையுடையவள். தையல் - தன்னை யலங்கரிப்பவள். நாரி - புருடனை வசப்படுத்துபவள். பிரியை-பிரியஞ்செய்பவள். காரிகை - அழகுடையவள். அணங்கு-பெருமையுடையவள். பிணா, பெண்டு - விரும்பப்படுபவள். பேதை - பேய்த்தனமுடையவள்.

## புருடன்பெயர்.

ருஎ. புருடன் - பிராணிகளைக் காப்பவன். ஆடவன் - வெற்றிபெறுதற்குரியவன். மைந்தன் - வலிமையுடையவன். காளை - காளைபோல்பவன். ஆடூஉ - வெற்றிபெறுதற்குரியவன். மகன் - புமான் - பிறரைக்காப்பவன். குமரன் - குற்றங்களைக் கெடுப்போன்.

## ஆணைச்சிறப்பிக்கும்பெயர்.

நம்பி - நமக்கு இன்னன் என வியந்து சொல்லப்படுவோன்.

## பெண்ணைச்சிறப்பிக்கும்பெயர்.

நங்கை - நமக்கு இன்னள் என வியந்து சொல்லப்படுபவள்.

## கைம்மைபெற்றோன்பெயர்.

ருகூ. கோளகன் - மறைவாகக் காக்கப்படுவோன்.

## வேற்றோற்குப் பெற்றபிள்ளையின்பெயர்.

குண்டகன் - பெண்ணின் குலத்தை அழிப்பவன்.

## கன்னிபெற்றபிள்ளையின்பெயர்.

கானீனன் - கன்னியிடம் பிறந்தவன்.

## நாற்குலத்துளுயர்குலத்தாணுமிழிகுலப்பெண்ணுங் கூடிப்பெற்றபிள்ளையின்பெயர்.

சா0. அநுலோமன் - கிரமமான கலப்பிற் பிறந்தவன்.

## உயர்குலப்பெண்ணுமிழிகுலத்தாணுங் கூடிப் பெற்ற பிள்ளையின்பெயர்.

பிரதிலோமன் - கிரமமற்ற கலப்பிற் பிறந்தவன்.

## அநுலோமத்தாணும் பிரதிலோமப்பெண்ணுங் கூடிப் பெற்ற பிள்ளையின்பெயர்.

சாக. அந்தராளன் - கலப்புவருணமுடையவன்.

## அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தாணுங் கூடிப் பெற்ற பிள்ளையின்பெயர்.

விராத்தியன் - விலக்கப்படுவோன்.

## தலைவிபெயர்.

௬௨. தலைவி-பெருமையுடையவள். குரத்தி-கௌரவமுடையவள். அத்தை - செல்வமுடையவள். முதல்வி - முதன்மையுடையவள். கோமாட்டி - கோமானுக்குரியவள். ஆசாள் - ஒழுக்கமுடையவள். இறைவி - தலைமையுடையவள். ஐயை - பூசிக்கப்படுபவள். சாமி - செல்வமுடையவள்.

## நோற்பாள்பெயர்.

நோற்பாள் - தவஞ்செய்பவள் - கந்தி - ஔவை - அம்மை - கன்னி - கவுந்தி.

## அமங்கலையின்பெயர்.

௬௩. அமங்கலை - மங்கலமில்லாதவள். கைம்மை, கைனி - சிறுமையுடையவள். கலன்கழிமடந்தை-ஆபரணங் கழித்தற்குரிய பெண். விதவை - நாயகனில்லாதவள்.

## மலடியின்பெயர்.

மலடி, மைம்மை - பிள்ளையின்மையாகிய குற்றமுள்ளவள். வந்தி - கருப்பந் தடையாதலுடையவள்.

## கோலஞ்செய்வாள்பெயர்.

கோலஞ்செய்வாள் - அழகுசெய்பவள். வண்ணமகள் - அலங்காரஞ் செய்யுமகள்.

## வேசையின்பெயர்.

௬௪. வேசை - பலவிதவேஷங்களைத் தரிப்பவள். பரத்தை-பிறனைப் புணர்பவள். கணிகை - அர்த்த கணங்களையுடையவள். குளை - வஞ்சினமுடையவள். பயனிலாள் - பிரயோசனமில்லாதவள். வரைவின்மாது - விவாகமில்லாதபெண். பொருட்பெண்டு-பொருளை விரும்பும் பெண். பெறுவகொள்வாள் - காமுகர் பெறுபவைகளைக் கவர்ந்துகொள்பவள். விலைமகள் - தன் போகத்தை விற்கும் பெண்.

## மூத்தாள்பெயர்.

விருத்தை - இளமையில்லாதவள்.

## குமரியின்பெயர்.

குமரி - இளம்பருவமுடையவள். கன்னி - விரும்பப்படுப வள், பிரகாசமுள்ளவள்.

## நாடகக்கணிகையின்பெயர்.

நாடகக்கணிகை-நாட்டியஞ்செய்யுங் கணிகை. நிருத்தமாது- நிருத்தஞ்செய்யும்பெண். கூத்தி - கூத்தாடுபவள்.

குமரி என்பதைக் குமாரி என்னும் ஆரியபதத்தினின்று வந்த தாகக் கொண்டு கிரீடைக்குத் தக்கவள் எனப் பொருள்கூறினும் பொருந்தும்.

## அசதியின்பெயர்.

கூரு. அசதி - கற்பில்லாதவள், சோரநாயகனோடு கூட்டி விடுபவள். குட்டினி-குடும்பத்தைக் கெடுப்பவள். தொழுத்தை - தொழுதுநிற்குந் தன்மையுடையவள். கூளி - குறளி - சிறுமையுடையவள். படுவி - சாமர்த்தியமுடையவள். குண்டம் - துட்டை - தீங்குடையவள்.

## பதினாறாண்டிற் பெண்பெயர்.

யுவதி - புருடனுடன் கூடினவள்.

## பாடுவிச்சியின்பெயர்.

மதங்கி-மகிழ்விப்பவள், மத்தளமுடையவள். விறலி-விறல் படப் பாடுபவள்.

## தம்பதியின்பெயர்.

தம்பதி, இரட்டை - பெண்ணுமாணுமாகிய இருவர். ஆண் பெண் - ஆணும் பெண்ணுமாகியவிருவர்.

## குறிஞ்சிநிலமாக்கள்பெயர்.

கூகூ. குறவர் - குறும்புசெய்பவர். கானவர் - காட்டில் வசிப்பவர். மள்ளர் - வலிமையுடையவர். குன்றவர் - மலையிற் சஞ்சரிப்பவர். புனவர் - புனங்களைக் காப்பவர். இறவுளர் - குறிஞ்சி நிலத்தில் வசிப்பவர்.

## குறிஞ்சிநிலப்பெண்பெயர்.

குறத்தி - கொடிச்சி -

## குறிஞ்சிநிலத்திறைவன்பெயர்.

மலையன் - வெற்பன் - சிலம்பன் - கானகநாடன் -

கானகநாடன் என்பதற்குக் காட்டிற்குள்ளாகிய நாடுடை யோன் என்பர் நச்சினார்க்கினியர்.

## பாலைநிலமாக்கள்பெயர்.

கூஎ. மறவர் - பாவத்தொழிலுடையவர். எயினர் - எயின்கு டியிலுள்ளவர். புள்ளுவர் - கபடமுடையவர். இதற்குப் பொதுப் புள்ளிளோசையைத் தம்மிடமுடையவர் என்பர் நச்சினார்க்கினியர். இறுக்கர் -

## பாலைநிலப்பெண்பெயர்.

எயிற்றி - வன்கட்பிணா - கொடுந்தொழிலுடைய பெண். மறத்தி -

## பாலைநிலத்தலைவன்பெயர்.

மீளி - காளை - விடலை -

## புளினர்போதுப்பெயர்.

கூஅ. புளினர் - மிக்கபெலமுடையவர். குறவர் - மாகுலவர் - குன்றவர் - கிராதர் - கி என்னுந் தொனியுடன் பறவைகளை அழைப்பவர். மறவர் - கான வர் - வனசரர் - காட்டிற்சஞ்சரிப்போர். சவரர் - காட்டி லிருந்துகத்துவோர். கொலைஞர்-கொலைத்தொழிலுடையவர். பாவ மூர்த்திகள் - பாவசரீரமுடையவர். முருடர் - நேர்மையில்லாதவர். பொறையிலார் - பொறுமையில்லாதவர். எயினர் - வேடர்- வேட்டைத்தொழிலுடையவர்.

## முல்லைநிலமாக்கள்பெயர்.

கூக. முல்லையர் - முல்லைநிலமுடையவர். பொதுவர்-பொது வானவர். அண்டர், கோவிந்தர் - பசுக்களை அடைபவர். ஆன்வல் லவர் - பசுக்காத்தலில் வல்லவர். குடவர் - பசுக்களையுடையவர். பாலர் - பசுக்களைக்காப்பவர். கோவலர் - பசுக்காத்தலில் வல்ல வர். கோபாலர் - பசுக்காப்பவர். அமுதர் - பால் என்னும் அமுத முடையவர். ஆயர் - பசுத்திரளைக் காப்பவர். தொறுவர் - பசுக்க ளையுடையவர். இடையர் - பசுக்காப்பவர். (இடை - பசு.)

அமரநிகண்டிலே வல்லவர் என்பதும் இடையர்பெயர். வல்ல வர் - தைரியமில்லாதவர்.

## முல்லைநிலப்பெண்பெயர்.

எ0. தொறுவி - பொதுவி - ஆய்ச்சி - குடத்தி - இடைச்சி -

## முல்லைநிலத்தலைவன்பெயர்.

கானநாடன் - குறும்பொறைநாடன் - அண்ணல் - தோன்றல் -

## மருதநிலமாக்கள்பெயர்.

எக. களமர் - நெல்விளைப்போர். இதற்கு நெற்களத்திலே தொழில் செய்பவர் என்பர் நச்சினூர்க்கினியர். தொழுவர்-தொழில் செய்பவர். மள்ளர், கம்பளர் - ஆரவாரமுடையவர். உழவர்-உழு தொழிலுடையவர். விளைஞர் - நெல்விளைவிப்போர். கடைஞர் - கடைக்குலமுடையவர்.

## மருதநிலப்பெண்பெயர்.

கடைச்சி - ஆற்றுக்காலாட்டி -

## மருதநிலத்தலைவன்பெயர்.

மகிழ்நன் - ஊரன் - கிழவன் -

## நெய்தனிலமாக்கள்பெயர்.

எஉ. பரதவர் - நுளையர் - பஃறியர் - தோணியிற் றொழிலுடையவர். திமிலர்—தோணியிற் றொழில்செய்பவர். சாலர் - வலைவீசுந்தொழிலுடையவர். கடலர் - கடலிற் றொழில் செய்பவர். கழியர் - கழிநிலத்துச் சஞ்சரிப்போர்.

## நெய்தனிலப்பெண்பெயர்.

பரத்தி - நுளைச்சி - அளத்தி - கடற்பிணா -

## நெய்தனிலத்தலைவன்பெயர்.

எங. கொண்கன் - துறைவன்-கடற்றுறையிற்சஞ்சரிப்போன். மெல்லம்புலம்பன் - மெல்லிய கழிநிலமுடையவன். கடற்சேர்ப்பன் - கடற்கரையில் வசிப்போன்.

## உப்பமைப்போர்பெயர்.

அளவர் - உப்பளத்திற்றொழில்செய்வோர். உமணர் - உமண் சாதியிலுள்ளவர்.

## பாட்டன்பெயர்.

எ௪. தாதைதன்றாதை - பிதாவுடைய பிதா. மூதாதை - மூத்தபிதா. பிதாமகன் - பிதாவுடையபிதா.

## ஈன்றவன்பெயர்.

தாதை - குலத்தைப்பெருக்குவோன். அப்பன் - ஐயன் - வணங்கப்படத்தக்கவன். தந்தை - தமக்கு இன்னன் என உயர்த்தப்படுவோன். அம்மான் - பெரியவன். அத்தன் - பொருளுடையவன். பிதா - காப்பவன்.

## ஈன்றவள்பெயர்.

எசு. அவ்வை - அம்மனை - பயந்தாள் - அம்மை - யாய் - அன்னை - ஆயி-பூசிக்கத்தக்கவள். மோய் - தாய் -

## வளர்த்ததாதியின்பெயர்.

செவிலி - கோடாய் - கைத்தாய் -

## முன்பிறந்தாள்பெயர்.

தவ்வை - சேட்டை -

## தங்கையின்பெயர்.

பின்னை -

## தங்குடிச்சுற்றத்தின்பெயர்.

எள. ஞாதியர் - தம்மவரென்றறியப்படுபவர். தாயத்தார் - உரிமைபெறுபவர்.

## மாமன்பெயர்.

மாதுலன் - மாதாவுடன்பிறந்தவன். அம்மான் - பெரியவன்.

## ஓர்குடியிற்கொண்டோன்பெயர்.

சகலன் - மனைவியின் சகோதரிக்கு நாயகன்.

## மூத்தோன்பெயர்.

சேட்டன் - மூப்புடையவன். தம்முன் - முன்னவன் - முன்பிறந்தவன். அண்ணன் - மேன்மையுடையவன்.

## பின்னோன்பெயர்.

இளவல் - இளமையுடையவன். பின் - பின்பிறந்தோன். அநுசன் - பின்பிறந்தோன். கனிட்டன் - வயசிற்குறைந்தவன்.

## காதலன்பெயர்.

எஅ. காதலன் - விரும்பப்படுபவன். கணவன் - கொழுநன் - வேட்டோன் - விவாகஞ்செய்தவன். கண்டன் - வல்லவன் - பிரியமுள்ளவன். பத்தா - குடும்பத்தைப்பேணுபவன். துணைவன் - துணையாயுள்ளவன். தலைவன் - தலைமையுடையவன். கொண்கன் - தவன் - மனைவியை

நடுங்கச் செய்வோன். காந்தன் - விரும்பப்படுவோன். மணம
கன் - விவாகமுடைய புருடன். உரியோன் - குடும்பத்திற்குரிய
வன். அன்பன் - அன்புடையோன். மணவாளன் - விவாகமுடை
யவன். பதி-குடும்பத்தைக் காப்பவன். கேள்வன் - உறவுடைய
வன். நாயகன் - குடும்பத்தை நடத்துவோன்.

## தேவிபெயர்.

எக. தேவி - கிரீடைக்குரியவள். இல்லவள் - மனைக்குரிய
வள். உரிமை - நாயகனுக்குரியவள். பன்னி - நாயகனையுடைய
வள். குடும்பினி - குடும்பத்தலைவி. இல்-இல்லமுடையவள். இல்
லாள் - மனையுடையவள். வல்லவை - பிரியமுள்ளவள். களம் -
மென்மையுடையவள். தாரம் - நாயகன் பயப்படச்செய்பவள்.
மனையாட்டி - மனையுடையவள். மனை - இல்லமுடையவள். விரு
ந்தம் - மகிழ்விப்பவள். பாரி - குடும்பத்தை வளர்ப்பவள். வாழ்
க்கைத்துணை - வாழ்வுக்குத் துணையாயுள்ளவள். களத்திரம் - மெ
ன்மையுடையவள். காந்தை, காதலி - விரும்பப்படுபவள். நாயகி-
குடும்பத்தை நடத்துபவள்.

## மகன்பெயர்.

அ0. சந்ததி-குலத்தை வளர்ப்போன். மதலை - சூனு-
பிறப்பிக்கப்பட்டவன். தனயன் - குலத்தை வளர்ப்பவன். காத
லன்-விரும்பப்படுவோன். மெய்யன் - சரீரசம்பந்தமுடையவன்.
நந்தனன்-பெற்றாரை மகிழ்விப்போன். சிறுவன்-சிறுமையுடைய
வன். தோன்றல் - தோற்றமுடையவன். குட்டன் - சிறுமையுடை
யவன். செம்மல் - செம்மையுடையவன். மருமான் -
பிள்ளை - முளை - சுதன் - பிறப்பிக்கப்பட்டவன்.
புதல்வன் - புத்திரன் - புத்தென்னும் நரகிற் செல்லாது
பிதாவைக்காப்போன். மைந்தன் - வலிமையுடையவன். கால் -
வமிசத்திற்கு அடியாயுள்ளவன். பொருள்-செல்வம்போன்றவன்.
சேய்-செம்மையுடையவன். எச்சம்-எஞ்சிநிற்பவன். வழி-வமிசத்
திற்கு வழியாக நிற்பவன். பிறங்கடை - உயர்வடைபவன்.

## புதல்விபெயர்.

அக. சிறுவி - புத்திரி - தனயை -
ஐயை-பூசிக்கத்தக்கவள். பந்தனை-கட்டுப்பாடுடையவள். மகள் -
சுதை - பிறப்பிக்கப்பட்டவள்.

## மகன் மகள் என்னும் இருபாற்கும் பொதுப்பெயர்.

எச்சம்-எஞ்சிநிற்பவர்.

## பிள்ளைப்பன்மையின்பெயர்.

குறுமக்கள் - சிறுபிள்ளைகள். மகார் - இளமையுடையவர். சிறார் - சிறுமையுடையவர்.

## படையின்பெயர்.

அஉ. படை - போரில்விருப்புடையது. தானை - பதாதி - காலாற்செல்வது. தந்திரம் - தளம் - தண்டம்-போர்பயிற்றப்படுவது. வானி - ககனம் - யூகம்-போர்செய்வது. வாகினி-குதிரைமுதலிய கூட்டமுடையது. அனீகம் - பாடி - சேனை - கவனம் - பலம் - பரிகலம் - பதாகினி-காலாற்செல்வது.

## படைவகுப்பின்பெயர்.

அங. அணி - உண்டை - ஒட்டு - யூகம் -

## படையுறுப்பின்பெயர்.

அணி - நெற்றி - கை - தூசி -

## பின்னணியின்பெயர்.

கூழை -

## கோடிப்படையின்பெயர்.

தார் -

## படையறற்பெயர்.

கிழறுதல் - அறைபோதல் -

## மனிதர்பெயர்.

அச. மனிதர்-மநுவின் பிள்ளைகள். மக்கள் - நரர் - எல்லாவற்றையும் வசப்படுத்துதலுடையவர். மாக்கள் - மானவர் - மனுவின் பிள்ளைகள். மண்ணோர்-மண்ணுலகில் வசிப்பவர். ஆண்டையர் - ஆளுந்தன்மையுடையவர். மைந்தர் - வலிமையுடையவர். மனுடர், மானுடர் - மநுவின்பிள்ளைகள்.

## மக்கட்பரப்பின்பெயர்.

மன்பதை - பைஞ்ஞீல் -

## உடம்பின்பெயர்.

அரு. உடல் - உறுப்பு-மேன்மையுடையது. அங்கம்-போதலுடையது. யாக்கை-தோல் முதலியவைகளால் யாக்கப்படுவது. உயிர்நிலை - உயிர் நிற்றலுடையது. தேகம் - அந்நாதிகளால் வளர்தலுடையது. காயம்-அவயவங்களாற் சேர்க்கப்பட்டது. சடலம் - அறிவில்லாதது. மூர்த்தம் - மயக்கஞ் செய்விப்பது. மெய்-
தாவரம்-இயங்காமையுடையது. தனு-உணவினால் விசா

லிப்பது. ஆதாரம் - உயிர்க்காதாரமாயுள்ளது. கடம் - சீலையான் மூடப்படுவது. புதை - புணர்ப்பு - அவயவங்களாற் புணர்க்கப்படுவது. காத்திரம் - போதலுடையது. பூட்சி-பூணுதலுடையது. ஆகம் - வளர்தலுடையது. பூதிகம்-மண் முதலிய பூதங்களாலாயது. சரீரம் - அழியுந்தன்மையுடையது. புற்கலம் - மேன்மையுடையது.

## வடிவின்பெயர்.

அ௬. வடிவம் - உருவம் - மேனி - சட்டகம் -

## பிணத்தின்பெயர்.

பிரேதம் - முடிவடைந்தது. சவம் - சீவனீங்கினது. களேவரம் - ஆதரிக்கப்படுவது. அழனம் - சுடப்படுவது.

## உடற்குறையின்பெயர்.

கவந்தம் - சிரசில்லாதது. மட்டை - யூபம் - யாகத்தூண்போல்வது.

## காலின்பெயர்.

அ௭. கால் - உடம்பிலே காற்பங்கான உறுப்பு. சரணம், பதம் - போதற்குக் காரணமானது. தாள் - முயற்சிக்குக் காரணமானது. அங்கிரி, பாதம், சலனம் - போதற்கருவி. கழல் - சுத்தி செய்யப்படுவது. அடி - நிலத்திலடுத்தலுடையது.

## கரட்டின்பெயர்.

பரடு -

## கணைக்காலின்பெயர்.

கணைக்கால் - திரண்டகால். சங்கம் - செனித்தலுடையது.

## முழந்தாளின்பெயர்.

முழந்தாள் - முழம் என்னும் அளவுடையகால். முழந்து - முழம் என்னும் அளவுடையது. சானு - தொடைக்குங் கணைக்காலுக்கும் நடுவுள்ளது.

## தொடையின்பெயர்.

அஅ. தொடை - தொடுக்கப்பட்டிருப்பது. ஊரு-சீலையான் மறைக்கப்படுவது. குறங்கு - வாமம் - அழகுடையது. கவான் -

## அல்குலின்பெயர்.

கடிதடம் - சீலையான் மூடப்படுவது. நிதம்பம் - மெலிதலுடையது.

## இடையின்பெயர்.

நடு - சரீரத்தினடுவிலுள்ளது. நுசுப்பு - மருங்கு - மத்திமம் - மெலிவுடையது. உக்கம் -

## மருங்கின்பக்கத்தின்பெயர்.

ஒக்கலை -

## வயிற்றின்பெயர்.

அ௬. உதரம் - கருப்பம் பிரகாசித்தலுடையது. மோடு - பெருமையுடையது. அகடு - உட்பக்கத்திலிருப்பது. குக்கி - மலத்தை வெளியில் விடுவது. பண்டி - பண்டங்கொள்வது.

## தேமலின்பெயர்.

திதலை - பொறி - துத்தி - சுணங்கு -

## கொப்பூழின்பெயர்.

இதலை - உந்தி - நீர்ச்சுழிபோல்வது. நாபி - கட்டப்படுவது. இலஞ்சி - போகில் -

## ஆண்குறியின்பெயர்.

கோசம் -

## பெண்குறியின்பெயர்.

பகம் - அடையப்படுவது.

## மார்பின்பெயர்.

௯0. அகலம் - விசாலமுடையது. மருமம் - இரகசியம் அடக்கிவைக்கப்படுவது. நெஞ்சு - ஆகம் - அகத்திலுள்ளது. உரம் - முன்செல்வது.

## முலையின்பெயர்.

நகிலம் - கொம்மை-திரட்சியுடையது. கொங்கை-பரிமளம் பொருந்துவது. குயம் - நகக்குறிபெறுவது. தனம்-குழந்தைகளாற் பாலுண்ணப்படுவது. குருக்கண் - பாரமுடையது. பயோதரம் - பாலைத்தரிப்பது. சுவர்க்கம் - விரும்பத்தக்கது. பறம்பு - மலையையொப்பது.

## முலைக்கண்ணின்பெயர்.

சிலீமுகம் - கூரிய நுதியுடையது. சூசுகம் - குழந்தைகளாற் பால்குடிக்கப்படுவது.

## கைத்தலத்தின்பெயர்.

௯௧. கரம் - தொழில்செய்தலுடையது. அத்தம் - முழமிடுதலுடையது. பாணி - தோள் - அடித்தலுடையது.

### முழங்கையின்பெயர்.

கூர்ப்பரம்-பொருளை இழுக்கும்போது சற்றே தொனிப்பது.

### மணிக்கட்டின்பெயர்.

மணிக்கட்டு - ஆபரணங்கட்டப்படுவது. ஙிலுத்தம் -

### உள்ளங்கையின்பெயர்.

அகங்கை - கையினுட்புறம். அங்கை - அகங்கை. குடங்கை - வளைவுடையது.

### விரலின்பெயர்.

விரல் - ஒன்றோடொன்று விரவுதலுடையது. அங்குலி - ஒன்றோடொன்று பொருந்துதலுடையது.

### நகத்தின்பெயர்.

நகம் - பரிசமறியாதது. உகிர் - விழுதலுடையது.

### தோளின்பெயர்.

௬௨. புயம் - மொய்ம்பு - வலிமையுடையது. வாகு- முயற்சியுடையது.

### கழுத்தின்பெயர்.

கந்தரம் - தலையைத் தரித்திருப்பது. கிரீவம் - உண்ணற்குக் காரணமாயுள்ளது. களம் - விழுங்குதற்கருவி. கண்டம் - தொனித்தலுடையது.

### முதுகின்பெயர்.

புறம்-புறத்திலுள்ளது. வெரிந் - அபரம்-பின்னுள்ளது. வென் -

### பிடரின்பெயர்.

சிறுபுறம் - கையில் - எருத்தம் - சுவல்-

### தோண்மேலின்பெயர்.

திகலம் -

### முகத்தின்பெயர்.

௬௩. முகம் - உணவினாற் பீடிக்கப்படுவது. வதனம் - பேசுதற்கருவி. ஆனனம் - சீவித்தற்குக் காரணமானது. துண்டம் - உணவினாற் பீடிக்கப்படுவது. வத்திரம் - பேசுதற்கருவி.

### உதட்டின்பெயர்.

இதழ் - பூவிதழ் போல்வது. அதரம் - பாலிகை - முத்தம்-விடப்படுவது.

### மேலுதட்டின்பெயர்.

ஓட்டம் - உட்டணத்தாற் சூடடைவது.

### கீழுதட்டின்பெயர்.

அதரம் - கீழுள்ளது.

### பல்லின்பெயர்.

எயிறு - தந்தம்-உணவுகளையுண்பது. தசனம்-கடித்தலுடையது.

கச. முறுவல் - மூரல் -

### மோவாயின்பெயர்.

தாடி - வளைவுடையது. கட்டம் - சுவுகம் - தசையாலாக்கப்பட்டது.

### நாக்கின்பெயர்.

நாக்கு-மேல்வாய்க்குங் கீழ்வாய்க்கும் நடுவிருப்பது. (நா - நடுவுள்ளது.) சிகுவை-இனியபொருளை விரும்புவது. தாரை - தாலு -

### காதின்பெயர்.

கன்னம் - ஒலியைக்கிரகித்தலுடையது. அள் - கூர்மையுடையது. கேள்வி - கேட்டற்கருவி. செவி -

### மிடற்றின்பெயர்.

கரு. அணல் -

### உண்ணாக்கின்பெயர்.

அண்ணம் -

### மேல்வாய்ப்புறத்தின்பெயர்.

அணரி - அணல் - அண்ணம் - மேலுள்ளது.

### கதுப்பின்பெயர்.

கவுள் - கபோலம் - உண்ணும்போது அசைதலுடையது. கொடிறு - அறு -

### மூக்கின்பெயர்.

ஆக்கிராணம்-மணங்கிரகித்தற்குக் காரணமானது. கோணம்-மணத்தாற் பிரமிப்பது. துண்டம் - மணத்தைக் கிரகிப்பது. நாசி-ஒலிசெய்வது.

### கண்ணின்பெயர்.

கசு. நயனம், நேத்திரம் - வழியையடைவித்தலுடையது. அக்கம் - எங்கும்போய் வியாபித்தலுடையது. நாட்டம் - நாடுத

லுடையது. கோ - எங்கும்போய் வியாபித்தலுடையது. நோக்கம்-பார்த்தற்கருவி. சக்கு-பொருள்களைக் காட்டுவது. பார்வை - பார்த்தற்கருவி. தாரை - இருளைக்கடப்பது. விலோசனம் - பார்த்தற்கருவி. விழி - அக்கி - எங்கும்போய் வியாபித்தலுடையது. திருக்கு, திட்டி, திருட்டி - பார்த்தற்கருவி. அம்பகம் - எங்கும்போய் வியாபித்தலுடையது.

## கண்மணியின்பெயர்.

தாரை -

## கண்ணிமையின்பெயர்.

விளிம்பு -

## புருவத்தின்பெயர்.

௬எ. புருவம் - மேலே போதலுடையது. பிருகுடி - அசைவுடையது. நுதல் - பீரு - அசைவுடையது. புரூரம், பூரு, புகுடி - அசைவுடையது.

## நெற்றியின்பெயர்.

நிடலம் - முற்பக்கத்திலுள்ளது. நுதல் - குளம் - வளைவுள்ளது. இலாடம்-தலையின்மயிர் வரப்பெறுவது. மத்தகம் - கடினமுடையது. பாலம் - பிரகாசமுடையது. முண்டம் - மயிரில்லாதது. அளிகம் - அலங்கரிக்கப்படுவது.

## தலையின்பெயர்.

௬அ. தலை-பெருமையுடையது. மூர்த்தம் - மோகமடைவது உவ்வி - உத்தமாங்கம் - உத்தமமான உறுப்பு. சிரம் - நரையாற் பிடிக்கப்படுவது. முடி - உடலினிறுதியிலுள்ளது. சென்னி - முண்டம் - மயிர்களையப்படுவது. சிகரம் - மத்தகம் -

## குடுமியின்பெயர்.

முடி - சிமிலி - சிக்கம் - சிகை -

## உச்சியின்பெயர்.

சுடிகை, சூழி - மூடப்படுவது. நவிரம் -

## ஆண்மயிரின்பெயர்.

௬௯. உளை - நவிர் - குடுமி - பித்தை - ஓரி - குழல் - கார்-கருமையுடையது. குஞ்சி - நெறிப்புடையது. தளை - கட்டப்படுவது. சிகை - தலையிற்கிடப்பது. தொங்கல்-தொங்குந் தன்மையது. பங்கி-பங்கமடைவது.

## ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும்பெயர்.

குழல் - கதுப்பு - கேசம் - சுரியல் -

## பெண்மயிரின்பெயர்.

௧௦௦. குருள்-பாரமுடையது. குழல் - விலோதம் - ஓதி - கூழை - குந்தளம் - மராட்டம் - குரல் - ஐம்பால் - கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்னும் ஐந்துவகையாக முடிக்கப்படுவது. ஐம்பால் என்பதற்கு இருட்சி, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு என்னும் ஐம்பகுதியது என்பாருமுளர். அளகம்-அலங்கரிக்கப்படுவது. கூந்தல்-

## மயிர்முடியின்பெயர்.

கொப்பு - முச்சி - பின்னகம் - கொண்டை - பந்தம், தம்மில்லம்-கட்டப்படுவது. சிகழிகை -

## பிறமயிரின்பெயர்.

௧௦௧. ஓரி - கேசம் - தலையிற்கிடப்பது. பங்கி-பங்கமுடையது. உளை - உரோமம் - முளைத்தலுடையது. மராட்டம் -

## செறிமயிரின்பெயர்.

உரோமம் - சிரோந்தம் -

## மயிர்க்குழற்சியின்பெயர்.

குந்தளம் - விலோதம் -

## சடையின்பெயர்.

௧௦௨. சடை - ஒன்றோடொன்று நெருங்கியிருப்பது. குடிலம் - வளைதலுடையது. வேணி - கூடியிருப்பது. கோடீரம் - வளைதலுடையது. பின்னல் - பின்னுதலுடையது. சடிலம் - நெருங்கியிருப்பது.

## அவயவத்தின்பெயர்.

அவயவம்-சேர்ந்திருத்தலுடையது. காத்திரம் - போதலுடையது. உறுப்பு—உடம்பிலுறுதலுடையது.அங்கம்-போதலுடையது.

## சந்தின்பெயர்.

சந்து, மூட்டு, கொளுத்து-பொருத்தப்படுவது. கந்து - இணைக்கப்படுவது.

## நரம்பின்பெயர்.

க0௫. சிரை - சங்கனனம் - அவயவத்திற்சேர்ந்திருப்பது. நாடி-உள்ளே துளையுடையது.

## கழலையின்பெயர்.

அரலை -

## கோழையின்பெயர்.

கோழை - கொழுமையுடையது. ஐ - காசம் -

## உடற்றழும்பின்பெயர்.

அங்கிதம் - அடையாளமாக்கப்பட்டது. சேக்கை - வசி - வடு -

## இறையின்பெயர்.

பொறி, வரை - எழுத்துப்போல்வது.

## நரையின்பெயர்.

நரை - வெண்மையுடையது. சரை - உடம்பின் முதிர்ச்சியைக் காட்டுவது. பலிதம் - அழகைக் கெடுப்பது.

## தலையோட்டின்பெயர்.

க0௪. கபாலம் - தலையைக்காப்பது.

## எலும்பின்பெயர்.

அத்தி - எறியப்படுவது. என்பு - களேவரம்-உடம்பிலே விசேடமுடையது.

## கழியுடலின்முழுவெலும்பின்பெயர்.

கங்காளம் - நீரைப் போக்குதலுடையது.

## இந்திரியத்தின்பெயர்.

இந்திரியம் - ஆன்மசம்பந்தமுடையது. பொறி - கரணம் - செய்கைக்குக் கருவியானது. கந்தம் -

## உயிரின்பெயர்.

க0௫. உயிர் - உயிர்த்தலுடையது. ஆதன் - போதலுடையது சேதனன்-அறிவுடையது. பசு-பாசத்தாற் பீடிக்கப்படுவது. சீவன் சீவித்தலுடையது. புற்கலன் - மேன்மையுடையது. சூத்தன் - சூத்தன்போல்வது. அணு - நுண்மையுடையது. இயமானன் - தலைமையுடையது. ஆன்மா - எங்கும்வியாபித்தலுடையது.

உ

கணபதி துணை.

# சூடாமணிநிகண்டு.

பதினொராவது பன்னிரண்டாவது

## மூலமும் உரையும்.

இவை

நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

பொன்னம்பலபிள்ளையால்

பரிசோதித்து,

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஆறாம் பதிப்பு.

இராக்ஷச௵ ஐப்பசிமீ.

கணபதி துணை.

# பதினோராவது

## ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

### காப்பு.

முடிவிலின்பத்துமூவாமுதல்வனைப்போற்றிசெய்தே
அடிதொறுமிரண்டுமொன்றுமாதியிற்பொருளடக்கி
நடைபெறுககரமாதினகரவீறெதுகையாகப்
படியிலோர்சொற்பொருட்பல்விதத்தொகைபகரலுற்றும்.

இ-ள். முடிவு இல் இன்பத்து மூவா முதல்வனைப் போற்றி செய்து - அளவில்லாத இன்பத்தையுடைய கெடாத அருகக்கடவுளைத் துதிசெய்து,—அடிதொறும் இரண்டும் ஒன்றும் ஆதியிற் பொருள் அடக்கி - அடிகடோறும் இரண்டுசொல்லினும் ஒரு சொல்லினும் முதலிற் பொருள்களை அமைத்து,—நடைபெறு ககரமாதி னகரவீறு எதுகை யாக - நடைபெற்றுவரும் ககரவெதுகைமுதல் னகரவெதுகையிறுதியாக,—படியில் - இவ்வுலகின்கண்,—ஓர்சொற் பல்விதப் பொருட்டொகை பகரலுற்றும் - ஒருசொற் பல்வகைப்பொருட்டொகுதியை (யாம்) சொல்லலுற்றும். எ-று.

# ககரவெதுகை.

பகவனேயீசன்மாயோன்பங்கயன்சினனேபுத்தன்
பகலேநாளொருமுகூர்த்தம்பகலவனடுவேதேசு
மகரமேசுறாப்பூந்தாதாம்வசிகூர்மைவசியம்வாளே
அகமனமனையேபாவமகலிடமுள்ளுமாமே. (௧)

சிகரிகோபுரமேவெற்புச்சீறெலிகருநாரைப்பேர்
சிகழிகைமயிர்முடிப்பேர்சிறந்தவாசிகைதேமாலை
சிகரமேமலையினுச்சிதிரைசென்னிதிவலைவெற்பாம்
மகம்யாகமோர்நாளென்பமாய்வென்பமறைவுஞ்சாவும். (௨)

இகல்பகைவலிபோர்முப்பேரிகுளையேதோழிநட்பாம்
புகரென்பமழைக்கோள்குற்றம்புற்கெனுநிறமுமுப்பேர்
நகமலையுகிர்மரப்பேர்நகைமகிழ்வொளிசிரிப்பாம்
ககனம்விண்படைகாடென்பகடவுடேமுனிநன்மைப்பேர். (௩)

சாகஞ்சாகினிவெள்ளாடுதேக்கெனுந்தருவுமாமே
பாகலேகாரவல்லிபலாவென்றும்பகரலாமே
பூகமேகருங்குராங்கோடுட்பொருளுணர்தறர்க்கம்
நாகம்விண்குராங்குபுன்னைநற்றூசுமலைபாம்பியானை. (௪)

திகிரியேமூங்கில்வட்டந்தேருருளாழிவெற்பாம்
சிகியென்பமஞ்ஞைதீயாந்தீநுறுகேதுவும்பேர்
ஞெகிழியேசிலம்பினுமநெருப்புறுகொள்ளிக்கும்பேர்
எகினமேபுளிமாஞாளிகவரிமாநீர்நாயன்னம். (௫)

ஆகுவேயெலியினுமமாம்பெருச்சாளிக்கும்பேர்
யோகமேதியானங்கூட்டமுபாயமாமுயர்ச்சிக்கும்பேர்
போகியிந்திரன்பாம்பென்பபோகில்புட்பொதுப்பூமொட்டாம்
கோகிலங்குயில்பல்லிப்பேர்குடங்கரேகுடிசைகும்பம். (௬)

பொகுட்டுத்தாமரைப்பூங்கொட்டைபொருப்புச்சேற்றெழுந்தகொ
இகுத்தலேசெகுத்தல்வீழ்த்தலிரித்தலோடழைத்தலீதல் [ப்புள்
புகைக்கிடுநாமந்தூமம்போற்றும்யோசனைக்கும்பேரே
அகைத்தல்வேதனையொடித்தலறுத்திடலுயர்த்தலாமே. (௭)

சிக்கமேகுடுமிநாமஞ்சீப்புடனுறியுமேற்கும்
கொக்குமாமரமேசெந்நாய்குரண்டமேகுதிரைமூலம்
வக்கிரங்கொடுமைமீளன்மடங்குதலுடனேவட்டம்
சக்கிரிகுயவன்செக்கான்றராபதிநெடுமால்பாம்பு. (௮)

# ககரவெதுகை.

பகவனென்பது—சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தன். ௫.
பகல்—நாள், ஒருமுகூர்த்தகாலம், சூரியன், நடு, பிரகாசம். ௫.
மகரம்—சுறாமீன், பூந்தாது. ௨. வசி—கூர்மை, வசியம், வாள். ௩.
அகம்—மனம், வீடு, பாவம், பூமி, உள். ௫.

சிகரி—கோபுரம், மலை, எலி, கருநாரை. ௪.
சிகழிகை—மயிர்முடி, சிகைமாலை, பூமாலை. ௩.
சிகரம்—மலையினுச்சி, அலை, தலை, துளி, மலை. ௫.
மகம்—யாகம், ஒருநக்ஷத்திரம். ௨. மாய்வு—மறைவு, சாவு. ௨.

இகல்—பகை, வலிமை, யுத்தம். ௩. இகுளை—தோழி, சுற்றம். ௨.
புகர்—சுக்கிரன், குற்றம், கபிலநிறம். ௩. நகம்-மலை, நகம், மரம். ௩.
நகை-மகிழ்ச்சி, பிரகாசம், சிரிப்பு. ௩. ககனம்-ஆகாயம், சேனை, காடு.
கடவுள்—தெய்வம், முனிவன், நன்மை. ௩.

சாகம்—சிறுகீரை, வெள்ளாடு, தேக்கமரம். ௩.
பாகல்—பாகற்கொடி, பலாமரம். ௨.
யூகம்—கருங்குரங்கு, உட்பொருளறிதல், தருக்கம். ௩. நாகம்—ஆகாயம், குரங்கு, புன்னைமரம், நல்லாடை, மலை, பாம்பு, யானை. ௭.

திகிரி—மூங்கில், வட்டவடிவு, தேர், தேருருளை, சக்கராயுதம், மலை. ௬.
சிகி—மயில், நெருப்பு, கேது. ௩.
ஞெகிழி—சிலம்பு, கொள்ளி. ௨.
எகினம்—புளிமா, நாய், கவரிமா, நீர்நாய், அன்னப்புள். ௫.

ஆகு—எலி, பெருச்சாளி. ௨. யோகம்—தியானம், கூட்டம், உபாயம், உயர்ச்சி. ௪.
போகி-இந்திரன், பாம்பு. ௨. போகில்-பறவைப்பொது, பூவரும்பு. ௨.
கோகிலம்—குயில், பல்லி. ௨. குடங்கர்—குடிசை, குடம். ௨.

பொகுட்டு—தாமரைக்கொட்டை, மலை, சேற்றிலெழுங்குமிழி. ௩.
இகுத்தல்—கொல்லுதல், வீழ்த்துதல், சாய்த்தல், அழைத்தல், கொடுத்தல். ௫. புகை—புகை, யோசனைதூரம். ௨.
அகைத்தல்—வருத்தம், முறித்தல், அறுத்தல், உயர்த்தல். ௪.

சிக்கம் - குடுமி, சீப்பு, உறி. ௩.
கொக்கு—மாமரம், செந்நாய், கொக்கு, குதிரை, மூலநக்ஷத்திரம். ௫.
வக்கிரம்—கொடுமை, மீளுதல், மடங்குதல், வட்டம். ௪.
சக்கிரி—குயவன், செக்கான், அரசன், திருமால், பாம்பு. ௫.

தூக்கென்பபாட்டுங்கூத்துந்துலாமுமாராய்தலும்பேர்
பாக்கென்பதெதிர்காலத்தைப்பகரிடைச்சொற்றுவர்க்காய்
மேக்குமேற்றிசைமேலும்பேர்மெய்யுண்மையுடலுமாமே
ஊக்கமேவலியுற்சாகமுள்ளத்தின்மிகுதிக்கும்பேர். (௯)

பகடிபம்பெருமையேறுபஃறியாண்மேதியைம்பேர்
தகடிலையம்மையென்பதபனனேயிரவிதீயாம்
அகடென்பநடுவேகுக்கியருளென்பகருணைசத்தி
மகரந்தங்கள்ளுந்தேனுமலர்த்தாதும்வழங்குமுப்பேர். (௧௦)

சகுந்தம்புட்பொதுவேகங்கஞ்சடையென்பவேணிவேராம்
சிகண்டியேபாலையாழின்றிறத்திசைமயிலலிப்பேர்
சகுனிபுண்ணிமித்தம்பார்ப்போன்சமமென்பதமரொப்பாகும்
சகுனமேகிழங்குபுள்ளின்சாதியுநிமித்தமும்பேர். (௧௧)

சக்கரம்பெருமையோர்புட்டரணியேபிறப்புவட்டம்
மிக்கதேருருளேயாழிவரையெனவிளம்புமெண்பேர்
பக்கம்புட்சிறகுநட்புப்பகர்திதியருகுமாகும்
நக்கனேயருகன்சம்புநிருவாணிநாட்டுமுப்பேர். (௧௨)

பூகமேதிரளைபூகம்புன்கணென்பதுநோய்துன்பம்
வாகுவேயழகுதோளாமாசியேமகமோர்மாதம்
பாகமேபிச்சைபங்காம்பயோதரம்புயலேகொங்கை
வாகைபண்பொழுக்கம்வெற்றிதவந்தொழில்வழங்கன்மிக்காம். ()

நோக்கென்பதழகுபார்வைநுதலென்பபுருவநெற்றி
சேக்கையேமிருகந்துஞ்சுமிடமுலைசிறந்தபாயல்
பூக்கமேகமுகூரென்பபுலிங்கந்தீப்பொறியூர்ப்புள்ளாம்
ஆக்கம்பூமகள்செல்வப்பேரறல்கருமணனீராமே. (௧௪)

சீகரங்கரகம்வீசுங்கவரியுந்திவலையும்பேர்
சாகரந்துயிலொழித்தல்சமுத்திரமிருபேர்சாற்றும்
காகுளிதவிசுகண்டத்தெழுமொலியிசையுங்காட்டும்
ஈகைபொன்கொடையீங்கைப்பேரிரவியேமலையாதித்தன். (௧௫)

தகையென்பதழகுபண்புதயையொடுபெருமைநாற்பேர்
அகியென்பதரவிரும்பாயரிட்டமேகள்ளுக்காக்கை
ககமென்பதம்புபுள்ளாங்கடுத்தலொப்பையம்வேகம்
அகவல்பாமயிற்குரல்கூத்தந்தமேயழகீறென்ப. (௧௬)

தூக்கென்பது—செய்யுள், கூத்து, நூறுபலம், ஆராய்தல். ச.
பாக்கு—ஓர் எதிர்காலவினையெச்சவிகுதி, பாக்கு. உ.
மேக்கு—மேற்றிசை, மேல். உ. மெய்—உண்மை, சரீரம். உ.
ஊக்கம்—வலிமை, உற்சாகம், உள்ளக்கிளர்ச்சி. ௩.

பகடு—யானை, பெருமை, பேரெருது, ஓடம், எருமைக்கடா. ரு.
தகடு—இலை, தகட்டுவடிவு. உ. தபனன்—சூரியன், நெருப்பு. உ.
அகடு—நடு, வயிறு. உ. அருள்—கிருபை, சிவசத்தி. உ.
மகரந்தம்—கள், தேன், பூந்தாது. ௩.

சருந்தம்—பறவைப்பொது, கழுகு. உ. சடை—சடை, வேர். உ.
சிகண்டி—பாலையாழ்த்திறத்தோரிசை, மயில், அலி. ௩.
சகுனி-பறவை,சகுனம்பார்ப்பவன். உ. சமம்-யுத்தம்,உவமை. உ.
சகுனம்—கிழங்கு, பறவைச்சாதி, சகுனம். ௩.

சக்கரம்—பெருமை, ஒருபறவை, பூமி, பிறப்பு, வட்டம், தேருருளை, கடல், மலை. அ.
பக்கம்—பறவையினிறகு,சிநேகம்,பிரதமைமுதலிய திதி,அருகு. ச.
நக்கன்—அருகன், சிவன், நிருவாணி. ௩.

பூகம்—திரட்சி, கமுகு. உ. புன்கண்—நோய், துன்பம். உ.
வாகு—அழகு, புயம். உ. மாசி—மகநக்ஷத்திரம், ஒருமாதம். உ.
பாகம்-பிச்சை,பங்கு. உ. பயோதரம்—மேகம், முலை. உ. வாகை-குணம், ஒழுக்கம், வெற்றி, தவம்,தொழில்,கொடுத்தல்,மிகுதி. எ.

நோக்கு—அழகு, கண். உ. நுதல்—புருவம், நெற்றி. உ.
சேக்கை—விலங்கின்படுக்கை, முலை, மனிதர்படுக்கை. ௩.
பூக்கம்--கமுகு,ஊர். உ. புலிங்கம்-நெருப்புப்பொறி,ஊர்க்குருவி.
ஆக்கம்—இலக்குமி, செல்வம். உ. அறல்—கருமணல், நீர். உ.

சிகரம்—கரகம்,சாமரம்,துளி. ௩. சாகரம்-துயிலொழித்தல்,கடல்.
காகுளி—ஆசனம், மிடற்றெழுமோசை, இசை. ௩.
ஈகை—பொன், கொடுத்தல், இண்டங்கொடி. ௩.
இரவி—மலை, சூரியன். ௩.

தகை—அழகு, குணம், அன்பு, பெருமை. ச.
அகி—பாம்பு, இரும்பு. உ. அரிட்டம்—கள், காக்கை. உ.
ககம்—அம்பு, பறவை. உ. கடுத்தல்—உவமை, சந்தேகம்,சீக்கிரம்.
அகவல்-ஆசிரியப்பா,மயிற்குரல்,ஆடல்.௩.அந்தம்-அழகு,முடிவு.உ.

அக்கென்புவிடைமுரிப்புமணிசங்குமணியுமாகும்
நக்கலேநகையுண்டற்பேர்ஞாட்பமர்பாரங்கூட்டம்
இக்கென்பகரும்புகள்ளாமீரமேகுளிர்ச்சியன்பு
மக்கண்மானுடர்சிறுர்பேர்வரைதலைகொள்ளனீக்கல். (கஎ)

கேகயமஞ்ஞையோர்பண்ணசுணமாக்கிளத்துமுப்பேர்
தோகையேமயில்வான் மஞ்ஞைஇலங்கின்வால்சொல்லுமுப்பேர்
போகமேபாம்பின்மெய்யும்போகத்தின்விகற்புமாகும்
போகுதனெடுமைநேர்மைபோகுதலெனுமுப்பேரே. (கஅ)

கைக்கிளையிசைவிகற்பமொருதலைக்காமமும்பேர்
சுக்கைதாரகைமாலைப்பேர்சூத்திரம்பொறிநூனூற்பா
எக்கரேசொரிதலோடுகுவிதலுமிருபேரென்ப
மொக்குளேகுமிழிபூவின்முகிழெனமொழியலாமே. (ககூ)

ககரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் — உ௦.

## ஙகரவெதுகை.

புங்கமேயுயர்ச்சியம்புபொருமம்பின்குதைமுப்பேரே
திங்களம்புலிமாதப்பேர்சித்திரனேவன்றச்சன்
தங்கென்பவரம்பின்பக்கங்கருந்தினைபருந்துமாமே
தொங்கலேபீலிக்குஞ்சந்தூக்கொடுதொடுத்தமாலை. (க)

சங்கமேகணைக்காலோரெண்சபைசங்குபுலவர்நெற்றி
பங்கென்பமுடமேயாகும்பாதியுஞ்சனியுமேற்கும்
வங்கமேவெள்ளிநாவாய்வழுதலையீயமாமே
அங்கணஞ்சேறுமுற்றமாஞ்சலதாரைக்கும்பேர். (உ)

ஞாங்கர்வேல்பக்கமுன்புமேலெனநான்குமாகும்
தூங்கலேயிருத்தம்யானைதுயில்சோம்புதராசுதாழ்தல்
வாங்கலேவளைத்தல்கொள்ளல்வைவையென்பகூர்மைவைக்கோல்
வேங்கைபொன்புலிமரப்பேர்வீநீக்கம்பூப்புட்சாவாம். (ங)

மங்குல்காரிருள்விண்முப்பேர்மருந்தமுதொடுமருந்தாம்
பங்கியேபிறமயிர்க்கும்பகருமாண்மயிர்க்கும்பேராம்
அங்கதம்பன்னகந்தோளணியுடன்வசைச்சொல்லாகும்
பங்கமேசேறுதூசுபழுதொடுபின்னமாமே. (ச)

அக்கென்பது—எலும்பு, இடபத்தின்முரிப்பு, சங்குமணி. ந.
நக்கல்—சிரிப்பு, புசித்தல். உ. ஞாட்பு—யுத்தம்,கனம்,கூட்டம்.ந.
இக்கு—கரும்பு, கள். உ. ஈரம்—குளிர்ச்சி, அன்பு. உ.
மக்கள்-மனிதர்,பிள்ளைகள்.உ.வரைதல்-கொள்ளுதல்,நீக்குதல். உ.

கேகயம்—மயில், ஒருபண், அசுணமா. ந.
தோகை—மயிற்பீலி, மயில், விலங்கின்வால். ந.
போகம்—பாம்பினுடல், போகத்தின்வேறுபாடு. உ.
போகுதல்—நீளம், நேர்மை, போதல். ந.

கைக்கிளை—ஏழிசையினொன்று, ஒருதலைக்காமம். உ.
சுக்கை—நக்ஷத்திரம், பூமாலை. உ.
சூத்திரம்—யந்திரம், பஞ்சிநூல், நூற்பா. ந. எக்கர்—சொரிதல், குவிதல். உ. மொக்குள்—நீர்க்குமிழி, பூவரும்பு. உ.

# ஙகரவெதுகை.

புங்கமென்பது—உயர்ச்சி, அம்பு, அம்புக்குதை. ந.
திங்கள்—சந்திரன், மாதம். உ. சித்திரன்—சித்திரகாரன், தச்சன்.
கங்கு—வரம்பின்பக்கம், கருந்தினை, பருந்து. ந.
தொங்கல்—பீலிக்குஞ்சம், ஆபரணத்தொங்கல், தொடுத்தமாலை.ந.

சங்கம்—கணைக்கால்*ஒரெண், கூட்டம், சங்கு, புலவர், நெற்றி.ரு.
பங்கு—முடம், பாதி, சனி. ந.
வங்கம்—வெள்ளி, மரக்கலம், வழுதலை, ஈயம். ச.
அங்கணம்—சேறு, முற்றம், சலதாரை. ந.

ஞாங்கர்—வேலாயுதம், பக்கம், முன்பு, மேல். ச.
தூங்கல்—கூத்து, யானை, நித்திரை, சோம்பல், தராசு, தாழ்தல்.ரு.
வாங்கல்—வளைத்தல், கொள்ளுதல். உ. வை—கூர்மை,வைக்கோல்
வேங்கை—பொன்,புலி,ஒருமரம். ந. வீ—நீக்கம்,மலர்,பறவை,சா.

மங்குல்—மேகம், இருள், ஆகாயம். ந. மருந்து—அமுதம்,மருந்து.
பங்கி—பிறமயிர், ஆண்மயிர். உ.
அங்கதம்—பாம்பு, வாகுவலயம், வசைச்சொல். ந.
பங்கம்—சேறு, வஸ்திரம், குற்றம், பின்னம். ச.

* நூறாயிரகோடி.

அங்கமேயுடலுறுப்பென்பாறங்கங்கட்டிலைம்பேர்
பிங்கலம்பொன்னும்பொன்னிறத்தையும்பேசலாகும்
பொங்கரேமரத்தின்கோடுபொருப்புயரிலவுமுப்பேர்
பொங்கலேகொதித்தன்மிக்காம்பொச்சாப்புமறவிதீதாம். (௫)

ஙகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் ௨௫.

# சகரவெதுகை.

பாசனமென்பசுற்றம்பாண்டமுண்கலமும்பன்னும்
வாசமேயிருப்பிடம்பூமணம்புள்ளின்சிறகுதூசாம்
கோசமேமதிலுறுப்பாண்குறிமுட்டைமுறைபண்டாரம்
தேசிகன்வணிகன்றேசாந்தரியொடுகுருவுமாமே. (௧)

மூசன்மொய்த்திடல்சாவென்பமுடலையேதிரட்சியுண்டை
ஈசகங்குரங்குவேயாங்கேழ்நிறமொளியொப்பாகும்
வீசலேயெறிதலீவாம்வெம்மையுட்டணம்விருப்பம்
கேசரமகிழ்பூந்தாதாங்கிருட்டியோரீற்றுப்பன்றி. (௨)

அசிபடைக்கலமேவாளேயவமதிச்சிரிப்புமுப்பேர்
நிசியிராமஞ்சள்பொன்னும்நீர்புனல்குணம்பூராடம்
பிசியென்பபொய்யுஞ்சோறும்பேசரும்பொருளுமுப்பேர்
சுசிகோடைசுத்தந்தீயாஞ்சுடர்விளக்கிரவியங்கி. (௩)

ஆசென்பவிரைவுகுற்றமற்பமெய்க்கவசநாற்பேர்
காசென்பகோழைகுற்றங்கதிர்விடுமணிமுப்பேரே
ஆசினிபலாவிசேடமரவுரிமரக்காழ்விண்ணும்
தேசிகமழகுகாந்திதிசைச்சொல்லோர்கூத்துச்செம்பொன். (௪)

பச்சையேமரகதந்தோல்பரிமளப்புதன்மால்புந்தி
கச்சையென்பதுதழும்புகயிறொடுகவசமுப்பேர்
செச்சைமைவெட்சிதேய்வைதிகையென்பதிசைசுணங்காம்
மிச்சையேபொய்த்தலாகுமிடித்தலஞ்ஞானமுப்பேர். (௫)

பிச்சமாண்மயிரும்பீலிக்குடையும்வெண்குடையுமாகும்
கச்சம்யானைக்கழுத்திற்கயிறளவொடுமரக்கால்
எச்சமேகுறைசேயாகமிபமென்பமரக்கோடியானை
அச்சமேயகத்தியைம்மையஞ்சலிம்முப்பேராமே. (௬)

அங்கமென்பது—உடல்,அவயவம்,எலும்பு,வேதாங்கம்,கட்டில்.௫.
பிங்கலம்—பொன், பொன்னிறம். ௨.
பொங்கர்—மரக்கொம்பு, மலை, இலவமரம். ௩.
பொங்கல்—பொங்குதல், மிகுதி. ௨. பொச்சாப்பு—மறவி, பொல்லாங்கு. ௨.

# ச்கரவெதுகை.

பாசமென்பது—சுற்றம், பாத்திரம், உண்கலம். ௩.
வாசம்—இருப்பிடம், பூவின்மணம்,பறவையினிறகு,வஸ்திரம். ௪.
கோசம்—மதிலுறுப்பு,ஆண்குறி,முட்டை,புத்தகம்,பொக்கிஷம். ௫.
தேசிகன்—செட்டி, தேசாந்தரி, குரு. ௩.

மூசல்—மொய்த்தல், சா. ௨. முடலை—திரண்டவடிவு, உருண்டவடிவு. ௨.
கீசகம்—குரங்கு, மூங்கில். ௨. கேழ்—நிறம், பிரகாசம், ஒப்பு. ௩.
வீசல்—எறிதல்,கொடுத்தல்.௨. வெம்மை—வெப்பம், விருப்பம்.௨.
கேசரம்—மகிழமரம்,பூந்தாது.௨. கிருட்டி-தலையீற்றுப்பசு,பன்றி.

அசி-ஆயுதம்,வாள்,அவமதிச்சிரிப்பு. ௩. நிசி-இரவு.மஞ்சள்,பொன்.
நீர்-சலம், குணம், பூராட்நக்ஷத்திரம். ௩.
பிசி—பொய், சோறு, அரும்பொருள். ௩. சுசி—கோடைக்காலம், சுத்தம், நெருப்பு. ௩. சுடர்—விளக்கு, சூரியன், நெருப்பு. ௩.

ஆசு—சீக்கிரம், குற்றம், அற்பம், கவசம். ௪.
காசு—கோழை, குற்றம், இரத்தினம். ௩.
ஆசினி—ஈரப்பலா, மரவுரி, மரவயிரம், ஆகாயம். ௪.
தேசிகம்—அழகு, ஒளி, திசைச்சொல், ஒருகூத்து, பொன். ௫.

பச்சை—மரகதம், தோல், ஒருவாசனைப்புதல், திருமால், புதன்.௫.
கச்சை—தழும்பு, கயிறு, கவசம். ௩.
செச்சை—வெள்ளாட்டுக்கடா, வெட்சி, சாந்தின்குழம்பு.௩.திசை-திக்கு, தேமல்.௨.மிச்சை-பொய், தரித்திரம், அறிவில்லாமை.௩.

பிச்சம்—ஆண்மயிர், பீலிக்குடை, வெள்ளைக்குடை. ௩.
கச்சம்—யானைக்கழுத்திடுகயிறு, அளவு, மரக்கால். ௩.
எச்சம்—குறைவு, புத்திரன், யாகம். ௩. இபம்—மரக்கொம்பு, யானை. ௨. அச்சம்—அகத்திமரம், தகட்டுவடிவு, பயம். ௩.

ஆசையேதிசைபொன்னன்பாமாகுலம்வருத்தமோசை
காசையேகாயாநாணல்காமர்தானழகுகாதல்
பாசமேகயிறுகூளிபகருசித்துளையன்பாகும்
தூசென்பதாடையானைப்புரசைதூசிப்படைப்பேர். (௭)

தாசியேபரணிசூளைதளியென்பதுளியேகோயில்
வேசரிகழுதையேகோவேறுவேசரியுமாகும்
ஆசுகம்பகழிகாற்றுமந்தரியுமையேதுர்க்கை
கோசிகஞ்சாமவேதங்கூறுபட்டாடைக்கும்பேர். (௮)

பசுவேறுசீவனாவாம்பாரதிவாணிதோணி
வசுவேயான்கன்றும்பொன்னும்வசுக்களுந்தீயுநாற்பேர்
அசூவாண்டுறுநெல்லாடாமனையென்பகரையேமெத்தை
சசியென்பகர்ப்பூரஞ்சந்திரனயிராணிமுப்பேர். (௯)

விசும்புபொன்னுலகுமேகம்விண்ணொடுதிசையுநாற்பேர்
திசும்புநற்குடமிடாவாஞ்சாத்தனேயருகனையன்
இசைபுகழ்கிளவி * பாட்டாமேங்கலேயொலியிரங்கல்
பிசுனனேகோளன்பொய்யனுலோபனும்பேசுமுப்பேர். (௧௦)

வச்சிரஞ்சதுரக்கள்ளிவைரமேகுலிசமுப்பேர்
நொச்சியேசிந்துவாரமதில்சிற்றூர்நுவலலாமே
தச்சனேசித்திரைப்பேர்தபதியன்றுனுமாகும்
உச்சிநண்பகலுச்சிப்பேருறுப்பவயவமுடம்பாம். (௧௧)

பாசென்பபசுமைமூங்கில்பப்பென்பபரப்போடொப்பாம்
மாசென்பசிறுமைகுற்றமழையழுக்கொடுநாற்பேரே
கேசம்பெண்மயிர்க்குமாண்பான்மயிருக்குங்கிளத்தலாகும்
வாசியேகுழன்முன்னாண்மாவாசியென்னேவனாற்பேர். (௧௨)

மிசையென்பதுணவுமேடுமீமிசைச்சொல்லுமுப்பேர்
விசயமேவென்றிவெல்லம்வெங்கதிர்மண்டலப்பேர்
முசலியேயுடும்புதாழைமுந்தியவிராமனேந்தி
வசதிநல்லிடமூர்வீடாம்வரனயன்பரமன்காந்தன். (௧௩)

சகாரவெதுகை முற்றிற்று.

ஆடு விருத்தம் - ௩௮.

---

* பாடாம் என்றும் பாடம். பாடு - ஒலி.

ஆசையென்பது—திக்கு, பொன், விருப்பம். ௩.
ஆகுலம்—வருத்தம், ஒலி. ௨. காசை—காயாமரம், நாணல். ௨.
காமர்—அழகு, ஆசை. ௨. பாசம்-கயிறு, பேய்,ஊசித்துளை,அன்பு.
தூசு—புடைவை, யானைக்கழுத்திடுகயிறு, தூசிப்படை. ௩.

தாசி—பரணிநட்சத்திரம், அடியாள். ௨. தளி—துளி, கோயில்.௨.
வேசரி—கழுதை, கோவேறுகழுதை. ௨. ஆசுகம்—அம்பு, காற்று.
அந்தரி—பார்வதி, துர்க்கை. ௨.
கோசிகம்—சாமவேதம், பட்டுவஸ்திரம், புடைவை. ௩.

பசு—இடபம், உயிர், பசு. ௩. பாரதி—சரசுவதி, தோணி. ௨.
வசு—பசுவின்கன்று, பொன், அட்டவசுக்கள், நெருப்பு. ௪.
அசம்—மூன்றுவருடத்துநெல்,ஆடு.௨.அணை—செய்கரை,மெத்தை.
சசி—கர்ப்பூரம், சந்திரன், இந்திராணி. ௩.

விசும்பு—தேவலோகம், மேகம், ஆகாயம், திசை. ௪.
தசும்பு—குடம், மிடா. ௨. சாத்தன்—அருகன்,அரிகரபுத்திரன்.௨.
இசை - புகழ், சொல், பாட்டு. ௩. ஏங்கல்—சத்தம், அழுதல். ௨.
பிசுனன்—கோளன், பொய்யன், உலோபன். ௩.

வச்சிரம்—சதுரக்கள்ளி, வைரரத்தினம், வச்சிராயுதம். ௩.
நொச்சி—நொச்சிச்செடி, மதில், சிற்றூர். ௩.
தச்சன்—சித்திரைநக்ஷத்திரம், தச்சன். ௨.
உச்சி—நடுப்பகல், உச்சந்தலை. ௨. உறுப்பு—அவயவம், சரீரம். ௨.

பாசு—பசுமை, மூங்கில். ௨. பப்பு—பரப்பு, ஒப்பு. ௨.
மாசு—அற்பம், குற்றம், மேகம், அழுக்கு. ௪.
கேசம்—கூந்தல், குடுமி. ௨.
வாசி—இசைக்குழல், அச்சுவினிநக்ஷத்திரம், குதிரை, வாசியென்னேவல். ௪.

மிசை—உணவு, மேடு, மீமிசைச்சொல். ௩.
விசயம்—வெற்றி, வெல்லம், சூரியமண்டலம். ௩.
முசலி—உடும்பு, தாழை, பலதேவன், ஓந்தி. ௪.
வசதி—நல்லிடம்,ஊர்,வீடு. ௩. வரன்—பிரமன், சிவன், கணவன்.

# ஞகரவெதுகை.

துஞ்சலேநிலைபேறுருந்துயில்சோம்புசாவுமாகும்
பஞ்சரஞ்செருந்திகூடாம்பரதரேகழியர்நாய்கர்
கஞ்சமேதாளங்குல்லைகமலம்வெண்கலம்வட்டப்பம்
குஞ்சமீயோட்டிநாழிகுறள்குன்றிகுறளைச்சொல்லே. (௧)

நெஞ்சென்பமனமார்பின்பேர்நிழல்செல்வங்குளிர்ச்சிசாயை
மஞ்சுபூண்வலிவனப்புமழையானைமுதுகிவ்வைந்தே
வஞ்சிமேற்செலவோரூர்பாவல்லிமென்மருங்குற்பெண்ணும்
தஞ்சமேயெளிமையென்பதருபற்றுக்கோடுமாமே. (௨)

அஞ்சனங்கறுப்புமைதிக்கானையிலொன்றுமுப்பேர்
மஞ்சரியேபூங்கொத்துமாலைசெந்தளிருமாகும்
அஞ்சலிவணங்கல்வாவற்பறவையுமாகுமென்ப
இஞ்சியேபுரிசையிஞ்சியெறுழென்பவலிதண்டாமே. (௩)

கிஞ்சுகமுருக்குச்செம்மைகிருட்டிணன்றன்மால்பார்த்தன்
கஞ்சனமேகண்ணாடிகரிக்குருவிக்கும்பேரே
பஞ்சமேசிறுமையைந்தாம்பகழியம்பிதன்குதைப்பேர்
வஞ்சனைமாயைபொய்யாமாயன்மால்கருநிறத்தோன். (௪)

குஞ்சியாண்மயிர்புட்பார்ப்புக்குன்றியின்கொடிமுப்பேரே
வஞ்சமேகபடம்வாளாமாயம்வஞ்சனைபொய்யென்ப
கஞ்சனேகுறளன்வேதன்களங்கந்தானழுக்குக்குற்றம்
கஞ்சிகைசிவிகையாடைகட்டிடுதிரையுமாமே. (௫)

ஞகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் - ௪௩.

# டகரவெதுகை.

நடலைவஞ்சனைபொய்யென்பநடுங்கியநுடக்கமுப்பேர்
மடல்பனையேடுபோல்வமலரிதழோர்நூற்கும்பேர்
படர்நடைநினைப்புநோவாம்பகர்ந்திடில்வீரர்க்கும்பேர்
குடநகர்பசுவோர்கூத்துக்கும்பமேகரும்பின்கட்டி. (௧)

மாடமேயுழுந்தோடில்லாமழையென்பகுளிர்ச்சிமேகம்
கூடமின்மறைவுகொல்லன்சம்மட்டிகுவட்டினுச்சி
சேடனோர்சாதிபாங்கன்செகந்தாங்குமனந்தனென்ப
கேடகம்பரிசைவேறோர்கேடிலூர்பலகைமுப்பேர். (௨)

# ஞ கர வெதுகை.

அஞ்சலென்பது—நிலைபெறுதல், நித்திரை, சோம்பல், சா. ச.
பஞ்சரம்—செருந்திமரம், கூடு. உ. பரதர்—நெய்தநிலமாக்கள், செட்டிகள். உ.
கஞ்சம்—தாளம், கஞ்சா, தாமரை, வெண்கலம், அப்பம். ரு.
குஞ்சம்—ஈயோட்டி, நாழி, குறள், குன்றிக்கொடி, குறளைச்சொல்.

நெஞ்சு—மனம், மார்பு. உ. நிழல்—செல்வம், குளிர்ச்சி, சாயை. ங.
மஞ்சு—ஆபரணம், வலிமை, அழகு, மேகம், யானைமுதுகு. ரு.
வஞ்சி—பகைவர்மேற்செல்லுதல், கருவூர், வஞ்சிப்பா, வஞ்சிக்கொடி, பெண். ரு. தஞ்சம்—எளிமை, பற்றுக்கோடு. உ.

அஞ்சனம்—கறுப்பு, மை, மேற்றிசையானை. ங.
மஞ்சரி—பூங்கொத்து, பூமாலை, தளிர். ங.
அஞ்சலி—கும்பிடல், வெளவால். உ.
இஞ்சி—மதில், இஞ்சி. உ. எறும்—வலிமை, தண்டாயுதம். உ.

கிஞ்சுகம்-முண்முருக்கு, சிவப்பு. உ. கிருட்டிணன்-கண்ணன், அருச்சுனன். உ. கஞ்சனம்—கண்ணாடி, கரிக்குருவி. உ. பஞ்சம்-சிறுவிலைக்காலம், ஐந்து. உ. பகழி-அம்பு, அம்புக்குதை. உ. வஞ்சனை—மாயை, பொய். உ. மாயன்-திருமால், கருநிறத்தோன். உ.

குஞ்சி—ஆண்மயிர், பறவைக்குஞ்சு, குன்றிக்கொடி. ங.
வஞ்சம்—கபடம், வாள். உ. மாயம்—வஞ்சனை, பொய். உ.
கஞ்சன்—குறளன், பிரமன். உ. களங்கம்—அழுக்கு, குற்றம். உ.
கஞ்சிகை—தண்டிகை, வஸ்திரம், இடுதிரை. ங.

# ட கர வெதுகை.

நடலையென்பது—வஞ்சனை, பொய், அசைவு. ங.
மடல்—பனையேடுபோல்வன, பூவிதழ், ஒருபிரபந்தம். ங.
படர்—வழி, நினைப்பு, துன்பம், படைவீரர். ச.
குடம்—நகரம், பசு, ஒருகூத்து, குடம், வெல்லக்கட்டி. ரு.

மாடம்—உழுந்து, வீடு. உ. மழை—குளிர்ச்சி, மேகம். உ.
கூடம்—வீடு, மறைவு, கொல்லன்சம்மட்டி, மலையினுச்சி. ச.
சேடன்—ஒருசாதியான், தோழன், அனந்தன். ங.
கேடகம்—பரிசை, மலைசெறிந்தவூர், பலகை. ங.

இடங்கரேமுதலைனூர்த்தர்குடங்கரிம்முப்பேரென்ப
முடங்கலேமடங்கல்கைதைமூங்கிஞேயோலையிம்பேர்
படங்குமேற்கட்டியென்பபகர்பெருங்கொடியுமாகும்
விடங்கமேர்கொடிகொடுங்கைமிதவையேதெப்பஞ்சோறும். (௩)

குடிஞைபுட்பொதுவும்யாறுங்கூகையுமாகுமென்ப
தடிவயலுலக்கைவில்லுத்தண்டுமின்றசையுடும்பாம்
தொடிவளையொருபலப்பேர்சூழ்ந்தகங்கணமுமாகும்
மடியடங்குதலேசோம்புவயிறுநோய்புடைவைதாழை. (௪)

படிவமேவடிவநோன்பாம்பந்தமேகிளையுங்கட்டும்
வெடியச்சம்பரிமளிக்குமென்புகைவெளியிம்முப்பேர்
துடியேலம்பறைகாலப்பேர்தூத்தூய்தூன்பற்றுக்கோடாம் (௫)
கொடிறுபூசங்கதுப்பாங்குரவையேகடலோர்கூத்து.

கடிகைநாழிகையேதுண்டங்கதவிடுதாழேமுப்பேர்
படிறுபொய்களவிரண்டாம்பகர்தலேவிற்றல்பேசல்
சுடிகையேமகுடமுச்சிசுட்டியுமிட்டபேரே
இடியிடிப்பேரேநென்மாவேற்றிடுமுறுதிச்சொல்லே. (௬)

நாடிநாழிகைநரம்பாநந்தல்கேடுடனேயாக்கம்
பாடியேநகரநாடுபாசறையாயரூர்ப்பேர்
கோடிகந்துகில்பூந்தட்டாங்குடம்பையேமுட்டைகூடு
கோடியெண்புதுமைதூசாங்குடுமியேவெற்றியுச்சி. (௭)

உடுவிண்மீன்கிடங்குநாவாயோட்டுங்கோலம்பிலீர்க்காம்
கடுவிடமுள்ளுத்தானேயரிதகிகசப்புநாற்பேர்
படுமரக்குலையேகள்ளுப்பரவுநீர்நிலைநன்மைப்பேர்
படுதலேயொலியின்றுதல்பகரிலுண்டாதல்பூத்தல். (௮)

மாடுபொன்பக்கஞ்செல்வம்வைகல்வைகறைநாடங்கல்
சேடென்பபெருமைநன்மைதிரட்சியேயழகுநாற்பேர்
பாடிடம்பெருமையோசைபட்டேபட்டாடைசிற்றூர்
ஈடென்பகுணபூவேயொப்பேவலியொடுபெருமையும்பேர். (௯)

மடையென்பமதகுசோறுமணிப்பணிக்கடைப்பூட்டும்பேர்
படைபடைக்கலங்கலப்பைபடுக்கைபல்லணமேதானை
இடைநடுவென்பமற்றுமிடப்பெயர்நுசுப்புமாமே
மடமறியாமைசத்திரமன்னியமுனிவாசப்பேர். (௰)

இடங்கரென்பது—முதலை, தூர்த்தர், குடம். ௩.
முடங்கல்—மடங்குதல், தாழை, மூங்கில், நோய், ஓலை. ௫.
படங்கு—மேற்கட்டி, பெருங்கொடி. ௨. விடங்கம்—அழகு, வீதியிற்கட்டியகொடி, கொடுங்கை. ௩. மிதவை-தெப்பம், சோறு.௨.

குடிஞை—பறவைப்பொது, நதி, கோட்டான். ௩.
தடி—வயல்,உலக்கை,வில்லு,தண்டாயுதம்,மின்னல்,தசை, உடும்பு.
தொடி—கைவளை, ஒருபலம், கங்கணம். ௩.
மடி—அடங்குதல், சோம்பல், வயிறு, நோய்,புடைவை,தாழை. ௬.

படிவம்—உருவம், நோன்பு. ௨. பந்தம்—உறவு, கட்டு. ௨.
வெடி—பயம், நறும்புகை, வெளி. ௩. *துடி—ஏலம், பறை, காலநுட்பம். ௩. தூ-சுத்தம், தசை, பற்றுக்கோடு. ௩. கொடிறு-பூசநக்ஷத்திரம், கதுப்பு. ௨. குரவை—கடல், கைகோத்தாடல். ௨.

கடிகை—நாழிகை, துண்டம், கதவிடுதாழ். ௩.
படிறு—பொய், களவு. ௨. பகர்தல்—விற்றல், பேசுதல். ௨.
சுடிகை—முடி, உச்சி, சுட்டி. ௩.
† இடி—இடியேறு, நென்மா, உறுதிச்சொல். ௩.

நாடி—நாழிகை, நரம்பு. ௨. நந்தல்—கேடு, ஆக்கம். ௨.
பாடி-நகரம்,நாடு,பகைமேற்சென்றோருறைவிடம்,முல்லைநிலத்தூர்
கோடிகம்—வஸ்திரம், பூந்தட்டு. ௨. குடம்பை—முட்டை,கூடு. ௨.
கோடி—ஓரெண்,புதுமை, வஸ்திரம். ௩. குடுமி—வெற்றி,உச்சி. ௨.

உடு--நக்ஷத்திரம்,அகழி,மரக்கலமோட்டுங்கோல்,அம்புச்சிறகு. ௪.
கடு—நஞ்சு, முள், கடுமரம், கசப்பு. ௪.
படு—மரக்குலை, கள், நீர்நிலை, நன்மை. ௪.
படுதல்—ஒலித்தல், அழிதல், உண்டாதல், பூத்தல். ௪.

மாடு—பொன், பக்கம், செல்வம். ௩.
வைகல்-விடியற்காலம்,நாள்,தங்குதல்.௩.சேடு-பெருமை, நன்மை, திரட்சி, அழகு. ௪. பாடு-இடம், பெருமை, ஓசை. ௩.பட்டு-பட்டுவஸ்திரம்,சிற்றூர்.௨.ஈடு--குழைவு,ஒப்பு,வலிமை,பெருமை. ௪.

மடை—மதகு, சோறு, அணிகளின்கடைப்புணர்வு. ௩.
படை—ஆயுதம், கலப்பை, நித்திரை, குதிரைக்கலணை, சேனை. ௫.
இடை—நடு, இடம், இடை. ௩.
மடம்—அறிவின்மை, சத்திரம், முனிவரிருப்பிடம். ௩.

---

* துடி - இடைசுருங்குபறை, குறிஞ்சிப்பறை, பாலைப்பறை.
† இடி - மாப்பொதுவின்பெயருமாம்.

வாடையென்பதுதான்வீதிவடகாற்றுத்தானுமாமே
ஆடுமேழகம்வெற்றிப்பேரல்கலுள்சுருங்கல்வைகல்
கோடைமேல்காற்றினோடுகுதிரைவெண்காந்தளென்ப
ஓடைநீர்நிலைகிடங்கேயொருமரம்வல்லிபட்டம். (கக)

அடுப்பென்பபரணிநாளேயச்சமேசுல்லிமுப்பேர்
வடுச்செம்புதழும்புவண்டாமத்தகநெற்றிசென்னி
இடக்கரேமறைத்தவார்த்தைகும்பமுமென்பநூலோர்
கடைப்பிடிமறப்பிலாமைகருதியதேற்றமாமே. (கஉ)

பட்டமேயோடைதூசுபதவிவாள்கவரிமாவாம்
புட்டமேகாகமாகும்புடைவையுநிறைவுமுப்பேர்
குட்டமேதொழுநோயாழங்குளமெனப்பெயர்முப்பாற்றே
வட்டமேபரிசைநீர்ச்சால்வலயங்கைம்மணிதாரூர்கோள். (கங)

திட்டையேயுரலுமேடுந்திண்ணையுநண்ணுமுப்பேர்
தட்டைவேய்தினைத்தாள்கிள்ளைதனைக்கடிகோலேமுண்டம்
கிட்டியேதலையீற்றாவாங்கிருட்டியாந்தாளமுப்பேர்
கட்டளைநிறைகல்லொப்பேயிட்டிகையியற்றலாணி. (கச)

நாட்டங்கண்ணோர்பண்வாளாநாகுசங்கிளமைநத்தை
ஓட்டமேலுதடேதோல்வியுயிரென்பகாற்றேசீவன்
கோட்டங்கோண்படப்பைநாடுகோயிலவ்வியமான்கொட்டில்
தோட்டியங்குசங்கபாடந்துணையென்பதளவுமொப்பும். (கரு)

தடமலைபெருமைகோணல் * சரிகரையகலம்வாவி
அடல்கொலைவலிபோராகுமருத்தமேபொருள்பொன்பாதி
உடல்பொருளாகமென்பவோங்கல்வெற்புயரமூங்கில்
விடபமேயிடபராசிவிடைமரக்கொம்புமுப்பேர். (கசு)

கடகமேசேனைவட்டங்கைவளைமதிணாற்பேரே
வடகந்தோலத்தவாளம்வலமென்பதிடமேவெற்றி
படுவிகள்விற்பாள்குண்டம்பரமென்பகவசமெய்யாம்
நொடிபிதிர்கிளவியாகுநூனநிச்சயமேகுன்றல். (கஎ)

கடங்கயிறுவாக்கதுப்புக்கான்சுரமுடம்புநீதி
குடங்கடாமீமம்யானைக்குழாங்கடன்முழவைந்தேழாம்
மடங்கலேயசனியேமறலிநோயுகமூழித்தீ
படங்கரிமுகபடாநற்றுகில்பாம்பின்பணமுப்பேரே. (கஅ)

* கோணம் என்றும் பாடம்.

வாடையென்பது—தெரு, வடகாற்று. உ. ஆடு—ஆடு, வெற்றி. உ.
அல்கல்—நாள், குறைதல், தங்குதல். ௩. கோடை—மேல்காற்று,
குதிரை, வெண்காந்தள். ௩. ஓடை—நீர்நிலை, அகழ், ஒருவ
கைமரம், ஒருவகைக்கொடி, நெற்றிப்பட்டம். ௫.

அடுப்பு—பரணிநக்ஷத்திரம், அச்சம், அடுப்பு. ௩.
வடு—செம்பு, தழும்பு, வண்டு. ௩. மத்தகம்—நெற்றி, தலை. உ.
இடக்கர்—மறைத்தசொல், குடம். உ.
கடைப்பிடி—மறவாமை, தேற்றம். உ.

பட்டம்—குளம், வஸ்திரம், பதவி, வாள், கவரிமா. ௫.
புட்டம்—காக்கை, சீலை, நிறைவு. ௩.
குட்டம்—குட்டரோகம், ஆழம், குளம். ௩.
வட்டம்—பரிசை,நீர்ச்சால்,வட்டம்,கைம்மணி,சீலை,பரிவேடம்.௬.

திட்டை—உரல், மேடு, திண்ணை. ௩.
தட்டை—மூங்கில், தினைத்தாள், கிளிகடிகோல், மொட்டை. ௪.
கிட்டி—தலையீற்றுப்பசு, பன்றி, தாளம். ௩. கட்டளை—நிறையறி
கருவி, உவமை, செங்கலியற்றுங்கருவி, உரையறிகருவி. ௪.

நாட்டம்—கண், ஒருபண், வாள். ௩. நாகு-சங்கு, இளமை, நத்தை.
ஓட்டம்-மேலுதடு, தோல்வி. உ. உயிர்-காற்று, சீவன். உ. கோட்
டம்-வளைவு,மருதநிலத்தூர்,நாடு,கோயில்,அழுக்காறு,பசுச்சாலை.
தோட்டி—யானைத்தோட்டி, கதவு. உ. துணை—அளவு, ஒப்பு.உ.

தடம்—மலை, பெருமை, வளைவு, வழி, நீர்க்கரை, அகலம்,குளம்.எ.
அடல்—கொல்லுதல், வலி, போர். ௩. அருத்தம்—பொருள்,
பொன், பாதி. ௩. உடல்—பொன், உடம்பு. உ. ஓங்கல்—மலை,
உயர்ச்சி,மூங்கில்.௩.விடபம்-இடபராசி, இடபம், மரக்கொம்பு.

கடகம்—சேனை, வட்டம், கைவளை, மதில். ௪.
வடகம்—தோல், அத்தவாளம். உ. வலம்—இடம், வெற்றி. உ.
படுவி—கள்விற்பவள், தொழுத்தை. உ. பரம்—கவசம்,சரீரம்.உ.
நொடி—விடுகதை, சொல். உ. நூனம்—நிச்சயம், குறைதல். உ.

கடம்—கயிறு, யானைக்கவுள், காடு, அருநெறி, உடம்பு, நீதி, குடம்,
யானைமதம், சுடலை, யானைக்கூட்டம், முறைமை, குடமுழா.கஉ.
மடங்கல்—இடி, சிங்கம், யமன், நோய், யுகமுடிவு, ஊழித்தீ. ௬.
படம்—யானைமுகபடாம், சீலை, பாம்பின்படம். ௩.

ஆடலேல்பெண்ணுண்கூடல்வார்த்தைகூத்தாடல்வென்றி
பாடலஞ்சிவப்பினோடுபாதிரிகுதிரைமுப்பேர்
கோடரங்குரங்குசோலைகொம்பொடுகுதிரையாகும்
ஆடவர்புருடர்நாமமாமிளையவர்க்கும்பேரே. (கசு)

கடிமணம்விரைவுகூர்மைகாலம்பேய்விளக்கங்காப்பு
வடிவச்சம்வாசமையம்வரைவுவிம்மிதமேழாறும்
வடுகேயிந்தளராகப்பேர்மருதயாழ்த்திறனுமாமே
வடவையேகுதிரைப்பெட்டையுவாப்பிடிவடவைத்தீயாம். (உ0)

கோடுசங்கூதுகொம்புமரக்கொம்புவிலங்கின்கொம்பு
நீடுசெய்வரம்புகுன்றின்முகடுநீர்க்கரையேழ்பேராம்
மோடுமேடுதரமாகுமுறுவலேநகைத்தல்பல்லாம்
ஆடியேயோர்மாதங்கண்ணாடியுத்தராடமாமே. (உக)

தட்டுத்தேர்நடுவுகுற்றந்தட்டொடுபரிசைமுட்டாம்
செட்டிவாணிகன்செவ்வேளாஞ்செப்புரைகரண்டகப்பேர்
மட்டென்பதெல்லைகள்ளாமார்க்கமேசமயம்வீதி
பட்டிகையென்பகச்சுப்பகட்டுடனிரதன்ம்மே. * (உஉ)

கடைமுடிவிடம்வாயிற்பேர்களேவரம்பிணமுடம்பாம்
உடைதுகில்செல்வமென்பவுடுக்கைதண்ணுமைதுகிற்பேர்
அடையிலைகனமேயப்பமடுத்தல்செல்வழியைம்பேராம்
நடைவழியொழுக்கஞ்செல்வநாரென்பகயிறன்பாமே. (உ௩)

விடையெதிர்மொழியுமேறும்விடுத்தலும்விளம்புமுப்பேர்
கிடைசடையுவமைநெட்டிகீதமேயிசையும்வண்டும்
படியங்கவடிசோபானம்பகைகுணமுவமைபாராம்
குடிகுலம்புருவமூராங்கொடிவல்லிதுவசங்காக்கை. (உச)

நட்டமேநடனங்கேடாநகரென்பமனையுமூரும்
தொட்டலென்பதுவேயுண்டறோண்டல்கைதீண்டன்முப்பேர்
தட்டலேதடைகிட்டற்பேர்தையொருமாதம்பூசம்
கட்டலென்பதுதடுத்தல்களைதல்பந்தித்தல்கள்ளல். (உரு)

புட்கரநிறைவுபாண்டமுகந்தீர்த்தம்புனல்வான்சேனம்
கட்கம்பங்கயமேயானைக்கைநுனிகுருகீரைந்தாம்
வெட்சியென்பதுவேசெச்சைமிகுநிரைகவர்தலென்ப
வெட்பென்பபெருமையன்பாம்பிரசந்தேன்மதுவண்டாமே. (உசு)

* இரதமாமே என்றும் பாடம்.

ஆடலென்பது—பெண்ணுண்கூடல்,சொல்லல்,கூத்தாடல், வெற்றி.
பாடலம்—சிவப்பு, பாதிரிமரம், குதிரை. ங.
கோடரம்—குரங்கு, சோலை, மரக்கொம்பு, குதிரை. ச.
ஆடவர்—ஆண்மக்கள், இளைஞர். உ.

கடி—விவாகம், விரைவு, கூர்மை, காலம், பேய்,விளக்கம்,காவல்,
அல்குல், அச்சம், மணம், சந்தேகம், நீக்கல், அதிசயம். கங.
வடுகு—இந்தளராகம், மருதயாழ்த்திறம். உ.
வடவை—பெண்குதிரை, பெண்யானை, ஊழித்தீ. ங.

கோடு—சங்கு, ஊதுகொம்பு,மரக்கொம்பு, விலங்கின்கொம்பு,வரம்பு, மலையினுச்சி, நீர்க்கரை. எ.
மோடு—மேடு, வயிறு. உ. முறுவல்—சிரித்தல், பல். உ.
ஆடி—ஒருமாதம், கண்ணாடி, உத்தராடநக்ஷத்திரம். ங.

தட்டு—தேர்நடு, குற்றம், முறம், தோற்பலகை, விக்கினம். ரு.
செட்டி--வாணிகன்,சுப்பிரமணியன்.உ.செப்பு-சொல்,கரண்டகம்.
மட்டு—எல்லை, கள். உ. மார்க்கம்—சமயம், தெரு. உ.
பட்டிகை—கச்சு, தெப்பம், அரைஞாண். ங.

கடை—முடிவு, இடம், வாயில். ங. களேவரம்—பிணம், உடம்பு.
உடை—வஸ்திரம், செல்வம். உ. உடுக்கை—தண்ணுமை,வஸ்திரம்.
அடை—இலை, கனம், அப்பம், அடுத்தல், வழி. ரு.
நடை—வழி, ஒழுக்கம், செல்வம். ங. நார்—கயிறு, அன்பு. உ.

விடை—மறுமொழி,இடபம், விடுத்தல்.ங.கிடை—சடை, உவமை, நெட்டி. ங. கீதம்--இராகம், வண்டு. உ. படி-குதிரையங்கவடி, கற்படி, பகை, குணம், ஒப்பு, பூமி. சு. குடி—குலம், புருவம், ஊர். ங. கொடி—படர்கொடி, துகிற்கொடி, காக்கை. ங.

நட்டம்—கூத்து, கேடு. உ. நகர்—வீடு, ஊர். உ.
தொட்டல்—உண்டல், தோண்டுதல், கையாற்றொடுதல். ங.
தட்டல்—தடுத்தல்,கிட்டுதல். உ. தை—ஒருமாதம், பூசநக்ஷத்திரம்.
கட்டல்—தடுத்தல், பறித்தல், கட்டுதல், களவு. ச.

புட்கரம்—நிறைவு, பாண்டமுகம், தீர்த்தம், நீர், ஆகாயம்,பருந்து, வாள், தாமரை, யானைத்துதிக்கைநுதி, நாரை. க0.
வெட்சி—வெட்சிச்செடி, பகைவர்பசுக்கூட்டத்தைக்கவர்தல். உ.
பெட்பு—பெருமை, அன்பு. உ. பிரசம்—தேன், கள், வண்டு. ங.

அடுதலையட்டலென்பவடர்தலுங்கொலையுமுப்பேர்
சடிலமேநெருங்கலோடுசடைகுதிரையுமுப்பேரே
படலையேபடர்தன்மாலைபதலையேவாசிக்கோவை
இடுகுதேர்மரச்சுற்றின்பேர்பரிசைக்குங்கிளத்தலாமே. (உஎ)

படலிகைபீர்க்குவட்டம்பரந்தகைம்மணிபூந்தட்டாம்
கொடியனேகொடியன்கேதாங்குண்டாழந்தாழ்வாண்மாவே
தொடுவென்பமருதப்பூமிதோட்டங்கைதவமுப்பேரே
முடிமயிர்முடியேசென்னிமகுடமுமொழியலாமே. (உஅ)

ஆடகந்துவரைபொன்னாமஞரறிவிலரேதுக்கம்
கோடகமுடியுறுப்புங்குதிரையும்புதுமையும்பேர்
பீடிகையாவணம்பூந்தட்டொடுபீடமுப்பேர்
தோடுபூவிதழேபெண்ணைமடல்போல்வதொகுதிக்கும்பேர். (உகூ)

அடரென்பநெருங்குதற்பேரைம்மையின்வடிவுமாகும்
விடர்முனியிருப்புத்தூர்த்தர்கமர்வெற்பின்முழைகாடைம்பேர்
விடலையேதலைவன்பேரும்விறலோன்றன்பேருமாகும்
அடிசெண்டுவெளிதாளாதிகவிதையின்பாதமாமே. (௩0)

டகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - எ௩.

# ணகரவெதுகை.

புணர்வுதோய்ந்திடலிசைப்பாம்பொழில்புவிபெருமைசோலை
உணர்வென்பதெளிவேயூடலொழிதலையறிவுமாகும்
குணமென்பகயிறுபண்புகும்பம்வின்னாணிநாற்பேர்
கணமுடுநோய்திரட்சிகாலநுட்பம்பேய்வட்டம். (க)

ஆணமேகுழம்போடம்பாமலநாஞ்சிலமையுமென்றல்
ஓணமாயோனாளாறூதியமிலாபங்கல்வி
காணமேபரியூண்செக்கோர்காணம்பொற்காசுநாற்பேர்
கோணலேமாறுபாடுங்கூனுமாம்வளைவுமாமே. (உ)

குணில்குறுந்தடிகடிப்பாங்குல்லையேதுளவுவெட்சி
மணிநவமணியேகண்டைவனப்பொடுகருமைநன்மை
துணிசோதிநாளேதுண்டந்துளிமழைத்துளிபெண்ணாமை
பிணிமுகமயில்புட்பேராம்பிசிதநீரிறைச்சிவேம்பு. (௩)

அடுதலென்பது—சமைத்தல், நெருங்கல், கொல்லுதல். ௩.
சடிலம்—நெருங்குதல், சடை, குதிரை. ௩.
படலை—பரந்தவடிவு, பூமாலை, வாயகன்றபறை, குதிரைக்கிங்கிணி மாலை. ௪. கிடுகு—தேர்மரச்சுற்று, பரிசை. ௨.

படலிகை—பீர்க்கு, வட்டவடிவு, கைம்மணி, பூந்தட்டு. ௪.
கொடியன்--தீயன், கேது. ௨. குண்டு—ஆழம், தாழ்வு, ஆண்குதிரை.
தொடு—மருதநிலம், தோட்டம், வஞ்சகம். ௩.
முடி—மயிர்முடி, தலை, கிரீடம். ௩.

ஆடகம்—துவரை, பொன். ௨. அஞர்—அறிவிலார், துக்கம். ௨.
கோடகம்—முடியுறுப்புளொன்று, குதிரை, புதுமை. ௩.
பீடிகை—கடைவீதி, பூந்தட்டு, பீடம். ௩.
தோடு—பூவிதழ், பனைமடல்போல்வன, கூட்டம். ௩.

அடர்—நெருங்கல், தகட்டுவடிவு. ௨.
விடர்-முனிவரிருப்பிடம், தூர்த்தர், நிலப்பிளப்பு, மலைப்பிளப்பு, காடு
விடலை—பாலைநிலத்தலைவன், வெற்றியாளன். ௨.
அடி—குதிரையையாளிவீதி, கால், முதல், பாட்டினடி. ௪.

## ணகரவெதுகை.

புணர்வென்பது—கலவி, இணக்கம். ௨. பொழில்—பூமி, பெருமை, சோலை. ௩. உணர்வு—தெளிவு, ஊடலொழிதல், அறிவு. ௩.
குணம்—கயிறு, குணம், குடம், நாணி. ௪.
கணம்-நக்ஷத்திரம், ஒருநோய், கூட்டம், காலநுட்பம், பேய், வட்டம்.

ஆணம்—குழம்பு, அன்பு. ௨. அலம்—கலப்பை, அமையுமென்றல்.
ஓணம்—திருவோணம், ஆறு. ௨. ஊதியம்—இலாபம், கல்வி. ௨.
காணம்—கொள்ளு, செக்கு, ஓரளவு, பொற்காசு. ௪.
கோணல்—மாறுபாடு, கூன், வளைவு. ௩.

குணில்—குறுந்தடி, பறையடிக்குங்குறுந்தடி. ௨. குல்லை-துளசி, வெட்சி. ௨. மணி-நவமணி, பெருமணி, அழகு, கறுப்பு, நன்மை.
துணி—சோதிநக்ஷத்திரம், துண்டம். ௨. துளி—மழைத்துளி, பெண்ணுமை. ௨. பிணிமுகம்—மயில், பறவைப்பொது. ௨.
பிசிதம்—நீர், இறைச்சி, வேம்பு. ௩.

நாணிலச்சைப்பேர்தானேகயிறென்றுநாட்டலாகும்
தோணியேகடைநாள்வங்கந்தொடுகணைதெப்பஞ்சேறு
வாணியேயோர்கூத்தின்பேர்வாக்குநாமகளுமாமே
ஏணியேயுலகோடெல்லையிறைவைமானென்றுஞ்சொல்லும். (ச)

திணைநிலங்குலமொழுக்கஞ்செவியென்பகாதுகேள்வி
பிணையாசைவிலங்கின்பெண்பேர்பிலவங்கங்குரங்குதேரை
கணையம்புதிரட்சியும்பேர்கட்சியேகாடுங்கூடும்
பணைவயல்பரியின்பந்திபருத்தல்வேயரசுபீடாம். (ரு)

யாணரேபுதுமைதச்சரெய்தியவனப்புநன்மை
பாணந்தான்மேகவண்ணக்குறிஞ்சியெய்கணைபூம்பட்டாம்
சேணென்பதகலநீளஞ்செப்பிடிலுயரமுப்பேர்
ஆணைமெய்யுடனேவென்றிசூளேவலாகநாற்பேர். (சு)

அண்டமாகாயமுட்டையயிலென்பவேலேகூர்மை
துண்டமேசாரைப்பாம்புதுணியொடுவதனமூக்காம்
கண்டமேகவசம்வெல்லங்கழுத்திடுதிரைவாடுண்டம்
முண்டகந்தாழைகள்ளுமுளரிமத்தகமுண்மூலம். (எ)

அண்டரேபகைவர்வானோராயரென்றுகுமுப்பேர்
சண்டனேசதயநாளுஞ்சூறனும்வேறுகாட்டும்
கண்டல்கேதகைமுள்ளிப்பேர்கரைதலேவிளித்தலோசை
பண்டம்பொன்பணிகாரப்பேர்பாகுபால்குழம்புபாக்காம். (அ)

விண்டென்பமாயோன்வெற்புமேகமேமூங்கில்காற்றும்
தொண்டென்பபழமையொன்பான்றொழும்பொடுவழிபாடாமே
தண்டென்பகுழாயேவீணைதடிபடைமிதுனமோந்தி
வண்டென்பசங்குகுற்றம்வளையளிவாளியைம்பேர். (கூ)

உண்டையேதிரளையாகுமுறுபடைவகுப்புமென்ப
தொண்டையாதொண்டைகொவ்வைதூங்கும்யானைத்துதிக்கை
கொண்டையேமயிர்முடிக்குமிலந்தையின்கனிக்குங்கூற்றும்
கண்டிகைபதக்கம்வாகுவலயமேகலன்பெய்செப்பு. (க0)

தண்ணமோர்கட்பறைப்பேர்தறித்திடுமழுவுமாகும்
வண்ணமேர்சந்தம்பண்பாமறையிராசியமேவேதம்
பண்ணென்பபாட்டும்பண்ணும்பரிமாவின்கலணையும்பேர்
மண்ணுவொப்பனைப்பேர்முழவின்மார்ச்சனையுமாமே. (கக)

நாணென்பது—வெட்கம், கயிறு. உ.
தோணி—இரேவதிநக்ஷத்திரம்,மரக்கலம்,அம்பு,தெப்பம்,சேறு.ரு.
வாணி—ஒருகூத்து, சொல், சரசுவதி. ௩.
ஏணி—உலகம், எல்லை, ஏணி, மான். ௪.

திணை—நிலம், சாதி,ஒழுக்கம். ௩. செவி—காது, கேள்வி. உ.
பிணை—ஆசை, விலங்கின்பெண். உ. பிலவங்கம்—குரங்கு, தேரை.
கணை—அம்பு, திரட்சி. உ. கட்சி—காடு, பறவைக்கூடு. உ.
பணை—வயல்,குதிரைப்பந்தி,பருமை,மூங்கில்,அரசமரம்,பெருமை.

யாணர்—புதுமை, தச்சர், அழகு, நன்மை. ௪.
பாணம்—மழைவண்ணக்குறிஞ்சி, அம்பு, பட்டுவஸ்திரம். ௩.
சேண்—அகலம், நீளம், உயரம். ௩.
ஆணை—உண்மை, வெற்றி, சபதம், ஏவல். ௪.

அண்டம்—ஆகாயம், முட்டை. உ. அயில்—வேலாயுதம், கூர்மை.
துண்டம்—சாரைப்பாம்பு, துணி, முகம், மூக்கு. ௪.
கண்டம்—கவசம், வெல்லம்,கழுத்து,இடுதிரை,வாள்,துண்டம். ௬.
முண்டகம்—தாழை, கள், தாமரை, நெற்றி, முள்ளுடைமூலம். ரு.

அண்டர்—பகைவர், தேவர், இடையர். ௩. சுண்டன்—சதயநக்ஷ
த்திரம், மூஞ்சூறு. உ. கண்டல்—தாழை, முள்ளிச்செடி. உ.
கரைதல்-அழைத்தல், ஒலித்தல்.உ. பண்டம்-பொன், பலபண்டம்.
பாகு—பங்கு, குழம்பு, பாக்கு. ௩.

விண்டு—விட்டுணு, மலை, மேகம், மூங்கில், காற்று. ரு.
தொண்டு—பழமை, ஒன்பது, அடிமை, வழிபாடு. ௪.
தண்டு—குழாய், வீணை, தடி, சேனை, மிதுனராசி, ஓந்தி. ௬.
வண்டு—சங்கு, குற்றம், கைவளை, வண்டு, அம்பு. ரு.

உண்டை—திரட்சி, படைவகுப்பு. உ.
தொண்டை-ஆதொண்டைச்செடி, கொவ்வை, யானைத்துதிக்கை.௩.
கொண்டை—மயிர்முடி, * இலந்தைக்கனி. உ.
கண்டிகை—பதக்கம், வாகுவலயம், ஆபரணச்செப்பு. உ.

தண்ணம்—ஒருகட்பறை, மழு. உ.
வண்ணம்—அழகு, நிறம், குணம். ௩. மறை—இரகசியம், வேதம்.
பண்—இசைப்பாட்டு, பண், குதிரைக்கலணை. ௩.
மண்—அணு, ஒப்பனை, மார்ச்சனை. ௩.

---

* கோண்டை - இலந்தைக்கனி.

அணங்குநோயழகுதெய்வமாசைபெண்கொலைவருத்தம்
துணங்கையேவிழாப்பேய்கூத்தாமாதிரைநாளுஞ்சொல்லும்
குணுங்கர்தோற்கருவிமாக்கள்குயிலுவரிழிஞர்முப்பேர்
துணங்கறலிருள்விழாவாந்தோன்றலேசுதனுதன்பேர். (கஉ)

புணரியேவாரிநீரிற்பொருதிரைகரைமுப்பேராம்
பணிலமேசலஞ்சலஞ்சங்கிருபெயர்பகரலாமே
கணிவேங்கைமரமதாகுங்கழனிசூழ்மருதமும்பேர்
பணியேதோற்கருவிவார்த்தைபாம்புசெய்தொழிலுமாமே. (கங)

பாணியூர்நீர்கையோசைபற்றுக்கான்போதுநாடு
சேணுறுசோலைபண்டஞ்சிறந்தபல்லியம்பன்னொன்றும்
தாணுவேசைலங்குற்றிசங்கரனிலைதூணம்பேர்
வேணியேசடைவிசும்பாம்வியாளமேபுலியும்பாம்பும். (கச)

குண்டலங்குழைவிசும்பாங்குபேரனேதனதன்சோமன்
மண்டலம்பரியூர்வட்டமந்தியேபூகம்வண்டு
கொண்டலேமுகில்கீழ்காற்றுங்கோட்டியேவாயில்கூட்டம்
மண்டலிபூனைபாம்புமண்ணொடுநாயுமாமே. (கரு)

புண்டரீகந்திக்கானைபுலிவண்டுகழுகுகஞ்சம்
தண்டமேயானைசெல்லும்வழிதண்டாயுதங்குடைக்கால்
பிண்டிநென்மாவசோகாம்பிதாச்சிவன்பிரமனுரை
கண்டகஞ்சுரிகைமுள்வாள்களவென்பகளாச்சோரப்பேர். (கசு)

பண்ணவன்முனிவன்றேவன்பகர்குருவருகனாற்பேர்
தண்ணடைமருதஞ்சாரூர்நாடெனவிருபேர்சாற்றும்
வண்மையேவழங்கல்வாய்மைவளம்புகழ்வலியாமென்ப
ஒண்மையேமிகுதிநன்மையொழுங்கறிவழகைம்பேரே. (கஎ)

எண்வலியெள்ளிலக்கமெளிமைசோதிடம்விசாரம்
கண்ணிடங்கணுவேய்கண்ணுங்காஞ்சிமேகலையோர்பண்ணும்
விண்முகில்சுவர்க்கம்வானும்விபுலம்பார்விரிவுபீடு
பண்ணையேவயனீர்த்தாழ்வுமருதமாத்துயிலும்பாழி. (கஅ)

காண்டமேதிரைகாடம்புகமண்டலங்கலன்பெய்செப்பு
நீண்டகோன்முடிவுதூசுநீர்படைக்கலமீரைந்தாம்
பாண்டிலேறூர்திவட்டம்பணைகட்டில்விளக்குத்தாளம்
ஈண்டென்பதிவ்விடத்தோடிப்படிசடிதியும்பேர். (ககூ)

அணங்கென்பது—நோய், அழகு, தெய்வம், ஆசை, பெண், கொலை, வருத்தம். ௭. துணங்கை—திருவிழா, பேய், கூத்து, திருவாதிரைநக்ஷத்திரம். ௪. குணுங்கர்—தோற்கருவியாளர், நரப்புக்கருவியாளர், சண்டாளர். ௩. துணங்கறல்—இருள், உற்சவம். ௨. தோன்றல்—மகன், எப்பொருட்குமிறைவன். ௨.

புணரி—கடல், கடற்றிரை, கரை. ௩. பணிலம்—சலஞ்சலம், சங்கு. ௨.
கணி—வேங்கைமரம், மருதநிலம். ௨.
பணி—தோற்கருவி, சொல், பாம்பு, செய்தொழில். ௪.

பாணி—ஊர், நீர், கை, ஓசை, பற்று, காடு, காலம், நாடு, சோலை, பலபண்டம், வாச்சியப்பொது. ௧௧.
தாணு—மலை, குற்றி, சிவன், நிலை, தூண். ௫.
வேணி—சடை, ஆகாயம். ௨. வியாளம்—புலி, பாம்பு. ௨.

குண்டலம்—குண்டலம், ஆகாயம். ௨. குபேரன்—குபேரன், சந்திரன்.
மண்டலம்—குதிரை, ஊர், வட்டம். ௩. மந்தி—பெண்குரங்கு, வண்டு.
கொண்டல்—மேகம், கீழ்காற்று. ௨. கோட்டி—கோபுரவாயில், கூட்டம். ௨. மண்டலி—பூனை, பாம்பு, பூமி, நாய். ௪.

புண்டரீகம்—தென்கீழ்த்திசையானை, புலி, வண்டு, கழுகு, தாமரை.
தண்டம்—யானைசெல்லும்வழி, தண்டாயுதம், குடைக்காம்பு. ௩.
பிண்டி—நென்மா *, அசோகமரம். ௨. பிதா—சிவன், பிரமன், பெருநாரை. ௩.
கண்டகம்—உடைவாள், முள், வாள். ௩. களவு—களாச்செடி, திருட்டு.

பண்ணவன்—முனிவன், தேவன், குரு, அருகன். ௪. தண்ணடை—மருதநிலத்தூர், நாடு. ௨. வண்மை—கொடை, உண்மை, வளம், புகழ், வலிமை. ௫. ஒண்மை—மிகுதி, நன்மை, ஒழுங்கு, அறிவு, அழகு. ௫.

எண்—வலி, எள், இலக்கம், எளிமை, சோதிடநூல், விசாரம். ௬.
கண்—இடம், மரக்கணு, மூங்கில், கண். ௪. காஞ்சி—மேகலை, ஒருபண்.
விண்—மேகம், தேவலோகம், ஆகாயம். ௩. விபுலம்—பூமி, விசாலம், பெருமை. ௩. பண்ணை—வயல், நீர்நிலை, மருதநிலம், விலங்கின்படுக்கை.

காண்டம்—இடுதிரை, காடு, அம்பு, கமண்டலம், பூண்கொள்கலம், கோல், முடிவு, வஸ்திரம், நீர், ஆயுதம். ௧௦. பாண்டில்—எருது, பரிகள்பூண்டேர்க்குமூர்தி, வட்டம், மூங்கில், கட்டில், விளக்கின்றகழி, தாளம். ௭. ஈண்டு—இவ்விடம், இவ்வண்ணம், [இவ்வுலகம்] விரைவு. ௩.

---

* பிண்டி - மாப்பொதுவின்பெயருமாம்.

அண்டசமுதலேயோந்தியரணைபுள்ளுடும்புபல்லி
நண்டுமீன்றவளையாமைநாகமிப்பியுமீராறும்
சண்டன்கூற்றலிவெய்யோனுந்தாள்கதவுறுதாள்பாதம்
சுண்டையேசுண்டைகள்ளாஞ்சொர்க்கமேசுவர்க்கங்கொங்கை. ()

பணமென்பதரவின்பையும்பாம்பும்பொற்காசுமுப்பேர்
மணமென்பவாசங்கூட்டம்வதுவையுமாகுமென்ப
பணவையேபரணும்பேயும்பையுளேசிறுமைநோயாம்
றுணவையெண்ணேலேபிண்டிநுனியென்பநுதிநுண்மைப்பேர். ()

ணகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - கூசா.

# தகரவெதுகை.

மதலேயேகொன்றைபிள்ளைமரக்கலங்கொடுங்கைதூணும்
சிதலேநோய்துணிசெல்லென்பசீதநீர்குளிரேமேகம்
ப்தலேயோர்கட்பறைப்பேர்பருவரைதாழிக்கும்பேர்
கதலியேவாழைமேதற்றுக்காற்றுடிதுவசநாற்பேர். (க)

இதழ்பனையேபூவினிதழுதடெனவிம்முப்பேர்
கதழ்வுவேகஞ்சிறப்பாங்களிசெருக்கொடுகுழம்பு
மதுகமேயிருப்பையெட்டிமதுரமாந்தராவுமாமே
சிதடனந்தகன்மூடன்பேர்திதிபக்கநிலேபேறும்பேர். (உ)

ஆதனுருயிரோர்வில்லானங்கியென்பதுதீச்சட்டை
போதகம்யானைக்கன்றுபோற்றியவிளமைக்கும்பேர்
ஏதந்துன்பங்குற்றப்பேரீமமேமயானங்காட்டம்
சூதன்றேர்ப்பாகன்சூதன்சுவேதமேவெயர்வுவெண்மை. (ங)

சூதமாமரமேவண்டுசூதுடனிரதந்தோன்றல்
சூதகமேயாசௌசந்தோகைமார்தோயாப்பூப்பாம்
பூதமாலிறந்தகாலம்புனிதமைம்பூதஞ்சீவன்
மாதவந்தவம்வசந்தம்வாதமேதருக்கங்காற்றும். (ச)

மதன்வலிவேள்வனப்பாம்வலித்தலேவளைத்தல்பேசல்
பதங்கம்புட்பொதுவிட்டிற்பேர்பலிபூசைபிச்சைநீறும்
சிதம்விண்மீன்ஞானம்வெள்ளைசெயமுறப்பட்டதாமே
நிதம்பமேயல்குலென்பநெடுமலேப்பக்கமும்பேர். (ரு)

அண்டசமென்பது—முதலை, ஓந்தி, அரணை, பறவை, உடும்பு, பல்லி, நண்டு, மீன், தவளை, ஆமை, பாம்பு, இப்பி. ௧௨.
சண்டன்—இயமன், அலி, சூரியன். ௩. தாள்-கதவுறுதாள், பாதம்.
சண்டை—சுண்டைச்செடி, கள். ௨. சொர்க்கம்-தேவலோகம், மூலை.

பணம்—பாம்பின்படம், பாம்பு, பொற்காசு. ௩. மணம்—வாசனை, கூட்டம், விவாகம். ௩.
பணவை—பரண், பேய். ௨. பையுள்—அற்பம், நோய். ௨.
நுணவை—எண்ணெய்க்கோலை, மா. ௨. நுனி—நுதி, நுட்பம். ௨.

—oo:o:oo—

# தகரவெதுகை.

மதலையென்பது—சொன்றைமரம், மகன், மரக்கலம், கொடுங்கை, தூண். ௫. சிதலை—நோய், சீலைத்துணி, கறையான். ௩.
சீதம்-நீர், குளிர், மேகம். ௩. பதலை-ஒருகட்பகுவாய்ப்பறை, மலை, சாடி. ௩. கதலி-வாழை, தேற்றுமரம், காற்றாடி, விருதுக்கொடி. ௪.

இதழ்—பனையேடு, பூவிதழ், உதடு. ௩. கதழ்வு—விரைவு, சிறப்பு.
களி—களிப்பு, குழம்பு. ௨. மதுகம்—இருப்பைமரம், எட்டிமரம், அதிமதுரம், தரா. * ௪. சிதடன்—குருடன், மூடன். ௨.
திதி—பிரதமைமுதலியதிதி, நிலைபெறுதல். ௨.

ஆதன்—உயிர், அறிவிலான். ௨. அங்கி—நெருப்பு, சட்டை. ௨.
போதகம்—யானைக்கன்று, இளமை. ௨. ஏதம்—துன்பம், குற்றம். ௨. ஈமம்—சுடுகாடு, விறகு. ௨. சூதன்—தேர்ப்பாகன், சூதாடுவோன். ௨. சுவேதம்—வேர்வு, வெண்மை. ௨.

சூதம்—மாமரம், வண்டு, சூது, இரசம், பிறப்பு. ௫.
சூதகம்—ஆசௌசம், பூப்பு. ௨.
பூதம்—ஆலமரம், இறந்தகாலம், சுத்தம், ஐம்பூதம், உயிர். ௫.
மாதவம்—தவம், வசந்தகாலம். ௨. வாதம்—தருக்கம், காற்று. ௨.

மதன்-வலிமை, மன்மதன், அழகு. ௩. வலித்தல்-வளைத்தல், பேசல்.
பதங்கம்—பறவைப்பொது, விட்டிற்பறவை. ௨. பலி—பூசை பிச்சை, நீறு. ௩.
சிதம்—நக்ஷத்திரம், ஞானம், வெண்மை, வெற்றிகொள்ளப்பட்டது.
நிதம்பம்—அல்குல், மலைப்பக்கம். ௨.

---

* தரா - பொன்முதலிய ஏழுலோகங்களு ளொன்று.

சதியுரோகிணிகற்பாட்டிவஞ்சனைதாளவொத்து
விதியென்பவினையயன்பேர்வேட்டுவன்மகநாள்வேடன்
பதியிறைகேள்வனூராம்பதுக்கையேபாறைதூறு
பிதிர்கதைநொடிதூவற்பேர்பிண்டமேதிரளைபிச்சை. (௬)

ஆதியேமுதனேரோடலருகன்மாலீசன்வேதன்
பூதியம்புவியுடற்பேர்பொம்மலேபொலிவுஞ்சோறும்
பாதிரிபாடலப்பேர்பணைத்தெழுமூங்கிற்கும்பேர்
ஏதியாயுதம்வாளென்பவிழைநூலாபரணமாமே. (௭)

சாதியேபிரம்புகள்ளோர்தருசிறுசண்பகப்பேர்
போதஞானந்தோணிப்பேர்புகல்குதிருடல்சொல்வெற்றி
ஓதிபெண்மயிரேபூனையோந்திமெய்ஞ்ஞானம்வெற்பாம்
ஓதிமமன்னம்வெற்பாமுருத்தலேதோற்றல்கோபம். (௮)

சுதைமகள்கறவாத்தேனுசுண்ணச்சாந்தமுதுநாற்பேர்
புதையென்பகணையின்கட்டும்புதுமையுமறைவுமுப்பேர்
மதுவென்பநறவுந்தேனும்வசந்தகாலமுமாமென்ப
கதைதண்டாயுதமேவார்த்தைகாரணமிம்முப்பேரே. (௯)

சீதையேபொன்னாங்காணிபடைச்சால்சீராமன்றேவி
மேதைதோல்புதனிறைச்சிமிக்கபேரறிவுகள்ளாம்
கோதைமுன்கைத்தோற்கட்டிகுழலூர்காற்றெழுங்குசேரன்
ஓதைபேரொலிமதிற்பேருக்கந்தீயிடையானேறு. (௧௦)

அத்தம்பொன்பாதிகைகண்ணாடிசொற்பொருள்காடோர்நாள்
புத்தகங்கோசமென்பசித்திரப்படாமுமாமே
நத்தமேயிருளூரூருநந்துடனிரவுநாற்பேர்
துத்தமோரிசைநாய்பாலேவயிறுகண்மருந்துஞ்சொல்லும். (௧௧)

அத்தென்பவரைஞாண்செம்மையசைச்சொலோடிசைப்புநாற்பேர்
தொத்துப்பூங்கொத்துத்தொண்டாந்தூம்புவேய்துளைமரக்கால்
தத்தைமூத்தாள்கிளிக்காந்தழல்கிளிகடிகோல்செந்தீ
உத்தரமூழித்தீமேலொடுமறுமொழிவடக்காம். (௧௨)

கூத்தனேயுயிர்நடன்பேர்குலங்குடிகோயில்கூட்டம்
ஊழ்த்தலேநினைத்தல்செவ்வியுருபதனழிவுமுப்பேர்
பார்த்தென்பகஞ்சிசோறுபகுத்திடல்வகுத்தமுப்பேர்
தீர்த்தமேவிழாவுநீருந்தீர்த்தனேயருகனாசான். (௧௩)

சதியென்பது—உரோகிணிநக்ஷத்திரம், கற்புடையாள், வஞ்சனை, தாளவொத்து. ச. விதி-செய்தொழில், பிரமன்.உ.வேட்டுவன்-மகநக்ஷத்திரம், வேடன். உ.
பதி—அரசன், நாயகன், ஊர். ந. பதுக்கை—பாறை,சிறுதூறு.உ.
பிதிர்—கதை, கைநொடி, தூவல். ந. பிண்டம்—திரட்சி, பிச்சை.

ஆதி—முதல், நேரோடல், அருகன், திருமால், சிவன், பிரமன். சு.
பூதியம்—பூமி, சரீரம். உ. பொம்மல்—பொலிவு, சோறு. உ.
பாதிரி—பாதிரிமரம், மூங்கில். உ. எதி—ஆயுதம், வாள். உ.
இழை—நூல், ஆபரணம். உ.

சாதி—பிரம்பு, கள், தேக்கமரம், சிறுசண்பகம். ச.
போதம்—ஞானம், மரக்கலம். உ. புகல்—குதிர், சரீரம், சொல், வெற்றி. ச. ஓதி—பெண்மயிர், பூனை, ஓந்தி, ஞானம், மலை. ரு.
ஓதிமம்—அன்னப்புள், மலை. உ. உருத்தல்—தோன்றுதல்,கோபம்.

சுதை—மகள், உதைகாற்பசு, சுண்ணச்சாந்து, அமிர்தம். ச.
புதை—அம்புக்கட்டு, புதுமை, மறைவு. ந.
மது—கள், தேன், வசந்தகாலம். ந.
கதை—தண்டாயுதம், சொல், காரணம். ந.

சீதை—பொன்னாங்காணி, உழுபடைச்சால், சீதை. ந.
மேதை—தோல், புதன், இறைச்சி, பேரறிவு, கள். ரு.
கோதை—கைக்கட்டி, கூந்தல், பூமாலை, காற்று, ஒழுங்கு, சேரன்.
ஓதை—பேரொலி,மதில். உ. உக்கம்—நெருப்பு,இடை,பசு, எருது.

அத்தம்—பொன், பாதி, கை, கண்ணாடி, சொற்பொருள், காடு, ஒருநக்ஷத்திரம். எ. புத்தகம்—புத்தகம், சித்திரப்படாம். உ.
நத்தம்—இருள், ஊர், சங்கு, இராத்திரி. ச.
துத்தம்—ஏழிசையுளொன்று, நாய், பால், வயிறு, கண்மருந்து. ரு.

அத்து—அரைஞாண், சிவப்பு, ஒருசாரியை, தைத்தல். ச.
தொத்து—பூங்கொத்து, அடிமை. உ. தூம்பு—மூங்கில், உட்டுளை, மரக்கால். ந.
தத்தை—முன்பிறந்தாள்,கிளி. உ. தழல்—கிளிகடிகோல்,நெருப்பு.
உத்தரம்—வடவாமுகாக்கினி, மேல், மறுமொழி, வடக்கு. ச.

கூத்தன்—உயிர்,நாடகன். உ. குலம்—சாதி,அரசரில்,கூட்டம். ந.
ஊழ்த்தல்—நினைத்தல், பருவம், பதனழிவு. ந.
பாத்து—கஞ்சி, சோறு, பகுத்திடல். ந.
தீர்த்தம்—திருவிழா, நீர். உ. தீர்த்தன்—அருகன், குரு. உ.

குத்திமண்ணடக்கமென்பகோணம்வாள்குதிரைமூக்காம்
பத்தியேமுறையொழுக்கம்பகர்வழிபாடுமுப்பேர்
அத்தியார்கலியேயானையதவெலும்பாகநாற்பேர்
சத்தியஞ்சபதமெய்யாந்தபுதலேசாவுங்கேடும். (௧௪)

பித்திகைகருமுகைக்குப்பெயர்சுவர்த்தலமுமாகும்
கத்திகைதொடைவிகற்பந்துவசமேகமழ்வாசந்தி
உத்திசெந்திருவுறுப்புச்சுணங்குரையாடன்முப்பேர்
துத்தியேசுணங்குபாம்பின்சுடர்ப்பொறிபுதலொன்றுமே. (௧௫)

சித்திரபானுசெந்தீதிவாகரனுண்டொன்றின்பேர்
பத்திரமிலைவனப்புப்படைநன்மைசிறகேபாணம்
சித்திரமழகோர்பாடல்சிறந்தவிம்மிதமேரண்டம்
சத்திரங்குடையேயன்னசாலைகைவிடாவேல்வேள்வி. (௧௬)

காத்திரங்கனமெய்சீற்றங்களிற்றின்முன்காலேஙீரி
நேத்திரங்கண்பட்டாடைநீலியேகருமைதுர்க்கை
கோத்திரம்புடவிதானேகுலமொடுமலையுமாமே
பாத்தியேசிறுசெய்யில்லம்பகுத்தலும்வகுத்தநாமம். (௧௭)

சதமிலையிறகுநூறுசத்தமேயோசையேழாம்
கதவமேகதவுகாப்பாங்கழங்குபேய்நடங்கழற்சி
பதமூரலின்பஞ்செவ்விபதவிதாள்வரிசைவார்த்தை
மதியோர்முன்னிலையசைச்சொன்மாதமம்புலிபுத்திப்பேர். (௧௮)

பீதகஞ்சாந்துபொன்மைபெருந்தனமிருவேலிப்பேர்
சாதகம்வானம்பாடிசனனம்பாரிடமுப்பேரே
சேதகஞ்சேறுசெம்மைதேயந்தானுடம்புநாடாம்
மாதரோரிடைச்சொல்காதல்வனப்பொடுமகளிராமே. (௧௯)

சோதிமாலருகன்பானுசுடர்விளக்கீசனோர்நாள்
பூதியேநரகஞ்செல்வந்துர்க்கந்தம்புழுதிநீறும்
வீதியேதெருநேரோடன்மேலென்பதிடம்விண்மேற்காம்
மாதிரந்திசையாகாயமலையானைநிலமைம்பேரே. (௨௰)

தாதுபொன்முதலாமேழும்சட்டுமுறுதாதோரேழும்
பூதமோரைந்துங்காவிக்கல்லுடன்புகலுநாற்பேர்
வேதிகைபலகைதிண்ணைவெதிரென்பசெவிடுவேணு
கேதுவேசிகிபதாகைகிள்ளைதான்குதிரைதத்தை. (௨௧)

குத்தியென்பது—மண், அடக்கம். ௨. கோணம்—வாள், [கூன்வாள்]
குதிரை, மூக்கு. ௩. பத்தி—முறைமை, ஒழுக்கம், வழிபாடு. ௩.
அத்தி—சமுத்திரம், யானை, அத்திமரம், எலும்பு. ௪.
சத்தியம்—சபதம், உண்மை. ௨. தபுதல்—சாதல், கெடுதல். ௨.

பித்திகை—கருமுகை, சுவர்த்தலம். ௨.
கத்திகை—மாலைவிகற்பம், துகிற்கொடி, குருக்கத்தி. ௩.
உத்தி—ஸ்ரீதேவியென்னுந்தலைக்கோலம், தேமல், சொல்லுதல். ௩.
துத்தி—தேமல், பாம்பின்படப்பொறி, ஒருசெடி. ௩.

சித்திரபானு—நெருப்பு, சூரியன், ஒருவருடம். ௩.
பத்திரம்—இலை, அழகு, ஆயுதம், நன்மை, இறகு, அம்பு. ௬.
சித்திரம்—அழகு, ஒருகவி, அதிசயம், ஆமணக்கு. ௪.
சத்திரம்—குடை, அன்னசாலை, கைவிடாப்படை, யாகம். ௪.

காத்திரம்—கனம், உடம்பு, கோபம், யானைமுன்கால், கிரி. ௫.
நேத்திரம்—கண், பட்டுவஸ்திரம். ௨. நீலி—கறுப்பு, துர்க்கை. ௨.
கோத்திரம்—பூமி, குலம், மலை. ௩.
பாத்தி—சிறுசெய், வீடு, பகுத்தல். ௩.

சதம்—இலை, இறகு, நூறு. ௩. சத்தம்—ஒலி, ஏழு. ௨.
கதவம்—கதவு, காவல். ௨. கழங்கு—வெறியாட்டு, கழற்காய். ௨.
பதம்—சோறு, இன்பம், காலம், பதவி, கால், வரிசை, சொல். ௭.
மதி—ஒருமுன்னிலையசைச்சொல், மாதம், சந்திரன், புத்தி. ௪.

பீதகம்—நால்வகைச்சாந்திலொன்று, பொன்னிறம், பொன், இரு
வேலி. ௪. சாதகம்—வானம்பாடி, பிறப்பு, பூதம். ௩.
சேதகம்—சேறு, சிவப்பு. ௨. தேயம்—சரீரம், நாடு. ௨.
மாதர்—ஓரிடைச்சொல், ஆசை, அழகு, பெண்கள். ௪.

சோதி—திருமால், அருகன், சூரியன், ஒளி, தீபம், சிவன், ஒருநக்ஷ
த்திரம். ௭. பூதி—நரகம், செல்வம், துர்க்கந்தம், புழுதி, விபூதி. ௫.
வீதி—தெரு, நேரோடல். ௨. மேல்—இடம், ஆகாயம், மேற்கு. ௩.
மாதிரம்—திக்கு, ஆகாயம், மலை, யானை, பூமி. ௫.

தாது—பொன்முதலியவெழுவகைலோகம், இரதமுதலியவெழுவ
கைத்தாது, மண்முதலியவைவகைப்பூதம், காவிக்கல். ௪.
வேதிகை—கேடகம், திண்ணை. ௨. வெதிர்—செவிடு, மூங்கில். ௨.
கேது—நவக்கிரகத்துளொன்று, துகிற்கொடி. ௨. கிள்ளை—குதிரை, கிளி

கதுப்பேயாண்மயிரும்பெண்பான்மயிரொடுகவுளுமுப்பேர்
விதப்பேகம்பிதமிக்காகும்வித்தம்பொன்பழிப்புஞானம்
அதிர்ப்பொலிநடுக்கமென்பவகப்பாவேபுரிசைமேடை
ஒதுக்கமேநடைமறைப்பாமொருத்தலாண்விலங்குவேழம். (௨௨)

பத்திரிபறவைகாளிபரியிலைபாணமைம்பேர்
அத்திரிகழுதைவிண்ணொட்டகம்பரியசலமம்பாம்
சத்தியேயுமைவேல்கான்றல்குடைவலிதுவசந்தானும்
சுத்தியேயகல்வெண்சங்கஞ்சுத்தமோர்கருவிக்கும்பேர். (௨௩)

புத்தன்மாலருகன்சாத்தன்பூழிருணகில்பூமிப்பேர்
புத்தேளேபுதுமைதேவரம்பூட்கைதோன்மேற்கோள்யாளி
ஐதத்தறுன்னங்கைத்தற்பேர்சாறுகள்விழவுதாரும்
முத்தமேபிரியமோட்டமருதநன்னிலமுத்தாமே. (௨௪)

அத்தனேமுத்தோன்றந்தையரனொடுகுருவுநாற்பேர்
சித்தமேதிடமுள்ளப்பேர்சேகரந்தலைமாவேராம்
கைத்தலேசினங்கைப்பாகுங்கனுறலேபொலிவுகன்றல்
சித்தென்பசயமேஞானஞ்செய்யென்பநிலமேவற்பேர். (௨௫)

உத்திரஞ்சித்திரஞ்சேர்ந்தொளிருமில்லுறுப்போடோர்நாள்
பைத்தலேமுனிவினோடுபசுத்தலும்பகரலாகும்
மத்திகையேசம்மட்டிசுடர்நிலைத்தண்டுமாலை
மத்தென்பதயிர்மத்தோடுமத்தமுமிருபேராமே. (௨௬)

மதர்வுமேவுதல்வனப்புவலியிடமிகுதியைம்பேர்
புதவென்பகதவோர்புல்லாம்புணர்ச்சியேகலவிகூடல்
சிதருறிதிவலைவண்டுசீலையின்றுணிநாற்பேரே
அதர்வழிபுழுதியாட்டினதருநுண்மணலுமாமே. (௨௭)

முதலைசெங்கிடையிடங்கர்முருந்தெனமொழியலாகும்
அதமிறங்குதல்பாதாளங்கீழுமென்றறையுமுப்பேர்
கதிநடைவிரைவேநான்குகதியொடுகதியுங்காட்டும்
மதமிபமதஞ்செருக்காமாயையேமாயஞ்சத்தி. (௨௮)

பீதமேசாந்துமஞ்சள்பிங்கலத்தொடுபொன்மைப்பேர்
பேதையோர்பருவமூடன்பெண்டரித்திரனேநாற்பேர்
வாதுவர்யானைப்பாகர்வயப்பரிமாவடிப்போர்
மூதிரையாதிரைப்பேர்முக்கணன்பேருமாமே. (௨௯)

கதுப்பென்பது—ஆண்மயிர், பெண்மயிர், கபோலம். ௩. விதப்பு-
நடுக்கம், மிகுதி. ௨. வித்தம்—பொன், பழிப்பு, ஞானம். ௩.
அதிர்ப்பு—ஒலி, நடுக்கம். ௨. அகப்பா—மதில், மதிலுண்மேடை. ௨.
ஒதுக்கம்—நடை, மறைப்பு. ௨. ஒருத்தல்—ஆண்விலங்கு, யானை. ௨.

பத்திரி—பறவை, காளி, குதிரை, இலை, அம்பு. ௫.
அத்திரி—கழுதை, ஆகாயம், ஒட்டகம், குதிரை, மலை, பாணம். ௬.
சத்தி—உமை, வேலாயுதம், * வாந்தி, குடை, வலிமை, துகிற்கொடி.
சுத்தி—அகல், சங்கு, சுத்தம், ஒருகருவி. ௪.

புத்தன்—திருமால், அருகன், புத்தன். ௩. பூழில்—அகில், பூமி. ௨.
புத்தேள்—புதுமை, தெய்வம். ௨. பூட்கை—யானை, மேற்கோள்,
யானையாளி. ௩. தைத்தல்—தைத்தல், அலங்கரித்தல். ௨. சாறு—
கள், உற்சவம், குலை. ௩. முத்தம்-பிரீதி, உதடு, மருதநிலம், முத்து ௪.

அத்தன்-மூத்தோன், பிதா, சிவன், குரு. ௪. சித்தம்-நிச்சயம், மனம்.
சேகரம்—தலை, மாமரம், அழகு. ௩.
கைத்தல்—கோபம், கசப்பு. ௨. கஞறல்—பொலிவு, சினக்குறிப்பு.
சித்து—வெற்றி, ஞானம். ௨. செய்—விளைநிலம், செய்யெனேவல்.

உத்திரம்—வீட்டினுறுப்பாகியவுத்திரம், ஒருநக்ஷத்திரம். ௨.
பைத்தல்—கோபம், பசுமை. ௨.
மத்திகை—குதிரைச்சம்மட்டி, விளக்குத்தண்டு, மாலை. ௩.
மத்து—தயிர்கடையுமத்து, ஊமத்தை. ௨.

மதர்வு—உள்ளக்களிப்பு, அழகு, வலிமை, இடம், மிகுதி. ௫.
புதவு—கதவு, ஒருவகைப்புல். ௨. புணர்ச்சி—கல்வி, இயைபு. ௨.
சிதர்—உறி, துளி, வண்டு, சீலைத்துணி. ௪.
அதர்—வழி, புழுதி, ஆட்டினதர், நுண்மணல். ௪.

முதலை—செங்கிடை, முதலை, இறகினடிக்குருத்து. ௩.
அதம்—இறங்குதல், பாதலம், கீழ். ௩.
கதி—நடை, வேகம், தேவகதிமுதலியநாற்கதி, முத்தீ. ௪.
மதம்—யானைமதம், செருக்கு. ௨. மாயை—வஞ்சனை, சத்தி. ௨.

பீதம்—நால்வகைச்சாந்திலொன்று, மஞ்சள், பொன், பொன்னிறம்.
பேதை—பேதைப்பருவம், அறிவிலான், பெண், வறியவன். ௪.
வாதுவர்—யானைப்பாகர், குதிரைப்பாகர். ௨.
ஆதிரை—திருவாதிரைநக்ஷத்திரம், சிவன். ௨.

---

* சர்த்தி - வாந்தி.

தாதியேபரணிநாளுமடிமையுமிருபேர்சாற்றும்
போதுதான்காலம்பூவாம்போர்வைதோல்கவசமீக்கோள்
சாதமேதிடம்பதப்பேர்தகைமையேரியல்புபீடாம்
வீதலேகெடுதல்சாவேயிலம்பாடும்விளம்புமுப்பேர். (௩௦)

தகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - ௧௨௪.

# நகரவெதுகை.

இந்தனமிசையேகாட்டமெரியிடுகனலுமாகும்
சந்தமேநிறம்வனப்புச்சாற்றியகவிதைசாந்தம்
கந்தமிந்தியம்பருத்தல்கழுத்தடிகிழங்குநாற்றம்
மந்திரம்விசாரங்கோயில்வாசியின்குழாம்வீடேகள். (௧)

அந்திலாங்கசையிடப்பேரணவலேயணுகல்புல்லல்
சந்தியேயந்திமூங்கில்சதுக்கமுமிசைப்புமப்பேர்
நந்தியேசிவனுமேறுநந்தியீச்சுரனுமுப்பேர்
உந்திதேருருளேயாறேயுவரிநீர்ச்சுழியேகொப்பூழ். (௨)

கந்துபண்டியுளிரும்புங்கம்பமும்யாக்கைமூட்டும்
கந்துகங்குதிரைபந்தாங்கனமென்பபுயல்பாரப்பேர்
பந்துகந்துகமுமட்டுப்படநீர்தூந்துருத்தியும்பேர்
குந்தளமாதரோதிகுழற்கொத்துக்குருளைமுப்பேர். (௩)

வேந்தனேயரசன்றிங்கள்வியாழனிந்திரனாதித்தன்
காந்தாரமிசைகாடென்பகாழகங்கருமைதூசாம்
ஏந்தலேபெருமைமேடாமெஃகுருக்கொடுவேல்கூர்மை
கூந்தல்பெண்மயிர்பீலிப்பேர்குவலயங்குவளைபூமி. (௪)

அந்தரமுடிவுபேதமண்டமோடிடைநாற்பேரே
கந்தரமென்பமேகங்கழுத்தொடுமலைமுழைப்பேர்
மந்தாரந்தருமரஞ்செவ்வரத்தமுமாகுமென்ப
சிந்துரம்புளியேயானைசெங்குடைதிலகஞ்செம்மை. (௫)

கந்தருவம்பண்வாசிகவந்தமென்பதுநீர்மட்டை
குந்தமேயொருவியாதிகுருந்தொடுகுதிரைகைவேல்
செந்துவோர்நரகமோரிசீவனோடணுவுநாற்பேர்
சிந்துநீர்முச்சீராறுகடல்குறளொருதேசப்பேர். (௬)

தாதியென்பது-பரணிநக்ஷத்திரம்,அடிமை.உ.போது-காலம்,பூ.உ
போர்வை—தோல், கவசம், மேற்போர்வை. ௩.
சாதம்-உண்மை, சோறு. உ. தகைமை-அழகு,குணம்,பெருமை.௩.
வீதல்—கெடுதல், சாதல், வறுமையெய்தல். ௩.

# நகரவெதுகை.

இந்தனமென்பது—மேல், விறகு, அக்கினிச்சுவாலை. ௩.
சந்தம்—நிறம், அழகு, கவிதை, சந்தனம். ௪.
கந்தம்—இந்திரியம், பங்கிடல், கழுத்தடி, கிழங்கு, மணம். ௫.
மந்திரம்—ஆலோசனை, தேவர்கோயில்,குதிரைக்கூட்டம்,வீடு,கள்.

அந்தில் என்பதும் ஆங்கு என்பதும்-அசைச்சொல், அவ்விடம். உ.
அணவல்—கிட்டல், தழுவல். உ.
சந்தி—மாலைக்காலம், மூங்கில், நாற்சந்தி, இசைப்பு. ௪.
நந்தி—சிவன், இடபம், நந்திதேவன். ௩. உந்தி—தேருருள், ஆறு,
கடல், நீர்ச்சுழி, கொப்பூழ். ௫.

கந்து-பண்டியுள்ளிரும்பு,தூண்,சந்து. ௩. கந்துகம்-குதிரை,பந்து.
கனம்—மேகம், பாரம். உ. பந்து—எறியும்பந்து,மட்டத்துருத்தி.
குந்தளம்—பெண்மயிர், மயிர்க்குழற்சி, நரி நாய் பன்றி புலி மான்
முசு முயல் யாளி இவற்றின்குட்டி. ௩.

வேந்தன்—அரசன், சந்திரன், வியாழன், இந்திரன், சூரியன். ௫.
காந்தாரம்—ஓரிசை, காடு. உ. காழகம்—கறுப்பு, சீலை. உ.
ஏந்தல்—பெருமை,மேடு.உ. எஃகு—உருக்கு,வேலாயுதம்,கூர்மை.
கூந்தல்—பெண்மயிர், மயிற்பீலி. உ. குவலயம்—குவளை, பூமி. உ.

அந்தரம்—முடிவு, பேதம், ஆகாயம், இடை. ௪.
கந்தரம்—மேகம், கழுத்து, மலைமுழை. ௩.
மந்தாரம்—ஐந்தருவிலொன்று, செவ்வரத்தம். உ.
சிந்துரம்*--புளியமரம்,யானை,சிவப்புக்குடை,பொட்டு,சிவப்பு.௫

கந்தருவம்—இசை, குதிரை. உ. கவந்தம்—நீர், உடற்குறை. உ.
குந்தம்—ஒருநோய், குருந்தமரம், குதிரை, கைவேல். ௪.
செந்து—ஒருநரகம், கிழநரி, உயிர், அணு. ௪.
சிந்து—நீர், முச்சீரடி, ஆறு, கடல், குறள், ஒருதேசம். ௬.

* சிந்தூரம் - புளியமரம்.

அந்திமுச்சந்திபாலையாழிசையிரவுமாலை
நந்தென்பநத்தைசங்காநாறுதன்மணமுண்டாதல்
மைந்தனேதிறலோன்சேயாம்வசந்தமேவேனில்வாசம்
வந்தியர்புகழ்வோர்பேருமலடிகள்பேருமாமே. (எ)

விந்தமோரெண்ணும்வெற்பும்விருத்தமேவட்டமூப்பாம்
அந்தணரறவோர்பார்ப்பாரணிபடைவகுப்பணிப்பேர்
அந்தகன்குருடன்கூற்றுமங்காரகன்றீச்செவ்வாய்
மந்தனேசனிகூர்ப்பில்லாமனுடனுமிருபேராமே. (அ)

நகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் - ௧௩௨.

# பகரவெதுகை.

உப்புமெல்லியலாராடலுவர்கடலினிமைநாற்பேர்
செப்பமேநடுநிலைப்பேர்தெருவொடுநெஞ்சுமாகும்
துப்பரக்கூற்றந்தூய்மைதுகிர்பகையனுபவப்பேர்
கப்பணமிரும்பிற்செய்தநெரிஞ்சின்முட்கைவேலாமே. (௧)

தாபரமலைபோனிற்றல்சடமொடுதருவுமுப்பேர்
நீபமுத்தரட்டாதிப்பேர்நிமித்தநீர்க்கடம்புமாகும்
யூபமேகவந்தம்வேள்விக்குறுதம்பம்படைவகுப்பாம்
சாபமேசபித்தல்வில்லாந்தளிமமேயழகுமெத்தை. (௨)

சீப்பென்பகதவிற்றுழுஞ்சீவுகங்கமுமாமென்ப
நாப்பணென்பதுதேர்த்தட்டுநடுவும்யாழுறுப்புமுப்பேர்
காப்பென்பகாவலோடுகதவும்வெண்ணீறுமாகும்
யாப்பென்பகவிதைகட்டாமிறுறேன்கூடெருதுமீனே. (௩)

பகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் - ௧௩௫.

அந்தியென்பது—முச்சந்தி, பாலையாழிசை, இரா, மாலைக்காலம். ௪.
நந்து—நத்தை, சங்கு. ௨. நாறுதல்—மணத்தல், உண்டாதல். ௨.
மைந்தன்—திண்ணியன், மகன். ௨. வசந்தம்-இளவேனில், வாசனை. ௨.
வந்தியர்—புகழ்வோர், மலடிகள்.

விந்தம்—ஒரெண், ஒருமலை. ௨. விருத்தம்—வட்டம், மூப்பு. ௨.
அந்தணர்-முனிவர், பார்ப்பார். ௨. அணி-படைவகுப்பு, ஆபரணம்.
அந்தகன்—குருடன், யமன். ௨. அங்காரகன்—நெருப்பு, செவ்வாய். ௨.
மந்தன்—சனி, கூர்மையில்லான்.

# பகரவெதுகை.

உப்பென்பது—மகளிர்விளையாட்டு, உவர், கடல், இனிமை. ௪.
செப்பம்—நடுநிலை, வீதி, மார்பு. ௩.
துப்பு—அரக்கு, வலி, சுத்தம், பவளம், பகை, அனுபவம். ௬.
கப்பணம்—இரும்பினியற்றியநெரிஞ்சின்முள், கைவேல். ௨.

தாபரம்—மலைபோனிற்றல், உடம்பு, மரப்பொது. ௩.
நீபம்—உத்தரட்டாதி, காரணம் *, நீர்க்கடம்பு. ௩.
யூபம்—உடற்குறை, வேள்வித்தூண், படைவகுப்பு. ௩.
சாபம்—சபித்தல், வில். ௨. தளிமம்—அழகு, மெத்தை. ௨.

சிப்பு—கதவிடுதாழ், சிப்பு. ௨. நாப்பண்—தேர்த்தட்டு, நடு, யாழி
னுறுப்பு. ௩.
காப்பு—காவல், கதவு, திருநீறு. ௩.
யாப்பு—பாட்டு, கட்டு. ௨.
இருல்—தேன்கூடு, எருது, ஒருமீன். ௩.

* நிபம் - காரணம்.

# மகரவெதுகை.

சமன்யமனடுவுமாகுஞ்சலமென்பவயிரநீர்பொய்
கமலநீர்வனசமும்பேர்கலாஞ்சினங்கொடுமையாகும்
குமரிகற்றாழைகன்னிகொற்றவைகாளிக்கும்பேர்
ஞமலிநாய்மயில்கள்ளென்பநனைகள்ளுமலர்மொட்டும்பேர். (க)

சாமமோர்வேதம்பச்சைசாமமேகருமைநாற்பேர்
வாமமேகுறளிடப்பால்வனப்பொடுதொடையுமாமே
பூமலர்வனப்புக்கூர்மைபொலிவொடுபிறப்புப்பூமி
ஏமமேசேமங்காவலின்பம்பொன்னிரவேமையல். (உ)

உம்பரேதேவராகுமுயர்நிலமுடன்மேலும்பேர்
வம்பென்பபுதுமைகச்சுமணநிலையின்மைநாற்பேர்
கும்பமேகுடமிராசிகும்பிமத்தகமுமாகும்
தும்பென்பசிம்புதோடாஞ்சுகமென்பகிளியேயின்பம். (ங)

ஆம்பல்வேய்கள்ளுக்கவ்வையல்லிவங்கியமேயானை
சாம்பல்கூம்புதல்பழம்பூத்தமிழென்பதினிமைநீர்மை
தாம்பென்பகயிறுதானேதாமணிதனக்கும்பேராம்
காம்புவேய்மலர்த்தாள்பட்டேகடிமலர்க்கொம்புநாற்பேர். (ச)

அம்மையேவருபிறப்புமழகுமாந்தாயுமாகும்
சும்மையென்பதுவேநெற்போர்நாடொலிசுமையுஞ்சொல்லும்
செம்மைசெவ்வையுஞ்சிவப்புந்திரிதலையுலாவல்கேடாம்
கொம்மையேயிளமைவட்டங்கொங்கைகைகுவித்துக்கொட்டல்.()

அம்மழகசைச்சொனீராமழனந்தீபிணமுமாகும்
கம்மென்பதலையாகாயங்கனங்கானீர்விதிவெளுப்புச்
செம்மலேபழம்பூவீசன்சினேந்திரன்சிறந்தோன்மைந்தன்
கம்மியர்கைவினைப்பேர்கண்ணாளர்தாமுமாமே. (சு)

வாமனங்குறள்புராணமாதிரக்கயத்திலொன்றும்
காமரமத்தநாளோடடுப்பிசைப்பொதுவுங்காட்டும்
நேமிசக்கரம்பார்வட்டநேமிப்புட்கடலைம்பேரே
தேமென்பதிடந்தித்திப்புத்தேனாற்றந்திசைதேசப்பேர். (எ)

தாமம்வெற்பொழுங்குகொன்றைசார்ந்தொளிநகரந்தாம்பு
பூமணிக்கோவைமாலைபொருகளங்கரியீராறும்
சோமனோர்வள்ளலிந்துசுரும்பென்பமலையும்வண்டும்
சாமியேமுதல்வன்செவ்வேடலைவியாசான்வெறுக்கை. (அ)

# மகரவெதுகை.

சமனென்பது—யமன், நடு. ௨. சலம்—நெடுங்காலமாகநிகழுங் கோபம், நீர், பொய். ௩. கமலம்—நீர், தாமரை. ௨. கலாம்—கோபம், கொடுமை. ௨. குமரி—கற்றாழை, கன்னி, துர்க்கை, காளி. ௪. ஞமலி-நாய், மயில், கள். ௩. நனை-கள், பூவரும்பு. ௨.

சாமம்—ஒருவேதம், பச்சை, யாமம், கருமை. ௪.
வாமம்—குறுமை, இடப்பக்கம், அழகு, தொடை. ௪.
பூ—மலர், அழகு, கூர்மை, பொலிவு, பிறப்பு, பூமி. ௬.
ஏமம்—புதையல், காவல், இன்பம், பொன், இரா, மயக்கம். ௬.

உம்பர்—தேவர், தேவலோகம், மேல். ௩.
வம்பு—புதுமை, முலைக்கச்சு, மணம், நிலையின்மை. ௪.
கும்பம்—குடம், ஓரிராசி, யானைமத்தகம். ௩.
தும்பு—சிம்பு, பனைமுதலியவற்றினேடு. ௨. சுகம்—கிளி, இன்பம்.

ஆம்பல்—மூங்கில், கள், துன்பம், அல்லி, இன்னிசைக்குழல், யானை.
சாம்பல்—ஒடுங்குதல், பழம்பூ. ௨. தமிழ்—இனிமை, குணம். ௨.
தாம்பு—கயிறு, பசுக்கட்டுங்கயிறு. ௨.
காம்பு—மூங்கில், பூவின்காம்பு, பட்டுவிகற்பம், மரக்கொம்பு. ௪.

அம்மை—வருபிறப்பு, அழகு, தாய். ௩. சும்மை—நெற்போர், நாடு, ஒலி, சுமை. ௪. செம்மை—செவ்வை, சிவப்பு. ௨.
திரிதல்—உலாவல், கேடு. ௨. கொம்மை—இளமை, வட்டம், முலை, குடங்கையைக்குவித்துக் கொட்டல். ௪.

அம்—அழகு, ஓரசைச்சொல், நீர். ௩. அழனம்—நெருப்பு, பிணம்.
கம்—தலை, ஆகாயம், மேகம், காற்று, நீர், பிரமன், வெண்மை. ௭.
செம்மல்—பழம்பூ, சிவன், அருகன், பெருமையிற்சிறந்தோன், மகன்.
கம்மியர்—தொழில்செய்வோர், கம்மாளர். ௨.

வாமனம்—குறள், சிவபுராணத்துளொன்று, தென்றிசையானை. ௩.
காமரம்—அத்தநக்ஷத்திரம், அடுப்பு, இசைப்பொது. ௩.
நேமி—சக்கராயுதம், பூமி, வட்டம், சக்கரவாகப்புள், சமுத்திரம். ௫.
தேம்—இடம், தித்திப்பு, தேன், வாசனை, திக்கு, தேசம். ௬.

தாமம்—மலை, ஒழுங்கு, கொன்றைமரம், சாந்து, ஒளி, ஊர், கயிறு, பூ, மணிவடம், பூமாலை, போர்க்களம், யானை. ௧௨.
சோமன்—ஒருவள்ளல், சந்திரன். ௨. சுரும்பு—மலை, வண்டு. ௨.
சாமி—தலைவன், முருகக்கடவுள், தலைவி, குரு, பொன். ௫.

குமுதமேயடுப்போர்திக்கின்குஞ்சரமொலிவெண்ணெய்தல்
சிமயமேமலைவெற்புச்சிதீத்தீயேநரகுதீங்காம்
அமறலேபொலிவுதுன்னலரிறாறுபிணக்கமாசு
சிமிலியேகுடுமிசிக்கஞ்சிள்வீடுதானுமாமே. (௯)

சம்புவேயிரவிநாவல்சங்கரனயன்மாலோரி
தும்பியேகளிறுவண்டாந்துன்னலேசெறிதல்சேர்தல்
கம்புளேசங்குசம்பங்கோழியென்றிருபேர்காட்டும்
அம்பரங்கடல்விண்சோமண்ணலேதலைவன்பீடு. (௧0)

இம்புரிமுடிதந்தப்பூண்கேட்டைதான்முகடியோர்நாள்
கும்பிசேறுனைபூதிகுலைதான்செய்கரைகாய்க்கொத்தாம்
உம்பலாண்விலங்குவேழமுயர்குலமெழுச்சிக்கும்பேர்
அம்பலேபழிச்சொல்சில்லோரறிந்தலர்தூற்றலாமே. (௧௧)

கம்பலையச்சமோசைகம்பிதந்துன்பநாற்பேர்
செம்புலம்பாலைசேருந்திணைசெருக்களமிரண்டாம்
தம்பமேகவசந்தூணஞ்சமழ்த்தலேவருத்தநாணம்
கம்பமேநடுக்கந்தம்பங்கந்தனேயருகன்செவ்வேள். (௧௨)

அமரரேவிபுதர்தெவ்வரவந்திதான்கிளியோரூராம்
அமுதுபாறேவருண்டியாகுமின்சுவையுமுப்பேர்
அமலையேயாரவாரமயினியோடுமையுமுப்பேர்
தமமிருளிராகுவின்பேர்சார்ங்கம்விற்பொதுமால்வில்லாம். (௧௩)

ஆம்பிரம்புளிமாதேமாவாம்புளிப்பினுக்குமப்பேர்
சாம்புபொன்பறையாமென்பதாண்டவங்கூத்தேதாவல்
பாம்பென்பகரைமராளம்பையராப்படமேபச்சை
ஆம்பியேயொலிகாளானுமயிராணியுமையிந்திராணி. (௧௪)

காமனேவாசவன்வேள்கழுதுந்திப்பலியுமாகும்
காமமேவிரகமாசைகணிச்சிதான்மழுவேதோட்டி
பூமனேபிரமன்செவ்வாய்புரையோரேகீழோர்மேலோர்
சேமமேகாவலின்பந்தெக்கிணம்வலந்தெற்காகும். (௧௫)

காமுகன்விடன்வேண்மாலாங்காதென்பகொலையுங்காதும்
கோமளம்பசுவனப்புக்கூறியவிளமைக்கும்பேர்
நாமமாங்கலித்தன்மிக்குநற்பொலிவெழுச்சியோசை
மாமையேநிறம்வனப்பாமலயசஞ்சந்தந்தென்றல். (௧௬)

மகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - ௧௬௧.

குமுதமென்பது—அடுப்பு, தென்மேற்றிசையானை, பேரொலி, வெண்ணெய்தல். ௪. சிமயம்—மலை, மலையினுச்சி. ௨. தீ—நெருப்பு, நரகம், தீமை. ௩. அமறல்-பொலிவு, நெருங்கல். ௨. அரில்—சிறுதூறு, பிணக்கு, குற்றம். ௩. சிமிலி—குடுமி, உறி, சிள்வண்டு. ௩.

சம்பு—சூரியன், நாவல், சிவன், பிரமன், திருமால், நரி. ௬.
தும்பி—யானை, வண்டு. ௨. துன்னல்—நெருங்கல், இட்டல். ௨.
கம்புள்-சங்கு, சம்பங்கோழி. ௨. அம்பரம்-கடல், ஆகாயம், வஸ்திரம் ௩.
அண்ணல்—பெருமையிற்சிறந்தோன், [அரசன்] பெருமை. ௨.

கிம்புரி—முடியுறுப்பைந்தனுளொன்று, யானைக்கொம்பின்பூண். ௨.
கேட்டை—மூதேவி, ஒருநக்ஷத்திரம். ௨. கும்பி—சேறு, யானை, நரகம். ௩. குலை—செய்கரை, கமுகு வாழைமுதலியவற்றின்காய்க்குலை. ௨. உம்பல்—ஆண்விலங்கு, யானை, உயர்குலம், எழுச்சி. ௪.
அம்பல்—பழிச்சொல், சிலரறிந்துபுறங்கூறல். ௨.

கம்பலை—பயம், ஒலி, நடுக்கம், துன்பம். ௪.
செம்புலம்—பாலைநிலம், போர்க்களம். ௨. தம்பம்—கவசம், தூண். ௨.
சமழ்த்தல்—வருத்தம், வெட்கம். ௨. கம்பம்—நடுக்கம், தூண். ௨.
கந்தன்—அருகன், முருகக்கடவுள். ௨.

அமரர்—தேவர், பகைவர். * ௨. அவந்தி—கிளி, ஒரூர். ௨.
அமுது—பால், தேவருணவு, அமிர்தம். ௩.
அமலை—ஒலி, சோறு, பார்ப்பதி. ௩.
தமம்—இருள், இராகு. ௨. சார்ங்கம்—விற்பொது, திருமால்வில். ௨

ஆம்பிரம்—புளிமா, தேமா, புளிப்பு. ௩.
சாம்பு—பொன், பறை. ௨. தாண்டவம்—கூத்து, தாண்டுதல். ௨.
பாம்பு—கரை, பாம்பு. ௨. பை—பாம்பின்படம், பச்சை. ௨.
ஆம்பி—ஒலி, காளான். ௨. அயிராணி—பார்ப்பதி, இந்திராணி. ௨.

காமன்—இந்திரன், மன்மதன், வண்டு, திப்பலி. ௪.
காமம்—காமநோய், ஆசை. ௨. கணிச்சி—மழு, தோட்டி. ௨.
பூமன்-பிரமன், செவ்வாய். ௨. புரையோர்-கீழ்மக்கள், மேன்மக்கள். ௨.
சேமம்—காவல், இன்பம். ௨. தெக்கிணம்—வலப்பக்கம், தெற்கு. ௨.

காமுகன்—தூர்த்தன், மன்மதன், திருமால். ௩.
காது—கொலை, செவி. ௨. கோமளம்—பசு, அழகு, இளமை. ௩.
கலித்தல்—மிகுதி, பொலிவு, எழுச்சி, ஒலி. ௪.
மாமை—நிறம், அழகு. ௨. மலயசம்—சந்தனமரம், தென்றல். ௨.

* அமரார் - பகைவர்.

# யகரவெதுகை.

காயமெய்விண்வெண்காயம்பெருங்காயங்கறிகரித்தல்
நேயநெய்யெண்ணெயன்பாநிறமென்பமருமங்காந்தி
ஆயமேகவற்றிற்றாயமாதாயமாதர்கூட்டம்
சாயலென்பதுமேம்பாடுதருமழகுடனேமென்மை. (௧)

வயநீர்ப்புட்பொதுவலிப்பேர்வயல்வெளிபழனமும்பேர்
சயம்வெற்றிசருக்கரைப்பேர்சடமுடல்வஞ்சம்பொய்யாம்
நியமமேநியதிவீதிநிச்சயநகரங்கோயில்
இயமென்பவொலியேவார்த்தைவாச்சியமிம்முப்பேரே. (௨)

அயமென்பநீர்தடாகமாடுவெம்பரியிரும்பாம்
கயமென்மைகுளமேயாழங்களிறுகீழ்பெருமைதேய்வாம்
பயமென்பசுதைநீரச்சம்பாலொடுபயன்பேரைந்தே
அயனமேவழியினுமாண்டினிற்பாதிக்கும்பேர். (௩)

பயிரொலிபயிலேபைங்கூழ்பறக்கும்புட்குரலினாற்பேர்
கயினியேயத்தநாளுங்கைம்மையுமிருபேர்காட்டும்
வயிரமேசெற்றங்கூர்மைவச்சிரமோர்மணியேசேகு
கயில்பிடர்த்தலையேபூணின்கடைப்புணர்விருபேர்தானே. (௪)

ஐயமேபிச்சையேற்குமோடனுமானம்பிச்சை
ஐயனேமூத்தோன்சாத்தனப்பனீச்சுரனாற்பேரே
தொய்யலேயுழவுஞ்சேறுந்துயரமுமகிழ்ச்சியும்பேர்
மொய்செருக்களம்போர்யானைமூசல்வண்டொடுதிரட்பேர். (௫)

வயவனேவீரனோடுவலியான்காதலனுமாகும்
குயிறலேசெறிதல்கூவல்குடைதல்பண்ணுதனாற்பேரே
வயினிடமுதரம்வீடாம்வயாக்கருவருத்தங்காதல்
மயல்செத்தைமயக்கம்பேயாமறவரேவயவர்வேடர். (௬)

குயிலேகோகிலமுஞ்சொல்லுங்கொண்மூவுந்துளையுநாற்பேர்
வயமாவேகுதிரைசிங்கமதகரிபுலியுமாகும்
வியலென்பவிசாலம்பீடாம்வேய்துளையொற்றுமூங்கில்
மயிலையேமீனராசிமீனிருவாட்சிமுப்பேர். (௭)

சயிந்தவங்குதிரையோடுதலையுமிந்துப்புமாகும்
குயந்தனமிளமையோடுகூரரிவாளுமுப்பேர்
நயந்தோனேநண்பன்கொண்கனலம்விருச்சிகமேநன்மை
பயம்பென்பதானைவீழும்படுகுழிபள்ளமாமே. (௮)

# யகரவெதுகை.

காயமென்பது—உடல், ஆகாயம், வெண்காயம், பெருங்காயம், மிளகு, கார்ப்பு சு. நேயம்—நெய், எண்ணெய், அன்பு. ௩.
நிறம்—மார்பு, ஒளி. உ. ஆயம்—கவற்றிற்றாயம், இலாபம், பெண்கள்கூட்டம். ௩. சாயல்—மேம்பாடு, அழகு, மென்மை. ௩.

வயம்—நீர், பறவைப்பொது, வலிமை. ௩. வயல்—வெளி, வயல் உ.
சயம்—வெற்றி, சருக்கரை. உ. சடம்—சரீரம், வஞ்சனை, பொய்.
நியமம்—செய்கடன், தெரு, நிச்சயம், நகரம், கோயில். ௫.
இயம்—ஒலி, சொல், வாச்சியப்பொது. ௩.

அயம்—நீர், குளம், ஆடு, குதிரை, இரும்பு. ௫.
கயம்—மென்மை, குளம், ஆழம், யானை, கீழ்மை, பெருமை, தேய்வு. எ.
பயம்—அமிர்தம், நீர், அச்சம், பால், பயன். ௫.
அயனம்—வழி, ஆண்டிற்பாதி. உ.

பயிர்—ஒலி, பயில், பயிர், பறவைக்குரல். ச.
கயினி—அத்தநக்ஷத்திரம், விதவை. உ.
வயிரம்—நெடுங்காலநிகழுங்கோபம், கூர்மை, வச்சிராயுதம், வைரமணி, மரவயிரம். ௫. கயில்—பிடர், ஆபரணக்கடைப்புணர்வு. உ.

ஐயம்—பிச்சையேற்குமட்கலம், சந்தேகம், பிச்சை. ௩.
ஐயன்—மூத்தோன், ஐயனார், பிதா, கடவுள். ச.
தொய்யல்—உழவு, சேறு, துன்பம், களிப்பு. ச.
மொய்—போர்க்களம், போர், யானை, மொய்த்தல், வண்டு, கூட்டம்.

வயவன்—வீரன், வலியானென்னும்புள், கணவன். ௩. குயிறல்—நெருங்கல், அழைத்தல், துளைத்தல், செய்தல். ச. வயின்—இடம், வயிறு, வீடு. ௩. வயா-கருப்பம், வருத்தம், [கருப்பவேதனை] ஆசை.
மயல்—செத்தை, மயக்கம், பேய். ௩. மறவர்—படைவீரர், வேடர்.

குயில்—ஒருபட்சி, வார்த்தை, * மேகம், துளை. ச.
வயமா—குதிரை, சிங்கம், யானை, புலி. ச.
வியல்—அகலம், பெருமை. உ. வேய்—உட்டுளை, ஒற்று, மூங்கில்.
மயிலை—மீனராசி, மீன், இருவாட்சி. ௩.

சயிந்தவம்—குதிரை, தலை, இந்துப்பு. ௩.
குயம்—முலை, இளமை, அரிவாள். ௩.
நயந்தோன்-தோழன், கணவன். உ. நலம்-விருச்சிகவிராசி, நன்மை.
பயம்பு—யானைப்படுகுழி, பள்ளம். உ.

---

* குயின் - மேகம்.

இயனடைதமிழ்சாயற்பேரெல்வையேபொழுதுவாவி
குய்யென்பகறிகரித்தல்குளிர்நறும்புகையிரண்டாம்
செயிரென்பசினங்குற்றப்பேர்சேடிவிஞ்சையரூர்பாங்கி
உயவைகாக்கணமேமுல்லையுற்றகான்யாறுமாமே. (௯)

செய்யலேயொழுக்கங்காவல்சேறுசெய்வினைநாற்பேரே
நெய்தலேகடற்சார்பூமிநெய்தற்பூச்சாபறைப்பேர்
வெய்யோனாதவனேதீயோன்விருப்பினன்றனக்குமப்பேர்
ஐயையேயுமையாதுர்க்கைமகளருந்தவப்பெண்ணாசாள். (௧௦)

ஐயழகிடைச்சொல்கோழையரசனோடிருமல்சாமி
மையென்பதஞ்சனங்கார்மலடிருளாடுமாசாம்
கையிடம்படையுறுப்பொப்பனைசெங்கைசிறுமைசீலம்
வையந்தேரேறுரோணிவசுந்தரைசிவிகையூர்தி. (௧௧)

சேய்குகனிளமைதூரஞ்செம்மைசேண்சிறுவன்செவ்வாய்
வாய்குழலிடம்வாய்மைப்பேர்மாருதியனுமன்வீமன்
ஆய்தலேநுணுக்கந்தேர்தலாறென்பவழிநதிப்பேர்
வேய்தல்சூடுதன்மூடற்பேர்விநாயகனருகன்முன்னோன். (௧௨)

அயிர்கரும்பின்றேங்கட்டியான்றநுண்மணலேநுண்மை
செயறொழிலொழுக்கமென்பதெய்வமேகடவுளூழாம்
நயமென்பமகிழ்ச்சியின்பநன்மைநற்பயனாற்பேரே
பெயரென்பபெருமைகீர்த்திபேசுநாமப்பேராமே. (௧௩)

யகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் ௧௬௪.

# ரகரவெதுகை.

சிரகமேகரகமாகுஞ்சென்னியிற்சோடுமப்பேர் *
கரகமேயாலங்கட்டிகமண்டலந்துளிநீர்கங்கை
மரபுதான்முறைமைதொன்மைமறலென்பபிணக்குங்கூற்றும் (௧)
சரபமெண்காற்புள்ளென்பவரையாடுதானுமாமே.

இரதமேபுணர்ச்சிசூதமின்சுவைபரைஞாண்பொற்றேர்
அரணமேகவசங்காடேயணிமதில்வேலிநாற்பேர்
கரணமெண்மனாதிகூத்துக்கலவிகாரணமைம்பேரே
சரணந்தாண்மறைபுகற்பேர்தன்னமான்கன்றேயற்பம். (௨)

* சென்னியிற்றிராணமும்பேர் என்னும் பாடம்.

இயலென்பது—ஒழுக்கம், இயற்றமிழ், சாயல். ௩. ஏல்வை—காலம், தடாகம். ௨. குய்—தாளித்தல், நறும்புகை. ௨.
செயிர்—கோபம்,குற்றம். ௨. சேடி-வித்தியாதரருலகு,தோழி.௨.
உயவை—காக்கணங்கொடி, முல்லைக்கொடி, கான்யாறு. ௩.

செய்யல்—ஒழுக்கம், காவல், சேறு, செய்தொழில். ௪.
நெய்தல்—கடல்சார்ந்தநிலம், நெய்தற்பூ, சாபறை. ௪.
வெய்யோன்—சூரியன், கொடியோன், விருப்புற்றோன். ௩.
ஐயை—பார்ப்பதி, துர்க்கை, மகள், தவப்பெண், தலைவி. ௫.

ஐ—அழகு, ஓரிடைச்சொல், கோழை,அரசன்,இருமல்,தலைவன்.௬.
மை—அஞ்சனம்,மேகம்,மலடு,இருள்,ஆடு,குற்றம். ௬. கை-இடம், பிடையுறுப்பு, அலங்காரம், கைத்தலம், சிறுமை, ஒழுக்கம். ௭.
வையம்-தேர்,எருது,உரோகிணிநக்ஷத்திரம்,பூமி,சிவிகை,வாகனம்.

சேய்—முருகக்கடவுள், இளமை, தூரம், சிவப்பு, நீளம், மகன், செவ்வாய். ௭.
வாய்—ஊதுகுழல்,இடம்;உண்மை. ௩. மாருதி—அனுமன், வீமன்.
ஆய்தல்—நுண்மை,ஆராய்தல். ௨. ஆறு—வழி, நதி. ௨. வேய்தல்-சூடுதல், மூடுதல். ௨. விநாயகன்—அருகன், விநாயகக்கடவுள்.

அயிர்—கண்டசர்க்கரை, நுண்மணல், நுண்மை. ௩.
செயல்—தொழில், ஒழுக்கம். ௨. தெய்வம்—கடவுள், ஊழ். ௨.
நயம்—மகிழ்ச்சி, இன்பம், நன்மை, நற்பயன். ௪.
பெயர்—பெருமை, புகழ், நாமம். ௩.

## ரகரவெதுகை.

சிரகமென்பது—கரகம், தலைச்சீரா. ௨.
கரகம்—ஆலங்கட்டி, கமண்டலம், நீர்த்துளி, நீர், கங்கை. ௫.
மரபு—முறைமை, பழமை. ௨. மறல்—பிணக்கு, யமன். ௨.
சரபம்—எண்காற்புள், வரையாடு. ௨.

இரதம்—புணர்ச்சி, பாதரசம், இனிமை, அரைஞாண், தேர். ௫.
அரணம்—கவசம், காடு, மதில், வேலி. ௪.
கரணம்—எண், மனமுதலியகரணம், கூத்தின்விகற்பம், காதலோர்கூட்டம், காரணம். ௫. சரணம்—கால், அடைக்கலம்புகுதல். ௨. தன்னம்—பசுவின்கன்று, அற்பம். ௨.

உரமென்பவலியேஞானமூக்கமேமார்புநாற்பேர்
சிரமென்பநெடுங்காலப்பேர்சென்னியுமன்னதேயாம்
புரமென்பபுரிமுன்மெய்ப்பேர்புரவலன்வள்ளல்வேந்தன்
கரமென்பகிரணஞ்செங்கைகழுதைநஞ்சிறுத்தலும்பேர். (௩)

அரவநூபுரம்பாம்போசையாய்வென்பவருத்தமாய்தல்
பரவைவாரிதிபரப்புப்பங்கயமாதின்கூத்தே
இரலையேகலையூதுங்கொம்பிரண்டுடன்முதலுளென்ப
அரசுமன்னிராச்சியப்பேரம்பிநாவாயேதெப்பம். (௪)

அரம்பைதெய்வப்பெண்வாழையாணுவேயிரதநன்மை
சரந்தனிமணிவடம்போர்சாயகநாணற்புற்பேர்
நரந்தமென்பதுநாரத்தைநாறுங்கத்தூரிக்கும்பேர்
சுருங்கையேகரந்துபண்ணுங்கற்படைநுழைவாயிற்பேர். (௫)

ஆரமேபதக்கமுத்தமாத்திசந்தனமேமாலை
வாரநீர்க்கரையேயன்புமலைச்சாரல்கிழமைபங்காம்
தாரம்வல்லிசைநாவெள்ளிதலைவியோரிசைகண்ணென்ப
கோரஞ்சோழன்மாவட்டில்கொடுமைபூமொட்டுவாசி. (௬)

இராசியமறைவேயோனியிறப்பென்பமிகுதியோக்காம்
பராகமேயிரேணுவாகும்பரிமளமலர்த்தூளும்பேர்
துரோணமேசிம்புள்காக்கைதும்பைவில்லொடுபதக்காம்
இராகமேகீதஞ்செம்மையிச்சையேநிறமுமேற்கும். (௭)

பரிபரிசுமத்தல்வேகம்பாதுகாத்திடல்வருத்தம்
புரிவளைவிரும்பல்செய்தல்புரத்தொடுகயிறுகட்டாம்
பரிதலேயறுத்தலன்புபகர்ந்திடிலிரங்கலும்பேர்
வரிசுணங்கெழுத்துப்பாட்டுவாரிதியிறையேநெல்லு. (௮)

சரிகரவளைவழிப்பேர்சராவமேயகல்சலாகை
கரியவன்சனியின்பேராங்கண்ணனிந்திரனுமாமே
பரிகமேகிடங்குமேடைபகர்மதில்கணையநாற்பேர்
கரில்குற்றங்காழ்த்தலும்பேர்காதைசொற்கதையுமாமே. (௯)

மூரியேஎருமையாற்றன்முறைபீடுநெரிவுமாமே
வாரிநீர்கதவுவெள்ளமதில்கடல்வருவாய்வட்டை
நாரிபன்னாடைபெண்ணேநறவுவின்னாணிநாற்பேர்
பாரியோர்வள்ளல்கட்டில்பாரிகட்டுசேமுந்நீர். (௰)

உரமென்பது—வலிமை, ஞானம், உள்ளக்கிளர்ச்சி, மார்பு. ச.
சிரம்—நெடுங்காலம், தலை. உ. புரம்—மருதநிலத்தூர், முன்,
உடம்பு. ௩. புரவலன்—கொடையுளோன், அரசன். உ.
கரம்—சூரியகிரணம், கை, கழுதை, நஞ்சு, குடியிறை. ரு.

அரவம்—சிலம்பு,பாம்பு,ஒலி. ௩. ஆய்வு—வருத்தம்,ஆராய்தல். உ.
பரவை—கடல், பரப்பு, திருமகளாடல். ௩.
இரலை—கலைமான், ஊதுகொம்பு, அச்சுவினிநக்ஷத்திரம். ௩.
அரசு—அரசன், இராச்சியம். உ. அம்பி—மரக்கலம், தெப்பம். உ.

அரம்பை—தெய்வப்பெண், வாழை. உ. ஆணு—இனிமை, நன்மை.
சரம்—மணிவடம், யுத்தம், அம்பு, நாணற்புல். ச.
நரந்தம்—நாரத்தை, கத்தூரி. உ. சுருங்கை—கோட்டையிற்கள்ள
வழி, நுழைவாயில். உ.

ஆரம்—பதக்கம், முத்து, ஆத்திமரம், சந்தனமரம், பூமாலை. ரு.
வாரம்—நீர்க்கரை, அன்பு, மலைச்சாரல், கிழமை, பங்கு. ரு.
தாரம்—வல்லிசை, நா, வெள்ளி, மனைவி,எழிசையுளொன்று,கள்.
கோரம்—சோழன்குதிரை, வட்டில், கொடுமை,பூவரும்பு,குதிரை.

இராசியம்—மறைவு, பெண்குறி. உ. இறப்பு—மிகுதி, போதல். உ.
பராகம்—துகள், பூந்தாது. உ. துரோணம்-எண்காற்பட்சி, காகம்,
தும்பை, வில், பதக்கு. ரு.
இராகம்—இசைப்பாட்டு, சிவப்பு, ஆசை, நிறம். ச.

பரி—குதிரை, சுமத்தல், சீக்கிரம், பாதுகாத்தல், வருத்தம். ரு.
புரி—சங்கு, விரும்புதல், செய்தல், நகரம், கயிறு, கட்டு. சு.
பரிதல்—அறுத்தல், அன்புசெய்தல், இரங்கல். ௩.
வரி—தேமல், எழுத்து, இசைப்பாட்டு, கடல், குடியிறை, நெல். சு.

சரி—கைவளை, வழி. உ. சராவம்—அகல், சலாகை. உ.
கரியவன்—சனி, திருமால், இந்திரன். ௩.
பரிகம்—அகழி, மதிலுண்மேடை, மதில், எழு [வளைதடி.] ச.
கரில்—குற்றம், உறைத்தல். உ. காதை—சொல், கதை. உ.

மூரி—எருது, எருமை, வலிமை, பழமை, பெருமை, நெரிவு. சு.
வாரி—நீர், கதவு, வெள்ளம், மதில், கடல், வருவாய், வழி. எ.
நாரி—பன்னாடை, பெண், கள், வின்னாணி. ச. பாரி—கடைவள்ள
லெழுவரிலொருவன், கட்டில், மனைவி,கள்,நல்லாடை,கடல். சு.

அருக்கலேசுருங்கல்சார்தலமுதமேசுதைநீர்மோக்கம்
பொருளேசொற்பொருள்பல்பண்டம்பொன்பண்புபிள்ளைவாய்மை
குருநிறமோர்நோய்தேயங்குரவன்பாரம்வியாழன்
அருணமென்பதுமான்செம்மையாடெலுமிச்சைநாற்பேர். (௧௧)

முருகுகள்ளிளமைநாற்றமுருகவேள்விழாவனப்பாம்
மருமானேமருமகன்பேர்வழித்தோன்றற்பெருமாமே
இருசுபண்டியுளிரும்புசெவ்வையென்றிருபேரென்ப
கருமையேபெருமையாகுங்கறுப்பொடுவலியுமாமே. (௧௨)

கிருத்திமந்தோலேபண்ணல்கெட்டபொய்விட்டபூதம்
விருத்தியேதொழிலிலாபம்விரிபொருள்வளர்ச்சிக்கும்பேர்
துருத்தியாற்றிடைக்குறைப்பேர்தோலுமாந்துட்டைக்கும்பேர்
அரத்தமேயிரத்தஞ்செம்மையரக்கொடுற்பலங்கடம்பு. (௧௩)

சீர்செல்வந்தாளவொத்துச்சீர்த்திகாதண்டேபாரம்
தார்கொடிப்படைபூத்தண்டுதாமங்கிங்கிணியின்கோவை
சூரென்பநோயேயச்சமஞ்சாமையணங்குஞ்சொல்லும்
கார்நீர்வெள்ளாடுமேகங்கறுப்பிருண்மாரிக்காலம். (௧௪)

ஆர்கூர்மையாத்திதேரினகத்துறுகதிருமாகும்
பீரென்பமுலையிற்பாலும்பீர்க்கொடுபசலைக்கும்பேர்
வாரென்பநெடுமைகச்சுமன்னுநீர்நேர்மைநாற்பேர்
நேர்சமமீதல்பாதிநெடிலுடன்யாடுநுட்பம். (௧௫)

அருணன்சூரியன்றேர்ப்பாகனுதித்தன்புதன்முப்பேரே
வருணமேகுலநீராகுமகனென்பசிறந்தோன்மைந்தன்
தரணிபாரிரவிவெற்பாந்தையல்பெண்ணழகுமாகும்
கரிணியேமுழையும்வெற்புங்களிற்றொடுபிடியுங்காட்டும். (௧௬)

மாரியேவிளிவுகள்ளுவடுகிநோய்மேகமைம்பேர்
ஓரியாண்மயிரோர்வள்ளன்முதுநரிமுசுவென்றோதும்
காரியோர்வள்ளலையன்கடுச்சனிவடுகன்காக்கை
தூரியமிடபமாடைதுந்துபியெழுதுங்கோலே. (௧௭)

பிரமமேவேதம்வேள்விமந்திரம்பிரமன்மாலோ
டிரவிதீமுனிவர்முத்தியீசனம்புலிபன்னொன்றே
அரசனேவியாழன்மன்னுமம்பணந்தோணியாமை
குரல்கதிர்சிறகுமாதர்கூந்தல்யாழ்நரம்புநாற்பேர். (௧௮)

அருகலென்பது-குறைதல்,கிட்டல். ௨. அமுதம்-அமிர்தம்,நீர்,மோக்ஷம். ௩. பொருள்-சொற்பொருள்,பலபண்டம்,பொன்,குணம், மகன், உண்மை. ௬. குரு-நிறம்,ஒருவியாதி,ஒருதேசம்,ஆசான், பாரம்,வியாழன். ௬. அருணம்-மான்*சிவப்பு,ஆடு,எலுமிச்சை. ௪.

முருகு—கள், இளமை, வாசனை, முருகன், திருவிழா, அழகு. ௬.
மருமான்—மருகன், வழித்தோன்றல். ௨.
இருசு—பண்டியுளிரும்பு, செவ்வை. ௨.
கருமை—பெருமை, கறுப்பு, வலிமை. ௩.

கிருத்திமம்—தோல், செய்தல், பொய், பூதகணம். ௪.
விருத்தி—தொழில், இலாபம், விரிவுரை, வளர்தல். ௪.
துருத்தி—ஆற்றிடைக்குறை, தோல், தெரிழுத்தை. ௩.
அரத்தம்—இரத்தம், சிவப்பு, அரக்கு, செங்குவளை,கடப்பமரம். ௫.

சீர்—செல்வம்,தாளவொத்து,மிகுபுகழ்,[புகழ்]. தூக்கு, தண்டு, பாரம். ௬. தார்—கொடிப்படை,மலர்,சேனை,பூமாலை,கிங்கிணிமாலை
சூர்—வியாதி, அச்சம், அஞ்சாமை, தெய்வப்பெண். ௪.
கார்—நீர், வெள்ளாடு, மேகம், கருமை, இருள், கார்காலம். ௬.

ஆர்—கூர்மை, ஆத்திமரம், தேரினகத்திற்செறிகதிர். ௩.
பீர்—முலைப்பால், பீர்க்கு, பசலை. ௩.
வார்—நீளம், கச்சு, நீர், நேர்மை. ௪.
நேர்—ஒப்பு, கொடுத்தல், பாதி, நீளம், உடன்பாடு, நுட்பம். ௬.

அருணன்—சூரியன்றேர்ப்பாகன், சூரியன், புதன். ௩.
வருணம்—குலம், நீர். ௨. மகன்—சிறப்புற்றோன், புத்திரன். ௨.
தரணி—பூமி, சூரியன், மலை. ௩. தையல்—பெண், அழகு. ௨.
கரிணி—மலைமுழை, மலை, ஆண்யானை, பெண்யானை. ௪.

மாரி-சாவு,கள்,காடுகாள்,வியாதி,மேகம். ௫. ஓரி-ஆண்மயிர்,கடைவள்ளலெழுவரிலொருவன்,†கிழநரி,ஆண்முசு. ௪. காரி-முதல்வள்ளலெழுவரிலொருவன்,ஐயனார்,நஞ்சு,சனி,வைரவக்கடவுள்,காகம்.
தூரியம்—எருது, வஸ்திரம், வாச்சியப்பொது, எழுதுகோல். ௪.

பிரமம்—வேதம், யாகம், மந்திரம், பிரமன், திருமால், சூரியன், நெருப்பு, இருடிகள், மோக்ஷம், சிவன், சந்திரன். ௧௧.
அரசன்—வியாழன், இராசன். ௨. அம்பணம்—தோணி,ஆமை. ௨.
குரல்—கதிர், இறகு, பெண்மயிர், யாழ்நரம்பு. ௪.

---

* அரிணம் - மான். † ஓரி - நரிக்கும்பெயர்.

தோரைநெல்விகற்பமூங்கிலரிசிகைவரைசொன்முப்பேர்
ஆரையேமதில்புற்பாயாமகலுளேபரப்பூர்நாடே
ஓரையேமாதர்கூடிவிளையாடலுடனிராசி
தாரைகண்மழைநேரோடறாரகைவழியேகூர்மை. (௧௯)

ஊர்திதேர்விமானம்பாண்டிலும்பலேசிவிகைபாய்மா
ஆர்வமோர்நரகமன்பாமகலமார்பொடுவிசாலம்
ஆர்வலர்கொண்கரன்பரணுவென்பதுயிர்றுண்மைப்பேர்
ஆர்தலேநிறைதலுண்டலகளந்தான்மிடாநற்றாழி. (௨0)

பாரமேகவசந்தோணிபல்லணம்பொறையினோடு
நீருறுகரைவன்பாரநிறைதரைநிகழ்த்துமெண்பேர்
சூரனேயிரவிதீநாய்துகளென்பகுற்றந்தூளாம்
சாரங்கமானும்வண்டுஞ்சாதகப்புள்ளுமாமே. (௨௧)

ஆரல்கார்த்திகைநாள்செவ்வாயரணுறுப்பொருமீனாற்பேர்
சாரலேமருதயாழினிசையொடுசைலப்பக்கம்
மூரலேநகைபல்சோறாமுரம்பென்பமேடுபாறை
கூரல்புட்சிறகுமாதரோதியுமிருபேர்கூறும். (௨௨)

சாரிகைபூவைசுங்கஞ்சுழல்காற்றுத்தானுமாகும்
காரிகைபழகுபெண்ணேகலித்துறையோர்நூற்கும்பேர்
வாரணங்கவசங்கோழிதடைசங்குவாரிகைம்மா
பூருவமுதுமைமுன்புகிழக்கென்றும்புகலலாமே. (௨௩)

ஏரழகுழூபெற்றப்பேரிராசிதானோரைகூட்டம்
பாருலகந்தேர்ப்பாராம்பயல்பள்ளம்பாதிசிற்றாள்
போரமர்சதயத்தோடுபுகலுநென்முதலாஞ்சும்மை
பீருவேயச்சமுள்ளோன்பெயரொடுபுருவமாமே. (௨௪)

அருப்பமாரிடநோய்காடாமரணுடனூருமப்பேர்
மரக்காலாயிலியஞ்சோதிமாயவனுடன்முப்பேர்
நிரப்பென்பமிடிநிறைப்பேர்நிறையழியாமைநீர்ச்சால்
துருக்கமேயரண்கத்தூரிகுங்குமமரமுஞ்சொல்லும். (௨௫)

குருதியேசிவப்பிரத்தங்குசனெனக்கூறுமுப்பேர்
பரிதியேயூர்கோள்வட்டம்பாற்கரனேமிநாற்பேர்
சுருதியேயொலிவேதப்பேர்சுரமருநெறிகான்மார்க்கம்
இரதிபித்தளைபெண்யானைமதன்றேவியிச்சைநாற்பேர். (௨௬)

தோரையென்பது—ஒருவகைநெல், வேயரிசி, கையிறை. ௩.
ஆரை—மதில், புற்பாய். ௨. அகலுள்—அகலம், ஊர், நாடு. ௩.
ஓரை—மகளிர்விளையாட்டு, இராசி. ௨.
தாரை—கண், மழை, நேரோடல், நக்ஷத்திரம், வழி, கூர்மை. ௬.

ஊர்தி—தேர், விமானம், பண்டி, யானை, தண்டிகை, குதிரை. ௬.
ஆர்வம்—ஒருநரகம், அன்பு. ௨. அகலம்—மார்பு, விரிவு. ௨.
ஆர்வலர்—நாயகர், அன்புடையோர். ௨. அணு—ஆன்மா, நுட்பம்.
ஆர்தல்—நிறைதல், புசித்தல். ௨. அகளம்—மிடா, சாடி. ௨.

பாரம்—கவசம், தோணி, குதிரைக்கலணை, பொறுத்தல், நீர்க்கரை, கனம், ஒருநிறை, பூமி. ௮.
சூரன்—சூரியன், நெருப்பு, நாய். ௩. துகள்—குற்றம், புழுதி. ௨.
சாரங்கம்—மான், வண்டு, சாதகப்பட்சி. ௩.

ஆரல்—கார்த்திகைநக்ஷத்திரம், செவ்வாய், மதில், ஆரான்மீன். ௪.
சாரல்—மருதயாழிஞெரிசை, மலைப்பக்கம். ௨.
மூரல்—சிரிப்பு, பல், சோறு. ௩. முரம்பு—மேடு, பாறை. ௨.
கூரல்—பறவையினிறகு, பெண்மயிர். ௨.

சாரிகை—நாகணவாய்ப்புள், சுங்கவிறை, சுழல்காற்று. ௩.
காரிகை—அழகு, பெண், கலித்துறை, ஒருநூல். ௪.
வாரணம்—கவசம், கோழி, தடுத்தல், சங்கு, கடல், யானை. ௬.
பூருவம்—பழமை, முன்பு, கீழ்த்திசை. ௩.

ஏர்—அழகு, உழுமெருது. ௨. இராசி-மேடமுதலியராசி, கூட்டம்.
பார்—பூமி,தேர்ப்பலகைப்பா.௨. பயல்-பள்ளம்,பாதி,சிறுபிள்ளை.
போர்—யுத்தம், சதயநக்ஷத்திரம், நெற்போர்முதலியன. ௩.
பீரு—அச்சமுள்ளோன், புருவம். ௨.

அருப்பம்—வழுக்குநிலம், வியாதி, காடு, கோட்டை, ஊர். ௫.
மரக்கால்-ஆயிலியநக்ஷத்திரம், சோதிநக்ஷத்திரம், திருமால்கூத்து.
நிரப்பு—தரித்திரம்,நிறைவு.௨. நிறை—அழிவின்மை,நீர்ச்சால்.௨.
துருக்கம்—மதில், கத்தூரி, குங்குமமரம். ௩.

குருதி—சிவப்பு, இரத்தம், செவ்வாய். ௩.
பரிதி—பரிவேடம், வட்டம், சூரியன், சக்கராயுதம். ௪.
சுருதி—ஒலி, வேதம். ௨. சுரம்—அரியவழி, காடு, வழி. ௩.
இரதி—பித்தளை, பெண்யானை, மன்மதன்மனைவி, ஆசை. ௪.

புரைகுற்றமுவமையில்லம்புழையுயர்ச்சியுமைம்பேரே
விரைமணஞ்சாந்துதூபம்வீரைதான்றுயரம்வாரி
நரைவெள்ளையிவுளிவெண்மைநந்திநற்சவரிநாரை
சுரைகள்ளான்முலைதுளைப்பேர்துளும்பலேதிமிறதுள்ளல். (௨௭)

மருளென்பகுறிஞ்சியாழின்றிறத்தொடுமயக்கமும்பேர்
இருளொருநரகமையலிருளொடுகருமையென்ப
பொருநர்போர்த்தலைவர்கூத்தர்புரவலர்பாணர்வீரர்
இருபிறப்பெயிறும்பார்ப்புமிந்துவும்புள்ளுமாமே. (௨௮)

மருதமேயொருமரஞ்செய்மருதமர்நிலப்பாடற்பேர்
எருவையேகொறுக்கைகோரைகழுகுசெம்பிரத்தமென்ப
தருமராசன்றான்புத்தன்சண்டனோடருகன்றானும்
கரியென்பதிருந்தைசான்றுகறையடிசேகுநாற்பேர். (௨௯)

கருவிபல்லியந்துணைக்காரணங்கள்யாழ்கவசமீட்டம்
பொருபடைக்கலந்தொடர்ச்சிபுயல்பலவினைப்பேர்கூட்டம்
பரியின்பல்லணமேயாடைகசைபதின்முப்பேர்பன்னும்
சுரிகையேகவசம்வாளாந்துவைபிண்ணாக்கிறைச்சியோசை. (௩௦)

குருகுபுள்ளிளமைநாரைகொல்லுலைமூக்குக்கோழி
சரிவெள்ளைமூலநாள்வாசந்தியொன்பான்பேர்சாற்றும்
முரசேயுத்தரட்டாதிப்பேரியமென்றுமொழியலாமே
தரளமேயுருட்சிமுத்தாஞ்சார்வென்பதிடமும்பற்றும். (௩௧)

முரண்வலிபகையாமென்பமொய்ம்புதோள்வலியுமாகும்
உரையென்பகிளவிதேய்வாமுவாத்தந்தியிளையோன்பௌவம்
ஞெரேயொலிவிரைவுமாகுந்தியிருந்திபொன்னென்ப
உருநிறம்வடிவட்டைப்பேரோதனஞ்சோறேயுண்டி. (௩௨)

அரிகிளிபுணரிமாறேரைம்மையிந்திரன்கால்காந்தி
பரிபுகர்பன்றிசிங்கம்பகைபுகைபாயல்சோலை
வரிமதிசேகுதேரைவானரமியமன்மூங்கில்
எரிபுரைநிறம்பொன்பாந்தளிரவிகண்வரிதார்பச்சை. (௩௩)

அரிசிநெற்கதிர்கள்கூர்மையளிபடைக்கலமேயீர்வாள்
அரிதலைசயனநேமியடல்விசிபறையரித்தல்
பரிபுரமதனுட்பெய்தபரலோடிவ்வாறேழைந்தாம்
அரிதமேபசுமைதிக்காமார்ப்பொலிசிரித்தற்பேரே. (௩௪)

புரையென்பது—குற்றம், ஒப்பு, வீடு, உட்டுளை, உயர்ச்சி. ௫.
விரை-வாசனை, கலவைச்சாந்து, நறும்புகை. ௩. வீரை-துன்பம், கடல்
நரை—வெள்ளைக்குதிரை, வெண்மை, இடபம், சாமரம், நாரை. ௫.
சுரை-கள், பசுவின் முலை, உட்டுளை. ௩. துளும்பல்-திமிறல், துள்ளல்.

மருள்—குறிஞ்சியாழ்த்திறம், மயக்கம். ௨.
இருள்—ஒருநரகம், மயக்கம், இருள், கறுப்பு. ௪.
பொருநர்—படைத்தலைவர், நாடகர், அரசர், பாணர், வீரர். ௫.
இருபிறப்பு—பல், பிராமணர், சந்திரன், பறவை. ௪.

மருதம்—ஒருமரம், வயல், மருதநிலம், மருதநிலப்பாடல். ௪.
எருவை—கொறுக்கைப்புல், கோரை, கழுகு, செம்பு, இரத்தம். ௫.
தருமராசன்—புத்தன், யமன், அருகன். ௩.
கரி—கரி, சாட்சி, யானை, மரவயிரம். ௪.

கருவி—வாச்சியம், உபகரணம், யாழ், கவசம், கூட்டம், ஆயுதப்பொது, தொடர்பு, மேகம், செயற்கைவடிவப்பொருள், சினேகம், குதிரைக்கலனை, வஸ்திரம், குதிரைச்சம்மட்டி. ௧௩.
சுரிகை—கவசம், உடைவாள். ௨. துவை—பிண்ணாக்கு, தசை, ஒலி.

குருகு—பறவைப்பொது, இளமை, நாரை, கொல்லனுலைமூக்கு, கோழி, கைவளை, வெண்மை, மூலநக்ஷத்திரம், குருக்கத்தி. ௧.
முரசு—உத்தரட்டாதிநக்ஷத்திரம், வாச்சியப்பொது. ௨.
தாளம்—உருட்சி, முத்து. ௨. சார்வு—இடம், பற்று. ௨.

முரண்—வலிமை, பகை. ௨. மொய்ம்பு—புயம், வலிமை. ௨.
உரை—சொல், தேய்தல். ௨. உவா—யானை, இளையோன், பூரணை.
ஞெரேல்—ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு. ௨. நிதி—சங்கநிதி, பதுமநிதி, பொன். ௩.
உரு—நிறம், வடிவு, அட்டை. ௩. ஓதனம்—சோறு, உணவு. ௨.

அரி—கிளி, கடல், திருமால், தேர், தகடு, இந்திரன், காற்று, ஒளி, குதிரை, குற்றம், பன்றி, சிங்கம், பகை, புகை, பாயல், சோலை, வரி, சந்திரன், மரவயிரம், தவளை, குரங்கு, யமன், மூங்கில், நெருப்பு, உட்டுளை, நிறம், பொன், பாம்பு, சூரியன், கண்வரி, பூமாலை, பச்சை,

அரிசி, நெற்கதிர், கள், கூர்மை, வண்டு, ஆயுதம், அரிவாள், அரிதல், சயனம், சக்கராயுதம், வலிமை, விசிப்பலகை, பறை, அரித்தல், சிலம்பினுட்பருக்கைக்கல். ௧௫. (ஆ ௪௭.)
அரிதம்—பச்சைநிறம், திக்கு. ௨. ஆர்ப்பு—ஒலி, நகைப்பு. ௨.

அருவியேமலைச்சார்வாறுமரிதினைத்தாளுமாகும்
அரலையேகனி * வித்தாழிமரல்கழலையுமாமென்ப
கரடமேமதம்பாய்கின்றசுவட்டொடுகாக்கையாகும்
சுரியருன்பெண்மயிர்க்கேசொல்லுமாண்மயிர்க்கும்பேராம். (௩௫)

திருவென்பகமலைசெல்வஞ்சிறப்பொடுமுப்பேர்செப்பும்
பரிவென்பதுன்பமின்பம்பகருமன்பிற்குமப்பேர்
கரையேநீர்க்கரைசேர்வாகுங்கைத்துநீணிதிவெறுப்பாம்
சுரகுருமகவான்றேவமந்திரியிருபேர்சொல்லும். (௩௬)

அரற்றலேயழுகையோசையைதென்பவிரைவுநொய்தாம்
இரத்தஞ்செந்நீர்சிவப்பாமிலாங்கலியலந்தென்காந்தள்
அரக்கென்பமெழுகுகள்ளின்விகற்பமுஞ்சிவப்புமாகும்
அருச்சுனமருதுவெண்மையறிக்கைதானறிவுபற்றும். (௩௭)

அரந்தையென்பதுகுறிஞ்சியாழிசைதுன்பமாகும்
அருந்தலேயருமையுண்டலளித்தருன்கொடுத்தல்காத்தல்
அரங்கமாற்றிடைக்குறைப்பேராடிடஞ்சபையுமப்பேர்
அரங்குபோரிடம்வட்டாடுமிடஞ்சபைமனைவிகற்பாம். (௩௮)

முருந்தென்பமயிலின்றோகைமுதன்முள்ளுத்தவளமாகும்
விருந்தமேகிளையின்கூட்டம்விலங்கின்கூட்டமுமென்றுகும்
குரங்குவானரம்விலங்கின்பொதுமிகுகோணலாகும்
எருந்துரல்கிளிஞ்சிலென்பரிடஞ்செல்வம்விசாலம்வாமம். (௩௯)

ஆரியர்மிலேச்சர்நல்லோராரெனென்பதிடைச்சொலாவாம்
ஆரியேகதவுசோழனழகொடுமேன்மைக்கும்பேர்
காருகர்தந்துவாயர்கடுங்கொலையாளர்வண்ணார்
தாரகாரியென்பகாளிசண்முகன்றுனுமாமே. (௪0)

சார்கூடலொருதாருப்பேர்சான்றோன்மான்றலைநாள்பானு
வேறென்பமரவேர்வேர்வாம்விழைச்சுநல்லிளமைபோகம்
பாராவாரந்தான்வாரிகடற்கரையிருபேர்பன்னும்
சாரணரொற்றரென்பசமண்முனிவர்க்கும்பேராம். (௪௧)

அராகஞ்செந்நிறமேபாலையாழ்முடுகியற்பாட்டாசை
க்ரேணுவேபிடியானைக்குங்கடுங்கொலையானைக்கும்பேர்
கிராணமேகிராணமூக்காங்கிளர்சிறுவட்டிலும்பேர்
கீரமேபிட்டாவகத்திகரியின்பல்லடிமுளைப்பேர்.. (௪௨)

ரகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - ௨0௬.

—oo:o:oo—

* கன்னி - கனியெனவிகாரமாயிற்று.

அருவியென்பது—மலைச்சாரலாறு, தினைத்தாள். ௨.
அரலை—துர்க்கை, விதை, கடல், மரச்செடி, கழலை. ௫.
கரடம்—மதம்பாய்சுவடு, காகம். ௨.
சுரியல்—பெண்மயிர், ஆண்மயிர். ௨.

திரு—திருமகள், செல்வம், சிறப்பு. ௩.
பரிவு—துன்பம், இன்பம், அன்பு. ௩.
கரை—நீர்க்கரை, இடம். ௨. கைத்து—பொன், வெறுப்பு. ௨.
சுரகுரு—இந்திரன், வியாழன். ௨.

அரற்றல்—அழுதல், ஒலி. ௨. ஐது—சீக்கிரம், நொய்மை. ௨.
இரத்தம்—உதிரம்,சிவப்பு. ௨. இலாங்கலி-கலப்பை,தென்னமரம்,
செங்காந்தள். ௩. அரக்கு—மெழுகு,கள்ளின்விகற்பம்,சிவப்பு.
அருச்சுனம்—மருதமரம்,வெண்மை. ௨. அறிக்கை—அறிவு,பற்று.

அரந்தை—குறிஞ்சியாழிசை, துன்பம். ௨.
அருந்தல்--அருமை, உண்டல். ௨. அளித்தல்-கொடுத்தல்,காத்தல்.
அரங்கம்—ஆற்றிடைக்குறை,நாடகசாலை,சபை.௩.அரங்கு—போர்க்களம், வட்டாடுமிடம், சபை, மனையின்விகற்பம். ௪.

முருந்து—மயிலிறகினடிமுள், வெண்மை. ௨.
விருந்தம்—சுற்றத்தின்கூட்டம், விலங்கின்கூட்டம். ௨.
குரங்கு—குரங்கு, விலங்கின்பொது, வளைவு. ௩.
எருந்து-உரல்,கிளிஞ்சில்.௨.இடம்-செல்வம்,விசாலம்,இடப்பக்கம்

ஆரியர்—மிலேச்சர், நல்லோர். ௨. ஆன்—இடைச்சொல், பசு. ௨.
* ஆரி—கதவு, சோழன், அழகு, மேன்மை. ௪.
காருகர்—நெய்வோர், கொலையாளர், வண்ணார். ௩.
தாரகாரி—காளி, முருகக்கடவுள். ௨.

சார்—கூடுதல், ஒருமரம். ௨. சான்றோன்—மிருகசீரிடநக்ஷத்திரம், சூரியன். ௨.
வேர்—மரவேர், வேர்வை. ௨. விழைச்சு—இளமை, புணர்ச்சி. ௨.
பாராவாரம்-கடல்,கடற்கரை.௨.சாரணர்-ஒற்றர்,சமணவிருடிகள்.

அராகம்—செந்நிறம், பாலையாழ்த்திறம்,முடுகியற்பாட்டு,ஆசை.௪.
கரேணு—பெண்யானை, ஆண்யானை. ௨.
கிராணம்—கிரகணம், மூக்கு, சிறுவட்டில். ௩.
கரீரம்—மிடா, அகத்திமரம், யானைப்பல்லடி, முளை. ௪.

* அரரி - கதவு.

# லகரவெதுகை.

புலவர்பாடுவரேகூத்தர்புதனும்பர்கவிகளோவர்
வலவனேவெற்றியாளன்மருவுந்தேர்ப்பாகன்மாயோன்
அலகுநெற்கதிரேயாதிபலகறைநுளம்பெண்ணேதி
அலரிகண்வரியருக்கனழகொருமரம்பூவாமே. (௧)

ஆலமேவடவிருக்கமடுநஞ்சோடலர்பூநீராம்
மூலம்வேர்முதலேயேதுமுதிர்வுறுகிழங்கோர்நாளாம்
ஈரமேருணந்தண்டித்தறிசழ்சரித்திரமுப்பேரே
சாலமேவலைசாலேகமராமரஞ்சபைமதிற்பேர். (௨)

காலம்வைகறைகாலப்பேர்கலமலம்யாழ்பூணுவாய்
சாலகங்காலதர்ப்பேர்தானேபூமொட்டுமாகும்
தாலமுண்கலமேநாவேதராதலம்பனையேநாற்பேர்
ஆலலாடுதலொலிப்பேரறுவைசித்திரைநாளாடை. (௩)

இலம்பகமத்தியாயநுதற்சூட்டென்றிருபேராமே
இலஞ்சிமாவாவிகொப்பூழெயில்குணமகிழேயேரி
பலங்கனிபயன்காய்சேனைபலங்கிழங்கறுபேராகும்
அலங்கலென்பதுபூமாலையசைவொடுதளிரிலங்கல். (௪)

ஒலியென்பதிடியேகாற்றேயோசையென்றாகுமுப்பேர்
ஒலியலேயாறுந்தோலுமுடித்தவாடையும்பைந்தாரும்
கலுழியேகான்யாறென்பகலங்கியநீருமாமே
கலைமதிப்பங்குதூசுகல்விநூலிரலைகாஞ்சி. (௫)

பீலியேயாலவட்டம்பெருவரைகலாபிதோகை
பாலிகையுதடுவட்டம்படைவாளின்முட்டியும்பேர்
வேலியூர்மதில்காவற்பேர்மெத்தைமெல்லணையேசட்டை
தோலிபம்வனப்புவார்த்தைதுருத்திதோற்பலகையைம்பேர். (௬)

பாலையோர்மரநிலம்மந்நிலத்தினிற்பாடலும்பேர்
வேலையேகடலதற்குமேவியகரையேகாலம்
மாலையேயிரவோடந்திமாலிகையொழுங்குநாற்பேர்
சாலையேகுதிரைப்பந்தியறப்புறந்தானுமாமே. (௭)

அல்லிவெள்ளாம்பல்காயாவகவிதழாகமுப்பேர்
அல்லிராவிருளேயென்பவாகமார்புடலுமாமே
சில்லியேவட்டங்கீரைதேருருள்சிள்வீடென்ப
வல்லியாய்ப்பாடிவள்ளிவரைவொடுநிகளமாமே. (௮)

# லகரவெதுகை.

புலவரென்பது-பாடுவோர், கூத்தர், புதன், தேவர், பண்டிதர், கம்மாளர். சு. வலவன்—வெற்றியாளன், தேர்ப்பாகன், திருமால். ங.

அலகு—நெற்கதிர்முதலியன, பலகறை, நுளம்பு, இலக்கம், ஆயுதம்.
அலரி—கண்வரி, சூரியன், அழகு, ஒருமரம், பூ. ரு.

ஆலம்—ஆலமரம், நஞ்சு, மலர்ந்தபூ, நீர். ச.
மூலம்—வேர், முதல், காரணம், கிழங்கு, ஒருநக்ஷத்திரம். ரு.
சீலம்—குணம், தண்டித்தல், சரித்திரம். ங.
சாலம்—வலை, பலகணி, ஆச்சாமரம், கூட்டம், மதில். ரு.

காலம்—விடியற்காலம், பொழுது. உ.
கலம்—கலப்பை, யாழ், ஆபரணம், மரக்கலம். ச.
சாலகம்—பலகணி, பூவரும்பு. உ. தாலம்-உண்கலம், நா, பூமி, பனை.
ஆலல்—ஆடுதல், ஒலி. உ. அறுவை-சித்திரைநக்ஷத்திரம், வஸ்திரம்.

இலம்பகம்—அத்தியாயம், நுதலணிமாலை. உ.
இலஞ்சி—மாமரம், வாவி, கொப்பூழ், மதில், குணம், மகிழமரம், ஏரி.
பலம்—பழம், பயன், காய், சேனை, வலிமை, கிழங்கு. சு.
அலங்கம்—பூமாலை, அசைதல், தளிர், ஒளிசெய்தல். ச.

ஒலி—இடி, காற்று, ஓசை. ங.
ஒலியல்—நதி, தோல், வஸ்திரம், பூமாலை. ச.
கலுழி—கான்யாறு, கலங்கனீர். உ.
கலை—மதியின்பங்கு, சீலை, கல்வி, நூல், கலைமான், மேகலை. சு.

பீலி—சிற்றுலவட்டம், மலை, மயில், மயிற்றோகை. ச.
பாலிகை—உதடு, வட்டம், படைவாளின்முட்டி. ங. வேலி—ஊர், மதில், காவல். ங. மெத்தை—அமளி, சட்டை. உ. தோல்—யானை, * எண்வகைவனப்பிலொன்று, சொல், துருத்தி, தோற்பலகை. ரு.

பாலை—ஒருமரம், ஒருநிலம், பாலைநிலப்பாடல். ங.
வேலை—கடல், கடற்கரை, காலம். ங.
மாலை—இரா, அந்திப்பொழுது, மாலை, ஒழுங்கு. ச.
சாலை—குதிரைப்பந்தி, அறச்சாலை. உ.

அல்லி—வெள்ளாம்பல், காயாமரம், அகவிதழ். ங.
அல்—இரா, இருள். உ. ஆகம்—மார்பு, உடம்பு. உ.
சில்லி—வட்டம், சிறுகீரை, தேருருள், சிள்வீடு. ச.
வல்லி—இடைச்சேரி, படர்கொடி, அளவு, கால்விலங்கு. ச.

---

*எண்வகைவனப்பு:"அம்மையழகுதொன்மைதோல்விருந்-தியைபு புலனிழை பெனவனப் பெட்டே." என்னுஞ் சூத்திரத்தாலறிக.

இல்லில்லாளில்லையென்றலிராசிசாவிடம்வீடாறே
மல்வளம்வலியினோடுமாயவனுடன்முப்பேர்
சில்லையென்பதுபிரண்டைசிள்வீடுதூர்த்தைக்கும்பேர்
ஒல்லையேவிரைவுதொல்லைகடுப்புடன்சிறுபோதாமே. (௯)

வில்லென்பமூலநாளாம்வெஞ்சிலையொளியுமப்பேர்
வல்வலிவிரைவுரூதாமலர்தலையெதிர்தமேனுன்றல்
புல்புலிபுணர்ச்சிபுன்மைபுதல்பனையனுடநாளாம்
கொல்லென்பதசைச்சொலையங்கொலையேவல்வருத்தநாற்பேர். ( )

மால்புதன்பெருமைமேகமாயவன்மயக்கங்காற்றே
ஆலோடலிரண்டுசொல்லுமாமென்பதல்லவும்பேர்
வால்வெண்மைமிகுதிதூய்தாம்வசந்தனேதென்றல்காமன்
சால்புமாட்சிமைசான்றாண்மைசாற்றியவிருபேர்தானே. (௧௧)

வலம்புரிசங்குநந்தியாவர்த்தமோர்மரமுப்பேரே
புலம்பொலிதனிமையச்சம்பொய்யென்பபொக்கம்பொந்தாம்
சிலம்பொலிஞெகிழிகுன்றாஞ்செருந்திபஞ்சரம்வாட்கோரை
விலங்குகாற்றளைகுறுக்குமிருகத்தின்பொதுவுமாமே. (௧௨)

உலகமேதிசைவெண்பூமியுயர்குணஞ்சனமுயர்ந்தோர்
அலவனேஞெண்டுநூளைஞயம்புலிகடகராசி
இலயமேகூத்துங்கூத்தின்விகற்பமுமிருபேரென்ப
வலைவஞ்சப்பெண்வல்லோன்வருடைதான்சிம்புளாடாம். (௧௩)

கலாபமேமணிவடம்மேகலைமயிலிறகுமுப்பேர்
சிலீமுகமுலைக்கண்வண்டுசித்திரபுங்கந்தானும்
சலாகைநன்மணிநாராசஞ்சவளமுமாகுமென்ப
விலோதம்பெண்மயிர்பதாகைவிடமென்பநஞ்சுந்தேளும். (௧௪)

செல்விடியேவன்மேகஞ்சிதலையுமாகுமென்ப
எல்லொளிபகலிகழ்ச்சியிரவுடனிரவியைம்பேர்
சொல்லுரைகீர்த்திநெல்லாந்தொடுத்தலைவளைத்தல்கட்டல்
கல்லொலிமலைகல்லென்பகரண்டநீர்க்காக்கைசெப்பாம். (௧௫)

கலிவஞ்சமொலியேவாரிகடையுகம்வலியைம்பேரே
சிலையொலிமலைகல்வில்லாஞ்செடியொளிசெறிவுதீதாம்
தலமென்பதிலைபுலிப்பேர்தலையிடந்தலைவிண்ணுதி
திலமேமஞ்சாடியெள்ளாந்திலகமஞ்சாடிபொட்டாம். (௧௬)

இல்லென்பது—மனைவி, இல்லையெனல், இராசி, சா, இடம், வீடு.
மல்—வளம், வலிமை, திருமால்கூத்து. ந.
சில்லை—பிரண்டை, சிள்வண்டு, தூர்த்தை. ந.
ஒல்லை—காலவிரைவு, பழமை, வேகம், சிறுபொழுது. ச.

வில்—மூலநக்ஷத்திரம், வில், ஒளி. ந. வல்—வலிமை, சீக்கிரம், சூதாடுகருவி. ந. மலர்தல்—எதிர்தல், தோன்றல். உ.
புல்—புலி, கலவி, அற்பம், புல், பனை, அனுடநக்ஷத்திரம். சு.
கொல்—அசைச்சொல், ஐயம், கொல்லெனேவல், வருத்தம். ச.

மால்—புதன், பெருமை, மேகம், திருமால், மயக்கம், காற்று. சு.
ஆல்—ஆமெனல். க. அல்—அல்லவெனல். க.
வால்—வெண்மை, மிகுதி, சுத்தம். ந. வசந்தன்—தென்றல், மன்மதன். உ. சால்பு—மாட்சிமை, சால்புடைமை. உ.

வலம்புரி—சங்கு, நந்தியாவர்த்தம், ஒருமரம். ந. புலம்பு—ஒலி, தனிமை, பயம். ந. பொய்—அசத்தியம், மரப்பொந்து. உ. சிலம்பு—ஒலி, சிலம்பு, மலை. ந. செருந்தி—செருந்திமரம், வாட்கோரை. உ.
விலங்கு—கால்விலங்கு, குறுக்கு, மிருகத்தின்பொது. ந.

உலகம்—திக்கு, ஆகாயம், பூமி, உயர்குணம், சனம், உயர்ந்தோர். சு.
அலவன்—நண்டு, பூனை, சந்திரன், கடகராசி. ச.
இலயம்—கூத்து, கூத்தின்வேறுபாடு. உ. வலவை—காளியேவற்பெண், வல்லவன். உ. வருடை—எண்காற்புள், ஆடு. உ.

கலாபம்—மணிவடம், பதினாறுகோவைமணி, மயிலிறகு. ந.
சிலீமுகம்—முலைக்கண், வண்டு, அம்பு. ந.
சலாகை—தெய்வவகன்மணி, சலாகை, சவளம். ந.
விலோதம்—கூந்தல், பெருங்கொடி. உ. விடம்—நஞ்சு, *தேள். உ.

செல்—இடி, செல்லெனேவல், மேகம், கறையான். ச.
எல்—பிரகாசம், பகல், இகழ்ச்சி, இரா, சூரியன். ரு.
சொல்—வார்த்தை, புகழ், நெல். ந. தொடுத்தல்-வளைத்தல், கட்டல். ௦
கல்—ஒலிக்குறிப்பு, மலை, கல். ந. கரண்டம்—†நீர்க்காக்கை, செப்பு.

கலி—வஞ்சனை, ஒலி, கடல், கடையுகம், வலிமை. ரு.
சிலை—ஒலி, மலை, கல், வில். ச. செடி—பிரகாசம், நெருக்கம், தீமை.
தலம்—இலை, பூமி. உ. தலை—இடம், சிரசு, ஆகாயம், முதல். ச.
திலம்—மஞ்சாடிமரம், எள்ளு. உ. திலகம்—மஞ்சாடிமரம், பொட்டு.

* நளிவிடம் - தேள். † காரண்டம் - நீர்க்காக்கை.

வல்லைகான்விரைவுமைந்தாம்வடமணிவடமாரும்பு
பல்லமோர்கணக்குப்பாணம்பல்லணங்கரடிநாற்பேர்
மல்லலைவலிவளப்பேர்வாயிலைம்புலன்கடைப்பேர்
முல்லைமல்லிகையேவென்றிமுல்லைநன்னிலங்கற்பாமே. (௧௭)

கோலென்பதிட்டிவாட்கோறுகிலிகைதுலாஞ்சம்மட்டி
சீலமன்னவன்றன்செங்கோதிரட்சியாழ்நரம்போடம்பு
நீலவஞ்சனக்கோலோடுநீளிலந்தையும்பன்னோர்பேர்
காலிலியருணன்பாம்புகாற்றெருடுமுப்பேராமே. (௧௮)

கூலமேபண்ணிகாரம்புனற்கரைகோவிலங்கின்
வாலோடாவணமேபாகல்வரம்பொடுகுரங்கெண்பேரே
காலிடமரக்கால்பிள்ளைக்குறுந்தறிவனங்காம்பூற்றம்
காலனங்குரங்கால்வாய்க்கால்காற்றுத்தேருருள்பன்மூன்றே. ()

கோலமேயழகுபன்றிபாக்குநீர்க்கொழுந்துபீர்க்காம்
மாலியேயிரவிகள்ளாமாந்தலைமரித்தலுண்டல்
வேலையில்படைக்கலப்பேர்வேதண்டங்கைலைவெற்பாம்
சாலிநெற்பொதுவுங்கள்ளுமருந்ததிதானுமாமே. (௨௦)

உலவைகான்மரத்தின்கொம்போடுறுதழைவிலங்கின்கோடாம்
மலைதலைபொரல்குடற்பேர்மந்திரிகுபேரன்வெள்ளி
யலர்பழிவிரிபூநீராமவிர்தலையொளிபீறற்பேர்
எலிபூரநாளெலிப்பேரிரணம்பொன்கடன்மாணிக்கம். (௨௧)

ஆலயநகரங்கோயிலானையின்கூடமுப்பேர்
பாலமேமழுநெற்றிப்பேர்பவித்திரஞ்சுசிதருப்பை
நூலோர்மந்திரிகள்பார்ப்பார்நுவல்கவிப்புலவர்க்கும்பேர்
வேலாவலயந்தான்பூமிவிரிகடலிருபேராமே. (௨௨)

சூலியேகருப்பப்பெண்ணுந்துர்க்கையுஞ்சிவனுமுப்பேர்
வாலியேயலாயுதன்கிட்கிந்தையின்மன்னன்பேராம்
பால்புடையியல்புதிக்குப்பகுத்தல்பாலென்னுமைம்பேர்
ஏலமேமயிர்ச்சாந்தோடேயேலத்தின்பேருமாமே. (௨௩)

லகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் - ௨௨௩.

வல்லையென்பது-பெருங்காடு,காலவிரைவு,வலிமை.௩.வடம்-மணி
வடம், ஆல்மரம், கயிறு. ௩.
பல்லம்—ஒரெண், அம்பு, குதிரைக்கலணை, கரடி. ௪.
மல்லல்—வலிமை, வளம். ௨. வாயில்—ஐம்புலன், வாயில். ௨.
முல்லை—வனமல்லிகை, வெற்றி, முல்லைநிலம், கற்பு. ௪.

கோல்—ஈட்டி, விட்டேறு, எழுதுகோல், துலாம், குதிரைச்சம்
மட்டி, செங்கோல், திரட்சி, யாழின்நரம்பு, பாணம், அஞ்சனக்
கோல், இலந்தை. ௧௧.
காலிலி—சூரியன்றேர்ப்பாகன், பாம்பு, காற்று. ௩.

கூலம்—பலபண்டம், நீர்க்கரை, பசு, விலங்கின்வால், கடைவீதி,
பாகல், வரம்பு, குரங்கு. அ.
கால்—இடம், மரக்கால், புத்திரன், குறுந்தறி, காடு, காம்பு, ஊன்
றுகோல், காலன், முளை, பாதம், வாய்க்கால், காற்று, தேருருள்.

கோலம்—அழகு, பன்றி, பாக்கு, நீரோட்டம், பீர்க்கு. ௫.
மாலி—சூரியன், கள். ௨. மாந்தல்—சாதல், உண்டல். ௨.
வேல்—வேலாயுதம்,ஆயுதப்பொது.௨.வேதண்டம்—வெள்ளிமலை,
மலை. ௨. சாலி—நெற்பொது, கள், அருந்ததி. ௩.

உலவை—காற்று, மரக்கொம்பு, தழை, விலங்கின்கொம்பு. ௪.
மலைதல்—பொருதல்,அணிதல்.௨.மந்திரி—குபேரன், சுக்கிரன்.௨.
அலர்—பழிமொழி,மலர்ந்தபூ,* நீர்.௩.அலிர்தல்-ஒளிசெய்தல்,பீறல்.
எலி—பூரநக்ஷத்திரம்,எலி.௨.இரணம்-பொன், கடன், மாணிக்கம்.

ஆலயம்—நகரம், தேவர்கோயில், யானைக்கூடம். ௩.
பாலம்—மழுப்படை, நெற்றி. ௨.
பவித்திரம்—தூய்மை, தருப்பை. ௨. நூலோர்—மந்திரிகள்,
பிராமணர், புலவர். ௩. வேலாவலயம்—பூமி, கடல். ௨.

சூலி—கருப்பவதி, துர்க்கை, சிவன். ௩.
வாலி—பலதேவன், கிட்கிந்தைமன்னன். ௨.
பால்—பக்கம், குணம், திசை, பங்கு, பால். ௫.
ஏலம்—மயிர்ச்சாந்து, ஏலம். ௨.

---

* மழையல்ல - நீர்.

# வகரவெதுகை.

நவமென்பபுதுமைகேண்மையொன்பதுநற்கார்காலம்
கவனமேகலக்கம்வெம்மைகுதிரையின்கதிபோர்காடாம்
உவணமேகலுழனாகுமுயர்ச்சிக்குங்கழுகுக்கும்பேர்
பவனமேயிராசிபூமிபடர்காற்றுமனையேகோயில். (௧)

புவனநீர்புவியுமாகும்புரத்தலேகாத்தல்வண்மை
நுவணைநூனுண்மைபிண்டிநூலேசாத்திரமுந்தர்க்கம்
தவவென்பமிகுதிகுன்றறந்தேநூல்சாத்திரப்பேர்
சிவநன்மைகுறுணிமுத்தேசீவனேயுயிர்வியாழன். (௨)

இவறலேமறவியாசையென்பபேரிச்சைக்கும்பேர்
இவர்தலேயெழுச்சியாசையேறுதல்சேறன்மேவல்
சுவவென்பபுள்ளின்மூக்குஞ்சுவர்க்கமுஞ்சுண்டனும்பேர்
குவவென்பதிரட்சிமற்றுங்குவிதலேபெருமைக்கும்பேர். (௩)

தவிசென்பதடுக்குமெத்தையிலகடமுப்பேர்தானே
சவிமணிக்கோவைசெவ்வைசாற்றியவனப்புக்காந்தி
நவிர்மேமஞ்ஞைபுன்மைநன்மலையுடனேயுச்சி
நவிலல்சொல்லுதல்பண்ணற்பேர்நவியமேமழுக்கோடாலி. (௪)

கவுசிகம்விளக்குத்தண்டோர்பண்பட்டுக்கடியகோட்டான்
சவுரியேதிருமால்கள்வன்சனியமனினையநாற்பேர்
மவுலியேமுடிகோடீரம்வட்கலென்பதுநாண்கேடாம்
கவலைசெந்தினையோர்வல்லிகவர்வழிதுன்பநாற்பேர். (௫)

சேவகம்வீரம்யானைதுயிலிடந்துயிலுஞ்செப்பும்
சீவனியோர்மருந்துசெவ்வழித்திறத்தோரோசை
ஆவணம்புனர்தம்வீதியங்காடியுரிமைநாற்பேர்
நீவியேதுடைத்தலாடைநெருங்குகொய்சகமுப்பேரே. (௬)

உவளகமதிலோர்பக்கமூருணிபள்ளமுள்ளில்
கவடென்பகப்பியானைக்கழுத்திடுபுரசைக்கும்பேர்
சிவையுமைமரவேர்கொல்லனுலைமுகந்திரியுமோரி
கவையேயாயிலியங்காடுகவர்வழியெள்ளிளங்காய். (௭)

சிவப்பென்பசினமுஞ்செம்மையுடன்சினக்குறிப்புமுப்பேர்
உவப்பென்பமகிழ்ச்சிமேடாமொழுக்கமேவழியாசாரம்
தெவிட்டலேயடைத்தல்கான்றனிறைதலுமொலியுஞ்செப்பும்
துவக்கேதோல்பிணக்கிரண்டாஞ்சுழலேயிடம்விசாரம். (௮)

# வகரவெதுகை.

நவமென்பது—புதுமை, நட்பு, ஒன்பது, கார்காலம். ச.
கவனம்—கலக்கம், வெப்பம், குதிரையின்வேகம், போர், காடு. ரு.
உவணம்—கருடன், உயர்ச்சி, கழுகு. ௩.
பவனம்—இராசி, பூமி, காற்று, வீடு, அரசனில். ரு.

புவனம்—நீர், பூமி. உ. புரத்தல்—காத்தல், கொடுத்தல். உ.
நுவணை—கல்விநூல், நுட்பம், மா. ௩. நூல்—சாத்திரம், பஞ்சிநூல்.
தவ—மிகுதி, குறைதல். உ. தந்து—பஞ்சிநூல், சாத்திரம். உ.
சிவம்—நன்மை, குறுணி, மோட்சம். ௩. சீவன்—உயிர், வியாழன்.

இவறல்—மறதி, ஆசை, வேட்கைப்பெருக்கம். ௩.
இவர்தல்—எழுச்சி, ஆசை, வருதல், செல்லுதல், சேருதல். ரு.
சுவவு—பறவைமூக்கு, சுவர்க்கம், மூஞ்சூறு. ௩.
குவவு—திரட்சி, குவிதல், பெருமை. ௩.

தவிசு—தடுக்கு, மெத்தை, யானைமேற்றவிசு. ச.
சவி—மணிக்கோவை, செவ்வை, அழகு, ஒளி. ச.
நவிரம்—மயில், புன்மை, மலை, உச்சி. ச.
நவிலல்—சொல்லல், செய்தல். உ. நவியம்—மழுப்படை, கோடாலி.

கவுசிகம்—விளக்குத்தண்டு, ஒருபண், பட்டுச்சீலை, கோட்டான். ச.
சவுரி—திருமால், கள்வன், சனி, யமன். ச.
மவுலி—முடி, சடை. உ. வட்கல்—நாணம், கெடுதல். உ.
கவலை—கம்பு, [செந்தினை] ஒருகொடி, கவர்வழி, துன்பம். ச.

சேவகம்—வீரம், யானைதுயிலிடம், நித்திரை. ௩.
சீவனி—மிருதசஞ்சீவனி, செவ்வழித்திறத்திறேசை. உ.
ஆவணம்—புனர்பூசநக்ஷத்திரம், தெரு, கடைவீதி, உரிமை. ச.
நீவி—துடைத்தல், வஸ்திரம், கொய்சகம். ௩.

உவளகம்—மதில், ஒருபக்கம், குளம், பள்ளம், அந்தப்புரம். ரு.
கவடு—மரக்கொம்பு, யானைக்கழுத்திடுகயிறு. உ.
சிவை—பார்ப்பதி, மரவேர், கொல்லனுலைமூக்கு, நரி. ச.
கவை—*ஆயிலியநக்ஷத்திரம், காடு, கவர்வழி, எள்ளிளங்காய். ச.

சிவப்பு—கோபம், சிவப்பு, கோபக்குறிப்பு. ௩.
†உவப்பு—களிப்பு, மேடு. உ. ஒழுக்கம்—வழி, ஒழுக்கம். உ.
தெவிட்டல்—அடைத்தல், உமிழ்தல், நிறைதல், ஒலித்தல். ச.
துவக்கு—தோல், பிணக்கு. உ. சூழல்—இடம், ஆராய்தல். உ.

* கௌவை - ஆயிலியநக்ஷத்திரம். † உகப்பு - உயர்ச்சி.

சேவலேகாவலோடுசேறுபுள்ளாண்முப்பேரே
கேவலந்தனிமைமுத்திகிரமென்பதுபால்கிள்ளை
பூவைசாரிகைகாயாவாம்புலிசிங்கமுழுவைசாந்தே
வாவலஞ்சலிகைப்புள்ளுந்தாவலும்வருக்கலாமே. (௯)

சுவல்பிடர்தோண்மேன்மேடுதூரகதக்குசைநாற்பேரே
கவிமந்திபுலவன்சுங்கன்கழியென்பமிகுதிகாயல்
நவிருளைமருதயாழ்வாணுஞ்சிலெந்திரங்கலப்பை
கவிகையேகுடைகொடைப்பேர்கடிப்பங்காதணிபூண்செப்பாம். ()

மாவண்டுபெருமைபிண்டிவாசிகூப்பிடல்வெறுத்தல்
காவுறுவிலங்குசெல்வங்கருநிறங்கமலைபத்தாம்
கோவிழிபசுநீர்திக்குக்குலிசம்விண்கிரணம்பூமி
ஏவுரைசுவர்க்கம்வேந்தனிரங்கல்வெற்பீரேழாமே. (௧௧)

ஆவியேவாவிநாற்றமாருயிர்புகைமூச்சைம்பேர்
கூவிரந்தேர்தேர்மொட்டாங்குவடுநீண்மலைவெற்புச்சி
காவியேகுவளைகாவிக்கல்லொடுகள்ளுமுப்பேர்
நாவிதன்மஞ்சிகன்கார்த்திகைபூரநாளுமாமே. (௧௨)

ஆவென்பதிரக்கம்பெற்றமாச்சாவோடிசைவியப்பாம்
காவென்பதுலாம்பூஞ்சோலைகாத்தலேருட்சுமைநாற்பேரே
பாவென்பபனுவனூற்பாபரவுதல்பரப்புமாகும்
தாவென்பபகைவருத்தந்தாண்டுதல்வலிகேடைம்பேர் (௧௩)

கவ்வையேபழிச்சொறுன்பங்கள்ளொலியெள்ளிளங்காய்
பவ்வமேகுமிழிவாரிபருமரக்கணுவுவாவாம்
தவ்வைமுன்பிறந்தாளோடுதாயுமூதேவியும்பேர்
நவ்வியேதோணிமானுநன்றென்பபெருமைநன்மை. (௧௪)

அவலேசிற்றுண்டிபள்ளநீர்நிலையாகுமுப்பேர்
செவிலியேவளர்த்தகைத்தாய்முன்பிறந்தவளுஞ்செப்பும்
கவுடமோர்கொடியோர்தேசமிருபெயர்கழறலாமே
சுவடுவச்சிராங்கியோரெண்சுபமென்பதழகுவெண்மை. (௧௫)

பவமென்பசனனம்பாவம்பாவந்தான்வினைதியானம்
சவுரியங்களவுவீரந்தண்மைதான்குளிர்ச்சிதாழ்வு
யவமொருதானியப்பேரென்பநெல்லிற்குமப்பேர்
யவனர்சோனகர்கண்ணாளர்சித்திரகாரரென்ப. (௧௬)

சேவலென்பது—காவல், சேறு, மயிலுமெழாலுமொழிந்தபறவை யாண். ௩. சேவலம்—தனிமை,மோட்சம்.௨.கீரம்—பால்,கிளி.
பூவை—நாகணவாய்ப்புள்,காயா.௨. புலி—சிங்கவிராசி,புலி,நால் வகைச்சாந்திலொன்று. ௩. வாவல்—வௌவால், கடத்தல். ௨.

சுவல்—பிடர், தோண்மேல், மேடு, குதிரைமயிர். ௪.
கவி—குரங்கு, புலவன், சுக்கிரன். ௩. கழி—மிகுதி, காயல். ௨.
நவிர்—ஆண்மயிர், மருதயாழ்த்திறம், வாள். ௩.
நாஞ்சில்—மதிலுறுப்பு, கலப்பை.௨.கவிகை—குடை,கொடை.௨.
கடிப்பம்—காதணி, ஆபரணச்செப்பு. ௨.

மா—வண்டு, பெருமை, மா, குதிரை, அழைத்தல், வெறுப்பு, விலங்கின்பொது, செல்வம், கருநிறம், திருமகள். ௧0.
கோ—கண், பசு, நீர், திசை, வச்சிராயுதம், ஆகாயம், கிரணம்,பூமி, அம்பு, சொல், தேவலோகம், அரசன், இரங்கல், மலை. ௧௪.

ஆவி—குளம், வாசனை, உயிர், புகை, உயிர்ப்பு. ௫.
கூவிரம்—தேர், தேர்க்கொடிஞ்சி.௨.குவடு—மலை,மலையினுச்சி. ௨.
காவி—கருங்குவளை, காவிக்கல், கள். ௩.
நாவிதன்-மயிர்களைவோன்,கார்த்திகைநக்ஷத்திரம்,பூரநக்ஷத்திரம்.

ஆ—இரக்கம், பசு, ஆச்சாமரம், இசை, அதிசயம். ௫.
கா—துலை, சோலை, காத்தல், தோட்சுமை. ௪.
பா—பஞ்சிநூல், தூற்பா, பரவுதல், பரப்பு. ௪.
தா—பகை, துன்பம், தாண்டுதல், வலிமை, கேடு. ௫.

கவ்வை—பழிச்சொல், வருத்தம், கள், ஒலி, எள்ளிளங்காய். ௫.
பவ்வம்—நீர்க்குமிழி, கடல், மரக்கணு, பௌர்ணிமை. ௪.
தவ்வை—தமக்கை, தாய், மூதேவி. ௩.
நவ்வி—தோணி, மான். ௨. நன்று—பெருமை, நன்மை. ௨.

அவல்—ஒருசிற்றுண்டி, பள்ளம், குளம். ௩.
செவிலி—வளர்த்ததாய், முன்பிறந்தாள். ௨. கவுடம்—ஒருகொடி, ஒருதேசம். ௨.
சுவடு—வச்சிராங்கி,ஒருநெல்லிலக்கம்.௨.சுபம்--அழகு,வெண்மை.

பவம்—பிறப்பு, பாவம். ௨. பாவம்—தீவினை, தியானம். ௨.
சவுரியம்—களவு, வீரம். ௨. தண்மை—குளிர்ச்சி, தாழ்வு. ௨.
யவம்—ஒருவகைத்தானியம், நெல். ௨.
யவனர்—சோனகர், கம்மாளர், சித்திரகாரர். ௩.

ஆவரணந்தான்சட்டைதடைமறைப்பரணமாடை
ஏவலேவியங்கோளென்பவெய்தியவறுமைக்கும்பேர்
ஓவியர்சிற்பநூலோரொடுசித்திரகாரரும்பேர்
ஓவிரக்கச்சொனீக்கமோடுநீர்த்தகைகபாடம். (௧௭)

அவ்வையேதாயின்பேருமௌவையோடிருபேராமே
செவ்வியேயோர்பொழுதினோடுசெப்பியபருவமாகும்
தெவ்வமர்பகையிரண்டாந்தீவினைகொடுமைபாவம்
சைவமோர்புராணமீசன்சமயத்தின்விகற்புமாமே. (௧௮)

வகரவெதுகை முற்றிற்று.

ஆ. விருத்தம் - ௨௪௭.

# ழகரவெதுகை.

விழவென்பமிதுனராசிவிளங்குமுற்சவமுமாகும்
கழையென்பபுனர்தமூங்கில்கரும்பெனவிரும்புமுப்பேர்
கழல்கழங்கொடுசெருப்புக்காலணிகாலினாற்பேர்
கிழமைமூப்புரிமைபண்பாங்கிழிநிதிப்பொதிகீறுமே. (௧)

சூழியேசுனையும்வெய்யதும்பியின்முகபடாமும்
பாழியேவலிவிலங்கின்படுக்கையூர்பற்றிலாரூர்
நாழியேயளக்குநாழிநாழிகைபூரட்டாதி (௨)
ஆழிமோதிரமேநேமியலைகடல்கரையேவட்டம்.

இழுமெனலோசையென்பவினிமையுமியம்புமப்பேர்
விழுமமேசிறப்புச்சீர்மையிடும்பையும்விதித்தபேரே
தொழுவென்பதுழலைதானேயிரேவதிநாளுஞ்சொல்லும் (௩)
செழுமையேவளங்கொழுப்பாந்தேனென்பநறவும்வண்டும்.

கழுதுபேய்பரண்வண்டென்பகயவுகீழ்பெருமைமென்மை
அழுவமேபரப்புநாடுமழுங்கலேயிரங்கல்கேடாம்
கழுமல்பற்றொடுமயக்கங்காதலேயாசைகோறல் (௪)
கழிதலென்பதுவேசாதல்கடந்திடன்மிகுதிமுப்பேர்.

மாழைபொன்னுலோகக்கட்டிமடமையோர்புளிமாவோலை
கூழையேசிறகுமாதர்கூந்தல்வெம்படையுறுப்பாம்
தாழைகேதகைதெங்காகுஞ்சாகினிசேம்புகீரை (௫)
ஊழ்முறைவெயில்பகைப்பேரூசியேசூசியாணி.

ஆவரணமென்பது—சட்டை, தடுத்தல், மறைப்பு, கோட்டை, வஸ்திரம். ௫. ஏவல்—வியங்கோள், தரித்திரம். ௨.
ஓவியர்—சிற்பாசாரியர், சித்திரகாரர். ௨.
ஓ—இரக்கச்சொல், நீங்குதல், மடையடைக்குங்கதவு. ௩.

அவ்வை—தாய், ஔவையார். ௨.
செவ்வி—அழகு, காலம், பருவம். ௩.
தெவ்—போர், பகை. ௨. தீவினை—கொடுமை, பாவம். ௨.
சைவம்—ஒருபுராணம், உட்சமயங்களாறனுளொன்று. ௨.

# ழகரவெதுகை.

விழவென்பது—மிதுனராசி, திருவிழா. ௨.
கழை—புனர்பூசநக்ஷத்திரம், மூங்கில், கரும்பு. ௩.
கழல்—கழற்காய், செருப்பு, காலணி, கால். ௪.
கிழமை—முதுமை, உரிமை, குணம். ௩. கிழி—நிதிப்பொதி, கீறு. ௨.

சூழி—சுனை, யானைமுகபடாம். ௨.
பாழி—வலிமை, விலங்கின்படுக்கை, ஊர், பகைவரூர். ௪.
நாழி—அளக்குநாழி, நாழிகை, பூரட்டாதிநக்ஷத்திரம். ௩.
ஆழி—மோதிரம், சக்கராயுதம், கடல், கடற்கரை, வட்டம். ௫.

இழுமெனல்—அனுகரணவோசை, இனிமை. ௨.
விழுமம்—சிறப்பு, சீர்மை, துன்பம். ௩.
தொழு—தொழுமரம், இரேவதிநக்ஷத்திரம். ௨.
செழுமை—வளம், [மாட்சிமை] கொழுப்பு. ௨. தேன்—கள், வண்டு.

கழுது—பேய், பரண், வண்டு. ௩. கயவு-கீழ்மை, பெருமை, மென்மை.
அழுவம்—பரப்பு, நாடு. ௨. அழுங்கல்—இரங்கல், கேடு. ௨.
கழுமல்—பற்றுதல், மயக்கம். ௨. காதல்—ஆசை, கொல்லுதல். ௨.
கழிதல்—சாதல், கடத்தல், மிகுதி. ௩.

மாழை—பொன், உலோகக்கட்டி, அறிவின்மை, அழகு, புளிமா, ஓலை. ௩.
கூழை—சிறகு, பெண்மயிர், படையுறுப்பு.
தாழை—தாழை, தென்னமரம். ௨. சாகினி—சேம்பு, சிறுகீரை. ௨.
ஊழ்—முறை, வெய்யில், புகை. ௩. ஊசி—குசி, எழுத்தாணி. ௨.

உழையென்பதிடமான்யாழினோர்நரம்பிற்கும்பேராம்
குழையென்பதளிர்துவாரங்குண்டலஞ்சேறுநாற்பேர்
விழைவென்பபுணர்ச்சிகாதல்வெறுக்கையென்பதுபொன்செல்வம்
வழிமரபிடம்பின்மார்க்கம்வழங்கலேகொடைபுலாவல். (௬)

ஈழம்பொன்கள்ளோர்தேசமெல்லையேயளவைவெய்யோன்
மேழகங்கவசமாடாம்வேளாண்மைகொடையேமெய்ம்மை
காழியர்வண்ணாருப்புவாணிகரிருபேர்காட்டும்
வேழமேகரும்பியானைகொறுக்கைச்சிவேணுநாற்பேர். (௭)

கூழென்பதுணவும்பொன்னும்பயிரென்றுங்கூறுமுப்பேர்
காழென்பமணியின்கோவைகற்பரல்சேகுவித்தாம்
யாழென்பமிதுனம்வீணையிரலைநாளாதிரைப்பேர்
கீழென்பதிடங்கீழ்சாதிகீழ்த்திசைகயமைநாற்பேர். (௮)

கோழியேகுருகோரூராங்குய்யமேமறைவுயோனி
மூழியேவாவிசோறோடகப்பையுமொழியுமுப்பேர்
மூழையேயகைப்பைசோறுமுறஞ்சுளகொடுவிசாகம்
நூழிலேகோறல்யானைநுண்கொடிகொடிக்கொத்தான்பேர். (௯)

தொழுதிபுள்ளொலிகூட்டப்பேர்தொறுநிரையடிமைகூட்டம்
கெழுவுதன்மயக்கம்பற்றாங்கிலாலங்கறைநீர்காடி
குழறுளியுடைப்பொருட்பேர்மயிரிசைக்குழன்முப்பேரே
அழிவென்பவீதல்கேடாமவிநெய்சோறமரருண்டி. (௧௦)

ழகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - ௨௱௭.

# ளகரவெதுகை.

குளநுதல்கரும்பின்கட்டிகுட்டமுமிட்டநாமம்
களமமர்க்களமேகண்டங்களாவிடங்கறுப்பேயில்லாள்
வளமைமாட்சிமைகொழுப்பாம்வாருணங்கடலுமேற்கும்
விளவென்பகமர்விளாவாம்விம்மலேங்குதலொலித்தல். (௧)

முளரியேவிறகுசெந்தீமுண்டகஞ்சிறுமைகாடாம்
விளரென்பதிளமைதானேவெளுப்பொடுகொழுப்புமாகும்
களபமேயானைக்கன்றுகமழ்சாந்துகலவைமுப்பேர்
உளர்தலேசிதறலாகுந்தடவலுமுரைக்கற்பாற்றே. (௨)

உழையென்பது—இடம், மான், யாழினோர்நரம்பு. ௩.
குழை—தளிர், துவாரம், குண்டலம், சேறு. ௪. விழைவு—புணர்ச்சி,ஆசை. ௨. வெறுக்கை—பொன்,செல்வம். ௨. வழி—மரபு, இடம்,பின், வழி. ௪. வழங்கல்—கொடுத்தல், உலாவல் ௨.

ஈழம்—பொன், கள், சிங்களதேசம்.௩.எல்லை—அளவு, சூரியன்.௨.
மேழகம்—கவசம், ஆடு. ௨. வேளாண்மை—கொடை,உண்மை.௨.
காழியர்—வண்ணார், உப்புவாணிகர். ௨.
வேழம்—கரும்பு, யானை, கொறுக்கை, மூங்கில். ௪.

கூழ்—உணவு, பொன், பயிர். ௩.
காழ்—மணிவடம், பருக்கைக்கல், மரவயிரம், விதை. ௪.
யாழ்—மிதுனராசி, வீணை, அச்சுவினிநக்ஷத்திரம், திருவாதிரை நக்ஷத்திரம். ௪. கீழ்—இடம், கீழ்சாதி, கிழக்கு, கீழ்மை. ௪.

கோழி—கோழி, உறையூர். ௨. குய்யம்—மறைவு, பெண்குறி. ௨.
மூழி—குளம்,சோறு,அகப்பை. ௩. மூழை—அகப்பை,சோறு.௨.
முறம்—சுளகு, விசாகநக்ஷத்திரம் ௨.
ஞாழில்—கொல்லல், யானை, படர்கொடி, கொடிக்கொத்தான். ௪.

தொழுதி—பறவையிரெலி, கூட்டம், [பறவைக்கூட்டம்.] ௨.
தொறு—பசுக்கூட்டம், அடிமை, கூட்டம். ௩. கெழுவுதல்—மயக்கம், பற்று. ௨. கீலாலம்—இரத்தம், நீர், கஞ்சி. ௩.
குழல்—துளையுடைப்பொருள், மயிர், இசைக்குழல். ௩.
அழிவு—சாதல், கேடு. ௨. அவி—நெய், சோறு, தேவருணவு. ௩.

# ளகரவெதுகை.

குளமென்பது—நெற்றி, சர்க்கரை, தடாகம். ௩.
களம்—போர்க்களம், கழுத்து, களாச்செடி,நஞ்சு,கறுப்பு,மனைவி.
வளமை—மாட்சிமை,கொழுப்பு.௨. வாருணம்—கடல்,மேற்கு.௨.
விளவு—விலப்பிளப்பு,விளாமரம்.௨.விம்மல்—அழுதல்,ஒலித்தல்.

முளரி—விறகு, நெருப்பு, தாமரை, நுண்மை, காடு. ௫.
விளர்—இளமை, வெண்மை, கொழுப்பு. ௩.
களபம்—யானைக்கன்று, சாந்து, கலவைச்சாந்து. ௩.
உளர்தல்—சிந்தல், தடவல். ௨.

குளிர்மழுநண்டிருத்தல்குளிர்கவண்முழாமீன்றுரை
நளிர்குளிர்பெருமைஞெண்டுநாட்டியசெறிவுநாற்பேர்
ஒளிவட்டந்தான்கண்ணாடிசக்கரமிருபேரோதும்
இளியிசையிசித்தலெல்லேயிணங்குதலுரித்தற்கும்பேர். (௩)

பளிதமென்பதுகர்ப்பூரம்பல்லமென்கணக்குமாகும்
வெளிலணில்வேழத்தம்பம்வெண்டயிர்கடைதறிப்பேர்
களிறென்பவத்தநாளேகறையடிசுறவுபன்றி
ஒளியிருசுடரேதீயேயொளிப்பிடம்புகழுமாமே. (௪)

பாளிதஞ்சோறுகண்டசருக்கரைகுழம்புபட்டாம்
ஒளியேயானைக்கூடமொழுங்கென்றும்வழங்குறாலே
கோளிதோன்மரமேபத்திகொள்வோனுங்கொழிஞ்சியும்பேர்
மீளிதிண்ணியன்வலிப்பேர்மேன்மகன்பெருமைக்கும்பேர். (௫)

அளைதயிர்முழைபுற்றுக்குமசனியேயுருமுவச்சிரம்
உளைபரிமீதுகட்டுமயிர்பிறமயிருமோதும்
கிளையென்பதோர்பண்மூங்கில்கேளொடுகிளைத்தலும்பேர்
இளைபுயலிளமைவேலிதலைக்காவலிவைநாற்பேரே. (௬)

உள்ளலேநினைவுள்ளான்பேருழப்பென்பவலியுற்சாகம்
ஞெள்ளலேபள்ளமேன்மைநீண்டவீதியுமுப்பேரே
எள்ளலேநகையிழிப்பாம்யாமந்தெற்கிரவுசாமம்
ஞொள்கல்சோம்பிளைத்தலச்சக்குறிப்பென்றுநுவலற்பாலாம். (௭)

வள்ளென்பகாதுகூர்மைவலிவளம்வாளேவாராம்
வெள்ளையேமுசலிசங்குவெளிறுவெள்ளாடுவெண்பா
கள்வனேமுசுஞெண்டியானைகருநிறத்தவனேசோரன்
பள்ளியூர்சிற்றூர்கோயில்பாயல்கண்படைநீத்தோரூர். (௮)

விளக்கொளிசோதிநாளாம்வேள்வியேமகநாளீதல்
அளக்கரேபுடவிசேறுப்பளங்கடல்கார்த்திகைப்பேர்
திளைத்தலேயனுபவித்தல்செறிதலேநிறைதன்முப்பேர்
இளைத்தலேயிளைப்பிரங்கலென்றூழேயிரவிவெய்யில். (௯)

பிள்ளையேவடுகன்காக்கைபெட்டன்விரும்பல்வேண்டல்
மள்ளரேமள்ளர்வீரர்மறவர்க்குங்குறவர்க்கும்பேர்
உள்ளமேமுயற்சிநெஞ்சாமுஞற்றிழுக்கொடுதாளாண்மை
வள்ளியேவல்லிசெங்கைவளைபுனையிழைமுப்பேரே. (௰)

குளிரென்பது—மழுப்படை, நண்டு, தங்குதல், குளிர்ச்சி, கவண், முழவு, மீனொழுங்கு. ௭. நளிர்-குளிர்ச்சி,பெருமை,நண்டு, நெருக்கம். ௪. ஒளிவட்டம்-கண்ணாடி,சக்கராயுதம்.௨. இளி-ஏழிசையினொன்று,சிரித்தல், இகழ்ச்சிக்குறிப்பு, இணங்குதல்,உரித்தல்.

பளிதம்—கருப்பூரம், பல்லமென்னுமோரெண். ௨.
வெளில்—அணில், யானைத்தூண், தயிர்கடைதறி. ௩.
களிறு—அத்தநக்ஷத்திரம், யானை சுறு பன்றி இவற்றினாண். ௨.
ஒளி—சூரியன், சந்திரன், நெருப்பு, ஒளிப்பிடம், புகழ். ௫.

பாளிதம்—சோறு, கண்டசர்க்கரை, குழம்பு, பட்டுவர்க்கம். ௪.
ஓளி—யானைக்கூடம், ஒழுங்கு. ௨.
கோளி—ஆலமரம்,அத்திமரம்,கொள்வோன்,பூவாதுகாய்க்குமரம்
மீளி—திண்ணியன், வலிமை, மேன்மையுள்ளோன், பெருமை. ௪.

அளை—தயிர், மலைக்குகை, புற்று. ௩.
அசனி—இடி, வச்சிராயுதம். ௨. உளை—குதிரைக்கணிமயிர், பிறமயிர். ௨. கிளை—ஒருபண், மூங்கில், உறவு, கிளைத்தல். ௪.
இளை—மேகம், இளமை, வேலி, தலைக்காவல். ௪.

உள்ளல்—நினைத்தல், உள்ளான்குருவி. ௨. உழப்பு—வலிமை, உற்சாகம். ௨. ஞெள்ளல்—பள்ளம், மேன்மை, வீதி. ௩. எள்ளல்—நகைப்பு, இகழ்ச்சி. ௨. யாமம்—தென்றிசை,இரா, சாமம். ௩. ஞொள்கல்—சோம்பல்,இளைத்தல்,அச்சக்குறிப்பு.௩.

வள்-காது,கூர்மை,வலிமை,வளம்,வாள்,வார்.௬.வெள்ளை-பலபத்திரன்,சங்கு,வெண்மை,வெள்ளாடு,வெண்பா.௫.கள்வன்-முசு,நண்டு, யானை, கரியன், திருடன். ௫. பள்ளி—மருதநிலத்தூர், [ஊர்] சிற்றூர், கோயில், மக்கட்படுக்கை, நித்திரை, முனிவரிருப்பிடம்.

விளக்கு—தீபம், சோதிநக்ஷத்திரம். ௨. வேள்வி—யாகம், மகநக்ஷத்திரம், கொடை. ௩.
அளக்கர்—பூமி, சேறு, உப்பளம்,கடல், கார்த்திகைநக்ஷத்திரம்.௫.
திளைத்தல்—அனுபவித்தல், நெருங்கல், நிறைதல். ௩.
இளைத்தல்—மெலிவு, இரங்கல். ௨. என்றூழ்—சூரியன்,வெய்யில்.

பிள்ளை—வைரவக்கடவுள், காக்கை. ௨. பெட்டல்—விரும்பல் வேட்கைப்பெருக்கம். ௨.
மள்ளர்—உழவர், படைவீரர், திண்ணியர், குறிஞ்சிநிலமாக்கள்.௪.
உள்ளம்—முயற்சி, மனம். ௨. உஞற்று—இழுக்கு, முயற்சி. ௨.
வள்ளி—படர்கொடி, கைவளை, ஆபரணம். ௩.

காளமேயூதுகொம்புகழுநஞ்சுகருமைநாற்பேர்
வேளாறுமுகன்காமன்பேர்விபூதியூன்கொடுமைசெல்வம்
கோளிடையூறென்பான்கோள்கொலைகுணம்வலிபொய்கொள்கை
ஞாளியேசுணங்கன்கள்ளானான்முகனருகன்வேதா. (௧௧)

களரென்பமிடறுகோட்டிகளர்நிலங்கருமைநாற்பேர்
தளமிலைபடையேசாந்துதாழிபூவிதழேமேடை
அளகமேமாதரோதியறன்மயிர்க்குழற்சிமுப்பேர்
தளைவிலங்கொடுதொடர்ச்சிதாட்சிலம்பாண்மயிர்ப்பேர். (௧௨)

புள்ளுவண்டவிட்டம்புட்பேர்புளகர்தர்ப்பணங்குமிழ்ப்பாம்
கள்ளென்பகளவுகள்ளாங்கனலிதீயிரவிபன்றி
அள்ளூரஞ்செறிவுகாதேடயிலும்பற்றிரும்புமாகும்
வெள்ளமெண்மிகுதிமுந்நீர்வேணுவேமூங்கில்வில்வாள். (௧௩)

வாளென்பதொளிகட்கப்பேர்வல்லரிதளிர்பைங்காயாம்
கூளிபேய்தமரேருசுகுறள்படைத்தலையன்கூட்டம்
தோளென்பபுயங்கையாகுஞ்சுந்தரியுமையேசுண்டன்
தேளென்பதனுடநாளேவிருச்சிகந்தெறுக்காலும்பேர். (௧௪)

அளியென்பநறவும்வண்டுமன்பொடுகொடையுநாற்பேர்
அளவையேயெல்லைநாளாமாசாரந்துகிறாமாரி
விளரியேயிளமையாழிலோர்நரம்பியாழ்நீள்வேட்கை
வளமென்பபதவியும்பல்பண்டமும்வனப்புமாகும். (௧௫)

வள்ளமேமரக்கால்வட்டில்கடிகைவட்டிற்குமப்பேர்
வள்ளூரம்பசுவிறைச்சிவரைந்தவூன்பொதுவுமாகும்
அள்ளலேநரகஞ்சேறுமம்புநீர்புயல்வேயேவாம்
வெள்ளிலேவிளாப்பாடைப்பேர்வேலன்வேள்வெறியாட்டாளன்.

காளையேயெருதுபாலைக்கதிபனல்லிளமையோன்பேர்
கூளியர்நண்பர்பூதகணவீரர்கொலைத்திறத்தோர்
கோளகைவட்டமோடுமண்டலிப்பாம்புங்கூறும்
கேள்வியேசெவிகல்விப்பேர்கிடங்ககழ்வாவியாமே. (௧௭)

இளமையேதன்மைகாமமிளமையின்பருவமுப்பேர்
அளறென்பநரகஞ்சேறுமக்காரம்புடைவைவெல்லம்
கிளரென்பகிரணத்தோடுகிளர்கோட்டுமலர்ப்பூந்தாதாம்
களரிபோர்க்களங்காடென்பகருமஞ்செய்யிடமுமாமே. (௧௮)

ளகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் ௨௭௫.

காளமென்பது-ஊதுகொம்பு,சூலம்,நஞ்சு,கறுப்பு.௪. வேள்-குமா
ரக்கடவுள்,மன்மதன்.௨.விபூதி-* தசை,பொல்லாங்கு,செல்வம்.
கோள்-இடையூறு,நவக்கிரகம்,கொலை,குணம்,வலிமை,பொய்,கொ
ள்கை. ௭. ஞாளி—நாய்,கள். ௨. நான்முகன்-அருகன்,பிரமன்.

களர்—கழுத்து, கூட்டம், களர்நிலம், கறுப்பு. ௪.
தளம்—இலை, சேனை, சாந்து, சாடி, பூவிதழ், உபரிகை. ௬.
அளகம்—பெண்மயிர், நீர், மயிர்க்குழற்சி. ௩.
தளை—விலங்கு, தொடர்பு, சிலம்பு, ஆண்மயிர். ௪.

புள்—வண்டு, அவிட்டநக்ஷத்திரம், பறவை. ௩.
புளகம்—கண்ணாடி, மயிர்சிலிர்த்தல். ௨.
கள்—களவு, கள். ௨. கனலி—நெருப்பு, சூரியன், பன்றி. ௩.
அள்—வலிமை, நெருக்கம், காது, கூர்மை, பற்றிரும்பு. ௫.
வெள்ளம்—ஓரெண், மிகுதி,கடல். ௩. வேணு-மூங்கில்,வில்,வாள்.

வாள்—ஒளி, வாளாயுதம். ௨. வல்லரி—தளிர், பசுங்காய். ௨.
கூளி—பேய்,உறவு,எருது,குற்றம்,பூதம்,படைத்தலைவன், கூட்டம்.
தோள்—புயம், கை. ௨. சுந்தரி—துர்க்கை, † மூஞ்சூறு. ௨.
தேள்—அனுடநக்ஷத்திரம், விருச்சிகராசி, தேள். ௩.

அளி—கள், வண்டு, அன்பு, கொடை. ௪.
அளவை—எல்லை, நாள். ௨. ஆசாரம்—சீலை, தூய்மை,பெருமழை.
விளரி—இளமை,யாழிலோர்நரம்பு,நெய்தனிலத்தியாழ்,வேட்கை
ப்பெருக்கம். ௪. வளம்—பதவி, பலபண்டம், அழகு. ௩.

வள்ளம்—மரக்கால், வட்டில், நாழிகைவட்டில். ௩. வள்ளூரம்—
பசுவினிறைச்சி, தசைப்பொது.௨. அள்ளல்—நரகம், சேறு.௨.
அம்பு—நீர், மேகம், மூங்கில், பாணம்.௪.வெள்ளில்—விளாமரம்,
பாடை. ௨. வேலன்—முருகக்கடவுள், வெறியாட்டாளன்.௨.

காளை—எருது, பாலைநிலத்தலைவன், கட்டிளமையோன். ௩.
கூளியர்—சினேகர், பூதகணவீரர், கொலையாளிகள். ௩.
கோளகை—வட்டம், மண்டலிப்பாம்பு. ௨.
கேள்வி—காது, கல்வி. ௨. கிடங்கு—அகழ், வாவி. ௨.

இளமை—தாழ்மை, காமம், இளமைப்பருவம். ௩.
அளறு—நரகம், சேறு. ௨. அக்காரம்—புடைவை, வெல்லம். ௨.
கிளர்—ஒளி, பூந்தாது. ௨.
களரி—போர்க்களம், காடு, தொழில்செய்யிடம். ௩.

—oo:⁂:oo—

* பூதி - தசை. † சுசுந்தரி - மூஞ்சூறு.

# றகரவெதுகை.

இறைவையேபுட்டிலேணியென்பகூர்மிகுதிகூர்மை
குறடென்பபலகைதிண்ணைகொண்மூவென்பதூவிண்மேகம்
புறவமோர்புள்ளுங்காடுமுல்லைநன்னிலனும்போற்றும்
புறணியேகுறிஞ்சிமுல்லைநிலத்தொடுபுறமுந்தோலும். (௧)

மறஞ்சினம்பிணக்குக்கூற்றுமலைந்தசேவகமுமாகும்
குறிஞ்சியோரிசையோர்பண்ணேகுறிஞ்சிசெம்முள்ளிக்கும்பேர்
பிறங்கலேமிகுதிவெற்புநிறைவொலிபெருமையைம்பேர்
குறும்பொறைகுன்றுகாடுகுறிஞ்சிநன்னிலத்தூர்முப்பேர். (௨)

தாறுவிற்குதையேயெல்லைதாழ்மரக்குலைமுட்கோலாம்
சேறென்பகும்பிசாரந்தித்திப்புவிழவுகள்ளே
ஊறென்பதீமைதீண்டலுயிர்க்கொலையிடையூறென்ப
ஏறிடிமுதலுளாகுமிடபமோடெருதுமப்பேர். (௩)

சிறையேவேறிடமாம்புள்ளின்சிறகொடுகாவலும்பேர்
கறையிறுத்திடலிரத்தங்கறுப்புரல்விடம்பேரைந்தே
முறையென்பகோசமேயூழ்முறைமையிம்முப்பேரென்ப
பிறழ்தலேநடுக்கம்வேறுபெயர்தலோடொளிவிடற்பேர். (௪)

ஏற்றலேகோடலென்பவெதிர்ந்துபோர்செய்தலும்பேர்
ஆற்றலேபொறைமுயற்சியதிகமேவலியேஞானம்
தோற்றலேவலிபிறப்புத்தோன்றுதல்புகழேநாற்பேர்
போற்றலேபுகழ்தலோம்பல்புறமென்பமுதுகுவீரம். (௫)

அற்றமேமறைவுஞ்சோர்வுமவகாசந்தானுமாகும்
குற்றல்குற்றுதல்பறித்தல்குரையென்பதிடைச்சொலோசை
எற்றென்பதிரக்கமொத்தலெறிதலெத்தன்மைத்தென்றல்
கொற்றியேதுர்க்கைநாமங்கோவிளங்கன்றுங்கூறும். (௬)

உறழ்வென்ப * புணர்வுகாலஞ்செறிவிடையீடொப்பைம்பேர்
உறவியேயெறும்புநீரூற்றுலைக்களமுறவுயிர்ப்பேர்
உறுகணென்பதுவேதுன்பமுறுபயமிடிநோய்நாற்பேர்
உறுவனேமுனிபுத்தன்பேருலக்கையேயுரோங்கலோணம். (௭)

விறப்பென்பசெறிவுவெற்றிவெருவுதல்பொருதனாற்பேர்
பொறுத்தலேபொறைதாங்கற்பேர்புந்திதான்புதனேபுத்தி
இறுத்தலேயொடித்தறங்கலியம்புதன்முப்பேரென்ப
கறுப்பிருள்சினக்குறிப்பாங்கன்றுகைவளைகன்றுமே. (௮)

* உணர்வு என்றும் பாடம்.

# றகரவெதுகை.

இறைவையென்பது—கூடை, ஏணி. ௨. கூர்—மிகுதி. கூர்மை. ௨.
குறடு—பலகை, திண்ணை. ௨. கொண்மூ—ஆகாயம், மேகம். ௨.
புறவம்—ஒருபறவை, காடு, முல்லைநிலம். ௩.
புறணி—குறிஞ்சிநிலம், முல்லைநிலம், புறம், தோல். ௪.

மறம்—கோபம், பிணக்கு, யமன், வீரம். ௪.
குறிஞ்சி—ஓரிசை, ஒருபண், குறிஞ்சிநிலம், செம்முள்ளி. ௪.
பிறங்கல்—மிகுதி, மலை, நிறைவு, ஒலி, பெருமை. ௫.
குறும்பொறை—மலை, [சிறுமலை] காடு, குறிஞ்சிநிலத்தூர். ௩.

தாறு—விற்குதை, அளவு, மரக்குலை, முட்கோல். ௪.
சேறு—சேறு, சாரம். இனிமை, திருவிழா, கள். ௫.
ஊறு—தீமை, தொடுதல், கொலை, இடையூறு. ௪.
ஏறு—இடி, அச்சுவினிநக்ஷத்திரம், இடபராசி, எருது. ௪.

சிறை—வேறிடம், பறவையினிறகு, காவல். ௩.
கறை—குடியிறை, இரத்தம், கறுப்பு, உரல், நஞ்சு. ௫.
முறை—புத்தகம், ஊழ், முறைமை. ௩.
பிறழ்தல்—நடுக்கம், வேறுதல், ஒளிசெய்தல். ௩.

ஏற்றல்—கொள்ளல், எதிர்த்துப்போர்செய்தல். ௨.
ஆற்றல்—பொறை, முயற்சி, மிகுதி, வலிமை, ஞானம். ௫.
தோற்றல்—வலிமை, பிறத்தல், தோன்றுதல், புகழ். ௪.
போற்றல்—புகழ்தல், பாதுகாத்தல். ௨. புறம்—முதுகு, வீரம். ௨.

அற்றம்—மறைவு, சோர்வு, சமயம். ௩.
குற்றல்—குற்றுதல், பறித்தல். ௨. குரை—ஓரிடைச்சொல், ஒலி. ௨.
எற்று—இரக்கக்குறிப்பு, அடித்தல், எறிதல், எத்தன்மைத்தென்றல்.
கொற்றி—தூர்க்கை, பசுவினிளங்கன்று. ௨.

உறழ்வு—புணர்ச்சி, காலம், நெருக்கம், இடையீடு, உவமை. ௫.
உறவி—எறும்பு, ஊற்று, உலைக்களம், உறவு, உயிர். ௫.
உறுகண்—துன்பம், அச்சம், தரித்திரம், வியாதி. ௪. உறுவன்—முனிவன், அருகன். ௨. உலக்கை—உலக்கை, திருவோணநக்ஷத்திரம்.

விறப்பு—நெருக்கம், வெற்றி, அச்சம், போர். ௪.
பொறுத்தல்—பொறுமை, சுமத்தல். ௨. புந்தி—புதன், புத்தி. ௨.
இறுத்தல்—ஒடித்தல், தங்குதல், சொல்லுதல். ௩.
கறுப்பு—கருமை, கோபக்குறிப்பு. ௨. கன்று—கைவளை, கன்று. ௨.

பொறிமரக்கலமேசெல்வம்பூமகளெந்திரங்கள்
அறிவிலாஞ்சனையெழுத்தோடைம்பொறிவரியொன்பான்பேர்
வெறிவெருவுதல்கலக்கம்வெறியாட்டுவெட்டநாற்றம்
குறியபேய்துருவைகள்ளுக்கூறுநோயொன்பதாமே. (௯)

உறைபொருண்மருந்துவாழ்நாளுணவுவெண்கலமேகாரம்
எறிபடைக்கலத்தின்கூடேயெண்குறித்திறுதிபெய்தல்
நறியபாற்பிரையிடைச்சொனகரநீர்த்துளியீராறும்
அறைமுழைமோதல்பாறைதிரைசிற்றின்மொழியாறுமே. (௧௦)

இறைசிவன்கடன்வேந்தன்கையிறையிறுப்பிறைசிறந்தோன்
சிறுமைபுள்ளிறகுதங்கல்சென்னிகூனிறப்பீராறே
உறையுளென்பதுநாடோராமுறுதியேநன்மைகல்வி
பொறைமலைதுறுகல்பாரம்பொறைசுமைகருப்பம்பூமி. (௧௧)

இறும்புதாமரையின்பூவேமலைகுறுங்காடுமேற்கும்
இறும்பூதுதகைமைவெற்போடதிசயங்குழைதூறென்றும்
கறங்கலேசுழலலோசைகதிரென்பதிரவிசோதி
பறம்புயர்மலைமுலைப்பேர்பாய்மாவேகுதிரைவேங்கை. (௧௨)

கூற்றென்பதியமன்சொல்லாங்கோமானேமூத்தோன்பன்றி
நாற்றநாறுதலென்றற்பேர்நனவென்பதகலந்தேற்றம்
ஊற்றென்பதூன்றுகோலுமுறவியுமிருபேரோதும்
நோற்றலேபொறைதவப்பேர்நுணங்கென்பநுண்மைதேமல். (௧௩)

கற்பமேபிரமன்வாழ்நாள்கற்பகதருசுவர்க்கம்
பொற்பென்பதழகினோடுபொலிவுமொப்பனையுமாகும்
பற்பமேபதுமந்தூளாம்பழங்கணேதுன்பமோசை
உற்கைதாரகைதீக்கொள்ளியுண்டிதான்புசித்தல்சோறே. (௧௪)

முற்றல்காழ்கோடன்மூப்புமுடிவுடன்வளைத்தலுற்பேர்
நெற்றியேநுதலின்பேருநெடும்படையுறுப்புமாகும்
கொற்றமேவன்மைவெற்றிகோவரசியன்மூப்பேரே
எற்றுதல்புடைத்தலோடேயெறிதலுமிருபேராமே. (௧௫)

அறுகென்பசிங்கமோர்புல்யாளியுமாகுமுப்பேர்
வறிதென்பதருகலேசற்றறியாமைபயனில்வார்த்தை
மறலியேமயக்கங்கூற்றுமறவிகண்மறதியீனம்
குறளென்பகுறளும்பேயுங்குறுமையுங்கூறுமுப்பேர். (௧௬)

பொறியென்பது—தோணி, செல்வம், இலக்குமி, எந்திரம், அறிவு, அடையாளம், எழுத்து, ஐம்பொறி, தேமல். ௯.
வெறி—அச்சம், கலக்கம், வெறியாட்டு, வட்டம், வாசனை, பேய், ஆடு, கள், வியாதி. ௯.

உறை—பொருள், மருந்து, வாழ்நாள், உணவு, வெண்கலம், காரம், ஆயுதவுறை, ஒரிலக்கக்குறிப்பு, பாலிடுபிரை, ஓரிடைச்சொல், நகரம், நீர்த்துளி. ௧௨.
அறை—மலைமுழை, மோதல், பாறை, திரை, சிற்றில், சொல். ௬.

இறை—சிவன், கடன், அரசன், கையிறை, குடியிறை, உயர்ந்தோன், அற்பம், பறவையினிறகு, தங்கல், தலைமை, கூன், வீட்டிறப்பு. ௧௨.
உறையுள்—நாடு, ஊர். ௨. உறுதி—நன்மை, கல்வி. ௨.
பொறை—மலை, துறுகல், பாரம், பொறுமை, சுமை, கருப்பம், பூமி.

இறும்பு—தாமரைப்பூ, மலை, குறுங்காடு. ௩.
இறும்பூது—பெருமை, மலை, அதிசயம், தளிர், சிறுதூறு. ௫.
கறங்கல்—சுழலல், ஒலி. ௨. கதிர்—சூரியன், ஒளி. ௨.
பறம்பு—மலை, முலை. ௨. பாய்மா—குதிரை, புலி. ௨.

கூற்று—யமன், சொல். ௨. கோமான்—மூத்தோன், பன்றி. ௨.
நாற்றம்—மணத்தல், தோன்றல். ௨. நனவு—அகலம், தெளிவு. ௨.
ஊற்று—ஊன்றுகோல், நீரூற்று. ௨. நோற்றல்—பொறுத்தல், தவஞ்செய்தல். ௨. நுணங்கு—நுண்மை, தேமல். ௨.

கற்பம்—பிரமன்வாழ்நாள், கற்பகவிருக்ஷம், தேவலோகம். ௩.
பொற்பு—அழகு, பொலிவு, அலங்காரம். ௩. பற்பம்-தாமரை, துகள்.
பழங்கண்—துன்பம், ஒலி. ௨. உற்கை-விண்மீன், கடைக்கொள்ளி.
உண்டி—உண்ணல், சோறு. ௨.

முற்றல்—வயிரங்கொள்ளல், மூப்பு, முற்றுப்பெறுதல், விளைத்தல். ௪.
நெற்றி—நெற்றி, படையுறுப்பு. ௨.
கொற்றம்—வலிமை, வெற்றி, அரசியல். ௩.
எற்றுதல்—அடித்தல், எறிதல். ௨.

அறுகு—சிங்கம், ஒருபுல், யாளி. ௩.
வறிது—குறைதல், அற்பம், அறியாமை, பயனில்சொல். ௪.
மறலி—மயக்கம், யமன். ௨. மறவி—கள், மறதி, இழிவு. ௩.
குறள்—வாமனம், பேய், குறுமை. ௩.

விறலென்பவலிவென்றிப்பேர்விழைந்தோனேநண்பன்வேட்டோ [ன்
நொறிலென்பவிரைவிரேடுநடக்கமுமிருபேராமே
நெறிவழிநீதியென்பநிருமித்தல்படைப்பாராய்தல்
பறைபறைவசனத்தோடுபறக்கும்புள்ளிறகுமுப்பேர். (கஎ)

றகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - உகஉ.

# னகரவெதுகை.

மனவுநன்மணிசங்கக்காம்வரைமலையிறைவேய்மட்டாம்
தனிதமியொப்பின்மைப்பேர்சாந்தமேகமையுஞ்சாந்தும்
முனைபகைநுனிவெறுப்பாமுளைவேயங்குரமேபிள்ளை
யினமிருங்கிளையமைச்சாமெழில்வண்ணமிளமைக்கும்பேர். (க)

ஆனகம்படகத்தின்பேராகுந்துந்துபியுமப்பேர்
மானமேயளவிலச்சைவிமானமேபெருமைகுற்றம்
பானலேபழனநெய்தல்பாங்கரேயிடம்பக்கப்பேர்
மானலேமயக்கமொப்பாம்வருடமேமழையுமாண்டும். (உ)

தானமேமதநீராட்டுத்தருகொடைசுவர்க்கநாற்பேர்
பீனமேபருமைபாசிபேடென்பபேடியூரே
நானமேபூசும்பூச்சுநானமுங்குளிக்குநீரும்
வானமாகாயமென்பமழையுலர்மரமுமாமே. (ங)

வானிமேற்கட்டிசேனைவண்டுகிற்கொடிமுப்பேரே
ஆனியுத்தராடமூலஞ்சேதமோர்மாதமென்ப
ஏனையேயொழிபுமற்றையெனுமிடைச்சொற்குமப்பேர்
ஆனியம்பொழுதுநாளாமனந்தையோர்சத்திபூமி. (ச)

முன்னலேநினைவுநெஞ்சாமுன்னஞ்சீக்கிரியோடெண்ணம்
கன்னல்சர்க்கரைகரும்புகரகநாழிகைவட்டிற்பேர்
மன்னனுத்தரட்டாதிப்பேர்மன்னவன்றனுமாகும்
இன்னரநீர்ப்புள்யாழாங்கிடக்கைபூதலம்பாயற்பேர். (ரு)

பின்னையேபின்றைதங்கைபெரியமாற்குரியதேவி
கொன்பயனிலாமைகாலங்கூறியபெருமையச்சம்
பொன்னென்பவனப்பிரும்புபூமகள்வியாழநாற்பேர்
மன்னிலைமிகுதிவேர்தேவாழிவாழ்கெனவிடைச்சொல். (சு)

விறலென்பது—வலிமை, வெற்றி. ௨. விழைந்தோன்—சிநேகன், கணவன். ௨. நொறில்—விரைவு, நடுக்கம். ௨. நெறி—வழி, நீதி.
நிருமித்தல்—சிருட்டித்தல், ஆராய்தல். ௨.
பறை—வாச்சியம், சொல், பறவையினிறகு. ௩.

# னகரவெதுகை.

மனவென்பது—மணிப்பொது, சங்கு, அக்குமணி. ௩.
வரை—மலை, கையிறை, மூங்கில், அளவு. ௪. தனி—தனிமை, ஒப்பின்மை. ௨. சாந்தம்—பொறுமை, சந்தனம். ௨.
முனை-பகை, நுனி, வெறுப்பு. ௩. முளை-மூங்கில், அங்குரம், மகன். ௩.
இனம்—சுற்றம், மந்திரி. ௨. எழில்—அழகு, இளமை. ௨.

ஆனகம்—படகம், துந்துபி. ௨. மானம்-அளவு, வெட்கம், விமானம், பெருமை, குற்றம். ௫.
பானல்—வயல், நெய்தல். ௨. பாங்கர்—இடம், பக்கம். ௨.
மானல்—மயக்கம், ஒப்பு. ௨. வருடம்—மழை, ஆண்டு. ௨.

தானம்—யானைமதம், நீராடல், கொடுத்தல், தேவலோகம். ௪.
பீனம்—பருமை, பாசி. ௨. பேடு—பேடி, ஊர். ௨.
நானம்—பூசும்பூச்சு, கஸ்தூரி, குளிக்குநீர். ௩.
வானம்—ஆகாயம், மழை, உலர்ந்தமரம். ௩.

வானி—மேற்கட்டி, சேனை, துகிற்கொடி. ௩.
ஆனி-உத்தராடநக்ஷத்திரம், மூலநக்ஷத்திரம், கேடு, ஆனிமாசம் ௪.
எனை—ஒழிபு, மற்றையென்னுமிடைச்சொல். ௨.
ஆனியம்—காலம், நாள். ௨. அனந்தை—ஒருசத்தி, பூமி. ௨.

முன்னல்—நினைவு, நெஞ்சு. ௨. முன்னம்—சீக்கிரிமரம், எண்ணம்.
கன்னல்—சருக்கரை, கரும்பு, கரகம், நாழிகை, நாழிகைவட்டில்.
மன்னன்—உத்தரட்டாதிநக்ஷத்திரம், அரசன். ௨. கின்னரம்—நீர்வாழ்பறவை, வீணை. ௨. கிடக்கை—பூமி, மக்கட்படுக்கை. ௨.

பின்னை—பின்பு, தங்கை, இலக்குமி. ௩.
கொன்—பயனின்மை, காலம், பெருமை, அச்சம். ௪.
பொன்—அழகு, இரும்பு, இலக்குமி, வியாழன். ௪.
மன்—நிலை, மிகுதி, அரசன். ௩. வாழி-வாழ்கெனல், ஓரிடைச்சொல்.

வன்னியேபிரமசாரிவளர்கிளிசமிசெந்தீயாம்
சென்னிகம்பாணன்சோழன்சீருளீயஞ்செம்பாகும்
கன்னிபெண்ணழிவிலாமைகட்டிளமைக்கும்பேரே
தென்னிசைவனப்புத்தாழைதெற்கொடுகற்புமாமே. (௭)

குன்றுவேதண்டமாகுங்குறைவொடுசதயமும்பேர்
அன்றிலோர்புள்ளுமூலநாளெனவாமிரண்டே
பன்றமேவெளியினாமம்வாசமம்பலமுமப்பேர்
மன்றலேபரிமளப்பேர்மருவுகல்யாணமும்பேர். (௮)

தனமுலைபொன்னான்கன்றுசந்தமுத்தனமைம்பேராம்
கனவுநித்திரைமையற்பேர்கலிங்கஞ்சாதப்புள்ளாடை
கணைசெறிவொலியாமென்பகவரியேசவரிமேதி
பனுவலேகிளவிநூலாம்படப்பையூர்ப்புறமேதோட்டம். (௯)

அனந்தனேசிவன்மால்சேடனலாயுதனருகனைந்தே
அனந்தமேமுடிவிலாமையாடகம்விண்முப்பேரே
அனங்கமேயிருவாட்சிப்பேராகுமல்லிகைக்குமப்பேர்
தனஞ்சயன்பார்த்தனேசெந்தழலொருகாற்றுமாமே. (௧௦)

சானகிசீதைமூங்கிறனுவென்பதுடல்வில்லற்பம்
சானுவேமலைமுழந்தாண்மலைப்பக்கந்தானுமாகும்
சோனையேயோணநாளும்விடாமழைசொரிதலும்பேர்
கானலேமலைச்சார்சோலைகடற்கரைச்சோலைபேய்த்தேர். (௧௧)

வானென்பவிசும்புமேகமழையொடுபெருமைநாற்பேர்
தானையேசேனையாடைபடைக்கலந்தானுமாகும்
கானந்தேரிசையேபேதைகாடுதற்பாடியைம்பேர்
ஏனலேசெந்தினைப்பேர்தினைப்புனமென்றுமாமே. (௧௨)

முனியென்பதியானைக்கன்றுமுனிவன்வில்லகத்திநாற்பேர்
துனியென்பபுலவிநீட்டந்துன்பநோயாறுகோபம்
பனியென்பநடுக்கந்துன்பம்பயங்குளிரிமமைம்பேரே
சினையென்பமுட்டைபீளாமரக்கொம்புஞ்செப்புமப்பேர். (௧௩)

மானேசாரங்கமாவின்பொதுவொடுமகரராசி
கானேநன்மணங்காடென்பகல்லியூர்க்குருவியாமை
ஏனாதிமஞ்சிகன்மந்திரியுந்தந்திரியுமென்ப
மீனேசித்திரைநாள்வான்மீன்மயிலையுமேவுமப்பேர். (௧௪)

வன்னியென்பது—பிரமசாரி, கிளி, வன்னிமரம், நெருப்பு. ௪.
சென்னி—தலை, பாணன், சோழன். ௩.
சீருள்—ஈயம், செம்பு. ௨. கன்னி—பெண், அழிவின்மை, கட்டிளமை.
தென்—இசை, அழகு, தென்னமரம், தெற்கு, சற்பு. ௫.

குன்று—மலை, குறைதல், சதயநக்ஷத்திரம். ௩.
அன்றில்—ஒருபறவை, மூலநக்ஷத்திரம். ௨.
மன்றம்—வெளி, வாசனை, சபை. ௩.
மன்றல்—மிக்கவாசனை, விவாகம். ௨.

தனம்—முலை, பொன், பசுவின்கன்று, சந்தனம்; [அழகு] பசுமுதலிய முப்பொருள். ௫.
கனவு—நித்திரை, மயக்கம். ௨. கலிங்கம்—வானம்பாடி, சீலை. ௨.
கனை—நெருக்கம், ஓசை. ௨. கவரி—சாமரம், எருமை. ௨.
பனுவல்—சொல், நூல். ௨. படப்பை—ஊர்ப்புறம், தோட்டம். ௨.

அனந்தன்—சிவன், திருமால், சேடன், பலபத்திரன், அருகன். ௫.
அனந்தம்—அளவின்மை, பொன், ஆகாயம். ௩.
அனங்கம்—இருவாட்சி, மல்லிகை. ௨.
தனஞ்சயன்—அருச்சுனன், நெருப்பு, தசவாயுக்களுளொன்று. ௩.

சானகி—சீதை, மூங்கில். ௨. தனு—உடம்பு, வில், அற்பம். ௩.
சானு—மலை, முழந்தாள், மலைச்சாரல். ௩.
சோனை—திருவோணநக்ஷத்திரம், விடாமழை. ௨.
கானல்—மலைச்சாரலிற்சோலை, கடற்கரையிற்சோலை, பேய்த்தேர்.

வான்—ஆகாயம், மேகம், மழை, பெருமை. ௪.
தானை—சேனை, வஸ்திரம், ஆயுதப்பொது. ௩.
கானம்—தேர், இராகம், அறிவிலி, காடு, வானம்பாடி. ௫.
ஏனல்—செந்தினை, தினைப்புனம். ௨.

முனி—* யானைக்கன்று, முனிவன், வில், அகத்தி. ௪.
துனி—புலவிநீட்டம், துன்பம், வியாதி, நதி, கோபம். ௫.
பனி—நடுக்கம், துன்பம், அச்சம், குளிர்ச்சி, பனி. ௫.
சினை—முட்டை, கருப்பம், மரக்கொம்பு. ௩.

மான்—மான், விலங்கின்பொது, மகரராசி. ௩.
கான்—வாசனை, காடு. ௨. கல்லி—ஊர்க்குருவி, ஆமை. ௨.
ஏனுதி—நாவிதன், மந்திரி, படைத்தலைவன். ௩.
மீன்—சித்திரைநக்ஷத்திரம், நக்ஷத்திரம், மீன். ௩.

* கயமுனி - யானைக்கன்று.

ஞானமேயறிவுகல்விநல்லதத்துவநூன்முப்பேர்
யானமேமரக்கலத்தோடெழிலூர்திவிகற்பிரண்டாம்
ஏனமோலைக்குடைப்பேரெறுழியுமறமுமப்பேர்
மேனியேவடிவமென்பநிறத்தையும்விளம்பலாமே. (௧௫)

ஞானமென்பது—அறிவு, வித்தை, ஞானநூல். ௩.
யானம்—மரக்கலம், வாகனவிகற்பம். ௨.
ஏனம்—ஓலைக்குடை,பன்றி,பாவம். ௩. மேனி—உருவம்,நிறம். ௨.

அன்னையேமுன்பிறந்தாடோழிதாயாகுமென்ப
அன்னமோதிமமேசோறுமாகாரமுடனெய்யுண்டி
தன்மையேரியல்பினோடுதன்மையினிடமுஞ்சாற்றும்
பன்னலேநெருக்கம்வார்த்தைபருத்தியின்பேருமாமே. (௧௬)

அன்னை-முன்பிறந்தாள், தோழி, தாய். ௩. அன்னம்-அன்னப்புள்,
சோறு. ௨. ஆகாரம்-உடம்பு,நெய்,உணவு. ௩. தன்மை—அழகு,
குணம்,தன்மையிடம். ௩. பன்னல்-நெருக்கம்,சொல்,பருத்தி. ௩.

வனமேநீர்மிகுதிகாடுவளர்சோலைதுளசியீமம்
மனுவேமந்திரமோர்நூலாமண்ணைபேயிளமைமூடன்
புனையென்பதழகினோடுபொலிவுமொப்பனையுமாகும்
மனையென்பமனைவிவீடாம்வதுவையேமணங்கல்யாணம். (௧௭)

வனம்—நீர், மிகுதி, காடு, சோலை, துளசி, சுடுகாடு. ௬.
மனு—மந்திரம், ஒருதருமநூல். ௨. மண்ணை—பேய், இளமை,
அறிவிலான். ௩. புனை—அழகு, பொலிவு, அலங்காரம். ௩.
மனை—இல்லாள், வீடு. ௨. வதுவை—வாசனை, விவாகம். ௨.

அன்வினையொடுபெயர்க்கும்விகுதிசாரியையுமாகும்
மன்னிடுங்கனைத்தலென்பதிருளோசையிருபேர்வைக்கும்
இன்னவொருசொற்பல்பேர்க்கியற்கவிமுந்நூற்றொன்பான்
சொன்னவன்குணபத்திரன்றாள்சூடுமண்டலவன்றானே. (௧௮)

அன்—ஒருவினைவிகுதி, ஒருபெயர்விகுதி, ஒருசாரியை. ௩.
கனைத்தல்—இருள், ஒலி. ௨.

னகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் - ௩௧௦.

ஒருசொற்பல்பொருட் பெயர்த்தொகுதி முற்றுப்பெற்றது.

உ

கணபதி துணை.

# பன்னிரண்டாவது

## பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி.

### காப்பு.

சொல்வகையெழுத்தெண்ணெல்லாந்தொல்லைநாளெல்லையாக
நல்வகையாக்கும்பிண்டிநான்முகனாளுந்தீமை
வெல்வினைதொடங்கச்செய்துவீடருள்வோன்றாள்போற்றிப்
பல்வகைப்பெயர்க்கூட்டத்தினொருபெயர்பகரலுற்றாம்.

இதன்பொருள். தொல்லை நாள் - ஆதிகாலத்திலே,—சொல்வகை எழுத்து எண் எல்லாம் - சொல்லப்படும் பாகுபாட்டினையுடைய இலக்கணமுங் கணிதமுமாகிய நூல்கள் முழுமையையும்,—எல்லை ஆக - வரையறைப்பட,—நல் வகை ஆக்கும் பிண்டி நான்முகன் - செப்பமாக அருளிச்செய்த அசோகமரத்தின் நிழலின்கண்ணே வீற்றிருக்கும் நான்கு முகங்களை யுடையவரும்,—நாளும் தீமை வெல்வினை தொடங்கச்செய்து - நாடோறும் தீங்கை வெல்லுகின்ற சற்கருமங்களை (மனிதர்கள்) தொடங்கும்படி செய்து,—வீடு அருள்வோன் தாள் போற்றி - அவருக்கு முத்தியைக் கொடுத்தருளுபவருமாகிய அருகக்கடவுளது திருவடிகளைத் துதிசெய்து,—பல்வகைப் பெயர்க் கூட்டத்தின் ஒரு பெயர் பகரலுற்றாம் - பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த் தொகுதியை (யாம்) கூறலுற்றாம் என்றவாறு.

# பன்னிரண்டாவது.

கூறியகூறினுங்குற்றமொன்றிலையருத்தம்
வேறுளதாயினென்றுவிதித்தலின்விரித்துமுன்னம்
ஊறிலாச்சிறப்புவர்க்கமுரைத்திவட்பொதுவர்க்கத்தில்
ஏறியவூழுஞ்சொல்வாமேகமேவீடுபேறு.

இ - ள். கூறிய கூறினும் - முன் சொன்னவற்றைப் பின்னுஞ் சொல்லினும்—வேறு அருத்தம் உளதாயின் - பிறிதுபொருள் உளதாயின்,—குற்றம் ஒன்று இலை என்று - அங்ஙனம் சொன்னதனாற் குற்றம் ஒன்றும் இல்லையென்று—விதித்தலின் - அறிஞர் சொல்லுதலால்,—முன்னம் - முன்னே—ஊறு இலாச் சிறப்புவர்க்கம் விரித்து உரைத்து - குற்றம் இல்லாத ஒருசொற்பலபெயர், பலபொருளொருசொல் என்னும் இருவகைச் சிறப்புத் தொகுதிகளை விரித்துக்கூறி,—இவண் - இங்கே—பொதுவர்க்கத்தில் - பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த் தொகுதியில்—ஏறிய ஊழும் சொல்வாம் - ஒன்றிரண்டு முதலிய எண்களால் உயர்ந்தமுறையினையும் சொல்வாம். எ - று.

முதற்பத்துத்தொகுதியும் அருகன், சிவன்முதலிய பலசொற்களைத் தனித்தனி எடுத்துக்கொண்டு அவற்றிற்குரிய பரியாயச் சொற்களைக் கூறுதலாலும், பதினொராவது தொகுதி பகவன்,பகல் முதலிய சொற்களைத் தனித்தனி எடுத்துக் கொண்டு அவற்றிற்குரிய பலபொருள்களைக் கூறுதலாலும் இவ்விருகூற்றுப்பதினொரு தொகுதியும் சிறப்புத்தொகுதியென்றும், பன்னிரண்டாவது பல்பெயர்க்கூட்டங்களை ஒன்றிரண்டு முதலிய இலக்கமுறைகளால் பொதுவில்வைத்து விளக்குதலால் இது பொதுத்தொகுதி என்றும் சொல்லப்பட்டன.

ஏகம் - முத்தி. (க)

இருமையேயிம்மையோடுமறுமைநல்வினையினோடு
மருவுதீவினைகளென்பமற்றிருவினையினுமம்
இருவகைத்தோற்றமென்றேயிடுஞ்சராசரங்களென்ப
இருசுடர்மதியமற்றையிரவியென்றியம்பலாமே. (௨)

இருமரபன்னைதந்தையெய்தியவழியாங்கந்தம்
இருவகைநற்கந்தங்களேற்றதுர்க்கந்தமென்ப
இருவகையறங்களென்பவில்லறந்துறவறங்கள்
இருவகைப்பொருள்கள்கல்வியேற்றசெல்வங்களாமே. (௩)

இருவகைக்கூத்துத்தானேயியன்றதேசிகமேமார்க்கம்
கருதுமுப்பழங்களின்பேர்கதலிமாபலாவென்றுமே
விரைவொடுசெய்தலேசெய்வித்தலேயுடம்பாடென்ன
வருமுறைபாவமோடுபுண்ணியவழக்கமாமே. (௪)

மும்மையேயும்மையிம்மைமொழிந்திடுமறுமையென்ப
செம்மையாம்வாக்குக்காயந்திகழ்மனமுப்பொறிப்பேர்
மும்மையாங்காலப்பேரின்மொழியிறப்பெதிர்நிகழ்ச்சி
மும்மையாஞ்செய்கைபண்ணன்முறைகாத்தல்சிதைத்தலாமே. (௫)

மூன்றிடமென்பதன்மைமுன்னிலைபடர்க்கையாகும்
ஆன்றமுந்நிலங்கள்பூமியந்தரஞ்சுவர்க்கமென்ப
மூன்றுகுற்றங்கள்காமமுதிர்சினமயக்கந்தானே
மூன்றுசெஞ்சுடரேதிங்கண்முளைத்தெழுபரிதியங்கி. (௬)

பழித்திடல்புகழ்தன்மெய்ம்மைபயக்குமும்மொழிப்பேராகும்
கிழிப்பில்வேதத்தின்முத்தீகாருகபத்தியத்தோ
டழிப்பிலாத்தெற்கிலங்கியாகவநீயமென்ப
ஒழிப்பிலாவுயிரிலங்கியுதரம்வீந்துறுசினத்தீ. (௭)

ஏற்றசாத்துவிகத்தோடேயிராசதந்தாமதங்கள்
ஆற்றுமுக்குணங்களாகுமதிற்சாத்துவிகமேஞானம்
சாற்றியதவமேமெய்ம்மைசால்புநல்லருளுண்டாதல்
போற்றியவாமைபோலைம்புலனடக்குதலுமாமே. (௮)

தானமேதவமேமெய்ம்மைதருமம்பேணுதலினோடு
ஞானமேகல்விகேள்விநலனிவைதெரிதருமே
ஈனமொன்றில்லார்வைத்தவிராசதகுணங்களென்ப
ஊனமிலுறுவன்முன்னுரைத்திடுமுறைமைதானே. (௯)

௨. இருபிறப்பு—இம்மை, மறுமை.
இருவினை—நல்வினை, தீவினை.
இருவகைத்தோற்றம்—சரம், அசரம்.
இருசுடர்—சந்திரன், சூரியன்.

௩. இருமரபு—தாய்மரபு, தந்தைமரபு.
இருவகைக்கந்தம்—நற்கந்தம், தூர்க்கந்தம்.
இருவகையறம்—இல்லறம், துறவறம்.
இருவகைப்பொருள்—கல்விப்பொருள், செல்வப்பொருள்.

௪. இருவகைக்கூத்து—தேசிகம், மார்க்கம்.
முப்பழம்—வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்.
மூவகைப்பாவபுண்ணியவழக்கம்—செய்தல், செய்வித்தல், உடன்படல்.

௫. முப்பிறப்பு—உம்மை, இம்மை, மறுமை.
முப்பொறி—வாக்கு, காயம், மனம்.
முக்காலம்—இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்.
முத்தொழில்—படைத்தல், காத்தல், அழித்தல்.

௬. மூவிடம்—தன்மை, முன்னிலை, படர்க்கை.
மூவுலகம்—பூமி, அந்தரம், சுவர்க்கம்.
முக்குற்றம்—காமம், வெகுளி, மயக்கம்.
முச்சுடர்—சந்திரன், சூரியன், அக்கினி.

௭. மூவகைமொழி—பழித்தல், புகழ்தல், மெய்கூறல்.
மூவகைவேதத்தீ—காருகபத்தியம், தக்கிணாக்கினி, ஆகவநீயம்.
மூவகையுயிர்த்தீ—உதராக்கினி, காமாக்கினி, கோபாக்கினி.

௮. முக்குணம்—சாத்துவிகம், இராசதம், தாமதம். சாத்துவிகச்செயல்—ஞானம், தவம், மெய்ம்மை, மேன்மை, அருளுடைமை, ஐம்புலனடக்கல்.

௯. இராசதச்செயல்—தானம், தவம், மெய்மை, தருமம்பேணல், ஞானம், கல்வி, கேள்வி.

தாமதநிறைபேருண்டிசாம்புதல்சோம்புமூரி
காமமேநீதிகேடுகண்ணுறக்கம்பொச்சாப்பு
நாமமாஞ்சலமேவஞ்சநாட்டியவிம்மூப்பாலும்
மாமலிவுடனேமற்றமெலிவொடுசமனுமாமே. (௧௦)

மறுவறுதானமூன்றுவகைதமிலுத்தமந்தான்
பெறுமுறையோம்பிவைத்துப்பேணியபொருளைத்தானே
குறுகியேபெறுகவென்றுகுறையிரந்தடங்கிநோற்கும்
உறுதவர்க்குவந்துதாழ்ந்தேயுபகாரஞ்செய்தலாமே. (௧௧)

சீருறுப்பில்லார்மாதர்சிதடராதுலர்க்குநல்கல்
வாருறுகொங்கைநல்லாய்மத்திமதானமென்ப
ஆர்வமேபுகழ்கண்ணோட்டமச்சங்கைம்மாறுமற்றைக்
* காரணமின்னவெல்லாங்கடைப்படுதானமாமே. (௧௨)

திரிகடுகஞ்சுக்கோடுதிப்பலிமிளகுசெப்பும்
திரிபலையென்பதானேதிகழ்கடுநெல்லிதான்றி [ப
புரமூன்றுசெம்பொன்வெண்பொன்போற்றிய கரும்பொன்னென்
விரவியமேடமேறுமிதுனமேயருக்கன்வீதி. (௧௩)

முல்லையேகுறிஞ்சிநெய்தன்மொழிந்திடுமருதமென்ப
நல்லநானிலமென்றேதும்நாற்கதியும்பர்மக்கள்
சொல்லியவிலங்கினோடுநரகர்சாதுரங்கமென்ப
வெல்லுமால்யானைதேரேவெம்பரிகாலாளாமே. (௧௪)

குறளைபொய்கடுஞ்சொல்லோடுகூறியபயனில்வார்த்தை
நறுநுதல்கேட்டிமற்றைநால்வகையிழிசொல்லாகும்
மறுவிலாவிருக்கினோடுவளமிகும்யசுவேசாமம்
அறைதருமதர்வமென்பவாமிவைவேதநான்கே. (௧௫)

அறமொடுபொருளின்பம்வீடானநாற்பொருள்களாகும்
உறுமிவைதம்மைக்கேட்டவொத்தநால்வகைக்கேள்விப்பேர்
செறிகடம்வெற்புநீரேதிணிமதிலரணநான்காம்
அறிவொடுநிறையேயோர்ப்புக்கடைப்பிடிகுணநான்காமே. (௧௬)

நாணமேமடமேயச்சநாட்டியபயிர்ப்புநான்கும்
மாணிழைமடநல்லார்க்குவைத்தநாற்குணங்களாகும்
பேணியதவமொழுக்கம்பெருங்கொடைகல்விநான்கிற்
பூணுநற்பொருள்கணான்கும்புண்ணியத்தோற்றமாமே. (௧௭)

* காரணங்கடைப்பாடேழும் என்றும் பாடம்.

க0. தாமதச்செயல்—பேருண்டி, ஒடுக்கல், சோம்பு, மூரி, காமம், நீதிகேடு, நித்திரை, மறதி, தணியாக்கோபம், வஞ்சம்.

கக. மூவகைத்தானம்—உத்தமதானம், மத்திமதானம், அதமதானம். உத்தமதானம்-தருமவழியாற் சம்பாதித்துப் பேணிவைத்திருக்கும் பொருளை மனமடங்கி நோற்குந் தவமுடையாரிருக்குமிடத்திற் சென்று பெற்றுக்கொள்க என்று குறையிரந்து மகிழ்ந்து தாழ்ந்து கொடுத்தல்.

கஉ. மத்திமதானம்—அங்கக்குறைவுடையோர்க்கும், பெண்களுக்கும், செவிடர்க்கும், வறியவர்களுக்கும் கொடுத்தல்.
அதமதானம்—அன்பு,புகழ்,கண்ணோட்டம், அச்சம், கைம்மாறு, பிறிதுகாரணம் என்னும் இவைபற்றிக் கொடுத்தல்.

கங. திரிகடுகம்—சுக்கு, திப்பலி, மிளகு.
திரிபலை—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.
திரிபுரம்—பொன்மதில், வெள்ளிமதில், இருப்புமதில்.
சூரியனுக்குரியமூவகைவீதி—மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி. [மேடவீதி - இடபம், சிங்கம், மிதுனம், கர்க்கடகம். இடபவீதி - மீனம், மேடம், கன்னி, துலாம். மிதுனவீதி - தனு, மகரம், கும்பம், விருச்சிகம்.]

கச. நால்வகைநிலம்—முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம்.
நாற்கதி—தேவர், மனுடர், விலங்கு, நரகர்.
நால்வகையங்கம்—யானை, தேர், குதிரை, காலாள்.

கரு. நால்வகையிழிசொல்—குறளை, பொய், கடுஞ்சொல், பயனில்சொல்.
நால்வகைவேதம்—இருக்கு, யசுர், சாமம், அதர்வம்.

கசு. நால்வகைப்பொருள்—அறம், பொருள், இன்பம், வீடு.
நால்வகைக்கேள்வி—இந்நான்கினையுமுணர்த்தும் நூல்களைக் கேட்டல். நால்வகையரண்—காடு, மலை, நீர், மதில்.
ஆடவர்க்குரியநால்வகைக்குணம்-அறிவு,நிறை,ஓர்ப்பு, கடைப்பிடி.

கஎ. பெண்களுக்குரியநால்வகைக்குணம்—நாணம், மடம்,அச்சம், பயிர்ப்பு. நால்வகைப்புண்ணியத்தோற்றம்—தவம், ஒழுக்கம், கொடை, கல்வி இவற்றை உடையராய்ப்பிறத்தல்.

சொல்லியசாதருபங்கிளிச்சிறைதுலங்குகின்ற
நல்லவாடகமேசாம்பூநதமிவைநால்வகைப்பொன்
மெல்லியகொடிப்பூக்கோட்டில்விளங்குபூநீர்ப்பூவேறு
புல்லியபுதற்பூவென்னப்பொருந்துநால்வகையிற்பூவாம். (கஅ)

நறைபடவுண்பதின்பநக்குவபருகனுன்காம்
எறிதலேகுத்தல்வெட்டலெய்தனுன்கூறுபாடாம்
முறைபடுசாமம்பேதமுந்தியதானந்தண்டம்
நெறிபடுமுபாயநான்குநிருபர்தம்முறைமையாமே. (கக)

துவமதாங்குடற்போர்வைக்குட்டொடர்புறமுட்டைதன்னில்
நவையறுநிலத்தில்வேர்வினல்லுயிர்த்தோற்றநான்காம்
கவியொடுகமகன்வாதிகாசிலாவாக்கியென்ப
புவியின்மேனல்வகைத்தாம்புலமையரியல்புதானே. (உ0)

நீட்டியவாசிரேனுமதுரஞ்சித்திரம்வித்தாரப்
பாட்டிவையாருமெச்சப்பாடுவோன்கவியென்றுகும்
நாட்டியவரும்பொருட்கள்செம்பொருணடையவாகக்
காட்டியேவிவகரிப்போன்கமகனென்றறையலாமே. (உக)

ஏதுவுமேற்கோளுந்தானெடுத்துடன்காட்டியாங்கே
வாதினிற்பிறன்கோளெல்லாமறுப்பவன்வாதியென்ப
ஓதியவறம்பொருட்களூற்றிடுமின்பம்வீடு
கோதின்றிக்கேட்கவேட்கக்கூறுவோன்வாக்கியாமே. (உஉ)

கொடுத்திடும்பொருளின்மற்றுக்கூறியவினத்திற்கோட்டி
அடுத்திடுமெப்போதப்போதசைவின்றியாருமெச்ச
எடுத்தியல்பாகப்பாடுமெவனவனுசுசொல்வான்
வடுப்பிளவனையவொண்கண்மடமொழிவல்லிநல்லாய். (உ௩)

பொருளினிற்பொலிவுஞ்சொல்லிற்பொருந்தியபொலிவுமற்றைத்
தருதொடைதொடைவிகற்புந்தாந்துறைதந்தமிர்தமூற
உருவகமுதலாவைத்தேயோதியவலங்காரத்தோ
டிருளறவோசைதோன்றியிருந்ததுமதுரமாமே. (உச)

சொற்றிடுமாலைமாற்றேசுழிகுளமேகபாதம்
குற்றமில்சக்கரத்தின்கூறெழுகூற்றிருக்கை
கற்றிடுமடிமயக்குக்காட்டும்பாவின்புணர்ப்போ
டொற்றெழுத்தியாவுந்தீர்ந்தவொருபொருட்பாட்டினேடும். (உரு)

கஅ. நால்வகைப்பொன்—சாதருபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம். நால்வகைப்பூ—கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ.

ககூ. நால்வகையுணவு—உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன.
நால்வகையூறுபாடு—எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.
நால்வகையுபாயம்—சாமம், பேதம், தானம், தண்டம்.

உ0. நால்வகையுயிர்த்தோற்றம்—கருப்பையிற்றோன்றுவது, முட்டையிற்றோன்றுவது, வித்துவேர்முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவது, வேர்வையிற்றோன்றுவது.
நால்வகைப்புலவர்—கவி, கமகன், வாதி, வாக்கி.

உக. கவியாவான்—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் யாவரும் வியக்கும்படி பாடுவோன்.
கமகனாவான்—அரும்பொருட்களைச் செம்பொருளுடையனவாகக்காட்டி விவகரிப்போன்.

உஉ. வாதியாவான்—ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டிவாதித்துப் பிறன்கொள்கையை மறுப்பவன்.
வாக்கியாவான்—அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப்பொருளையும் யாரும் விரும்பிக்கேட்குமாறு குற்றமறக் கூறுவோன்.

உங. ஆசுகவி—சபையிலே ஒருவனாற் கொடுக்கப்பட்ட பொருள், பாட்டு அடி முதலியன அமையும்படி விரைந்து பாடவல்லோன்.

உச. மதுரகவி—பொருட்சிறப்பும் சொற்சிறப்பும் தொடையும் தொடைவகைகளும்நெருங்கி, உருவகமுதலிய அலங்காரங்களும் ஓசையுந்தோன்றும்படி பாடவல்லோன்.

உரு. சித்திரகவி—மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரவகை, எழுகூற்றிருக்கை, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, ஒற்றெழுத்தில்லாப்பாட்டு, ஒருபொருட்பாட்டு,

சித்திரப்பாவேமற்றவிசித்திரப்பாவினுவோ
டுத்தரங்குற்றமில்லாவோரெழுத்தினத்திற்பாட்டே
வைத்திடுங்காதைதன்னைமறைப்பதுகரந்துறைப்பாத்
தைத்தகோமூத்திரிகூடசதுர்த்தமென்றிசைத்தபாட்டு. (உசு)

சருப்பதோபத்திரங்கள்சார்ந்திடுமெழுத்தினோடு
வருக்கமும்வடநூல்வைத்துவருமுதாரணமுநோக்கி
விரித்திடவிசைத்துவைத்தமிறைக்கவிப் * பாட்டுமற்றும்
தெரித்ததுபாடவல்லோன்சித்திரகவியென்றுமே. (உஎ)

தெரித்தமும்மணியின்கோவைசெப்புபன்மணியின்மாலை
வருத்தந்தீர்மடலையூர்தன்மறத்தொடுகலிவெண்பாவே
உருத்தபாசண்டமற்றும்முறுமியலிசையேகூத்து
விரித்துறப்பாடவல்லோன்வித்தாரகவியென்றுமே. (உஅ)

வரிசிலையியற்றுவோர்க்குவகுத்தநால்வகையேநிற்றல்
பரவுபைசாசமற்றும்பகர்ந்தவாலீடத்தோடு
பெருகியமண்டலந்தான்பிரத்தியாலீடமாகும்
ஒருகாலின்மற்றொருகாறன்னைமுடக்கல்பைசாசமென்ப. (உகூ)

வலப்பதமண்டலித்துவாமபாதந்தான்முந்து
நிலைப்பெயரேயாலீடநின்றமண்டலத்தினும்ம
இலக்கணத்தோடேகூடவிருகாலுமண்டலித்தல்
வலப்பதமுந்திப்பிற்கான்மண்டலம்பிரத்தியாலீடம். (௩0)

பாலனேகுமரன்மன்னன்படுமுதிர்கிழவன்சாவு
கோலுந்தன்பேரெழுத்துக்குறித்ததுமுதலாக்கொள்க
ஏலுமுன்னெழுத்துமூன்றுமின்பம்பின்னிரண்டுந்தீதாம்
சாலுமூவகைச்சீர்தானேசாற்றியகவிதைக்கின்பம். (௩க)

அகரமேயாதியாகவைந்துகுற்றெழுத்துந்தானே
புகல்வல்லூருந்தைகாக்கைபோர்க்கோழியொடுகலாபி
தொகுமுண்டிபோக்குவேந்துதுயில்சாவுதொழில்களாகும்
பகருமைந்தெழுத்துள்யாதுபற்றினுமதுவேமுன்னும். (௩உ)

பிற்பக்கமாகில்வேறுபேதிக்கும்யாதோவென்னில்
அற்புதவுண்டிசாவேயறிதுயிலரசுபோக்குப்
பொற்பறுமரணந்தூக்கமில்லாதபொழுதையோர்ந்து
பற்பலசெய்யுட்டானேபகர்ந்திடின்மிகுந்தநன்மை. (௩௩)

---

* மிறைக்கவி - சித்திரப்பா.

உகூ. சித்திரப்பா, விசித்திரப்பா, விஞவுத்தரம், ஒரெழுத்துப்பாட்டு, ஒரினப்பாட்டு, காதைகரப்பு, கரந்துறைப்பாட்டு, கோமூத்திரி, கூடசதுர்த்தம்,

உள. சருப்பதோபத்திரம் என்பவைகளும்; எழுத்தும், எழுத்தின் வர்க்கமும், உதாரணமும் நோக்கிப்பாடும்படி வடநூலுள்ளே வைத்த மிறைக்கவிகளும்; பிறவும் பாடவல்லோன் சித்திரகவி.

உஅ. வித்தாரகவி—மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மடலூர்தல், மறம், கலிவெண்பா, பாசண்டத்துறை, இயல் இசை நாடகம் என்பனவற்றை விரித்துப் பாடவல்லோன்.

உகூ. வில்வீரர் நிற்கும் நால்வகைநிலை—பைசாசம், ஆலீடம், மண்டலம், பிரத்தியாலீடம். பைசாசமாவது—ஒருகாலை ஊன்றி ஒருகாலை முடக்கிநிற்றல்.

௩0. ஆலீடமாவது—வலக்காலை வளைத்து இடக்காலை முன்வைத்து நிற்றல். மண்டலமாவது—இருகாலையும் மண்டலித்துநிற்றல். பிரத்தியாலீடமாவது-வலக்காலை முன்வைத்து இடக்காலை மண்டலித்துநிற்றல்.

௩க. ஐவகைத்தானப்பொருத்தம்—பாலன், குமரன், அரசன், கிழவன், மரணம். தானப்பொருத்தம் பார்க்கும்போது நெட்டெழுத்துக்களை அவ்வவற்றிற் கினமாயுள்ள குற்றெழுத்திலடக்கி ஐந்தெழுத்தாகக் கொண்டு,பாட்டுடைத்தலைவன் பெயரின் முதலெழுத்தைப் பாலன்றானமாகவைத்தெண்ணுக. எண்ணும்போது எடுத்துக்கொண்ட முதற்சீரின் முதலாம் எழுத்து முதன் மூன்று தானத்துளொன்றாய் வரின் நன்றாகும், பின்னிரண்டுதானத்தில் வருமாயின் தீதாகும். நற்கணமாகிய மூவகைச்சீரே எவ்வகைப்பட்ட பாக்களுக்கும் முதற்சீராகக்கொண்டு பாடல்வேண்டும்.

௩உ. பஞ்சபட்சி—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில். இவற்றை முறையே அகரம் முதலிய ஐந்து குற்றெழுத்துக்களும் உணர்த்திநிற்கும். உண்டி, போக்கு, அரசு, துயில், மரணம் என்பன இவற்றின் தொழில்களாகும்.

௩௩. இப்பட்சிகளும் தொழில்களும் அபரபக்கத்திலே மயில், கோழி, காகம், ஆந்தை, வல்லூறு எனவும் உண்டி, மரணம், துயில், அரசு, போக்கு எனவும் பேதமாகக் கொள்ளப்படும். தன் பெயர்ப்பட்சி மரணம் துயில் இல்லாதபொழுதிற் செய்யுள் செய்தல் நன்மை.

சுவையின்மீனளிநாற்றத்திற்றும்பியேபரிசந்தன்னில்
நவையிலாவசுணந்தானேநல்லிசைதனிற்பதங்கம்
உவகையாமொளியினையவேட்டேயுயிரினையிழக்குமைந்தாம்
இவையெலாமுடையோர்தம்பாலாருயிரிழந்திடாதார். (௩௪)

கோலியவைந்திணைப்பேர்குறிஞ்சியேசெறிந்தமுல்லை
பாலையேநெய்தலோடுபரவியமருதமாமே
ஏலந்தக்கோலமற்றையிலவங்கத்தொடுசாதிக்காய்
சாலுங்கர்ப்பூரமைந்துஞ்சாற்றியபஞ்சவாசம். (௩௫)

சந்தனமகிலினோடுக்கரங்குங்குமமேகோட்டம்
இந்தவைந்தென்றுசொல்லுமெய்தியவிரைகளின்பேர்
உந்துசந்தனங்கர்ப்பூரமுடனெரிகாசுசெந்தேன்
அந்தவேலங்க * ளென்பவகிற்கூட்டோரைந்துந்தாமே. (௩௬)

தடுக்குமந்திரிபுரோகிதன்றொழிற்றூதனொற்றன்
எடுத்துவந்திருந்தசேனைக்கிறைவனைங்குழுவென்றாகும்
படைத்தொழிலோர்நிமித்தம்பார்ப்பவராயுள்வேதர்
அடுத்தநட்பாளர்பார்ப்பாரைவகையுறுதிச்சுற்றம். (௩௭)

அரசனையுபாத்தியாயனன்னையே † யையன்மூத்தோன்
குரவரோரைவரென்றுகூறினர்வேறுநூலோர்
ஒருவனையொருத்திமற்றுமுரைத்திடும்பலரேயொன்று
விரவியபலவென்றைந்துமேவியவைம்பாலாமே. (௩௮)

பஞ்சாங்கந்திதியேவாரம்பகர்ந்தநாள்யோகத்தோடு
துஞ்சாதகரணமென்பசூழ்கொலைகளவுபொய்யே
அஞ்சாதகள்ளருந்தலார்குருநிந்தையென்ப
பஞ்சார்மெல்லடிநல்லாய்கேள்பஞ்சபாதகத்தின்பேரே. (௩௯)

மயிற்றூவியிலவின்பஞ்சுமற்றலைச்செம்பஞ்சுவெண்பஞ்
சுயிர்ப்பிலாவன்னத்தூவியாம்பஞ்சசயனத்தின்பேர்
வியக்குமைம்பால்வகைப்பேர்மேவியமுடியேகொண்டை
குயிற்றியகுழல்பனிச்சைகோலவார்சுருளுங்கூறும். (௪௦)

மல்லமேமயூரமற்றைவானரம்வல்லியம்மே
சொல்லியசரமேயென்பதுரகதகதிகளைந்தாம்
பல்லினாற்கடித்தனக்கல்பருகலேவிழுங்கன்மற்றும்
மெல்லவேசுவைத்தலாகும்வினைவிலைந்துணவுதாமே. (௪௧)

---

* வெல்லங்கள் என்றும்பாடம். † அடிகளே என்றும்பாடம்.

௩௪. ஐவகைப்புலனுகர்வாலுயிரிழப்பன — மீன் சுவையினாலும், வண்டு நாற்றத்தினாலும், தும்பி பரிசத்தினாலும், அசுணமா ஓசையினாலும், விட்டில் ஒளியினாலும் உயிரிழக்கும்.

௩௫. ஐந்திணை—குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம்.
பஞ்சவாசம்—ஏலம், தக்கோலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம்.

௩௬. ஐவகைவிரை—சந்தனம், அகில், தகரம், குங்குமப்பூ, கோட்டம்.
ஐவகையகிற்கூட்டு—சந்தனம், கருப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

௩௭. அரசனைம்பெருங்குழு—மந்திரி, புரோகிதன், தூதன், ஒற்றன், சேனாபதி.
அவனைம்பெருஞ்சுற்றம் — படைத்தொழிலாளர், நிமித்தம்பார்ப்பவர், ஆயுள்வேதியர், நட்பாளர், அந்தணர்.

௩௮. ஐவகைக்குரவர்—அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்.
ஐம்பால்—ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

௩௯. பஞ்சாங்கம்—திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம்.
பஞ்சபாதகம்—கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குருநிந்தை.

௪௰. பஞ்சசயனம்—மயிற்றூவி, இலவின்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத்தூவி.
கூந்தலைம்பால்—முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள்.

௪௧. ஐவகைத்துரககதி—மல்லகதி, மயூரகதி, வானரகதி, வல்லியகதி, சரகதி.
ஐவகையுணவு—கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல், சுவைத்தல்.

அறியாதான்வினவல்பின்னையறிவொப்புக்காண்டலோடு
குறியுடனையந்தீர்தல்குறித்தவனறிவுகோடல்
கறையறமெய்யவற்குக்காட்டலைவகைவினவாம்
பெறுநிலநீர்தீகாற்றேபெருவிசும்பைந்துபூதம். (ச௨)

தலைவனைம்முகங்களாவசத்தியோசாதம்வாமம்
புலனுறுமகோரமேதற்புருடமீசானமென்ப
குலவுதோறுளைநரம்புகூறிடுங்கஞ்சங்கண்டம்
இலகுமிவ்வைந்தாலாகுமிசைக்கருவிகளைந்தாமே. (ச௩)

தெய்வமேபிரமம்பூதந்தென்புலத்தோர்மனித்தர்
ஐவகையோரையோம்பலைவகைவேள்வியாமே
உய்வகைபாராட்டுந்தாயூட்டுந்தாய்முலைத்தாய்கைத்தாய்
செய்வகையறிந்துபோற்றுஞ்செவிலித்தாயைவர்தாயர். (ச௪)

இலகியவெண்ணெனூசியெழுதலேயிலையைக்கிள்ளல்
மலர்தொடுத்திடுதலேயாழ்வாசித்தெழிலைந்தாகும்
குலவுகொட்டாவிநெட்டைகுறுகுறுப்பேமூச்சீடே
அலமரவொடுங்கிநட்டுவிழுதன்மெய்யவத்தையைந்தே. (ச௫)

அரக்கிருலினியதேனேயாய்மயிற்பீலிநாவி
நெருக்கியகாட்டிலுற்றநெடுந்திரவியங்களைந்தாம்
திரைக்கடற்படுவவுப்புச்செய்யவொண்பவளம்வெண்முத்
திரைத்தெழுசங்கோர்க்கோலையிவ்வைந்துமென்னலாமே. (ச௬)

செந்நெல்செவ்விளநீர்மற்றைச்சிறுபயறுடனேவாழை
கன்னலிவ்வைந்துநாட்டிற்கருதியதிரவியப்பேர்
மின்னுகண்ணாடிபித்தன்வெந்திறன்மந்தியானை
மன்னவனகரியைந்துவருந்திரவியங்களென்ப. (ச௭)

கறியொடுகோட்டமிக்ககாரகிலொடுதக்கோலம்
நறியகுங்குமமைந்தென்பநன்மலைத்திரவியப்பேர்
துறையிலம்பொறிநுகர்ச்சிசுவையொளியூறேயோசை
அறையுநாற்றங்களென்னுமடைவிலைவயாகுமன்றே. (ச௮)

அசைவிலாவனசஞ்சூதமசோகமேமுல்லைநீலம்
ஒசியும்வேள்கணைகளாகுமுன்மத்தமதனமோகம்
வசையில்சந்தாபத்தோடுவசீகரணங்கணைப்பேர்
இசையுமற்றிவைகள்செய்தேயிடுமவத்தையுமேற்சொல்வாம். ()

௪௨. ஐவகைவினா—அறியான்வினாவல், அறிவொப்புக்காண்டல், ஐயந்தீர்தல், அவனறிவுதான்கோடல், மெய்யவற்குக்காட்டல்.
ஐம்பூதம்—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

௪௩. ஈசுரனைம்முகம்—சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசானம்.
ஐவகையிசைக்கருவி—தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி.

௪௪. ஐவகைவேள்வி—தேவயாகம், பிரமயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம்.
ஐவகைத்தாயர்—பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய்.

௪௫. ஐவகைத்தொழில்—எண்ணல், எழுதல், இலைகிள்ளல், மலர்தொடுத்தல், யாழ்வாசித்தல்.
மெய்யின் ஐவகையவத்தை—கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, மூச்சிடு, நட்டுவிழுதல்.

௪௬. காடுபடுதிரவியம் ஐந்து—அரக்கு, இருல், தேன், மயிற்பீலி, நாவி.
கடல்படுதிரவியம் ஐந்து—உப்பு, பவளம், முத்து, சங்கு, ஓர்க்கோலை.

௪௭. நாடுபடுதிரவியம் ஐந்து—செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, வாழை, கரும்பு.
நகர்படுதிரவியம் ஐந்து—கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, யானை, அரசன்.

௪௮. மலைபடுதிரவியம் ஐந்து—மிளகு, கோட்டம், அகில், நாக்கோலம், குங்குமப்பூ.
ஐம்புலன்—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

௪௯. மன்மதபாணம் ஐந்து—தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, நீலோற்பலப்பூ. உன்மத்தம், மதனம், மோகம், சந்தாபம், வசீகரணம் என்பன முறையே இவற்றின் பெயர்களாம்.

பெருகுசுப்பிரயோகம்பின்பிறந்தவிப்பிரயோகம்மேல்
மருவியசோகமோகமரணமுமுறையேசெய்யும்
பெருகுசுப்பிரயோகந்தான்பேச்சொடுநினைவுமாகும்
விரவுவிப்பிரயோகந்தான்வெய்துயிர்த்திரங்கலாமே. (௫௦)

சோகமேவெதுப்பினோடுதுய்ப்பவைதெவிட்டல்செய்யும்
மோகமேயழுதலோடுமொழிபலபிதற்றலென்ப
வேகமாமரணந்தானேமிகுமயக்கோடயர்ப்பாம்
பாகடர்சொல்லினல்லாய்பகருநூலியல்பிதாமே. (௫௧)

ஓதலேயோதுவித்தலுடன்வேட்டல்வேட்பித்திட்டல்
ஈதலேயேற்றலாறுமேற்குமந்தணர்தொழிற்பேர்
ஓதலேவேட்டலீதலுலகோம்பல்படைபயிற்றல்
மேதகுபோர்செய்திட்டல்வேந்தர்செய்தொழில்களாறே. (௫௨)

படைகுடிகூழமைச்சுப்பற்றியநட்பினோடு
நெடுமதிலரசியற்குநிகழ்த்தியவாறுபேதம்
மிடையறவோதல்வேட்டல்வேளாண்மைவாணிகத்தி
னுடனிரைகாத்தலேரையுழலாறும்வசியர்க்காமே. (௫௩)

வசியர்தந்தொழில்களாறுள்வகுத்தமுத்தொழில்களான
பசுவோம்பல்பொருளையீட்டல்பயிரிடல்புராணமாதி
நசையுறவோதலீதலண்ணுமந்தணர்முன்னோர்க்கு
வசைதவிரநுகூலம்மாம்வகைத்தொழில்சூத்திரர்க்காம். (௫௪)

அரிச்சந்த்ரனளனேவெற்றியாமுசுகுந்தனோடு
பொருப்புறப்புகழைவைத்தபுருகுச்சன்புரூரவாவே
விரித்தபூந்தாமக்கார்த்தவீரியனென்றின்னோரே
தெரித்துமுன்னெடுத்துவைத்ததிகிரிமன்னவர்களாறே. (௫௫)

ஆறங்கஞ்சிக்ஷைகற்பமாம்வியாகரணமற்றும்
வீறியநிருத்தஞ்சந்தோவிசிதஞ்சோதிடமென்றாகும்
கூறிடுங்கொடியகாமங்குரோதமேயுலோபமோகம்
பாறியமதங்களேமாற்சரியமுட்பகையாறென்ப. (௫௬)

ஒத்தவில்வேல்வாள்யானையுயர்பரிதேரோடாறே
சுத்தமூலங்கான்கூலிதுணைபகைநாடென்றாறே
தித்தித்தல்புளித்தல்கூர்த்தல்சேரவேதுவர்த்தல்காழ்த்தல்
கைத்தலேயறுசுவைக்குக்காட்டியவபிதானங்கள். (௫௭)

௫0. ஐங்கணையவத்தை—முறையே சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பனவாம்.
சுப்பிரயோகத்தின்றன்மை—பேச்சும் நினைவும். விப்பிரயோகத்தின்றன்மை—மூச்செறிந்து வருந்துதல்.

௫௧. சோகத்தின்றன்மை—வெதுப்பும் உணவு வெறுத்தலும்.
மோகத்தின்றன்மை—அழுதலும் பிதற்றலும்.
மரணத்தின்றன்மை—மயக்கமும் அயர்ச்சியும்.

௫௨. அந்தணர்க்குரிய அறுதொழில்—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.
அரசர்க்குரிய அறுதொழில்—ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைக்கலம்பயிலல், போர்செய்திட்டல்.

௫௩. அரசர்க்குரிய ஆறங்கம்—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.
வைசியர்க்குரிய அறுதொழில்—ஓதல், வேட்டல், வேளாண்மை, வாணிகம், பசுக்காத்தல், உழவு.

௫௪. சூத்திரர்க்குரிய அறுதொழில்—பசுக்காத்தல், பொருளீட்டல், பயிரிடல், புராணுதிகளையோதல், ஈதல், அந்தணர்முதலியோர்க்கு அநுகூலமாகிய தொழில் செய்தல்.

௫௫. ஆறுசக்கிரவர்த்திகள்—அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன், புரூரவா, கார்த்தவீரியன்.

௫௬. வேதாங்கம் ஆறு—சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம்.
ஆறு உட்பகை—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

௫௭. அறுவகைத்தானை—வில், வேல், வாள், யானை, குதிரை, தேர்.
அறுவகைப்படை—மூலப்படை, காட்டுப்படை, கூலிப்படை, துணைப்படை, பகைப்படை, நாட்டுப்படை.
அறுவகைச்சுவை—தித்தித்தல், புளித்தல், கூர்த்தல், துவர்த்தல், கார்த்தல், கைத்தல். [கூர்த்தல்—உவர்த்தல். கார்த்தல்—உறைத்தல்.]

அரியவுட்சமயமாறேயாவனசைவந்தூய்மை
பெருகுபாசுபதத்தோடுபிறங்குமாவிரதமற்றும்
கருதியவீடுபேறுகாட்டுகாளாமுகந்தான்
மருவியவாமமிக்கவைரவமென்னலாமே. (௫௮)

அறுபுறச்சமயந்தானேயுறையுலோகாயதம்பின்
உறைதருபௌத்தமேயாருகதமீமாஞ்சமோடு
குறிபெறுமாயாவாதங்கூறியபாஞ்சராத்ரம்
நெறிபெறுமிவையேயென்னநிகழ்த்துவர்நூல்வல்லோரே. (௫௯)

செல்வமேவிளைவுமிக்கசெழுவளஞ்செங்கோலுண்மை
ஒல்குநோய்குறும்பிலாமையுற்றநாட்டமைதியாறும்
நல்லறமறந்தான்மேலேநாட்டியவறம்பொருட்கள்
ஒல்லுமின்பங்களாறுமோங்கரசியலின்பேதம். (௬௦)

தந்தமின்வருணக்காப்பிற்றரும்பொருளாலேபேணல்
அந்தவாறியற்கைதம்முளறநிலையறமென்றாகும்
முந்திகலறுத்தல்செஞ்சோற்றுதவியில்லோர்ச்செகுத்தல்
வந்தவாநிரையைமீட்டன்மறநிலையறமென்றாமே. (௬௧)

நெறிவழிநின்றுசத்தநிலையினாலுழந்துழந்து
பெறுபொருளறநிலைக்குப்பேசியமுறைமையாகும்
செறுநர்தம்பொருளுமற்றத்தெண்டத்திற்பொருளுஞ்சுங்கின்
மறுகியபொருளுமம்மறநிலைப்பொருளின்பேரே. (௬௨)

கூறுமோர்பருவநல்லகுலமொத்ததாசத்தீவேட்
டாறியவில்லிருத்தலறநிலையின்பமாகும்
ஏறுதான்றழுவல்வில்லாவிலக்கமெய்திடுதலெல்லாம்
மாறுடைநெறியிற்கூட்டமறநிலையின்பமாமே. (௬௩)

வரைவொடுதொழிலேவித்தைவாணிகமுழவேசிற்பம்
உரைசெயும்போகபூமியொழிவினிலாதிகாலம்
விரைசெறிபிண்டிவேந்தன்விதித்தலினஃதேயம்ம
கருமபூமியென்னும்பேர்கண்டதொன்றுண்டுநூலின். (௬௪)

விதியுளிபதினாறுண்டுமேவியபன்னீராண்டுப்
பதியொடுமனைவிதெய்வப்பத்துப்பூந்தருவும்வேண்டும்
புதியபோகங்கொடுப்பப்புணர்ந்துதாம்பிரியாராகி
மதியொடுமறுவுமென்னவாழ்வதுபோகபூமி. (௬௫)

௫௮. அறுவகையகச்சமயம்—சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம்.

௫௯. அறுவகைப்புறச்சமயம்—உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம்.

௬0. நாட்டிற்குரிய அறுவகைச்சிறப்பு—செல்வம், விளைவு, பல்வளம், செங்கோன்மை, நோயின்மை, குறும்பின்மை.
அறுவகையரசியல்—அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம்.

௬௧. அறநிலையறம்—நான்குவருணத்தாரும் தத்தம் வருணாச்சிரமங்களிற் பிறழாது தங்களைக்காக்குங் காவலின்பொருட்டுக்கொடுக்கும் பொருள்கொண்டு அவரைப்பாதுகாத்தல்.
மறநிலையறம்—பகைத்திறந்தெறுதலும்,செஞ்சோற்றுதவியில்லோரைச் செகுத்தலும், நிரைமீட்டலுமாம்.

௬௨. அறநிலைப்பொருள்—நீதிவழிநின்று தத்தம் நிலையினால் முயன்று பெறுபொருள்.
மறநிலைப்பொருள்—பகைஞர்பொருளும், தண்டத்தில் வந்தபொருளும், சூதில்வென்ற பொருளுமாம்.

௬௩. அறநிலையின்பம்—ஒத்தபருவமும் ஒத்தகுலமுமுடைய கன்னிகையை அக்கினிமுன்பாக விவாகஞ்செய்து இல்லிலிருந்தநுபவிக்குமின்பம்.
மறநிலையின்பம்—ஏறுதழுவலும்,வில்லால் இலக்கமெய்தலும் முதலியவற்றுற் கன்னிகையை விவாகஞ்செய்தநுபவிக்குமின்பம்.

௬௪. கருமபூமிக்குரிய அறுவகைத்தொழில்—வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

௬௫. போகபூமியாவது—பதினாறுவயசுடைய நாயகனும் பன்னிரண்டு வயசுடைய நாயகியும் பத்துக்கற்பகங்களும் வேண்டிய புதியபோகங்களைக் கொடுப்பப்பெற்றுப் புணர்ந்தின்பமநுபவித்துப் பிரியாது வாழும் பூமி.

வருமாதியரிவஞ்சம்பார்மதித்தநல்லரிவஞ்சம்பைம்
பொருளாரேமதவஞ்சம்மேற்புகழ்பெறுமேமவஞ்சம்
ஒருதேவகுருவத்தோடேயுத்தரகுருவமென்ன
வருபோகபூமியாறுவகைப்படுமியல்பதாமே. (௬௬)

வருநலபிராமிமற்றைமகேச்வரியொடுகௌமாரி
மருடீர்வைணவிவராகிமாகேந்த்ரியொடுசாமுண்டி
இருமையேழ்திருக்கள்பேராமிரதமேயுதிரமென்பு
பரவுதோலிறைச்சிமூளைபற்றுசுக்கிலந்தாதேழே. (௬௭)

அறமொடுபொருளேயின்பமன்பொடுபுகழ்மதிப்பு
மறுமையென்றேழுஞ்செங்கோன்மன்னவர்பேறேயாகும்
அறிவுளதேவர்மக்களறிவின்மீன்விலங்குசெந்து
பறவைதாவரங்களென்பகருமேழ்பிறப்பின்பேரே. (௬௮)

ஊர்வனபதினொன்றாகுமொன்பான்மாறுடர்தம்பேதம்
நீரினில்விலங்குபுள்ளுப்பப்பத்தாநெடியதேவர்
சாருமீரேழ்நாலைந்தேதாவரயோனிபேதம்
ஆருமெண்பானான்கோடேயமைத்தநூறாயிரங்கள். (௬௯)

இவர்தருநாவலோடேயிறலியேகுசைகிரவுஞ்சம்
புவிபுகழிலவுதெங்குபுட்கரந்தீவேழின்பேர்
உவர்கரும்பின்சாறோடேயொண்மதுநெய்சிறந்த
நவமதாந்தயிர்பாலப்புநாட்டியகடலேழின்பேர். (௭0)

நவமரம்பூலோகமற்றுநாட்டியபுவலோகந்தான்
சுவலோகமகலோகம்மேசொற்றிடுஞ்சனலோகம்மே
தவலோகமதனினோடுசத்தியலோகமின்ன
உவமானமில்லாமேலேழுலகெனுமறிவனூலே. (௭௧)

அதலமேவிதலமற்றுமடைவானசுதலத்தோடும்
இதமுறுத்ராதலம்மேரசாதலமகாதலந்தான்
புதியபாதலத்தினோடுபோற்றுங்கீழேழுலோகம்
உதவியவுலகநூலீரேழெனுமுலகுதாமே. (௭௨)

பெருகியகளிற்றின்வட்டம்பெருமணல்வட்டம்பொங்கும்
எரிபரல்வட்டமற்றுமெறியரிபடையின்வட்டம்
பொருவறவிரண்டுமாழ்கப்போர்த்திடும்புகையின்வட்டம்
இருள்வட்டம்பெருங்கீழ்வட்டமென்பவேழ்நிரயவட்டம். (௭௩)

௬௬. அறுவகைப்போகபூமி—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏம தவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம்.

௬எ. எழுவகைமாதர்கள்—பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மாகேந்திரி, மாகாளி.
எழுவகைத்தாது—இரதம், உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம்.

௬அ. மன்னவர்க்குரிய எழுவகைப்பேறு—அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, மறுமை.
எழுவகைப்பிறப்பு—தேவர், மனிதர், நீர்வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறவை, தாவரம்.

௬௯. எழுவகைப்பிறப்பில் எண்பத்துநான்குநூறாயிரயோனிபேதம்—ஊர்வன பதினொருநூறாயிரயோனிபேதம், மனிதர் ஒன்பது நூறாயிரயோனிபேதம், நீர்வாழ்வன பத்துநூறாயிரயோனிபேதம், விலங்கு பத்துநூறாயிரயோனிபேதம், பறவை பத்துநூறாயிரயோனிபேதம், தேவர் பதினான்குநூறாயிரயோனிபேதம், தாவரம் இருபது நூறாயிரயோனிபேதம்.

எ௦. ஏழுதீவு—நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, இலவந்தீவு, தெங்கந்தீவு, புட்கரதீவு.
ஏழுகடல்—உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், சுத்தநீர்க்கடல்.

எக. ஏழுமேலுலகம்—பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம்.

எஉ. ஏழுகீழுலகம்—அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம்.

எங. ஏழுநிரயவட்டம்—களிற்றுவட்டம், மணல்வட்டம், எரிபரல்வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், இருள்வட்டம், பெருங்கீழ்வட்டம்.

குழைவுறுகூடசாலமிரௌரவங்கும்பிபாகம்
விழுபூதியள்ளல்செந்துவிதித்தமாபூதியாமே
வழிகங்கையமுனையேநன்மதைசரஸ்வதிகாவேரி
விழுமியகுமரிகோதாவரியெழுநதியின்பேரே. (எச)

புவிபுகழ்கும்பயோனிபுலத்தியனங்கிராவே
கவுதமன்வசிட்டன்மற்றைக்காசிபனொடுமார்க்கண்டன்
இவரெழுமுனிவர்விட்டிரெட்டியரேனங்கள்வர்
அவமழைநால்வாய்கிள்ளையாமிவைநாட்டேழ்குற்றம். (எரு)

பொழியுமாவர்த்தமெங்கும்போர்த்தபுட்கலஞ்சங்காரம்
கழியுமாசவனமேநீர்க்காரியேருதிசொற்காரி
மொழிசிலாவருடமென்பமுகில்களோரேழினாமம்
அழிவுகாலத்திற்றோன்றியடர்வனபடர்வவானே. (எசு)

களிற்றயிராவதஞ்சீர்காட்டுபுண்டரீகந்தானங்
குளித்தவாமனம்பொன்னோடைக்குமுதமஞ்சனம்வெம்போரை
விளைத்திடும்புட்பதந்தமேவியசார்வபௌமம்
பிளிற்றுசுப்பிரதீகந்தான்பெருத்தவெண்டிசையானைப்பேர். (எஎ)

மன்னியவிமயத்தோடுமந்தரங்கைலைவிந்தம்
கொன்வளர்நிடதமேமகூடமேநீலவெற்புத்
துன்னியகந்தமாதனத்தொடுசூழ்வெற்பெட்டாம்
இன்னவையுலகநூலினியற்கையேயென்றுகாண்மின். (எஅ)

மன்னுவாசுகியனந்தன்மருவியதக்கன்சங்கன்
பன்னியகுளிகனோடுபதுமன்மாபதுமன்மற்றைக்
கொன்னெயிற்றழல்விழிக்கார்க்கோடகனென்றவெட்டும்
முன்னியகடவுட்பாம்பின்மொழியபிதானமாமே. (எகூ)

திண்டிறன்மகவானங்கிசெறியமனிருதியோடு
கொண்டிடும்வருணன்வாயுக்குபேரனீசானனென்ப
எண்டிசையுலோகபாலரிவர்பேர்கீட்டிசைதொட்டெண்ணும்
கண்டகீழ்ப்பால்வடக்குக்கதிரொடுதிங்கட்காமே. (அ௦)

கொடிபுகைசீயஞ்சேதிக்குரைத்துவள்ளென்னுஞாளி
இடபமேகழுதையானையேருகாகந்திக்கங்கம்
படிநீர்தீவளியாகாயம்பரிதியேவிரவுதிங்கள்
அடல்புனையியமானன்மற்றட்டமூர்த்தங்களாமே. (அக)

எ௪. ஏழுநரகம்—கூடசாலம், இரௌரவம், கும்பிபாகம், பூதி, அள்ளல், செந்து, மகாபூதி.
ஏழுநதி—கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, காவேரி, குமரி, கோதாவரி.

எ௫. ஏழுமுனிவர்—அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்.
நாட்டில்வரும் ஏழுகுற்றம்—விட்டில், தொட்டியர், பன்றி, கள்வர், அவமழை, யானை, கிளி.

எ௬. ஏழுமுகில்—ஆவர்த்தம், புட்கலம், சங்காரம், துசவணம், நீர்க்காரி, சொற்காரி, சிலாவருடம்.

எ௭. எட்டுத்திசையானை—அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம்.

எ௮. எட்டுமலை—இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம்.

எ௯. எட்டுநாகம்—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன்.

அ௦. எட்டுத்திக்குப்பாலகர்—இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். இவர்சார்திசைகள் முறையே கிழக்கு முதலாக எண்ணப்படும்.
சூரியசந்திரர் சார்திசைகள்—முறையே கிழக்கும் வடக்குமாம்.

அக. எட்டுத்திக்குக்குறி—கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.
அட்டமூர்த்தம்—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.

மன்னியவணிமாமற்றைமகிமாவேகரிமாவோடு
பின்னுறுலகிமாபிராத்திபெறும்பிராகாமியங்கள்
முன்னுறுமீசத்துவம்பின்முற்றியவசித்துவந்தான்
உன்னியநூல்களோதுமோரிருநான்குசித்தி. (௮௨)

இயமமேநியமமுந்தியேற்றவாசனத்தினோடு
நயனுறுபிராணாயாமநாட்டியபிரத்தியாகாரம்
சயமுறுதியானத்தோடுதாரணைசமாதியெட்டும்
வியனுறும்யோகமென்றுவிதித்தனர்மதித்தநூலோர். (௮௩)

அறமையப்படாமைமற்றையவாவின்மையுவர்ப்பொன்றின்மை
நெறிகெழுமயக்கமின்மைநின்றவப்பழியைநீக்கல்
உறுதியினிறுத்தல்பேரன்புடைமையேயறம்விளக்கல்
இறைவனதறத்துட்கூறுமெட்டுறுப்பிவைகளாமே. (௮௪)

கடையிலாஞானத்தோடுகாட்சிவீரியமேயின்பம்
மிடையுறுநாமமின்மைவிதித்தகோத்திரங்களின்மை
அடைவிலாவாயுவின்மையந்தராயங்களின்மை
உடையவனிறைவனென்னவுரைக்குமாருகதநூலே. (௮௫)

இன்னவையருகநூலினிசைக்குமெண்குணங்கண்மற்றும்
தன்வயந்தூயதேகந்தகுமியல்புணர்வுமேலாப்
பன்னுமுற்றுணர்வினோடுபாசங்களியல்பினீங்கல்
முன்னுபேரருளேமற்றைமுடிவிலாவாற்றல்பின்னும். (௮௬)

வரம்பிலாவின்பமென்றேவாய்த்திடுங்குணங்களெட்டும்
தரம்பெறுசைவநூலிற்சாற்றியதொகையாமென்ப
திருந்துமிக்குணங்கடானேசேர்ந்தவனியாவனென்னிற்
பொருந்தியவுலகமெல்லாம்புரந்திடுங்கடவுளாமே. (௮௭)

மன்னியவறிவுகாட்சிமறைத்தல்வேதநீயத்தோடு
துன்னுமோகநீயமாயுத்தொடர்நாமகோத்திரங்கள்
முன்னுறுமந்தராயமொழிந்தவெண்குற்றமாகும்
இன்னவைதீர்ந்தோன்யாவன்யாவர்க்குமிறைவனாமே. (௮௮)

பெறுவதுதெரிதலீட்டல்பேணிமற்றவைபகுத்தல்
இறுவதஞ்சாமையென்றுமிடனறிந்தொழுகல்வந்தே
உறுபெருந்தனிமையாற்றலுடன்முனிவிலனேயாதல்
மறுவறுபொழுதிற்கூடல்வசியர்தங்குணங்களெட்டே. (௮௯)

அ௨. எட்டுச்சித்தி—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

அ௩. எட்டுயோகாங்கம்—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி.

அ௪. எட்டுத்தருமாங்கம்—அறமைபடாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழிந்தோரை நிலைநிறுத்தல், அறுசமயத்தவர்க்கன்பு, அறம்விளக்கல்.

அ௫. அருகனுக்குரிய எண்குணம்—கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அந்தராயங்களின்மை.

அ௬. சிவனுக்குரிய எண்குணம்—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல்,இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலாற்றலுடைமை.

அ௭. வரம்பிலின்பமுடைமை.

அ௮. அருகனுக்காகாவென விலக்கப்பட்ட எட்டுக்குற்றம்—ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம்.

அ௯. வைசியர்க்குரிய எண்வகைக்குணம்—உழுவதுதெரிதல், ஈட்டல், கொடுத்தல், இழுவதஞ்சாமை, இடனறிந்தொழுகல், தனிமையாற்றல், முனிவிலனாதல், பொழுதொடுபுணர்தல்.

குணகாரம்பரியச்சந்தான்குறித்தபாற்கரமேமூலம்
தணவாமானதமேகன்மஞ்சலிதியேதருதமெட்டும்
கணியார்தங்கணிதந்திபங்கவரிகண்ணடிதோட்டி
புணர்பீனேமுரசுகும்பம்பொலிகொடிசுபமோரெட்டே. (௧௦)

தட்டலேபற்றலோடுதடவலேதீண்டல்குத்தல்
வெட்டலேகட்டலூன்றன்மெய்ப்பரிசங்களெட்டாம்
விட்டில்தன்னரசுநால்வாய்மிகுமழைமிகுகாற்றோடே
நட்டம்வேற்றரசுகிள்ளைநாடுறுங்கேடெட்டென்ப. (௧௧)

பிரமமேபிரசாபத்தியம்பெருகுமாரிடமேதெய்வம்
கருதுகாந்தருவத்தோடேகாட்டியவசுரமற்றும்
பரவியவிராக்கதங்கள்பைசாசமிருநான்கென்ப
மருவியவுலகியற்கைவகுத்திடுமணங்களின்பேர். (௧௨)

நிரைகவர்ந்திடுதல்வெட்சிநிரைமீட்டல்கரந்தையென்ப
வெருவார்மேற்சேறல்வஞ்சிமீட்டெதிரூன்றல்காஞ்சி
வருநொச்சிபுரிசைகாத்தல்வளைத்திடலுழிஞையாகும்
பொருவதுதும்பையென்பபோர்வெல்லல்வாகையாமே. (௧௩)

கரணத்திற்றிரள்கள்வாய்ந்தகடைகாப்போர்நகரிமாக்கள்
தருபடைத்தலைவர்மற்றுந்தன்கிளைச்சுற்றம்யானை
புரவியூர்வோரேயென்றும்போற்றுகாவிதியரென்றும்
விரவியவெண்பேராயம்வேந்தருக்கமைத்ததாமே. (௧௪)

குறளொடுசெவிடுமூங்கைகூன்மருள்குருடுமாவே
உறுமுறுப்பில்லாப்பிண்டமோதியவெண்மெய்யெச்சம்
திறையுநீர்நிலனேதேயுநிகழ்சுடர்மதியேவானம்
பெறுமியமானன்வாயுப்பேசியகணங்களெட்டே. (௧௫)

நிலனொடுநீர்வெண்டிங்களெரியமானன்வெய்யோன்
உலவுதீவாயுவின்னொன்றோதியகணங்களெட்டில்
நலமுறுகவிதைமுன்னர்நாட்டியநான்குநன்றாம்
கலகமாம்பின்னர்நான்குகணங்களுங்காணுங்காலே. (௧௬)

௬0. அட்டகணிதம்—குணகாரம், பரியச்சம், பாற்கரம், மூலம், மானதம், கன்மம், சலிதி, தருதம்.

அட்டமங்கலம்—விளக்கு, கவரி, கண்ணாடி, தோட்டி, இணைக்கயல், முரசு, நிறைகுடம், கொடி.

௬௧. எண்வகைமெய்ப்பரிசம்—தட்டல், பற்றல், தடவல், தீண்டல், குத்தல், வெட்டல், கட்டல், ஊன்றல்.

நாட்டில்வரும் எண்வகைக்கேடு—விட்டில், தன்னரசு, யானை, மிகு மழை, மிகுகாற்று, நட்டம், வேற்றரசு, கிளி.

௬உ. எண்வகைமணம்—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய் வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம்.

௬௩. எண்வகைமாலை—வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை. இவை முறையே நிரைகவர்தல், நிரைமீட்டல், பகைமேற்சேறல், எதிரூன்றல், மதில்காத்தல், அரண்வளைத்தல், அதிரப்பொருதல், போர்வெல்லுதல் என்னுமி வற்றிற்குரியனவாம்.

௬௪. அரசர்க்குரிய எண்பேராயம்—கருமாதிகாரர், சடைகாப்பா ளர், நகரிமாக்கள், படைத்தலைவர், சுற்றத்தார், யானைவீரர், குதி ரைவீரர், காவிதியர்.

௬௫. எண்வகை உடற்குறை—குறள், செவிடு, மூங்கை, கூன், மருள், குருடு, மா, உறுப்பிலாப்பிண்டம். [மருள் - ஆணோ பெ ண்ணோவென்றறியப்படாத உறுப்புமயக்கம்.] மா-விலங்குறுப் புவிரவப்பெற்றவடிவம். உறுப்பில்பிண்டம் - உறுப்புக்குறைந்த வடிவம்.

செய்யுளுக்குரிய எண்வகை அசை—நீர்க்கணம், நிலக்கணம், தேயு கணம், சூரியகணம், சந்திரகணம், ஆகாயகணம், இயமானக ணம், வாயுகணம்.

௬௬. மேற்சொல்லிய எட்டினுள் நிலக்கணம், நீர்க்கணம், சந்திர கணம், இயமானகணம் என்னும் நான்கும், நூலிலே முதற்செ ய்யுண் முதலில் வருதல் நன்றாம். மற்றைய நான்கும் வருதல் தீதாம்.

நிரையதுமுன்றுதானேநிலக்கணநேர்மூன்றாகி
நிரையிணைபின்னராயினீரேநேரிணைபின்றாகி
நிரையதுமுன்னராயினெடியவெண்டிங்களென்ப
புரையறநேர்மூன்றாகிற்பொருந்தியவியமானன்றான். (கூஎ)

நிரைநடுவாகமற்றைநேரிருபாலும்வெய்யோன்
நிரையிருபாலுநிற்கநேர்நடுத்தியென்றாகும்
நிரையிறுவாகமற்றுநேரிணைமுன்னேவாயு
நிரையிணைமுன்னராகிநேரிறினீளாகாயம். (கூஅ)

எதிர்கொளல்பணிதலோடுமிருக்கைகால்கழுவலாறும்
புதுவிரைநறும்பூத்தூபம்புனைவிளக்கடைவேயேத்தல்
விதியின்வாளரவுதோளும்விடமுநீத்தென்னநீத்த
அதிகருக்கமுதமேந்தலவைநவபுண்ணியந்தான். (கூகூ)

வடபாலேதென்பால்கீழ்பால்வகுத்தமேல்பால்விதேகம்
வடபாலேதென்பான்மீதுவைத்திடுமிரேபதங்கள்
வடபாலேதென்பான்மீதுவைத்திடுபரதத்தோடு
வடிவாமத்திமகண்டங்கள்வருநவகண்டமாமே. (க00)

வைத்தநாமங்கண்மாலையவச்சிரஞ்சித்திரங்கள்
சத்தமேவத்துவோடுசதுரங்கஞ்செய்யுளெட்டும்
புத்தரேகாணப்பட்டபொருட்குறைநிறைவேயென்றும்
ஒத்ததாரணைகளென்பவோதுமொன்பானுமீதே. (க0க)

தனதுநாளிற்பின்னாளுஞ்சார்ந்திடுநாலுமாறும்
வினவியவெட்டொன்பானும்விருத்தமொன்றில்லைதன்னாள்
இணையமூன்றுடனைந்தாநாளேழாநாளிவைபொருந்தா
நினையுமிம்மூன்றொன்பானுணேர்படுமூன்றுவட்டம். (க0௨)

அடியினிற்சமதாளத்தோடருமமேயரிதாளம்மேற்
படிமமேதுருவதாளம்பற்றியசித்திரந்தான்
விடதாளஞ்சயமேமற்றுமேவியநிவிர்ததாளம்
நடையுறுபுலவரோர்துநவதாளமிவைகளாமே. (க0௩)

மரகதம்பவளநீலம்வச்சிரம்பதுமராகம்
விரவியதரளமேகோமேதகம்புருடராகம்
உரவியகாந்திவிட்டேயுமிழ்வயிடூரியந்தான்
பெருகியநவமணிக்குப்பெயரிவையாகுமென்ப. (க0௪)

௯௭. நிரை நிரை நிரை நிலக்கணம். நேர் நிரை நிரை நீர்க்கணம். நிரை நேர் நேர் சந்திரகணம். நேர் நேர் நேர் இயமானகணம்.

௯௮. நேர் நிரை நேர் சூரியகணம். நிரை நேர் நிரை தேயுகணம். நேர் நேர் நிரை வாயுகணம். நிரை நிரை நேர் ஆகாயகணம்.

௯௯. பெரியோர்க்குச்செய்யும் நவபுண்ணியம்—எதிர்கொளல், பணிதல், ஆசனத்திருத்துதல், கால்கழுவல், அருச்சித்தல், தூபங்காட்டல், தீபங்காட்டல், துதித்தல், உணவுகொடுத்தல்.

௱. நவகண்டம்—வடபால்விதேகம், தென்பால்விதேகம், கீழ்பால்விதேகம், மேல்பால்விதேகம், வடபாலிரேவதம், தென்பாலிரேவதம், வடபாற்பரதம், தென்பாற்பரதம், மத்திமகண்டம்.

௱௧. நவதாரணை—நாமதாரணை, மாயாதாரணை, வச்சிரதாரணை, சித்திரதாரணை, சத்ததாரணை, வஸ்துதாரணை, சதுரங்கதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை.

௱௨. செய்யுளுக்குரிய நட்சத்திரம் ஒன்பதாகப்பிரித்தறிதல்—பாட்டுடைத்தலைவன்மீது பாடப்படும் முதற்பாவின் முதற்சீர்க்குரிய முதலெழுத்திற்கமைந்த நட்சத்திரம் அவனியற்பெயரின் முதலெழுத்திற்கமைந்த நட்சத்திரத்திற்கு அடுத்த நட்சத்திரமாகவும், நான்காம் ஆறாம் எட்டாம் ஒன்பதாம் நட்சத்திரங்களாகவும் இருத்தல் நன்று. அவனுடைய நட்சத்திரமாகவும், அதற்கு மூன்றாம் ஐந்தாம் ஏழாம் நட்சத்திரங்களாகவும் இருத்தல் தீது. இவ்விருபத்தேழு நட்சத்திரங்களும் மும்முறை ஒன்பது ஒன்பதாகப் பிரித்து அறியப்படும்.

௱௩. நவதாளம்—சமதாளம், அருமதாளம், அரிதாளம், படிமதாளம், துருவதாளம், சித்திரதாளம், விடதாளம், சயதாளம், நிவிர்த்ததாளம்.

௱௪. நவரத்தினம்—மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வயிடூரியம்.

நல்லசிங்காரம்வீரம்நகைசாந்தங்கருணைகுற்சை
ஒல்லுமற்புதம்பயத்தோடுறுகோபமிரதமொன்பான்
கல்லுலோகம்மண்செங்கல்கண்டசர்க்கரைமெழுக்குச்
சொல்லியமரமேதந்தஞ்சுதைவண்ணந்தொழிற்சிற்பர்க்காம். ()

நெடுமலையாறுநாடூர்நீண்டதார்புரவியானை
கொடிமுரசுடனேதானைகூறியதசாங்கமென்ப
படிபுனைநாவலேழுப்பழநாற்பான்மரமுத்தக்கா
சொடுமாவின்றளிர்பத்தென்பவோதியதுவரின்பேரே. (௧0௬)

நாமமீனுமைபன்றிநாரசிங்கத்தினோடு
வாமனன்பரசுராமன்வானரர்தொழுமிராமன்
பாமலிவாசுதேவன்பலதேவனுடனேகற்கி
ஆமிவைபத்துந்தானேயரியவதாரமென்ப. (௧0௭)

வருவிருந்தோம்பலாணைவழிநிற்றலொழுக்கமூக்கம்
கரிலகத்தின்மையென்றுங்கைக்கடனாற்றலன்றே
உரியதாமிறைவிறுத்தலொற்றுமைகோடல்போற்றல்
விரவுமாண்வினைதொடங்கல்வேளாளர்செய்கைபத்தே. (௧0௮)

ஏடவிழ்மகிழ்சுவைக்கவெழிற்பாலைநண்புகூடப்
பாடலநிந்திக்கத்தேம்படிமுல்லைநகைக்கப்புன்னை
ஆடநீள்குராவணைக்கவசோகுதைத்திடவாசந்தி
பாடமாப்பார்க்க * வார்சண்பகநிழல்படத்தளிர்க்கும். (௧0௯)

பரிதியிந்திரண்டுசீறும்பைநாகக்கோளிரண்டோ
டிருசுடர்வளைந்துசூழும்பரிவேடநெடுகவீண்டுப்
பெருகியவான்மீன்வானிற்பெருந்தூமமெதிர்ந்தவில்லுக்
கருதுமிவ்வெல்லாம்பேசிற்கரந்துறைகோள்களாமே. (௧௧0)

சாற்றுகாப்புச்செங்கீரைதாலேசப்பாணிமுத்தம்
போற்றுவாரானையேயம்புலிசிற்றில்சிறுபறைப்பின்
ஏற்றிடுஞ்சிறுதேராமிப்பருவம்பத்தையுமிசைக்கும்
தேற்றுமாண்பிள்ளைப்பாட்டாசிரியஞ்சேர்விருத்தப்பாவே. (௧௧௧)

அரிவையர்க்காகிலீற்றிலறைமூன்றுபருவமாகா
உரியதாங்கழங்கம்மானையூசல்முன்னேழினோடு
வருமூன்றேயாதிமூவேழ்மதிகாரெற்றித்தமாதத்
திருபாலாரையுங்கேட்பித்தலினிதைந்தேழாண்டுதானே. (௧௧௨)

* பாடவேமராப்பார்க்கச் சண்பக என்றும்பாடம்.

௧௦௫. நவரசம்—சிங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, குற்சை, அற்புதம், பயம், கோபம். [சிங்காரம்-இன்பம். குற்சை-இழிபு.]
பத்துவகைச்சிற்பத்தொழிலுறுப்பு—கல், உலோகம், மண், செங்கல், கண்டசர்க்கரை, மெழுகு, மரம், தந்தம், சுதை, வண்ணம்.

௧௦௬. தசாங்கம்—மலை, யாறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, தானை.
பத்துவகைத்துவர்—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முந்தக்காசு, மாந்தளிர்.

௧௦௭. விட்டுணுவின் தசாவதாரம்—மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனம், பரசுராமன், தசரதராமன், கண்ணன், பலதேவன், கற்கி.

௧௦௮. வேளாளருடைய பத்துவகைச்செய்கை—விருந்தோம்பல், ஆணைவழிநிற்றல், ஒழுக்கம், முயற்சி, மனத்துமாசின்மை, கைக்கடனாற்றல், அரசர்க்கிறைகொடுத்தல், ஒற்றுமைகோடல், சுற்றம்பேணல், மாட்சிமையானவினைகளைத்தொடங்கல்.

௧௦௯. பெண்களான் மலரும் பத்துவகைமரம்—மகிழ் பெண்கள் சுவைத்தலாலும், பாலை நண்புசெய்தலாலும், பாதிரி நிந்தித்தலாலும், முல்லை நகைத்தலாலும், புன்னை ஆடுதலாலும், குரா அணைத்தலாலும், அசோகு உதைத்தலாலும், குருக்கத்தி பாடுதலாலும், மா பார்த்தலாலும், சண்பகம் நிழல்படுதலாலும் மலரும்.

௧௧௦. கரந்துறைகோள்கள்பத்து—சூரியன், சந்திரன், இராகு, கேது, பரிவேடமிரண்டு, வான்மீன், தூமகேது, வானவில்லிரண்டு.

௧௧௧. ஆண்பிள்ளைக்கவியுறுப்புப்பத்து—காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர். பிள்ளைக்கவி ஆசிரியவிருத்தத்தாலியற்றப்படும்.

௧௧௨. பெண்பிள்ளைக்கவியுறுப்புப்பத்து-ஆண்பிள்ளைக்கவியுறுப்புப்பத்தில் சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னு மூன்றுறுப்பையு நீக்கி எஞ்சிய ஏழுறுப்போடு கழங்கு, அம்மனை, ஊசல் என்னும் மூன்றுறுப்பையுஞ் சேர்க்கப்பத்தாம். இக்கவிகளை மூன்றுமாசமுதல் இருபத்தோராமாசம்வரை ஒற்றித்த மாசங்களினும், ஐந்தாம் ஏழாம் ஆண்டினும் கேட்பிக்கலாகும்.

அனலுடனசனிசீதமாயுதம்விடமருந்து
புனல்வளிவிடத்தையுந்தான்புசிப்பிக்கும்படசியேதாகம்
நனிமிகுமுனிவருமைமநாட்டியபிணியினோடே
இனையும்வேதனையிராறுமெய்திடுந்துன்பமென்ப. (௧௧௩)

தந்தியொன்றேதேரொன்றுசாதியாம்புரவிமூன்று
வந்தடும்பதாதியைந்துவகுத்திடும்பத்தியென்ப
உந்துமப்பத்திமூன்றேயுறிற்சேனாமுகமென்றாகும்
முந்துசேனாமுகந்தான்மும்மடிகுல்மமாமே. (௧௧௪)

மருவியகுல்மமூன்றும்மடிதானேகணமதாகும்
கருதியகணமேமூன்றுகாட்டியவாகினிப்பேர்
பெருகுவாகினிதான்மூன்றுபிருதனையாகுமென்ப
வருபிருதனைதான்மூன்றுவகுத்திடுஞ்சமூவாகும்மே. (௧௧௫)

பேரியல்சமூவேமூன்றுபிரளயம்பிரளயந்தான்
ஓர்மூன்றேசமுத்திரமாகுமுயர்சமுத்திரமோர்மூன்று
தேர்தருசங்குசங்குமூன்றதேயநீகமென்ப
சோர்விலாவநீகமூன்றேசொல்லுமக்குரோணியாமே. (௧௧௬)

விரவுசாரணரேசித்தர்விஞ்சையர்பசாசர்பூதர்
கருடர்கின்னரரியக்கர்காந்தர்வர்சுரர்தைத்யர்
உரகராகாசவாசருத்தரகுருவோர்யோகர்
நிருதர்கிம்புருடர்விண்மீனிறைகணமூவாறுமே. (௧௧௭)

ஓர்மணிபரிதியானைதிருநிலமுலகுதிங்கள்
கார்மலைசொல்லெழுத்துக்கங்கைநீர்கடல்பூத்தேர்பொன்
ஏருறுமிவைமூவாறுமிதிற்பரியாயப்பேரும்
ஆருமங்கலச்சொற்செய்யுளாய்ந்துமுன்வைக்கநன்றாம். (௧௧௮)

பசியதிசயமேயுள்ளல்பயமேகையரவுமூப்புக்
கசிவுநீர்வேட்டல்வேண்டல்கதமதங்கேதத்தோடே
ஒசியுநோய்பிறப்பிறப்போடுவகையேயுறக்கமின்பம்
இசையுமீரொன்பான்குற்றமிவைதீர்ந்தோனிறைவனாமே. (௧௧௯)

மச்சமேகூர்மஞ்சைவம்வைணவம்வராகம்லிங்கம்
பத்மம்வாமனமேகாந்தம்பவிடியமாக்கினேயம்
கற்புளபிரமங்கைவர்த்தம்மேநாரதமார்க்கண்டம்
உற்றபாகவதமேகாருடம்பிரமாண்டந்தொன்னூல். (௧௨0)

௧௧௩. உயிர்க்குரிய பன்னிருவகைவேதனை—அனல், இடியேறு, குளிர், ஆயுதம், நஞ்சு, மருந்து, நீர், காற்று, பசி, தாகம், மூளி வறுமை, பிணி.

௧௧௪. பன்னிருவகைத்தானை—யானை ஒன்று, தேர் ஒன்று, குதிரை மூன்று, பதாதி ஐந்து கொண்டது ஒருபத்தி. பத்தி மூன்றுகொண்டது சேனாமுகம். சேனாமுகம் மூன்றுகொண்டது குல்மம்.

௧௧௫. குல்மம் மூன்றுகொண்டது கணம். கணம் மூன்று கொண்டது வாகினி. வாகினி மூன்றுகொண்டது பிருதனை. பிருதனை மூன்று கொண்டது சமூ.

௧௧௬. சமூ மூன்று கொண்டது பிரளயம். பிரளயம் மூன்று கொண்டது சமுத்திரம். சமுத்திரம் மூன்று கொண்டது சங்கு. சங்கு மூன்று கொண்டது அநீகம். அநீகம் மூன்று கொண்டது அக்குரோணி.

௧௧௭. பதினெண்கணங்கள்—சாரணர், சித்தர், விஞ்சையர், பைசாசர், பூதர், கருடர், கின்னரர், இயக்கர், காந்தர்வர், சுரர், தைத்தியர், உரகர், ஆகாசவாசர், போகபூமியர், முனிவர், நிருதர், கிம்புருடர், விண்மீன்.

௧௧௮. பதினெண்வகைமங்கலச்சொல்—சீர், மணி, பரிதி, யானை, திரு, நிலம், உலகு, திங்கள், கார், மலை, சொல், எழுத்து, கங்கை, நீர், கடல், பூ, தேர், பொன். இவையன்றி இவற்றின் பரியாயப் பெயர்களும் செய்யுளில் முன்வைத்தற்குரிய மங்கலச் சொற்களாம்.

௧௧௯. யாக்கைக்குரியபதினெண்வகைக்குற்றம்—பசி, அதிசயம், நினைத்தல், பயம், கையறவு, மூப்பு வியர்த்தல், நீர்வேட்டல், வேண்டல், வெகுளி, மதம், கேதம், நோய், பிறப்பு, இறப்பு, உவகை, உறக்கம், இன்பம்.

௧௨௦. பதினெண்புராணம்—மச்சம், கூர்மம், சைவம், வைஷ்ணவம், வராகம், இலிங்கம், பத்மம், வாமனம், காந்தம், பவிஷியம், ஆக்கினேயம், பிரமம், பிரமகைவர்த்தம், நாரதீயம், மார்க்கண்டேயம், பாகவதம், காருடம், பிரமாண்டம்.

முடிகுடைகவரிதோட்டிமுரசுசக்கரமேநால்வாய்
கொடிமதில்தோரணந்நீர்க்குடமலர்மாலைசங்கு
கடலொடுமகரமாமைகயலிணையரிமாத்தீபம்
இடபமாசனமூவேழுமிறைதிருப்பொறிகளாமே. (கஉக)

இச்சையாற்பேடிசெய்யுமிலக்கணமிப்பாற்கேண்மின்
நச்சவேபேசலோடுநல்லிசையோர்ந்துநிற்றல்
அச்சமொன்றில்லாதாகியாண்பெண்ணுமடைவியற்றல்
உச்சியிற்கையைவைத்தலொருகரந்தானேவீசல். (கஉஉ)

விழிகளைவேருச்செய்தல்வெம்முலைநலித்துநிற்றல்
சுழலவேநோக்கனக்குநாணமொருந்தோமென்றொருத்தல்
கழிநடம்பயிற்றல்வேறுகாரணமில்லாக்கோபம்
அழுதிடனடுநடுங்கியாங்கொருபக்கம்பார்த்தல். (கஉ௩)

இரங்குதல்வருந்தல்யாருமிரங்சவேபேசிக்காட்டல்
குரங்கல்கோதாடல்கூடல்கூவிளிகொண்டுநிற்றல்
மருங்கினிற்கையைவைத்தல்வாங்குதல்பாங்கிதன்னைத்
திருந்தவேநோக்கலேலேலென்றலுஞ்செய்கையாமே. (கஉச)

உருவகமுவமையோடேயூன்றியவடிமடக்கே
விரிசுடர்நிலைமடக்கேவேற்றுமைவெளிப்படுத்தல்
மருவியநோக்கேயுட்கோள்வருந்தொகைமொழியேமற்றைத்
தருமிகைமொழியேவார்த்தைதன்மைவேறருத்தம்வைப்பே. ()

சிறப்பதாநிலைசிலேடைமறுத்திடுநிலையின்வார்த்தை
நிறுத்துடனிலையிற்கூட்டமுவமாரூபகத்திேனாடு
வெறுப்பிலாமகிழ்ச்சிசெய்துமிகுறுவலாறுவற்சி
உறுத்தியேயிடுந்தலைக்கூட்டியரணிதெரிசனங்கள். (கஉசு)

உரைகெழுபாராட்டோடேயொருங்கியனிலையேயையம்
விரவியநிலைவாழ்த்தென்னவிதித்திடுமிருபத்தெட்டாம்
மருவியவலங்காரத்தைவரிசையிற்பாடவல்லோன் [ன்.
புரிவுறுமெழுத்துஞ்சொல்லும்பொருள்யாப்போடிவையறிந்தோ

இந்நல்லிலக்கணத்திலிசைந்திடுதுறையும்வல்லோன்
நந்தமுத்தமிழினோடுநாற்கவிபாடவல்லோன்
வந்துநற்குலத்துதித்தோன்வடிவமோடொழுக்கமுள்ளோன்
அந்தவாறையாண்டேகியாண்டெழுபானீங்காதோன். (கஉஅ)

கஉக. அரசர்க்குரிய இருபத்தொருவகைச்சின்னம்—குடை, ஓடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், பூரணகும்பம், மாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

கஉஉ. பேடிக்குரிய இருபத்தைந்துவகையிலக்கணம்—தட்டிப்பேசல், நல்லிசையோர்தல், ஆண்பெண்ணுமடைவிடற்றல், உச்சியிற்கையைவைத்தல், ஒருகைவீசிநடத்தல்,

கஉங. விழிகளைவேறுசெய்தல், முலையைவருத்திநிற்றல், கண்ணழலநோக்குதல், நாணுதல், தொந்தோமென்றுதாளமிடல், நடித்தல், காரணமின்றிக்கோபித்தல், அழுதல், ஒருபக்கம்பார்த்தல்,

கஉச. இரங்குதல், வருந்தல், யாவருமிரங்கும்படிபேசுதல், வளைதல், கோதாடல், கூடல், கூவிளிகொள்ளல், மருங்கிற்கையைவைத்தல், அதனை எடுத்தல், பாங்கியைநோக்கல், ஏலேலென்று பாடல்.

கஉரு. இருபத்தெட்டுச்செய்யுளலங்காரம்—உருவகம், உவமை, அடிமடக்கு, தீபகம், நிலைமடக்கு, வேற்றுமை, வெளிப்படை, சொற்பின்வருநிலை, தன்மை, வேற்றுப்பொருள்வைப்பு,

கஉசா. சிறப்பு, சிலேடை, மறத்தமொழிநிலை, உடனிலைக்கூட்டம், உவமாருபகம், மகிழ்ச்சி, நுவலாநுவற்சி, ஒப்புமைக்கூட்டம், நிதர்சனம்,

கஉஎ. புகழ்ச்சி, ஒருங்கியனிலை, ஐயம், கலவை, வாழ்த்து என்னும் இவ்வணிகளாம்.

நல்லாசிரியன் இலக்கணம்—இவ்வலங்காரங்களோடு மற்றை எழுத்துச் சொற்பொருள் யாப்பு என்னும் நான்கினையும் அறிந்தவனும்,

கஉஅ. இவ்விலக்கணத்துறைகளில் வல்லவனும், முத்தமிழிலும் நாற்கவிகளிலும் வல்லவனும், உயர்குலத்துதித்தவனும், அழகும் ஆசாரமுமுடையவனும், முப்பதுவயசின்மேற்பட்டு எழுபது வயசுக்குட்பட்டவனும் நல்லாசிரியனும்.

வழுக்கடர்கவிதைதன்னை வசையிலார்கொள்ளுங்காலைக்
கொழிப்பிறோரணங்களூட்டிக்கொடிமாடமெடுத்துயர்த்தி
விழுத்தருகோலஞ்செய்துமென்றுகில்விரித்தபின்றைத்
தெழித்திடும்பல்லியந்தான்முகிலெனத்திமிதிமென்ன. (௧௪௯)

அட்டமங்கலங்களேந்தவரிவையர்பலரும்வாழ்த்த
மட்டவிழ்பாளைவேய்ந்தமணிக்குடந்தீபமல்கப்
பட்டபல்லுணுமுளைத்தபாலிகைவிதானப்பந்தர்
இட்டமாமனையிற்சான்றோரியல்புளியிரீஇயபின்னை. (௧௫௦)

மன்னுமாசனத்திருத்திவளமலிகவிதைகேட்டுப்
பொன்னொடுதுகிருந்தூசும்பூண்முடிகடகத்தோடும்
இன்னவைபலவுமீந்திட்டேழடிபுலவன்பின்போய்
நின்மெனநிற்றன்மன்னர்நிலமிசைவழக்கதாமே. (௧௫௧)

பாட்டுடைத்தலைவன்றானேபரிசிலீயாதகாலை
மீட்டொருபெரியனூர்பேர்வேறுசொல்லியற்றிச்சேர்க்கின்
ஈட்டுசெல்வங்கள்பொன்றியீங்கிவன்றிருவுமாய்ந்து
நாட்டியவவனுக்காகுநவின்றநூல்வழக்கிதாமே. (௧௫௨)

பரிசிலீயாதபாவிபாமாலைசெம்பூச்சூட்டி
வரியரவுறைவன்மீகமாகாளிமுன்றிறன்னில்
உரியநீண்மனைப்புறத்திலொள்ளெரிகொளுத்தில்வீயும்
தெரியுமோராண்டிலென்றேசெப்பினன்முனிவன்றானே. (௧௫௩)

ஆதுலர்சாலையையமறுசமயத்தோர்க்குண்டி
ஓதுவார்க்குணவுசேலையுறுமேறுவிடல்காதோலை
மாதுபோகம்மகப்பால்மகப்பேறுமகவளர்த்தல்
வேதைநோய்மருந்துகொல்லாவிலைகொடுத்துயிர்நோய்தீர்த்தல். ()

கண்ணாடிபிறரிற்காத்தல்கன்னிகாதானங்காவே
லுண்ணார்நாவிதரேசுண்ணமடந்தடங்கண்மருந்து
தண்ணீர்பெய்பந்தல்கோலத்தலைக்கெண்ணெய்சிறைச்சோறோடு
பண்ணானவிலங்கூணல்கல்பசுவின்வாயுறைகொடுத்தல். (௧௫௫)

அறவையாம்பிணமடக்கலறவைத்தூரியம்வருந்தா
நிறுவியேயிடம்விடாமணிறையத்தின்பண்டநல்கல்
உறுதியாவுரிஞ்சுகின்றதறியிவையோதுமெண்ணான்
கறநிலையிதானங்களம்பிகைசெய்யுமாறே. (௧௫௬)

கஉக. புலவர்கவிதையை அரசர் அங்கீகரிக்குமுறைமை—குற்றமி ல்லாத கவிதையை அரசர்கொள்ளும்போது தோரணங்கள் நா ட்டி, கொடியுயர்த்தி, கோலஞ்செய்து, பட்டு விரித்தபின் பல வாச்சியங்களும் முழங்க,

கஙo. அட்டமங்கலங்களேந்த, பெண்கள் பல்லாண்டு கூற, பூரண கும்பமும் தீபமும் முளைப்பாலிகைகளும் விளங்க, விதானப் பந்தருள்ளே அறிஞர்களை முறைப்படி இருத்தியபின்,

கஙக. தனதாசனத்திற்புலவனை இருத்தி, கவிதையைக்கேட்டு, புல வனுக்குப் பொன்முதலியவைகளைக் கொடுத்து, எழடிதூரம் அவ னுக்குப் பின்போய் வழிவிட்டு, அவன் நிற்க என்றபின் நிற்றல் முறைமையாகும்.

கஙஉ. பரிசில்கொடாத உலோபியர்க்குச் செய்யுட் செய்வகை— கவிதை கேட்ட பாட்டுடைத்தலைவன் பரிசில் கொடானாயின், அக்கவிதையினின்றும் அவன்பெயரையும் ஊரையும் எடுத்து விட்டு, வேறொருவனுடைய ஊரையும் பெயரையும் நாட்டின், பரிசில் கொடாதவனுடைய செல்வமெல்லாம் நீங்கிப் பின்னர் நாட்டப்பட்டவனுக்காகும்.

கஙங. பரிசில்கொடாத பாவியினுடைய பாமாலையை எழுதிச் செம் பூச்சூட்டிப் பாம்புப்புற்றிலும், காளிகோயிலிலும், தன்மனைப்பு றத்திலும், எரித்தால் அவன் ஒருவருடத்தில் இறப்பான் என்று அகத்தியமுனிவர் கூறினர்.

கஙச. முப்பத்திரண்டு அறம்—ஆதுலர்க்குச்சாலை, ஐயம், அறுசம யத்தோர்க்குண்டி, ஓதுவார்க்குணவு, சேலை, ஏறுவிடுத்தல், காதோலை, பெண்போகம், மகப்பால், மகப்பேறு, மகவளர்த் தல், மருந்து, கொல்லாமல்விலைகொடுத்துயிர்நோய்தீர்த்தல்,

கஙரு. கண்ணுடி, பிறரிற்காத்தல், கன்னிகாதானம், சோலை, வண் ணார், நாவிதர், சுண்ணம், மடம், தடம், கண்மருந்து, தண்ணீர்ப் பந்தர், தலைக்கெண்ணெய், சிறைச்சோறு, விலங்கிற்குணவு, பசு வுக்கு வாயுறை,

கஙசூ. அறவைப்பிணமடக்கல், அறவைத்தூரியம், தின்பண்டநல் கல், ஆவுரிஞ்சுதறி.

உற்றறிபுலனென்றுற்புன்மரமேயோரறிவிற்சீவன்
முற்றுமீரறிவிற்சீவன்முரணந்தேயாதிநாவாற்
செற்றமூவறிவிற்சீவன்சிதலெறும்பாதிமூக்காற்
சொற்றநாலறிவிற்சீவன்றும்பிவண்டாதிகண்ணால். (௧௩௭)

வானவர்மனிதர்கீழ்போய்மாழ்கியநரகரோடு
கானுறைவிலங்குபுள்ளுக்காட்டுநாலறிவினோடே
ஊனமில்செவியுமாங்கேயுறுவினையறிவிற்சீவன்
மானமர்நோக்கினல்லாய்மனமுமொன்றதிகமாமே. (௧௩௮)

காப்புக்குமுன்னெடுக்குங்கடவுடான்மாலேயாகும்
பூப்புனைமலரின்செல்விபுணைபவனுதலானும்
காப்பவனுதலானுங்கதிர்முடிகடகத்தோடு
வாய்ப்பதாமதாணிபூணூல்வரிசையிற்புனைதலானும். (௧௩௯)

அருகனூர்திதானேயம்புயம்படைநற்காட்சி
பெருகியஞானசீலம்பெருங்கொடியருளேயென்ப
மருமலர்க்கொன்றையார்க்குவாகனமிடபமாகும்
பரசொடுகடியசூலம்பிணாகவில்படைகளாமே. (௧௪௦)

கரியமால்துவசமூர்திகலுழனென்றுரைக்கற்பாற்றே
வரிசிலையாழிசங்குவாள்கதைபடையைந்தாகும்
பிரமனூர்தியன்னம்பெரும்படைபாசமாகும்
அருமறைகொடியேயாகுமந்தணர்தமக்குமாமே. (௧௪௧)

பரிவுளபலதேவற்குப்படைநாஞ்சில்கொடியேபெண்ணை
எருமையேயமன்றனூர்தியெறிபடைபாசந்தண்டாம்
கரியதோர்கூற்றினுக்குக்கடும்படைகணிச்சியாகும்
புரிநரவாகனம்பூம்புட்பகங்குபேரனூர்தி. (௧௪௨)

குறைவிலாத்தனிக்காற்பொற்றேர்கூறியவருக்கனூர்தி
பிறைதருமதியினூர்திநீண்முத்துவிமானமென்ப
அறுமுகனூர்திதானேயானையுமயிலுமென்ப
உறுபடைவேலாமற்றையொண்கொடிகோழியாமே. (௧௪௩)

கரியயிராவதம்பூங்கற்பகக்காவேசோலை
உரியவெம்பரியின்பேரேயுச்சயிச்சிரவமாகும்
மருவுமண்டபஞ்சுதன்மைமாளிகைவசந்தமென்ப
பெருகியவுருமுமற்றைப்பெருங்கொடிபுரந்தரற்காம். (௧௪௪)

௧௫௭. ஓரறிவுயிர்—புல், மரம் முதலியன. இவைமெய்யாற் பரிசத்தை அறியும். ஈரறிவுயிர்—முரள், நந்து முதலியன. இவை பரிசத்தோடு நாவினாற்சுவையையும் அறியும் [முரள்-அட்டை.] மூவறிவுயிர்-கறையான், எறும்பு முதலியன. இவை அவ்விரண்டோடு மூக்கினாற் சுவையையும் அறியும். நாலறிவுயிர்—தும்பி, வண்டு முதலியன. இவை அம்மூன்றனோடு கண்ணால் உருவத்தையும் அறியும்.

௧௫௮. ஐயறிவுயிர்கள்—வானவர், மனிதர், நரகர், விலங்கு, புள்ளு இவர் அந்நான்கனோடு செவியினால் ஒலியையும் அறிவர். இவர்க்கு மனத்தாலறியும் அறிவும் விசேடமாக உண்டு.

௧௫௯. காப்புக்கு முன்னெடுக்குங் கடவுள்—இலக்குமிக்கு நாயகராயிருத்தலானும், காவற்கடவுளாயிருத்தலானும், முடிமுதலியன புனைதலானும் காப்புக்கு முன்னெடுக்குங் கடவுள் விட்டுணுவாகும்.

௧௬௦. அருகன்வாகனம்—தாமரைப்பூ. படை - காட்சி, ஞானம், சீலம். கொடி - அருள்.
சிவன்வாகனம்—இடபம். படை - மழு, சூலம், பினாகவில்.

௧௬௧. விட்டுணுவின்வாகனம் — கருடன். கொடி - கருடன். படை - வில், சக்கரம், சங்கு, வாள், தண்டு என்னும் பஞ்சாயுதங்கள். பிரமன்வாகனம்—அன்னப்பறவை. படை - பாசம். கொடி - வேதம். இது பிராமணருக்குமாம்.

௧௬௨. பலதேவன்படை—கலப்பை. கொடி - பனை.
யமன்வாகனம்—எருமை. படை - பாசம், தண்டு.
காலன்படை—கணிச்சி.
குபேரன் வாகனம்—நரவாகனம், புட்பகவிமானம்.

௧௬௩. சூரியன் ஊர்தி—ஒற்றையாழித்தேர்.
சந்திரன் ஊர்தி—முத்துவிமானம்.
சுப்பிரமணியர் ஊர்தி—யானை, மயில். படை - வேல். கொடி - கோழி.

௧௬௪. இந்திரன் ஊர்தி—ஐராவதயானை. சோலை-கற்பகச்சோலை. குதிரை - உச்சயிச்சிரவம். மண்டபம் - சுதன்மை. மாளிகை - வசந்தம். கொடி - இடியேறு.

அழகியகாளியூர்தியாளியேதுவசம்பேயாம்
பழுதறுதுர்க்கைபற்றும்படைவாளாங்கலையேயூர்தி
கெழுமுமூதேவியூருங்கிளர்ந்தவாகனத்திறுமம்
கழுதையாம்படைதுடைப்பங்காக்கையம்பதாகைதானே. (கசரு)

அன்னமேயிடபந்தோகையணிமயில்கலுழன்சீயம்
பின்னியல்யானையோடுபேயெழுபெண்களூர்தி
மன்னுநான்மறைபிறுகவார்சிலைசத்தியாழி
துன்னியகலப்பைவச்ரஞ்சூலம்வெம்படைகளாமே. (கசசு)

மன்னியசேரனுக்குவரிசிலைக்கொடிபனந்தார்
பொன்னியந்துறைச்சோழற்கேபுலிக்கொடியாத்திமாலை
தென்னவன்றனக்குத்தானேசேற்கொடிவேப்பந்தாராம்
பன்னியகேழல்வேழப்பதாகையும்புலவருக்கே. (கசஎ)

காலொருநாலுகோசங்கைவாலேழ்நிலத்திற்றோய்ந்து
பாலொடுசெங்குபோலும்பதத்துகிர்விதத்திற்சூழ்ந்து
வாலொடுகான்மெய்கைவெண்மருப்பிறுலுயிரைக்கொன்றே
ஏலவேழுயர்ந்தொன்பானீண்டீரைந்துமுழத்ததாகி. (கசஅ)

பெறுமுறைமுன்புயர்ந்துபின்பணிந்தழகிதாய
தறுகண்ணதாகிச்சூழிசார்ந்தமத்தகத்ததாகி
முறகிகர்கன்னதானமூரிமால்யானைதானே
அறநெறிசெலுத்துஞ்செங்கோலரசுவாவாகுமென்ப. (கசகூ)

மாதர்தம்மனத்தையொத்தமனத்ததாய்வாழையுற்ற
கோதிலாமடலேபோலக்கொழுந்துளசெவியதாகிப்
பாதமுன்வெந்நெருத்துப்பகர்முகம்பான்மைத்தாகி
ஓதுமெண்பத்திரண்டங்குலியுயர்பரிமன்னர்க்காம். (கருo)

ஒருபதிறுயிரம்பத்துரையதியுகமென்றுரும்
வருமதியுகந்தான்மீளமதித்தநூறுயிரங்கள்
பிரமமாம்பிரமநூறுயிரமதுகோடிதானே
அரியதோர்கோடிபத்தாமர்ப்புதமென்றுசொல்லும். (கருக)

கருதருகோடிநூறுகணகமாங்கணகம்பத்துப்
பெருகியகற்பமாகும்பேணுமக்கற்பம்பத்துத்
திருமிகுநிகற்பமாகுநிகற்பமீரைந்துசங்கம்
தரமுளசங்கம்பத்துச்சமுத்திரமென்றேசாற்றும். (கருஉ)

௧௪௫. காளியூர்தி—சிங்கம். கொடி – பேய்.
துர்க்கையின்படை—வாள். ஊர்தி - கலைமான்.
மூதேவியின்வாகனம்-கழுதை. படை-துடைப்பம். கொடி-காகம்.

௧௪௬. சத்தமாதர்களுள்ளே அபிராமிக்கு அன்னமும், மாகேசுவரிக்கு இடபமும், கௌமாரிக்கு மயிலும், வைணவிக்குக் கருடனும், வராகிக்குச் சிங்கமும், மாகேந்திரிக்கு யானையும், மாகாளிக்குப் பேயும் வாகனங்களாகும். இவர்க்கு முறையே வேதமும், பினாகவில்லும், வேலும், சக்கரமும், கலப்பையும், வச்சிரமும், சூலமும் படைகளாம்.

௧௪௭. சேரன்கொடி—வில்லு. மாலை - பனந்தார்.
சோழன்கொடி—புலி. மாலை - ஆத்திமாலை.
பாண்டியன்கொடி—மீன். மாலை - வேப்பந்தார்.
புலவருடையகொடி—பன்றி, யானை.

௧௪௮. அரசுவாவினிலக்கணம்—நான்குகால்களும், கோசமும், துதிக்கையும், வாலுமாகிய ஏழுறுப்பும் நிலத்திலே தோய்ந்து, காலில் வெண்மையான நகமுடையதாய், வால் நாலுகால் உடம்பு துதிக்கை இரண்டு கொம்பு என்னுமிவற்றுற் கொல்லவல்லதாய், ஏழுமுழமுயர்ந்து ஒன்பதுமுழ நீண்டு பத்துமுழச்சுற்றுடையதாய்,

௧௪௯. முற்பாக முயர்ந்து பிற்பாகந் தாழ்ந்து அழகியதாய், தறுகண்ணினையும் சூழிசார்ந்த மத்தகத்தினையுமுடையதாய், சுளகு போன்ற செவியினையும் மும்மத்தையு முடையதாயுள்ள யானை அரசர்க்குரிய அரசுவாவாகும்.

௧௫௦. அரசர்க்குரிய குதிரையினிலக்கணம்—மகளிர் மனம்போன்ற மனமுடையதாய், வாழைப்பூமடல்போன்ற செவியுடையதாய், நான்கு கால்களும் முன்புறமும் முதுகும் பிடர்த்தலையும் முகமும் வெண்மையுடையதாய், எண்பத்திரண்டங்குல உயரமுடையதாயுள்ள குதிரை அரசர்க்குரிய குதிரையாம்.

௧௫௧. நூறுயிரங் கொண்டது அதியுகம். அதியுகம் நூறுயிரங் கொண்டது பிரமம். பிரமம் நூறுயிரங் கொண்டது கோடி. கோடி பத்துக்கொண்டது அர்ப்புதம்.

௧௫௨. கோடி நூறு கொண்டது கணகம். கணகம் பத்துக்கொண்டது கற்பம். கற்பம் பத்துக்கொண்டது நிகற்பம். நிகற்பம் பத்துக்கொண்டது சங்கம். சங்கம் பத்துக்கொண்டது சமுத்திரம்.

உரைத்தவிப்பல்பேர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதிதன்னில்
விருத்தமூவைம்பதின்மேன்மிகுதியோரிரண்டுசெய்தான்
திருக்கிளர்குணபத்திரன்றாள்சென்னியிற்சூடிக்கொண்டோன்
மருக்கிளர்பொழில்சூழ்வீரைமன்னன்மண்டலவன்றானே.

பன்னிரண்டாவது

பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி முற்றிற்று.